



உ
சிவமயம்

அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில்

கும்பாபிஷேக மலர்

4-4-1976




"என்னிகர் எவரும் இல்லென் றிருவரு
மிகலும் எல்லை
அன்னவர் நடுவு தோன்றி யடிமுடி
தெரியா தாகி
உன்னினர் தங்கட் கெல்லாம் ஒல்லையில்
முத்தி நல்கி
தன்னிகர் இன்றி நின்ற தழல்பெருஞ்
சைலங் கண்டான்"

—**கந்த புராணம்.**


அருள்மிகு அண்ணாமலையார்



அருள்மிகு அண்ணாமலையார்



அருள்தரும் உண்ணாமுலை அம்மன்



அருள்தரும் உண்ணாமுலை அம்மன்

உ

சிவமயம்

அண்ணாமலையார் துணை

அருள்மிகு
அண்ணாமலையார்
திருக்கோயில்

கும்பாபிஷேக மலர்

1976

பதிப்பாசிரியர்
"சோமலெ"

ARULMIGU
ANNAMALAIYAR
TEMPLE

KUMBABISHEKAM SOUVENIR

1976

EDITOR
"SOMALAY"

அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில்
கும்பாபிஷேக மலர்க்குழு
32, ஹாடோஸ் ரோடு, சென்னை-600 006

ARULMIGU ANNAMALAIYAR THIRUKKOIL
KUMBABISHEKAM SOUVENIR COMMITTEE
32, HADDOWS ROAD, MADRAS-600 006

PUBLISHED IN JULY 1976

PRICE: Rs. 35

Copies can be had at

(1) 32, HADDOWS ROAD
NUNGAMBAKKAM, MADRAS - 600 006

(2) ARULMIGU ANNAMALAIYAR TEMPLE OFFICE
TIRUVANNAMALAI - 606 601

மலர்க் குழு

தலைவர் :

தவத்திரு இராமநாத ஞான தேசிகர் அவர்கள்
கோவிலூர் மடாதிபதி

துணைத் தலைவர்கள் :

திரு. சா. கணேசன்
(கம்பன் அடிப்பொடி)

திரு. அ. சொ. அண்ணாமலைச் செட்டியார்

திரு. டி. வி. சுப்பிரமணியன் செட்டியார்

உறுப்பினர்கள்:

திரு. ப. வ. ராம. குழந்தையன் செட்டியார்

திரு. எஸ். எஸ். வி. எஸ். முத்தையா செட்டியார்

திரு. அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார்
பொருளாளர்

திரு. டி. என். எம். அருணாசலம்
செயலாளர்

திரு. சோமலெ
பதிப்பாசிரியர்

முன்னுரை

"கலைமகள்" ஆசிரியர் வாகீசகலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

''அரன் நாமமே சூழ்க!'' என்று திருஞான சம்பந்தப் பெருமான் ஆற்றில் எதிர் நீச்சம் போட்ட பதிகத்தில் பாடினுர். அந்த அரன் நாமத்தைக் காதாரக் கேட்கும் தலம் திருவண்ணுமலை. ''அண்ணுமலைக் கரோகரா!'' என்ற ஹர ஒலி அத்தலத்தில் முழங்குவதை அறியாதவர் யார்? அருணுசல புராணத்தில் சைவ எல்லப்ப நாவலர் இதை,

> ''அரகர என்பது கடலின் முழங்குவ தருணை வளம்பதியே''

என்று குறிப்பிடுகிருர். பஞ்சபூதத் தலங்களில் தேயுவுக்குரிய தலமாகிய இதில் தனியே கோயிலும் அதில் இறைவனும் விளங்குவது மட்டும் அன்று; மலையே இறைவனுடைய திருவுருவம்.

பழங்கால முதல் ''குன்றின் மேல் இட்ட விளக்கு'' என்ற பழமொழி வழங்கி வருகிறது. எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும் ஒன்றுக்கு உவமையாக அதைக் கூறுவது மரபு. பழமொழி பலரும் பல காலமாக அறிந்ததைச் சொல்லும். ஆகவே 'குன்றின்மேல் இட்ட விளக்கு' என்பது பலரும் அறிந்தது என்று தெரிகிறது. அந்தக் குன்றும் அதன்மேல் இட்ட விளக்கும் எதைக் குறிக்கின்றன? திருக்கார்த்திகையில் திருவண்ணுமலைமேல் விளக்கேற்றி விழாக் கொண்டாடுவதை யாவரும் அறிவர். திருவண்ணுமலையில் நிகழும் இந்த விளக்கீட்டு விழாவைத் தமிழ் நாட்டில் உள்ள எல்லாச் சிவாலயங்களிலும் கொண்டாடுகின்றனர். தில்லையில் நிகழும் திருவாதிரைத் திருநாளை எல்லாச் சிவாலயங்களிலும் கொண்டாடுவதைப் போன்றது இது. பல கோயிலிலும் பின்பற்றப்படுகிறது விளக்கீடு என்பதனுல் அதன் சிறப்பை நன்ருக உணரலாம்.

நினைக்க முத்தி தரும் தலம் இது. ''ஸ்மரணுத் அருணுசலம்'' என்று வட மொழியில் சொல்வார்கள்.

இத்தகைய பழம் பெருந்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்ருல் சிறப்புற்றதோடு பல ஞானியர்கள் வாழ்ந்த இடமாக இருத்தலாலும் பெருமை பெற்றிருக்கிறது.

> ''ஞானத் தபோதனரை வாவென்று
> அழைக்குமலை அண்ணு மலை''

என்பது எவ்வளவு உண்மையானது என்பதை இங்கே அருணகிரிநாதர், குகை நமசிவாயர், குரு நமசிவாயர், சேஷாத்திரி சுவாமிகள், ரமண

மகரிஷிகள் முதலியவர்கள் வாழ்ந்த செய்தி காட்டும். இன்றும் ராம் சுரத் குமார் போன்ற பெரியவர்கள் இந்தத் தலத்தின் பெருமையை மிகுதியாக்கிக் கொண்டு விளங்குகிறார்கள்.

பழங்கால முதல் இத்தலத்தில் உள்ள திருக்கோயிலை வளப் படுத்தியும் விரிவுபடுத்தியும் தொண்டு புரிந்த மன்னர்கள் பலர். இன்று வானளாவிய கோபுரங்களும் அற்புதச் சிற்பக் கருவூலங்களும் அருள் நிறைந்த மூர்த்திகளும் பலபல அமைப்புக்களும் உடைய பெரிய கோயிலாக விளங்குகிறது இது. நகரத்தார்கள் நம் கண் காணச் செய்த திருப்பணிகள் பலப்பல. 'அண்ணாமலையார் துணை' என்று கையெழுத்துப் போடும் அளவுக்கு அந்தப் பெருமக்களுக்கு இது அபிமானத் தலமாக நிலவுகிறது.

இத்தலத்துக்கு இதற்கு முன் பலமுறை கும்பாபிடேகங்கள் நடந்திருக்கின்றன. அணிமையில் 4-4-1976இல் மிகப் பெரிய அளவில் மகாகும்பாபிடேகம் நடைபெற்றது. நகரத்தார் இந்தக் கும்பாபிடேகத்தை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டு உத்தமோத்தமமான வகையில் யாகசாலையை அமைத்து எல்லாவகையான சிறப்புக்களோடும் விழாவை நிறைவேற்றினார்கள்.

கும்பாபிடேகத்தின் நினைவு என்றும் நிலைபெற இந்த மலரை வெளியிடுகிறார்கள்.

திருவண்ணாமலைத் திருக்கோயில் எப்படி எல்லாவகையிலும் சிறந்து நின்று பெரியதாக விளங்குகிறதோ அப்படியே இந்த மலரும் வகைவகையான சிறப்புக்களுடன் விரிவான முறையில் கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பமும் பயனும் உண்டாக்கும் பாங்கில், வடிவு பெற்று ஒளிவிடுகிறது.

தலச்சிறப்பு, தேரும் திருவிழாவும், அருணையும் நகரத்தாரும், அண்ணாமலை அருளிய ஞானியர், முத்தமிழும் முத்தித்தலமும், வரலாறு—கல்வெட்டு—தொல் பொருள் இயல், பல் சுவை, கும்பாபிஷேகம் என்று பகுதிபகுதியாகக் கட்டுரைகளையும், செய்திகளையும் பிரித்து இம்மலரில் அமைத்திருக்கும் திறம் பாராட்டத்தக்கது.

திருவண்ணாமலையைப் பற்றிய வரலாறு, புராணம், இலக்கியச் செய்திகள், இங்கே நடைபெற்ற பழம்பணிகளும் புதுப்பணிகளும், இத்தலத்தோடு தொடர்புபெற்ற புலவர்கள், ஞானியர், சைவ சமயச் சின்னங்களின் பெருமை, திருமால் தலங்கள் சிலவற்றின் வரலாறு, பஞ்சபூதத் தலங்களின் வரலாறு, இத்தலத்தைச் சூழவுள்ள இடங்களின் வரலாறு முதலிய பலபல பயனுள்ள பொருள்களை இம்மலர் தருகின்றது. எங்கெங்கோ காணப்படும் செய்திகளை யெல்லாம் தொகுத்துக் கொடுத்திருக்கிறார் பதிப்பாசிரியர்.

திருக்கோயிலுக்குள் நம்மை அழைத்துச் சென்று அங்கங்கே உள்ள அமைப்புக்களையும் தீர்த்தங்களையும் மூர்த்திகளையும் காட்டும் கட்டுரைகளைப் படிக்கும்போது, நாம் ஒரு முறை திருக்கோயிலையே சுற்றி வந்த அனுபவத்தைப் பெறுகிறோம். இங்கே வாழ்ந்த பெரு ஞானியர்களின் வரலாற்றைப் படிக்கும்போது நம்முடைய உள்ளம் அவர்களை எண்ணி வணங்குகிறது.

திருமுறைகளிலும் புராணங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் பக்திச் சுவை சொட்டும் பாடல்கள் இருப்பதை அறிந்து இன்புறுகிறோம். கண்ணாரமுதனாகிய அண்ணாமலையப்பன் பெருமையை நினைந்து உருகுகிறோம். எத்தனை புலவர்கள் இந்தத் தலத்தைப் பாடியிருக்கிறார்கள்! கல்வெட்டுக்கள், வரலாறுகள் ஆகியவற்றிலிருந்து, எத்தனை மன்னர்கள் இந்தத் திருக்கோயிலுக்கு எத்தனை வகையில் தொண்டு செய்து இந்தப் பெரிய தலத்தை மக்கள் நாடி அருள்தாகம் போக்கிக் கொள்ளும் தெய்விகப் பெரும் பொய்கையாக ஆக்கியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து வியப்படைகிறோம்.

இந்த மலர் முழுவதையும் படிக்கச் சில நாளாகும். படித்து முடித்து விட்டால் நம் மனத்தில் திருவண்ணாமலை விசுவரூபம் எடுத்து நிற்கும். திருவண்ணாமலைக் கோயில் அருட் கதிர் வீசும் பேரொளி விளக்காய், வரலாற்றின் பல பகுதிகளையும் கண்டு வளர்ந்த திரு மாளிகையாய், சிற்பக் கருவூலமாய், புலவர்கள் போற்றும் புகழ்க் கோயிலாய், அருளாளர்களை வாழ்வித்த அரும்பதியாய், ஞானியர்கள் வாழ்ந்த சாந்தநிலையமாய், பொருளுடையாரை அருளுடையாராக்கிய புண்ணியத் தலமாய், மக்களை வாழ்விக்க ஓங்கி நிற்கும் மகோன்னதப் படைப்பாய், காலங்கடந்து நிற்கும் அற்புத சாதனையாய்த் தோன்றும்.

திருவண்ணாமலைக் கோயில் கட்டிய பலரையும் பாராட்டுவதைப் போல இம்மலரென்னும் பெருமாளிகையைக் கட்டியவர்களையும் பாராட்ட வேண்டும். தமிழ் நாட்டில் இலக்கியத்துறையிலும் சமயத் துறையிலும் வரலாற்றுத் துறையிலும் சிறப்புற்று விளங்கும் வித்தகர்கள் இந்தச் சொற் சிற்பக் கோயிலைப் படைக்க உதவியிருக்கிறார்கள். பல பழைய வெளியீடுகளிலிருந்து தொகுத்த பல அரிய செய்திகளைப் பதிப்பாசிரியர் அழகுபடக் கோத்து உரிய இடங்களில் இணைத்திருக்கிறார். ஆங்கிலம், தமிழ், வடமொழி நூல்களில் உள்ளவற்றை இந்தமலரில் உள்ள கட்டுரைகளும் குறிப்புக்களும் எடுத்துக் காட்டுகின்றன.

இதில் உள்ள படங்கள் மிகவும் பயனுள்ளவை. திருக்கோயிற் பகுதிகள், சிற்பங்கள், மூர்த்திகளின் படங்களும், பல தொண்டர்கள், அறிஞர்களின் படங்களும் காலம் ஆக ஆகச் சிறப்புப் பெருகும் தன்மை வாய்ந்தவை.

இந்த மலரை உருவாக்குவதற்கு இதன் தொகுப்பாசிரியர் எவ்வளவோ உழைப்பும் பொறுமையும் மேற்கொண்டிருக்க வேண்டும். பல கும்பாபிடேக மலர்களை வெளியிட்டு அனுபவம் பெற்ற திரு. சோம. லெ.யை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

திருவண்ணாமலையைப் பற்றிய எல்லாச் செய்திகளும் அடங்கிய கருத்துக் கருவூலம் இது. அழகான முறையில் அச்சிட்டு உருவாலும் பொருளாலும் சிறந்து விளங்கும் இதன் பெருமையைத் தமிழ்மக்கள் நன்குணர்ந்து பாராட்டுவார்கள் என்பது திண்ணம்.

கும்பாபிடேகம் நடத்துவதோடு மலர் வெளிவருவதற்குமுரிய எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டு மிகவும் அக்கறையோடு ஒவ்வொன்றையும் நன்றாகக் கவனித்து இந்தப் பெரும் பணிகளைச் செய்வித்த வள்ளல் திரு. அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியாரவர்கள் ஆற்றிய அருஞ்செயல் வரலாற்றில் ஏறுவதற்குரியது. மலர்க் குழுவின் தலைவராக இருந்து நடத்தி ஆசியருளி மலரின் மணம் நன்கு அமைவதற்கு ஆவன செய்தருளிய கோவிலூர் மடாதிபதிகள் ஸ்ரீலஸ்ரீ இராமநாதஞான தேசிக சுவாமிகளுடைய பண்பும் அன்பும் இம்மலருக்குப் பொலிவும் பொருளும் தந்திருக்கின்றன.

கி. வா. ஜகந்நாதன்
4–7–76

காந்தமலை
சென்னை–600 028

உ

சிவமயம்

அண்ணாமலையார் துணை

பதிப்புரை

இந்த மலரை வெளியிடுவதென்று ஓராண்டுக்குமுன்னரே திட்டமிட்டோம். அப்பொறுப்பை மலர்க் குழுவினர் எனக்கு வழங்கியபோது அண்ணாமலையாருக்குச் செய்யவேண்டிய கடமை என்று பணிவுடன் ஒப்புக்கொண்டேன்.

மலர்க் குழுத் தலைவர் கோவிலூர் மடாதிபதி ஸ்ரீ-ல-ஸ்ரீ இராமநாத ஞான தேசிகர் அவர்கள், திருவண்ணாமலை ஈசான்ய மடத்தின் தலைவராய்ப் பல ஆண்டுகள் இருந்து திருவண்ணாமலைத் தலத்துடன் நெருங்கிய தொடர்பும் அண்ணாமலையாரிடத்து நிறைந்த ஈடுபாடும் உடையவர்களாவார்கள். நுணுக்கமான செய்திகளைச் சொல்லியும், மலர் இன்னவாறு அமைய வேண்டும் என்று வழிகாட்டியும் எனக்கு ஆசி கூறி உதவியுள்ளார்கள், படங்கள் சிலவற்றையும் தந்திருக்கிறார்கள்.

மலர்க் குழுப் பொருளாளர் திரு. அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார் அவர்களின் பங்கு மிகப் பெரிது. பிறந்த வீட்டில் அவர்களுடைய தந்தையார் திரு. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள் பாத யாத்திரையாகச் சென்றே பாடல்பெற்ற சிவத் தலங்களையெல்லாம் வழிபட்டவர்கள். வளர்ந்த வீட்டில் அவர்களுடைய முன்னோர்கள் ஒரு நூறாண்டுக்கு மேலாக அண்ணாமலையாரின் தலைசிறந்த பக்தர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஒன்பது ஆண்டுகளுக்குமுன் அணி அண்ணாமலைக் கோயிலைப் புதுப்பித்துத் திருக்குட நீராட்டு விழா சிறப்பாக நடத்தி வைத்தார்கள். மூன்று ஆண்டுகளுக்குமுன், நகரக் கோயில்களுள் ஒன்றான மாத்தூர்க் கோயில் திருப்பணி இனிது நிறைவேறக் காரணமாய் இருந்தார்கள். இப்போது அண்ணாமலையார் கோயில் திருப்பணியையும் கும்பாபிஷேகத்தையும் போற்றத்தக்க முறையில் நடத்தி வைத்திருக்கிறார்கள். கோட்டையூரில் மகளிர் உயர் நிலைப் பள்ளியையும், சென்னையில் தொழிற்பயிற்சிக்கு உதவும் ஒரு கல்விக் கூடத்தையும், தேவி ஹிந்தி வித்தியாலயத்தையும் நிறுவியிருக்கிறார்கள். கோவிலூர் மடத்தின் நுழைவு வாயில் கோபுரங்களைக் கவினுறக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். எதையும் செம்மையாகத் திட்டமிடும் பழக்கமும், செய்வன திருந்தச் செய்யும் இயல்பும் உடையவர்கள். மலரின் வளர்ச்சியில் ஒவ்வொரு நாளும் கவனம் செலுத்தியிருப்பதோடு, பொருட் சிறப்பும், தோற்றப் பொலிவும், கலை அழகும் கொண்டு இந்த மலர் வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள்.

மலர்க் குழுவின் செயலாளர் திரு. டி. என். எம். அருணாசலம் அவர்களும் மற்றும் மலர்க் குழுவின் துணைத் தலைவர்களும், உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒருவகையில் இந்தப் பணிக்கு ஆவன செய்துள்ளார்கள்.

திரு. ஏ. கே. செட்டியார் அவர்களும், பழனி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி கோயில் அறங்காவலர் குழுவின் முன்னாள் தலைவர் திரு. பு. மனோகரன் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் இணை நேர்முக உதவியாளர் திரு. பெ. புலியூர் உடையான் அவர்களும் அரிய ஆலோசனைகள் வழங்கியுள்ளார்கள்.

வணிக நிறுவனங்களும் தனி நபர்களும் திருக்கோயில்களும் விளம் பரங்களை வழங்கியுள்ளார்கள். இதன் பயனாகவே இவ்வளவு பெரிய மலரை வெளியிட முடிந்தது.

திருமடங்களின் தலைவர்களாகிய அருளாளர்களும் இந்தியக் குடி யரசின் தலைவர் அவர்கள் ஆகிய பெருமக்களும் வாழ்த்துச் செய்தி நல்கி இந்த முயற்சியை ஊக்குவித்திருக்கிறார்கள்.

கட்டுரையாளர்கள் பலவகையினர். சிவம் பெருக்கும் சீலர்களாகிய துறவிகள், சென்னை, அண்ணாமலை, மதுரை, திருப்பதி, டில்லி, இலங்கை ஆகிய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், புகழ்மிக்க ஆராய்ச்சி நிலையங்களில் பணிபுரியும் அறிஞர்கள், பிரபல பத்திரிகையாளர்கள், முதிர்ந்த ஆராய்ச்சியாளர்கள், முதுபெரும் புலவர்கள், தொல்பொருள் துறையினர் ஆகியோர்.

ஓரிரு படங்களை, தினமணி கதிர் ஓவியர் திரு. தாமரையும், ஏனைய எல்லாவற்றையும், மற்றும் மேல் அட்டையிலுள்ள வண்ணப் படத்தையும் உள்பட அமைப்புக்களையும் ஓவியர்கள் திரு. உகி, திரு. என். ஆர். பி. ஆகிய இருவரும் வரைந்துள்ளார்கள்.

திருவண்ணாமலை பெல் ஸ்டுடியோ நிறுவனத்தார் இம்மலரில் உள்ள நிழற் படங்களையெல்லாம் எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

திருவண்ணாமலையைப் பற்றிய பழைய நூல்களைப் புரட்டிப் பார்க்கப் பின்கண்ட நூலகங்கள் பயன்பட்டன:

> சென்னை மறைமலையடிகள் நூலகம்; இந்திய அரசின் தொல் பொருள்துறை நூலகம்; தமிழக அரசின் தொல்பொருள் துறை நூலகம்; கன்னிமரா நூலகம்; தேவி எடுகேஷன் சொசைட்டி நூலகம்; திருவண்ணாமலை ஈசான்ய மடத்து நூலகம்; திருவண்ணா மலை ரமணாசிரமத்து நூலகம்; திருச்சிற்றம்பலம் திரு. மு. அருணா சலம் அவர்களுடைய நூலகம்.

"கலைமகள்" ஆசிரியரும் பெரும்புலவருமான வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பேரன்புடன் அரியதொரு முன்னுரை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கள் கனிந்த கைகூப்பு.

இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. எம். கே. பால சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். அவர்களும், அண்ணாமலையார் கோயில் நிர்வாக அதிகாரி திரு. தி. ந. பரமசிவம், பி.ஏ. அவர்களும், அறங்காவலர்

குழுவின் முன்னுள் தலைவர் திரு. டி. வி. சுப்பிரமணிய செட்டியார் அவர்களும், மானேஜர் திரு. வீரப்ப ரெட்டியார் அவர்களும் இம்மலர் வெளிவருவதில் பேரார்வம் காட்டியிருக்கிறுர்கள்.

புதுச்சேரி, சென்னை வானெலி நிலையத்தார்களும், சில பத்திரிகைகளும், சில விவரங்களை வெளியிட்டுக்கொள்ள இசைவு வழங்கியிருக்கிறுர்கள். நேர்முக வருணனை வழங்கிய அன்பர்கள் தங்கள் உரைகளை எங்களுக்கு எழுதி அனுப்பியுள்ளார்கள்.

அண்ணுமலையார் திருக்கோயிலாரும், திருவண்ணுமலை ஈசான்ய மடத்து அதிபர் அவர்களும், இராமேச்சுரம் இராமநாத சுவாமி திருக்கோயிலாரும், டயாஞ ரோலிங் ஷர்டர்ஸ் திரு. எஸ். வி. நரசிம்மன் அவர்களும், ரமணுசிரமத்தின் தலைவர் திரு. வெங்கட்ராமன் அவர்களும் "மவுண்டன்பாத்" இதழின் ஆசிரியர் திரு. கணேசன், எம்.ஏ. அவர்களும் சில பிளாக்குகளைக் கொடுத்து உதவியிருக்கிறுர்கள். சேஷாத்திரி சுவாமிகள் படத்தை திரு. பாஸ்கராச்சாரிய அருணுசலம் அவர்கள் தந்து உதவியுள்ளார்கள்.

இந்தியாவிலுள்ள பெரிய அச்சகங்களுள் ஒன்ருன சென்னை வடபழனி பி.என்.கே. அச்சகத்தார் இந்த மலரை அச்சு ஏற்றி உயர்ந்த தோர் உருக்கொடுத்து அழகு வண்ணம் கூட்டி ஏற்றமுற அமைத்துக் கொடுக்கப் பேரன்புடன் இசைந்தார்கள். இந்த அச்சகத்தின் உரிமையாளர்களுக்கும், மானேஜர் திரு. நாயக் அவர்களுக்கும், அச்சக ஊழியர்களுக்கும் நம் நன்றி உரியது.

மலர் உருவாகத் தொடங்கிய நாள்முதல் திரு. எஸ். சரவணன் என்னுடன் இருந்து, எல்லா வகையிலும் உதவியாக இருந்திருக்கிறுர். பேராசிரியர் திரு. மு. வை. அரவிந்தன், டாக்டர் ஔவை நடராசன், திரு. உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் ஆகியோர் அச்சுப் படிகளைச் சரி பார்த்திருக்கிறுர்கள்.

விளம்பரம் தந்தவர்கள் உட்பட ஓராயிரம் பேர்களுடைய ஒத்துழைப்பாலும், ஏறத்தாழ ஓராண்டு உழைப்பாலும் மலர் உருவாகியிருக்கிறது. இதிலுள்ள குறைகளைப் பொறுத்து, அண்ணுமலையார் புகழ் பரப்பும் முயற்சியாக இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேம். இம்மலரை உருவாக்க உறுதுணையாக நின்ற அனைவர்க்கும் அண்ணுமலையில் கோயில் கொண்டுள்ள அம்மனும் அப்பனும் அருள்பாலிப்பாராக!

அருள்தரும் உண்ணுமுலை அம்மன், அருள்மிகு அண்ணுமலையார் திருவடித் தாமரைகளில் இம்மலரைப் படைத்து, அவர்களுடைய பேரருளைப் பணிந்து வேண்டுகிறேம்.

சாஸ்திரிநகர் அஞ்சலக மாடி
சென்னை-600 020
15—7—1976

"சோமலெ"
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

1. வாழ்த்துச் செய்திகள்

2. தலச் சிறப்பு

3. தேரும் திருவிழாவும்

4. அருணேயும் நகரத்தாரும்

5. அண்ணுமலே அருளிய ஞானியர்

6. முத்தமிழும் முத்தித்தலமும்

பக்கம்

7. வரலாறு, கல்வெட்டு, தொல்பொருள் இயல்


8. 4-4-1976 கும்பாபிஷேகம்

9. பல்சுவை


பக்கம்

10. ARTICLES IN ENGLISH

இம்மலரின் உள்ளே...



உள்ளொளியால் இவ்வுலகை உய்விக்க வந்த மகான்
தெய்வ அருள் மிக்க காஞ்சிபுகழ் சங்கராசாரியார் !



மாநிலத்தை வாழ்விக்கும் மாண்பு மிகப் புன்னகைக்கும்
புதுப் பெரியவரின் பொலிவுநிறை தோற்றம்!

வாழ்த்துச் செய்திகள்

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்

காஞ்சிபுரம்

மனிதர்களாக பிறந்த நாம் மற்ற ஜீவராசிகளைவிட மேலானவர்களாக இருக்கிறோம். நாமெல்லோரும் இன்ப வாழ்வையே நாடுகிறோம். ஆனால் வாழ்க்கையோ சுகமும், துக்கமும் கலந்தே யிருக்கிறது. புத்திசாலி, முடிந்தவரை யில் துக்கத்தை நீக்கிக் கொண்டு இன்பத்தை பெருக்கிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இம்முயற்சி பலிதமாவதற்கு கடவுள் துணையைத் தவிர வேறு உபாயமில்லை. கடவுளின் உண்மை ஸ்வரூபத்தை நாம் கண்களால் காண முடியாது. ஆனாலும் இவர் இயற்கையான கருணை ஸ்வபாவத்தினால் பல உருவங்களை எடுத்துக் கொண்டு உலகிற்கு அருள் புரிந்து வருகிறார். இவ்வாறு தேவர்களுக்கும் முனிவர் களுக்கும், மற்ற பக்தர்களுக்கும் தோற்றுவித்த உருவங்களே இவருடைய திவ்ய ரூபங்கள் என்று கொண்டு நம் முன்னோர்கள் சில்ப சாஸ்திர முறையில் ஆலயங்களை அமைத்து அவைகளில் வேத-ஆகம சாஸ்திரங்களின் அடிப்படையில் கடவுளின் இத்தகைய மூர்த்திகளை ப்ரதிஷ்டை செய்வித்தும், இவைகளின் பூஜைகளை தகுந்த அர்ச்சகர்களின் மூலம் நடத்தி வைத்தும், தாங்கள் வழிபட்டுக் கொண்டும் இவ்வாலய பூஜைகள் நடைபெற்ற பிறகே தாங்கள் உணவு உட்கொண்டும் வந்தனர். இதனால் எல்லா வாழ்க்கை நலன்களையும், மறுமைப் பயன்களையும் பெற்று வந்தனர்.

இத்தகைய மகிமை பெற்ற ஸ்தலங்களுள் பஞ்சபூத ஸ்தலங்களுள் தேஜஸ்ஸ்தலமும், நினைத்த மாத்திரத்திலேயே முக்தியளிக்கும் பெருமையுள்ளதுமான திருவண்ணாமலை முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது.

'நான் உயர்ந்தவன்,' 'நான் உயர்ந்தவன்' என்று தர்க்கித்த ப்ரம்ம, விஷ்ணுக்களுக்குமுன் சிவபெருமான் அக்னிமலையாகத் தோன்றி, ப்ரும்மா ஹம்ஸ மாகவும், விஷ்ணு வராஹமாகவும் சென்று முடியையும், அடியையும் தேடிக் கண்டு பிடிக்க முடியாமல் அகம்பாவம் நீங்கி திகைத்து நிற்க, தாமே பரம்பொருள் என்று ஸ்தாபித்தருளிய ஸ்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவ்விரு மஹான்களால் பாடப்பெற்றது. அருணகிரிநாதருக்கு அருள் புரிந்த மஹத்வம் வாய்ந்தது.

இவ்வுண்மையை உணர்ந்து திருவண்ணாமலை ஸ்ரீ அபீதகுசாம்பிகை (உண்ணா மலையம்மை)யுடன் கூடிய ஸ்ரீ அருணாசலேஸ்வரஸ்வாமியின் (அண்ணாமலையார்) ஆலயம் ஜீர்ணமாயிருந்ததை உத்தாரணம் செய்விக்க இவ்வாலயத்தின் தர்மகர்த்தர்கள் முன் வந்து லக்ஷக்கணக்கான தொகைச் செலவில் திருப்பணியை செய்வித்து வருவதையும் அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

இத்திருப்பணியிலும், தொடர்ந்து நடைபெறும் மஹாகும்பாபிஷேகத்திலும் கலந்து கொள்ளும் ஆஸ்திகர்களும் மற்றும் ஆலய ஸேவை செய்து வரும் தர்ம கர்த்தாக்களும், சிப்பந்திகளும்,

"தேடிச்சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்
ஆடிப்பாடியண்ணாமலை கைதொழ
ஓடிப்போம் நமதுள்ளவினைகளே"

என்னும் திருநாவுக்கரசரின் அருள்வாக்கின்படி ஸ்ரீ உண்ணாமலையம்மனுடன் கூடிய ஸ்ரீ அண்ணாமலைப்பெருமானின் அருளால் தீவினைகள் நீங்கப் பெற்று வாழ்க்கை மேன்மைகளை அடைவார்களாக.

நாராயணஸ்ம்ருதி:

ॐ

॥ श्री शृङ्गेरी श्रीजगद्गुरुसंस्थानम् ॥

श्री विद्याशङ्कर

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य पदवाक्यप्रमाणपारावारपारीण यमनियमासनप्राणायामप्रत्याहारध्यानधारणासमाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठ तपश्चक्रवर्त्यनाद्यविच्छिन्न श्रीशङ्कराचार्य गुरुपरम्पराप्राप्तषड्दर्शनस्थापनाचार्य व्याख्यानसिंहासनाधीश्वर सकलनिगमागमसारहृदय सांख्यत्रयप्रतिपादक वैदिकमार्गप्रवर्तक सर्वतन्त्रस्वतन्त्रादिराजधानीविद्यानगरमहाराजधानीकर्णाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य श्रीमद्राजाधिराजगुरुभूमण्डलाचार्य ऋष्यशृङ्गपुरवराधीश्वर तुङ्गभद्रातीरवासि श्रीमद्विद्याशङ्करपादपद्माराधक श्रीजगद्गुरु श्रीचन्द्रशेखरभारतीस्वामिगुरुकरकमलसञ्जात

श्रीजगद्गुरु शृङ्गेरी श्रीमदभिनवविद्यातीर्थस्वामिभिः ॥

नारायणस्मरण पूर्वकं

समस्त आस्तिक महाजन विषये, विरचिता आशिषः समुल्लसन्तु ।

दक्षिण भारते सन्ति बहूनि देवतायतनानि । तत्र च तिरुवण्णामलै इति प्रथिते अरुणाचल क्षेत्रे वर्तमानः देवालयः पुरातनः आस्ते । तत्र भगवान् अरुणाचलेश्वरः अपीतकुचाम्बया सह विराजते । प्रख्यात भगवद्भक्तः अरुणगिरिनाथः अत्रैवासीदिति प्रतीतिः । अत्र प्रवर्तमानः कृत्तिकादीपोत्सवः सर्वत्र प्रथितः वर्तते । पुरातनस्यास्य देवालयस्य जीर्णोद्धारं भूयसा धनव्ययेन भक्तजना विदधतीति विदित्वा मोदामहे । कार्यक्रमा इमे निष्प्रत्यूहं सम्पद्यन्तां, अत्र समवेताः सर्वेऽपि भक्तजनाः भगवतो भवानीजानेरनुकम्पायाः पात्रतां प्रपद्यन्तामिति चाशास्महे ।

कल्याणनगरम् इति नारायणस्मरणम् ।

राक्षस माघ कृष्णैकादशी

सौम्यवासरः २५-२-१९७६

श्री

बेंगलूर् प्रेस्

श्री श्रृङ्गेरी जगद्गुरु महासंस्थानम्, शारदापीठम्
श्रृङ्गेरी–कडूर् कर्नाटक राज्यम्

PRIVATE SECRETARY
To His Holiness the Jagadguru
Mahaswamigalavaru of Sringeri Math
SARADA PEETHAM
P. O. Sringeri (Kadur) 577 139 Karnataka State

CAMP : பெங்களூர்,
DATE : 22–1–'76

ஸ்ரீ அறங்காவலர் குழுத்தலைவர் டி. வி. சுப்ரமண்ய செட்டியார் அவர்களுக்கு நமஸ்காரம். உங்களுடைய 21-1-'76 கடிதம், ஸ்ரீ ஸ்ரீ மகா சன்னிதானம் திருவடிகளில் வைத்து சமர்ப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்ரீ மகா சன்னிதானமும், ஸ்ரீ சன்னிதானமும், நிகழ்ச்சிகள் நிர்விக்னமாய் நடக்கவேண்டும் எனவும், கும்பாபிஷேகம் நன் முறையில் நடைபெறவும், கும்பாபிஷேக மலர் சிறப்பாய் வெளிவரவும், பரிபூரணமாய் நல் ஆசிகளைக் கூறி, அவர்கள் அனுக்கிரகித்து அளித்த ஸ்ரீ சாரதா சந்திர மௌளீஸ்வரர் ப்ரசாதம் இத்துடன் தங்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது.

தங்கள்,
பிரதம காரியதரிசி

ஸ்ரீ சங்கராசார்ய சிருங்கேரி மடம்

Telephone: 22793 Telegrams: "AADHEENAM" Madurai

HIS HOLINESS THIRUVARUL THAVAYOGA

Sri-la-Sri Somasundara Sri Gnanasambanda Desika Paramachariya Swamigal

MADURAI AADHEENAM

70, SOUTH AVANI MOOLA STREET
MADURAI (SOUTH INDIA)

3-11-1975

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.

நாற்பது லட்சம் ரூபாய் செலவில் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் திருப்பணி நடைபெற்று வருவதையும் அடுத்து சில மாதங்களில் திருப்பணி வேலைகளை இனிதே முடித்து மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடக்கவிருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியுறுகிறோம்.

திருப்பணிக்கு ஒல்லும் வகையில் உதவி புரிந்து வருகின்ற பக்தர்களையும் தியாக உள்ளம் உடையவர்களையும், அறங்காவலர் குழுவினரையும் பாராட்டுகின்றோம்.

திருப்பணி வேலையும் கும்பாபிஷேக வைபவமும் யாதொரு விக்கினமுமின்றி நடந்தேறவும் அதில் பங்கு கொள்ளுகிற அனைவரும் எல்லா நலங்களும் பெற்றுத் திகழ அருள்மிகு உண்ணாமுலை சமேத திருவண்ணாமலையாரைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

ஞானசம்பந்த தேசிகர்

உ

குருபாதம்

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்,

மாயூரம் P. O.

18–11–1975

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

உலகில் ஆன்மீகத் துறையில் சிறப்புற்றது நமது பரத கண்டம். அதனுள்ளும் திருக்கோயில்களால் மிகச் சிறப்புற்றுத் திகழ்வது தமிழகமாகிய தென்னாடு. சிவாகமங்களிலேயே, 'பரத கண்டத்தில் தென்பகுதியாகிய குமரிக்கண்டமே சிறந்தது' எனக் கூறப்படுகின்றது. இவ்வுண்மையைச் சேக்கிழார், உபமன்னிய முனிவர் மற்றைய முனிவர் பலர்க்குக் கூறும் முறைமையில் வைத்து, ''மாதவம் செய்த தென்றிசை'' என்று அருளினார்.

கயிலையில் இருந்த ஆலால சுந்தரரைச் சிவபெருமான் நிலவுலகிற் செல்ல விடுத்த காலத்தில் அவர் தென்னாட்டிலேயே அவதரித்து வாழ்ந்து பல அற்புதங்களை இயற்றி மீளத் திருக்கயிலைக்கு எழுந்தருளியதை உபமன்னிய முனிவர் கூறிய பொழுது, மற்றைய முனிவர்கள், 'தென்னாடு அத்துணைச் சிறப்புடைய தாயிருத்தற்குக் காரணம் யாது' என்று வினவ, 'சிறந்த சிவத்தலங்களைத் தமிழகம் மிகப் பலவாகப் பெற்றிருத்தலே அதற்குக் காரணம்' என்று முதன்மையான சில தலங்களை உபமன்னிய முனிவர் எடுத்துக் கூறியதாகச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்னும் மற்றைய இரு புராணங்களும், முறையே முருகப் பெருமானது வழி நடையையும், அகத்தியர் முதலியோரது யாத்திரையையும் கூறும் இடங்களில் **திருவண்ணாமலையைக்** குறிப்பிட்டுச் செல்கின்றன. வில்லிபுத்தூர் ஆழ்வாரும் அருச்சுனது யாத்திரையைக் கூறுமிடத்தில், ''கற்றார்தொழும் அருணாசலமுங்கண்டுகை தொழுதான்'' எனக் கூறக் காண்கின்றோம்.

பஞ்ச பூதங்களில் சிறந்த தேயுத் தலமாக அண்ணாமலை விளங்குகின்றது. ''சோணாசலத்தில் சிறந்த க்ஷேத்திரம் இல்லை, சோமவாரத்தில் சிறந்த விரதம் இல்லை'' என்று சோமவார விரத கற்ப நூல் கூறுகிறது. இத்தகைய சிறந்த புராதனத் தலம் **திருவண்ணாமலை.**

இதற்கு உள்ள பெருமைகள் பல. தேவாரத் திருப்பதிகங்களுடன் திருவாசகத்தையும் பெற்றது இத்தலம். எனவே, இதனை நல்ல வகையில் செம்மையாக வைத்துப் போற்ற வேண்டுவது தமிழ் மக்கள் அனைவரது கடமையுமாகும். இவ்வகையில் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலின் அறங்காவலர்களும் பிற அன்பர்களும் பெரிய அளவில் அமைந்துள்ள இத் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் பல செய்து முடித்து மகாகும்பாபிஷேகம் நடத்துவிக்கவும், அவ்வமையம் கும்பாபிஷேக மலர் வெளியிடவும் இருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரியது. கும்பாபிஷேக மலர்க் குழுவில் தக்கார் பலர் இருத்தலால், மலர் மிக்க சிறப்புடன் வெளிவருவதாகும்.

மகாகும்பாபிஷேக விழா இனிது நடைபெற்றும், கும்பாபிஷேக மலர் நன்கு வெளிவந்தும் மக்கட்கு அருள்நெறி ஈடுபாட்டை மிகுவிக்க ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ ப்ரும்மேந்திர
ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம்

கீழ 7–ம் வீதி, புதுக்கோட்டை 622 001

திருவண்ணாமலையின் மஹிமை, மஹாஸ் காந்தம் என்ற கந்தபுராணத்தில் விசேஷமாகவும் விரிவாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மஹா புண்ணிய க்ஷேத்திரத்தில் உள்ள கோயிலை ஜீர்ணோத்தாரணம் செய்வதென்பது உலகத்தை உய்விக்கும் ஒரு புண்ணிய கைங்கர்யமாகும். புதிதாக ஆலயம் நிர்மாணம் செய்வது புண்யந்தானானாலும் ஜீர்ணமான ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்வது பலமடங்கு பயனுடையதென்று புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது.

''நூதனம் யேப்ரகுர்வந்தி இஷ்டகை ரஸ்மனாபிவா
ஸ்வர்க்கே தே ப்ரமோதந்தே யாவத்திஷ்டதி நிர்மலம்''

செங்கல்லாலோ, கருங்கல்லாலோ யார் புதிதாக கோயில் கட்டுவிக்கிறார்களோ அவர்கள் அந்த ஆலயம் சுத்தமாக உள்ளளவும் ஸ்வர்க்கத்தில் சந்தோஷப்படுகிறார்கள் என்றும்

''பக்நம் சிவாலயம்யேச ப்ரகுர்வந்தி நரோத்தமா:
ப்ராப்னுவந்தி பலம் தேவை த்விகுணம் நாத்ர சம்சய:

எந்த உத்தமர்கள் ஜீர்ணமான சிவாலயத்தை பழுது பார்த்துப் புதுப்பிக்கிறார்களோ அவர்கள் இரட்டிப்பு பலனை அடைவார்கள். இதில் சந்தேகமில்லை என்பது ஸ்காந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

''அறம் செய்தாள் செய்தான்
அறம் காப்போன் பாதம் சென்னிமேல்''

என்றும் ரக்ஷணம் பெரிய புண்ணியம் என்றும் தர்மரக்ஷணம் போற்றப்படுகிறது.

இப்பொழுது அண்ணாமலையார் திருக்கோயில் திருப்பணியை முடித்து குடமுழுக்கு கும்பாபிஷேகம் செய்கிற அகில புனிதமான சேவையைக் கைக்கொண்டு அண்ணாமலையாரின் பேரருளினால் சேவையின் பூர்த்தியையும் காணவிருக்கும் அன்பர்கள் சேவை பாராட்டத்தக்கது.

அருணாசலேஸ்வரரின் இக்கைங்கர்யத்தை அருணாசலஸ்வரரே வெகு சிறப்பாக நடத்திக் கொடுப்பார் என்பது உறுதியாகும். எந்த க்ஷேத்திரத்தை ஸ்மரித்த மாத்திரத்திலேயே மோக்ஷம் வரை நான்கு புருஷார்த்தங்களையும் அளிக்கவல்லதோ அந்த க்ஷேத்திரத்தில் ஆலயத் திருப்பணி செய்யும் குழுவினர் அனைவருக்கும் சகல சௌபாக்யங்களும் பெருகிட அருணாசலேஸ்வரர் அருள் புரிய வேண்டுமென ஜகஜ் ஜனனியான ஸ்ரீ மாதா புவனேச்வரியின் த்யான பூர்வகம் ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அனுக்ரஹிக்கிறார்கள் என்பதை ஆக்ஞைப்படி தெரிவித்துக் கொள்கிறோம்.

உ

சிவமயம்

தொலைபேசி எண்: 26479

வித்துவான்

சாந்தலிங்க இராமசாமியடிகள்,

பேரூராதீனம்.

பேரூர் (அஞ்சல்)

கோயமுத்தூர்-641 010

நாள்: 15 – 11 – 1975

'தண்ணார் தமிழ்ப் பெருமான் சைவமுதற் கடவுள்
விண்ணோரும் ஏனோரும் விரும்பிப் பாடாற்றும்
அண்ணாமலையார் திருக்குட நீராட் டுவிழா
மண்ணோர் பெறும்பய னுவது போற்றுதுமே.'

தமிழகத்தின் தெய்வத் திருத்தலங்களுள் மிகச் சிறந்த புனிதத்தலம் திருவண்ணாமலை. செந்தமிழண்ணலாகிய சிவபெருமான் சோதிவடிவமாக விளங்கிய மலை திருவண்ணாமலை. திருவண்ணாமலையில் அருள்வாய்ந்த ஞானச் செல்வர்கள் பலர் தங்கித் தவம் புரிந்து அருள் நெறி பரப்பினர். சந்தமிகு திருப்புகழை வழங்கிய அருணகிரியார் அருள் பெற்ற திருத்தலம். கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர், குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர் ஆகியோர் பாடிப்பரவிய தலம். மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் மொழியுடன் செந்தமிழ்த் தேனாகிய திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமானால் உளமுருகப் பாடிய அருமைத்திருத்தலம். இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் அருண்மிகு உண்ணாமுலையுடன் அமர் அண்ணாமலையார் திருக்கோவிலும், கோபுரங்களும் செப்பனிடப் பெற்றுத் திருக் குடமுழுக்குவிழா நடைபெறும் காலத்தில் விழா மலர் வெளிவருவது பெரிதும் வேண்டப்படுவதாகும். மலர் தமிழ் மணத்துடன் சமயக் கருத்துக்களாகிய நறுந்தேனுடன் பொலிவதாகுக.

சாந்தலிங்க இராமசாமியடிகள்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்கள்
அதிபர் ஸ்ரீ காசிமடம்

உ
சிவசிவ

திருப்பனந்தாள் 612504
(தஞ்சை ஜில்லா)

31—10—1975

ஆசியுரை

சம்பந்தர் அப்பரின் ஐந்து திருப்பதிகங்கள் பெற்ற திருப்பதியும், மணிவாசகப் பெருந்தகையின் மாண்புறு பனுவல்கள் துதிக்கும் பழம் பதியும், அருணகிரிப் பெருமானின் திருப்புகழின் நிலைக் களமாம் பொருப்புறு பதியும், ஆதிநாதன் சோதி நாதனாகவும் இருந்து நாம் ஓதியின்புற அமைந்த உயர் பதியும், உண்ணாமுலை உமையாளுடன் உடனாகிய ஒருவன் உறையும் உயர் தலமாகிய திருவண்ணாமலைத் திருக்கோயில், புதுக்கோலம் பெற்றுப் பொலியும் திருப்பணி பெற்றுள்ள செய்தி நமக்கு உய்தி தரும் நிறைவுச் செய்தியாகும்.

வழிபடும் அடியார்க்குப் புத்தி, சித்தி முத்திகளை வழங்கும் கருணையங் கடவுள்ஸ்ரீ, அறுவகைச் சமயத்தார்க்கும் அவ்வவர் பொருளாயுள்ள அம்மையப்பன் எளிவந்து மன்னுயிர்களை இன்னுயிர்களாக்கக் கோயில் கொண்டருளுகிறான். அவற்றை யெல்லாம் கோயில்கள் என்பதோடு, ஆன்மாக்கட்கு பெருநலம் பிறங்கச் செய்யும் வாயில்கள் என்றுணரும் நல்லுணர்வு பெருகப் பெருக இத்தகு தெய்விகத் திருப்பணிகள் தொடரும்.

இப்பெருந் திருப்பணியில் ஈடுற்ற நல்லன்பர்கள் யாவர்க்கும் நலங்களும் வளங்களும் நனி பெருகிச் சிறப்பதாகுக எனவும், இறைமணம் கமழ எழிலுற மலரும் சிறப்பு மலர் சைவத்தின் சால்புகளைத் தரணியெலாம் பரப்பும் தகுதிசால் மலராக மலர் வதாகுக எனவும், மலர் வெளியீட்டுக்குழுவில் தொண்டாற்றும் மகிமையுள அறிஞர் பெரு மக்கட்குப் பெருமைகள் மேலும் மேலும் பிறங்குவதாகுக எனவும், ஞாலமெலாம் இறைநெறி நலத்தில் தோய்வதாகுக எனவும் செந்திலாண்டவன் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

''அட்டமூர்த்தியண் ணாமலைமேவிய
நட்ட மாடியை நண்ணநன்காகுமே''



सत्यमेव जयते

PRESIDENT'S SECRETARIAT
RASHTRAPATI BHAVAN
NEW DELHI - 110004

October, 29, 1975

The President thanks you for your letter of the 24th October, 1975 and sends his best wishes for the success of your endeavours.

Yours sincerely,

K. R. GUPTA
Additional Private Secretary
to the President

Shri T. V. SUBRAMANIA CHETTIAR,
Chairman,
Board of Trustees,
Arulmigu Annamalaiyar Thirukkoil.



VICE-PRESIDENT
INDIA
NEW DELHI

October 27, 1975

I am glad to know that the Annamalaiyar Thirukkoil, Tiruvannamalai, is being renovated and that a Kumbabishekam will be performed at the conclusion of the renovation. I congratulate the Board of Trustees on the noble work they are doing and wish their endeavours all success.

B. D. JATTI



RAJ BHAVAN
Madras–600 022

October 31, 1975

Message

I am glad to know that Arulmigu Annamalaiyar Thirukkoil is being renovated and that Kumbabishekam will be performed. I wish the renovation work and the Kumbabishekam every success.

K. K. SHAH
Governor of Tamilnadu



Thiru P. K. Dave

ADVISER TO

H. E. THE GOVERNOR OF TAMIL NADU



FORT ST. GEORGE
MADRAS - 600 009

25th March, 1976

Message

I am happy to learn that the "MAHA KUMBABISHEKAM" of Arulmigu Arunachaleswarar Temple, Tiruvannamalai is taking place on the 4th April, 1976. I pray that the function may be a great success. My best wishes.

R. V. SUBRAHMANIAN

Adviser to Governor



सत्यमेव जयते

RAJ NIVAS
PONDICHERRY
November 15, 1975

Message

The Tiruvannamalai Temple has been drawing devotees from far and wide and the Board of Trustees deserve congratulations for renovating the temple. Apart from the spiritual elevation which the temple gives to the visitor, its architectural beauty is commemorative of India's cultural heritage.

I wish the forthcoming ceremony to mark the completion of renovation every success.

CHHEDI LAL
LIEUTENANT-GOVERNOR

P. S. Kailasam
Chief Justice, High Court

PHONE : 72920
" MURUGANADI "
7, KASTURI RANGA IYENGAR ROAD,
TEYNAMPET, MADRAS - 600 018

April 20, 1976.

I am very happy to learn that you are bringing a Special Malar in connection with the Tiruvannamalai Kumbabhishekam. Tiruvannamalai is one of the foremost shrines in South India. It is also the place wherefrom Ramana Maharishi spread his message to the Hindus. I hope the Malar will contain very useful and instructive articles about the Hindu religion.

P. S. KAILASAM

S. RAMANATHA SETHUPATHY
RAJAH OF RAMNAD
HEREDITARY TRUSTEE AND CHAIRMAN,
RAMESWARAM DEVASTHANAM AND
HEREDITARY TRUSTEE, RAMNAD SAMASTHANAM
DEVASTHANAMS AND CHATRAMS

உ
சிவமயம்
இராமநாதசகாயம்

Phone No.
PALA
RAMANATHAPUR
Date: 1—12—19

உண்ணுமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன், அண்ணாமலையான் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவண்ணாமலைக் கோயிலுக்குப் பெரும் பொருட்செலவில் திருப்பணி நடைபெற்று, கும்பாபிஷேகம் நடைபெறப் போவதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இப்புனிதப் பணியில் ஈடுபட்டுள்ள அறங்காவலர் குழுவினர்களையும், நகரத்தார் பெருமக்களையும் சிவநேசச் செல்வர்களையும் உளங்கனிந்து பாராட்டுகிறேன்.

தெய்வத் தமிழ்நாட்டிலுள்ள சிவாலயங்களுக்கெல்லாம் சிகரம் போல் விளங்குவது அண்ணாமலையார் திருக்கோயில்; பஞ்ச பூதத்தலங்களுள் தேயுதலமாக விளங்குவது. பிரமனும் விஷ்ணுவும் இறுமாப்புற்றபோது ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாய்த் தோன்றி அடிமுடி தேடவைத்த வரலாற்றுச் சிறப்புடையது. பன்னிரு திருமுறைகளில் குறிப்பாக தேவாரம், திருவாசகம் முதலிய அருளாளர்கள் பாடிய நூல்களில் சிறப்பாகப் போற்றப் பெறுவது. சிவனடியார்களெல்லாம் தினந்தோறும் ''அண்ணாமலையார்க்கு அரோகரா'' என்று அவன் திருநாமத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுகின்ற காட்சியே அந்தத் திருநாமத்திற்குள்ள பெருமையை விளக்கப் போதிய சான்றாகும். மேலும் நினைக்க முக்தி தரும் தலமாக விளங்குவது அதன் தனிச் சிறப்பாகும். திருவாசகத்தின் உயிர்நாடியாக விளங்கும் திருவெம்பாவையை மணிவாசகப் பெருமான் திருவண்ணாமலையிலேயே பாடினார் என்பது வரலாறு. எனவே திருவெம்பாவையில் நான்கு பாடல்களில் அண்ணாமலையாரின் அரிய பெருமையினை இனிது பாடியுள்ளார். முதல் பாசுரமே ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை'' என்று தொடங்குகின்றது.

''பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணாரமுதமுமாய் நின்றான் கழல்பாடி''

பிறவிப் பிணியறுக்கும் பிஞ்ஞகன்றன் திருவடிகளை வாழ்த்தி வணங்குவோமாக. அண்ணாமலை தொழுவார்வினை வழுவா வண்ணம் அறுமே. திருவண்ணாமலைத் திருக்கோயில் கும்பாபிஷேக விழா சிறப்பாக நடந்தேற எல்லாம் வல்ல அண்ணாமலையாரின் திருவடிகளை மனமொழி மெய்களால் வணங்கி வாழ்த்துகிறேன்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''.

எஸ். இராமநாத சேதுபதி
இராமநாதபுரம் அரசர்

Dr. RAJA SIR
M. A. MUTHIAH CHETTIAR
OF CHETTINAD

CHETTINAD HOUSE
RAJA ANNAMALAIPURAM
MADRAS - 28.

நம் நாட்டிலுள்ள சிவத்தலங்களுள் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் பன்னூறாண்டுகளாகப் பெரும்புகழ் பெற்றது. நகரத்தார்கள் மிகவும் ஈடுபாடு கொண்டுள்ள கோயில்களில் திருவண்ணாமலைக் கோயில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒன்று.

செட்டிநாட்டில் அண்ணாமலை, உண்ணாமுலை என்ற பெயர்கள் நிரம்ப வழங்குவன. என்னுடைய தகப்பனார் டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களும் என்னுடைய பெரிய தகப்பனார் திவான்பகதூர் சா.ராம.மு. ராமசாமி செட்டியார் அவர்களும் கோட்டையூர் அ.க. குடும்பத்தார்களும் மற்றும் ஏராளமான நகரத்தார்களும் திருவண்ணாமலைக் கோயிலில் நல்ல முறையில் எத்தனையோ திருப்பணிகள் செய்திருக்கிறார்கள்.

நகரத்தார்களுக்கும் திருவண்ணாமலைக்கும் பல தலைமுறைகளாக இருந்துவரும் இந்த இனிய தொடர்பு மேலும் சிறக்கும் வகையில், அண்மையில் கோயிலின் உட்பகுதிகளை யெல்லாம் பழுது பார்த்துப் புதுப்பிக்கும் திருப்பணி வேலையை நகரத்தார் மிகவும் விரிவாகச் செய்திருப்பதோடு அனைவர்க்கும் நிறைவு தரக்கூடிய வகையில் கும்பாபிஷேகத்தையும் நடத்திக் கொடுத்திருக்கிறார்கள். உயர் திருவாளர் அ.க.அ.சித.அழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையிலும் பேருழைப்பிலும் நகரத்தார்கள் திருப்பணி, கும்பாபிஷேகம் ஆகிய இரண்டு செயல்களையும் நிறைவேற்றி யிருப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

கற்கோயில் அமைத்ததோடு நில்லாமல், சொற் கோயிலாக கும்பாபிஷேக மலர் ஒன்றும் வெளியிடுவதாகக் கேள்விப்பட்டதும் நான் உண்மையிலேயே இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன். சான்றாதாரங்களோடு பெரிதும் பயனுள்ள முறையில் என்றென்றும் பயன்பெறும் வகையில் இந்த மலரை வெளியிடும் முயற்சிகளுக்கு என்னுடைய நல் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு. அ. முத்தையா செட்டியார்

M. BHAKTAVATSALAM

Phone : 7124

15, WARREN ROAD
MYLAPORE,
MADRAS - 600 004

தேதி : 29-10-75

அன்புள்ள சுப்பிரமணியன் செட்டியார் அவர்களுக்கு,

அண்ணுமலையாரின் பழைய திருக்கோயிலின் திருப்பணிப் பொறுப்பை தாங்களும் மற்ற சகாக்களும் ஏற்றுக்கொண்டு சிறப்பாக நடத்த முன்வந்ததுபற்றி மகிழ்ச்சி. அதற்கு வேண்டிய பொருள் கிடைப்பதில் சிரமமிராது என்றுதான் நான் நம்புகிறேன். இது சம்பந்தமாக சிறப்பு மலர் ஒன்று தாங்கள் வெளியிட இருப்பதுபற்றி நான் பாராட்டுகிறேன். இந்த மலர் வசீகரமாகவும் அறிவூட்டக்கூடியதாகவும் இருப்பதோடு தங்கள் திருப்பணிக்கும் பேருதவியாக இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

தங்களுக்கும் மற்ற திருப்பணிக் குழுவினருக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அன்புள்ள,

மீ. பக்தவத்சலம்

ம. பொ. சிவஞானம்
துணைத் தலைவர்
தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009

28-10-1975.

அன்புடையீர்,

வணக்கம். தமிழக அரசின் பேராதரவில்—நாற்பது லட்சம் ரூபாய் செலவில்—அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் திருப்பணி நடைபெற்று குட முழுக்கும் நிகழவிருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். பண்டை நாளில் அரசர்கள் தேவாலய திருப்பணிகளை நிறைவேற்றி வைத்தனர். இற்றை நாளில் குடியரசாகிவிட்ட தமிழக அரசு தேவாலயத் திருப்பணிக்கு உதவி புரிவது அறிந்து ஆத்திகம் மகிழ்வது உறுதி. குடமுழுக்கு விழா சிறப்புடன் நடைபெற அண்ணாமலையார் அருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள,

ம. பொ. சிவஞானம்.

Phone No. 61
THE NEW PALACE, SIVAGANGAI
RAMNAD DIST.

நாள்: 4—11—1975

நாம் வசிக்கும் வீடு பாழடைந்த நிலையில் இருந்தால் நாம் அதனைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கிறோம். பாழடைந்த வீட்டில் வாழ நாம் விரும்புவதில்லை. நமக்கு இந்த வீட்டையும், வாழ்வையும் வழங்கியவன் ஆண்டவனே. எல்லாம் வல்லவனாகிய அவனது வீடுகள்—உறைவிடங்கள் திருக்கோவில்கள் ஆகும். இறைவனின் இல்லங்களாகிய இத்திருக்கோவில்கள் பாழடைந்த நிலையிலிருந்தால், அவைகளைப் புதுப்பிக்கும் திருப்பணியை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு உண்மை பக்தனையும் சாரும். நமக்கு இந்த அரிய மனிதப் பிறவியையும் வாழ்வையும் நல்கிய இறைவனுக்கு நாம் இவ்வாறு தானே நன்றிக்கடன் செலுத்த முடியும்.

திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள அண்ணாமலையாரின் திருக்கோவில் வரலாற்றுச் சிறப்புடையது; பழம்பெருமை வாய்ந்தது. இந்த திருக்கோவிலின் திருப்பணியை மேற்கொண்டு திருக்குட நன்னீராட்டு பெருவிழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ள திருக்கோவில் அறங்காவலர் குழுவினருக்கும், திருப்பணிக் குழுவினருக்கும் என் பாராட்டுதல்கள். அண்ணாமலை அண்ணல் இந்த நல்லவர்களுக்கு எல்லா வளமும் நலமும் வழங்குவானாக!

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவை முன்னிட்டுச் சிறப்பு மலர் ஒன்று வெளியிட இருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இச் சிறப்பு மலர் பக்தி மணம் பரப்பும் நறுமண மலராக அமையவும், திருவண்ணாமலை திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பாக நடக்கவும் என் உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வளர்க நம் சமயம்!

வாழ்க சைவ நன்னெறி!!

து. ச. கார்த்திகேய வெங்கடாஜலபதி ராஜா
சிவகங்கை மன்னர்

எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.

சென்னை — 34
29 - 5 - 1976.

வாழ்த்துச் செய்தி

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் பெருஞ்செலவில் திருப்பணி செய்யப் பெற்று, குட முழுக்கு விழா 4—4—1976ல் நடைபெற்றதன் நினைவாக, சிறந்த முறையில் ஒரு மலர் வெளியிடப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

பயனுள்ள கட்டுரைகளுடனும் பக்தி மணம் கமழும் முறையிலும் இந்த மலரை உருவாக்கியுள்ள குழுவினருக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




சிருங்கேரி சாரதா பீடம் 35-வது ஜகத்குரு
ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த சுவாமிகள்




சிருங்கேரி சாரதா பீடம் 36-வது ஜகத்குரு
இளைய சந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்வாமிகள்



தருமையாதீனம் 26-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்



ஸ்ரீ-லா-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அதிபர், ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள்



கோவிலூர் மடாதிபதி
தவத்திரு இராமநாத ஞான தேசிக சுவாமிகள்
தலைவர், மலர்க்குழு.
புரவலர், திருப்பணிக்குழு.




இந்தியாவின் பிரதம மந்திரி **திருமதி இந்திரா காந்தி**



திரு. டி. வி. சுப்ரமணிய செட்டியார்
தலைவர், அறங்காவலர் குழு




திரு அ சொ அண்ணாமலைச் செட்டியார்
திருப்பணிக் குழுத்தலைவர்



திரு. அ. க. அ. சித. அரு. சிதம்பரம் செட்டியார்
தலைவர், கும்பாபிஷேகக் குழு



திரு. டி. என். பரமசிவம், நிர்வாக அலுவலர்
அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில்



திருப்பணிக் குழு


உட்கார்ந்திருப்பவர் : நடுவில் புரவலர் கோவிலூர் மடாதிபதி அவர்கள்

நிற்பவர்கள் : முதல் வரிசை இடமிருந்து வலம் : திரு. ப. வை. ராம. நமுக்கையான் செட்டியார், திரு. ராம. ராம. இராமநாதன் செட்டியார், திரு. அ. க. அ. ரெ. அழ. சிதம்பரம் செட்டியார், திரு. பு. வி. சுப்பிரமணிய செட்டியார், திரு. அ. செ. அண்ணாமலை செட்டியார் (தலைவர்) திரு. கம்பன் அடிப்பொடி சா. கணேசன், திரு. எஸ். கே. நடேச முதலியார்.

பின் வரிசை : திரு. எஸ். ஜெயராம பிள்ளை, திரு. ராம. செ. அழகப்ப செட்டியார், திரு. எஸ். எஸ். வி. எஸ். முத்தையா செட்டியார், திரு. பி. எஸ். மாணிக்கவேலு.



கும்பாபிஷேகத்திற்கு வந்திருந்த பெருமக்களில் சிலர்



உ

சிவமயம்


திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில்.
4-4-1976-ல் நடைபெற்ற மஹா கும்பாபிஷேக நினைவாக
கும்பாபிஷேகக் குழுத் தலைவர் அ. க. அ. சித. அழ.
சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கு
திருப்பணிக் குழுவினரால் வழங்கப் பெற்றது.
திருப்பணிக்குழுத் தலைவர் அவர்களுக்கும் இதுபோன்ற ஒரு
கேடயம் வழங்கப் பெற்றது.




திரு. எஸ். எஸ். வி. எஸ்.
முத்தையா செட்டியார், திருவண்ணாமலை
அறங்காவலர் குழுவின் முன்னாள் தலைவர்
1952 முதல் 15 ஆண்டுகள் அறங்காவலர்.
1950 முதல் அருணகிரிநாதர் விழா
நடத்துபவர்.




திருச்சி சுவாமிகளும் கோவிலூர் மடாதிபதியும்




திருக்கல்யாண மண்டபம் 1976-ல் புதுப்பிக்கப்பெற்ற பிறகு காட்சி தரும் பொலிவான தோற்றம்






செஞ்சிக் கோட்டை : இரு தோற்றங்கள்



சாத்தனூர் அணை

தலச் சிறப்பு



உ

சிவமயம்

அண்ணுமலையார் துணை

அருள்மிகு

அண்ணுமலையார் திருக்கோயில்

திருவண்ணுமலை

கும்பாபிஷேக மலர்

திருவண்ணுமலைத் தேவாரங்கள்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

1. வட்ட ஊைம்மதி சூடியை வானவர்
சிட்ட ஊைத்திரு வண்ணு மலையனை
இட்ட ஊையிகழ்ந் தார்புர மூன்றையும்
அட்ட ஊையடி யேன்மறந் துய்வனே.

2. வான ஊைம்மதி சூடிய மைந்தனைத்
தேன ஊைத்திரு வண்ணு மலையனை
ஏன ஊையிகழ்ந் தார்புர மூன்றெய்த
ஆன ஊையடி யேன்மறந் துய்வனே.

3. மத்த னைம்மத யானையு ரித்தவெஞ்
சித்த னைத்திரு வண்ணு மலையனை
முத்த னைம்முனிந் தார்புர மூன்றெய்த
அத்த னையடி யேன்மறந் துய்வனே.

4. காற்ற னைக்கலக் கும்வினை போயறத்
தேற்ற னைத்திரு வண்ணு மலையனைக்
கூற்ற னைக்கொடி யார்புர மூன்றெய்த
ஆற்ற னையடி யேன்மறந் துய்வனே.

5. மின்ன னைவினை தீர்த்தெனை
ஆட்கொண்ட
தென்ன னைத்திரு வண்ணு மலையனை
என்ன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
அன்ன னையடி யேன்மறந் துய்வனே.

6. மன்ற னைம்மதி யாதவன் வேள்விமேல்
சென்ற னைத்திரு வண்ணு மலையனை
வென்றனைவெகுண் டார்புர மூன்றையுங்
கொன்ற னைக்கொடி யேன்மறந்
துய்வனே.

7. வீர னைவிட முண்டனை விண்ணவர்
தீர னைத்திரு வண்ணு மலையனை
ஊர னையுண ரார்புர மூன்றெய்த
ஆர னையடி யேன்மறந் துய்வனே.

8. கருவி னைக்கடல் வாய்விடம் உண்டஎம்
திருவி னைத்திரு வண்ணு மலையனை
உருவி னையுண ரார்புர மூன்றெய்த
அருவி னையடி யேன்மறந் துய்வனே.

9. அருத்த னையர வைந்தலை நாகத்தைத்
திருத்த னைத்திரு வண்ணு மலையனைக்
கருத்த னைக்கடி யார்புர மூன்றெய்த
அருத்த னையடி யேன்மறந் துய்வனே.

10. அரக்க னையல றவ்விர லூன்றிய
திருத்த னைத்திரு வண்ணு மலையனை
இரக்க மாயென் உடலுறு நோய்களைத்
துரக்க னைத்தொண்ட னேன்மறந்
துய்வனே.

11. பட்டி ஏறுகந் தேறிப் பல இ(ல்)லம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்தியண் ணுமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை கேடில்லை
காண்மினே.

12. பெற்ற மேறுவர் பெய்பலிக் கென்றவர்
சுற்ற மாமிகு தொல்புக ழாளொடும்
அற்றந் தீர்க்குமண் ணுமலை கைதொழ
நற்ற வத்தொடு ஞானத் திருப்பரே.

13. பல்லி லோடுகை யேந்திப் பல இ(ல்)லம்
ஒல்லை சென்றுணங் கல்கவர் வாரவர்
அல்லல் தீர்க்குமண் ணுமலை கைதொழ
நல்ல வாயின நம்மை யடையுமே.

14. பாடிச் சென்று பலிக்கென்று நின்றவர்
ஓடிப் போயினர் செய்வதொன்
றென்கொலோ
ஆடிப் பாடியண் ணுமலை கைதொழ
ஓடிப் போகும் நம் மேலை வினைகளே.

15. தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்
ஆடிப் பாடியண் ணுமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ள வினைகளே.

16. கட்டி யொக்குங் கரும்பி னிடைத் துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனுர்
அட்ட மூர்த்தியண் ணுமலை மேவிய
நட்ட மாடியை நண்ணநன் காகுமே.

17. கோணிக் கொண்டையர் வேடமுன்
கொண்டவர்
பாணி நட்டங்க ளாடும் பரமனுர்
ஆணிப் பொன்னின் அண்ணுமலை
கைதொழப்
பேணி நின்ற பெருவினை போகுமே.

18. கண்டந் தான் கறுத் தான்கால னுருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனுர்
அண்டத் தோங்கும் அண்ணுமலை
கைதொழ
விண்டு போகு நம் மேலை வினைகளே.

19. முந்திச் சென்றுமுப் போதும்
வணங்குமின்
அந்தி வாயொளி யான்றனண் ணுமலை
சிந்தி யாஎழு வார்வினை தீர்த்திடும்
கந்த மாமலர் சூடுங் கருத்தனே.

20. மறையி னுனெடு மாலவன் காண்கிலா
நிறையும் நீர்மையுள் நின்றருள்
செய்தவன்
உறையும் மாண்பினண் ணுமலை
கைதொழப்
பறையும் நாஞ்செய்த பாவங்க ளானவே.



திருச்சிற்றம்பலம்

1. ஓதிமா மலர்கள் தூவி
   உமையவள் பங்கா மிக்க
   சோதியே துளங்கும் எண்தோள்
   சுடர்மழுப் படையி னானே
   ஆதியே அமரர் கோவே
   அணியணா மலையு ளானே
   நீதியால் நின்னை யல்லால்
   நினையுமா நினைவி லேனே.

2. பண்தனை வென்ற இன்சொற்
   பாவையோர் பங்க நீல
   கண்டனே கார்கொள் கொன்றைக்
   கடவுளே கமல பாதா
   அண்டனே அமரர் கோவே
   அணியணா மலையு ளானே
   தொண்டனேன் உன்னை அல்லாற்
   சொல்லுமா சொல்லி லேனே.

3. உருவமும் உயிரு மாகி
   ஓதிய வுலகுக் கெல்லாம்
   பெருவினை பிறப்பு வீடாய்
   நின்றஎம் பெருமான் மிக்க
   அருவிபொன் சொரியும் அண்ணா
   மலையுளாய் அண்டர் கோவே
   மருவிநின் பாத மல்லால்
   மற்றொரு மாடி லானே.

4. பைம்பொனே பவளக் குன்றே
   பரமனே பால்வெண் ணீற்றாய்
   செம்பொனே மலர்செய் பாதா
   சீர்தரு மணியே மிக்க
   அம்பொனே கொழித்து வீழும்
   அணியணா மலையு ளானே
   என்பொனே உன்னை யல்லால்
   ஏதுநான் நினைவி லேனே.

5. பிறையணி முடியி னானே
   பிஞ்ஞகா பெண்ணோர் பாகா
   மறைவலா இறைவா வண்டார்
   கொன்றையாய் வாம தேவா
   அறைகழல் அமரர் ஏத்தும்
   அணியணா மலையு ளானே
   இறைவனே உன்னை அல்லா
   லியாதுநான் நினைவி லேனே.

6. புரிசடை முடியின் மேலோர்
   பொருபுனற் கங்கை வைத்துக்
   கரியுரி போர்வை யாகக்
   கருதிய கால காலா
   அரிகுலம் மலிந்த அண்ணா
   மலையுளாய் அலரின் மிக்க
   வரிமிகு வண்டு பண்செய்
   பாதநான் மறப்பி லேனே.

7. இரவியும் மதியும் விண்ணும்
   இருநிலம் புனலுங் காற்றும்
   உரகமார் பவனம் எட்டுந்
   திசையொளி உருவ மானாய்
   அரவுமிழ் மணிகொள் சோதி
   அணியணா மலையு ளானே
   பரவுநின் பாத மல்லாற்
   பரமநான் பற்றி லேனே.

8. பார்த்தனுக் கன்று நல்கிப்
   பாசுப தத்தை ஈந்தாய்
   நீர்த்ததும் புலாவு கங்கை
   நெடுமுடி நிலாவ வைத்தாய்
   ஆர்த்துவந் தீண்டு கொண்டல்
   அணியணா மலையு ளானே
   தீர்த்தனே நின்றன் பாதத்
   திறமலால் திறமி லேனே.

9. பாலுநெய் முதலா மிக்க
பசுவில்ஐந் தாடு வானே
மாலுநான் முகனுங் கூடிக்
காண்கிலா வகையுள் நின்ருய்
ஆலுநீர் கொண்டல் பூகம்
அணியணு மலையு ளானே
வாலுடை விடையாய் உன்றன்
மலரடி மறப்பி லேனே.

10. இரக்கமொன் றியாது மில்லாக்
காலனைக் கடந்த எம்மான்
உரத்தினல் வரைய ஊக்க
ஒருவிரல் நுதியி னலே
அரக்கனை நெரித்த அண்ணு
மலையுளாய் அமர ரேறே
சிரத்தினல் வணங்கி ஏத்தித்
திருவடி மறப்பி லேனே.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்



திருச்சிற்றம்பலம்

பண் நட்டபாடை

1. உண்ணுமுலை யுமையாளொடும்
உடனகிய வொருவன்
பெண்ணகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணர்ந்தன அருவித்திரள்
மழலைம்முழ அதிரும்
அண்ணுமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே.

2. தேமாங்கனி கடுவன்கொள
விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவல்மிசை
சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழில்
அண்ணுமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி
நினைவார்வினை யிலரே.

3. பீலிம்மயில் பெடையோடுறை
பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேல் நிறை
சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழில்
அண்ணுமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி
தொழுவாரன புகழே.

4. உதிரும்மயி ரிடுவெண்தலை
கலனவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவும்
எருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை இளவெண்பிறை
முடிமேல்கொள அடிமேல்
அதிருங்கழ லடிகட்கிடம்
அண்ணுமலை யதுவே.

5. மரவஞ்சிலை தரளம்மிகு
மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படும்
அண்ணுமலை யண்ணல்
உரவஞ்சடை உலவும்புனல்
உடனவதும் ஓரார்
குரவங்கமழ் நறுமென்குழல்
உமைபுல்குதல் குணமே.

6. பெருகும்புனல் அண்ணுமலை
பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி
அணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ்
சடையார்கழல் பரவி
உருகும்மனம் உடையார்தமக்
குறுநோயடை யாவே.

7. கரிகாலன குடர்கொள்வன
கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை
யுதையுண்டவை யுருள
எரியாடிய இறைவர்க்கிடம்
இனவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடும்
அண்ணாமலை யதுவே.

8. ஒளிறூபுலி யதளாடையன்
உமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண
வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய
விகிர்தன்இரா வணனை
அளறூபட அடர்த்தானிடம்
அண்ணாமலை யதுவே.

9. விளவார்கனி படநூறிய
கடல்வண் ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய
அண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை
தலைவன்னடி சரணே.

10. வேர்வந்துற மாசூர்தர
வெயில்நின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர
மறையாவரு வாரும்
ஆரம்பர்தம் உரைகொள்ளன்மின்
அண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையான்நல்ல
கழல்சேர்வது குணமே.

11. வெம்புந்திய கதிரோனொளி
விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன்
அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ
குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர்
அடிபேணுதல் தவமே.

கேரளத்திலும் சிதம்பரத்திலும் அண்ணாமலையார் கோயில்கள்

திருவண்ணாமலையிலிருந்து கேரளத்திற்குச் சென்றவர்கள், தாங்கள் குடியேறிய ஊரில் அண்ணாமலையார்க்கு ஒரு கோயிலைக் கட்டி இருக்கிறார்கள். எர்ணாகுளம் வட்டத்தில், தொடுப்புழா அருகே உள்ள கரிக்கோடு என்னும் ஊரில் அண்ணாமலையார் கோயில் இன்றும் உள்ளது.

திருவண்ணாமலையிலிருந்து சென்ற குகை நமச்சிவாயர் சிதம்பரத்தில் நிறுவிய குகை மடத்தில் குகை-கணபாடி மறை ஞான சம்பந்தப் பண்டாரம் தமக்கே உரிமையுள்ள ஒரு மடம் சிதம்பரத்தில் இருக்க வேண்டுமென்று கருதி **கண்கட்டி மடம்** என்னும் பெயரில் ஒரு மடம் நிறுவினார்கள். கீழை மாட வீதியும், தெற்கு மாட வீதியும் கூடும் உமையாள் சந்தின் மேல்பால், வடக்கு நோக்கி அந்த மடம் கட்டப்பெற்றது. மடத்தின் தென் கோடியின் பின் பகுதி இறுதியில் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் நினைவாக, கருங்கற்களால் தனிக் கோயில் ஒன்றினைக் கட்டினார்கள். இக்கோயில் இன்றும் சிதம்பரம் — மாலை கட்டித் தெரு வடபாக வரிசையில் மெய்கண்ட வித்தியாசாலைக்குக் கீழ்பால் மண் சுவர் அமைந்த—காலியாக உள்ள தோட்டத்தில்—கிழக்கு நோக்கி உள்ளது.

"அண்ணுமலையாருக்கு அரோகரா"

புரிசை சு. முருகேசன்

இப்பேரொலி தமிழகமெங்கும் பரந்து சிறந்துள்ளது. சிவபெருமானுக்குள்ள சிறப்புப் பெயர்களில் முன்னிற்பது அரன் என்பது. இதனை அடுக்கியொலிக்கும் போது,

அரகர அரகர அரகரவென முழங்கப்பெறுகின்றது. எத்தனேயோ சிறப்புள்ள தலங்களிருக்க, இந்த அரகர முழக்கத்தில் அண்ணுமலையாரை மாத்திரம் சேர்ப்பது ஏன்? என வொரு ஐயமெழலாம். இதற்குத் தக்க காரணம் ஒன்றுண்டு. அரன் என்ற திருப் பெயர் அண்ணுமலைக்குச் சிறப்பானது.

அரன் என்ற ஆண்பாலுக்குப் பொருந்திய பெண்பால் பெயர் அரியென்பது யாவரும் ஒப்புக் கொள்ள நிற்பது. பராசக்தியே மனேன்மணியாய், இலக்குமியாய், கலைமகளாய் மற்றுமுள பெண் தெய்வங்களுக்கு மூலமுதலாய் நிற்கும் சக்தி. அப்பராசக்தியே பிரமாதி தேவர்களுக்கெல்லாம் தலைவனுய் அரன் பக்கல் அரியென்ற பேர் பெற்ற தலைவியாய் விளங்கி நிற்கிறது. இந்த உண்மையை, திருநாவுக்கரசர்

எரியலால் உருவமில்லை
ஏறலால் ஏறலில்லை
கரியலால் போர்வையில்லை
காண்டகு சோதியார்க்கு
பிரிவிலா அமரர் கூடிப்
பெருந்தகைப் **பிரான் என்றுஏத்தும்**
அரியலால் தேவியில்லை
ஐயன் ஐயாறனுர்க்கே.

என்று உரைத்திருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. அமரர் பிரான் எனப் போற்ற நிற்பவரே அரனிடத்தில் பிராட்டியென நிற்கின்றனராம்.

இந்த அரன் அரி சேர்ந்த திருவுருவமே ''அர்த்தனரீஸ்வரர்''. இந்த மூர்த்தி அண்ணுமலைக் கோயிலில் மிகவும் முதன்மையுள்ளவர். இந்த மூர்த்தி எழுந்தருளிய பிறகுதான் சோதி தெரிசனம் கிடைக்கிறது. இவரே அரியரன். இவரைப்போற்றும் ஒலியே அரகர வென்பது. இக்காரணத்தால் அண்ணுமலையாருக்கரோகரா சிறப்புரிமை பெறுவது திருவண்ணுமலையே.

''அரகர வென்பது கடலின் முழங்குவது அருணைவளம்பதியே'' என்பார் சைவ. எல்லப்ப நாவலர்.

அண்ணுமலையார் அடிநிழல்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
மகாசந்நிதானம், தொண்டை மண்டலம் ஆதீனம், பெரிய காஞ்சிபுரம்

'அண்ணுமலை' என்னும் பெயர்க்குப் பொருள் பழங்காலத்தில் எட்டாத மலை என்பது. திருமாலுக்கும் நான்முகனுக்கும் முறையே அடியும் முடியும் எட்டாதபடி சிவலிங்கத் திருமேனி ஒளி யுருவாய்த் தோன்றி விளங்கிய உண்மையைக் குறித்து வழங்கிய திருப்பெயர் ''அண்ணலாகா அண்ணல் நீழல் ஆரழல்போல் உருவம்'' என்று திருஞான சம்பந்தர் அருளிய திருவாக்காலும் அஃது உறுதிப்படும். சிவபிரானுக்குச் சிறப்புப் பெயராக வழங்கும் பெயர் **அண்ணல்** என்பது. அவ்வண்ணல் கொண்ட ஒளிப் பேருருவே இம் மலையாயிற்று. ஆகவே இதனை முன்னோர் '**அண்ணல் மலை**'' என்று வழங்கினர். அது மருவி அண்ணுமலை ஆயிற்று. இதற்குச் சான்று நிறைய உண்டு. அப்பன்சாமி அப்பாசாமி, ஐயன்சாமி ஐயாசாமி என மருவியதுபோல அண்ணல்மலை அண்ணுமலை என மருவுதலில் வியப்பில்லை. மண்ணணங்கட்டி மண்ணுங்கட்டி, புளியம்பழம் புளியாம்பழம், தனியம்பூண்டி தனியாம்பூண்டி என அகரம் ஆகார மாத்திரிதல் பெருவழக்கு. கண்ணம்மாள் செந்திலதிபன் இரண்டும், கண்ணம்மா செந்திலாதிபன் என வழங்குவது அறிக.

ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார் மேல் ஊனத் திரளை ஒழிக்கும் உண்மைப் பொருளை உணர்தல் அரிதே. ஒளி வண்ணம் செல் வண்ணம் ஆதலின் வடமொழியில் அருணசலம் (செம்மலை) அருணகிரி என்பன முதலிய பெயர் வழங்கலாயின. அருண என்பது அண்ண என மருவிற்று என்று ஒருவர் எழுதினர். அண்ணுமலை என்பது அண்ணுசலம் என இல்லை. அதனுல் அது எப்படி அமையும்?

முன், 'ஞானத்' திரளாய் நின்ற பெருமான், என்றுணர்ந்தோம். பெருமான் சிவன். அவன்தான் ஞானத் திரளாய் நின்ருன். நிற்றல் பெருமான் வினை, நின்றவன் பெருமான். நின்றது திரள். அத்திரள் ஞானம். கல் லுருவிய மலை ஊனக் கண்ணுக்குத் தெரிகின்றது. திருஞான சம்பந்தர் திருக்கண் ஞானக்கண். அந்த ஞானக் கண்ணுக்கு அது ஞானத் திரளாய்த் தெரிந்தது. அந்த ஞானத்திரள் யாது? அதுதான் திருவைந்தெழுத்துள் இரண்டாவதாக நிற்பது. 'நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்' என்றதிலுள்ள நுண்ணைந்தெழுத்துக் காண்க. சிகாரம் அடி, வகாரம் நிழல். சிவா என்பது முறையே அடியும் நிழலும் ஆகும். விரித்தெழுத இப்போது இயலவில்லை. இதனை உளங்கொண்டு நூலொடும் தியானம் பண்ணிக் கொண்டிருப்பின் தானே விரிந்து பொருள் விளக்கும். திருவடி என்பது சிவாநந்தம். சிவாநந்தாநுபூதி. சிவஞானபோதமாபாடியத்துள் திருவடியாகிய சிவாநந்தாநுபூதி திருவடியாகிய சிவாநந்தம் என்று இருமுறை இருவேறிடத்தில் எழுதினர் சிவஞான முனிவர். (சமாஜப் பதிப்பு பக்கம் 523, 539 சூ. 10 அதி. 1 சூ. 11. உரை) திருவடி, சிவாநந்தம், சிவாநந்தாநுபூதி, பரை உயிரில்யான் எனது என்று அறநின்றது, யான் எனது என்றற்ற இடமே திருவடி. சிவம் முதலிய பலவும் ஒரு பொருளன.

திருவடியின் நிழல், அருள், பரை, கருணை, ஞானம், அன்பு, திரோதையருள் ஆதல் முதலிய பலவும் ஒன்றே. அவசர பேதத்தால் வேறுபாடு பலப்பட வழங்கப்படும். பட்டாலும் பொருள் வேறுபடாது.

திருவிளையாடற் புராணத் திருமூல பரஞ்சோதி முனிவர், ''மாறியாடுந் தலைவன் **அடி நிழல்** பிரியாப் பேரின் பக்தி'' என்று பாடினர். அடியும் அடிநிழலும் ஒன்ருகா. நிழலுக்கு அடி உறையுள். அடியில் உறைவது நிழல். அடியது உடையது. நிழல் உடைமை. அடிநிழல் ஆறனுருபு. உடையது

உடைமைப் பொருளில் தொக்க தொகை நிலைத் தொடர். இவ்வுணர்வோடு அப்பர் அருளிய திருவாக்கை நோக்குதல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

" மருளவா மனத்தனுதி
மங்கினேன் மதியிலாதேன்
இருளவா வறுக்கும்எந்தை
யிணையடி நீழல்என்னும்
அருளவாப் பெறுதல்இன்றி
அஞ்சிநான் அலமந்தேற்குப்
பொருளவாத் தந்தவாறே
போதுபோம் புலர்ந்ததன்றே ".

(திருமுறை 4, 76, 1)

இத் தேவார எந்தையிணையடி (சி) என்றதும் நீழல் (வா) என்றதும் முறையே இரவு பகலில்லாத இன்ப வெளியையும் (ஆனந்தபூர்த்தி) அங்கு இங்கு எனுதபடி ஆனந்தபூர்த்தியாகி எங்கும் பிராகாசமாய் நிறைந்த அருளையும் குறித்தவையாகும்.

கைவல்ய நவநீதம் சந்தேகந் தெளிதற் படலம் பாடல் 11 பார்க்க.

"நின்மலவித்தி அந்த நிழல்வழியாய்உ லாவும்
மன்நன்மகனே அற்றைத்தான் அன்ருே
ஞானம்என்பர்"

என்று, " சின்மய வடிவின் சாயை " (நிழல்) கூறப்படுதல் காண்க.

" மாசில்வீணையும் மாலைமதிய மும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன்எந்தை யிணையடி நீழலே "

என்னுந் திருக்குறுந் தொகையுளும் எந்தை யிணையடி நீழலையுற்றுப் பேரின்பம் எய்துக.

தூண்களில் கலை சொட்டும் கல் திருவுருவங்கள்

—(0)—

உண்ணுமுலை அம்மன் கோயிலில் சந்நிதியின் முன்புள்ள மகாமண்டபத்தில் அழகொழுகும் அஷ்ட லெட்சுமிகள், உருத்திர துர்க்கை, மகாசத்தி, மகா சரஸ்வதி, சித்தி விநாயகர், கார்த்திகேயர், காலாந்தகர், வீணுதரர், வீரபத்திரர் ஆகியோர் கலை சொட்டும் கவின் கோலத்தில் காட்சி தருகின்றனர்.

பராசக்தி, பரிவார மூர்த்திகள், சண்டசத்திகள் சூழ, உண்ணுமுலை அம்மன் கோயில் கொண்டிருக்கிறுர்.

இவை யாவும், எண்பது ஆண்டுகளுக்குமுன் நகரத்தார்கள் செய்த திருப்பணியின் விளைவு. 19-ஆம் நூற்றுண்டில் அண்ணுமலையார் கோயிலைவிட உண்ணுமுலை அம்மன் கோயில் தாழ்ந்த தளத்தில் இருந்தது. அம்மனை வலம் வந்து வழிபடவும் இயலாதிருந்தது. நகரத்தார்கள், இக் கோயிலின் தளத்தை உயர்த்தி, உண்ணுமுலை அம்மனை வலம் வருவதற்கு ஏற்றவாறு பிரகாரம் அமைத்தனர். மேலும் வெளிச்சமும் காற்றும் வர வசதியாக மகா மண்டபத்தை உயரமாகக் கட்டி, தேவையான தூண்களை நிலைநாட்டினர். இந்தத் தூண்களில் முன்னர்க் குறிப்பிட்ட கலைச் செல்வங்களும் வடிக்கப் பெற்றன.

அண்ணுமலைத் தத்துவம்

கம்பன் அடிப்பொடி
(சா. கணேசன்)

'யான்' 'எனது' என்னும்
செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்

என்பது வள்ளுவப் பேராசான் வாக்கு.

[தான் என்ற அகங்காரத்தையும், தன்னு டையது என்னும் மமகாரத்தையும் (இந்த இருவகை மமதையையும்) முற்றிலும் விட்ட வர்கள் தேவர்கட்கும் மேலான இடத்தை, அதாவது வீடுபேற்றை அடைவார்கள்.]

மெய்யறிவு பெறச் செருக்கு (ஆணவம்) முற்றிலும் நீங்கவேண்டும். தன் முனைப்பு நீங்காதவரை மெய்யறிவு பெறமுடியாது. இந்த உண்மையை அற்புதமாக விளக்கிக் கொண்டிருப்பது அண்ணுமலைத் தத்துவம்.

ஆணவம், மமதை, செருக்கு, தன்முனைப்பு என்பன எல்லாம் ஒரு பொருளை உணர்த்திக் கொண்டிருக்கும் சொற்கள். எவருக்கு மமதை மேலோங்கி நிற்கும்? கல்வியின் பெருக்கும், செல்வத்தின் பெருக்கும் மமதையை உண்டாக் கும். இவற்றை வித்யாகர்வம் என்றும், தன கர்வம் என்றும் வடநூலோர் கூறுவர்.

கல்விக்கு அதிதேவதை கலைமகள்; அவள் நாயகன் நான்முகன்.

செல்வத்திற்கு அதிதேவதை திருமகள்; அவள் நாயகன் திருமால்.

அந்த இருவருக்கும் ஒரு நாள் தீவிரமான சர்ச்சை. நம்மிருவரில் யார் பெரியவர் என்பதே சர்ச்சைக்கு அடிப்படை.

''கல்விவளம் செறிந்த நானே பெரியவன்'' என்பது பிரமன் கூற்று.

''இல்லை; செல்வ வளம் மிக்க நானே பெரிய வன்'' என்பது விஷ்ணுவின் கூற்று.

இருவரும் கல்வியின் ஆற்றலையும், செல்வத் தின் வல்லமையையும் பற்றி நீண்டவாதம் செய்தும் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை.

இறுதியில் இருவரும் ஒரு நடுவரிடம் சென்று முடிவுபெற இசைந்தனர். இருவரும் நேரே சிவனிடம் சென்ருர்கள். சிவன் இருவர் வாதத்தையும் அமைதியாகக் கேட்டபின்,

''நான் ஒளி உருவாகி உயர்ந்து நிற்கிறேன். உங்களில் ஒருவர் அதன் அடியையும், மற்றவர் முடியையும் காண முயலுங்கள்; அதன்பின் உங்கள் வாதத்திற்கு முடிவு சொல்லுகிறேன்'' என்று சிவன் கூற இருவரும் அப் பரீக்ஷைக்கு இசைந்தனர்.

பிரம்மா தான் முடியைக் கண்டுபிடிக்க முயல்வதாகக் கூற, விஷ்ணு அடியைத் தான் கண்டு பிடிக்கிறேன் என்று ஒப்புக்கொண்டா ராம்.

சிவன் இருந்த இடத்தில் தேஜோமயமான ஒரு ஜோதி தோன்றி விண்முட்டி நின்றது.

திருமால் பன்றி உருவம் கொண்டு நிலத்தைக் கீண்டு கொண்டு பாதாளம் ஏழினும் கீழ்ச் சென்றும் பாதமலரைக் காணமுடியவில்லை. திருமால் நேர்மையுடன் இயலாமையை ஒப்புக் கொண்டு விட்டாராம். பிரமன் அன்னப் பட்சி உருவம் கொண்டு வான் நோக்கி மேலே மேலே பறந்து சென்று எய்த்து ஏங்கித் திணறிக்கொண் டிருக்கையில் சிவன் முடியிலிருந்து ஒரு தாழம்பூ கீழே விழுந்ததாம். அதைப் பற்றிக்கொண்டு பிரமன் கீழே வந்து தான் முடியைக் கண்டு விட்டதாயும், அதற்குச் சாட்சியாகத் தாழம்பூ வைக் கொண்டு வந்திருப்பதாயும் பொய் கூறினும். தாழம்பூவும் பிரமன் கூற்றிற்கு ஒத்துப் பாடியதாம்.

அதனுல் சிவன் பிரமனைச் சினந்து, 'உனக்குக் கோயில் இல்லாமற் போகக்கடவது' என்று சாபம் அளித்தாராம். அதனுலேதான் பிரம னுக்கு என்று தனிக்கோயில்கள் இல்லாமல் போய்விட்டதாம்.

மேலும் பொய்க் கூற்றுக்கு உடன்பட்டுச் சாட்சியாய் வந்ததற்காகத் தாழம்பூவைத் தன் மேனியைத் தீண்டக் கூடாதென்றும் விலக்கி

விட்டாராம். அதனுலேதான் சிவன் பூசைக்கும், அலங்காரத்திற்கும் தாழை பயன்படுத்தப் படுவதில்லையாம்.

இதில் மற்ருெரு நுண்ணிய கருத்து, தொனித்துக்கொண்டிருக்கிறது. செல்வச்செருக்கு இறுதியில் தோல்வியை ஒப்புக்கொண்டாலும், கல்விச் செருக்கு இருக்கிறதே அது தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் எப்படியாவது தோல்வியை மறைக்கச் சூழ்ச்சி செய்யும் என்ற உண்மையை நாமெல்லாம் அறியப் புலப்படுத்திக் கொண்டிருக்கிறது, இல்லையா?

இந்தத் தத்துவத்தை யெல்லாம் நாம் உணரும்படியாக நமது முன்னேயோர் அற்புதமாகச் சித்திரித்துள்ளார்கள். சிவனுக்குரிய அஷ்டாஷ்ட (அறுபத்துநான்கு) மூர்த்தங்களுள் ஒன்ருக அதைச் சமைத்துள்ளார்கள். அதை நாம் அண்ணுமலையார் என்று கூறுவோம். சிற்ப நூல் அதை 'லிங்கோத்பவமூர்த்தி' என்று கூறும்.

''அண்ணுமலை நினைக்க முத்தி தரும்'' என்பது, ஒரு பேருண்மையை உணர்த்திக் கொண்டிருப்பதாகும். மெய்யறிவு பெற, சத்திய தரிசனம் காண, முத்திநிலை அடைய, வேண்டுமானுல், ஆணவம் முற்றிலும் நீங்க வேண்டும். அந்த உண்மையை மறவாமல் நினைந்து வாழ்பவர்கட்கே வீடுபேறு கிட்டும், என்பதையே நினைக்க முத்தி தரும் என்ற சொற்றொடர் உணர்த்திக் கொண்டிருக்கிறது. 'நினைக்க' என்ருல் மறவாமல் மனம் கொண்டு கடைப்பிடிக்க என்று பொருள் கொள்ள வேண்டும்.

இந்தத் தத்துவக் கதையை மக்கள் மறவாமல் இருப்பதற்காகவே ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை நாளில் அண்ணுமலை மீது ஜோதி தீப தரிசனம் ஏற்பாடு செய்யப்பெறுகிறது.

சாந்திரமான கணித பூர்ணிமாந்த முறைப்படி திருக்கார்த்திகையுடன் கார்த்திகை மாதம் முடிந்துவிடுகிறது. மறுநாள் மார்கழி மாதம் பிறக்கிறது. கார்மேகம் நிறைந்த காலம் ஆணவமலத்தை உணர்த்திக் கொண்டிருக்கிறது. ஜோதிதீபம் அக்கினி; அந்த அக்கினி ஒளியாக நின்று இருளைப் போக்குவது போல நெருப்பாக நின்று நமது ஆணவத்தையும் சுட்டுப் பொசுக்குகிறது.

மறுநாட் பிறக்கும் மார்கழியே ஆண்டின் வைகறை ஆகும். குற்றமற்ற, உயிர்ஊட்டும், காலம் ஆகும். அதனுலேதான் கண்ணன் கீதையில்

''மாஸானும் மார்கசீர்ஷோ ஹம்''
(மாதங்களிலே நான் மார்கழி ஆவேன்)
என்று உணர்த்துகிருன்.

ஆணவம் முதலிய மலங்கள் சுட்டுப்பொசுக்கப்பட்டு எக் குற்றமும் இல்லாத மனத்துடன் மக்கள் இருப்பதால் இம்மாதத்தைச் சூனிய மாதம் என்பார்கள். 'சூனியம்' என்ருல் ஏதுமற்றது என்பதே பொருள். நிஷ்களங்கமாக, உள்ள இம்மாதம் முற்றிலும் இறைவழி பாட்டிற்கே ஒதுக்கப் பெற்றதால் கலியாணம் முதலிய பிற லோகாயத காரியங்கள் இம்மாதத்தில் செய்யப் பெறுவதில்லை.

பூர்ணிமாந்தக் கணித முறைப்படி மார்கழி மாத மிருகசீர்ஷ நட்சத்திரத்துடன் மார்கழி முடிந்துவிடுகிறது. அடுத்த நாள் திருவாதிரை; தை மாதப் பிறப்பாகும். பண்டைக் காலத்தில் தை மாதமே ஆண்டு முதல் மாதமாக இருந்தது. அன்று மக்கள் எழுந்து முழுகிக் கோயில் சென்று திருவாதிரைத் தரிசனம் செய்து விபூதிப் பிரசாத முதலியவற்றுடன் திருவாதிரைக் களியும் பெற்று மகிழ்வார்கள். களி என்ற சொல்லுக்கு மகிழ்ச்சி என்ற பொருளும் உண்டு. ஆண்டு முழுவதும் மகிழ்ச்சி நிலவ ஆண்டவன் அருளால் களி பெற்று உண்பது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

திருவண்ணுமலையில் நடைபெறும் தீப தரிசனம் முடிந்து தீபச் சுடர் எடுத்து வழங்குவதும் திருவாதிரைத் திருநாளிலேதான் என்பதையும் நாம் அறியும்போது தீப தரிசனம் எத்தனை எத்தனையோ அருமைத் தத்துவங்களை உணர்த்திக் கொண்டிருக்கும் உண்மையை எண்ணி மகிழ்வோம்; பயன் பெறுவோம்.

அண்ணுமலையார் ஆலய அமைப்பு

திரு. த. கோ. பரமசிவம் *11 - 10 - 1949* இல் வட ஆர்க்காடு மாவட்டம் களம் பூரில் பிறந்தவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் பயின்று எம். ஏ., பட்டம் பெற்று, புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் ஆய்வு உதவியாளராகப் பணியாற்றி வருகிருர். *1974 – 75* இல், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையில் பயிற்சி பெற்ற போது, திருவண்ணுமலைக் கோயில் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அச்சு வடிவம் பெருத அவருடைய ஆய்வுக் கட்டுரையின் சிறந்த பகுதிகள் சிலவற்றை இம் மலரில் வெளியிடுவதில் பெருமை கொள்கிருேம்.

'முந்தையோர் செய்யுள் போலச் செய்த திருக்கோயில்' என்று திருக்கோயில் அமைப் பைப்பற்றிச் சிவப்பிரகாச சுவாமிகள் திரு வெங்கை உலாவில் அருளிச் செய்துள்ளார். எழில் நலமும், ஆகம, சிற்ப அமைப்புப் பொலிவும் மிளிர ஆலயங்களை நம் முன்னேர் அமைத்துள்ளனர்.

அண்ணுமலை அண்ணலின் கோயில், எல்லாச் சிவன் கோயில்களையும் போலவே கருவறை முகமண்டபம், திருச்சுற்றுகள், மதில்கள் கொண்டு விளங்குகின்றது. கருவறை, அந்த ராலம், முக, முன் மண்டபங்கள் ஆகிய பழைய அமைப்புக்களையும், பல திருச் சுற்றுகள், பல மதில்கள், புதிய பரிவாலயங் கள், ஆயிரங்கால், நூற்றுக்கால் மண்டபங் கள், தீர்த்தங்கள், கோபுரங்கள் ஆகிய அமைப்புக்களையும் திருவண்ணுமலைத் திருக் கோயிலில் காணலாம்.

பல்வேறு காலங்களில் புதுப்பித்துத் திருப் பணிகள் செய்யப் பெற்றதால் பழைய அமைப்புமுறை படிப்படியாக மாறியிருக் கிறது. எனினும் கருவறை பழைய அமைப் புடன்தான் இன்றும் இலங்குகிறது. கற்றளி யாகவே பழங்காலத்தில் இத்திருக்கோயில் இருந்திருக்கவேண்டும் என்பதைக் கல்வெட்டு கள் உறுதிப்படுத்துகின்றன. கொடுங்கை யாளிவரி கல்லமைப்பாலும் விமானம் சுதை யமைப்பாலும் கட்டப்பெற்றுள்ளது.

முதல் பிரகாரமும், இரண்டாம் பிர காரமும் அவற்றை ஒட்டிய மதிலும் பழங் காலத்தனவாகும். மூன்ருும் பிரகாரம் குலோத்துங்கன் காலத்தில் ஏற்பட்டது. கிளிக் கோபுர வாயிலில் உள்ள கல்வெட்டுக் கள் இதனை மெய்ப்பிக்கின்றன.

அடுத்துள்ள நான்காம் பிரகாரமும் அதனை ஒட்டிய மதிலும், ஐந்தாம் பிரகாரமும் ஆயிரங்கால் மண்டபம், பெரிய நந்தி, சிவகங்கைத் தீர்த்தம் இவையும், இவற்ருேடு ஒட்டிய வெளிமதிற் சுவரும், வெளிவாயில் கோபுரங்களும் 16-ஆம் நூற்ருண்டைச் சார்ந்தனவாகும்.

ராஜகோபுரத்துக் கணபதி

அல்லல்போம் வல்வினைபோம் அன்னை
வயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்
போம்—நல்ல
குணமதிகை கோபுரத்துள் வீற்றிருக்
கும் செல்வக்
கணபதியைக் கைதொழுதக் கால்.

—அருணுசலீசர் பதிகம்
காப்பு வெண்பா

இப்படிக் காலந்தோறும் இத்திருக்கோயில் அளவால் திருத்தமும் வளர்ச்சியும் பெற்று வந்துள்ளது.

மதில்

ஆறும் பிரகாரம் எனப்படும் வெளிப் பிரகாரத்தில் உள்ள கருங்கல்லாலான திரு மதில் மிக உயரமாகவும், கனமாகவும் உறுதியாகவும் அமைந்திருப்பதோடு வெளி வாயில்களான கோபுரங்களை இணைக்கின்றது. மதிற்சுவரின் வெளிப்புறம் சுமார் முப்பது அடி உயரத்தில் உள்ளது. ஆங்காங்கு ஒரு மன்னனின் சிலை காணப்படுகின்றது. மதிலி லுள்ள கற்களில் சில கல்வெட்டுக்கள் தொடர்பில்லாமல் இருப்பதைக் கொண்டு முன்னர் இருந்த கோயில் கட்டடம் ஒன்றி லிருந்து கற்கள் பிரிக்கப்பட்டு இணைக்கப் பெற்றன என அறியலாம்.

ஆயிரங்கால் மண்டபம்

கிழக்கு வாயிலான இராஜ கோபுரத்தின் வழி உள்ளே சென்றால் வலப்புறத்தில் அமைந் திருப்பது ஆயிரங்கால் மண்டபமாகும். இதனைக் கிருஷ்ணதேவராயர் கட்டியதாகக் குறிப்புள்ளது. இந்த ஆயிரங்கால் மண்டபம் சரியாக ஆயிரம் தூண்களைக் கொண்டது. தூண்களின் கீழேயும் மேலேயும் வழக்கம் போல் நாயக்கர்காலச் சிற்பங்களும், சிவ மூர்த்தங்கள் பலவும், முனிவர்கள், திருமால் அவதாரங்கள், மலர்கள் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.

சகம் 1435-இல் திருவண்ணாமலையில் உள்ள பெரிய நாட்டு மடத்தில் ஒரு செப்பேடு தோன்றியுளது. தொண்டை நாட்டு இருபத்து நான்கு கோட்டத்து எழுபத்தொன்பது நாட்டவரும் 1900 நகரத்தாரும் கூடியிருந்து காஞ்சிபுரத் தில் அவர் கட்டியதைப் போல ஓர் ஆயிரக்கால் மண்டபம் கட்ட கிருஷ்ண தேவராயர் மஹாராஜாவுக்கு, கிழக்கு மேற்கு 275 அடி வடக்கு தெற்கு 295 அடி கோயில் முதற் பிராகாரத்தில் (இப் போது ஐந்தாம் பிரகாரம் எனப்படு வது) விடுவது என்றும் அதற்கு விலை யாக மடத்தார் 500 பொன் பெறு வது என்றும் முடிவு செய்து பொன்னை யும் பெரிய மடத்தார்க்கு வழங்கினர்.

கைபுனைந்தியற்றிய கவின்பெரு வனப்பு களாகவும் ஆயகலைகள் அறுபத்து நான்குக்கும் நிலைக்களனாகவும் தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் விளங்குகின் றன. தட்டு முட்டுப் பொருள்களும் வெளவால்களுமே ஆயிரக்கால் மண்ட பங்களில் அடைந்திருக்கிற நிலை பழங் கால வரலாறாகி விடவேண்டும். சிற் பக் கலை முதலிய (கோயில்களுடன் தொடர்புடைய) கலைகளை விளக்கும் வகையிலும், கலைப் பொருள்களைப் பேணும் வகையிலும் இந்த ஆயிரக் கால் மண்டபங்கள் தொல்பொருள் களஞ்சியங்களின் நிலைக்களன்களாக ஆக்கப்பெற வேண்டும். மதுரையி லுள்ள ஆயிரக்கால் மண்டபம் 1963ல் சுத்தம் செய்யப்பெற்று அதில் ஒரு கலைக்கூடம் அமைக்கப்பெற்றது.

ஆயிரக்கால் மண்டபங்கள் உள்ள திரு வானைக்கா, திருவரங்கம், திருநெல் வேலி, திருவாரூர்க் கோயில்களிலும் இத்தகைய முயற்சி தொடங்கப் பெற் றிருக்கிறது. அடுத்த கட்டமாக, திரு வண்ணாமலையிலும் இப்பணி நிகழ வேண்டும்.

இம்மண்டபத்தில் உபபீடத்தில் பக்கங் களில் அமைந்த சிற்பங்கள் மகளிர் கோலாட் டம் ஆடுகின்ற காட்சியையும், வீரர்களின் பல்வேறு விளையாடல்களையும் எழிலுறச் சித்திரிக்கின்றன. இம்மண்டபம் ஆனித் திருமஞ்சனம், திருவாதிரைத் திருநாள் ஆகிய இருநாட்களில் மட்டுமே பயன்படுத் தப் பெறுகிறது.

பாதாள லிங்கம்

சென்னை ஜே. எச். தாரபூர் அவர்களின் நன்கொடையால் இது புதுப்பிக்கப்பெற்று 14-5-1949ல் கவர்னர்-ஜெனரல் ராஜாஜி அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. பகவான் ரமண மகரிஷிகள் இக்குகையில் பல்லாண்டுகள் தங்கித் தவமியற்றினார்கள்.

கம்பத்து இளையனர்

ஆயிரங்கால் மண்டபத்தின் எதிரே உள்ளது **கம்பத்து இளையனர் சந்நிதி.** அருணகிரியாருடன் தொடர்பு கொண்ட வளைகாப்பு மண்டபத்தில் வடகீழ்ப் பாரிசக் கம்பத்தில் இதன் மூலவர் அமைந்துள்ளார். முருகப் பெருமான் அருணகிரியார் பாடலுக்கு இரங்கி பிரபுட தேவ மகாராசனுக்குக் காட்சி தந்ததாகக் கூறுவர். கம்பத்தில் அமைந்த காரணத்தால், இந்த மூலவர் மிகச் சிறுவடிவில் உள்ளார்.

சிவகங்கைத் தீர்த்தம்

கம்பத்து இளையனர் சந்நிதிக்குத் தெற்கே நாற்புறமும் திருமாளப் பத்தி மண்டபத்துடன் இத்திருக்குளம் அமைந்திருக்கிறது. இது தீர்த்தவாரிக்கும் பயன்படுத்தப் பெறுகின்றது. படிகளும் சுற்று மண்டபமும் கவினுறக் கட்டப் பெற்றுள்ளன. ''திருமலை அம்மன் தேவி சமுத்திரம்'' என்ற கால்வாய் வெட்டி இத் திருக்குளத்திற்கு நீர் கொண்டு வந்ததாகக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

சர்வசித்தி விநயகர் கோயில்

சிவகங்கைத் தீர்த்தத்தின் வடகரையில் இக் கோயில் உள்ளது. இதைச் சிவகங்கை விநயகர் என்றும் கூறுவர். இந்த விநயகர் அமர்ந்த நிலையில் உள்ளார். இக்கோயிலைச் சுற்றி உள்ள மண்டபத்துக் கூரையில் பிற்கால ஓவியங்கள் பல்வேறு சிவ மூர்த்தங்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

பெரிய நந்தி

இவற்றைக் கடந்து உள்ளே செல்லுமுன் பெரிய நந்தி ஒன்றின் மண்டபம் உள்ளது. இந்த நந்தியின் நீளம் ஆறு அடி. இது வல்லாள மகாராசனல் கட்டப்பெற்றது என்பர்.

கோபுரத்து இளையனர்

கோபுரத்து இளையனர் கோயில், நந்தி மண்டபத்துக்கு எதிரில் இருக்கிறது. வடக்குப்புற வெளிக்கோட்டத்துடன் இணைந்ததாகக் கோபுரத்து இளையனர் சந்நிதி உள்ளது. இங்கே தான் அருணகிரியை முருகன் தாங்கி அருள் பாலித்ததாகக் கூறுவர். முருகன் நின்றநிலையில் தேவியர் இருவருடனும் உள்ளான். அருணகிரிநாதருடைய செப்புப் படிவமும் உள்ளது. மண்டபமும் உள்ளது.

அதிர்வேட்டு நேரங்கள்

மாலை	6–15	மணி	விநாயகர் பூசை
,,	7–00	,,	அண்ணுமலையார் பூசை
,,	7–30	,,	உண்ணுமுலைஅம்மன் பூசை

அருணகிரிநாதரும் இதனைத் தம் பாடலில்

'அடல் அருணைத் திருக் கோபுரத்தே
அந்த வாயிலுக்கு
வடஅருகிற் சென்று
கண்டு கொண்டேன்'

என்று பாடுகின்றார்.

கல்யாணசுந்தரர் சந்நிதி

இக் கோபுரத்தின் தென்பால் காணப்படுவது கல்யாண சுந்தரர் சந்நிதி. இதில் லிங்கமும் அம்மனும் நந்தியும் உளர். முன்னே ஒரு மண்டபம் இணைந்துள்ளது. பக்தர்கள் இச்சந்நிதியில் தங்கள் திருமணங்களை நடத்திக் கொள்கின்றனர்.

கால பைரவர்

வல்லாள மகாராசன் கோபுரத்தின் தென்புறச் சுவரை ஒட்டி நான்காம் பிரகாரத்தில் காலபைரவர் கோயில் அமைந்துள்ளது. காலபைரவர் நின்ற நிலையில் இணையற்ற வீராவேசத்துடன் ஒளிவட்டங்களின்முன் காணப்படுகின்றார். எட்டுக் கரங்கள், உடுக்கை, கபாலம், கத்தி, கேடயம், கிளி, மணி, சூலம் கொண்டு நடுகல் அமைப்பில் கால்களை வைத்துக் கொண்டுள்ளார். தலையில் தீப் பிழம்பு உள்ளது. கோரைப் பற்கள் தெரிகின்றன. கால்களில் மணிவடம் உள்ளது. ஆடையும் நெற்றிக்கண்ணும் கொண்டுள்ளார்.

பிரம்மதீர்த்தம்

இது, காலபைரவர் கோயிலுக்கு முன், அழகான படிகளுடன் உள்ளது. இத்தீர்த்தத்திலும் தீர்த்தவாரி நடைபெறுகிறது.

புரவி மண்டபம்

இம் மண்டபத்தின் முகப்பிலுள்ள மேல் கூரையில் நாயக்கர் கால ஓவியங்கள் உள்ளன. பெரும்பாலும் கருமை வண்ணத்தால் ஆனவை. பாற்கடலைக் கடைகின்ற காட்சி பத்திபத்தியாக வரையப்பட்டுள்ளது. சில இடங்களில் தெளிவாகத் தெரிகின்ற நிலையில் உள்ளது.

யானை திறை கொண்ட விநாயகர்

இம் மூர்த்தி, கிளிக் கோபுரப் படித் துறைக்குத் தெற்கில் உள்ள அழகிய வேலைப்பாடமைந்த கோயிலில் வீற்றி ருக்கிறார்.

''தீமைபல செய்த ஓர் அரசனை, கன வில் இந்த விநாயகர் மருட்டினார் என் பர். அவன் பயந்து, யானைகள் பல வற்றைக் கொண்டு வந்து கப்பமாகச் செலுத்தி வணங்கியதால், யானை திறை கொண்ட விநாயகர் எனப் பெயர் வந் தது'' என்று சோண சைலமாலை, அருணைத் தல விநாயகர் காப்புக் கூறும்.

புரவி மண்டபத்தை அடுத்து சிறுநந்தி உள்ளது. தெற்கே **பிரமலிங்கம்** (முகலிங்கம்) **வித்யாதரேசுவரர், விநாயகர், நளேசுவரர்** ஆகிய சிற்றாலயங்கள் உள்ளன. நளேசுவரர் கோட்டத்தில் துர்க்கை வடிவங்கள் அழகுடன் உள்ளன.

கிளிக்கோபுரம்

கிளிக் கோபுர வாயில் அடுத்துள்ளது. இந்த வாயிலின் வலப்புறம் **யானைதிறை கொண்ட விநாயகர்** சந்நிதியும் இடப்புறம் **பிச்சை இளையனார்** சந்நிதியும் உள்ளன.

மூன்றாம் பிரகாரம்

கிளிக்கோபுரத்தைத் தாண்டியதும் முத லில் நம் கண்களிற் படுவது 'காட்சி மண்ட பம்'. 16 தூண்களுடைய இம்மண்டபத்தி லிருந்து கார்த்திகைத் திருநாளில் பஞ்ச மூர்த்திகள் தீபதரிசனம் செய்வர். அர்த்த நாரீசுவரர் காட்சி தரும் இடமும் இதுவே.

இம்மண்டபத்திற்கு நேர் எதிரே அகண்ட தீபம், பலிபீடம், நந்தி, கொடிக்கம்பம் ஆகியன உள்ளன. இது மூன்றாம் பிரகாரம்.

இப்பிரகாரத்தின் தெற்கே மடைப்பள்ளி யும் வடக்கேயுள்ள மண்டபத்தில் (இப் போது) திருக்கோயில் அலுவலகமும் உள்ளன. அந்த மண்டபத்திற்கு கிழக்கேயும் மேற்கே யும் அதாவது கிளிக் கோபுரத்தின் வட கோடியில் **சிதம்பரேஸ்வரர், ஜம்புகேஸ்வரர், ஏகாம்பரேஸ்வரர், பிடாரி** முதலிய சிற்றாலயங் கள் உள்ளன. இவை எல்லாவற்றிலும் கல் வெட்டுகள் உள்ளன.

பிடாரி

வடக்குநோக்கி அமைந்துள்ள இச்சிறு கோயிலில் சப்தமாதர் திருவுருவங்கள் தனித் தனிக் கற்களில் சமைக்கப்பட்டுள்ளன. உள்ளே, நிசும்பசூதனி எட்டுக் கைகளுடன் விளங்குகிறார்.

இங்குள்ள கல்லில் ரேணுகா திருவுருவத் தின் தலைமட்டும் உள்ளது. இதன் உயரம் $2\frac{1}{2}$ அடியாகும். கரண்டமகுடம், கோரைப் பல், பத்ரகுண்டலம், சிரச் சக்கரங்களைக் கொண்டு அழகுடன் விளங்குகிறது. மூக்குப் பகுதி சற்றுச் சிதைந்துள்ளது.

அலுவலகத்தின் வலப்புறம் (1944-ல் அமைக்கப்பெற்ற) யாகசாலை அறையும் காளத் தீசுவரர் சந்நிதியும் உள்ளன. இங்குள்ள நந்தி நீண்ட உருவிலும் மிகவும் குட்டையான கொம்புடனும் காணப்படுகிறது.


இந்தப் பிரகாரத்தில் தென்மேற்கே அமைந் திருப்பது **திருக்கல்யாண மண்டபம்.** விஜய நகர காலத்திய அமைப்புடன் பிற்காலத்தில் வழவழப்பாக்கப் பெற்ற தூண்கள் இணைந்து இம்மண்டபம் பொலிவும் அழகும் பெற்று

சம்பந்த விநாயகர்


சக வருஷம் 1262 (கி.பி. 1340)ல் வீர வல்லாள தேவர் ஆண்டபோது ஏற்பட்ட ஒரு கல்வெட்டு, இக்கோயி லில் உள்ளது. இதிலிருந்து தெரிவது:

''சம்பந்தாண்டார் என்பவர் திரு வண்ணாமலையில் இருந்தார். இவர் அண்ணாமலையார் கோயிலில் செல் வாக்குப் பெற்றவர். ஒரு மடத்தின் தலைவராய் இருந்தவர்.''

இவர் அமைத்த விநாயகர் கோயிலாத லால், இது சம்பந்த விநாயகர் என்று பெயர் பெற்றிருக்கக் கூடும்.



இரண்டாம் பிரகாரம் தெற்கு வரிசை
அருள்மிகு அண்ணாமலையார் கோயில்
முதல் பிராகாரம்
அண்ணாமலையார்
முதல் பிராகாரம்
இரண்டாம் பிராகாரம் மேற்கு வரிசை
சம்பந்த விநாயகர் கோயில்
பழனி ஆண்டவர் கோயில்
(a) அர்த்த மண்டபம்
(b) அந்தராளம்
(c) மகாமண்டபம்
மேற்கு
தெற்கு
வடக்கு
கிழக்கு

திருவண்ணாமலை அருள்தரும் உண்ணாமுலை அம்மனுடன் கூடிய அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் (பரப்பளவு 24 ஏக்கர்)



கோபுரங்கள் :

1. பெரிய கோபுரம்
2. கிட்டி கோபுரம்
3. அம்மணி அம்மாள் கோபுரம்
4. வடக்கு கட்டை கோபுரம்
5. மேலக் கோபுரம்
6. மேற்கு கட்டை கோபுரம்
7. தெற்கு கட்டை கோபுரம்
8. திருமஞ்சன கோபுரம்
9. தீபதரிசன மண்டபம்
10. வல்லாள மஹாராஜா கோபுரம்




ராஜ கோபுரத்தின் பெருமிதத் தோற்றம்




ராஜ கோபுரம் - கவினுறு சிற்பங்கள்




ராஜ கோபுரம் - சில பகுதிகள்




வல்லாள மகாராஜா கோபுரம்




கிளிக் கோபுரம்




திருமஞ்சனக் கோபுரம்




மேற்குக் கோபுரம்




மேற்குக்
கோபுரத்தை
அடுத்த கட்டைக்
கோபுரம்



அம்மணி அம்மாள் கோபுரம்



உண்ணாமுலை அம்மன்
விமானத்தின் ஒரு பகுதி



அஷ்ட லெட்சுமி மண்டபம்—
இரு தூண்கள்



விளங்குகின்றது. மண்டபத்தின் உள்ளே **பீமேசுவரர்** என்ற லிங்கமும் அதன் முன் பாக ஒரு மேடையும் உள்ளன.

நவக்கிரகங்கள் வாகனங்களுடன் தீட்டப் பெற்றுள்ளன. அருணுசல புராண வரலாறு கள், 25 மூர்த்தங்கள் ஆகியவற்ருேடு யானை—சிங்கம் சண்டை, மான்—புலி சண்டை, கோழிச்சண்டை, ஆட்டுச் சண்டை ஆகிய யனவும் தீட்டப் பெற்றுள்ளன. கோபிகா கிருஷ்ணன், நடராசர் காளி நடனம் ஆகி யவற்றுடன் வீரர்களின் பல்வேறு விளை யாடல்களையும் தீட்டி உள்ளனர். வயிற்றில் வாழைக்காய் வெட்டுதல், பார் விளை யாட்டுகள், யானை குண்டு உருட்டுதல், கரடி நடப்பது போன்ற இக்காலத்திய சர்க் கஸ் காட்சிகளும் இடம் பெறுகின்றன.

பாரதக் கதைக் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. துச்சாதனன் துகிலுரிகின்ற காட்சி, நச்சுநீர் அருந்தி இறக்கின்ற காட்சி போன்றன உள்ளன. இவர்கள் இக்காலத்துக் 'கூத்து'க்களில் வரும் துரியோதனன், பீமன் போல் ஆடைகள் உடுத்தியுள்ளனர். சப்த மாதர்களின் உருவமும் தீட்டப்பெற்றுள்ளன. நடுவில் வண்ண விளக்குக் குமிழிகள் தொங்குகின்றன.

கருவறை

கிழக்குப் பிரதான வாயிலின் வழியாக அண்ணுமலையார் சந்நிதிக்குள் நுழைய வேண் டும். கொடிமரம் அகண்ட தீபம் பலிபீடம் ஆகியவற்றையும் வடபுறம் உள்ள சம்பந்த விநாயகரையும் தென்புறம் உள்ள பழநி ஆண்டவரையும் வழிபட்டு அண்ணுமலையார் கருவறைக்கே புகுவோம்.

சம்பந்த விநாயகர் செந்தூரம் அணிந்து சிவந்து காணப் படுகின்ருர். பெரிய உருவம். வழக்கமான அமர்ந்த நிலை. அசுரனைக் கொன்று, அவனுடைய இரத்தத்தை உட லில் வாரிப் பூசிக் கொண்டதாகக் கூறுவர்.

க்ஷேத்திரப்பிள்ளையார்

பரிவார தெய்வங்களின் கும்பாபி ஷேகம் இந்தப் பிள்ளையாருக்குச் செய்த அபிஷேகத்துடன் தொடங் கிற்று.

இப்பிள்ளையார், இரண்டாம் பிரகாரத் தில் மேற்குத்திசையில் தென் கோடி யில் (தென் மேற்கு மூலையில்) உள்ளார்.

கண்டாரதித்தச் சோழனின் மனைவி யாரான செம்பியன் மாதேவியரால் இது அமைக்கப்பெற்றது.

வேணுகோபாலர்

செஞ்சி நாயக்கர்கள் ஆட்சியில் செங் கத்திலும் திருவண்ணுமலையிலும் இன் னும் சில இடங்களிலும் வேணு கோபால சுவாமிக்குக் கோயில்கள் கட் டப்பெற்றன. திருவண்ணுமலையில் ஏற் பட்ட வேணுகோபால சுவாமி கோயி லிலிருந்த ஒரு விக்கிரகம், பிற்காலத்தில் அண்ணுமலையார் கோயிலில் பிரதிஷ் டை செய்யப்பெற்றது.

இரண்டாம் பிரகாரம்

இப்பிரகாரத்தை வலம்வரும்போது மேடை யில் நாம் காண்பன: சனகேசுவரர், சனந் தேசுவரர், சனுதனேசுவரர், சனத் குமாரர், கௌசிகேசுவரர், குத்ஸரிஷுசுவரர், வால் மீகியீசுவரர், வாமரிஷுசுவரர், அக்னிலிங் கம், விக்னேசுவரர், விசுவநாதர், நாரதேசு வரர், காசிலிங்கம், வைசம்பாதனேசுவரர் முதலிய லிங்க மூர்த்தங்களையும் சுந்தரர் தொடங்கி 63 நாயன்மார்களையும், யமலிங் கம், தும்புரேசுவரர் ஆகியவர்களையும் காண் கின்ருேம். அடுத்து, சப்தமாதர்கள், இரண்டு கற்களில் செதுக்கப்பட்டுள்ளனர். கௌதமர் 2 அடி உயரத்திலும் தூர்வாசர் 4 அடி உயரத்திலும் நின்ற உருவில் உள்ளனர்.

மேற்கு வரிசையில் சோமாஸ்கந்தர் முதலிய உத்சவமூர்த்திகளும், வேணுகோபாலர் சந்நி தியும், ஆறுமுகன் சந்நிதியும் உள்ளன. பின், இடப்புறமாக பல லிங்கங்களையும், பிக்ஷா டணர், சண்முகர் மற்றும் 63 நாயன்மார் களுக்குரிய உத்சவமூர்த்திகளையும் வடக்கு வரி சையில் காண்கிருேம்.

காலசம்மாரர்

3 அடி உயரம். மழு, பாசம், சூலம், கபாலம் கொண்டு காலனைக் கடிகின்ற மூர்த்தியாக அழகோடு விளங்குகின்ருர். 13–14 ஆம் நூற்ருண்டு.

பைரவர்

3½ அடி உயரம், உடுக்கை, பாசம், சூலம், கபாலம் கொண்டு நாயுடன் தோற்றம் தருகின்ருர். தீச் சுவாலை, மணியாரம் உள்ளது. ஆடையில்லை. அடுத்துள்ளது பொக்கிஷ மேடை. இங்கு இருக்கும் உத்சவ மூர்த்தியின் காலம் 13, 14ஆம் நூற்ருண்டு என்பர். முதல், இரண்டாம் பிரகாரங்களை வண்ணக் கண்ணுடிக் குமிழ் விளக்குகள், சரவிளக்குகள், குத்து விளக்குகள் அணி செய்கின்றன.

தல விருட்சம்

மகிழமரம், இத்தலத்திற்கு உரிய விருட்சம் என்பது பொதுவான நம்பிக்கை. இக்கோயிலில் மகிழமரம் மூன்ரும் பிரகாரத்தில் உள்ளது.

அண்ணுமலை என்ருல் அண்ண முடியாத—அதாவது நெருங்க இயலாத—அருகே செல்ல முடியாத மலை என்று பொருள். நெருங்க முடியாத பொருள் நெருப்பு. எனவே அண்ணுமலைக்கு அருகே எந்த மரமும் இருப்பின் எரிந்து விடும். ஆகையால் திருவண்ணுமலைக்குத் தலவிருட்சம் இல்லை என்பது சிலருடைய கருத்தாகும்.

முதல் பிரகாரம்

தட்சிணுமூர்த்தி: கருவறை தென் கோட்டத்தில் பாம்பு, தீ, அக்கமாலை, புத்தகம் கொண்டு அமர்ந்துள்ள நிலை. கீழே முயலகன், 4 முனிவர்கள்.

லிங்கோத்பவர்: வராக உருவில் திருமால் கால்களை நீட்டி நீந்துவது போலவும், மேல் முடியின்மீது அன்னம் அமர்ந்துள்ளது போலவும் கண்ணியோடு லிங்கோத்பவர் விளங்குகிருர். வழக்கமாக அன்னம் அருகில் பறப்பதுபோல் இருக்கும். இது சிற்பியின் தவறு என்பர் சிலர்.

பிரம்மா: நின்ற நிலை, அக்கமாலை, கெண்டி, அபயம், கடிய வலம்பித மாகக் கொண்டுள்ளார்.

துர்க்கை: சக்கரம் இங்கு அபயம், கடிய வலம்பித அஸ்தங்களைக் கொண்டு விளங்குகிருர். எருமைத் தலைமீது நின்ற நிலை.

சண்டிகேசுவரர்: சமீப காலத்திய திருவுருவம் போலும்.

பூதவரி: சில பூதங்கள் விமானத்தைத் தாங்குவனவாகவும், மற்றும் சில குழல் வாசிப்பனவாகவும், பறை கொட்டுவதாகவும், நாட்டியம் பயில்வதாகவும், தாளம் அடிப்பதாகவும், பல்வேறு நிலைகளில் உள்ளன.

துவாரபாலகர்: முதற் பிரகாரத்திலுள்ள இரண்டு துவார பாலகர்களும் 10 அடி உயரம் உள்ளனர். சடா மகுடம், மழு, தாடய, தண்டம், தர்ஜனி முத்திரைகொண்டு தண்டத்தின் மீது காலையூன்றி, ஆந்தை குண்டலங்கள் கால் வரை மாறி மாலை கொண்டுள்ளனர். வலப்புறம் உள்ள துவார பாலகர் பாம்பைக் கொண்டுள்ளார்.

கருவறையினுள் உள்ள துவார பாலகர்கள் இரண்டு கைகளுடன் உள்ளனர். தர்ஜனி, கதை கொண்டு விளங்குகின்றனர்; கையில் பாம்பு உள்ளது. சடைமுடி, இவை 12-13 ஆம் நூற்ருண்டினதாக இருக்கலாம். முன் முக மண்டபத்தில் சிறு நந்தி இருக்கிறது.

அண்ணுமலையார்

கருவறையில் அண்ணுமலை அண்ணல் சாந்தமே உருவாக லிங்காதாரமாக எழுந்தருளி உள்ளார். ருத்திர பாகத்தை நோக்க இது சுயம்புலிங்கம்தான். ஆவுடையார் வட்டமாக அமைந்துள்ளது. ருத்திரபாகம் சொர்ண பந்தனத்துடன் காணப்படுகிறது. தீட்சை பெற்ற சிவாசாரியார்களைத் தவிர வேறு யாரும் அண்ணுமலை அண்ணலைத் தீண்ட முடியாது. அருகே மேரு சக்கரம் எனப்படும் பள்ளியறை சுவாமியும் யோகசக்தி அம்மனின் செப்புத் திருமேனியும் உள்ளன.

இந்தக் கோயிலின் முன் பகுதியில் பெரிய தொரு மண்டபம் உள்ளது. கொடிக்கம்பம், நந்தி, நவக்கிரகக் கோயில் ஆகியவற்றையும் இரண்டு கைகளுடன் தர்ஜனி, கதைகொண்டு கரண்ட மகுடத்துடன் விளங்கும் பெரிய துவார பாலிகையரையும் காண்கிறோம்.

அம்மன் கருவறை முழுவதும் சென்ற நூற் றுண்டில் நகரத்தார்களால் புதுப்பிக்கப்பெற்ற தால் பிற்கால அமைப்பையே காண்கின்றோம். கருவறையைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் மேற்கே உத்சவ மூர்த்திகள் உள்ளனர். லிங் கோத்பவர், உத்சவப் பிள்ளையார், சோழ லிங்கம், சேரலிங்கம், பிராமி, துர்க்கை ஆகிய திருவுருவங்களைக் கல்லில் காண்கின்றோம்.

கருவறையைச் சுற்றியும், அந்தராலத்திலும் 5 சக்தி அம்மன்மார் தேவகோட்டத்தில் உள் ளனர். ஒவ்வொன்றும் $1\frac{1}{2}$' உயரம் உடையன.

கருவறையில் அம்மன் நின்ற நிலையில் பத்ம மும் டோல அஸ்தமும் கொண்டு கருணைவிழி யுடன் விளங்குகின்றாள். உயரம் மூன்று அடி.

சந்நிதிக்கு வெளியே மண்டபத்தில் ஒவ் வொரு தூணிலும் இருபதாம் நூற்றுண்டுச் சிற்பங்கள் உள்ளன. அஷ்டலட்சுமிகள் இருப்ப தால் அஷ்டலட்சுமி மண்டபம் என்ற பெயருடன் இது விளங்குகிறது.

உண்ணுமுலை : ஊர்ப்பெயர்

ஒரு காலத்தில் திருவண்ணுமலை நகரம், உண்ணுமுலை அம்மன் பெய ராலும் வழங்கப்பெற்றது.

ஆதாரம் : In December 1322, Ballala moved into Unamale, that is the very important town Tiruvannamalai.

—J. Duncan M. Derrett
'The Hoysalas' — page 160
(Oxford University Press 1957)

மூலவர் மகிமை

பத்துப் பதினெரு
ஆண்டுகளுக்கு முன் ஒரு
போட்டோகிராபர் அண்ணு
மலையார் கோயிலுக்குள் வந்
தார். மூலவரை போட்டோ
எடுத்தார். அதன் பிறகு
கோபுரத்தின்மீது ஏறி அங்கி
ருந்து சில போட்டோக்கள்
எடுத்தார். எடுத்த பிறகு, கோபுரத்தில் இருந்தபடியே கீழேயுள்ள
ஒருவரிடம் காமிராவைக் கொடுத்தபோது காமிரா தவறி
விழுந்து விட்டது. ரோல் எல்லாம் பாழாகிவிட்ட
இருந்தாலும், அவர் ஒரே உறுதியாக மூலவரைப் து.
போட்டோ எடுத்துவிடுவது என்று முடிவு
செய்து, மறுபடியும் எப்படியோ
ரகசியமாக மூலவரைப் போட்
டோ எடுத்துவிட்டார்.
அந்த ரோல் என்ன
ஆயிற்று என்பதெல்லாம்
ஒன்றும் தெரியவில்லை. மறுநாள் அவர்
இறைவனடி சேர்ந்தார் என்பது மட்டும்தான் தெரிந்தது.

உ
சிவமயம்

அண்ணுமலையார் கோயிலில் உள்ள திருமூர்த்தங்கள் விவரம்

(1) இராஜ கோபுரம்

1. ஸ்ரீ கோபுர கணபதி
2. ஸ்ரீ விறன்மிண்ட நாயனுர்

(2) ஸ்ரீ கம்பத்திளையனுர் சந்நிதி

3. ஸ்ரீ துவார பாலகர்
4. ஸ்ரீ துவார பாலகர்
5. ஸ்ரீ கம்பத்திளையனுர் (மூலவர்)
6. ஸ்ரீ கணபதி
7. ஸ்ரீ சூரசம்மார மூர்த்தி

(3) ஸ்ரீ சர்வசித்தி விநாயகர் சந்நிதி

8. ஸ்ரீ சர்வசித்தி விநாயகர்
9. மூஷிகம்
10. ஸ்ரீ தண்டாயுதபாணி
11. ஸ்ரீ நாகர்
12. ஸ்ரீ பெரிய நந்தி
13. ஸ்ரீ பலிபீடம்

(4) ஸ்ரீ பாதாளலிங்கேசுவரர் சந்நிதி

14. ஸ்ரீ பாதாளலிங்கேசுவரர்
15. ஸ்ரீ நந்தி

(5) ஸ்ரீ கோபுரத்திளையனுர் சந்நிதி

16. ஸ்ரீ விநாயகர்
17. ஸ்ரீ கோபுரத்திளையனுர்
18. ஸ்ரீ வள்ளி
19. ஸ்ரீ தெய்வயானை
20. ஸ்ரீ சுப்பிரமணியர்
21. ஸ்ரீ அருணகிரிநாதர்
22. ஸ்ரீ மயில்

(6) ஸ்ரீ கல்யாணசுந்தரேசுவரர் சந்நிதி

23. ஸ்ரீ விநாயகர்
24. ஸ்ரீ கல்யாணசுந்தரேசுவரர்
25. ஸ்ரீ நந்தி
26. ஸ்ரீ உச்சிப்பிள்ளையார்
27. ஸ்ரீ வன்னிமர விநாயகர்

(7) பிரம தீர்த்தக்கரை

28. ஸ்ரீ காலபைரவர்
29. ஸ்ரீ வித்தியாதரேசுவரர்
30. ஸ்ரீ கணபதி
31. ஸ்ரீ நளேசுவரர்
32. ஸ்ரீ பிரம லிங்கம்
33. ஸ்ரீ பலி பீடம்
34. ஸ்ரீ யானை திறைகொண்ட விநாயகர்
35. ஸ்ரீ சின்ன நந்தி

(8) கிளிக் கோபுரம் வடபால்

36. ஸ்ரீ சுப்பிரமணியர்
37. ஸ்ரீ பைரவர்
38. ஸ்ரீ பிச்சை இளையனுர்
39. ஸ்ரீ வள்ளி
40. ஸ்ரீ தேவயானை
41. ஸ்ரீ பலி பீடம்

(9) மூன்ரும் பிரகாரம்

42. பணிப்பெண் பொட்டுக்கட்டும் விநாயகர் (மடைப்பள்ளி வாயிலில்)
43. மகிழ மரத்தடியில் ஸ்ரீ தெக்ஷிணுமூர்த்தி
44. மகிழ மரத்தடியில் ஸ்ரீ தெக்ஷிணுமூர்த்தி
45. மகிழ மரத்தடியில் ஸ்ரீ விநாயகர்
46. மகிழ மரத்தடியில் ஸ்ரீ ஜலகண்டேசுவரர்
47. மகிழ மரத்தடியில் ஸ்ரீ நந்தி

(10) திருக்கல்யாண மண்டபம்

48. ஸ்ரீ விநாயகர்
49. ஸ்ரீ பீமேசுவரர்

(11) மூன்ரும் பிரகாரம் மேல்பாரிசம்

50. ஸ்ரீ விநாயகர்
51. ஸ்ரீ அருணகிரி யோகீசுவரர்

(12) மூன்ரும் பிரகாரம் வடபாரிசம்

52. ஸ்ரீ காளத்தீசுவரர்
53. ஸ்ரீ நந்தி (பெரியது)
54. ஸ்ரீ நந்தி (சிறியது)

(13) ஸ்ரீ பிடாரி கோயில்

55. ஸ்ரீ விநாயகர்
56. ஸ்ரீ ரேணுகாதேவி
57. ஸ்ரீ கண்ணப்பர் பூஜை
58. ஸ்ரீ பிராமஹி
59. ஸ்ரீ மாஹேஸ்வரி
60. ஸ்ரீ கௌமாரி

61. ஸ்ரீ வைஷ்ணவி
62. ஸ்ரீ வராஹி
63. ஸ்ரீ இந்திராணி
64. ஸ்ரீ சாமுண்டி
65. ஸ்ரீ அஷ்டபூஜ பிடாரி
66. ஸ்ரீ சாஸ்தா
67. ஸ்ரீ பலி பீடம்

(14) ஸ்ரீ சிதம்பரேசுவரர் கோயில்

68. ஸ்ரீ சிதம்பரேசுவரர்

(15) ஸ்ரீ ஜம்புகேசுவரர் கோயில்

69. ஸ்ரீ ஜம்புகேசுவரர்
70. ஸ்ரீ நந்தி

(16) ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் கோயில்

71. ஸ்ரீ ஏகாம்பரேசுவரர்

(17) ஸ்ரீ சம்பந்த விநாயகர் சந்நிதி

72. ஸ்ரீ சம்பந்த விநாயகர்
73. ஸ்ரீ மூஷிகம்

(18) கொடிமர மண்டபம்

74. முன் பலிபீடம்
75. ஸ்ரீ நந்தி
76. ஸ்ரீ உண்டி விநாயகர்
77. ஸ்ரீ சுப்பிரமணியர்
78. ஸ்ரீ வள்ளி
79. ஸ்ரீ தேவயானை

(19) ஸ்ரீ தண்டபாணி கோயில்

80. ஸ்ரீ தண்டபாணி

(20) இரண்டாம் பிரகாரம்

81. ஸ்ரீ அதிகார நந்தி
82. ஸ்ரீ இந்திர லிங்கம்
83. ஸ்ரீ சனகேசுவரர்
84. ஸ்ரீ சனந்தனேசுவரர்
85. ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள்
86. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்
87. ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகள்
88. ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்
89. ஸ்ரீ சனாதனேசுவரர்
90. ஸ்ரீ சனதீகுமாரேசுவரர்
91. ஸ்ரீ கௌசிகேசுவரர்
92. ஸ்ரீ குத்ஸரிஷி ஈசுவரர்
93. ஸ்ரீ வால்மீகீசுவரர்
94. ஸ்ரீ அக்னி லிங்கம்
95. ஸ்ரீ விக்னேசுவரர்
96. ஸ்ரீ விசுவநாத ஈசுவரர்
97. ஸ்ரீ நாரதேசுவரர்
98. ஸ்ரீ காசி லிங்கம்
99. ஸ்ரீ காசி லிங்கம்
100. ஸ்ரீ நந்தி
101. ஸ்ரீ வைசம்பாயனேசுவரர்
102. ஸ்ரீ வாமரிஷீசுவரர்

(21) அறுபத்து மூவர் வரிசை

103. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்
104. ஸ்ரீ தில்லைவாழ் அந்தணர்
105. ஸ்ரீ திருநீலகண்ட நாயனர்
106. ஸ்ரீ இயற்பகை நாயனர்
107. ஸ்ரீ இளையான்குடிமாற நாயனர்
108. ஸ்ரீ மெய்ப்பொருள் நாயனர்
109. ஸ்ரீ விறன்மிண்ட நாயனர்
110. ஸ்ரீ அமர் நீதி நாயனர்
111. ஸ்ரீ எறிபத்த நாயனர்
112. ஸ்ரீ ஏனாதி நாயனர்
113. ஸ்ரீ கண்ணப்ப நாயனர்
114. ஸ்ரீ குங்கிலியக்கலைய நாயனர்
115. ஸ்ரீ மாணிக்கஞ்சார நாயனர்
116. ஸ்ரீ அரிவாட்டாய நாயனர்
117. ஸ்ரீ ஆனாய நாயனர்
118. ஸ்ரீ மூர்த்தி நாயனர்
119. ஸ்ரீ முருக நாயனர்
120. ஸ்ரீ உருத்திர பசுபதி நாயனர்
121. ஸ்ரீ திருநாளைப்போவார் நாயனர்
122. ஸ்ரீ திருக்குறிப்புத் தொண்ட நாயனர்
123. ஸ்ரீ சண்டேசுவர நாயனர்
124. ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள்
125. ஸ்ரீ குலச்சிறை நாயனர்
126. ஸ்ரீ பெருமிழலைக்குறும்ப நாயனர்
127. ஸ்ரீ காரைக்கால் அம்மையார்
128. ஸ்ரீ அப்பூதி அடிகள் நாயனர்
129. ஸ்ரீ திருநீலநக்க நாயனர்
130. ஸ்ரீ நமிநந்தி அடிகள் நாயனர்
131. ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகள்
132. ஸ்ரீ ஏயர்கோன் கலிக்காம நாயனர்
133. ஸ்ரீ திருமூல நாயனர்
134. ஸ்ரீ தண்டியடிகள் நாயனர்
135. ஸ்ரீ மூர்க்க நாயனர்
136. ஸ்ரீ சோமாசிமார நாயனர்
137. ஸ்ரீ சாக்கிய நாயனர்
138. ஸ்ரீ சிறப்புலி நாயனர்
139. ஸ்ரீ சிறுத்தொண்ட நாயனர்
140. ஸ்ரீ சேரமான் பெருமாள் நாயனர்
141. ஸ்ரீ கணநாத நாயனர்
142. ஸ்ரீ கூற்றுவ நாயனர்
143. ஸ்ரீ பொய்யடிமையில்லாத புலவர் நாயனர்

144. ஸ்ரீ புகழ்ச் சோழ நாயனுர்
145. ஸ்ரீ நரசிங்க முனையரைய நாயனுர்
146. ஸ்ரீ அதிபத்த நாயனுர்
147. ஸ்ரீ கலிக்கம்ப நாயனுர்
148. ஸ்ரீ கலிய நாயனுர்
149. ஸ்ரீ சத்தி நாயனுர்
150. ஸ்ரீ ஐயடிகள் காடவர்கோன் நாயனுர்
151. ஸ்ரீ கணம்புல்ல நாயனுர்
152. ஸ்ரீ காரி நாயனுர்
153. ஸ்ரீ நின்றசீர் நெடுமாற நாயனுர்
154. ஸ்ரீ வாயிலார் நாயனுர்
155. ஸ்ரீ மனையடுவார் நாயனுர்
156. ஸ்ரீ கழற்சிங்க நாயனுர்
157. ஸ்ரீ இடங்கழி நாயனுர்
158. ஸ்ரீ செருத்துணை நாயனுர்
159. ஸ்ரீ புகழ்த்துணை நாயனுர்
160. ஸ்ரீ கோட்புலி நாயனுர்
161. ஸ்ரீ பத்தராய்ப் பணிவார்
162. ஸ்ரீ பரமனையே பாடுவார்
163. ஸ்ரீ சித்தத்தைச்சிவன்பாலே வைத்தார்
164. ஸ்ரீ திருவாரூர்ப் பிறந்தார்
165. ஸ்ரீ முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார்
166. ஸ்ரீ முழு நீறுபூசிய முனிவர்
167. ஸ்ரீ அப்பாலும் அடிசார்ந்தார்
168. ஸ்ரீ பூசலார் நாயனுர்
169. ஸ்ரீ மங்கையர்க்கரசியார்
170. ஸ்ரீ நேச நாயனுர்
171. ஸ்ரீ கோச்செங்கட் சோழ நாயனுர்
172. ஸ்ரீ திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனுர்
173. ஸ்ரீ சடைய நாயனுர்
174. ஸ்ரீ இசை ஞானியார்
175. ஸ்ரீ சேக்கிழார்
176. இயம லிங்கம்
177. காசி லிங்கம்
178. காசி லிங்கம்
179. காசி லிங்கம்
180. காசி லிங்கம்
181. ஸ்ரீ தும்புரேசுவரர்
182. ஸ்ரீ கணபதி
183. ஸ்ரீ பிராமஹி
184. ஸ்ரீ மாஹேசுவரி
185. ஸ்ரீ கௌமாரி
186. ஸ்ரீ வைஷ்ணவி
187. ஸ்ரீ வராஹி
188. ஸ்ரீ இந்திராணி
189. ஸ்ரீ சாமுண்டி
190. ஸ்ரீ சாஸ்தா
191. ஸ்ரீ கௌதமர்
192. ஸ்ரீ துர்வாசர்
193. ஸ்ரீ க்ஷேத்ர கணபதி
194. ஸ்ரீ விநாயகர்
195. ஸ்ரீ நிருத லிங்கம்
196. ஸ்ரீ விநாயகர்

(22) இரண்டாம் பிரகாரம் (மேற்கு)

197. ஸ்ரீ வேணுகோபால சுவாமி
198. ஸ்ரீ இராதை
199. ஸ்ரீ ருக்மணி
200. ஸ்ரீ ஆஞ்சநேயர்
201. ஸ்ரீ கருடாழ்வார்

சோமாஸ்கந்தர் உற்சவர்

202. துவாரபாலகர், வடபால்
203. துவாரபாலகர், தென்பால்
204. வருணலிங்கம்
205. நந்தி
206. வியாசலிங்கம்
207. அம்பிகை
208. ஸ்ரீ விக்ரபாண்டீசுவரர்
209. ஸ்ரீ வணிஷ்ட லிங்கம்
210. ஸ்ரீ நந்தி
211. ஸ்ரீ இலக்குமி
212. ஸ்ரீ சண்முகர்
213. ஸ்ரீ வள்ளி
214. ஸ்ரீ தேவயானை
215. ஸ்ரீ ஸஹஸ்ர லிங்கம்
216. ஸ்ரீ சத லிங்கம்
217. ஸ்ரீ ஸ்ரீதேவி
218. ஸ்ரீ ஜ்யேஷ்டா தேவி
219. ஸ்ரீ வாயு லிங்கம்
220. ஸ்ரீ அன்னபூரணி
221. ஸ்ரீ குபேர லிங்கம்

(23) பள்ளியறை மேல்பக்கம்

222. ஸ்ரீ விசுவாமித்திரேசுவரர்
223. ஸ்ரீ பதஞ்சலீசுவரர்
224. ஸ்ரீவியாக்கிர பாதேசுவரர்
225. 108 லிங்கம்
226. ஸ்ரீ அகஸ்தீசுவரர்
227. ஸ்ரீ ஜவர ஹரேசுவரர்
228. ஸ்ரீ கால ஸம்மாரர்
229. ஸ்ரீ பைரவர்
230. ஸ்ரீ பைரவர் (தனிச்சந்நிதி)
231. ஈசான லிங்கம் (பொக்கிஷ அறை அருகே)

(24) முதல் பிரகாரம்

232. (இரத விளக்கு) நந்தி
233. (இரத விளக்கு) பலி பீடம்
234. துவாரபாலகர்
235. துவாரபாலகர்
236. (கோஷ்டங்களில்) கணபதி
237. (கோஷ்டங்களில்) தக்ஷிணாமூர்த்தி
238. (கோஷ்டங்களில்) இலிங்கோத்பவர்
239. ஸ்ரீ பிர்ம்மா
240. ஸ்ரீ துர்க்கை
241—248. எட்டுத் திக்குகளில் பலி பீடங்கள் எட்டு
249. ஸ்ரீ சண்டிகேசுவரர்

(25) மகா மண்டபம்

250. பிரதோஷ நந்தி
251. பலி பீடம்
252. துவாரபாலகர்
253. துவாரபாலகர்
254. சூரியன்
255. சூரியன்

(26) கருவறை

256. அண்ணாமலையார் (மூலவர்)

(27) அம்மன் கோயில்

கொடிமர மண்டபம்

257. ஸ்ரீ விஜயராகவ விநாயகர்
258. மேற்படி அம்பாள்
259. மூஷிகம்
260. கொடிமர நந்தி
261. பலி பீடம்
262. துவார பாலிகை
263. துவார பாலிகை
264. விநாயகர்
265. விநாயகர்
266. அடிமுடி அறியொணாதவர்
267. ஸ்ரீ கணபதி
268. ஸ்ரீ பைரவர்
269. ஸ்ரீ சண்முகர்
270. ஸ்ரீ வள்ளி
271. ஸ்ரீ தேவயானை
272. லிங்கம்
273. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி

(28) அஷ்டலட்சுமி மண்டபம்

274. நந்தி
275. பலி பீடம்
276. விநாயகர்
277. ஸ்ரீ சுப்பிரமணியர்
278. துவாரபாலிகை
279. துவாரபாலிகை
280. விநாயகர்
281. விநாயகர்
282. ஸ்ரீ சோழ லிங்கம்
283. ஸ்ரீ சேர லிங்கம்
284. விநாயகர்
285. ஸ்ரீ பிராமஹி
286. ஸ்ரீ வைஷ்ணவி
287. ஸ்ரீ துர்கை
288. ஸ்ரீ மாஹேசுவரி
289. ஸ்ரீ சோமேசுவரர்
290. நந்தி
291. ஸ்ரீ துர்கை
292. ஸ்ரீ பிர்ம்மா

(29) கோஷ்ட சந்நிதிகள்

293. ஸ்ரீ கணேவி
294. ஸ்ரீ பார்வதி
295. ஸ்ரீ மனோன்மணி
296. ஸ்ரீ சரசுவதி
297. ஸ்ரீ சிவதுர்க்கை
298. ஸ்ரீ சண்டிகேசுவரி
299—306. பலி பீடங்கள் (8)
307. ஸ்ரீ உண்ணாமுலையம்மன் (மூலவர்)
308—316. நவக்கிரஹங்கள் (9)
317. ஸ்ரீ சித்திரகுப்தன்
318. ஸ்ரீ சித்திரகுப்தன்

மண்டபங்கள்

இக்கோயிலில் ஞானப்பால் மண்டபம், தீர்த்தவாரி மண்டபம், திருவருள்விலாச மண்டபம், மாதப் பிறப்பு மண்டபம், உருத்திராக்க மண்டபம், நந்தி மண்டபம், அமாவாசை மண்டபம், பன்னீர் மண்டபம், காட்சி மண்டபம் என எத்தனையோ மண்டபங்கள் உள்ளன.

திருவண்ணுமலை

புதுவை வானொலியில் உரைச் சித்திரம் (3-4-1976)

தயாரிப்பு : சோமலெ

அண்ணுமலையார் கோயிலுடன் தொடர்புடைய பெருமக்கள் அறுவரை, வானொலி நிலையத்தார் பேட்டி கண்டு, ஒலிப்பதிவு செய்த அந்த விவரங்களையும் 'சோமலெ' வழங்கிய உரையில் இடையிடையே இணைத்து ஒலி பரப்பினர். பேட்டிகளின் வாசகங்கள் வண்ண மைகளில் அச்சிடப் பெற்றுள்ளன.

நாளைக்காலையில் திருவண்ணுமலை அருள்மிகு அண்ணுமலையார் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இது, தமிழ்நாட்டில் மட்டுமில்லாமல் இந்தியாவெங்கும் புகழ்பெற்ற பெரிய கோயில்.

இந்தக் கோயிலினுடைய பெருமை, அளவிடற்கரிது. இங்கு வழி பட்டால் நமது பாவங்கள் நீங்கும் என்பது திருநாவுக்கரசர் வாக்கு.

தேவாரத் திருப்பதிகங்களுடன் திருவாசகத்தையும் பெற்றது இத்தலம்.

கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் என்பன முறையே, முருகப் பெருமானது வழி நடையையும், அகத்தியர் முதலியோரது யாத்திரையையும் கூறும் இடங்களில் திருவண்ணுமலையையும் குறிப்பிடுகின்றன.

வில்லிபுத்தூர் ஆழ்வாரும், அர்ச்சுனனது யாத்திரையைக் கூறும்போது,

''கற்றூர் தொழும் அருணசலமுங் கண்டு கைதொழுதான்'' என்று சொல்லுகிறுர்.

திருவாரூர், காசி ஆகிய ஸ்தலங்களைவிட இந்தத் திருவண்ணுமலை சிறந்து விளங்குகிறது.

எவ்வகையில் திருவண்ணுமலை சிறப்பானது என்றுல்,

திருவாரூர் அங்கு பிறந்தவர்களுக்கு முக்தி தரும்

காசி அந்த ஸ்தலத்தில் இறந்தவர்களுக்கு முக்தி தரும்

சிதம்பரம் அந்த ஸ்தலத்தில் தரிசிப்பவர்களுக்கு முக்தி தரும்

திருவண்ணுமலை, அதை நினைத்தவர்களுக்கெல்லாம் முக்தி தரவல்லது.

ஜோதி ஸ்தலம் அல்லது அக்கினிக்கு உரியது என்ற கொள்கைக்கு ஏற்ப திருவண்ணுமலையில் ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில், திருக்கார்த்திகை நாளில் தீபத்திருவிழா நடைபெறுகிறது.

இதைப் பற்றியும், இது தொடர்பான புராணக் கதையையும் இப்போது கோவிலூர் மடாதிபதி அவர்கள் கூறக் கேட்போம்.

ஸ்ரீலஸ்ரீ ராமநாத ஞானதேசிகர்

''பாரிடை ஐந்தாய் போற்றி......
விளைந்தாய்......போற்றி'' என்று.

பாரிராடும் விண்ணுய் பரந்து நிற்கும் பரம்பொருளை ஏற்றிப் போற்றுவார் மணிவாசகப் பெருமான். நாம் காணும் இந்த ப்ரபஞ்சம் ஆகாயம், வாயு, அக்னி, அப்பு, ப்ருதிவி என்று சொல்லப்படுகின்ற பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உண்டானது. இவைகளில் முதலாவதான ஆகாயத்துக்கும், இரண்டாவதான வாயுவுக்கும் அவைகளின் குணங்களான சப்தம், ஸ்பரிசத்துக்கும் உருவமில்லை. மூன்றுவதும் நடுநாயகமாக உள்ளதுமான அக்னியிலிருந்துதான் உருவத் தோற்றமே தொடங்குகின்றது. சிறப்பான பஞ்ச பூதத் தலங்கள்

ஐந்தில் திருவண்ணுமலை அக்கினித் தலமாக விளங்குகிறது. முழு முதற்பொருளான பரம் பொருள் இத்தலத்தில்தான் அருஉருவத் திரு மேனி கொண்டு வெளிப்பாடு செய்தது. இது அக்னித் தலமென்பதற்கு சிறந்த சான்ருக அமைந்துள்ளது. 'அருவமும் உருவமும் ஆனுய் போற்றி' என்பார் மாணிக்கவாசகர். அருவ மும் உருவமும் கலந்தது அருஉருவம், அந்த அருஉருவத் தத்துவமே சிவலிங்கமாக வடிவு கொண்டது. திருவண்ணுமலைத் திருத்தலத் தின் சிறப்பினைக் கூறும் புராண வரலாறுகள் ஏராளமாக உள்ளன. அவைகள் வெறும் கதை யாக மட்டுமல்லாமல் கற்ருேரும் மற்ருேரும் சிந்தித்து உணர்ந்து வாழ்வில் சிறப்பெய்ய வழி காட்டுவதாகவும் அமைந்துள்ளன. பொது வாக, புராண வரலாறுகள் எல்லாமே வாழ்க் கையில் எதிர்ப்படக்கூடிய சகல பிரச்னைகளையும் அவைகளை வெற்றி கொள்ளும் வழி முறை களையும் எடுத்துக் காட்டுவனவாகவே அமைந் துள்ளன. அரியொடு பிரமர்க்கு அளவறிய வொண்ணு அனற்பிழம்பே அக்கினி மலையாக திருவண்ணுமலை அமைந்தது என்பது புராண வரலாறு. என்னிகள் எவருமில்லையென்று இரு வரும் இகலுமில்லை அன்னவர் நடுவுதோன்றி அடிமுடிதெரியாதாகி, உன்னுணர் தங்கட்கெல் லாம் ஒல்லையில் முத்தி நல்கி, தன்னிகர் இன்றி நின் அளப்பரும் சைலம் என்று போற்றுவார் கந்தபுராண ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியர். இச்சம்பவம் தேவாரத்திலும் திருவாசகத்தி லும் ஏராளமான இடங்களில் நினைவு கொள்ளப் பெறுகின்றது. பரம்பொருள் அரிபிரமர்க்கு இடையே அனற் பிழம்பாகத் தோன்றிய நாள் மாசி மாதத்தில் திரியோத சித்தியில் பகலும், இரவும் சந்திக்கும் மாலைப் பொழுதாகும். அந்த நாளே மஹாசிவராத் திரிப் பெருநாள். அரியும், அயனும் முன் தேடும் அவ்வனத்திலே அனலகிரியெனும்படி நின்றதால், அவ்வொளி கிளர்ந்த இரவே சிவராத்திரியாயிற்று. இறைவர் பரவி உய்ந் தனம் அன்னதோர் வைகளில் பலரும் என்று பிரமன் வாயிலாக கந்தபுராணம் உரைக்கின் றது. மஹாசிவராத்திரியின் பிறப்பிடமான திருவண்ணுமலையில் இவ்விழா வருடந்தோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின் றது. இறைவன் இத் தலத்தில் ஜோதி ஸ்வரூ பமாகக் காட்சியளித்ததன் நினைவாக, ஆண்டு தோறும் கார்த்திகைத் திங்களில் திருக்கார்த் திகைப் பெருநாள் முழுமதியுடன் கூடிய தினத் தில் பிரதோஷ வேளையான மாலை 6.00 மணி யளவில் ஓங்கி உயர்ந்த அண்ணுமலையில்முடிந்து ஜோதி தரிசனம் காட்டி வருவது வழக்கமாக நடைபெற்று வருகிறது. இந்த ஜோதி தரி சனம் காண தமிழ்நாட்டிலிருந்தும் வடமாநிலங் களிலிருந்தும் மக்கள் பெரும் திரளாகக் கூடி அக இருள் அகற்றி மெய்ஞான ஒளி பெறு கின்றனர்.''

தமிழ் நாட்டினுடைய கலாச்சாரப் பண் பாட்டு வாழ்விலும் ஆன்மிக வாழ்விலும் திருவண்ணுமலைக்குத் தனிச் சிறப்பு உண்டு. மாணிக்க வாசகர் திருவாசகத்தில் இந்தத் தலத்தைப் பெரிதும் போற்றியிருக்கிருர். மூன்று இடங்களில் திருவாசகம் இந்தத் தலத்தைக் குறிப்பிடுகிறது. திருவெம் பாவை இந்த ஊரிலேயே எழுதப்பெற்றது என் பார்கள்.

அணி அண்ணுமலை என்றும், அடி அண்ணு மலை என்றும் சொல்லப்படுகிற பழைமையான கோயில், மலைவலம் (கிரிவலம்) வரும் வழியில் இருக்கிறது. அக்கோயிலுக்கு அருகே மாணிக்க வாசகருக்கு ஒரு தனிக்கோயில் கட்டப் பெற் றிருக்கிறது. ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி'' என்று இங்கு நடை பெறும் கார்த்திகை விழாவை மணிவாசகப் பெருமான் பாடியிருக்கிருர்.

ஜோதிச் சுடரான திருவண்ணுமலையைப் பற்றி, சென்ற நூற்ருண்டில் தோன்றிய அருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் ஒரு பதிகமே பாடியிருக்கிருர்.

திருவண்ணுமலை என்பது, தலத்தின் பெயர் அன்று. அது, மலையின் பெயர். இந்த மலை, காலந்தோறும் பல ஞானிகளை உருவாக்கியிருக் கிறது.

மற்ற தலங்களில் எல்லாம், இறைவ னுடைய புகழ் மட்டும் பேசப்படுகிறது. இந்தத் தலத்தின் நிலைமை வேறு.

திருவண்ணுமலை, தமிழ் நாட்டின் தனிப் பெருந்தலம். தலைமை சான்ற தலமாக விளங்கும் பதி.

இப் பதியால் பதவி பெற்ற பாவலர் பலர்.

நாவலர் பலர்

துறவியர் பலர்

தூய திருவடிகளின் சுவடு பதிந்த இத் திருத்தளியில் அடியார் பெருமையையே தங்

களுக்கு அணிகலனுகக் கொண்டு அண்ணுமலை அப்பனும் உண்ணுமுலை அம்மையும் மகிழ்கின் றனர்.

அண்ணுமலையாருக்கு அரோகரா என்று சொல்லி நாம் மகிழும்போது அண்ணுமலை யாரை மட்டும் வாழ்த்தவில்லை. இந்தப் பெருந் தலத்துடன் தொடர்பு கொண்ட ஞானச் செல்வர்களையெல்லாம் வாழ்த்து கிறேம், வணங்குகிறேம். அவர்களை வாழ்த்து வது நாம் வாழ்வதற்கே.

அருணகிரிநாதர் வாழ்ந்த ஊர் திருவண்ணு மலையே ஆகும். சில ஆண்டுகளாக இத்தலத் தில் அருணகிரிநாதருக்கு ஆகஸ்ட்டு 15-ம் நாளில் விழா எடுத்து வருகிறுர்கள். பக்தர் களின் மனத்தைக் கவர்ந்து, இசையின் மூலம் இறைவனை வழிபடுவதற்குரிய ஆன்ம சாதனங் களாக அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல் கள் திகழ்கின்றன. 'முத்தைத் தரு' என அடியெடுத்துக் கொடுத்து இறைவனே அருண கிரிநாதரைத் திருப்புகழ் பாடச் செய்தது இந்தத் தலத்தில்தான்.

கடந்த 600 ஆண்டுகளாகத் திருப்புகழும், மற்றும் அருணகிரிநாதர் பாடிய கந்தர் அலங் காரம், கந்தர் அநுபூதி ஆகியவையையும் தமிழ் மக்களின் இதய அரங்கிலே ஒலித்து வந்திருக்கின்றன. நாடெங்கும் பரவி இவை தமிழ்ச் சமுதாயத்தில் பக்தி நெறியை வளர்த் துள்ளன.

திருவண்ணுமலையில் ஈசான்ய பீடத்தை நிறு விய ஈசானிய ஞான தேசிகர் குறிப்பிடத்தக்க மற்றெரு பெரியவர்.

குன்றக்குடியில் இப்போது உள்ள திரு வண்ணுமலை ஆதீனத்தை 500 ஆண்டுகளுக் முன் திருவண்ணுமலையில் நிறுவிய தெய்வ சிகாமணி தேசிகரும் பெரும் ஞானி ஆவார்.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் இப்படி எத்தனையோ பேர். சென்ற நூற்றுண் டில் அண்ணுமலை தந்த வான் சுடராய் விளங்கி இந்தியாவுக்கு அப்பாலும் தன்னுடைய ஞான ஒளியைப் பரப்பி, பல நாடுகளிலும் தனக்குச் சீடர்களையும் உண்டாக்கிக் கொண்ட பகவான் ரமண மகரிஷி.

அவருக்கு முன்னேயே திருவண்ணுமலைக்கு வந்து, ஞானியாகத் திகழ்ந்த சேஷாத்திரி சுவாமிகள் ஆகியோரெல்லாம், திருவண்ணு மலைத் தொடர்புடைய பெருமக்கள் ஆவார்கள்.

சேஷாத்திரி சுவாமிகளுடைய சமாதியும், ரமண மகரிஷியின் ஆசிரமமும், ஈசான்ய மட மும் அங்கே உள்ளன. இவையெல்லாம், திருவண்ணுமலைக்குப் போகிறவர்கள் கட்டா யம் பார்க்கவேண்டிய இடங்கள், இவை தவிர, எத்தனையோ மடங்கள், சத்திரங்கள் இருக் கின்றன. கோயிலுக்கு உள்ளும் வெளியேயும் எத்தனையோ தீர்த்தங்கள் இருக்கின்றன.

பகவான் ரமண மகரிஷி ஞானம் பெற்ற பாதாளலிங்கக் குகை கோயிலுக்குள் இருக் கிறது.

மலைமீதும் பார்க்கக்கூடிய இடங்கள் எவ் வளவோ உள்ளன.

அடி அண்ணுமலைக்கோயில்தான் பழமையான கோயில் என்பார்கள். ஆதி அருணுசலம் என்றும் இதற்குப் பெயர். பத்து வருஷங் களுக்குமுன் பெரும்பணம் செலவு செய்து இந்தக் கோயிலுக்குக் கும்பாபிஷேகத்தை கோட்டையூர் அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் நடத்தி வைத்தார்கள். இந்த 150,200 வருஷங்களாக, திருவண்ணு மலைக் கோயிலில் நகரத்தார்களுடைய பணி ஏராளம். அதைப்பற்றியெல்லாம், அந்த சிதம்பரம் செட்டியார் அவர்களிடமே கேட்போம்.

கோட்டையூர்
சிதம்பரம் செட்டியார்

''தமிழகத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டி யார்கள் எண்ணிக்கை அளவில் ஒரு சிறிய அளவினரே. ஆனுல் தலைமுறை தலைமுறை யாக ஆற்றிவரும் கோயில் திருப்பணிகளும் சமயத் தொண்டும் அறப்பணியும் இவர்களின் சிறப்புக்கு முக்கியமான காரணமாகும். திருவண்ணுமலை சைவர்களுக்கு ஒரு தலை யாய திருக்கோயில். முத்தி தரும் தலங் களுள் முதன்மையானது. நினைக்க முத்தி தரு வது திருவண்ணுமலை. மேலும் பஞ்ச பூதத் தலங்களுள் இதுவும் ஒன்று. அக்னி க்ஷேத்திரம் இது. ஜோதி ஸ்வரூபமான திருமலையாக விளங் குவது இங்குதான். தேவாரத் திருமுறைகள் சைவர்களுக்குக் கண்ணனவை. திருவாசகம், கண்ணில் கருமணியாகும். அம்மணியுளாடும் பாவையாகத் திகழ்வது திருவெம்பாவையா

கும். அத்திருவெம்பாவை தோன்றிய புனிதத் தலம் திருவண்ணுமலையே. இத்தகைய பெருமை மிகு திருவண்ணுமலைக்கும் நகரத் தார்களுக்கும் பல நூற்றுண்டுகளாகவே ஆன் மீகத் தொடர்பு உண்டு. ரயில், மோட்டார் போன்ற வசதிகள் ஏற்படுவதற்குப் பல தலை முறைகள் முன்னதாகவே நகரத்தார்கள் செட்டிநாட்டிலிருந்து மாட்டு வண்டிகளில் பயணம் செய்து திருவண்ணுமலைக்கு வந்து அன்னச் சத்திரம், மடங்கள், பாடசாலைகள், நந்தவனம், முதலான தர்மங்களை செய்துள் ளார்கள். அண்ணுமலையார் திருக்கோயில் திருப்பணிகளையும் செய்துள்ளார்கள். புதிதாக மண்டபங்கள் கட்டியும், குளங்கள் வெட்டியும், மின்விளக்கு வசதிகள் அமைத்தும், விலை மதிக்க முடியாத ஏராளமான ரத்னுபரணங்களும் திரு வாபரணங்களும் செய்து வைத்தும் உள்ளார் கள். இந்தியாவிலேயே மிகப் பெரிய வெள்ளி வாகனங்கள் செய்து சமர்ப்பித்துள்ளார்கள். ஆதி அருணுசலம் எனப் போற்றப் பெறும் அணியண்ணுமலைத் திருக்கோயிலை நூதனமாகப் பல லட்சம் செலவிட்டுக் கற்கோயிலாகக் கட்டி இன்று நித்திய நைமித்யவழிபாடுகள் யாவும் சிறப்பாக நடைபெறுமாறு, கட்டிக் காத்து வரு கின்றனர். அண்ணுமலையார் ஆலயத்துக்கு முந்திய கும்பாபிஷேகங்கள் பலவற்றை நகரத் தார்கள் நடத்தியுள்ளனர். நாளை நடை பெறும் இந்தக் கும்பாபிஷேகத்தையும், பல லட்ச ரூபாய் செலவில் நகரத்தார்களே செய்து வைக்கிருர்கள். அண்ணுமலையார் கோயில், உண்ணுமுலையம்மன் கோயில், பரிவார ஆலயங் கள், கல்யாண மண்டபம், சிவகங்கைக்குளம், சர்வசித்தி விநாயகர் கோயில் ஆகியவற்றைப் பழுதுபார்த்து, புதுப்பித்து அமைத்துள்ளார் கள். ஒப்பற்ற முறையில் யாகசாலைகளை, அழ குற அமைத்துள்ளார்கள். தமிழகத்தின் தலை சிறந்த சிவாசாரியர்கள் பங்கு கொள்ள ஏற்பாடு செய்துள்ளார்கள். சுவாமிக்கு 33 யாக குண்டங்களும், அம்மனுக்கு 25 குண் டங்களும் அமைய உத்தமோத்தம யாகம் நடை பெறுகிறது. இவ்வளவுக்கும் காரணம், நல்ல அன்பர்கள் பலரின் ஒத்துழைப்பும் உதவியுமே யாகும். மேலும் அறங் காவலர் குழுவினரும், திருப்பணிக் குழுவினரும், இந்தக் கும்பாபி ஷேகக் குழுவினருக்கு எல்லா வகையிலும் வேண்டிய உதவிகளைச் செய்து தருகின்றனர்.''

திருவண்ணுமலையைப் பற்றி ஒரு முக்கிய மான தத்துவத்தை இப்போது கம்பன் அடிப் பொடி அவர்களிடமிருந்து தெரிந்து கொள் வோம்.

கம்பன் அடிப்பொடி

''யான், எனது என்னும் செருக்கறுப்பான் வானேர்க்கு உயர்ந்த உலகம் புகும்'' என்பது வள்ளுவன் வாக்கு. மெய்யறிவு பெற வேண்டு மாளுல், ஸத்ய தர்சனம் பெற வேண்டுமாளுல் செருக்கு அகல வேண்டும். முதற்படியாக— ''யான்'' என்பது ஒரு செருக்கு, ''எனது'' என்பது மற்றெரு செருக்கு. ''யான்'' எனும் செருக்கு பெரும்பாலும் கல்வி வல்லவரிடத்திலே விளங்கும். ''எனது'' எனும் செருக்கு பெரும் பாலும் செல்வம் மிக்கவரிடத்திலே நிலவும். இதை நமக்குப் புலப்படுத்துவதற்காகத்தான் பௌராணிக ரீதியாக, கல்விச் செருக்குடைய வன் என்று ப்ரம்மாவையும், செல்வச் செருக் குடையவன் என்று விஷ்ணுவையும், காட்டி ஞர்கள். கல்விக்கே அதிதேவதையான சரஸ் வதியின் நாயகனுகிய ப்ரம்மா, கல்விச் செருக் குடையவன் என்றும், செல்வத்திற்கே அதி தேவதையான லட்சுமியின் கணவனுன விஷ்ணு செல்வச் செருக்குடையவன் என்றும் காட்டு வதற்காக இந்தக் கதையை எழுப்பினுர்கள். இரு செருக்குடையவர்களும் கல்வி பெரிதா, செல்வம் பெரிதா என்ற செருக்கிலே ஆட் பட்டு வாதம் செய்யத் தொடங்கினுர்கள். அப்பொழுது ஒரு ஜ்யோதி தோன்றிற்று. உங்களில் யார் பெரியவன் என்பதைக் காட்டு வதற்கு என்னுடைய அடியையும் என்னு டைய முடியையும் காணுங்கள், என்று ஒரு வாக்கு புலப்பட்டது. அப்பொழுது விஷ்ணு வராகரூபமாக நிலத்தைக் கீண்டு அடியைக் காண முயன்ருர். பிரம்மா அன்ன ரூபமாக மேல் நோக்கிப் பறந்து சென்று முடியைக் காண முயன்ருர். இருவராலும் முடியவில்லை. பிறகு அந்தச் செருக்கு அடங்கிய பிறகுதான், அவர்களுக்கு ஜோதி தரிசனம் கிட்டிற்று. இந்தத் தத்துவத்தைக் காட்டுவது தமிழகத் திலேயே திருவண்ணுமலை என்னும் புனித்தலம். ஆதலினுலேதான் இந்தத் தலத்தை நினைக்க முக்தி தரும் அண்ணுமலை என்று சொல் வார்கள். ஏதோ அண்ணுமலை என்று சொல்ல நினைத்த மாத்திரத்திலேயே முக்தி தருவது என்பது அதற்குப் பொருளல்ல. இந்தத் தத்துவத்தை ப்ரம்ம, விஷ்ணுக்களிடையே போட்டி அதன் விளைவாக ஏற்பட்ட செருக்கடங்கல் இவற்றை மறவாது கடைப் பிடித்தல் என்பதுதான் நினைக்க முக்தி தருவது என்ற சொல்லின் பொருளாகும். அந்த நிலையிலே இதை மறவாமல் செருக்கற்று நின்ருல், அவர்களுக்கு வீடுபேறு கிட்டும்

என்பதை ஜோதி ஸ்வரூபம் மூலமாகக் கார்த்திகைத் திங்களிலே திருக்கார்த்திகை யன்று காட்டுவதற்குக் காரணமாகும்.

கார்த்திகை, கார்மேகம் சூழ்ந்த காலம். அதை ஆணவமலம் என்று நாம் வரையறுப் போம். ஆணவ மலம் முற்றிலும் அகலபெரும் ஜ்யோதி ஒளிகாட்டும். அப்படி அது காட்டிய தற்கு மறுநாள் பழைய காலத்து சாந்த்ர மான முறையிலே பூர்ணிமாந்திக முறையிலே பஞ்சாங்கம் கணித்த காலத்திலே, திருக்கார்த் திகைக்கு மறுநாள் மார்கழி. ஆகவே மார்கழி மாதம் என்பது தேவர்களுக்கு அதாவது உயர்ந் தவர்களுக்கு வைகறைப் பொழுது ஆகும். அன்று பொழுது விடிகிறது. அறிவு விடி கிறது என்பது பொருள். ஆகவேதான் கண் ணன் சொன்னுன். ''மாஸானும் மார்க்க சீர்ஷோ ஹம்'' என்று, மார்கழியாக மாதங் களிலே நான் விளங்குகிறேன் என்று. இத் தகைய அருமைத் தத்துவத்தை விளக்குவது தான் லிங்கோத்பவ மூர்த்தம். இந்த லிங் கோத்பவர் என்பது சுழியில் இருந்து, ஒன்றும் இல்லாததிலிருந்து தோன்றிய ஒன்று என்பது தான் அந்தச் சொல்லுக்குப் பொருள். இந்தத் திருமேனி அமைவதற்குரிய தத்துவத்தைத் தந்த க்ஷேத்திரம் அல்லது திருத்தலம் திருவண்ணுமலே. இந்தத் திருவண்ணுமலேயை நாம் அதன் காரணத்திஞல்தான் நினேக்க முக்தி தருவது என்று பாராட்டிப் பரவி கிறேம்.''

தமிழ் நாட்டிலேயே பெரிய கோயில்களில் இது ஒன்று. இதனுடைய பரப்பளவு 24 ஏக்கர். ஓர் ஏக்கர் எனின் சென்னேயிலே வீடு கட்டுகிற கணக்குப்படி $18\frac{3}{4}$ கிரவுண்டு, $24 \times 18\frac{3}{4}$ பெருக்கிப் பார்த்துக்கொள்ளுங்கள் அத்தனே கிரவுண்டு.

இந்தக் கோயிலில் 6 பிரகாரங்கள் இருக் கின்றன.

மொத்தம் இந்தக்கோயிலில் 9 கோபுரங் கள். அதில் 4 கோபுரங்கள் திருமதிலின் மத் தியில் உள்ளன.

கீழ்த்திசையிலுள்ள பெரிய கோபுரத்திற்கு ராஜகோபுரம் என்று சொல்லுவது. 11 நிலே அல்லது மாடம். அடித்தளத்தில் இது 135 அடி நீளம்; 98 அடி அகலம்.

தஞ்சாவூரில் ராஜராஜச் சோழன் கட்டின தஞ்சைப் பெரியகோயில் விமானம் 216 அடி உயரம். அதைவிட உயரமாக இருக்க வேண்டுமென்று சொல்லி ஓர் அடி கூட வைத்து 217 அடியாகக் கட்டியிருக்கிறுர்கள்.

இந்த ராஜகோபுரம் கிழக்கே இருக்கிறது. இதுதான் பிரதான வாயில்; வடக்கே அம்மணி அம்மாள் கோபுரமும், தெற்கே திருமஞ்சன கோபுரமும் இருக்கின்றன.

மேற்கே இருக்கிற கோபுரத்துக்குக் பேய்க் கோபுரமென்று பெயர். அந்தக் கோபு ரத்தில் பேயும் இல்லே, பிசாசும் இல்லே. மேற் குக் கோபுரம் என்பதை, பழம்பெரும் தமிழ்ப் புலவர்கள் இலக்கண இலக்கியமாக ரத்தினச் சுருக்கமாக மேக்கோபுரம் என்று எழுதி வைத் தார்கள். எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் படிச்சவன் பாட்டைக் கெடுத்தான் என்பது போல, மேக் கோபுரம், பேய்க் கோபுரமாகி விட்டது.

இந்தக் கோயிலே எந்தெந்த ராஜாக்கள் கட் டினர்கள்? இங்கே கட்டிடக்கலே எப்படிப்பட் டது? நாம் பார்க்கவேண்டிய ஓவியங்கள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் தமிழ்நாடு அர சின் தொல் பொருள்துறையின் தலேவர் டாக்டர் ஆர். நாகசாமி அவர்கள் இதோ சொல்லப் போகிறுர்கள்.

டாக்டர் ஆர். நாகசாமி

''அண்ணுமலேக் கோயில் என்று எண்ணும் போதே வானளாவ உயர்ந்து நிற்கும் கோபு ரங்கள் நம் கண்முன் தோன்றும். இவையே கட்டிட அமைப்பில் மிகவும் உயர்ந்த நிலே வகிப்பவை ஆகும். இங்கு அழகிய திருச்சுற்று மதில்களும், ஆயிரக்கால் மண்டபமும், இன்ன பிற பகுதிகளும் கட்டிட அமைப்பின் சிறப் பைக் கூறுகின்றன. கி. பி. 5, 6—ஆம் நூற் றுண்டிற்கு முன்பிருந்தே இக்கட்டிடப் பகுதி கள் இருந்திருக்க வேண்டும். ஆனுல் இக் கோயிலே விரிவாக்கியதனுலும், திருப்பணி களாலும் பண்டைய பகுதிகள் மறைந்து போயின. சோழர் காலத்திலிருந்து எடுக்கப் பட்ட கட்டிடங்களே இங்கு எஞ்சியுள்ளன. இப்பொழுது கிளிக்கோபுரம் என்று அழைக்கப் படும் கோபுரமே, கோபுரங்களுள் தொன்மை யானது. கி.பி. 1063ல் வீர ராஜேந்திரச் சோழனல் இது கட்டப்பட்டது என்று கருது வர்.

திருவண்ணுமலை, சோழர்களுக்குப் பிறகு ஹோசலர்களுடைய தலைநகராகச் சில காலம் திகழ்ந்தது. 14ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆண்ட மூன்ருவது வல்லாள மகா ராஜனின் காலத்தில் ஒரு திருச்சுற்றும், 4 திசைகளில் கோபுரங்களும் எழுப்பப்பட்டன. வல்லாள மகாராஜன் கோபுரம் என்று கூறப்படும் கோபுரமும் அதையொட்டிய திருச்சுற்றுமே அவ்வாறு எழுப்பப்பட்டவையாகும். இந்தத் திருச்சுற்றின் வெளியில் எங்கும் இல்லாத ஒரு புதிய அமைப்பினைக் காண்கிறேம். மதில் சுவரின் மேற்பகுதியில் ஹோசலர்களின் ராஜ முத்திரையான கண்டபேருண்ட பறவையும், ஒரு வீரன் புலியோடு போரிடும் காட்சியும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இது தவிர ஒரு மன்னனுக்கு மற்ருெரு மன்னன் முடிசூட்டுவதாகச் சிற்பங்கள் தொடர்ந்து சித்திரிக்கப்பட்டுள்ளன. இக்காட்சியின் இரு புறமும் மீன்களும், கைச்செண்டும் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஹோசல மன்னர்கள் பாண்டிய அரசை நிலை நிறுத்தினர்கள்: ''பாண்டி மண்டல பிரதிஷ்டாஞச்சார்யன்'' என்ற பட்டம் சூட்டிக் கொண்டார்கள். இந்தக் காட்சி வல்லாளன் பாண்டியனுக்கு முடிசூட்டியதைச் சித்திரிக்கிறது போலும்!

ஹோசலர்களுக்குப் பிறகு விஜயநகரப் பேரரசர்கள் காலத்தில்தான் கட்டிடக் கலை திருவண்ணுமலையில் உச்ச நிலையை அடைந்தது. சிறப்பாக கிருஷ்ணதேவராயர் காலத்தில் இக்கோயிலில் பல அரிய செயல்கள், கட்டிடங்கள் எடுக்கப்பட்டன. இவற்றில் மிகமிக முக்கிய நிலை வகிப்பது ஆயிரக்கால் மண்டபமும், வானளாவ நிமிர்ந்து நிற்கும் மாபெரும் கோபுரங்களும் ஆகும். முதலில் கிருஷ்ண தேவராயனின் அதிகாரியாகத் திகழ்ந்து, அச்சுதராயன் காலத்தில் தஞ்சையில் நாயக்கர் ஆட்சியைத் தோற்றுவித்த செவ்வப்ப நாயக்கர் இந்தப் பணிகளுக்குக் காரணமாக இருந்தார். தமிழ்நாட்டிலுள்ள கோபுரங்களிலேயே மிக உயர்ந்த கோபுரம் என்று கூறக்கூடியது திருவண்ணுமலைக் கோபுரம் தான். இதன் மேல் கட்டிடப் பகுதிகளெல்லாம் மிகவும் எழில் வாய்ந்தவை. இக்கோபுரத்தில் மேலே ஏறிச் செல்லும் பொழுது படிப்படியாக விண்ணை நோக்கி ஏறிச் செல்வது போன்ற ஒரு உணர்வு ஏற்படுகிறது. உச்சியில் நிற்கும் பொழுது கையை நீட்டினுல் விண்ணைப் பிடித்துவிடலாம் என்ற எண்ணம் கூடத் தோன்றும். இதையொட்டிச் செல்லும் வெளி மதில் சுவரின் மேலே செவ்வப்ப நாயக்கரின் உருவச் சிலைகள் திரும்பத் திரும்பத் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கால் மண்டபமும் அதற்கு எதிரிலுள்ள ஒரு சிறு மண்டபமும் கிருஷ்ணதேவராயர் காலத்திய கட்டிட அழகிற்கு எடுத்துக் காட்டுகளாகும். கிருஷ்ண தேவராயன் காலத்தில் மலையைச் சுற்றி வரும் சாலையிலும் ஆங்காங்கே கட்டிடங்கள், மண்டபங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

பிரபவ வருடம் ஆடி மாதம் 16ம் தேதியில் பூகம்பம் ஒன்று ஏற்பட்டது. அந்தப் பூகம்பத்தில் கோயில் ஐந்தாம் திருச்சுற்று மதில் அடி மட்டமாக இடிந்து போயிற்று. இதை அதிகாரம் தாதி ரெட்டியார் என்பவர் எடுத்துக் கட்டினர் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இங்கு கோபுரங்களிலும், மண்டபங்களிலும் அழகிய சிற்பங்கள் உள்ளன. இவற்றில் பல்லவர் காலத்திய துர்க்கை ஒன்று கண்டுகளிக்கத் தகுந்தது.

13 ஆம் நூற்றுண்டில் விக்கிரம பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் அண்ணுமலைக் கோயிலைச் சுற்றிவர ஒரு வீதியை அமைத்துள்ளான். அதை விக்கிரம பாண்டியன் திரு வீதி என்று அழைத்து மகிழ்ந்தான். அந்த வீதியைப் பல பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒரு எண்ணிட்டு அவற்றிற்கு மைல் கற்களை நட்டிருக்கிறன். அவனது பெயரும், அரச முத்திரையும், செதுக்கப்பட்ட மைல் கற்களும் இன்றும் அந்தத் திருவீதியில் இருக்கின்றன.

அண்ணுமலையார் கோயிலில் அழகான ஓவியங்களும் பல இருக்கின்றன. கீழைப் பெருங்கோபுரம், யானை கட்டும் மண்டபம், 2-ம் திருச்சுற்று மாளிகை, எழுத்து மண்டபம் முதலிய இடங்களில் இவ்வோவியங்களைக் காணலாம். இவற்றில் கீழைப் பெரும் கோபுரத்தில் காணப்படுவது மிகப் பெரிய ஓவியமாகும். இதில் வீரர்கள் ஒரு பெரும் யானையுடன் போரிடுவதாகக் காணப்படுகிறது. விஜயநகர மன்னர்கள் கஜவேட்டை காண்பதில் ஆர்வம் கொண்டவர்கள். அதை இக்காட்சி சித்தரிக்கிறது போலும். அதற்கும் மேலே ஒரு சிறு பகுதியில் இக்கோபுரத்தைக் கட்டிய செவ்வப்ப நாயக்கருடைய உருவமும், அவரது மனைவியின் உருவமும் தீட்டப்பட்டுள்ளன.

யானைகட்டும் மண்டபத்தின் மேலே பார்வதி கல்யாணம், பாற் கடல் கடைதல்

முதலிய காட்சிகள் தீட்டப்பட்டுள்ளன. அவை இப்பொழுது புகைபடிந்து காணப் படுகின்றன. 2-ம் திருச்சுற்று மாளிகை விதானத்தில் ஒரு வீரன் புலியுடன் போரிடுவது போலும், இன்னும் பிற காட்சிகளும் தீட்டப் பட்டுள்ளன. மலையைச் சுற்றிவரும்பொழுது பின்புறத்தில் எழுத்து மண்டபம் என்று ஒரு மண்டபம் உள்ளது. அதில் கிருஷ்ணதேவ ராயன் காலத்தில் இராமாயணம், பாகவதம், வள்ளி கல்யாணம் முதலிய காட்சிகள் தீட்டப் பட்டுள்ளன.''

ராஜகோபுரத்தைத் தாண்டியவுடனே, விநா யகர் கோயில் முதலியன இருக்கின்றன. வலதுபுறம் ஆயிரக்கால் மண்டபம் இருக் கிறது.

இடதுபுறமாகக் கம்பத்து இளையனார் சந் நிதி இருக்கிறது.

கம்பத்து இளையனார் என்பது, முருகன் சந் நிதி; அருணகிரிநாதருடைய பிரார்த்தனைக்கு இணங்கி முருகப் பெருமானே அவருக்குக் காட்சி கொடுத்த இடம். இந்த இடத்தில் சிவகங் கைத் தீர்த்தமும், எதிரில் பாதாள லிங்கே சுவரர் குகையும் இருக்கின்றன. நடுவில் ஒரு பெரிய நந்தி இருக்கிறது. அதற்கு எதிரில் இருப்பதுதான் வல்லாள மகாராஜா கோபு ரம். இதற்குப் பக்கத்திலேயே கிளிக் கோபு ரம் இருக்கிறது.

இந்தக் கோபுரத்தின் முதல் நிலையில் கிளியின் உருவம் இருக்கிறது. அருணகிரி நாதர், கிளி வடிவம் தாங்கி பாரிஜாத மலர் கொண்டு வந்த காலத்தில் தாம் விட்டுச் சென்ற தமது திருமேனியைக் காணாது, கிளி உருவாகவே யிருந்து அனுபூதி பாடி அருளி னார் என்பது வரலாறு.

கிளிக்கோபுரத்திற்கு வெளிப்புறம் நாலாம் பிரகாரம். உள்புறம் மூன்றாம் பிராகாரம். உள்புறத்தில் 16 கால்மண்டபம் இருக்கிறது. கார்த்திகைத் தீபத் திருவிழாவன்று மாலை யில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி மலையை நோக்கி நிற்க, ஏக காலத்தில் தீபதரிசனக் காட்சி நடக்கும்.

இந்தக் கோயிலில் ஓராண்டில் 300 நாட் களில் திருவிழா:

திருக்கார்த்திகை	10 நாள்
சித்திரைமாதம் வசந்த உத்சவம்	10 நாள்
ஆனிமாதம் பிரமோத் சவம்	10 நாள்
ஆடிப்பூரம்	10 நாள்
நவராத்திரி	10 நாள்

திருக்கோயிலின் பல பகுதிகள், சந்நிதி களையெல்லாம் இப்போது மிக விரிவாகத் திருப் பணி செய்திருக்கிறார்கள். அறங்காவலர்குழுத் தலைவர் திரு. டி. வி. சுப்பிரமணியம் செட்டி யார் அவர்கள் இதைப்பற்றியெல்லாம் நமக்கு விளக்கமாக சொல்லக் கூடியவர்கள். அவர் களையே பேட்டி காண்போமே.

அறங்காவலர் குழுத் தலைவர் திரு.

டி. வி. சுப்பிரமணியம் செட்டியார்

''இந்தத் திருக்கோயில் 1944-லே நகரத்தார் வகுப்பினராலே கும்பாபிஷேகம் செய்யப்பட் டது. அதன் பிறகு கும்பாபிஷேகம் நடக்கவே இல்லை. அப்புறம் இந்த 1967-லே கும்பாபி ஷேகம் செய்ய வேண்டும் என்று எனது சக டிரஸ்டிகளெல்லாம் முயற்சி எடுத்தார்கள். 13-3-1970-ம் வருஷத்திலே ஒரு நல்ல திருப் பணிக் குழு அமைக்கப் பெற்றது. குறிப்பாக அரசு மான்யம் ரூ. 7,25,000 வந்தது. தமிழ் நாட்டிலே உள்ள உபரி கோயில்களிலிருந்து நன்கொடை மூலமாக ரூ. 5,00,000 அற நிலையத்துறை இலாகா ஆணையர் அவர்கள் மூலமாகக் கிடைத்தது. 1,50,000 மற்ற தேவஸ்தானங்கள் மூலமாகவும், கச்சேரி மூலமாக ரூபாய் 60,000-ம் வசூலாயிற்று. சுமார் ஏறக்குறைய 2,00,000 ரூபாய் நாங்கள் வசூல் பண்ணி, இந்த ஒன்பது கோபுரத் திலே ஏழு கோபுரங்களைத் திருப்பணி செய் தோம். அது மாத்திரமில்லை உள்ளே இருக்கிற விமானங்களெல்லாம் திருப்பணி செய்து முடித் தோம். இப்படி இருக்கிற நேரத்திலே நமது நகரத்தாரெல்லாம் கிளிக்கோபுரத்துக்கு உள் புறமுள்ள சுவாமி சந்நிதி, அம்மன் சந்நிதி பழனியாண்டவர் சந்நிதி, சோமாஸ்கந்தர் சந்நிதி முதலிய இந்த சந்நிதிகளையெல்லாம் அவர்கள் எடுத்துத் திருப்பணி செய்து, கும்பாபி ஷேகத்தையும் அவர்களே செய்து கொடுக் கிறதாக ஒரு முடிவு செய்து தனியாக அவர் களே செய்வதாக ஏற்பாடு பண்ணி அவர்கள் அந்த அந்த வேலைகளையெல்லாம் தொடங்கினார் கள். நாளைக்காலை 8¼ க்குமேல் 9 மணிக்குள் நமது அண்ணாமலைப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேக விழா நடக்கவிருக்கிறது. சிறப் பாக நடக்க எல்லா ஏற்பாடுகளும் நடத்திக் கொண்டிருக்கிறோம்.''

இந்தத் திருவண்ணுமலையைப் பற்றி நாம் முக்கியமாக ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். இங்கேயுள்ள சிவபெருமானுடைய உருவம், சுயம்புலிங்கம். தவிரவும், அடிக்கு ஆயிரத்து எட்டுச் சிவலிங்கங்கள் இந்நகரில், மறைந்துள்ளன என்பார்கள்.

இறைவிக்கு, இறைவன் தன்னுடைய இடப் பாகத்தை அளித்ததும் இங்கேதான்.

வல்லாள மகாராஜாவுக்குக் குழந்தை இல்லாமல் இருந்தது. அது 14ஆம் நூற்ருண்டில் நடந்த ஒரு நிகழ்ச்சி. வல்லாள மகாராஜனுடைய பக்தியை மெச்சி, இறைவனே அவருக்குக் குழந்தையாக அமைந்து அவர் இறந்த பிறகு அவருக்கு ஈமக்கிரிகைகளைச் செய்து வைத்தார்.

அன்று மட்டும்தானு செய்தார்? அறுநூறு ஆண்டுகளாக ஆண்டுதோறும் வல்லாள மகாராஜனுக்கு அண்ணுமலையார் ஈமக்கடனைச் செய்து வருகிருர். இதற்கென்று ஓர் உத்சவம் நடந்து வருகிறது. மாசி மாதம் மக நட்சத்திரத்தில் பள்ளி கொண்டாடப்பட்டு என்ற இடத்திலே இந்தத் திருவிழா நடக்கிறது. அந்த ஊருக்கு, அண்ணுமலையார் எழுந்தருளுகிருர்.

இந்தக் கோயிலில் ஏராளமான கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

கோப்பெருஞ்சிங்க பல்லவர், பாண்டிய மன்னர்கள், ஹொய்சால மன்னர், வீர வல்லாளத் தேவர், விஜய நகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர், தஞ்சையை ஆண்ட சேவப்ப நாயக்கர் . . . . . .

கி. பி. 955-ல் இந்தக் கோயிலினுடைய கருவறை, அதாவது கர்ப்பக்கிரகம் மட்டுமே கல்திருப்பணியாக இருந்தது.

ஆயிரக்கால் மண்டபமும், சிவகங்கைக் குளமும், விஜயநகரத்தை ஆண்ட கிருஷ்ணதேவ ராயரால் கட்டப்பட்டன. ராஜகோபுரத்தைக் கட்டுகிற வேலையையும் அவர்தான் ஆரம்பித்தார்.

கிருஷ்ணதேவராயர் தொடங்கிய ராஜ கோபுர வேலையை, தஞ்சை நாயக்க மன்னர் சேவப்பர் கட்டி முடித்தார்.

இந்தக் கோபுரம், தஞ்சாவூர் விமானத்தைவிட ஓர் அடி உயரமாக இருப்பதற்குக் காரணம் சோழர்களுக்கும் நாயக்கர்களுக்கும் போட்டி போலிருக்கிறது.

இப்படி, காலப்போக்கில், அண்ணுமலையார் கோயில் கருவறையும் நீண்டுயர்ந்த மதில்களும் மண்டபங்களும் குளமுமாய் விரிவடைந்திருக்கிறது. இவ்வளவு பெரிய கோயிலை, திருப்பணி செய்து பாதுகாப்பது என்பது பெரிய பொறுப்பு.

இனி நாம் கருவறைக்குள் போவோம்.

யாகசாலையைப் போய்ப் பார்த்துவிட்டு அங்கே எழுந்தருளியுள்ள மூர்த்திகளை வணங்கி மீண்டும் கோயிலுக்குள் வருவோம்.

குடநீராட்டு, குடமுழுக்கு என்ற பெயர்களில் வழங்கும் கும்பாபிஷேகம் என்பது புதிய கோயில் கட்டப்பெற்றபோதும், பழைய, கோயில்களைப் புதுப்பிக்கும் போதும், நடைபெறும் திருவிழா. புனித நீரைக் கும்பங்களிலிருந்து குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் ராஜகோபுரம், விமானம் ஆகியவற்றில் தெளிப்பதே இத்திருவிழாவின் முக்கியமான கட்டம். இதற்காகச் சில மாதங்களுக்கு முன்னரே பெரிய அளவில் ஏற்பாடுகள் தொடங்கும். யாகசாலைகள் முதலியன அமைக்கப்பெற்றிருக்கும்.

நீரைச் சிறப்பிக்கும் தலையாய சடங்கு கும்பாபிஷேகம். தூய்மையான தெளிவான நீரை, பக்தி நிறைந்தவர்கள் சுத்தமான பாத்திரங்களில் புனிதமான ஆறுகள் உற்பத்தியாகும் இடங்களில் எடுத்துக் கொண்டு வருவார்கள். இவை கும்பங்கள் எனப்படும். குடங்களில் ஊற்றி, மலர்களால் அலங்கரிக்கப்படும். கும்பாபிஷேக விழாவுக்கென்று போடப் பெறும் கவினுறு கொட்டகையில் அமைந்த யாகசாலையில் வரிசையாகக் கும்பங்கள் வைக்கப்படும். கும்பங்களிலுள்ள நீருக்கு மேலும் சக்தியும் புனிதமும் ஊட்டுவதற்காக புலமையும் ஒழுக்கமும் உடையவர்கள் மந்திரங்கள் ஓதுவார்கள்.

கர்ப்பக்கிரகத்தை இடையிடையே பழுது பார்ப்பதற்குக் கும்பாபிஷேகம் உதவுகிறது. பீடத்தின் மீது உள்ள இறை உருவங்கள் ஆடாமல் அசையாமல் உறுதியாக இருப்பதற்

ARUNAGIRINATHAR

Among the Tamil knowing people, Saint Arunagirinathar's name is greatly cherished, not only for the notable events in his life, but also for the excellence of his literary compositions, his profound knowledge and the eminence of his spiritual status. Even though no authentic records are available regarding the biography of the great Saint, traditions and the facts gleaned from his own writings point to the conclusion that he was born in Tamil Nadu six centuries ago.

He lived a life of sin in his very early days but the divine spark that was ever present in him got the better of his base instinct, and Arunagirinathar eventually turned into a great devotee of Lord Murgua. His songs were born of divine inspiration and are collectively known as **Tiruppugazh.** Out of 16,000 songs believed to have been sung, about 1,300 are extant. The songs which are in Tamil are remarkable for their captivating rhythmic patterns and high philosophic content. The abstruse concepts of Advaita philosophy are conveyed in his songs in such simple terms that even a layman can comprehend the same. The synthesis of Bhakti and Gnana can be seen in all his compositions which are to this day sung by innumerable groups of devotees in homes, temples and congregations.

In the galaxy of Saints of Bhakti cult, Saint Arunagirinathar occupies a place along with Tulsidas, Nanak, Tukaram, Meera and Chaitanya.

—P. & T. FOLDER
August 14, 1975

காக அஷ்டபந்தனம் என்ற எட்டுவகை மருந்துகளைச் சாத்துவது மரபு.

இப்போது இந்தக் கும்பாபிஷேகத்தை யொட்டி அண்ணாமலையார் கோயிலின் தலைமைக் குருக்களான பட்டம் ராமலிங்க சிவாசாரியார் அவர்களைப் பேட்டி காண்போம்.

பட்டம் ராமலிங்க சிவாசாரியார்

கும்பாபிஷேகத்திலே பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மிகப் பழமையான கோயில் நித்யரை தித்யக் கிரியைகள் நடந்துவரும் ஆலயங்களில் எதிர்பாராது கீலமடைந்துவிட்டாலும், பழுதடைந்துவிட்டாலும் மூர்த்திகளை பாலாலயம் செய்து மறுபடியும் புதிதாகக் கோயில்களைக் கட்டி அதில் மூர்த்திகளை எழுந்தருளச் செய்வது ஆவர்த்தம். கோயிலே இல்லாத ஊரில் கோயில்களை ஆகம விதிப்படி அமைத்து அதில் மூர்த்திகளை எழுந்தருளச் செய்வது அநாவர்த்தம். பழுது பட்ட கோயிலைப் புதுப்பித்து மூர்த்திகளை மருந்து சாத்தி செய்யும் கிரியை புநராவர்த்தம்.

(புதுச்சேரி வானொலி நிலையத்தாரின் இசைவு பெற்று வெளியிடப் பெறுகிறது)

திருவண்ணாமலைத் திருப்பணி

டி.வி. சுப்பிரமணிய செட்டியார்

நான் 1952ஆம் வருடம் முதல் 1976 வரை 22 ஆண்டுகள் அண்ணாமலையார் கோயிலில் அறங்காவலராகவும், 1972—ஆம் ஆண்டு முதல் 1976 வரை அறங்காவலர் குழுத்தலைவராகவும் அண்ணாமலையார் கோயிலிற் பணிபுரியும் பேறு பெற்றேன். நீண்ட காலமாக நடந்திருக்க வேண்டிய திருப்பணி என் காலத்தில் நிறை வேறியது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

1970-ல் இந்த திருப்பணிக்காக ஒரு குழுவை நியமித்தோம். உள் நாட்டிலும் வெளி நாட்டி லும் திருப்பணிக்கு நிதிகள் வசூலித்தோம். எங்கள் முயற்சிக்கு, தமிழ்நாடு அரசாங்கம் செய்த உதவி மிகப் பெரிது. தமிழ்நாட்டில் வேறு எந்தக் கோயிலுக்கும் அரசு இப்படி உதவி செய்ததில்லை. பெரிய கோயில் என்ற பெயருக்கேற்ப, அரசின் உதவியும் பெரிதாக இருப்பது பொருத்தம்தானே!

இந்துசமய அறநிலையத் துறை ஆணையரின் உதவி மிகப் பெரிது. எங்களுக்குத் தோன்றாத் துணையாக இருந்து வழிகாட்டியதோடு அவர் ஆணையர் நிதியிலிருந்தும் எங்களுக்கு நன் கொடைகள் வாரி வழங்கியிருக்கிறார்.

பழனி, திருவேற்காடு, திருச்செந்தூர், மதுரை முதலிய செல்வம் மிக்க கோயில்கள் செய்திருக்கும் உதவியும் பாராட்டுக்குரியது. சிவகங்கை தேவஸ்தானமும், இராமநாதபுரம் தேவஸ்தானமும் தகுந்த நன்கொடைகள் தந் திருக்கிறார்கள். சிவகங்கை, இராமநாதபுரம் அரசர்களுக்கு அண்ணாமலையார் எல்லா நலங் களும் அருள்வாராக!

ரத்னகிரி சுவாமியார் பாலமுருகன் அடிமை அவர்கள் இன்னும் உள்ளூர் அன்பர்களான திருமதி என். ராஜாம்பாள், திரு. பி. துரை சாமி ரெட்டியார், திரு. ஆர். முத்துகுமார சுவாமி, திரு. அண்ணாமலை முதலியார், பாலாஜி பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆகியோ ரும் மண்டபங்களைப் புதுப்பிக்கவும், பரிவார தேவதைகளின் சந்நிதிகளைப் புதுப்பிக்கவும் ஒல்லும் வகையில் எல்லாம் உதவினார்கள். அனைவருக்கும் என் நன்றி.

அண்ணாமலையார் கோயிலில் தொன்று தொட்டு ஈடுபாடு உள்ளவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள். கர்ப்பக்கிரகங்களை யும், முதல், இரண்டாம் பிரகாரங்களையும், திருக்கல்யாண மண்டபம் உள்பட மூன்றும் பிரகாரத்தையும் அவர்கள் மிகநல்ல முறையில் புதுப்பித்துக் கொடுத்திருக்கிறார்கள். கும்பாபி ஷேகத்தையும் அவர்களே, தங்கள் செலவில் மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். திருவண்ணாமலை மக்கள் அவர்களை என்றும் நன்றியுடன் நினைப்பார்கள். திருப்பணிக்குழுத் தலைவர் திரு. அ. சொ. அண்ணாமலை செட்டி யார் அவர்களும், கும்பாபிஷேகக் குழுத்தலைவர் திரு. ஏ. கே. ஏ. சிடி ஏ. எல். சிதம்பரம் செட்டியார் அவர்களும் அனைவருடைய பாராட்டுக்கும் உரியவர்களாகிறார்கள். அவர் களுக்குத் தகுந்த முறையில் நன்றி செலுத்த, போதிய வார்த்தைகள் இல்லை.

இன்னும் இரண்டு கோபுரங்களில் திருப்பணி வேலை செய்ய வேண்டியதிருக்கிறது. இதற்கும் இன்றைய அரசு 5 லட்சம் ரூபாய் சர்க்கார் மான்யமாக உதவியுள்ளது. இரண்டு கோபுர வேலைகளையும் டெண்டர் வாங்கி வேலையையும் ஒப்படைக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இன்னும் சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற வேண்டியுள் ளது. இந்த வேலைகளுக்கும் இந்த அரசாங்கமும் ஆணையர் அவர்களும் தேவையான தொகையை வாரி வழங்கி எஞ்சியுள்ள வேலைகளையும் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிக் கொள்கிறேன்.

ஆயிரக்கால் மண்டபத்தைப் புதுப்பித்துக் கலைக்கூடமாக்க முயற்சிகள் நடந்து கொண்டு வருகின்றன. கல்கத்தாவிலுள்ள பிர்லா அறநிறுவனத்தார் அவர்களை அண்ணாமலையார் கோயிலில் மின் விளக்குகளைப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்தக் கோயிலின் துணைக் கோயில்களான துர்க்கை அம்மன் கோயில், சஞ்சீவிராயர் கோயில் ஆகியவற்றை விரிவாகத் திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் நடத்த வேண்டியது அவசரமாகவும் அவசியமாகவும் உள்ளது. அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்பெற வேண்டும்.

அண்ணாமலையார் கோயிலில் திருப்பணி என்பது இடைவெளி இல்லாமல் தொடர்ந்து எப்போதுமே நடந்து கொண்டிருக்க வேண்டிய அளவுக்கு இந்தக் கோயில் 25 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டுள்ளது. வருவாயை மிகுதியாக்க வேண்டிய தேவையும் நிலவி வருகிறது. வருவாயைப் பெருக்குவதற்கான திட்டங்களை நாம் வகுக்க வேண்டும். திருப்பணி வேலையில் பெரும்பகுதி முடித்து விட்டோம் என்பதும், கும்பாபிஷேகத்தை நன்கு நடத்தி விட்டோம் என்பதும் மன நிம்மதியும் மகிழ்ச்சியும் தருகின்றன. இதற்காக அண்ணாமலை அப்பனையும் உண்ணாமுலை அம்மனையும் வணங்கி வாழ்த்துகிறேன்.

திருப்பணி வேலையில் என்னுடன் ஒத்துழைத்த அறங்காவலர்கள் அனைவருக்கும் குறிப்பாக திரு. பி. எஸ். மாணிக்கவேலு அவர்களுக்கும் என்னுடன் அயராது உழைப்புத் தந்ததற்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தவிர, திருப்பணி வேலையில் தேவஸ்தான நிர்வாக அதிகாரிகள் அனைவரும், ஊழியர்கள் அனைவரும் என்னுடன் உடனிருந்து எல்லா உதவிகளையும் நல்கியதற்காக அவர்கள் அனைவருக்கும் அண்ணாமலைப் பெருமான் அருள்புரிவாராக.

தமிழக அரசினரும் நகரத்தார் பெருமக்களும் தொடர்ந்து அண்ணாமலையார் கோயில் பணியில் ஈடுபட வேண்டும்.

கும்பாபிஷேக மலர் சிறந்த முறையில் வெளிவரவும் என் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*

A MUTT AT TIRUVANNAMALAI

Reference in Chidambaram Temple Inscription

An inscription of the 11th year of Kopperunjinga (A.D. 1254) refers to a *matha* at Tiruvannamalai called Vadakkil-matha; the then head of this *matha* (named Iravalar Kayilaya Devar) made an endowment by gift of land after purchase—three fourths of a *veli* and one *ma* in extent—called Kayilaya Devar Tiruppavadaippuram, for the supply of flowers to be grown in a flower garden and for providing food offerings to Lord Nataraja on the Tai Pusam day.

(page 94, of "The CITY OF THE COSMIC DANCE" by Shri B. Natarajan, Orient Longman, 1974)

அண்ணாமலையார் கோயில் சொத்துக்களும் கட்டளைகளும்

தி. ந. பரமசிவம், பி.ஏ. - நிர்வாக அதிகாரி

சொத்து

	தாலூகா	நன்செய்	புன்செய்
		ஏ செ	ஏ செ
1.	திருவண்ணாமலை	49.36	231.63
2.	போளூர்	3.96	—
3.	செங்கம்	12.65	17.98
4.	திருக்கோயிலூர்	4.82	6.31
5.	விழுப்புரம்	17.29½	24.70
6.	செஞ்சி	1.40	—
		89.48½	280.62

கடைகள் விவரம்

1.	தேர்முட்டித் தெரு	11
2.	அண்ணாமலையார் நிலையம்	24
3.	விநாயகர் நிலையம்	10
4.	16 கால்மண்டபம்	26
5.	தரகுமண்டி வர்த்தக சங்கம்	4
6.	உண்ணாமுலையம்மன் நிலையம்	23
7.	பெரியகடைத்தெரு	1
8.	சேடத் தெரு வீடு	1

சந்நிதி தலம் : காலி மனைகள்

1.	சந்நிதி தலம்	47
2.	தேரடித் தெரு	21
3.	சக்கரைத் தீர்த்தம்	14

தங்குவோர் விடுதிகள் விவரம்

1.	உண்ணாமுலையம்மன் வழிபடுவோர் விடுதி	இரட்டைப் படுக்கை	6	
		ஒற்றைப் படுக்கை	11	
2.	சி.வி.சிடி.வி. டிரஸ்ட்	இரட்டைப் படுக்கை	1	(விடுதி)
3.	பி.வி.ஆர்எம். குழந்தையன் செட்டியார்	இரட்டைப் படுக்கை	1	(விடுதி)
4.	எம்.சிடி.எம். டிரஸ்ட், சென்னை	இரட்டைப் படுக்கை	1	(விடுதி)
5.	திருக்கோயில் விடுதி	இரட்டைப் படுக்கை	2	(விடுதி)
6.	அப்பர் இல்லம்	ஒற்றைப் படுக்கை	8	(விடுதி)
7.	திருக்கோயில் பழைய விடுதி	ஒற்றைப் படுக்கை	1	(விடுதி)

சென்னையிலுள்ள சொத்து விவரம்

1.	சென்னை, அடையாறு—ஊரூர் கிராமம்	30 ஏ. 18 செ. (வீட்டு மனைகள்)
2.	சென்னை, மீர்சாகிப் பேட்டை	7 ஏ. (வீட்டு மனைகள்)
3.	சென்னை, தண்டையார்ப் பேட்டை தனபால்நகர்	23 கிரவுண்டுகள் (வீட்டு மனைகள்)

கட்டளைகள்

1. தீபக் கட்டளை
2. பரணி தீப கட்டளை
3. அர்த்தஜாம கட்டளை
4. காலசந்திக் கட்டளை
5. உச்சிக்காலக் கட்டளை ...
6. தூங்காவிளக்கு நெய்தீபக் கட்டளை
7. தூங்காவிளக்கு நித்திய விளக்குக் கட்டளை
8. தேசாந்திரி கட்டளை ...
9. தீபக்கட்டளை
10. தூண்டா விளக்குக் கட்டளை
11. கோ சம்ரக்ஷணை & கட்டளை
12. எலக்டிரிக் விளக்குகள் எரிவதற்கான கட்டணத்திற்காகக் கட்டளை
13. தேசாந்திரிபிரசாதக் கட்டளை
14. காலசந்திக் கட்டளை

எம். இராஜகோபால் ஐயர் — எம். அனந்தராம ஐயர்
ஸ்பெஷல் டிரஸ்டி, பரணி தீப கட்டளை
கே.வி.எஸ்.ஏஎல்.சிடி. அழகப்ப செட்டியார்
ராஜா சர் அண்ணாமலை செட்டியார்
(லேட்) ராஜபாண்டிய நாடார், ஆர்.ஏ.ஆர். சண்முகவேல்
பாலசுப்ரமண்யர் ரெலிஜியஸ் டிரஸ்ட், சென்னை
குமார் பிரதர்ஸ், சென்னை
தினரக்ஷக நிதி, காஞ்சிபுரம்
அண்ணாமலை கவுண்டர்
எஸ்பி. சுப்ரமண்ய செட்டியார், தென்னூர், திருச்சி
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள்
டி.பி. சூரியநாராயண செட்டியார் அன்னதான தேவார பாடசாலை, திருவண்ணாமலை (ஆண்டுதோறும் ரூபாய் முன்னூறு)
பாலசுப்ரமண்யர் ரெலிஜியஸ் சாரிட்டீஸ், சென்னை
இந்திரபோக முதலியார், சென்னை

தொண்டர் சிலர்

அண்ணுமலையாரின் கோயிலில் அறங்காவல ராகப் பணி செய்த பெருமக்கள் பலர் ஆவர். இவர்கள் அனைவரும் செய்துள்ள பணிகள் பல. எனினும் கோட்டையூர் திரு. வீரப்ப செட்டி யார் அவர்களும் ஆர்க்காடு ராவ் பகதூர் தன கோடி முதலியார் அவர்களும் செய்துள்ள தொண்டுகளை நாம் மிகவும் போற்றி நன்றி யுடன் நினைக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

★ ★ ★

ராஜ கோபுரத்தின் வடபால் இருக்கும் திட்டிவாசல் முன்புள்ள சித்திர மண்டபம், திருவண்ணுமலை திரு. ராமு முதலியார் வகை யினரால் கட்டப்பெற்றது.

★ ★ ★

கம்பத்து இளையனர் சந்நிதியில் கருங்கல் தளவரிசை போட்டுப் புதுப்பித்தவர் திரு. ஆர். நாராயணசாமி ரெட்டியார் அவர்கள் ஆவார்கள். மேற்படி முன் மண்டபத்தில் ஆறுபடை வீடுகள், கோபுரத்து இளையனர், கம்பத்து இளையனர் வரலாறுகள் ஆகியவற்றின் வண்ணக் காட்சிகளும் கந்தர் அநுபூதிச் செய் யுள்களும் தீட்டப்பெற்றுள்ளன.

★ ★ ★

சமயப் பேரவை நடைபெறுதற் பொருட்டு அமைந்துள்ள சத்தி விலாச சபா மண்டபத் தைச் சீர்திருத்த சென்னை மணலி லெட்சுமண சாமி முதலியார் அற நிறுவனத்திலிருந்து ரூ. 5,000 வழங்கியுள்ளார்கள்.

★ ★ ★

சுவாமி, அம்மன் சந்நிதிகளில் திருவண்ணு மலை கோவிந்தசாமி செட்டியார் அவர்கள் ரத விளக்குகள் அமைத்துள்ளார்கள்.

★ ★ ★

மர ரிஷப வாகனம் தேவஸ்தானத்தாரால் செய்து வைக்கப்பெற்றது.

சத்திரங்களும் மடங்களும்

திருமடங்களில், வழிப்போக்கரான துறவி யர்க்கும் உணவு படைக்கப் பெறுவதுபோல, அண்ணுமலையில் உள்ள சத்திரங்கள் அனைத்தி லும் சாதுக்களுக்கு அமுது வழங்கும் வழக்கம் உண்டு. அதற்காகவே அவை ஏற்பட்டன. எனவே, சத்திரங்களும் ' மடம் ' என்று சொல் லப்படுவது திருவண்ணுமலைச் சிறப்பு.

இவ்வாறு ஆதீனமாக இல்லாத மடங்கள் பல உள்ளன. சான்று: ஒயாமாரி மடம், சிவகாசி மடம், மதுரையார் மடம், விருதுநகர் மடம், நூல்காரர் மடம், குறும்பேறியார் மடம், ஞானத்தீபக் குடை மடம்.

★ ★ ★

கோயிலுக்குள் உள்ள பிரம்ம தீர்த்தம் குடிப் பதற்கு மட்டுமே ஏற்பட்டது. ஆயினும் சந்திர கிரகண, சூரிய கிரகணக் காலங்களில் சுவாமி தீர்த்தவாரிக்கு எழுந்தருளும்போது இங்கு யார் வேண்டுமானுலும் குளிக்கலாம்.

★ ★ ★

அண்ணுமலையார் கோயில் வருமானம்

பசலி		ரூ.	பை.
1375	...	3,62,054	09
1376	...	3,59,404	24
1377	...	4,13,861	57
1378	...	3,28,590	08
1379	...	6,56,380	73
1380	...	5,00,716	51
1381	...	6,62,272	33
1382	...	6,26,058	60
1383	...	6,03,073	82
1384	...	5,20,384	37

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் கொடை

திருவண்ணுமலை, மாணிக்கவாசகப் பெருமானுல் திருவெம்பாவை அருளப் பெற்ற தலம். எனவே, ''மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்'' என்று அருளிய வண்ணம் நீராட்டுச் சிறப்புக்குரிய மார்கழித் திங்கள் முழுவதும் உச்சிக்காலத்தில் அண்ணுமலையாருக்குப் பூசை செய்யும் சிவாசாரியாருக்கும், திருமுறை ஓதும் ஓதுவாருக்கும், திருப்பனந்தாள் காசி மடத்து அதிபர் அருள் நந்தித் தம்பிரான் அவர்கள், படிக்காசு நிதி ஏற்படுத்தியிருக்கிருர்கள். மற்றும் (1) திருவாசகப் பரிசு (2) குமரகுருபரர் நினைவுநாளிலும், திருக்கார்த்திகை நாளிலும் ஏழைகளுக்கு அன்னம் பாலிப்பு, (3) நாள்தோறும் திருமுறைப் பாராயணம் (4) கோடை மாதங்களில் தண்ணீர்ப் பந்தல் முதலிய பல அறங்களுக்கு மேற்படி அருள்நந்தித் தம்பிரான் அவர்கள், திருவண்ணுமலையில் ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.

திருஞானசம்பந்தர் அருளிய ''உண்ணுமுலை'' ''பூவார்மலர்'' என்ற பதிகங்களையும், திருநாவுக்கரசர் அருளிய ''ஓதிமாமலர்கள்'', ''வட்டனை'' ''பட்டி'' என்ற பதிகங்களையும் மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை, ''திருவம்மானை'' ஆகியவற்றையும் அம்மன் கோயிலில் சலவைக்கற்களில் பதிப்பித்திருக்கிருர்கள்.

அம்மன் கோயிலில் மின்விளக்குச் சப்பரம் செய்யவும் நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

ஆண்டுதோறும் இரண்டு பசுக்கள் வாங்கி, அவை அளிக்கும் பாலை நாள் தோறும் அண்ணுமலையாருக்கு அபிடேகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.

திருப்பத்தூர் *T. P.* சூரிய நாராயண செட்டியார் அவர்களின் சில தர்மங்கள்

24-3-1936-ல் பிரசுரமான ஒரு வெளியீட்டில் காணப்படும் விவரங்கள்

1. வல்லாள மகாராஜா கோபுரம், கிளிக்கோபுரம், திருமஞ்சனக் கோபுரம் ஆகியவற்றைப் பழுதுபார்க்க ரூ. 30,000 செலவிட்டுள்ளனர்.
2. ஸ்ரீ அன்னதான தேவாரப் பாடசாலை ஏற்படுத்தி, அது என்றென்றும் நடைபெற்று வருவதற்காக வாடகைக்கு விடவேண்டிய கட்டிடங்களையும் கிரையத்துக்கு வாங்கி வைத்திருக்கிருர்கள்.
3. தேவாரப் பாடசாலைக் கட்டிடத்தில் நாள்தோறும் சிவனடியார்கள் பத்துப் பேருக்குச் சாப்பாடு போடப்பெறுகிறது.
4. காலையிலும் மாலையிலும் அண்ணுமலையார் கோயிலில் தேவாரம் பாடப்பெறுகிறது; திருமஞ்சனக் கோபுரத்திற்கு மேற்கேயுள்ள நந்தவனம் நிர்வாகம் செய்யப்பெறுகிறது.
5. ஆரும் திருவிழாவில் 63 நாயன்மார்களுக்கும் தேவார பாராயணம் செய்விக்கப்பெறுகிறது.
6. மார்கழி மாதத்தில் மாடவீதியில் மாணிக்க வாசகர் உற்சவம் நடத்தப்பெறுகிறது.
7. ஆருத்ரா தரிசனத்தன்று திருவாசகப் பாராயணம் செய்து, திருவாதிரைக்களி அமுது நிவேதனத்துடன் மண்டகப்படி நடைபெறுகிறது.

மண்டபங்கள்

திருவண்ணுமலேயில் உள்ள மண்டபங்கள் பல. தாண்டவ வாணன் செய்த திருப்பணி களேப் புகழ்ந்து சைவ எல்லப்ப நாவலர் ஒரு பாடல் பாடியிருக்கிருர்.

அண்ணல் அருணுசலருக்கு ஆவணிமூலத்
திருநாள்
பண்ணிமணி மண்டபமும் பண்ணுவித்தான்—
மண்ணினிசை
தீட்டினுன் காவும் திருவீதி யுங்குளமும்
நாட்டினுன் தாண்டவவா ணன்.

பெரிய கோபுரம்

தஞ்சாவூரை ஆண்ட செவ்வப்ப (சேவப்ப) நாயக்கர் கோவிந்த தீட்சிதருடைய அன்புக்குப் பாத்திரமாகி, அவரால், விசய நகரத்தை யாண்ட அச்சுதராயரிடம் கீழ்நிலேயில் ஒரு பணியாளராக அமர்ந்து தம் திறமையால் மேல்நிலேக்கு வந்து தஞ்சையை ஆளும் பொறுப்பைப் பெற்ருர். அவர் சகம் 1494இல் (கி.பி. 1572) திருவண்ணுமலே ஈசருக்குத் திருக் குளமும் கோபுரமும் கட்டினுர். திருவண்ணுமலேக் கோயிலிலுள்ள சாசன மொன்று, செவ்வப்ப நாயக்கர் ஆட்சியில்'—சிவநேசன், லோகநாதன் என்ற பெயருடைய இரு சகோதரர் திருவண்ணுமலேக் கோபுர மொன்றைக் கட்டி முடித்தார்கள் என்று கூறும். இச் செயலேப் பாராட்டிக் காலிங்கராயன் உண்ணுமுலே எல்லப்ப நயினுர் என்று புலவர் பாடியதாகப் பொறிக்கப்பட்டுள்ள பாடல்கள் பின்வருவன:

தானேற்ற மாகச் சகாத்தங்கள் ஆயிரத்து
நானூற்றுத் தொண்ணூற்று நாலின் மேல்-
மானேற்ற
தென்னருணே நாதருக்குச் செல்வமகி பன்கயிலே
அன்னதொரு கோபுரம் கண் டான்

மருவுசிவ நேசன் மகிழ் உலக நாதன்
இருவரும்பே ரன்பால் இயற்ற—அருணேயிலே
மானபரன் செல்வ மகிபாலன் அப்பதினென்
ருன நிலேக் கோபுரங்கண் டான்.

இருபுறமும் மீனம் எழுது புலியிட்டு
அருவரையிற் பேரெழுத வையத் தொரு
வரையை
வைத்த தெனச்செல்வ மகிபாலன்தென்னருணே
அத்தருக்குக் கோபுரங்கண் டான்.

—தமிழ் இலக்கிய வரலாறு
16-ஆம் நூற்ருண்டு பாகம் 1 ப. 208



அணி அண்ணாமலை

இப்போது அருள்மிகு அண்ணாமலையார்திருக்கோயிலின் ஆட்சிக்கு உட்பட்ட மூன்றுகோயில்களுள் ஒன்றாக விளங்கும் **அணி அண்ணாமலை,** அண்ணாமலையார் கோயிலுக்கும் முந்தியது என்றும் ஆதி அருணாசலம் என்ற பெயருடையது என்றும் கருதப்பெறுகிறது.

திருவண்ணாமலை நகரின் வடமேற்குத் திசையில் உள்ள இந்தத் திவ்விய ஸ்தலம், முன்னொரு காலத்துப் பிரம்மதேவர் தம்மாற் படைக்கப்பட்ட திலோத்தமையிடத்துக் கொண்ட அதிமோகத்தினால் எங்கும் ஓடித் திரிந்து தன்னிடத்திலே வந்து அங்கு எழுந்தருளும் சிவபெருமானைத் தரிசிக்கப் பெற்று, அவர் அருளால் அம் மோகம் தங்கிச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசிக்கப் பெற்ற மகிமை வாய்ந்தது.


கிழக்கே திருமாலால் வழிபடப் பெற்ற மூர்த்தி அண்ணாமலை நாதர் எனவும் மேற்கே அயனால் வழிபடப் பெற்ற மூர்த்தி அணி அண்ணாமலை நாதன் எனவும் வழங்குவதாகப் புராணம் கூறும்.

மலை வலத்தில் 9 கி.மீ. தொலைவில் மலையின் மேற்குப் பகுதியிலுள்ள இச் சிற்றூரில் சிவபெருமானுக்கு அணி அண்ணாமலை என்னும் இப் பெரிய கோயிலும், மாணிக்க வாசகப் பெருமானுக்கு ஒரு கோயிலும் மாரியம்மன் கோயில் ஒன்றும் இரு குளங்களும் உள்ளன. திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஏழு பாடல்கள் அணி அண்ணாமலையைக் குறிப்பிடுகின்றன. மணிவாசகப் பெருமான் திருவெம்பாவை பாடிய இடத்திலேயே அவருக்குக் கோயில் அமைந்திருக்கிறது என்பர். இக்கோயிலில் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை ஓதப் பெறுகிறது. இக்கோயில் அருகே உள்ள குளம், திருவெம்பாவையில் 'பைங்குவளை' எனத் தொடங்கும் பாடலில் **'பொங்குமடு'** (மடு-குளம்) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அணி அண்ணாமலையில் புதையுண்ட நகரத்தின் சின்னங்கள் கிடைக்கின்றன என்கின்றனர்.

கார்த்திகைத் தீப நாளில், அண்ணாமலையார் கோயிலில் நிகழ்வது போன்ற சிறப்புக்கள் அணி அண்ணாமலைக் கோயிலிலும் நடைபெறுகின்றன. அணி அண்ணாமலை இறையுருவங்கள், அண்ணாமலையார் கோயில் மூர்த்திகளோடு மலைவலம் வருகின்றன.

திருக்கார்த்திகை நாளில் அணி அண்ணாமலையாரை நாட்டுப்புற மக்கள் பெருந்திரளாக வழிபட்டு அச் சந்நிதியில் தினை மா விளக்கு ஏற்றுவது மரபு.



1 மூலவர்
2 அர்த்த மண்டபம்
3 பலி பீடம்
4 மகா மண்டபம்
5 **63**-வர் ஓவியம்
6 நால்வர்
7 சோமாஸ்கந்தர்
8 கணேசர்
9 சந்திரசேகரர்
10 சின்னச் சந்திரசேகரர்
11 அஸ்திர தேவர்
12 சுப்பிரமணியர்
13 சண்முகர்
14 கெஜலட்சுமி
15 உண்ணாமுலையம்மை
16 சண்டிகேசர்
17 கிணறு
18 பைரவர்
19 நவக்கிரகங்கள்
20 பழநி ஆண்டவர்
21 சம்மந்த விநாயகர்

அண்ணுமலையார் கோயிலிலிருந்து இந்தக் கோயிலுக்குச் சுரங்கப்பாதை இருப்பதாகச் சொல்லுவார்கள்.

பழமையான இக்கோயிலை இந்த இருபதாம் நூற்றுண்டில் பிரித்து நகரத்தார்கள் புதிய பாணியில் கட்டி உள்ளனர். கோயிலின் இன்றைய தோற்றமும் இப்போதுள்ள இறை உருவங்களின் பட்டியலும் அமைப்புப் படமும் தரப் பெற்றுள.

நகரத்தார் திருப்பணிகள் விவரம் :

1. கோட்டையூர் திரு. அ. க. அ. மெ. வகையார்களும் திரு. ராம. பெ. அவர்களும் சேர்ந்து பழைய கோயிலை முழுதும் பிரித்துப் புதியதாக, சுவாமி அம்மன்கோவில் உள்பட கருப்பக்கிரகம் அந்திராலம் மகா மண்டபம் முதலியவையும் அமைத்து, பரிவாரங்களுக்கும் கட்டிடம் கட்டி, சுவாமிஅம்பாளையும் வலம் செய்யும்படியாக உள் பிரகாரத்தில் மண்டபம் முழுதும் கட்டி, கோபுரமும் கட்டி, திருமதிலும் உண்டாக்கி அக்கிரகாரம் விடுதி கட்டி, திருப்பணி செய்த வகையில் ரூ. *3,50,000*

   மேற்படி கும்பாபிஷேகம் பிங்கள தை கசு ஞாயிற்றுக்கிழமை *27—1—1918*இல் நடைபெற்றது.

2. மீண்டும் திரு. அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் பெரும் பணம் செலவிட்டுக் கோயிலைப் பழுது பார்த்து, வண்ணம் வைத்து, பிலவங்க வைகாசி ரு *19—5—1967* வெள்ளிக் கிழமை கும்பாபிஷேகம் செய்திருக்கிறுர்கள்.

3. திரு. அ. க. அ. மெ. வகையார் அணி அண்ணுமலை சுவாமி அம்பாளுக்கு நாகாபரணமும் வெள்ளிக் கலசங்களும் பரிவாரங்களுக்கு வெள்ளிக் கவசங்களும் செய்து வைத்திருக்கின்றனர்.

4. திரு. அ. க. அ. மெ. வகையார் ஷை கோயிலுக்கு இரண்டு காலப் பூஜைக்குக் கட்டளை வைத்து அபிஷேகம் நைவேத்தியம் வகைகளும், சிப்பந்திகளும், பிரசாதப் பட்டுவாடாக்களும் செய்து வருவதுடன், நந்தனவனமும் வைத்துப் பூஜைக்கு மலர் கொடுத்து வர ஏற்பாடு செய்து வேலைக்காரர்களையும் நியமித்துள்ளனர்.

5. ஷை அறங்கள் என்றென்றும் நடந்து வரும் பொருட்டு ரூ.*50,000*-க்கு அணி அண்ணுமலையில் நிலம் வாங்கிவைத்தும் அபிஷேகத்திற்குக் காலம் *1*-க்கு *2* படி பால் கொடுத்தும் நடத்தி வருகிறுர்கள்.

6. அணி அண்ணுமலையில் திருப்பணிக்கு விடுதி கட்டியும் *10* வீடு அக்கிரகாரம் கட்டியும் வேலைக்காரர்கள், குடியிருக்க வீடுகள் கட்டியும் உள்ளனர்.

சஞ்சீவிராயர் கோயில்

அண்ணுமலையார் கோயிலுக்குக் கிழக்கே இரண்டு பர்லாங்கு தொலைவில் (ஐயன் குளம் என இப்போது வழங்கப்பெறும்) இந்திர தீர்த்தம் உள்ளது. இதன் மேற்குக் கரையில் அண்ணுமலையார் கோயிலின் உட்கோயிலான மிகப் பழமையான சஞ்சீவி ராயர் கோயில் இருக்கிறது.

இரண்டு காலப் பூசை நடைபெறுகிறது. இங்கு பூசை செய்யும் உரிமை ஸ்மார்த்த பிராமணர்க்கு உரியது.

சஞ்சீவராயருக்கு மூலவர், உற்சவர் ஆகிய இரு திருமேனிகள் இங்கு உள்ளன.

துர்கை அம்மன் கோயில்



தமிழ் நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் கிராம தேவதைக் கோயில்கள் உள்ளன. இவை சக்தி வாய்ந்தவை. மக்கள் இந்தத் தெய்வங்களை, பய பக்தியுடன் வழிபட்டு இவற்றுக்கு விமரிசையாக விழா எடுப்பார்கள். தீரா நோய்களிலிருந்து மக்களை விடுவிக்கும் ஆற்றல் இவற்றுக்கு உண்டு என்றும், கிராமம் முழுவதையும் இந்தத் தெய்வங்கள் செல்வச் செழிப்பில் திளைக்க வைக்கும் என்றும், பாதுகாக்கின்றன என்றும் நம்பி வருகிறார்கள்.

திருவண்ணுமலைக்குரிய கிராம தேவதை, துர்கை அம்மன். இந்த அம்மனுக்குரிய கோயில், அண்ணுமலையார் கோயிலுக்கு மிக அருகேயே உள்ளது. இங்குள்ள இறைவன் பாபநாச ஈசுவரர்; இறைவி அன்னபூரணி.

இக்கோயிலில் வெள்ளிக்கிழமைகளில் கூட்டம் மிகுதியாக இருக்கும். நவராத்திரி ஒன்பது நாட்களும் இங்கு சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. வீரர்களையும், தீரமான செயல்களையும் பாராட்டுவதற்கு அறிகுறியாக ஆற்றலின் வடிவமான துர்கையை, மலைமகளைத் துதித்து, வணங்கி, பாராட்டித்தான் எல்லா இடங்களிலும் நவராத்திரி விழாக் கொண்டாடப் பெறுகிறது.

அண்ணுமலையார் கோயிலின் பெரிய திருவிழாவான திருக்கார்த்திகைக்கு, பஞ்சமி திதியில் கொடி யேற்றப்படும். அதற்கு முன்னதாக, மூன்று நாட்கள் இந்தத் துர்கைக் கோயிலில் திருவிழா நடைபெறும். முதல் நாள் துர்க்கைக்கும், மறுநாள் பிடாரிக்கும், மூன்றும் நாள் விநாயகருக்கும் விழா எடுப்பது மரபு. நான்காம் நாளில்தான் அண்ணுமலையார் கோயில் கார்த்திகை விழாவின் முதல் திருவிழா தொடங்கும்.

அண்ணுமலையார் கும்பாபிஷேகங்களிலும் இவ்வாறே இந்தக் கிராம தேவதைக்கு முதலிடம் உண்டு. கும்பாபிஷேகம் இராட்சச பங்குனி 22 (4—4—1976)—ல் நடைபெற்றது. இதற்குரிய நிகழ்ச்சிகள் பங்குனி 11—ம் நாள் இரவு 8 மணிக்கு ஸ்ரீ துர்காம்பாள் உத்சவத்துடன் ஆரம்பமாயின. மகிஷாசுரனை சம்ஹாரம் செய்து அந்தப் பிரமஹத்தி தோஷம் நீங்குவதற்காக அம்பிகை கட்கம் என்னும் அரிவாள் கொண்டு பூமியில் வெட்டி, தீர்த்தம் ஏற்படுத்தி அந்தப் புனித நீரில் அபிஷேகம் செய்து தோஷம் நீங்கியதாக இங்கு ஐதீகம். அதன் சின்னமாக இங்கு அவ்வாறு வெட்டப்பட்ட பாவனையாக ஒரு தீர்த்தம் இருக்கிறது. அதற்கு ''**கட்கத் தீர்த்தம்**'' என்று பெயர்.

இறைவியை, அன்னையாகவும், உலக நாயகியாகவும் வழிபடும் மரபு மோஹஞ்ச தாரோ, ஹரப்பா காலத்திலிருந்து தொடர்ந்து நிலவி வருகிறது. எருமை என்று இராட்சசனைக் கொன்ற துர்கா தேவிதான் முக்கியமாக வழிபடப் பெறுகிறாள். அன்னை துர்காம்பாள் நம் அனைவருக்கும் அருள் பாலிப்பாள் ஆக!

மலைச் சிறப்பு

1. காலம் தொறும் மாறும் இயல்பு

கிருதயுகத்தில் இறைவனே இங்கு அனற்பிழம்பாக நின்ருர். அதனுல் இது அக்னி மலையாக அமைந்தது: திரேதாயுகத்தில் ரத்தினமலையாக விளங்கியது; துவாபர யுகத்தில் தாமிர மலையாகத் திகழ்ந்தது; இப்போது கலியுகத்தில் கல் மலையாக மாறியுள்ளது.

(ஆதாரம்: **அருணுசல புராணம்**)

2. மலை பற்றிய தத்துவம்

கயிலாய மலை இறைவனுடைய இருப்பிடம். இது, இறைவனே. இறைவனுக்கு எதிரில் நந்தி அமைவது மரபு. இந்த மலையைச் சுற்றி, ஏராளமான இடங்களில் நந்தி உருவங்கள் இருப்பதை, மலை வலம் வரும்போது காணலாம்.

எட்டுத் திசைகளிலும் எட்டு லிங்கங்கள் கோயில் அமைப்பில் கற்றளிகளாக உள்ளன. ஒவ்வொரு லிங்கத்தின் அருகேயும் ஒரு திருக்குளம் உள்ளது. இவை முறையே அக்கினி லிங்கம், யமலிங்கம், நிருதிலிங்கம், வாயு லிங்கம், வருண லிங்கம், குபேர லிங்கம் எனப்படுகின்றன. இவற்றுள் சில, நாள்தோறும் பூசை பெறுகின்றன. பலவற்றிற்குப் பூசை இல்லை. இவற்றின் கொடுங்கைக்கு மேல் விமான அமைப்பு இல்லை. ஆனுல், கருவறை, அந்தராலம் ஆகிய பகுதிகள் உள்ளன.

3. அங்கப் பிரதட்சணம்

உடம்பை உருட்டிக்கொண்டே மலைவலம் வரும் மரபு நீண்ட காலமாக உண்டு. இது அங்கப் பிரதட்சணம் எனப் பெயர் பெறும். அவ்வாறு வலம் வருவோர் தேங்காய் ஒன்றை உருட்டி அது நின்ற இடத்தில் எழுந்து மலையைப் பார்த்து வணங்கி மீண்டும் அங்கப் பிரதட்சணம் செய்வர்.

4. மகப்பேறு

45 நாட்கள் அதிகாலையில் கணவனும் மனைவியும் மலைவலம் வந்தால் மகப்பேறு பெறலாம் என்ற நம்பிக்கையும் நிலவியது.

5. மலைவலம் வரும் முறை

நீராடிவிட்டு, திருநீறுபூசி, செருப்பு இன்றி, மெதுவாக நடந்து பக்திப்பாடல் களைப் படித்துக்கொண்டோ அல்லது பாடிக்கொண்டோ அல்லது நமசிவாய என்று கூறிக்கொண்டோ மலை வலம் வர வேண்டும்.

6. மலைவலம் வருவதற்கு உரிய மாதங்கள்

ஐப்பசி மாதம் கார்த்திகை மாதம் மார்கழி மாதம்

7. பிற மாதங்களில் மலைவலம் வருவதற்கு ஏற்ற நாட்கள்

சித்திரை முதல்நாள் கார்த்திகை நாட்கள்
மாசி சிவராத்திரி நாள் பௌர்ணமி நாட்கள்

8. மலை வலம் வரும் கிழமையும், கிடைக்கும் பயனும்

ஞாயிறு	—	சிவபதம்
திங்கள்	—	உலகை ஆளும் ஆற்றல்
செவ்வாய்	—	ஏழ்மை, கடன், பிறவிப்பிணி ஆகியவற்றிலிருந்து விடுதலை
புதன்	—	கலைகளில் தேர்ச்சி
வியாழன்	—	ஞானிகளுக்கு ஒப்பான பதவி
வெள்ளி	—	விஷ்ணு பதம்
சனி	—	நவக்கிரகங்களை வழிபட்ட பலன்

9. எதிரொலி

மலை வலத்தில் பழனி ஆண்டவர் சந்நிதியிலிருந்து ஏதாவது குரல் கொடுத்தால், அச் சொற்கள் எதிரொலிப்பதைக் கேட்கலாம்.

10. மலைவலம் வரும்போது காணத்தக்கன

கௌதம ரிஷி பூசை செய்த இடம் (இப்போது ஓர் ஆசிரமம்.)
அணி அண்ணாமலைக்கோயில்
மாணிக்கவாசகர் கோயில் (அணி அண்ணாமலை அருகே)
வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மைல் கல் (பார்க்க: தனிக் கட்டுரை)

11. தீர்த்தங்கள்

மலைமீது சுனைகளாகவும், தீர்த்தங்களாகவும் மற்றும் மலையைச்சுற்றி, மலை வலம் வரும் வழியில் தீர்த்தங்களாகவும் மொத்தம் 360 உள்ளன. இவை பெரும்பாலும் அருவமாக (நம் கண்ணுக்குப் புலப்படாதனவாய்) உள்ளன. ரமண ஆசிரமத்திற்கு அருகேயுள்ள சிம்மதீர்த்தம் முதலிய சில உருவமாக உள்ளன.

12. உயரமும் சுற்றளவும்

மலையின் உயரம் 2,665 அடி.
கிரி வலம் வரும் சாலையின் நீளம் 8¼ மைல் (13 கி.மீ.).

வைரக் குன்று


மலை வலம் வரும் வழியில் செங்கம் சாலையின் இடது புறத்தில் அரசினர் கல்லூரி அருகே வைரக் குன்று என்னும் இடம் இருக்கிறது. இங்கு விக்கிரகங்கள் செய்வதற்கு ஏற்ற கல் கிடைக்கிறது. சென்னை வள்ளுவர் கோட்டத் திருப்பணி வேலைகள் இங்குதான் நடைபெற்றன.

வைரம் போன்று மிக அழுத்தமும் நயமும் உடைய கல் இங்கே கிடைக்கிறது. இவ்வகையான கல், சிற்ப வேலைக்கு மிகவும் ஏற்றது. விக்கிரகங்கள் செய்ய இங்கே கல் எடுப்பது நெடுங்காலமாக வழக்கமாக இருந்து வருகிறது. இங்கு கிடைக்கும் கல்லின் நயத்தை அறிய, ரமணமஹரிஷி அவர்களுக்கு வழங்கப்பெற்ற சிம்மாசனத்தைக் காணலாம்.

முடவரும் கிரிவலமும்

கால் முடமான பக்தரும்கூட, கிரிவலம் வருவதை இன்றும் காணலாம். இதைக் குறித்து அருணாசல புராணம் ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறது. கட்டைகளின் துணைகொண்டு முடவர் ஒருவர் கிரிவலம் சென்றாராம். இறைவன் எதிர்ப்பட்டு அவருக்குக் கருணை காட்டிக் கால்களை வழங்கினாராம்.

திருவண்ணாமலையையும் கிரிப்பிரதட்சணத்தையும் காட்டும் படம்



குறிப்பு: பூர்வ காலத்திய திருவண்ணாமலை நகர எல்லை இன்னும் பெரிதாக இருந்திருக்கவேண்டுமென ஊகிக்க ஆதாரம் இடமிருக்கிறது.

△ மாணிக்கவாசகர் திருவாசகத்தில் குறிப்பிடும் குளம்



தேரும்



திருவிழாவும்



1. ஒவ்வொரு மாதமும் நிகழும் பஞ்ச பருவ உத்சவங்கள்

1. அமாவாசை
2. கார்த்திகை
3. பிரதோஷம்
4. சுக்கிரவாரம்
5. சோமவாரம்

2. ஏனைய விழாக்கள்

1. சித்திரை விழா—10 நாட்கள்—சித்திரா பவுர்ணமியன்று விழா முடிவடையும். மன்மத தகனமும் நடைபெறும்.
2. வைகாசி விசாகம்.
3. ஆனி 21-ல் தொடங்கி தட்சிணாயனம் 10 நாள் விழா.
4. ஆனித் திருமஞ்சனம்; ஆயிரக்கால் மண்டபத்தில் உத்திர நட்சத்திரத்தில் நடராசருக்கு அபிஷேகம் (2 நாள் விழா).
5. ஆடிப்பூரம் பராசக்திவிழா. 10 நாட்கள். பத்தாம் நாளில் வளை காப்பு, தீ மிதித்தல்.
6. ஆகஸ்டு 15-ல் அருணகிரிநாதர் திருவிழா.
7. ஆவணி மாதம் ஆவணிமூலம் (ஒரு நாள் விழா).
8. ஆவணி மாதம் விநாயக சதுர்த்தி.
9. புரட்டாசி நவராத்திரி 10 நாள் திருவிழா.
10. ஐப்பசி கந்த சஷ்டி ஆறுநாள் விழா. ஆறும் நாளில் சூர சம்காரம்.
11. கார்த்திகை மாதம் ஒவ்வொரு சோம வாரத்திலும் 1008 சங்காபிஷேகம்.
12. திருக்கார்த்திகை, 13 நாள் விழா. பத்தாம் நாளில் திருக் கார்த்திகை.
13. மார்கழி மாதம் 21-ஆம் தேதி முதல் 10 நாட்கள் உத்தராயணத் திருவிழா.

    மார்கழி மாதம் திருவாதிரையன்று முடிவடையுமாறு மாணிக்க வாசகருக்குப் பத்து நாள் விழா. திருவாதிரை விழா ஆயிரக்கால் மண்டபத்தில் நிகழும்.
14. தை மாதம் 2-ம் தேதி திருவூடல் திருவிழா.
    தைமாதம் 5-ம்தேதி மணலூர்ப்பேட்டையில் தீர்த்தவாரி.
    தைமாதம் ரதஸப்தமியன்று கலசபாக்கத்தில் தீர்த்தவாரி.
15. மாசி மாதம் மாசி மகத்தன்று வல்லாள மகாராஜா உத்சவம் இறுதிக் கிரிகைகள்.
16. மாசி - அமர சதுர்த்தியன்று மகாசிவராத்திரி.
17. பங்குனி உத்தரம் ஆறு நாள் உத்சவம்.

செப்புத் திருமேனிகள்

த. கோ. பரமசிவம்

அண்ணுமலையின் செல்வங்களில் அங்குள்ள செப்புத் திருமேனிகளும் பெரிதும் இடம் பெறுகின்றன. இவை பஞ்சலோகங்களால் ஆக்கப் பெற்றன. மிகப் பழமையான செப்புத் திருமேனிகள் என்று எதுவும் இல்லை என்றாலும் பிற்காலச் சோழர் காலத்தினின்று பிற்கால நாயக்கர் காலம்வரை பல நூற்றாண்டுகளைச் சார்ந்த செப்புத் திருமேனிகளும் இங்கே உள்ளன.

இங்குள்ள செப்புத் திருமேனிகள் எல்லாம் திருவாசிகைகள் உட்படக் கனமாக எழுந்தருளிவிக்கப் பெற்று ரத்ன நியாசம் செய்யப் பெற்றுள்ள நிலையிலேயே காணப்படுகின்றன. பஞ்சலோகங்களில் தாமிரம் அதிகமாகச் சேர்க்கப் பெற்றுள்ளதால் எல்லாத் திருமேனிகளும் சிவந்த நிறத்திலேயே காணப்படுகின்றன. பெரும்பாலன பத்ம பீடத்தையும் அதன் மேல் பத்ர பீடத்தையும் கொண்டுள்ளன. இவையெல்லாம் உத்சவ காலங்களில் வெளியே ஆடை ஆபரணங்களுடன் திருவீதியுலா வருகின்றன. ஒரே மூர்த்தியைப் பல காலங்களில் செய்து வைத்துள்ளதால் ஒவ்வொரு விழாவுக்கும் எனக் குறிப்பிட்ட திருமேனிகள் உள்ளன.

உள்ளே உறைகின்ற தேவன், வெளியே உலவி வருவதற்கான வாய்ப்பை இத்திருமேனிகள் அளிக்கின்றன. கோயிலில் கல்லால் பிரதிட்டை செய்யப் பெற்ற ஒவ்வொரு மூர்த்திக்கும் அதன் பிரதிநிதியாகச் செப்புத் திருமேனிகள் இணையாக இருக்கின்ற மரபு தொன்று தொட்டே இருந்து வருகின்றது.

இறைவனைக் கோயிலுக்கு வெளியில் உள்ள மக்களும் தரிசித்துப் பேறு பெற வேண்டும் என்ற உணர்வில் இத்திருமேனிகள் செய்யப் பெற்று விழாக்கள் நடத்தப் பெற்றன. இத்தலம் மாதந்தோறும் பல விழாக்களைக் கொண்டுள்ளதால் எல்லாத் திருமேனிகளும் அழகோடு அழுக்கின்றி விளங்குகின்றன.

எல்லாத் திருமேனிகளுக்கும் மரக் கேடயம் போன்ற இருக்கைகள் தனித்தனியே உள்ளன. சில திருமேனிகட்குத் தங்கக் கவசங்களும் உள்ளன. விநாயகர், பிட்சாடணர் ஆகிய மூர்த்திகள் தங்கக் கவசங்களைக் கொண்டுள்ளனர். விசேட நாட்களில் இவை பயன்படுத்தப் பெறும். பள்ளியறை அண்ணுமலையாரைத் தவிர பிற திருமேனிகள் யாவும், எல்லாக் கோயில்களிலும் உள்ள சிறப்புடன் திகழ்கின்றன. பெரும்பாலானவை ''பொக்கிஷ மேடை'' எனப்படும் மண்டபத்திலேயே உள்ளன. பெரிய சோமாஸ்கந்தர், தனி அம்மன், அர்த்த நாரீசுவரர் போன்றன பின் திருச்சுற்று மண்டபத்தில் உள்ளன. அம்மன் கோயிலில் பராசக்தி முதலிய இறைவியர் திருமேனிகள் உள்ளன.

சில திருமேனிகள் உத்சவங்களிலும் பூசையிலும் பயன்படுத்தப் பெறுமல் இருக்கின்றன. அவற்றில் ஏதோ பின்னம் இருப்பதாகக் கருதுகின்றனர் போலும். ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே வெளி வருகின்ற திருமேனிகள் அறுபத்துமூவர், அர்த்தநாரீசுவரர் ஆகியன.

1. கணபதி :

வழக்கமாக நின்று கொண்ட நிலையில் மேல் வலது கரத்தில் அங்குசத்தையும் மேல் இடது கையில் பாசத்தையும், கீழ் வலதுகரத்தில் தந்தத்தையும் இடது கரத்தில் மோதகத்தையும் கொண்டுள்ளார். பின்னே சிரச் சக்கரமும் முன்னே துதிக்கையில் மணியும் உள்ளன. முழங்கால் வரை ஆடை உள்ளது. அழகிய தோற்றம். சுமார் 2 அடி உயரம். 12-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். எல்லா விழாக்களிலும் பயன்படுத்தப் பெறுகிறது.

2. பிரதோஷ நாயகர் :

ஸ்ரீமூல நாயகர் என்றும் அழைக்கப்படுபவர், ஒரே பத்ர பீடத்தில் சந்திரசேகர மூர்த்தியும் அருகில் அம்மனும் நின்ற நிலையில் உள்ளனர். சிவபெருமான் மழு, மான், அபயம் கொண்டு இடக் கையால் அம்மனை அணைத்தும் காணப்படுகின்றார். 2 அடி உயரமுள்ள இத்திருமேனி

15 அல்லது 16 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த தாக இருக்க வேண்டும். இத்திருமேனி பிரதோஷ காலங்களில் ஆலயத்திற்குள்ளேயே வலம் வருவதற்குப் பயன் படுத்தப் பெறுகிறது. வெளியே எங்கும் எழுந்தருளச் செய்வதில்லே.

3. சுப்பிரமணியர் :

ஆறு கரங்களுடன் முருகன் தேவ சேனுபதி யாக நின்றுள்ளார். ஒரு முகத்துடன் ஆறு கரங்களில் வச்சிரம், சக்தி, குறுவாள், கேடயம், அபயம், சிம்ம கர்ண முத்திரை கொண்டு விளங்குகின்ருர். பத்ர, பத்ம பீடத்தின் மீது நின்றுள்ள இவரின் பின்னே மயில் உள்ளது. பிற வீரக் கழல்கள், வீரச்சன்னம், புரிநூல், உதர பந்தம், பத்ர குண்டலங்கள், கைக்காரை கள் ஆகியன உள்ளன. கண்ணி தேய்ந்த நிலேயில் உள்ளது. இதன் அமைப்பை நோக் கும்போது 11—12ஆம் நூற்றுண்டுக் காலத்து அமைதி தெளிவாகத் தெரிகிறது.

4. வள்ளி :

காதுகளில் பத்ர குண்டலங்களேக் கொண்டு மார்பில் கச்சுடன் டோல அஸ்தமும், பத்ம மும் கொண்டது. நின்ற நிலே. கரண்ட மகுடம்.

5. தெய்வயானே :

கச்சில்லாமல் இடப்புறம் நின்றுள்ள நிலே யில் அல்லியும் டோல அஸ்தமும் கொண்டு மகர குண்டலங்களே அணிந்து காணப்படு கின்றது. மார்பில் பூணூல் இருக்கின்றது. கைகளில் வளேயல், சிலம்பு, மோதிரங்கள் உள்ளன. இடையில் ஆரமும் சிரச் சக்கரமும் இருந்திருக்க வேண்டும்.

இந்தத் திருவுருவத்தின் உயரம் ஏறத்தாழ $3\frac{1}{4}'$—$3'$—$3'$

6. ஹஸ்திரதேவர் :

மிகவும் பிற்காலத்தைச் சேர்ந்த இம் மேனி முன்பக்கம் விஞயகரையும் பின்பக்கம் ரிஷப வாகனரையும் கொண்டு உள்ளது. விழாக் காலங்களில் பலி எழுந்தருள்வாராகப் பயன்படுத்தப் பெறுவர்.

7. சந்திரசேகரர் :

ஜடாமகுடம், மழு, மான், அபய வரதங்களேக் கொண்டு நின்ற நிலே. கணுக் கால்கள் வரை ஆடை, உதர பந்தம், பூணூல், மார்பில் சில அணிகள் காணப் பெறுகின்றன. ஆயுதங்கள் கத்திரி முத்திரையில் தாங்கப் பெற்றுள்ளன. $3\frac{1}{2}'$ உயரமுள்ள இத்திரு மேனி 13ஆம் நூற்றுண்டினதாக இருக்க லாம். விரல் அணிகள், மார்பு ஆரங்கள் எல்லாம் மென்மையாக உள்ளன.

8. சந்திரசேகர அம்மன் :

அருகிலுள்ள அம்மன் (தனியே) கச்சின்றி சிம்மகர்ண, டோல ஹஸ்த முத்திரைகளுடன் நின்ற கோலத்தில் உள்ளார். காதுகளில் மகர குண்டலங்கள் ஒளி விடுகின்றன. இடையில் புது வகையான ஓர் அணியும் காணப் பெறுகிறது. மூன்று அடி உயரம் கொண்டது. இதன் அமைதி பிற்காலச் சோழர் காலத்தை நிணே வூட்டுகின்றது.

9. சந்திரசேகரர் :

15-16 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த மற் ருெரு சந்திரசேகரர் திருமேனி அருகே உள்ளது. இது முன்னேய சந்திரசேகரரை விடச் சிறியது; ஆனதால் இதனேச் சின்ன சந்திரசேகரர் என்பர். சிறப்பாக இந்தத் திருமேனியில் வலக்காலில் 'மணி' உள்ளது. இடையில் சிம்மமுகச் கச்சுக் காணப்படுகிறது. கத்திரி முத்திரையில் உள்ள மான் இரண்டு விரல்களின் மீதும் இரு கால்களே வைத்து நின்ற நிலேயில் காணப்படுகிறது. கையி லுள்ள ரேகை அமைப்பு பிறவற்றில் இருப் பது போலன்றித் தனித்த பாணியிலும் அணி கள் நிறைந்தும் காணப்படுகின்றது. வயிறு இளந்தொந்தியுடன் இருப்பது போல் தெரி கிறது. சிரச்சக்கரம் உள்ளது.

10. சந்திரசேகர அம்மன் :

அருகில் உள்ள இந்த அம்மன் சிம்ம கர்ண மும் டோல அஸ்தமுமாக நின்ற நிலேயில் உள் ளது. கரண்ட மகுடம், கணுக்கால் வரை ஆடை, கச்சு இல்லே. மார்பில் புரிநூல், காலில் வளேந்த கெட்டிக் கொலுசுகள், பாட கம் இன்றைய நிலேயில் இருப்பதுபோல் உள் ளது. சுமார் $2\frac{1}{4}'$ உயரத்துடன் இது விளங்குகின்றது.

நால்வர்

சமயாசாரியார் நால்வரையும் தனிக் கேடயத்தில் இரண்டாம் பிரகாரத்தில் பொக்கிஷ மேடைக்கு எதிரே வைத் துள்ளனர்.

11. அப்பர்:

முழங்கால் வரை ஆடைகொண்டு, அஞ்சல் அஸ்தத்துடன் வலப்புறம் தோளில் உழவாரப் படைசாத்தி நின்றுள்ளார். தோள், கைகளில் மார்பில் உருத்திராக்க மாலைகள் அணி செய்கின்றன. காதில் குழைகள் தொங்குகின்றன. தலையிலும் நெற்றிக்கு மேல் 2 வடம் உருத்திராக்க மாலை உள்ளது.

12. சம்பந்தர்:

இரண்டு கரங்களிலும் தனித்தனித் தாளங்களை ஏந்தியுள்ளார். ஜடாமகுடம் கொண்டை போல் உள்ளது. மார்பில் பூணூலும், டாலர் மாலையும், முழங்கால் வரை ஆடை, காலில் சிலம்பு ஆகியன உள்ளன.

13. சுந்தரர்:

தலைக்கொண்டை முடி, போல் அமைந்து அழகு செய்கிறது. மகர குண்டலங்கள், உதர பந்தம், பூணூல், வாகுவளை ஆகியன உள்ளன. வலக் கை, சிம்ம கர்ண முத்திரை கொண்டுள்ளது. இடக் கை எதன் மீதோ சாய்ந்த நிலையில் உள்ளது. கணுக்கால் வரை ஆடையும் பல் வேறு அணிகளும் உள்ளன.

14. மாணிக்க வாசகர்:

ஜடா கேசத்துடன் தலையில் உருத்திராக்க மாலை அணி செய்கிறது. உச்சிக்குடுமி காணப்படுகிறது. ஆடை முழங்கால் வரை உள்ளது. பூணூல் அணிந்திருக்கிறார். சின் முத்திரையையும் அக்க மாலையைக் கொண்டு இடக்கையில் சுவடி உள்ள நிலையும் காணப் படுகிறது. விரல்களில் மோதிரம் அணிந்திருக் கிறார். ஓலையில் நமசிவாய என்று எழுதப்பட் டுள்ளது.

நால்வரின் திருமேனிகளும் பத்ர, பத்ம பீடங்களில் நின்றுள்ளன. சுமார் 2½, 2, 2½, 2¼ அடி உயரம்.

15. அர்த்த நாரீசுவரர்:

திருவாசியுடன் இணைந்து பத்ரபத்ம பீடங்களின் மீது நின்ற நிலையில் உள்ளது. தலை முழுவதும் ஜடாமகுடமாக உள்ளது. மழு, அல்லி, அபய அஸ்தங்களைக் கொண்டு இடது கீழ்க்கரத்தை இடையில் சேர்த்தும் சாய்ந்து நின்றுள்ளது. இரண்டு காதுகளிலும் மகர குண்டலங்கள் உள்ளன. சன்ன வீரம், பூணூல் சிரச் சக்கரங்கள் உள்ளன. இடையில் வலப்புறம் முழங்கால் வரையும் இடப்புறம் கணுக்கால் வரையும் புலி ஆடை உள்ளது. இடப்புறத்தில் பெண் மார்பாக உள்ளது. கழுத்திலுள்ள வளையங்கள் லேசாக அணிவிக்கப்பட்டது போல் உள்ளது. சுமார் மூன்றரை அடி உயரம்.

சுவாமி புறப்பாட்டில் இத்திருமேனி பயன் படுத்தப் பெறுவது இல்லை. கார்த்திகை சோதி தரிசனத்தின் போது மட்டும் பஞ்சமூர்த்திகளுக்கு (உட் பிரகாரத்திலேயே) ‘உமைக்கு இடப்பாகம் தந்ததைக் காட்சி’ கொடுத்து விட்டு உடனே உள்ளே சென்று விடும். இதன் வடிவ அமைப்பும் அணிகளின் அமைதியும் இது 12-13 ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கும் என்பதைக் காட்டுகின்றன.

16. சிறிய சோமாஸ்கந்தர்:

சுவாமி பத்ம பீடத்தில் சுகாசன நிலையில் அமர்ந்து மழு, மான், அபய வரத முத்திரைகளைக் கொண்டுள்ளார். ஜடாமகுடம், மகர பத்ர குண்டலங்கள். ஜடா மகுடத்தில் கபாலம், அரவு, சந்திரன் கங்கை ஆகியன உள்ளன. கால்களில் கைவிரல்களுக்கு உரிய மோதிரங்கள் காணப்படுகின்றன.

அம்மன் அருகே அமர்ந்து, சிம்ம கர்ணமும் வரத முத்திரையும் கொண்டுள்ளது. கிரீட மகுடம் கச்சுஆகியன இல்லை. இடக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளது. முடிக்குக் கீழ், தலைமயிர்கள் ‘வகிடு எடுத்து’ அழகாகக் காட்சி தருகின்றன.

இவர்களுக்கிடையே தனியே முன்வரிசையில் நின்ற நிலையில் கந்தர் காணப்படுகின்றார். இரண்டு கைளிலும் குமுதமலர்களை ஏந்தி யுள்ளார். காலில் அணியும் அணிகள் காதில், உள்ளன. ஆடை இல்லை. சுமார் 1½' உயரம் இருக்கும். கந்தர் பத்ம பீடத்திலும்:

‘திருவணுமலை

சுபறமணியர், என்றும்

சுவாமி பீடத்தில்

‘திருவணுமலைனுயகர’ என்றும்

அம்மன் பீடத்தில்

‘ திருவணுமலை வுமனுமை ’

என்றும் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன.

ஒவ்வொன்றும் சுமார் 2' உயரம்.

17. தனி அம்மன் :

பத்ம பீடத்தில் நின்றநிலை. சிம்ம கர்ண டோல அஸ்தங்களுடன் உள்ளது. கணுக் கால்வரை ஆடை சிரச் சக்கரம் உள்ளது. மகர குண்டலம், கிரீட மகுடம். கச்சுஇல்லை. பூணூல்—தால், 2 மணிவடம் காணப்படுகின் றன. கால்களில் பாடகம், கொலுசு ஆகிய னவும் கைகளில் வாகுவளை, காரைகள், விரல் மோதிரங்கள் ஆகியவையும் காணப் படுகின்றன. சுமார் 3½′ உயரம் கொண்டது. இதன் அழகே தனி! இதன் பீடத்திலும் சில எழுத்துக்கள் உள்ளன. எழுத்துக்களின் நிலையையும் திருமேனி அமைதியையும் காணும் போது இவை 13ம் நூற்றுண்டினதாக இருக்க லாம் என முடிவு செய்யலாம்.

இத்திருமேனி ஆனி, மார்கழி பிரம்ம உத்சவங்களின்போது வெளியே புறப்படுகிறது. முதல் திரு விழாவில் இரண்டு வேளையும் ஐந்தாம் திருவிழாவில் மாலை நேரத்தில் மட்டும் இது வெளியே புறப்படும். பிற உத்சவங் களில் பெரிய சோமாஸ்கந்தரே பயன்படுத்தப் பெறுகிறது.

18. பெரிய சோமாஸ்கந்தர் :

வழக்கமாக அமர்ந்த நிலையில் மழு, மான், அபயம் கொண்டு சிம்ம கர்ண முத்திரையை யும் கொண்டு விளங்குகின்றார். ஜடா மகுடம், பத்மபீடம் மட்டும் தனி அமைப்பு. உதர பந்தம், புலி ஆடை உள்ளன.

அம்மன் கரண்ட மகுடத்துடன் இடக் காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளாள். அல் லியும் வரதமும் கொண்டு விளங்குகின்றாள். நிமிர்ந்து செம்மாந்து அமர்ந்துள்ள அழகு தனிச்சிறப்பு உடையது. கச்சு இல்லை.

கந்தர் பத்ம மலர்களை இருகரங்களிலும் ஏந்தியுள்ளார். இடையில் மணி வடம் உள்ளது. பத்ர குண்டலங்கள் அணி செய்கின்றன. பிரதான சோமாஸ்கந்தர் இதுவே. இதற்கென வைரமுடி வைர அஸ் தம் போன்ற பல அணிகள் உள்ளன.

19. தனி அம்மன் :

சுமார் 4′ அடி உயரத்தில் பத்ர பத்ம பீடங்களின் மீது நின்றுள்ள நிலை. முன்னுக் கிச் சாய்ந்திருப்பது போன்ற ஒயில் எதையோ பிடித்துக்கொண்டிருப்பது போன்ற முத்திரை யும் டோல அஸ்தமும் கொண்டு கரண்ட மகுடம், மகர குண்டலம் சிரச் சக்கரம் கச்சில்லாமல் உள்ளது. முழங்காலுக்குக் கீழே யும் தொங்கும் அளவு, கை மிக நீண்டுள்ளது. இடக்கை விரல்கள் சேர்ந்துள்ளது போலக் காட்சி தருகின்றன.

மூன்று திருமேனிகளின் முகத்திலும் அற் புதமான சிரிப்பைக் காண முடிகிறது. இது பக்தர்களுக்குப் பரவசமூட்டும் என்பது உறுதி. இத் திருமேனிகளின் அமைதி 12-13ம் நூற்றுண்டைக் குறிக்கின்றது.

கார்த்திகை மாதத்துப் பிரம்ம உத்சவக் காலத்திலும் தைமாதம் இரண்டாம் நாள் நிகழும் திருவூடல் விழாவிலும் பங்குனி— உத்திர—திருக்கல்யாண விழாவிலும் ஊஞ்சல் உத்சவங்களிலும் சித்திரை வசந்த உத்சவத்தி லும் ஐயங்குளம் சென்று மன்மதனைத் தகனம் செய்யும் விழாவிலும் இத்திருமேனிகள் பங்கு கொள்கிறன.

20. சண்டிகேசுவரர் :

இக்குழுவின் அருகே இத்திருமேனி உள்ளது. சண்டிகேசுவரர் மழு ஏந்தி அஞ்சலி அஸ்தத் துடன் ஜடா மகுடம் கொண்டு விளங்கு கின்றார். பூணூல் அணிந்துள்ளார். கார்த்திகை பிரம்ம உற்சவத்தில் கடைசிநாள் விழா இவருடையதுதான்.

21. விநாயகர் :

அங்குசம், பாசம், தந்தம், உருண்டை கொண்டு நின்ற கோலத்தில் இவ்விநாயகர் உள்ளார். ஆவணி விநாயக சதுர்த்தியிலும் கார்த்திகை பிரம்ம உற்சவம் முதல்நாள் விநாயகர் விழாவிலும் இத்திருமேனி பங்கு பெறும்.

இவற்றிற்கு அடுத்து இரண்டாம் பிரகாரத் தின், மேடையில் (இடப்புறம்) இன்னும் சில திருமேனிகள் உள்ளன.

22. சண்முகர் :

இத்திருமேனி ஆண்டில் ஒரு முறைதான் வெளியே புறப்படுகின்றது. கந்தர் சஷ்டியின் ஆறு நாட்களும் சிறப்பு அபிடேக ஆராதனை உண்டு. ஆறும் நாள் திருவீதி உலா. மயில் மீது சுகாசனமாக அமர்ந்துள்ளார். மயிலின் வாயிலும் கால்களிலும் பாம்பு உள்ளது. 6 முகங்கள் 12 கரங்கள் கொண்டு, வீரக் கழல்கள், சன்ன வீரப்புரிநூல் ஆகியவை அணிந்து விளங்குகின்றார். 12 திருக்கரங் களிலும் முறையே வச்சிரம், சக்தி, அம்பு,

வில், கத்தி, கேடயம், சக்கரம், சேவல் கொடி, மழு, பாசம், அபயம், வரதம் ஆகியன கொண்டுள்ளார். சுமார் 3½' உயரம்.

23. வள்ளி :

டோல பத்ம ஹஸ்தங்களுடன் வழக்கமான நின்ற நிலை. காதில் உள்ள தோடு கல் பதித்தது போன்ற அமைப்புடன் காணப்படு கின்றது.

24. தெய்வயானை :

அல்லி மலரும் டோல அஸ்தமும் கொண் டுள்ளாள். கச்சின்றி உள்ள நிலை. இரண்டும் சிரச் சக்கரங்களுடன் விளங்குகின்றன.

வடிவ அமைதியும் அணிகலன்களும் 15ஆம் நூற்றாண்டை நினைவூட்டுவன.

25. பக்தானுக்கிரக சோமாஸ்கந்தர் :

இங்குள்ள செப்புத் திருமேனிகளிலே இது தான் மிகவும் காலத்தால் பழமையானது. கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திரு மேனி எழிலுடன் விளங்குகின்றது. அமைப்பி லும் இது தனி இடத்தைப் பெறுகின்றது. இது இப்போது எந்த விழாவிலும் வெளி வருவதில்லை. இந்த இடத்திலேயே நிலைத்து உள்ளது. இதில் மற்றொரு சிறப்பு. கந்த ருடன் கணபதியும் சேர்ந்துள்ளார்.

ஜடாமகுடத்தில் நிலவு, அரவு, நெற்றிக் கண்ணி ஆகியனவும், முப்புரி, உதரபந்தம், தொடை வரை ஆடை வலக்காலில் மணி, கழுத்தில் 3 வரி அணிகள் ஆகியன கொண்டு மழு, மான், அபய சிம்ம கர்ண முத்திரை களுடன் விளங்கின்றார்.

அம்மன் சிம்ம கர்ண முத்திரையும் வரத அஸ்தமும் கொண்டு விளங்குகின்றார்.

இடையில் 5' உயரமுள்ள கந்தர் இரு கரங்களிலும் பத்ம மலர்களை ஏந்தி எழி லோடு விளங்குகின்றார்.

சிவபெருமானின் வலப்பக்கம் பீடத்தின் மூலையில் முன்புறமாகத் தவழ்ந்து தாவி வரு கின்ற கணபதியின் அழகு தனி. 1½' உயரமே உள்ளதும் இருகைகளுடன் கூடியதுமான கணபதி மிகவும் அழகாகச் செய்யப் பெற் றுள்ளார். ஒரு கையில் மோதகம் ஏந்தி யுள்ளார். அது மாங்கனியாகவும் இருக்க லாம். இந்த அமைப்பு வேறு எங்கும் காண இயலாதது.

26. தனி அம்மன் :

இதனோடு கூடிய தனி அம்மன் வழக்கம் போல் அல்லி டோல அஸ்தமுடன் கச்சின்றி மகர குண்டலங்களுடன் விளங்குகின்றது. 2½' உயரம் இருக்கலாம்.

27. பிக்ஷாடனர் :

வலப்புறம் மானுக்குத் தளிர் ஊட்டிக் கொண்டு இடப்புறம் குள்ளமான சிறு பூதத் துடன் பிக்ஷாடனர் உலவி வருவதாக அமைந் துள்ளது. உடுக்கை, சூலம், தளிர் கபாலம் ஆகியவற்றைக் கொண்டுள்ளார். சூலம் குறுக் கே பிடிக்கப்பட்ட நிலை (இன்று சூலம் இல்லை) காலில் கட்டையான செருப்பு உள்ளன. ஓர் அடியைத் தூக்கி வைக்கின்ற நிலை. பாடகம், கழல், வலக்காலில் மணி ஆகியன உள்ளன. இடையில் ஆடையில்லை. ஆனால் அரவு சுற்றி யுள்ளது. அதன் படம் இடக்கையின் கீழ் உள்ளது. மானின் கால்களில் சிலம்பும் கழுத் தில் மணியும் காணப்படுகின்றன. சிறுபூதம் 1¼' உயரத்தில் தட்டைத் தாங்கி வருகிறது. விரல் களில் மோதிரங்கள் உள்ளன.

உடுக்கை 'வார்'கட்டுடன் காணப்படுகிறது. ஜடாபாரம், மகரபத்ர குண்டலங்கள், வாகு வளை சிரச்சக்கரம், கழுத்தில் மணிமாலை, வீரச் சன்னம் ஆகியன உள்ளன. தலையில் நடுவில் கபாலமும் வலப்பக்கம் கங்கையும், அரவும் இருக்க இடப்புறம் உன்மத்தமும், பிறையும் உள்ளன. மூன்று அடி உயரம்.

இந்த மூர்த்தி, கார்த்திகை விழாவில் மாலை யில் தங்க வண்ணமேருவில் உலாவருகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் காட்சி தந்த தாகக் கூறுகின்றனர்.

இராசேந்திரன் காலத்திய கல்வெட்டொன் றில் ''இராசேந்திர சோழன் பாரி மகன் ஸ்ரீ சோழ மண்டலத்தில் அருண்மொழிதேவ வள நாட்டு ஆர்வலக் கூற்றத்து ராஜ ராஜ நல்லூர் ராஜ ராஜ நல்லூருடையான் பாண்டி உதைய திவாகரன் திருவண்ணாமலையில் எழுந்தருளு வித்த பிச்சதேவர்க்கு தி ஸ நி முக்காலுந் திருவமுது செய்தருள'' என்ற குறிப்புக் காணப்படுவதால் இது அவன் எழுந்தருளுவித்த திருமேனியாக இருக்கலாம்.

28. அறுபத்து மூவர் :

தில்லை வாழ் அந்தணர் முதல் சேக்கிழார் வரை 63 நாயன்மார்களின் திருவுருவங்களும் முறைப்படி செய்யப் பெற்றுள்ளன. இவற்றின் உயரம் சுமார் $1\frac{1}{4}$' இங்குள்ள இந்த 63 நாயன்மார்களின் செப்புத் திருமேனிகளும் ஆண்டுக்கு ஒரு முறை கார்த்திகை விழா ஆறும் நாளில் காலையில் திருவீதி வலம் வருகின்றன.

29. சேக்கிழார்:

அமர்ந்த நிலையில் கையில் ஓலைச்சுவடிகளுடன் சின் முத்திரை கொண்டு விளங்குகின்றார்.

30. தண்டபாணி :

தண்டம் ஏந்தியுள்ள முருகன் திருமேனி உயரம் ஒன்றரை அடி.

31. கணபதி :

இந்த வகுப்பில் பொல்லாப் பிள்ளையாராகக் கணபதியும் இருக்கின்றார். வழக்கமான நின்ற நிலை.

32. பிடாரி :

சுகாசனத்தில் அமர்ந்த நிலை. தலையில் தீச் சுவாலை. வாயில் கோரைப் பற்கள். உடுக்கை, பாசம், சூலம், கபாலம் ஏந்தியுள்ள இந்தப் பிடாரி $1\frac{1}{4}$' உயரமுள்ளது. 15ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம்.

இவையே அன்றி அம்மன் கோயிலிலும் சில செப்புத் திருமேனிகள் உள்ளன.

33. பராசக்தி :

இது, பெரிய பராசக்தி என்றழைக்கப்படுகிறது. இப்போது விழாக்களில் வெளியே புறப்படுவதில்லை. இருந்த இடத்திலேயே உள்ளது. அங்குசம், பாசம், அபயம், வரதம் கொண்டு நின்ற நிலை. ஜடாமகுடம் சமபங்கத்தில் நின்று, கணுக்கால் வரை ஆடை கொண்டு பல்வேறு அணிகலன்களுடன் விளங்குகின்றது. காதுகளின் மேல் குமுதம் போன்ற அணி காணப்படுகின்றது. $3\frac{1}{2}$' உயரம். கூரிய மூக்கு, புன்முறுவல். 12 அல்லது 13-ஆம் நூற்றாண்டினதாக இருக்கவேண்டும்.

34. பராசக்தி :

இது இந்த இருபதாம் நூற்றாண்டில் வடிக்கப்பெற்றது. ஆடிப்பூர உத்சவத்தில் புறப்பாடு. நவராத்திரி கொலு, தெப்ப உத்சவம் ஆகியவற்றிலும் இது தான் இடம் பெறுகிறது. கச்சின்றி ஜடாமகுடத்துடன் வழக்கமான நிலையில் அங்குசம், பாசம், அபயம், வரதம் கொண்டு விளங்குகின்றது. தாலியின் அமைப்பு இக்காலத்தை நன்றாகக் காட்டும். கழுத்தில் மாங்காய் மாலை உள்ளது.

35 பராசக்தி :

இது 'சிறிய பராசக்தி' என அழைக்கப்படுகிறது. சுக்கிர வாரப் புறப்பாட்டிற்குப் பயன்படுத்தப் பெறுகிறது. $2\frac{1}{2}$' உயரமுள்ளது. நான்கு கால்களில் அங்குசம், பாசம், அபயம், வரதம் கொண்டு கரண்ட மகுடத்துடன் விளங்குகிறது. இதுவும் மிகவும் பிற்காலத்ததே.

36. பள்ளியறை அம்மன் :

மிகவும் பிற்கால அமைப்புடன் விளங்கும் இத்திருமேனி $1\frac{1}{4}$' உயரமே உடையது. கிரீட மகுடத்துடன் கச்சு, மகர குண்டலங்கள், கொலுசு, பாடகம் போன்ற அணிகலன்களுடன் விளங்குகிறது. பள்ளியறைக்கு இந்தத் திருமேனி இரவில் எடுத்துச் செல்லப்பெற்று மீண்டும் காலையில் இங்கே வந்து சேர்ந்து விடுகின்றது.


37. நடராசர் :

முயலகன் மீது வலக்காலை ஊன்றி இடப்பாதம் தூக்கி ஆனந்த நடனம் ஆடுகின்ற நிலை. தலை, பீலி மகுடம், பக்கத்திற்கு நான்கு சடைக் கற்றைகள் உள்ளன. வலக்காலில் மணி, தொடை வரை புலித்தோலாலான ஆடை, உதர பந்தம், இணைந்து முறுக்கிய உத்தரீயம் வட்டமான திருவாசி தீப்பிழம்புகளுடன் இணைக்கப் பெற்றுள்ளது. மகுடத்தில் கபாலம் உன்மத்தம் சந்திரன் ஆகியன உள்ளன. மகர பத்ர குண்டலங்கள், கரங்களில் உடுக்கை, அனல், அபயம், கஜஹஸ்தமாக உள்ளன. உள்ளங்கையில் தீ ஏந்திய வண்ணம் காட்சி தருகிறது. சடையில் கங்கை உள்ளாள். இந்த நடராச விக்கிரகம் சுமார் 5' உயரம் இருக்கும். முகத்தின் புன்முறுவல் அள்ளிப் பருகவேண்டிய ஒன்று! பத்ம பீடத்தின் அடியில்

ரு வ அ தி ரு ந ண ணு க ழ ல
லை பெ ரு . . . . ள

என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. கழுத்தணியில் புலிப்பல் பன்றிக் கொம்பு ஆகியன இணைக்கப்பட்டுள்ளன. நடரா


உத்சவ விக்கிரகங்கள்



நடராஜர் (பெரியது)




சிவகாமி அம்மன் (பெரியது)



பள்ளியறை
சுவாமி (மேரு)



சந்திரசேகரர் (சிறியது)



பிட்சாடனர்




அர்த்தநாரிசுவரர்



சோமாஸ்கந்தர் தனி அம்மன்




துர்க்காம்பாள் (புராதனமான விக்கிரகம்)



நடராஜர் (அணி அண்ணாமலைக் கோயில்)



மாணிக்கவாசகர் (அணி அண்ணாமலைக் கோயில்)



அண்ணாமலையார் : தங்கக் கவசத்துடன்




உண்ணாமுலை அம்மன் : தங்கக் கவசத்துடன்



கால பைரவர்: (வெள்ளிக் கவசத்துடன்)



விநாயகர்: தங்கக் கவசத்துடன்



சுவாமி தேரும் அம்மன் தேரும்

சருக்கு வருடத்தில் ஆறு அபிடேகங்கள் உண்டு. இவற்றுள் ஆனித் திருமஞ்சனமும், ஆருத்திரா தரிசனமும் மிகவும் விசேடமாக ஆயிரக் கால் மண்டபத்திலே கொண்டாடப் பெற்று இத்திருவுருவம், திருமஞ்சனக் கோபுரத் தின் வழி வீதி உலாவாக எடுத்துச் செல்லப் படுகின்றது. இதற்கென தனி ஆபரணங்கள் உள்ளன. பிரம்ம சிரகமாலே விசேடமானது. காலம் 13 ஆம் நூற்ருண்டாக இருக்கலாம்.

38. சிவகாமி :

கையில் எதையோ பிடித்தது போன்றும், டோல ஹஸ்தமும் கொண்டு நின்றநிலே. கழுத்தில் தாலி. முத்து, பொட்டு வடங்கள் உள்ளன. மகரகுண்டலங்கள், கணுக்கால் வரை ஆடை, சிரச்சக்கரம், கரண்ட மகுடம், பல அணிகளும் உள்ளன. $4\frac{1}{2}$' உயரம். இதிலும் இடப்புறத்தில் சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

39. சிறிய நடராசர் :

$2\frac{1}{2}$' உயரம். திருவாசியுடன் வழக்கமான நிலேயில் காணப்படுகிறது.

40. 41. அம்மன், மாணிக்கவாசகர்

42. பள்ளியறைச் சுவாமி :

இங்கு மலேயே இறைவன் வடிவம். ஆகை யால் பள்ளியறைச் சுவாமியும் மலேவடிவின தாக, மூன்று சிகர அடுக்கின்மீது சிவலிங்கம் வீற்றிருப்பதுபோல் ஆக்கப் பெற்றுள்ளது. வேறு எங்கும் காணமுடியாத அமைப்பை யுடையது.

43. போகசக்தி :

2' உயரம். வழக்கமான அம்மன் நிலேயில் வீற்றிருக்கிறது.

கார்த்திகை விரதம்

அறுமுகக் கடவுள் ஆறு குழந்தை வடிவமாகச் சரவணப் பொய்கையில் அருளாடல் புரிந்த காலத்தில், அப்பெருமாஞர்க்குக் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வந்தனர். சிவபெருமான் உமாதேவியாருடன் சரவணப் பொய்கைக் கெழுந்தருளி, உமையம்மையாரைத் திருநோக்கஞ் செய்து "பார்வதி! இப் பொய்கையில் விளேயாடும் உனது ஆறு குழந்தைகளேயுமெடுத்துக் கொண்டு வா!" என்ன, அம்மையார் அவ் வாறு திருவுருவங்களேயும் சேர்த்தெடுத்துச் சிவபெருமானுக்கும் தமக்கு மிடையில் வீற்றிருக்கச் செய்தனர். அதுபோழ்து கார்த்திகைப் பெண்கள் அறுவருஞ் சிவபெருமானேப் பணிந்து நின்ருர்கள். பெருமான் அவர்கள்மீது கருணேபாலித்து "நீங்கள் எமது மைந்தனுகிய முருக னுக்குப் பாலூட்டி வந்தீர்கள். அதுபற்றி உங்கள் புத்திரன் என்னும் பொருள் படக் கார்த்திகேயனென்னும் பெயர் இவனுக்கு வழங்குவதாக. உங்களுக்குரிய கார்த்திகை நாளில் இக் கந்தனேப் போற்றி வழிபடுகின்றவர்கட்கு அழியாப் பேரின்ப வாழ்வைக் கொடுத்தருளுவோம்" என்றருள் செய்தார்.

திருவண்ணாமலை தீப தரிசனச் சரித்திரச் சுருக்கம்

ஸ்ரீ அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சுயம்பிரகாசப் பொருளாக விளங்கும் ஸ்ரீ கைலாசபதியானவர் இந்த வுலகின்கண் ஆங்காங்கு வசிக்கும் ஆத்ம கோடிகளொவ்வொன்று முய்யும்பொருட்டுத் திருவருட்கண் சுரந்து திருக்கோயில் கொண்டிருக்கின்ற பல ஸ்தலங்களுளொன்றாகியும், ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்த சுவாமிகளாலும், ஆளுடையவரசுகளாகிய திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பதிகம் பெற்றுள்ளதும், ஆளுடைய அடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகளால் திருவெம்பாவை, திருவம்மானை பாடியருளியதும், பட்டணத்து சுவாமிகளது வீரியத்தாற் றிருவதாரஞ் செய்தருளிய அருணகிரியார் திருப்பரங்குன்றின்கண்ணே எழுந்தருளியிருப்பவரும், திருச்செந்தூரின் கண்ணே எழுந்தருளியிருப்பவரும், திருவாவினன் குடியின்கண்ணே எழுந்தருளியிருப்பவரும், திரு வேரகத்தின்கண்ணே எழுந்தருளி யிருப்பவரும், இதுவன்றி மலைகடோறும் விளையாடுதலை நிலைபெற்ற குணத்தையுடைய முருகப் பெருமானிடத்து அன்புடையோராய் திருப்புகழ் முதலிய அநேக பிரபந்தங்கள் பாடியருளப் பெற்றதும், சோழதேச முதலான தேசங்களில் இன்ன இன்ன நாட்டில் இத்தனை இத்தனை ஸ்தலங்களென்று முன்னோராகிய அறிவுடையோர்களேற்படுத்தினக் கிரமப்படியே மகதநாடு அல்லது நடு நாட்டுக்குள்ளிருக்கும் ஸ்தலங்களுள் விசேஷமாகிய திருவண்ணாமலையென்னுந் திவ்விய க்ஷேத்திரமானது கிரேதாயுகத்தில் அக்கினி மலையாகவும், திரேதாயுகத்தில் சுவர்ணமலையாகவும், துவாபரயுகத்தில் தாம்பிர மலையாகவும், கலியுகத்தில் கன் மலையாகவும், திருவுருக்கொண்டு அருணாசலம், சோணாசலம், கௌரிநகரம்,தேசுநகரம், முத்திநகரம், ஞானநகரம், சிவலோகம் என்று இவ்வாறு பல திருநாமங்களுடையதும், ஆன்மகோடிகளை இடைவிடாது இரக்ஷிக்குஞ் சிவபெருமானே கிரிரூபமா யிருப்பதும், பார்வதிதேவியார் திருவவதாரமானதும், திருக்கண் புதைத்ததும், மகிடாசூரமர்த்தனஞ் செய்ததும், இடப்பாகம் பெற்றதும், சந்திரவம்சத்தனாகிய வச்சிராங்கதபாண்டியன் பேறுபெற்றதும் கலாதரன், காந்திசாலி, தவஞ்செய்து பேறு பெற்றதும், அக்கினி வம்சத்தனாகிய வல்லாளராஜன் புத்திர சோகந் தீர்ந்ததும், இந்திர தீர்த்த முதலாகிய அநேக தீர்த்தங்களும், அன்பர்கள் திருமலை வலம் புரிதலும், ஆதித்தனுக்குத் தரிசனம் கொடுத்ததும், சூரிய வம்சத்தனாகிய பிரதத்தராஜனால் அநேக காணிக்கைகள் தரப்பெற்றதும், அஷ்டவசுக்களும் பிரமன் முதலானவர்கள் பாவந்தீர்ந்ததும், புளகாதிபன் பேறு பெற்றதும், நினைக்க முத்திதரும் தலமென்பதும் ஆகமப் புராணத்திற் சொல்லப்படுகின்றது.

எல்லா ஸ்தலங்களும் உடலென்றும், அருணாசல ஸ்தலம் முகமென்றும், அதில் சிவபெருமான் கண்ணென்றும், இத்தலத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுதற் கருமையென்றும், நமது பெருமானாகிய நந்திகேசுவரர் மார்க்கண்டேயமுனிவருக்கு அநுக்கிரகஞ் செய்தார். அக்காலத்தில் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய பிரகாரம் அம்மலையின்மேல் கார்த்திகை மாதத்தில் வருகின்ற கார்த்திகை நக்ஷத்திரத்தில் ஜோதி தரிசனமாகிக் கொண்டு வந்தபாவனையாக இப்போதும் அந்த மலையின்மேல் தீபதரிசனமாகின்றமையால் அத்தினத்தில் இந்திர தீர்த்த முதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்

திருவிழாவும் பூஜையும்

கோயிலில் நடந்த திருவிழாக்களைப் பற்றிப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இராசேந்திரச் சோழ மன்னர் காலத்தில் கார்த்திகைத் திருவிழாவும் பங்குனித் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றன. மூன்றும் குலோத்துங்க மன்னர் காலத்தில் அந்த இரு விழாக்களுடன் தை மாதத்தில் ஒரு விழாவும் நடைபெற்றது. அக்காலத்திலும் கார்த்திகைத் திருவிழாவே முதன்மை வாய்ந்ததாக இருந்தது.

திருவிழாவைக் காணவரும் அடியவர்களுக்கு உணவு வழங்குவதற்குப் பலர் தானங்களை வழங்கியுள்ளனர். கார்த்திகைத் திருவிழாவில் அண்ணுமலையார் திருவேட்டைக்கு எழுந்தருளும் நாளில் அடியவர் பெருந்திருவமுது செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கார்த்திகையின்போது ஆடவல்லார் (நடராசர்) திருமேனிக்குச் சாத்தவும், அவர் எழுந்தருளும்போது தூவச்சாந்து வழங்கவும் கட்டளைகள் இருந்தன.

கார்த்திகைத் திருவிழா, பங்குனித் திருவிழா, தைத்திருவிழா ஆகிய மூன்றிற்கும் கொடிப்புடவை வழங்கத் தரும வணிகர்கள் தானம் வழங்கியுள்ளனர். தைத்திருநாளின்போது, திருவண்ணுமலைக்கு அருகேயுள்ள பலவேறு கோயில்கள் அண்ணுமலையார் கோயிலுடன் தொடர்பு கொண்டிருந்தன. திருவிழாவின் தொடக்கமாகிய கொடி ஏற்றத்திலிருந்து பத்துநாள் வரையிலும் சண்டேசுரரையும் திருஞான சம்பந்தர் முதலிய நால்வரையும் அக்கோயில்களிலிருந்து எழுந்தருளச் செய்வர். அப்போது பரிவாரங்கள் சேவிப்பர்.

உத்தராயன தட்சிணுயன சங்கிரங்களின் போது, ஆயிரம் குடத் திருநீராட்டிற்கும் பெருந்திருவமுதுக்கும் மன்னர்கள் கட்டளைகளை ஏற்படுத்தியுள்ளனர். திருவாதிரையில் ஆடவல்லாரின் (நடராசரின்) நெய் முழுக்கிற்குத்தானம் வழங்கப்பட்டது.

இவையேயன்றி நாள்தோறும் நடைபெற்ற பூசைகளுக்கு வழங்கி இருந்த தானங்களையும் பூசை நிகழ்ச்சிகளையும் பற்றிய விளக்கங்களைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அண்ணுமலைநாதர், உண்ணுமுலை நாச்சியார், பிச்சதேவர் ஆகிய மூர்த்திகளுக்கு வைகறை (திருப்பள்ளி எழுச்சி), காலை, நண்பகல், மாலை, இரவு (அர்த்த சாமம்) ஆகிய வேளைகளில் பூசைகள் நடந்தன. திருமுழுக்கிற்குத் தேவையான நெய் பால் தயிர் சந்தனம் ஆகியவற்றிற்கும், பாலமுது தயிரமுது முதலியவற்றிற்கும் கொடைகள் வழங்கப்பட்டன. கோயில் சந்நிதியில் சந்திவிளக்கும் நந்தா விளக்கும் ஏற்றப்பட்டன.

அண்ணுமலையாருக்கு அதிகாலையில் பஞ்சகவ்வியம் செய்ய நாள்தோறும் பின்வரும், பொருள்கள் அளந்து தரப்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது:

சாணம் (கோமயம்)	ஓர் உழக்கு
கோசலம்	ஓர் ஆழாக்கு
பால்	நாழி உழக்கு
தயிர்	நாழி உரி
நெய்	ஒரு நாழி

அரசியல் அதிகாரிகள் தங்கள் பெயரால் கட்டளைகள் ஏற்படுத்தினர். திருநீற்று வீர மாகத சோழன் சந்திக் கட்டளை, கிருஷ்ண ராயமாராயன் சந்திக் கட்டளை முதலியவற்றைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

செய்து கிரியை வலம் வந்து தங்கள் தங்கள் சத்திக்குகந்தபடி அதிபக்தியுடன் தர்மங்களையுஞ் செய்து அருணுசலேசுரரைத் தொழுது தீபதரிசனஞ் செய்து உள்ளன்போடு துதிப்பவர்கள் அளவிலா சம்பத்தையும் மோக்ஷத்தையும் பெறுவார்கள்.

மனதினுல் வந்தனஞ் செய்து அருணுசலேசுரரையே சிந்தித்துக் கொண்டு மிகுந்த பயபக்தியுள்ளவர்களா யிருத்தல் வேண்டுமென்றும், அந்நாளில் விரதமிருந்து சிவ தரிசனஞ் செய்து ஆலயத்திற்குள்ளே போகின்றவர்களுள் அநுக்கரல்லாதவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதி சைவாசாரியர்களைக் கொண்டு வில்வார்ச்சனை முதலானவைகளைச் செய்வித்தால் தங்கள் கையினுற்செய்த பேறு கிடைக்குமென்றும் பிரமதேவர் சனகரிஷிக்குச் சொன்னுர். ★

(அருணுசல புராணம்: திரு. வி. க. பதிப்பு)

கார்த்திகை தீபத்தின் கதை

பி. ஸ்ரீ

கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று சந்திரன் கிருத்திகை நட்சத்திரத்திலிருக்கும் போது கார்த்திகைதீப விழா கொண்டாடப் படுகிறது. நெருப்பை வழிபடுவது இத்தனிப் பெரு விழாவின் நோக்கம்.

எல்லாம் இறையுருவம். நெருப்பைச் சிறப் பாகச் சிவனுரு என்பர். அழலாடும் பெரு மான் சிவபெருமான்; செந்தீ வண்ணன்.

அழலாட அங்கை சிவந்ததோ ? அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ ?

என்ற திருவாக்கைச் சிவநேசர்கள் நினைவுபடுத் திக் கொள்ளலாம்.

கார்த்திகைத் தீப விழா பண்டைக்காலந் தொட்டு நம் நாட்டில் நிகழ்ந்து வந்திருப் பதாக ஊகிக்கலாம். நச்சினார்க்கினியர் என்ற உரையாசிரியர் தமது தொல் காப்பிய உரையில் (தொல் காப்பியம் என்ற மிகவும் பழமையான தமிழ்இலக் கியஉரையில்) கார்த்திகைத் தீபத்தைக் குறிப்பிடுகிறார். இவ்வுரையாசிரியரை உச்சி மேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் எனப் புகழ்ந்து பேசுகிறார்கள். அத்தகைய தமிழ்ப் பெரும்புலமைத் திறன்வாய்ந்தவர் இவர். 'கார்த்திகைத் திங்களில் (கார்த்திகை மாதத் தில்) கார்த்திகை நாளில் (நட்சத்திரத்தில்) ஏற்றிய விளக்கு' என்பது இவர் வாக்கு.

'கார் நாற்பது' என்ற நூலிலும் கார்த் திகை விளக்கின் பெருமை கூறப்பட்டுள்ளது. திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத்தில் கார்த்திகை விளக்கைத் 'தையலார்' கொண் டாடும் விளக்கீடு என்று குறிக்கப்பெறுகின் றது. கார்த்திகைத் தீப விழா கொண்டாடு வதில் தமிழ்ப் பெண்களுக்கு ஒரு தனி மகிழ்ச்சி. விளக்கீடு காணாமல் போய் விட் டாயோ பூம்பாவாய்? என்ற பொருள்படத் திருஞான சம்பந்தர் தம் பூம்பாவைப் பதிகத் தில் பாடியிருப்பது சிவ பக்தர்களின் நினை வுக்கு வரும்.

தமிழர்கள் எங்கே குடியேறி இருந்தாலும்—மலேசியா, பிஜித்தீவு, தென் ஆப்பிரிக்காவாக இருந்தாலும்—தங்களுடன் தங்கள் மலை விளக்கையும் கொண்டு போயிருக்கிறார்கள்.

இந்த மலை விளக்கே திருவண்ணாமலைக்கார்த் திகைத் தீபப் பெரு விழா.

இத் திருவண்ணாமலையின் பெருமைதான் கொஞ்சமோ!

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை

என்று திருவண்ணாமலையைச் சிறப்பித் துப்பாடுகிறார் ஞானசம்பந்தப் பெருந் தகை. இத்திருப் பாட்டிலே அண்ணா மலையின் அருவித்திரளையும் குறிப்பிடுகிறார். இத் தகைய அண்ணாமலையைத் தொழுவோரின் தீவினை அற்றுப்போகும் என்றுகூடச் சம்பந்தர் சொல்லவில்லை; நல்வினை தீவினை என்ற இரு வகை வினைகளின் பாசமும் அற்றுப்போகும் என்கிறார். தீவினை இரும்பு விலங்கு என்றால் நல்வினை பொன் விலங்கு என்பது நம் தத்துவக் கொள்கை. இந்த இரண்டின் பந்த பாசங்களி லிருந்தும் விலகி நின்று தொண்டாற்று கிறானும் உண்மைத் தொண்டன்.

ஆண்டு தோறும் திருவண்ணாமலையில் கார்த் திகைத் தீப விழா மிகவும் சிறப்பாய்க் கொண்

டாடப்படுகிறது. வேறு சிவன் கோயில்களும் இச்சிறப்பு விழாவைக் கொண்டாடுகின்றன. நாளடைவில் இத்தீப விழாக் கொண்டாட்டம் பெருமாளின் தொண்டர்களையும் வசீகரித்தது. ஆகவே பெருமாள் கோயில்களும் இக்கொண்டாட்டத்தில் ஈடுபடலாயின.

'ஆதியும் அந்தமும் (அடியும் முடியும்) இல்லா அரும்பெருஞ்சோதியைத்தான் பரஞ்சோதி என்கிறது திருவெம்பாவையின் இரண்டாவது பாட்டு. ஐந்தாம் பாட்டு:

மால் அறியா, நான் முகனும்
காணு மலை

என்று வருணிக்கிறது. இறைவன் ஒளிவடிவமாகத் திகழ்கின்றான் என்னும் கொள்கை, எல்லாச்சமயத் தாரும் ஏற்றுக் கொள்ளத் தக்க சிறந்த தொரு பேருண்மையேயாகும். ஒளியை விரும்பாதார் உலகத்தில் உளரோ? ஆதலின் 'கார்த்திகை விளக்கீட்டு விழா' யாவருமே கொண்டாடி, இறைவனை வழிபட்டு உய்யத் தகுந்ததொரு சிறந்த விழாவாகும்.

நில நூலில் நான்கு வகை மலைகள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் நெருப்பினால் உருவாகிய பாறைக் குன்றும் குறிப்பிடப்படுகிறது. இவ்வகைக் குன்றை 'இக்னீயஸ்ராக்' என்ற நிலநூல் அறிஞர் கூறுவர். திருவண்ணாமலையைச் சிவனுக்குரிய பஞ்சபூதத்தலங்களில் அக்கினித்தலம் என்கிறார்கள்.

எத்தனைக் கதைகள்! எத்தனைச் செவிவழிச் செய்திகள் சிறப்பிக்கின்றன அண்ணாமலை தீப விழாவையும் இதன் மனோதத்துவ உட் பொருளையும்.

இவ் வுட் பொருளை உணர்ந்து அண்ணாமலையைத் தொழுவோருக்குத்தான் என்ன அக மகிழ்ச்சி! என்ன மன அமைதி.

ஆடிப்பாடி அண்ணாமலை
கைதொழ ஓடிப்போம்,
நமதுஉள்ள வினைகளே !

என்ற பக்த மனோபாவத்தை மனோதத்துவ அறிஞர்களே புரிந்து கொள்ள முடியும்.

அல்லல் தீர்க்கும்
அண்ணாமலை கைதொழ,
நல்ல ஆயின
நன்மை அடையுமே

என்ற திருநாவுக்கரசரின் வாக்கில் எத்தகைய மனோதத்துவ உண்மையைக் காண்கிறோம்.

கோயிலுக்கு முன் சொக்கப் பனைக் கொளுத்திக் கார்த்திகை தீபம் கொண்டாடுவதில் சிறுவர்களுக்கும் பெரு மகிழ்ச்சி, பெரியவர்களுக்கும் அப்படியே. சொக்கப்பனை சுடர் வீசி ஓங்கி எரியும் அழகு, சாதாரண மனிதர்களையும் கவருகிறது. மனிதருள் முனிவர்களையும் வசீகரிக்கிறது. இக் காட்சி இன்பத்திலே, சிவ பெருமான் சாதுக்களை இம்சித்து வந்த அசுரர்களின் தேர்களை கொளுத்திவிட்டார் என்பது போன்ற புராணக் கதைத் துணுக்குகளும் நினைவிற்கு வருகின்றன.


குளிர்ந்த மாதமாகிய கார்த்திகையில் சொக்கப்பனையின் வெப்பத்தை ஓரளவு அணுகி நின்று அனுபவிக்கக் கூடுமல்லவா? இதை அடிப்படையாகக் கொண்டு ஒரு புராணக் கதைத் துணுக்கும் தோன்றியிருக்கிறது. மகாபலிச் சக்கரவர்த்திக்கு உடம்பிலே ஒரு வகை நோய் ஏற்பட்டதாம். அந்த நோவு—உணர்ச்சியைத் தீபவிழாவைக் கொண்டாடி அத்தீபத்தை அணுகி நின்று, அவன் போக்கிக் கொண்டானும்.

தேவி மகிஷாசுரனுடன் போரிட்ட பின் கார்த்திகை விழாவைக் கொண்டாடித் தன்னைத் தூய்மை செய்து கொண்டதாகவும் ஒரு புராணத் துணுக்கு உண்டு. இத்தீப விழாவைப் புராணமும் கல்வெட்டுக்களும் தெரிவிக்கின்றன.

இராஜேந்திர சோழ தேவனின் கல்வெட்டுச் சாசனம் ஒன்று காளத்தி ஆலயத்தில் காணப்படுகிறது. இதில் தீப விழா பிரஸ்தாபம் வருகிறது.

இந்த விழாவில் தீபங்களுக்கு நெய் வழங்கியதைக் குறிப்பிடுகிறது விஜயநகரப் பேரரசனாகிய வீரப்பிரதாப கிருஷ்ண தேவ மகாராயனின் சாசனம் ஒன்று. இதைத் தேவிகாபுரத்திலுள்ள பிரகதாம்பாள் கோயிலில் காணலாம்.

பனி நீராடும் பெண்கள் தாங்கள் நோற்கும் நோன்பின் ஒரு பகுதியாக அந்நீராட்டத்தை மேற்கொள்கிறார்கள். அப்போது குளிருக்கு மருந்தாகத் தழலாடும் இறைவனின் பேரைச் சொல்லுகிறார்கள் என்கிறது திருவெம்பாவை. தீபவிழாக் கொண்டாடுவதும் பிறவிக் குளிருக்கு ஓர் அருமருந்து என்பது பக்தர்களின் கருத்தாகும்.



* *
*

உ
சிவமயம்
அருள்மிகு அண்ணாமலையார் துணை

திருவண்ணாமலை அருள்தரும் உண்ணாமுலை உடனாகிய அருள்மிகு அண்ணாமலையார் திருக்கார்த்திகை தீப தரிசன பெருவிழாப் பத்திரிகை

திருவிழா	காலை உத்ஸவம்	மாலை, இரவு உத்ஸவம்
ஸ்ரீ துர்காம்பாள் உத்ஸவம் …	… …	விமானம்
ஸ்ரீ பிடாரி உத்ஸவம் …	… … …	ஸிம்ம வாகனம்
அநுக்ஞை விக்நேஸ்வர பூஜை வாஸ்து சாந்தி மிருத் சங்கிரஹணம்	… … …	ஸ்ரீ விநாயகர், வெள்ளி மூஷிக வாகனம்
முதல் திருவிழா …	பஞ்சமூர்த்திகள், வெள்ளி விமானங்கள் …	பஞ்சமூர்த்திகள், மூஷிகம், மயில், அதிகார நந்தி, ஹம்சம், சின்ன ரிஷப வாகனங்கள்
இரண்டாவது …	ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சந்திரசேகரர், விமானம், சூரியபிறை வாகனம் …	பஞ்சமூர்த்திகள், வெள்ளி இந்திர விமானங்கள் முதலியன
மூன்றாவது …	ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சந்திரசேகரர், விமானம், பூத வாகனம் …	பஞ்சமூர்த்திகள், சிம்மவாகனம், வெள்ளி அன்னவாகனம் முதலியன
நான்காவது …	ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சந்திரசேகரர், விமானம், நாக வாகனம் …	பஞ்சமூர்த்திகள் வெள்ளி கற்பக விருக்ஷம், வெள்ளி காமதேனு வாகனம், இதர வெள்ளி வாகனங்கள்
ஐந்தாவது …	ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சந்திரசேகரர், மூஷிகம், கண்ணாடி ரிஷப வாகனம் …	பஞ்சமூர்த்திகள், வெள்ளி மூஷிகம், வெள்ளி மயில், வெள்ளி பெரிய ரிஷபவாகனக் காட்சி
ஆறாவது …	ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சந்திரசேகரர், மூஷிகம், வெள்ளி யானை, 63 நாயன்மார்கள், விமானங்கள்	பஞ்சமூர்த்திகள், வெள்ளி ரதம், இந்திர விமானம், இதர வெள்ளி விமானங்கள்
ஏழாவது …	பஞ்சமூர்த்திகள், மஹாரதங்கள் காலை மணி 6—க்குமேல் 7—00க்குள் விருச்சிக லக்கினத்தில் ரதா ரோகணம், வடம்பிடித்தல் …	பஞ்சமூர்த்திகள் ரதத்திலிருந்து ஆஸ்தான மண்டபம் சேர்தல்
எட்டாவது …	ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சந்திரசேகரர், வெள்ளி விமானம் …	மாலை 4 மணிக்கு தங்கமேருவில் ஸ்ரீ பிக்ஷாண்டவர் உத்ஸவம் இரவு பஞ்சமூர்த்திகள், குதிரை வாகனம் முதலியன
ஒன்பதாவது …	ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சந்திரசேகரர், கண்ணாடி விமானம் …	பஞ்சமூர்த்திகள் கைலாச வாகனம், காமதேனு வாகனம் முதலியன
பத்தாவது …	உத்யாத்பூர்வம் 4 மணிக்கு பரணி தீபம் பகல் பிரம்ம தீர்த்தத்தில் தீர்த்தவாரி …	மாலை 6 மணிக்கு பஞ்சமூர்த்திகள் தங்க விமானங்களில் எழுந்தருளி ஜ்யோதி சொரூப மஹா தீப தரிசனம் இரவு பஞ்சமூர்த்திகள், தங்க ரிஷப வாகனம்முதலியன
	11-ஆம் நாள்	இரவு 7 மணிக்கு ஸ்ரீ சந்திரசேகரர் தெப்பம் உண்ணாமுலை உடனாகிய அண்ணாமலையார் மலைவலம் வருதல்
	12-ஆம் நாள்	இரவு 7 மணிக்கு ஸ்ரீ பராசக்தி அம்மன் தெப்பம்
	13-ஆம் நாள்	இரவு 7 மணிக்கு ஸ்ரீ சுப்பிரமணியர் தெப்பம்
	14-ஆம் நாள்	ஸ்ரீ சண்டிகேஸ்வரர் உத்ஸவம், வெள்ளி ரிஷப வாகனம்

உத்ஸவத்தில் பிரதி தினமும் தேவார திருப்புகழ் பாராயணங்களும் 4-ம் திருவிழா முதல் 9-ம் திருவிழா வரையில் சமயப் பேரவையும் நடைபெறும்



சகம் 1668-ல் பிரதானி வெங்கடபதி ஐயன் 4½ பாரம் எடையுள்ள வெண்கலக் கொப்பரையொன்றைக் கார்த்திகை விழா நாளில் தீபம் ஏற்றுதற்காகச் செய்து வைத்தார். இக்கொப்பரை இப்போது இல்லை. இதைப்போல் வேறொன்று செய்து வைக்கப்பெற்றிருக்கிறது. இதை மேலே படத்தில் காணலாம்.

அண்ணாமலையில் மகா சிவராத்திரி

அடி முடி தேடிய நிகழ்ச்சி சிவராத்திரியன்றுதான் திருவண்ணாமலையில் நடைபெற்றது என்று பொது நூலாகிய கந்த புராணம் கூறும்.

சிவராத்திரிப் புண்ணிய நாளில் நள்ளிரவில் சோதி மயமான லிங்கத்தில் இறைவன் ரிஷபாருடராய்க் காட்சியளிக்கிறார். அன்று நான்கு காலப் பூசை—ஒவ்வொரு ஜாமத்திற்கும் அதாவது மூன்று மணி நேரத்துக்கு ஒரு பூசையாக—பூசை செய்வது சிறப்புடையது. மஹாவிஷ்ணு அலங்காரப் பிரியர்; சிவபெருமான் அபிஷேகப் பிரியர். அதனால் தான் சிவபெருமான் பனிமலையிலிருக்கும் கைலாச பருவதத்தில் பார்வதி தேவியுடன் ரிஷபாருடராக உள்ளார்.

நான்கு காலப் பூசைகளுள் மூன்றும் காலத்தில் சிவபெருமான் லிங்கோத்பவராகக் காட்சி நல்குகிறார். எனவே சிவராத்திரி விழாவுக்கு, திருவண்ணாமலை மிகவும் முக்கியமான தலம்.

திருக்கார்த்திகையும் கணம்புல்ல நாயனாரும்

திருக்கோயிலில் விளக்கு இட்டு நற்பணி செய்தவர்கள் அறிவுச் செல்வம் பெறுவர்.

> ''விளக்கிட்டார் பேறு சொல்லில்
> மெய்ந் நெறி ஞானமாகும்.''

என்பார் அப்பரடிகள்.

ஆதலால் இறைவன் உறையுங் கோயிலில் விளக்கிட்டால் மெய்ஞ்ஞானிகளாக விளங்குவார்கள். இந்தத் திருவிளக்குத் திருப்பணி செய்தவர் கணம்புல்ல நாயனார்.

கணம்புல் என்ற ஒருவகைப் புல்லை அரிந்து வந்து அதனை விற்று அன்புடன் விளக்கேற்றி உள்ளம் உவந்தார்.

சில நாட்களுக்குப் பிறகு கணம்புல், விலை போகவில்லை. அதனால் அப்புல்லையே விளக்காக எரித்தார். எனவே இவர் கணம்புல்லர் என்று பெயர் பெற்றார்.

கார்த்திகை மாதம் திருக் கார்த்திகையன்று கணம்புல்லை ஒரு யாமப்பொழுது எரிக்க நியதிப்படி புல் போதவில்லை. முடிவில்லாத அன்பின் மிகுதியால் கணம்புல்லர் தமது திருமுடியை விளக்காக எரித்தார். புரம் எரித்த புனிதர் அவருக்குக் காட்சி தந்து, மாட்சி மிக்க சிவபதம் வழங்கி அருள் புரிந்தார்.

திருக்கார்த்திகைச் சிறப்பு

" கார்த்திகை விளக்கு மணமுடி சுமந்து
கண்டவர் அகத்திருள் அனைத்தும்
சாய்ந்துநின் றெழுந்து விளங்குறுஞ் சோண
சைலனே கயிலைநா யகனே "

திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக்கானது, அவரவர் இல்லங்களில் ஏற்றப்பெறும் சிறுசிறு விளக்குப்போல் இல்லாமல், உலகம் முழுவதற்கும் இடப்பெற்ற ஒரு பெரும் ஒளி விளக்கு எனும்படிச் சிறந்து திகழ்கின்றது.

" சீர்தரும் மணியின் அணிந்தன எனகட்
செவியும், ஒண் கேழலின் மருப்பும்,
கார்தரும் உலக விளக்குஎனும் சோண
சயிலனே கயிலை நாயகனே, "

திருவண்ணாமலையில் கார்த்திகை மாதத்தில் முழுநிலா நாளில் மலையுச்சியின்மீது பேரொளி விளக்கு ஏற்றப்படும் இனியகாட்சியானது, எவருள்ளத்தையும் கவர்ந்து கொள்ளை கொள்ளும் மாட்சியை உடையதாகும். மலை உச்சியில் தண்மை மிக்க முழு வெண்ணிலாத் தோன்றித் திகழ்தலும் அதனருகே செழுஞ்சுடர்ப் பேராளி விளக்குச் சுடர்விட்டு எரிதலும் கவின்மிகுந்து, காண்பவர் உள்ளத்தைக் களிதுளும்பச் செய்யும். திருவிளக்கின் ஒளிச் செழுஞ்சுடர் செந்தாமரை மலரைப்போலவும் அதனை அடுத்து விளங்கும் முழு வெண்ணிலாவின் தோற்றம் அந்தத்தாமரை மலரின் அருகு சென்று அணையும் அழகிய வெள்ளை அன்னம் போலவும் அமைந்து காணப்பெறுகிறது.

—சிவப்பிரகாச சுவாமிகள்

(சோணசைல மாலையில் பாடியிருப்பதன் கருத்து)


பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் எழுதியுள்ள தமிழ்நாட்டு விழாக்கள் என்னும் நூலில், (ப. 75—82) 'கார்த்திகை விளக்கு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை உளது.

திரு. ச. கு. கணபதி ஐயர் அவர்கள் எழுதி, நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிட்டுள்ள விழாவும் **பூஜையும்** என்ற நூலில் (ப. 37—40) திருக்கார்த்திகை பற்றிய ஒரு குறிப்பு உள்ளது. ●


பரணி, கார்த்திகை மாதத்தில் வந்து அதன் பிறகு வரும் கார்த்திகையே திருக்கார்த்திகையாகும். பரணி தீபம் ஏற்றி, மறுநாள்தான் திருக்கார்த்திகை தீபம் ஏற்றுவர். கார்த்திகை மாதத்தில் 1, 28 இருநாட்களிலும் கார்த்திகை நட்சத்திரம் வருமாயின் 28—ஆம் தேதி தான் திருக்கார்த்திகை நாளாகக் கொண்டாடப் பெறும். ●

விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் ஏற்படுத்திய நவராத்திரி விழா விவரம்
(9 நாட்கள்)


விழா	அலங்காரம்	உபயக்காரர்
1	அருள்தரும் பராசக்தியம்மன் ஆஸ்தான மண்டபத்திலிருந்து வாண வேடிக்கையுடன் எழுந்தருளல்.	திரு. A.N. பாலசுப்பிரமணியன், ஆ. நடேச சாஸ்திரிகள், ஜவுளி, திருவண்ணாமலை.
2	அருள்தரும் ராஜராஜேஸ்வரி	வக்கீல் குமாஸ்தாக்கள், திருவண்ணாமலை
3	,, கெஜலட்சுமி	திருமதி சிவபாக்கியம்மாள், செங்காட்டான்குளம்
4	,, மனோன்மணி	திருமதி பஞ்சவர்ணம்மாள், மேல்முடியனூர்.
5	,, ரிஷப வாகனம்	திரு. K. நாராயண சாஸ்திரி
6	,, மகாலட்சுமி	திரு. P. G. கோவிந்த பட்
7	,, சரஸ்வதி	திரு. கேசவ உடையார், வில்வாரணி
8	,, சிவலிங்கபூஜை	ஜவுளி வர்த்தகச் சங்கத்தார், திருவண்ணாமலை
9	மஹிஷாசுர மர்த்தனி	திரு. பொன்னப்ப முதலியார், C/o ஸ்ரீஈசான்யமடம்
	உண்ணாமுலை அம்மனுக்கு சந்தனக்காப்பு.	பட்டம் சோ. சதாசிவ குருக்கள்




சிவகங்கைத் திருக்குளமும் மலைத்தோற்றமும்




இந்திர தீர்த்தம்-ஆலயம்-மலை




சக்தி விலாச சபா மண்டபம்




ஆயிரக் கால் மண்டபம்




19—5—1967-ல் அணி அண்ணாமலைக் கும்பாபிஷேகம்



துர்க்கை அம்மன் கோயில்



கனி அண்ணையர்க்க கோயில்



ராவ்பகதூர் பெ. க. அ. சித. வீரப்ப செட்டியார், எம். பி. இ.
(1914 முதல் 1939 வரை 25 ஆண்டுகள் அறங்காவலராக இருந்தவர்)

முன்னாள் அறங்காவலர்கள்



திரு. அ. க. ராம. மெ. பி. மெய்யப்ப
செட்டியார்



திரு. கே. வி. எஸ். வி. அழகப்ப
செட்டியார்



திரு. அ. க. அ. சித. வெ. வெங்கடாசலம்
செட்டியார்



திரு. அ. க. அ. சித. வெ. [illegible]
செட்டியார்



திரு. தி. சொ. முருகப்ப செட்டியார்




நாட்டுக்கோட்டை நகரத்தாரின் ஓயாமடம்



நூற்று நான்கு ஆண்டுகட்கு முன்பு 1872-ல் தொடங்கப்பெற்ற மெ. க. அன்னச் சத்திரத்தின் முன்தோற்றம்



யஜுர் வேத பாடசாலை



சா. நா. சா. சாதுக்கள் சத்திரம்



அருணையும் நகரத்தாரும்

திருவண்ணாமலையும் நகரத்தார்களும்

அ.க.அ.சித.அள சிதம்பரம் செட்டியார்

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், தமிழ் நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான இனத்தார்களில் குறிப்பிடத்தக்க சிறு இனத்தவர்களாக இருக்கிறார்கள். எண்ணிக்கை அல்லது மக்கள் தொகையில் இவர்கள் மிகச்சிறிய அளவினர். அப்படி யிருந்தும் இவர்கள் எங்கும் புகழ் பெற்றிருப்பதற்குக் காரணம் இவர்கள் தலைமுறை தலைமுறையாகச் செய்து வந்திருக்கும் தர்மமே. எந்த தர்மத்தைச் செய்தாலும் அதைப் பெரிதாகவும் சிறப்பாகவும் விளம்பரம் இல்லாது பிரச்சாரம் இல்லாது செய்யும் பழக்கம் உடையவர்கள். அடக்கமாகிய இந்தக் குணம் இவர்களிடம் இருப்பதை ஒரு குறை என்று தவறாக எண்ணி, இப்போது வேறு சிலர், நகரத்தார்கள் செய்த தர்மங்களை மூடி மறைக்கவும், தங்களுடைய அதிகாரத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்தி வருகிறார்கள். இத்தகைய தவறான பிரச்சாரம் நல்லவர்களின் உள்ளங்களை யெல்லாம் புண்படுத்துகிறது. இந்தப்போக்கு நீடித்தால் அறஞ் செய்ய முன் வருபவர்கள் கூட சற்று யோசிப்பார்கள். இந்தச் சூழ்நிலையில் இத்தகைய ஒரு கட்டுரையை எழுத வேண்டியது என்னுடைய கடமை ஆகிறது. இக்காலத்தில் கல்வித்தர்மம் மிகவும் முக்கியமாக விளங்குகிறது. தனி ஒருவர் தன் பணத்தைக் கொண்டு ஒரு பெரிய பல்கலைக்கழகம் தொடங்கினார் என்று இந்திய நாட்டில், செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் நிறுவிய அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒன்றை மட்டுமே குறிப்பிட முடியும்.

தில்லைப் பதியுடையான் சிற்றம்பலம் தன்னில்
அல்லும் பகலும் நின்றாடுகின்றான்—எல்லைக்கண்
அண்ணாமலை மன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாறக்கண்டு களித்து

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் அண்ணாமலை வள்ளலின் கொடைச் சிறப்பைப் பாடியுள்ளார்.

வள்ளல் கோட்டையூர் டாக்டர் அழகப்ப செட்டியாரவர்கள், காரைக்குடியில் ஏராளமான கல்லூரிகளையும், சென்னை-கிண்டியில் டாக்டர் அழகப்பச் செட்டியார் காலேஜ் ஆப் டெக்னாலஜியையும் நிறுவி உள்ளார்கள்.

ஆ. தெக்கூர் கலைத் தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் மதுரையில் பல கல்வி நிலையங்களை நிறுவி, ஒரு பல்கலைக்கழகம் மதுரையில் ஏற்படுவதற்கான அடித்தளத்தை அமைத்துள்ளார்கள்.

இவை தவிர இன்னும் ஏராளமான ஆரம்பப் பள்ளிகள், ஆடவருக்கும் மகளிருக்குமான சிறந்த உயர் நிலைப்பள்ளிகள், நல்ல கட்டிட வசதிகளுடன் தமிழ்ப் புலவர் கல்லூரிகள், பட்டப் படிப்பு உள்ள ஆடவர் கல்லூரிகள், மகளிர் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் முதலியவற்றை யெல்லாம் ஏராளமாக நகரத்தார்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் முன்னோடியாக, நகரத்தார்கள் தேவாரப் பாடசாலைகளையும், வேதபாடசாலைகளையும் ஏற்படுத்தினார்கள்.

இவற்றில் பயில்பவர்களுக்கு உடையும், உணவும், தங்குமிடமும் கொடுத்து வருவது நகரத்தார்களின் இயல்பு. திருவண்ணுமலையில் ஒரு நூற்ருண்டுக்கு முன் ஏற்பட்ட மெ. க. அன்னச்சத்திரத்தில் பல வெளியூர் மாணவர்களுக்கு உடையும், உணவும், தங்குமிடமும் இன்றும் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. இந்தத் தர்மங்கள் எப்போதும் நின்று நிலைத்து நீடித்து நடந்து வரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருக்கின்றன.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்ற ஒளவையார் வாக்குக்கு ஏற்ப நகரத்தார்கள், ஆலயங்களில் போய்த் தொழுவதோடு மட்டுமன்றி அதற்கு வசதியாக கல்திருப்பணி இல்லாத இடங்களில் கற் கோயில்களைக் கட்டியும், ஏற்கெனவே, கற் கோயில் இருந்த தலங்களில் அவற்றைப் புதுப்பித்தும் வந்திருக்கிறார்கள். குறிப்பாகத் தேவாரம் பெற்ற தலங்களில், நகரத்தார்களுடைய கை வண்ணத்தைக் காணலாம். தமிழ் நாட்டிலுள்ள எந்தப் பெரிய சிவன் கோயிலானுலும், அந்தக் கோயிலின் வளர்ச்சியில் நகரத்தார்களுக்குப் பெரும் பங்கு இருக்கும். மதுரை மீனுட்சி அம்மன் கோயிலை இன்றைய நிலையில் நமக்குத் தந்தவர்கள், அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தாரே. இராமேச்சுரம் இராமனுதசுவாமி கோயிலை 19-ம் நூற்ருண்டின் இறுதியில் மிகப் பெரிய அளவில் புதுப்பித்த பெருமை இராமனுதபுரம் சேதுபதிகளுக்கும், தேவகோட்டை ஜமீன்தார் அழ. அரு. குடும்பத்தாருக்கும், மற்ற நகரத்தார்களுக்கும் உரியது. பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்ருன திருவானைக்கா திருக்கோயில், கானுடுகாத்தான் சா. ராம. சித. சிதம்பரம் செட்டியாரவர்களுடைய பெருமுயற்சியால் திருப்பணி செய்து வைக்கப் பெற்றது. இவ்வாறே சிதம்பரத்தில் நடராஜர் கோயில், சா. ராம. மு. குடும்பத்தாராலும், நகரத்தார்களின் பொருளுதவியாலும் பிற்காலத்தில், திவான்பகதூர் ராமசாமி செட்டியார், ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் ஆகியோராலும் திருத்தமுறத் திருப்பணி செய்யப் பெற்றது. விருத்தாசலம், திருவெண்காடு முதலிய பல கோயில்களும் வயிநாகரம் குடும்பத்தாரின் திருப்பணிகளுள் குறிப்பிடத்தக்கன. சோழ நாடாகிய தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ நூறு கோயில்களில் நகரத்தார்கள் திருப்பணி செய்திருக்கிறார்கள். தொண்டை நாடு, நடு நாடு, கொங்கு நாடு ஆகியவற்றிலும் நகரத்தார்களின் சிவத்தொண்டு சிறந்து விளங்குகிறது.

தமிழ்நாட்டுக்கு அப்பால் ஆந்திரப் பிரதேசத்தில் திருக்காளத்தியிலும், மற்றும் மகாராஷ்டிரம், வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம் ஆகியவற்றிலும் நகரத்தார்கள் திருப்பணி செய்துள்ள கோயில்கள் பல உள்ளன. காசி திருத்தலத்தில் 150 ஆண்டுகளாக அன்ருடப் பூஜைகளை நகரத்தார்கள் தான் சிறந்த முறையில் செய்து வருகிருர்கள் என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே.

இன்னும் கடல் கடந்த நாடுகளான இலங்கை பர்மா, சிங்கப்பூர், மலேசியா, வியட்நாம், செய்கோன், இந்தோனேசியா, மொரீசியஸ் ரி-யூனியன் தீவுகள் ஆகியவற்றிலும் நூற்றுக்கணக்கான கோயில்களைக்கட்டி, இந்து மதத்தையும், இந்தியக் கலாச்சாரத்தையும் பரப்பிப் பாதுகாத்து வருபவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார்களே.

இந்த 1976-ம் ஆண்டில் அமெரிக்க நாடு ஏற்பட்ட இரண்டாவது நூற்ருண்டுவிழாக் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி நியூயார்க் மாநகரில் ஒரு ஹிந்துக் கோயில் கட்டி முடிக்கப்பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. இந்த ஏற்பாட்டிலும் நகரத்தார்களின் பொருளுதவியும் முயற்சியும் மிகவும் முக்கியமாக இருந்து வருகின்றன.

மேலே சொல்லப்பட்டதற்கு ஏற்ப, நகரத்தார்கள், திருவண்ணுமலையிலும் தங்களுடைய தர்மங்களைச் செய்து வருகிருர்கள். நகரத்தார்களுக்கும் திருவண்ணுமலைக்கும் பல நூற்ருண்டுகளாகத் தொடர்பு உண்டு. அண்ணுமலையார் துணை என்றுதான், நகரத்தார்கள், கடிதத்தின் ஆரம்பத்திலும், இறுதியிலும் எழுதுவார்கள். பஸ், ரயில் முதலிய போக்கு வரத்து வசதிகள் ஏற்படுவதற்குப் பல தலைமுறைகள் முன்னரே நகரத்தார்கள் செட்டிநாட்டிலிருந்து மாட்டு வண்டிகளில் புறப்பட்டுப் பல நாட்கள் பிரயாணம் செய்து, திருவண்ணுமலைக்கு வந்திருக்கிருர்கள். இதிலிருந்து அவர்களுடைய பக்தியும் சிரத்தையும் அண்ணுமலையாரிடத்தும் உண்ணுமுலை அம்மனிடத்தும் அவர்களுக்குள்ள ஈடுபாடும் புலனுகும். சிறந்த முறையில் இக்கோயிலை விரிவாக அமைத்து பல மண்டபங்கள் குளங்களை அழகாகவும் காலத்திற்கு ஏற்பவும் நகரத்

தார்கள் உருவாக்கியிருக்கிறார்கள். எதைச் செய்தாலும், மிகச் சிறப்பாகவும், உறுதியாகவும் செய்வது நகரத்தார்களுடைய இயல்பு. ஒரு காசு கூட வீணாகாமலும் சொந்த வேலை போலக் கவனிப்பதும், அனுபவமும், தெய்வ பக்தியும் நிறைந்த திறமையான ஸ்தபதிகளையும், மற்றும் தொழிலாளர்களையும் நியமித்து நகரத்தார்கள் உடனிருந்து மேற்பார்ப்பதும் சிவன் சொத்துக் குல நாசம் என்பதை உணர்ந்து அதற்கு ஏற்பக் கோயில் காரியங்களைச் செய்வதும் நகரத்தார்களுடைய பழக்கம் ஆகும்.

திருவண்ணாமலையில் நடைபெறும் திருவிழாக்கள் மிகவும் புகழ் பெற்றவை. இவ்விழாக்களின் போது பயன்படுத்தப்படும் வாகனங்களும், இறைவன், இறைவியருக்கு அணிவிக்கப்பெறும் நகைகளும், நகரத்தார்களின் கொடைகளுள் குறிப்பிடத்தக்கன.

இக்கோயிலில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அ. க. அ. மெ. குடும்பத்தார் சுமார் ஒரு லட்ச ரூபாய் செலவில் மின் விளக்குகளைப் போட்டார்கள்.

கோயிலுக்குள் செய்யப்பட்ட செலவுகள் ஒருபுறம் இருக்க ஓயாமாரி மடம் முதலிய பல மடங்களையும் அன்னச் சத்திரத்தையும் பாடசாலைகளையும் நகரத்தார்கள் திருவண்ணாமலையில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

திருவண்ணாமலையில் நகரத்தார்கள் செய்த மற்ற தருமங்கள் எல்லாம் இந்த மலரில் பலபடச் சொல்லப் பெற்றிருக்கின்றன. இன்றைய விலை மதிப்பை நான் சொல்லாமலே, எல்லோரும் தெரிந்து கொள்ளலாம்.

அடி அண்ணாமலை என்றும், அணி அண்ணாமலை என்றும் சொல்லப்படும் கோயிலை ஆதி அருணாசலம் என்பர். இக்கோயிலை, கோட்டையூர் அ. க. அ. மெ. குடும்பத்தார் மூன்றில் இரண்டு பங்கும், ராம. பெ. வகையினர் ஒரு பங்கும் செலவு செய்து அறுபது ஆண்டுகளுக்கு முன் திருப்பணி செய்து வைத்தார்கள்.

1967-ல் முக்கியமான பழுதுகளைப்பார்த்து கும்பாபிஷேகத்தையும் நல்ல முறையில் நடத்திவைக்கும் பேறு எனக்குக் கிடைத்தமைக்கு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கோட்டையூர் ராவ்பகதூர் வீரப்ப செட்டியார் அவர்களைப்பற்றி அதிகம் குறிப்பிட வேண்டும். அவர்கள் தங்கள் ஆயுள் காலம் முழுவதும் இக்கோயிலின் டிரஸ்டியாக இருந்தும், லட்சக்கணக்கில் தங்கள் சொந்தப் பணத்தையும் மற்றவர்களிடம் வசூலித்தும் செலவிட்டுத் திருப்பணிகளைச் செய்தார்கள். உத்சவங்களைச் சிறப்பாக நடத்திவைத்தார்கள். ஏராளமான சொத்துக்களை இந்தக் கோயிலுக்குச் சேர்த்தார்கள். திருவண்ணாமலை மக்கள், வீரப்ப செட்டியார் அவர்களை என்றென்றும் நன்றியுடன் நினைக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

கோட்டையூர் மெ. க. குடும்பத்தாரும், மற்றும் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் குடும்பத்தினரும், இராமச்சந்திரபுரம் தீ. நா., தீ. சொ., தீ. அ. குடும்பத்தார்களும் ஏனைய நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் திருவண்ணாமலைத் திருப்பணிகளில் பெரும் பங்கு கொண்டிருக்கிறார்கள்.

1976-ல் இப்போது நடைபெற்ற கும்பாபிஷேகத்தை யொட்டி, பல லட்சம் ரூபாய் செலவில் திருப்பணி வேலை மேற்கொள்ளப் பெற்றிருக்கிறது. இதிலும் நகரத்தார்களுடைய பங்கு முக்கியமானது. அறங்காவலர் குழுத்தலைவர் திருவண்ணாமலை டி. வி. சுப்பிரமணியன் செட்டியாரவர்களும் காலஞ்சென்ற சி. வி. சிடி. வேங்கடாசலம் செட்டியாரவர்களும் சில ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் சென்று திருப்பணிக்கு நகரத்தார்களிடம் நிதி திரட்டி வந்துள்ளார்கள். இந்தத் திருப்பணி தொடங்கும் முயற்சியில் காலஞ்சென்ற சி. வி. சிடி. வேங்கடாசலம் செட்டியார் அவர்களும் தமிழ்க்கடல் ராய. சொ. அவர்களும் கொண்டிருந்த அக்கறையையும் ஆர்வத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைப்போமாக.

1903-ம் வருஷத்திலும் *1944*-ம் வருஷத்திலும் அண்ணாமலையார் கோயில் கும்பாபிஷேகத்தை நடத்தியது போலவே, இந்த *1976*-ம் வருஷத்திலும் கும்பாபிஷேகம் நடத்தும் செலவையும் பொறுப்பையும் நகரத்தார்களே மனமுவந்து ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நகரத்தார்களே தங்களுடைய சொந்தச் செலவிலும் மேற்பார்வையிலும் இப்போது செய்திருக்கும் திருப்பணிகள் 'கும்பாபிஷேக ஏற்பாடுகள்' என்ற கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளன.

அண்ணுமலேயார் கோயில், அளவாலும் சிறப்பாலும் பெரியது. இவ்வளவு பெரிய கோயிலேக் கட்டிக் காப்பதற்கு வேண்டிய வருமானம் இல்லாதது ஒரு பெரிய குறை. இந்தக் குறை நீங்க அண்ணுமலேயார்—உண்ணுமுலே அம்மன் திருவருளே வேண்டுகிறேன்.

இந்தக் கோயிலுக்குக் கோர்ட்டாரால் ஏற்படுத்தப் பெற்றிருக்கிற ஸ்கீம்படி, அறங்காவலர் குழுவில் நகரத்தார்களுக்கு ஒரு ஸ்தானம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நகரத்தார்கள் அண்ணுமலேயாரை பக்தி சிரத்தையோடு தொழுது தங்களால் இயன்ற தொண்டுகளேச் செய்ய விரும்புகிருர்களே தவிர நகரத்தார் எவரும் பல ஆண்டுகளாக அண்ணுமலேயார் கோயிலில் அறங்காவலராக இருக்க விரும்பவில்லே.

பெரிய அளவில் இப்போது மேற்கொள்ளப் பட்டிருக்கும் திருப்பணியை அறங்காவலர் குழுத்தலேவராக இருந்து வரும் டி. வி. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் பெரும் பிரயாசையுடன் பல ஆண்டுகளாக அல்லும் பகலும் உழைத்தும் பல இடங்களுக்குச் சென்று அதிகாரிகளேயும், பக்தர்களேயும் சந்தித்து நன்கொடை வசூலித்தும், செய்திருக்கிருர்கள். அவர்களும் அவர்களுக்கு உறுதுணேயாக இருந்து வரும் திரு. மாணிக்கவேலு அவர்களும் ஏனேய அறங்காவலர்களும் யாகசாலே அமைப்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்துத் தளரா ஊக்கத்துடன் இன்றும் தொண்டு செய்து வரும் அறங்காவலர் குழுத்தலேவராக இருந்த திருவண்ணுமலே எஸ். எஸ். வி. எஸ். முத்தையா செட்டியார் அவர்களும், முழு ஒத்துழைப்பைத் தந்துள்ள பொது மக்கள் அனேவரும், நமது மனப்பூர்வமான பாராட்டுக்கு உரியவர்கள் ஆவார்கள். நகரத்தார்களின் சார்பாக அவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆரம்பம் முதல் எங்களே இந்த நற்பணியில் ஈடுபடச் செய்து, உற்சாகப்படுத்தி, ஒவ்வொரு விஷயத்தையும், செவ்வனேயும் சிறப்பாகவும், செய்யும்படியும், தங்களுக்கு இடை இடையே ஏற்படும் சிறு உடல் நலக் குறைவையும் பொருட்படுத்தாது, அருள்மிகு அண்ணுமலேயாரின் திருக்குட நீராட்டு விழாவை, மிகச் சிறப்பாகச் செய்து முடிக்கும் பாக்கியத்தையும், நல்லாசியையும் வற்ருது வழங்கி வரும் கோவிலூர் மடாதிபதி தவத்திரு இராமனுத ஞான தேசிகர் அவர்களுக்கும், தங்களின் பல அலுவல்களுக்கும் மத்தியில் அண்ணுமலேயார் கும்பாபிஷேகக் காரியங்களில் சகல பொறுப்புகளேயும் ஏற்றுத் திறம்படவும் போற்றுவதற்குரிய முறையிலும் செய்து முடித்துத் தந்த கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களுக்கும், திரு. மெ. செ. முத்துராமன் செட்டியாரவர்களுக்கும், தேவகோட்டை அ. ராம. அ. லெ. அ. முவீ. முத்துவீரப்ப செட்டியார் அவர்களுக்கும், எனக்கு உறுதுணேயாக இருந்து, நான் மேற்கொள்ளும் முயற்சிகளே வெற்றியாக முடிக்க உதவிவரும் ராம. அழ. ராம. ராமனுதன் செட்டியார் அவர்களுக்கும் மலர் வெளியிடுவதற்கும் திருக்கல்யாண மண்டபத்தைப் புதுப்பிப்பதற்கும் மிகச் சிரத்தையுடனும் ஆர்வத்துடனும் ஒத்துழைத்து எனக்கு உதவிய திரு. T. N. M. அருணுசலம் செட்டியார் அவர்களுக்கும், தேவாரக் கோஷ்டியைத் தாங்களே சகல செலவுகளேயும் பொறுப்பேற்று அழைத்து வந்து சிறப்புற நடத்தித் தந்த பாகனேரி முத்துப்பழநியப்ப செட்டியாரவர்களுக்கும், யாகசாலே மின்விளக்கு அலங்காரங்களேத் தங்களுடைய கைங்கரியமாக மிகச் சிறப்பான முறையில் செய்து திருக்குட நீராட்டு விழாவை நடத்துவதற்கு உதவிய, திண்டுக்கல் அங்குவிலாஸ் உரிமையாளர்களுக்கும், பொதுவாக திருக்குட நீராட்டு விழா, எல்லா வகையிலும் சிறப்புற நடைபெற, எல்லா உதவிகளும் செய்து தந்த பொது மக்கள் அனேவருக்கும், கட்டிடங்கள் தந்துதவிய பெருமக்களுக்கும், ஸ்ரீ ரமணுசிரமத்துக்கும், எனது மனம் நிறைந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அனேவருக்கும் அண்ணுமலேயார்—உண்ணுமுலே அம்மன் திருவருள் உண்டாவதாக!

மெ. க. அன்னச் சத்திரம்

''தேசு வடிவன் சிவபெருமான்
திகழும் அண்ணு மலைப்பதியில்
வீசும் புகழோ டன்னமிடும்
வியனுர் மெ. க. சத்திரச்சீர்

ஆசை யுடனே சொல்லுவதற்
காரம் பித்து விரிவாகப்
பேசின் அதற்கோர் எல்லையுண்டோ?
பெருமை சொல்லச் சொலவிரியும்''

—''கலைமகள்'' ஆசிரியர்
வாகீசகலாநிதி கி. வா. ஜ.

மெ.க. குடும்பத்தார் கோட்டையூரில் நகரத்தார் இனத்தில் மாற்றூர்க் கோயில் மண்ணூருடையார் பிரிவினர். இவர்கள் நெடுங் காலத்திற்கு முன்னே கோட்டையூரில் ஒரு மடமும், நந்தவனமும், பிள்ளையார் கோயிலும் அமைத்தார்கள். அவை இன்றளவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மேற்கண்ட தர்மத்தைத் தொடர்ந்து திருவண்ணுமலையில் இவர்கள் மெ.க. அன்னச் சத்திரத்தை ஆங்கிரச கார்த்திகை 15-ம் நாள் (28-11-1972) வியாழக் கிழமை நிறுவினுர்கள். இவ்வாறு நிறுவிய பெருமை மெய்யப்ப செட்டியார் மைந்தர் கருப்பன் செட்டியாரின் மக்கள் (1) பொய்சொல்லாமெய்யன் செட்டியார் (2) அழகிய மெய்யன் செட்டியார் (3) வீரன் செட்டியார் ஆகியோரைச் சேரும். இவர்களுடைய வழித்தோன்றல்கள் இந்தச் சத்திரத்தைத் தொடர்ந்து நல்ல முறையில் நடத்தி வருகிறுர்கள்.

இந்தச் சத்திரத்தின் கட்டிடம் ராஜ கோபுரத்திற்கு அருகே, திருவண்ணுமலையிலேயே சிறப்பான இடத்தில் கீழை இரத வீதியில் அண்ணுமலையார் கோயிலை அடுத்துக் கம்பீரமாகக் காட்சி தருகிறது. இதற்கு நிகரான கட்டிடம் திருவண்ணுமலையில் இல்லை. இந்தச் சத்திரத்திற்கு இடந்தேடிய பெருமக்களின் விசாலமான மனப்பான்மை, எண்ணும் தோறும் இன்பம் தருகிறது. எழுந்தவுடன் கதிரவனை நோக்கத்தக்க கிழக்கு முகம்; அகன்ற பெரிய வீதி; வீதி அகலமும் போதாதென மிக விசாலமாக முன்னிடம் விட்டுக் கட்டிய மிகப் பெரிய முகப்பு; சாலைக்கேற்ற சோலை. நுண்ணிய வேலைப்பாடுகள் நிறைந்த மூன்று பெரிய ஹால்களும் உள்ளன.

அந்தக் காலத்தில் ஒன்றரை லட்சம் ரூபாய்க்குக் கட்டிடங்கள் கட்டியும், ரூபாய் ஒன்றரை லட்சத்திற்குப் பசுங்கரை கிராமம் வாங்கி வைத்தும் வைப்பு நிதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். வேத பாடசாலைகள் வைத்து, பதினாறு மாணவர் களுக்கு இனும் சாப்பாடு போட்டு இனாமாகச் சொல்லிக் கொடுத்து வந்தார்கள். மேற்படி மாணவர்கள் அண்ணாமலையார் கோயிலில் காலையிலும் மாலையிலும் வேத பாராயணம் சொல்லிக் கொண்டு வந்தார்கள். இவ்வாறு தொடக்கத்தில், அந்தணர்களுக்கு அன்னம் அளிப்பதே இந்த நிறுவனத்தின் பெரு நோக்கமாக இருந்து வந்தது. இப்பொழுது வேதம் படிக்கப் பிள்ளைகள் வராததாலும், காலத்திற்கேற்ப மக்களின் தேவையையுணர்ந்து கல்வி பயிலும் ஏழை மாணவர் களுக்குத் தங்க இடம் கொடுத்தும், உணவு, உடைகள், புத்தகங்கள் முதலிய யாவும் இலவசமாக வழங்கியும் ஆதரித்து வருகிறார்கள்.

இந்தச் சத்திரத்தில், துறவிகள் பலரும் நீண்ட நெடுங்காலமாக ஆதரிக்கப் பெற்றிருக்கிறார்கள்.

திருக்கார்த்திகை விழா ஆண்டுதோறும் பத்து நாட்களுக்கு நடைபெறும் போது திருவண்ணாமலைக்கு வரும் பெருமக்களுக்கு இங்கு விருந்து உபசாரம் நடை பெறுவதும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சத்திரத்தைச் சேர்ந்த நான்கு பெரு மக்கள் அண்ணாமலையார் கோயிலின் அறங்காவலராக இருந்திருக்கிறார்கள்.

1903-லும், *1944*-லும் மெ.க. குடும்பத்தாரே அண்ணாமலையார் கோயில் கும்பாபிஷேகங்களை நடத்தி வைத்திருக்கிறார்கள். *1976*-ல் நகரத்தார்கள் நடத்தும் கும்பாபிஷேகத்துக்கு, மேற்படி குழுவின் தலைவராக இக்குடும்பத்தைச் சேர்ந்த அ. க. அ. சித. அள. சிதம்பரம் செட்டியார் அவர்கள் பொறுப்பேற்று இனிது நடத்தி வருகிறார்கள்.

அண்ணாமலையாரும் உண்ணாமுலை அம்மனும் திருவீதி உலா வந்தருளும் காட்சி, கம்பீரமான இக்கட்டிடத்தில் இருந்து பார்க்கும் பொழுது இன்னும் சிறப்பாக இருக்கும்.

மெ.க. குடும்பத்தினர் சொந்தமாகச் செய்துவைத்துள்ள வெள்ளி ரிஷப வாகனம் தரணியில் இல்லாத தனி வடிவமைப்பும் பொலிவும் கொண்டு திகழ்வது. நன்கு ஊன்றிக் கவனித்தால் உலகனைத்தையும் தாங்கும் ஒப்பற்ற முழுமுதற் பெருமானைத் தன் முதுகின்மேல் தாங்கும் பேறுபெற்ற பெருமிதச் செருக்கின் வெளிப்பாடு அதன் முகத்தில் தோன்றக் காணலாம்.

திருக்கார்த்திகைப் பெருவிழா—ஐந்தாம் நாளில் அண்ணாமலைப் பெருமான் அந்த ரிஷபத்தின்மீது அமர்ந்தருளும் காட்சியும் ரிஷபத்தின் பக்கலில் பிரமாண்ட மான குடையைத் தூக்கி நிறுத்தும் காட்சியும் பிரமிக்க வைப்பனவாம்.

இச்சத்திரத்தின் நூற்றாண்டு விழா *15-11-1972*ல் மிகச் சிறப்பாகக் கொண் டாடப் பெற்றது. அதையொட்டி தமிழ்க்கடல் ராய. சொ. அவர்களைப் பதிப் பாசிரியராகக் கொண்டு நூற்றாண்டு விழா மலர் வெளியிடப்பெற்றது.

இரண்டாம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் மெ.க. அன்னச் சத்திரம் தொடர்ந்து அதன் பணிகளை இனிது செய்து வருகிறது.



அண்ணாமலையார் துணை

பல்லாயிரம் ரூபாய் வரவு செலவைக் குறிப்பதாக ஒரு கடிதம் எழுதினாலும் அதில் கையெழுத்து இடாமல் ''அண்ணாமலையார் துணை'' என்று கைப்பட எழுதுவது நகரத்தார்களின் பழக்கம். அக்குறிப்பினை அந்த நகரத்தாருடைய கையெழுத்துக்குச் சமமாக நீதி மன்றங்கள் ஏற்றுள்ளன.

திருவண்ணாமலையில் கோயில் கொண்டிருக்கும் அண்ணாமலையாரிடத்தில் நகரத்தார்களுக்கு உள்ள பக்தியும் ஈடுபாடும் அத்தகையன. இன்றைய அண்ணாமலையார் கோயில், நகரத்தார்களின் கைவண்ணத்துக்குச் சான்றாக உளது.

கோயில்மட்டுமா?

நகைகள்

வாகனங்கள்

திருவிழாக்கள்

கட்டளைகள்

மடங்கள், சத்திரங்கள்


கும்பாபிஷேகங்கள்

அனைத்தும் திருவண்ணாமலையில் நகரத்தார் புகழைப் பாடுகின்றன.


ஆற்றிலே போட்டாலும் அளந்து போடுவார்கள் நகரத்தார்கள். செலவு அத்தனையும் அணா, பைசாவாகக் கணக்கு வைத்திருப்பார்கள். சிக்கனமாகவும் செம்மையாகவும் செலவுகள் செய்யப்பெற்று நன்கு பயன்படுத்தப் பெறுகின்றன. வீண் விரயம் சிறிதும் இராது. 1933-ல் அச்சிடப்பெற்ற சில விவரங்களை இங்கே தந்திருக்கின்றோம். அன்று (1933ல்) பவுன் 13 ரூபாயாகவும், வெள்ளி 100 தோலா எடை ரூ. 40க்கும் வைரம் காரட் 150 ரூபாயாகவும் இருந்தது.

இந்த விவரங்கள் 1933ல் அச்சிடப்பட்ட போதிலும், இதில் குறிப்பிடப் பட்ட திருப்பணிகள், நகைகள் முதலியன பெரும்பகுதி 1900-ம் ஆண்டு அளவில் செய்யப்பட்டன. அக்காலத்தில் விலைவாசிகள் இன்னும் குறைவாக இருந்தன.


எனவே, 1976-ல் உள்ள விலை மதிப்பில், திருவண்ணாமலையில் நகரத்தார் செய்திருக்கும் கோயிற் பணிகள் எத்தனை கோடி ரூபாய்க்குச் சமம் என்பதை கணக்கிட்டுக் கொள்ளலாம்.




உண்ணாமுலை அம்மன் கோயில் வாயில்



நவரத்தினங்கள் பொதிந்த கிரீடமும் அபயாஸ்தமும்



அண்ணாமலையார் விமானம் : புனிதநீர் அபிஷேகக் காட்சி



அண்ணாமலையாரின் திருக்கார்த்திகை உத்சவ ஐந்தாம் திருவிழா
ரிஷப வாகனக் காட்சி
(பெ. க. அன்னச் சத்திரத்தின் மண்டபப்படி)

உ
சிவமயம்
அண்ணுமலையார் துணை

திருவண்ணுமலை ஸ்ரீ அருணுசலேஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்கும், அதைச்சேர்ந்த தேவஸ்தானங்களுக்கும்

நாட்டுக்கோட்டை நகரத்தார் அவர்களால் கோட்டையூர் மகா-ள-ள-ஸ்ரீ, கனம் அ. க. ரும. அரு. அருணுசலஞ் செட்டியார் அவர்களிருந்து செய்த

திருப்பணி தர்மங்களின் விபரம்

ஸ்ரீ அண்ணுமலையார் கோவில் திருப்பணி

1. கோட்டையூர். மகா-ள-ள-ஸ்ரீ, அ. க. வகையராக்கள் சொந்த பொருளைக் கொண்டும் நகரத்தார்களிடமும் துகை ரூபா வாங்கி ஸ்ரீ அருணுசலேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் சுவாமி கோவில் அம்மன் கோவில் பழய கோவிலைப் பிரித்து புதிய நாகரீகத்துக்குத் தக்கபடி அணி ஒட்டிக்கால் மண்டபங்கள் போட்டும் ஆலயத்திற்குள் பிரதக்ஷணம் வரும்படியாக பிரகாரங்கள் வைத்து திருப்பணி செய்தும் பரிவார தேவதைகள் வைக்கும்படியாக கட்டடங்கள் கட்டியும் விநாயகர் பழனி ஆண்டவர் கோவில்களையும் புதியதாய் கட்டியும் தளவரிசைகள் போட்டும் அம்மன் கோவிலையும் பழய கோவிலைவிட அதிக பெரிதாயும் பிரதக்ஷணத்திற்குத் தகுந்தாப்போல் அணி ஒட்டிக்கால் மண்டபங்கள் போட்டும் சுவாமி கோவில் அம்மன் கோவில் துஜஸ்தம்பத்தருகில் பெரிய மண்டபங்கள் போட்டும் செய்த திருப்பணி கைங்கரியம் ரூ. 12,00,000 00

2. ராஜா மண்டபம் என்கிற கல்யாண மண்டபம் ராமச்சந்திரபுரம். மகா-ள-ள-ஸ்ரீ தீ. சொ. நா. தீ. அ. வகையருக்கள் வெகு நாகரீக மாக மர வேலைகள் செய்தும், கருங்கல் தூண்களெல்லாம் மார்பிள்ஸ் டோன் மாதிரி பாலிஷ் வேலைகள் செய்தும் தாம்பரத் தகட்டினுல் கொட்டகை போட்டும் லஸ்தர் குளோப்புகளினுல் அலங்கரித்தும் 4 மர பீரோவுக்குள் பெரிய கண்ணுடிகள் வைத்தும் வர்ண வேலைகள் ரொம்ப அழகாய் செய்தும் ஷ மண்டப திருப்பணி கைங்கரியம் ரூ. 50,000 00

3. கோவிலுக்குள்ளிருக்கும் பிர்ம்மதீர்த்த குளத்தை கானுடுகாத்தான் மகா-ள-ள-ஸ்ரீ, வெ. சா. ராஜா சர் அண்ணுமலை செட்டியார் அவர்கள் ஷ பழய குளத்தைப் பிரித்து அகலப்படுத்தியும் ஆழப்படுத்தியும் உள் ளிருந்த கருங்கல் பாரையை ஐம்பர்போட்டு உடைத்தெரிந்தும் அழ

காய் நாலு பக்கமும் கருங்கல்லினுல் படிகள் கட்டியும் திருப்பணி கைங்கரியம் ரூ. 75,000 00

4. கோவிலுக்குள்ளிருக்கும் சிவகெங்கை தீர்த்த குளத்தை கோட்டையூர், மகா-ள-ள-ஸ்ரீ, க. வீ. அள. வகையரு குடும்பஸ்தர்கள் பழய குளத்தை பிரித்து அகலப்படுத்தியும் ஆழப்படுத்தியும் வெட்டியும் கருங்கல்லினுல் நாலு பக்கமும் படித்துறைகள் கட்டியும் திருமாளப்பத்தி மண்டபம் நாலு பக்கமும் கட்டியும் விநாயகர் கோவில் வெகு அழகாய் கட்டியும் வளைகாப்பு மண்டபத்தை புதியதாய் கட்டியும் இரும்பு கிராதிகள் போட்டும் நந்தவனம் வைத்தும் ஷ பிள்ளையாருக்கு பிரதி தினமும் இரண்டு கால பூஜை அபிஷேக நைவேத்தியங்கள் மீ 1-க்கு ரூ. 75 திட்டத்தில் 4-சிப்பந்திகள் வைத்தும் சாஸ்வதமாய் நடந்து வரும்படிக்கு ஏர்ப்பாடு செய்திருக்கும் திருப்பணி கைங்கரியம் ரூ. 1,75,000 00

5. ஷயார் அவர்களால் ஷ விஞயகருக்கு வெள்ளி கவசங்கள் வெள்ளி குத்துவிளக்கு பித்தளை திருவாக்ஷி, பித்தளை பீடம் படி வகையரு செய்து வைத்தது ரூ. 5,000 00

6. சுவாமி அம்பாள் பரிவாரங்களுக்கு தினந்தோறும் ஆச்சி அம்மாள் மூலமாக க. வீ. அள. வகையருவால் கற்பூரம் 7-கிளை வெள்ளி தீபாராதனை தட்டில் இரண்டு காலத்திற்கும் தீபாராதனைக்கு மீ 1-க்கு ரூபா 25 திட்டத்தில் கொடுத்து நடத்திவருகிறுர்கள்.

தளவரிசை செய்தது

7. கோட்டையூர் மகா-ள-ள-ஸ்ரீ அ. க. அ. மெ. வெங்கிடாஜலஞ் செட்டியார் வகையருக்கள் சிவகெங்கை தீர்த்தத்திற்கும் ஆயிரக்கால் மண்டபத்திற்கும் மத்தியில் கருங்கல் பலகையினுல் பெரிய கோபுரம் முதல் வல்லாள மஹாராஜா கோபுரம் வரையில் தளவரிசை போட்டு செய்த கைங்கரியம் ரூ. 20,000 00

8. கோட்டையூர் மகா-ள-ள-ஸ்ரீ அ. க. அ. சித. வெ. நடேசஞ் செட்டியார் அவர்கள் சத்தி விலாசத்திற்கும், பிர்ம்ம தீர்த்தத்திற்கும் மத்தியில் கருங்கல் தளவரிசை போட்டதும் ஆயிரக்கால் மண்டபத்திற்கு தெற்கில் படி கட்டியும் பெரிய கோபுரத்திற்குள் கருங்கல் தளவரிசை போட்டதற்கும் திருப்பணி கைங்கரியம் ரூ. 5,000 00

9. கோட்டையூர் மகா-ள-ள-ஸ்ரீ ருமை. பெ. நாராயணஞ் செட்டியார் அவர்கள் பெரிய கோபுரத்திற்கு வெளியில் 16-கால் மண்டபத்தைச் சேர்ந்தாற்போல் கீழ்புரம் உற்சவகாலங்களில் வாகனங்களில் சுவாமியை எழச்செய்து கச்சி சாத்தும் மண்டபம் கருங்கல் தூண் நிறுத்தி இருபக்கங்களில் பாளக் கல்லினுல் மண்டபம் போட்டும் கல்யாணக் கொட்டகை மாதிரி மரத்தினுல் ரொம்ப அழகாய் சித்திர வேலைகள் செய்தும் தாம்பரத் தகட்டினுல் கொட்டகை போட்டு செய்திருக்கும் திருப்பணி கைங்கரியம் ரூ. 35,000 00

துர்க்காம்பாள் கோவில் திருப்பணி

10. கோட்டையூர் மகா-ள-ள-ஸ்ரீ, அ. க. வகையருக்கள் தங்கள் சொந்த பொருளைக் கொண்டும் நகரத்தார்களிடமும் தொகை ரூபாய் வாங்கியும் மூலஸ்தானம் முதல் கெற்பக்கிரகம் அந்திருளம் மஹா மண்டபம் அலங்கார மண்டபம் நவருத்திரி கொலு அலங்கார மண்டபங்களும் கட்டி திருப்பணி செய்த கைங்கரியம் ரூ. 35,000 00

திருவண்ணாமலை தேவஸ்தானத்தைச்சேர்ந்த ஆதி அருணாசலம் என்கிற அடி அண்ணாமலை தேவஸ்தானம் திருப்பணி

11. கோட்டையூர் மகா-ா-ா-ஸ்ரீ அ. க. அ. மெ. வகையருக்களும் மகா-ா-ா-ஸ்ரீ ருமை. பெ. அவர்களும் சேர்ந்து பழயகோவிலை பூராவும் பிரித்து புதியதாக பிளான்போட்டு சுவாமி அம்மன் கோவில் உள்பட கெற்பக்கிரகம் அந்திராளம் மஹாமண்டபம் முதலியவைகளும் கட்டி பரிவாரங்களுக்கும் கட்டடம் கட்டி சுவாமி அம்பாளையும் பிரதக்ஷணம் செய்யும்படியாக உள் பிரகாரத்தில் மண்டபம் பூராவும் கட்டி கோபுரமும் கட்டி திருமதில்களும் கட்டி அக்கிரகாரம் விடுதியும் கட்டி திருப்பணி செய்த கைங்கரியம் ரூ. 3,50,000 00

12. ஷெயார்கள் அடி அண்ணாமலை சுவாமி அம்பாளுக்கு நாகாபறணமும் வெள்ளி கவசங்களும் பரிவாரங்களுக்கு வெள்ளி கவசங்களும் செய்து வைத்திருப்பதற்கு ரூ. 5,000 00

13. ஷெயார்கள் ஷெ கோவிலுக்கு இரண்டு கால பூஜைக்கு கட்டளைவைத்து மீ 1-க்கு ரூ. 200 செலவு செய்து அபிஷேகம் நைவேத்தியம் வகையருக்களும் சிப்பந்திகளுக்கு பிரசாதப் பட்டுவாடாக்களும் செய்து வருவதுடன் நந்தவனமும் வைத்து பூஜைக்கு புஷ்பமும் கொடுத்து வரும்படி ஏற்பாடு செய்து வேலைக்காரர்களுக்கு சம்பளமும் கொடுத்து நடத்தி வருவதற்கு மீ 1-க்கு செலவு ரூ. 200 00

14. ஷெ கட்டளைகள் சாஸ்வதமாய் நடந்துவரும் பொருட்டு ரூ. 50,000க்கு அடி அண்ணாமலையில் நிலம் வாங்கி வைத்தும் அபிஷேகத்திற்கு காலம் 1-க்கு 2-படி பால் கொடுத்தும் நடத்திவருகிறார்கள்.

15. ஷெயூரில் திருப்பணிக்கு விடுதிகட்டியும் 10-வீடு அக்கிரகாரம் கட்டியும் வேலைக்காரர்களுக்கு குடியிருக்க வீடுகட்டியும் செலவு செய்தது ரூ. 10,000 00

16. காரைக்குடி மகா-ா-ா-ஸ்ரீ ஆ. வி. ப. முரு. முருகப்ப செட்டியார் அவர்களும் சுவாமி சன்னதி அக்கிரகாரத்தில் ரூ. 20000 செலவு செய்து கட்டடம் கட்டியும் கார்த்திகை பிர்ம்மோற்சவ காலத்தில் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் சாப்பாடு போட்டும் தேர் முட்டித்தெருவில் தண்ணீர்ப்பந்தல் வைப்பதற்கு ரூ. 5000 கட்டடம் கட்டியும் வேலைக் காரர்கள் குடியிருக்க ரூ. 5000த்தில் வீடு வாங்கியும் மீ 1-க்கு ரூ. 120 செலவுசெய்து நீர்மோர், ஏழைகளுக்கு கம்பம் கஞ்சியும் நல்ல தீர்த்தங்களும் வருஷம் பூராவும் கொடுத்து 6-வருஷ காலமாய் நடத்தி வருகிறார்கள். சாஸ்வதமாய் நடத்தி வர ஏர்ப்பாடு செய்திருக்கிறார்கள். ஷெயார்கள் திருமஞ்சனகோபுரத்திற்கு மேல்புரம் பேய்க்கோபுரம் வரையில் சிவகெங்கை பிரகார காலி இடத்தில் நந்தவனம் வைப்பதற்காக வாக்களித்திருக்கிறார்கள்.

17. நகரத்தார்கள் ஓயாமாரி மடம் திருவூடல் தெருவில் இடம் வாங்கி ரூ. 15,00,000த்தில் செலவு செய்து சாஸ்வதமாய் கல்மண்டபம் கட்டி கார்த்திகை பிர்ம்மோற்சவ காலங்களிலும் சாதாரணமான காலங்களிலும் வருகிற நகரத்தார்களிடம் ஆண் பிள்ளை 1-க்கு ரூ. 3-12-6, பெண் பிள்ளை 1-க்கு ரூ. 2-0-6, பிள்ளைகளுக்கு ரூ. 0-10-0 வீதமும் மகமை வசூல்செய்து ரொக்க பண்டு ஏர்ப்படுத்தி இருக்கிற பண்டிலிருந்து தொகைகள் எடுத்தும் கார்த்திகை பிர்ம்மோற்சவத்தில் 7-வது உற்சவம் முதல் பூஜை ஆரம்பித்து 11-வது உற்சவம் வரையில் நாள் 5-க்கு பூஜை நடத்தியும் நாள் 1-க்கு சுமார் 6000

ஜனங்களுக்குமேல் 7000 ஜனங்கள் வரையில் வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் அன்னதானம் நடத்தி வருகிறார்கள். ஷெ மானேஜ்மெண்டும் மகா-ா-ா-ஸ்ரீ ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களும் செய்து வருகிறார்கள். ஷெ பூஜையும் ஷெ மடமும் ஏர்ப்படுத்தி 200-வருஷ காலமாய் நடந்து வருகிறது. ஷெ பூஜைக்கும் வருஷம் 1-க்கு ரூபா 6000 வரையில் சிலவு ஆகிறது.

18. ஷெ தர்மத்தில் ஷெ மடத்திலிருந்து கார்த்திகை பிர்ம்மோற்சவத்திற்கு பெரிய கோபுர தீபத்திற்காக ரூ. 35-ம் கிரி நெய் தீபத்திற்காக ரூ. 50-ம் பிரார்த்தனை காணிக்கைக் காக ரூ. 50-ம் தேவஸ்தானத்தில் சாஸ்வதமாய் செலுத்தி நடத்தி வருகிறார்கள்.

திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில்

தினம் 1க்கு நடக்கும் 6 கால பூஜையில் நகரத்தார்களைச்சேர்ந்த செட்டிமார்களால் நடக்கும் 5 கால பூஜை விபரம்

உஷக்காலம்

19. காரைக்குடி மகா-ா-ா-ஸ்ரீ திவான்பஹதூர் ஆ. வி. பள. சிதம்பரஞ்செட்டியார் அவர்கள் தினப்படி பூஜை நைவேத்தியம் வகையராக்களுக்காக சொந்தத்தில் சாமான் கள்விட்டு உஷக்கால பூஜைக்கு வெண்பொங்கல் நைவேத்தியம் செய்து வருகிறார்கள்.

காலசந்தி

20. கானாடுகாத்தான் மகா-ா-ா-ஸ்ரீ வெ. சா. ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் கட்டளை அபிஷேக ஆராதனை பூஜையும் சர்க்கரைப் பொங்கல் தயிரன்னம் நைவேத்தி யத்திற்கு சொந்தத்தில் சாமான்கள்விட்டு தனி மடப்பள்ளி வைத்து அபிஷேக நைவேத் தியம் செய்து ஷெ நைவேத்தியமான பிரசாதங்களை தேசாந்திரிகளுக்கு பட்டுவாடாவும் செய்து வருகிறார்கள்.

உச்சிகாலம்

21. ராமச்சந்திரபுரம் மகா-ா-ா-ஸ்ரீ தீ. அ. சாமிநாதஞ் செட்டியார் அவர்கள் கட்டளை. ஷெயார்கள் சொந்தத்தில் சாமான்கள்விட்டு தனி மடப்பள்ளி வைத்து தயிரன்னம் நைவேத்தியம் செய்து அபிஷேக ஆராதனை செய்து ஷெ பிரசாதத்தை தேசாந்திரிகளுக்கு பட்டுவாடாவும் செய்து வரப்பட்டதற்கு ஏற்படும் செலவுகளைச் செய்து வருகிறார்கள்.

சாயரக்ஷையில் இரண்டாங் காலம்

22. கோட்டையூர் மகா-ள-ள-ஸ்ரீ அ. க. லெ. அண்ணுமலை செட்டியார் அவர்கள் கட்டளை அபிஷேகம் ஆராதனை பூஜை நைவேத்தியம் நடத்தி வருவதற்காக சொந்தத்தில் சாமான்கள்விட்டு நடத்தி வருகிறுர்கள்.

அர்த்தஜாமம்

23. ராமச்சந்திரபுரம் மகா-ள-ள-ஸ்ரீ தீ. சொ. ராமசாமி செட்டியார் அவர்கள் அர்த்தஜாம அபிஷேக ஆராதனை பூஜை நைவேத்தியம் புளியோதரைக்கு சொந்தத்தில் சாமான் கள்விட்டு தனி மடப்பள்ளி வைத்து நைவேத்தியம் செய்து நைவேத்தியமான பிரசாதத்தை தேசாந்திரிகளுக்கு கொடுத்து வருகிறுர்கள்.

அன்னுபிஷேகம்

24. மகா-ள-ள-ஸ்ரீ தீ. சொ. முருகப்ப செட்டியார் அவர்கள் முயற்சியினுல் கூடலூர் குப்புசாமி செட்டியார் ரூ. 1500 தேவஸ்தானத்தில் பண்டு வைத்து அதன் வட்டி வருமானத்தைக் கொண்டு ரூ. 120 திட்டத்தில் 15 வருஷ காலமாய் நடத்தி வரு கிறுர்கள்.

சங்காபிஷேகம்

25. கார்த்திகை சோமவாரத்தில் கோட்டையூர் மகா-ள-ள-ஸ்ரீ அ. க. அ. மெ. வகையரா சங்கு 1008 வாங்கி வைத்தும் வலம்புரிச் சங்கு 1-க்கு ரூ. 500-ல் தங்க குவளைகட்டியும் வெள்ளி குத்துவிளக்கு 2-ம் ஒத்தைமுக கற்பூர தட்டு 1 செய்து வைத்தும் ரூ. 800 செலவு செய்து 30 வருஷகாலமாய் சங்காபிஷேகம் நடத்தி வருகிறுர்கள்.

காலசந்தியில் பால் கொழக்கட்டை நைவேத்தியம்

26. கோட்டையூர். மகா-ள-ள-ஸ்ரீ அ. க. ராம. மெ. சித. சிதம்பரஞ் செட்டியார் அவர்கள் ஸ்ரீ சம்பந்த விநாயகருக்கு சொந்தத்தில் சமான்கள்விட்டு பால் கொழக்கட்டை நைவேத்தியம் செய்து சுவாமிக்கு ஆராதனை செய்து தேசாந்திரிகளுக்கு விநியோகம் செய்து வருகிறுர்கள்.

உச்சிகாலத்தில்

காலையில் கதிரவன் தோன்றுகின்றனனும், அதற்கு முன் ஒளிவீசிக் கொண்டிருந்த உருக்களெல்லாம் தம் ஒளி மழுங்கி ஒளித்து நிற்கின்றனவாம். அதுபோல அண்ணுமலையான் அடிகளை இறைஞ்சி நிற்கும் விண்ணவர் முடிகளின் இரத்தினங்களின் ஒளி மங்குகின்றனவாம். இது வாதவூரர் மதிப்பீடு.

''அண்ணுமலையான் அடிக்கமலம் வந்திறைஞ்சும், விண்ணேர்முடியின், மணித்தொகை வீறு அற்ருற்போல்'' என்கிருர் வாசகர். இன்று இத்திருப் பாடலை மெய்ப்பிக்கும் காட்சியைத், தை, இரண்டில் அதிகாலையில் கோபுர வாயிலில் உண்முணுலையார் அண்ணுமலையார் நெற்றிப்பட்டத்திற்கு நிகரின்றிக் காக்கும் கதிரவன் கதிர்களைக் காண்கின்ரேம். இவ்வொளிமிக்க திருவாபரணங்கள் எத்தனை? அத்தனையும் நகரத்தார் வழங்கினவே. வாகனங்கள் மலையனையவை, செய்யொணுச் சிற்ப நுணுக்கங்கள், என்றும் புதுமைக் காட்சி; உளம் நிறைந்த தருமம், ஒருக்காலும் குறையாத ஊக்கம்.

நகரப் பெருமக்கள் எல்லோருடைய உள்ளமும் இத்தகைய வாயினும், அவ்வப்போதும் அவர்கள் கருத்தை உருவாக்கித் திரட்டித் திருவண்ணுமலையில் சேர்த்த செம்மல்களும் சிலர் உளர். அன்று, கோட்டையூர் அ.க. வேங்கடாசலம் செட்டியாரென்னும் பெருந் தகையார், அயராதுழைத்த அண்ணல் வீரப்ப செட்டியாரவர்கள், க. வீ. அள. மு. இராமநாதச் செட்டியாரென்னும் பொறுமையிலுயர்ந்த புண்ணியர்; பின்னும்,

சிவபணியே தமது சிந்தனையாகக் கொண்ட பெருந்தகை அ. க. அ. சித. அள. சிதம்பரஞ் செட்டியாரவர்கள் முதலிய நகரப் பிரமுகர் உள்ளத்தை உணர்வை உருக்கத்தை செருக்கறியாத செல்வத்தைச் சிந்திக்கவும் செப்பவும் சேடற்குமாகாது.

நகரப் பெருமக்கள் என்றுமே திருவருணையையே தங்கள் தங்கள் சொந்த ஊர்களாக

எண்ணி மகிழும் உளப்பாங்கினை உடையவர்க ளென்பது உண்மை, இவ்வுண்மையுணர்வால் திருவருணைக்குரிய சிறப்புகளத்தனையிலும் நகரத்தார் உரிமையுடையவர்களாகின்றனர்.

அருணையையும் அண்ணாமலையம்மனையும் பற்றி ஒரு பழைய பாடல் உண்டு. அதன் கருத்தை முதலில் குறித்துக் கவியைப் பிறகு காட்டி முடிக்கின்றேன்.

மக்களுடைய கண்களினால்தான் முகத்திற்கு அழகுண்டாகிறது. அக்கண்களுக்கும் முகத்தினால் தான் அழகு உண்டாகிறது, நிலைக்கின்றது. மேலும், அக்கண்களும் முகமும் செய்யும் அழகினால்தான் உடல் முழுதும் சிறப்படைகின்றது. அதுபோல், அண்ணாமலையண்ணலால் நகரம் நல்வாழ்வு பெற்று விளங்குகிறது; நகரத்து அன்பர்களால் அண்ணாமலையண்ணலுக்கும் பெருஞ் சிறப்புண்டாகிறது. இவ்வருணை நாட்டாலும் நகரத்தாலும் நாடும் நகரமும் போற்றும் ''சுகபோக வசந்தராய வைபவ'' மூர்த்தியெனப் பெயர் கொண்ட அண்ணாமலைத் தேவராலும் எல்லாத் தலங்களும் எல்லா மூர்த்திகளும் எல்லா உலகங்களும் இன்பமேயெந்நாளும் துன்பமில்லையென வினையில் பெருவாழ்வுற்றிலங்குகின்றன. இப்பொருள் தரும் பாடலைத் தெரிசிப்போம்.

''கண்ணினால் விளங்கும் திருமுகம் முகத்தால்
கரிய கண், விளங்குமிவ் விரண்டின்
பண்ணினால் விளங்கும் உடலெலாம் அவை
போல் பரமனால் விளங்குமிவ்வருணை
அண்ணல்தான் விளங்கும் அருணைமாநகரால்
பரமனோடருணை யம்பதியால்
எண்ணிலாத் தலங்கள் யாவையும் விளங்கும்
யாதினும் சிறந்ததென்றிசைத்தான்''.

(இது திருநந்தித்தேவர் வாக்காகச் சைவ எல்லப்ப நாவலர் சாற்றியது).

வாழ்க அண்ணாமலையார்! வாழ்க அருணை வள நாடு! வாழ்க நகரப் பெருமக்கள்! வாழ்க வாழ்க வையகம்!

மகா ரதம்

திருவண்ணாமலையிலிருந்த மகா ரதம் பழுதடைந்தபடியால், கானாடுகாத்தான் வெ. சா. நாகப்ப செட்டியார் குடும்பத்தார் ஒரு மகா ரதம் செய்து ஆனந்த ஆண்டு கார்த்திகைத் திங்கள் 5—ம் நாளில் வெள்ளோட்டம் விட்டனர்.

இச்செய்தி ஓயாமடத்தில் பேணி வைக்கப் பெற்றுள்ள வெள்ளோட்டப் பத்திரிகையிலிருந்து தெரிய வருகிறது. இதில் குறிக்கப் பெற்ற ஆனந்த ஆண்டு, *1913*-ஆக இருக்கலாம். *1853* ஆகவும் இருக்கக் கூடும்.

அம்மன் தேர்

அம்மனின் திருத்தேர் பழுது பட்டிருந்ததை, அறங்காவலர்கள் வேண்டிக் கொண்டதற்கு இணங்க, நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இருபத்தையாயிரம் ரூபாய் செலவில் புதிய முறையில் புதுப்பித்து 29-6-1956—ல் மிக விமரிசையாக வெள்ளோட்டம் விட்டனர்.

தங்கக் கவசம்

காரைக்குடி சா. நா. சா. குடும்பத்தார் கலையழகுடன் காட்சி தரும் பிக்ஷாண்டவருக்குத் தங்கக் கவசம் செய்து வைத்துள்ளனர்.

வெள்ளி ரதம்

இராமச்சந்திரபுரம் தீ. நா. நாச்சியப்ப செட்டியார் அவர்களுடைய பொதுக் குடும்பத்திலிருந்து (தீ.சொ., தீ.நா., தீ.அ.) திருவண்ணாமலையில் கல்யாண மண்டபம், பள்ளி அறை முதலிய கட்டுவித்தும், அர்த்தசாமக் கட்டளை என்றும் நடைபெற வைத்தும், வெள்ளி ரதம் செய்து வைத்தும் விழா என்றும் நடைபெற முதல் வைத்தும் இருக்கின்றனர்.

ஆதாரம்:
திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள்
எழுதி 1935-ல் வெளியிட்ட தீ. நா. நாச்சியப்ப செட்டியார் வரலாறு, பக்கம் 57

நகரத்தார் நல்கிய நகைகள்

த. கோ. பரமசிவம்

உட் பொக்கிஷம், வெளிப்பொக்கிஷம் என இரு அறைகள் பொக்கிஷ மேடையில் உள்ளன. அன்றாடம் தேவைப்படும் ஆபரணங்கள் வெளிப் பொக்கிஷத்திலும், திருவிழாக் காலங்களில் மட்டும் சாத்தப்பெறும் விசேட ஆபரணங் கள் உட் பொக்கிஷத்திலும் வைத்துப் பாது காக்கப்படுகின்றன. இவற்றை நிர்வகிக்கத் தனி ஆள் உண்டு. உட் பொக்கிஷத்தின் கதவு 7 பூட்டுகளால் பூட்டப் பெற்று 7 சாவி களில் சிவாச்சாரியர்களிடம் நான்கு, அறங் காவலர் இருவரிடமும் இரண்டும், ஏழாவது சாவி நிர்வாக அதிகாரியிடமும் ஒப்படைக் கப் பெறுகின்றன. இவர்கள் அனைவரும் வந்துதான் விசேட நாட்களில் உள்பொக் கிஷத்தைத் திறந்து ஆபரணங்களை அலங் காரம் செய்பவர்களிடம் ஒப்படைக்கின்ற னர். மீண்டும் வைக்கும்போதும் இப்படியே பதிவுகளைச் சரிபார்த்து வைக்கின்றனர். ஆபரணங்களில் குவிந்துள்ள பொன்னும் மணியும் முத்தும் பவழமும் பச்சையும் கெம்பும், நீலமும், வைரமும் அளவிடற்கரிய மதிப்புடன் திகழ்கின்றன.

இவை அனைத்துமே சென்ற நூற் றுண்டிலும், இந்நூற்றுண்டிலும் **நாட்டுக் கோட்டை நகரத்தார்கள்** செய்து அன் பளித்தவை என்று சொல்லலாம். கல்வெட்டு களில் காணப்பெறும் நகைகள் இன்று இல்லை எனலாம்.

மூலவர்க்கும், அம்மனுக்கும் தனித்தங்கக் கவசங்களும் வெள்ளிக் கவசங்களும் உள்ளன. பரிவார தெய்வங்களான கணபதி, தண்ட பாணி, வேணு கோபாலர், ருக்மணி, சத்திய பாமா, தட்சிணாமூர்த்தி, துர்க்கை போன்ற எல்லாத் தெய்வங்கட்கும் வெள்ளிக் கவசங் கள் உள்ளன. உத்சவ விநாயகருக்குத் தங்கக் கவசம் உள்ளது.

வாகனங்களில் மரத்தாலும், வெள்ளி யாலும் ஆன வாகனங்கள் பல உள்ளன. **ரிஷப வாகனம்** மரத்தில் இரண்டும், வெள்ளி யில் சிறியது, பெரியது என மூன்று வாகனங் களும் உள்ளன. மாத உத்சவங்களிலும், பிற பிரம்ம உற்சவங்களிலும் மரவாகனங்களும், வெள்ளி வாகனங்களும் பயன்படுத்தப்பெறும்.

பெரிய வெள்ளி வாகனங்கள் கார்த்தி கைப் பிரம்ம உத்சவத்தின் போதே பயன் படுத்தப் பெறுகின்றன. இன்னும் **வெள்ளி கற்பக விருட்சம், வெள்ளி யானை, வெள்ளி மூஷிகம், வெள்ளி மயில், வெள்ளிப் பிரபை கள், வெள்ளிக் காமதேனு** ஆகிய வாகனங் களும் உள்ளன. இவையேயன்றி வெள்ளி யால் ஆன விமானங்களும் பல உள்ளன. அவற்றிலும் சிறியன பெரியன உண்டு.

வெள்ளி இந்திர விமானங்கள் சில பெரியன வும் சிறியனவுமாக உள்ளன. வெள்ளித்தேரும் இங்கே உள்ளது. இது கார்த்திகைப் பெரு விழாவில் மட்டுமே பயன்படுத்தப்பெறுகிறது.

மரத்தால் பல வாகனங்களும் உள்ளன. வெள்ளி வாகனங்களுக்கு இணையாகவும், இணையில்லாத சில புதிய வாகனங்களும் உள்ளன. அம்மனுக்கும், சோமாஸ்கந்தருக்கு மெனத் தனித்தனி வாகனங்கள் உள்ளன.

சப்பரங்கள் சில உள்ளன. பெரிய தேர் களும் இரண்டு உள்ளன.

தங்க வைர நகைகளில் மிகச் சிறப்பாக உள்ள சிலவற்றை மட்டும் காண்போம். 96 தலைகள் கொண்ட **பிரம்ம சிரக்கபால** மாலை ஒன்று தங்கத்தாலேயே செய்யப் பெற்றுள் ளது. இந்த அணி தில்லைத் தலத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை. நடராசருக்கு உரிய

சிறப்பான உத்சவ காலங்களில் இது நடராசருக்கு அணிவிக்கப் பெறுகிறது.

பவுன்மாலைகள்: காசு மாலைகள் என்ற பெயரில் பல உள்ளன. முழுப் பவுன்களாலேயே 130 பவுன்களைக் கொண்ட மாலை ஒன்றுள்ளது; விக்டோரியா ராணியின் ஆட்சியில் 1871, 1872 ஆகிய வருடங்களில் அச்சிடப் பட்டுள்ள காசுகளால் இணைத்துச் செய்யப் பட்டது.

இவ்வாறே அரைப் பவுன்களைக் கொண்ட சரடுகள் மூன்றும், காற் பவுன்களைக்கொண்ட சரடுகள் மூன்றும் தூய தங்கத்தால் ஆக்கப் பெற்றுள்ளன.

புரிநூல்களும் தங்கத்தால் உள்ளன. சேரடுகள் கொண்ட புரிநூல் பவித்திர முடியும் நேர்த்தியாக உள்ளது. அம்மனுக்கும், மூலவருக்கும், உத்சவமூர்த்திக்கும் என தங்கத்தால் பல தாலிகள் உள்ளன. அதில் வைரத்தாலி ஒன்றும் நேர்த்தியாக உள்ளது. **கர்ணபத்ரம்** என்ற காதணிகள் ஒவ்வொரு மூர்த்திக்கும் என, கற்கள் இழைக்கப் பெற்ற தங்கத்தில் வைரம் பதித்து பல்வேறு அளவுகளில் உள்ளன.

மூலவருக்குச் சாத்தப்பெறும் வெள்ளி நாகாபரணமே யல்லாமல் விசேட காலங்களில் சாத்தப் பெறும் **தங்க நாகாபரணமும்** ஒன்றுள்ளது. ஐந்து தலை அரவுடன் மூன்று சுற்றுக்கள் கொண்டு இது 12 கிலோ எடை கொண்டது. இரட்டைத் தங்கத் தகடுகளால் இணைக்கப் பெற்றது. இதில் உள்ள தங்கம் மட்டும் 1500 பவுன்கள் ஆகும். அன்றைய (பவுன் 13 ரூபாய்) விலைப்படியே இதன் மதிப்பு 30,000ரூபாய்.

வைர நெற்றிப் பட்டங்கள் சில உள்ளன. சிலவற்றில் கற்கள் இழைக்கப் பெற்றுள்ளன. சிலவற்றில் விபூதிப் பட்டையும், திலகமும் இணைக்கப்பட்டுள்ளது.

சோமாஸ்கந்தருக்குச் சாத்தப் பெறும் **வைர ஹஸ்தமும்** (அபய அஸ்தம்) அதன் கீழ் டாலரும் உள்ளது. மூலவருக்குச் சாத்தப் பெறும் விபூதிப் பட்டத்தின் நடுவில் உள்ள ஒரு வைரக்கல் இன்றைய மதிப்பு ஐம்பதாயிரம் ஆகும்.

அம்மனுக்குச் சாத்தப்பெறும் தங்கத் தாலான **ஜடாநாகம்** ஒன்று வேணுகோபாலர் பசுக்கள், அரவுக்கள் போன்ற சிற்ப வேலைப்பாடுடன் கூடியது; முத்தும், மணியும் இழைக்கப் பெற்றுள்ளது.

கெம்பில் பதக்கமாலைகள் பல உள்ளன. மகரி மாலைகள், மகரி செண்டிமாலை, மாங்காய்மாலை எனப் பல மாலைகளும், சமீப காலத்திய டாலர் செயின் வடங்களும் சில உள்ளன.

இவையில்லாமல் **வைரமுடிகள்** சில உள்ளன. இவற்றில் சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், அம்மன் வைரமுடிகள் நேர்த்தியாகச் செய்யப் பெற்றுள்ளன. தூய தங்கத்தில் வைரம், பச்சை, கெம்பு, நீலம் போன்ற மணிகளையும், முத்தையும் இழைத்து சந்திரன், கங்கை, அரவு ஆகியவற்றை ஜடா மகுடத்தில் வைத்துள்ள நேர்த்தியும் பார்த்துப் பார்த்து மகிழத்தக்கன. அண்ணாமலையார், உண்ணாமுலையம்மன் கிரீடங்களும் தங்கத்தால் ஆக்கப்பெற்று வைரம் இழைக்கப் பெற்றுள.

சில நகைகளில் உபயதாரர் (நன்கொடையாளர்) பெயரும் ஆண்டும் செதுக்கப் பெற்றுள்ளன. பல நகைகளில் அப்படிப்பட்ட குறிப்புகள் இல்லை.

முத்துவடங்கள் சிலவும், இவையில்லாமல் வழக்கமாக உள்ள தங்கமுடிகள் எல்லா மூர்த்திகளுக்கும் உள்ளன. உருத்திராக்ஷ மாலைகள், மணி மாலைகள் என ஆரங்களும் உள்ளன. சில்லறை அணிகளான குழைகள், புல்லாக்கு, மூக்குத்தி, வாகுவளையம், பாதங்கள் போன்ற அணிகளும் உள்ளன. பிரபைகள் சிலவும் தங்கத்தகடு போர்த்தப் பெற்றுள்ளன.

இவையல்லாமல் பூசைப் பொருள்களில் பல தொகுப்புகள் வெள்ளியால் செய்யப் பட்டுள்ளன. வெள்ளிக் குடங்கள், வெள்ளி அடுக்கு, அலங்கார தீபங்கள், தட்டு தீபங்கள், நந்தி, மயில், நாகம், யானை, நரதீபங்கள், உபசாரப் பொருள்களான விசிறி, குடை, கொடி, சாமரம் ஆகியனவும் கும்ப விளக்கும், இன்னும் பல்வகைப் பொருள்களும் வெள்ளியால் செய்யப்பட்டுள்ளன. மடப் பள்ளியிலும், பூசை அறைகளிலும் உள்ள செப்பு, பித்தளை விளக்குகள், சாமான்கள், குத்துவிளக்குகள், நிலைக்குத்து விளக்குகள், பல நிலை அடுக்கு விளக்குகள் என பல பொருள்கள் உள்ளன.


இவை யாவும் 'பகோடா' தோலா முறையில் எடையிட்டு, மணிமுத்துகளை எண்ணிப் பதிவு செய்து பாதுகாத்து வருகின்றனர். இந்த ஆபரணங்களில் மதிப்பு ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு முன் ரூ. 11,78,709-70 என்று குறித்துள்ளனர். இன்றைய விலையில் மதிப்பிட்டால் ஒன்றரைக் கோடியையும் தாண்டிவிடும்.

சில முக்கிய ஆபரணங்கள்


நன்கொடையாளர்	ஆபரணம்
அரிமளம், செ. சித. சிதம்பரம் செட்டியார்.	இரத்தினக்கிரீடம்.
கானாடுகாத்தான், வெ.வீர.வெ.அரு. நாகப்ப செட்டியார் வகையினர்.	தனி அம்மன் இரத்தினக் கிரீடம்.
கோட்டையூர், அ.க.அ.மெ.வெ. குடும்பத்தினர்.	தங்க நாகாபரணம்.
கொத்தமங்கலம், ராம.அரு.வெ. பெத்தாச்சி செட்டியார்	வைர நெற்றிப்பட்டம் இரண்டு.
கோட்டையூர், பெ.க.அ.சித. வீரப்ப செட்டியார்.	சோமாஸ்கந்த மூர்த்திக்கு வைர அபயஹஸ்தம்.
கானாடுகாத்தான், சா.அ. அண்ணாமலை செட்டியார்.	மூலஸ்தான அம்மனுக்குத் தங்கக் கவசம்.
கோட்டையூர், அ.க.ராம.மெ.சித. சிதம்பரம் செட்டியார்.	அண்ணாமலையார் மூலவருக்கு வைர நெற்றிப்பட்டம்.
கொத்தமங்கலம், சி.அ.சி.ராம. ராமன் செட்டியார்.	உத்சவ விநாயகர்க்குத் தங்கக் கவசம்.
தேவகோட்டை, எ.பெரி.கரு.சித. சிதம்பரம் செட்டியார்	கம்பத்திளையனார்க்குத் தங்கக் கவசம்.

சில முக்கிய வாகனங்கள்

நன்கொடையாளர்	வாகனங்கள்
இராமச்சந்திரபுரம், தீ.சொ., தீ.நா., தீ.அ. குடும்பத்தினர்	வெள்ளி ரதமும் கட்டிடமும்
கோட்டையூர், பெ.க.அ.சித. வீரப்ப செட்டியார் மற்றும் நகரத்தார்களும்.	சுவாமி தேர்.
கோட்டையூர், அ.க.அ.மெ. குடும்பத்தினர்.	பெரிய வெள்ளி ரிஷபமும், கட்டிடமும்.
கோட்டையூர், பெ.க.அ.சித. வீரப்ப செட்டியார்	வெள்ளி பெரிய இந்திரவிமானம்.
ஷ	வெள்ளி சின்ன இந்திரவிமானம்
காரைக்குடி, முத்து அரு. குடும்பத்தினர்.	வெள்ளி கற்பக விருக்ஷம், வெள்ளி காமதேனு, கட்டிடம்.
கானாடுகாத்தான் சா.ராம.மு.ராம. ராமசாமி செட்டியார்	அம்மன் தேர்.



திரு ஆபரணங்கள்
மகர கண்டி, மாங்காய் மாலை, காசு மாலை, பிரம்ம சிரசு, சுவாமி அம்மன் கிரீடங்கள்,
கல் இழைத்த அபய வரத ஹஸ்தம்




சுவாமி அம்பாள் — நவரத்தின கிரீடங்கள்




அறங்காவலர்கள்

இடமிருந்து வலம் :

திரு. எம். தருமலிங்கம், திரு. பி. எஸ். மாணிக்கவேலு, திரு. டி. வி. சுப்ரமண்ய செட்டியார் (தலைவர்)
திரு. எ. நடராசன், திரு. எஸ். ஜெயராம பிள்ளை.



கோயில் நிர்வாக அதிகாரியும் ஊழியர்களும்



மலர்க்குழு

தலைவர் : கோவிலூர் மடாதிபதி ஸ்ரீ-ல-ஸ்ரீ இராமநாத ஞான தேசிகர்

இடமிருந்து வலம் : திரு. சோமலெ, திரு. குழந்தையன் செட்டியார், திரு. சிதம்பரம் செட்டியார், திரு. சுப்பிரமணியன் செட்டியார், திரு. அண்ணாமலைச் செட்டியார், திரு. கம்பன் அடிப்பொடி சா. கணேசன், திரு. அருணாசலம், திரு. முத்தையா செட்டியார்




அண்ணாமலையார் கோயில் சிவாசாரியார்கள்

உட்கார்ந்திருப்பவர்கள்:


இடமிருந்து வலம்:— அ. உமாபதிசிவம், டி. கே. மணி குருக்கள், டி. எஸ். சிதம்பர குருக்கள், இ. பி. டி. தியாகராஜ குருக்கள், பட்டம் வெ. கி. இராமலிங்க சிவாச்சாரியார், டி. எம். சுப்ரமண்ய குருக்கள், ரா. சந்திரசேகர குருக்கள், எஸ். வெங்கடேச குருக்கள்

நிற்பவர்கள்:


எஸ். சந்திரசேகர குருக்கள், ஏ. சந்திரசேகர குருக்கள், எ. இராஜகணபதி குருக்கள், ஆர். சதாசிவ குருக்கள், கே. கணபதி குருக்கள்.



இந்திர விமானத்தில் விநாயகர்



கற்பக விருட்சத்தில் சுப்பிரமணியர்




தங்க விமானத்தில் சுவாமியும் அம்மனும்




வெள்ளி ரதத்தில் அம்மன்



திருவூடல் உத்சவத்தில் ஒரு காட்சி



திருவாதிரை உத்சவத்தில் நடராசர்



வெள்ளி வாகனத்தில் சண்டிகேசுவரர்

அண்ணாமலை
அருளிய
ஞானியர்

ஞானம் பிறக்கும் தலம்



நல் முருகேச முதலியார்

பஞ்ச பூதத் தலங்களில் திருவண்ணாமலை தேயுத்தலம் என்று சாத்திரங்கள் கூறும். 'தேயு' என்பது ஒளி. மணிவாசகர் திருவண்ணாமலையில் தனுர் மாதம் விடியற்காலையில் கன்னிப் பெண்கள் இறைவனின் பேர்பாடி நீராடுகையில், அண்ணாமலையாரை ''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி'' என்று போற்றுகிறார். 'ஒளி' என்பது திருவருட் பிரகாசம். அது இறைவனின் திருவடி ஞானத்தால் வரும் உள்ளொளி. சூரியன், சந்திரன் அக்கினி இவைகாண் போன்ற பிராக்ருத (மாயா சம்பந்தமான) ஒளியல்ல. ''யான்'', 'எனது' என்றது ஒடுங்கிய இடமே திருவருள் பிரகாசம் உதயம் ஆகும் இடம். அதுவரை அது ஒரு மறைந்த பொருளாய் இருக்கும். மலம் நீங்கினார்க்கு அழல் பிழம்பாய் சிவபெருமான் நின்று அவரை தன் அருள் வெளிக்குள் ஆண்டு கொள்ள காத்திருக்கும் தலம் திருவண்ணாமலை.

ஒரு சமயம் பிரம்மாவும் விஷ்ணுவும் தமக்குள் யார் பெரியவர் என்று விவாதித்தார்கள். முடிவுக்கு வரமுடியவில்லை. சிவபெருமானிடம் தீர்ப்புக்குச் சென்றார்கள். சிவபெருமான் சோதிப்பிழம்பாய் நின்று தம் அடிமுடியை யார் முதலில் காண்கிறாரோ, அவரே முதற் பொருள் என்று அருளினார் அப்போதும் அவர்கட்கு ஞானம் உதிக்கவில்லை பிரம்மா வேதங்களைப் படைத்தவர், ஆகையினாலே அன்னவடிவம் எடுத்து இறைவன் முடித்தலத்தைக் காணக் பறந்து முயன்றனர் விட்டுணு எல்லா பொருள்களிலும் ஊடுருவி இருப்பவராகையால் வராகவடிவம் (பன்றி) எடுத்து இறைவனின் அடித்தலத்தைக் காண பூமியைத் துளைத்துச் சென்றார். இதன் பொருள் என்ன? அன்னமாகிய பிரம்மா தனது மானசீக ஆற்றலினால் (mental) இறைவனின் சொரூப இலக்கணத்தைக் காணலாம் என்று மயக்கம் கொண்டார். விட்டுணு தனது மாயாசக்தியால் (பூதாதிகளால்) அதாவது (maternal) ஆற்றலினால் இறைவனின் தடத்த இலக்கணத்தை அறியலாம் என்று மயக்கம் கொண்டார். இருவரும் முடி அடிகளை எவ்வளவு முயன்றும் காண முடியவில்லை. இருவரும் சோர்வடைந்து இறைவன் முன்வந்து தமது தோல்வியை முறையிட்டனர். தமது 'விஞ்ஞானமும்' 'பிரஞானமும்' பயன்படாததை உணர்ந்தார்கள். இவைகட்கும் மேலாய அளக்க முடியாத ஒரு ஆற்றல் (அப்பிரமேயம்) ஒன்று உளது என்றதை உணர்ந்தார்கள். தங்கள் அறியாமையை நொந்து, ''பரஞானமாய்'' விளங்கும் சோதியாய் நின்ற பரம்பொருளைப் போற்றி நின்றார்கள்.

'பசு ஞானத்தாலும் (ஆணவம் தரும் அரைகுறை அறிவு) 'பாச ஞானத்தாலும் (மாய சம்பந்தத்தால் வரும் புற அறிவு) இறைவனை உணர முடியாது. இறைவன் ''திருவருள் என்ற 'பதிஞானம்' ஒன்றே உள்ளிருந்து உணர்த்தி சோதி வடிவாக்கும். இதுவே ''தனிப் பெருங்கருணையால்'' உணரப்படும் ''அருட்பெருஞ்சோதி.''

இறைவன் தனது தனிப் பெருங்கருணையைக் காட்டிய இடம் **திருவண்ணாமலை**. அந்தஅருட் பெருஞ்சோதியின் சின்னமே இந்தமலை. **அண்ணாமலை** என்றால் ''அளக்க முடியாதது'' என்று பொருள். ''யான்'' ''எனது'' என்ற அறியாமையால் கட்டுண்ட உயிர்கள் வெறும் மலையைத்தான் பார்க்கும். திருவடிஞானம் பெற்றவர்கள் அருட்பிழம்பாய் அனுபவிப்பார்கள். பெரியோர் காட்டிய வழியில் ஆண்டுதோறும் பெருங் கார்த்திகை முழுமதி நன்னாளில் கார்த்திகை நக்ஷத்திரங்கள் சூழ்ந்து நிற்க, உமா மகேசுவராள் பஞ்ச மூர்த்திகளாய் தரிசனம் கொடுக்க திருவண்ணாமலையின் உச்சியில் அகண்ட விளக்குத் தீபங்களை

சோதியாய் விளங்க, அதே நேரத்தில் பெருமானுக்கு தீபாராதனை செய்யும் வேளையில் தரிசனம் செய்து சோதியில் அரை நிமிட நேரமாவது திளைத்து நிற்பது நல்லார் கடனாகும். இந்த ''அலகில் சோதியை'' எந்த நேரத்திலும் உள்மனத்தில் பாவித்து உய்யலாம்.

பரம்பொருள் நினைக்கொணாதது, காணொணாதது, சொல்லொணாதது. ஆனால் ஒரு அவஸ்தை மட்டில் நினைக்கலாம். ஆம் நினைக்கலாம். அதுவே சுத்த நிலையான ''நிர்மல ஜாக்கிரம்'' என்பர். அந்த நிலையில் ''யான்'' ''எனது'' என்பவை கழன்று, வெறுந்தனியாய், நீயும் நானுமாய், நினைப்பற நினைதலாகும். இதை முதலில் பாவனையாகவாயினும் முயன்று, பின் பாவனாதீதமாக சித்திபெறல் சாத்தியமே. அதற்கு சாதகம் ''சுத்தசாதகம்''. இதை சகஜ நிஷ்டை என்பர்.

சுத்த ஞானத்தில் நாட்டமுடையவர்கள் பலர் திருவண்ணாமலையை நாடி இந்த சுத்த நிலையை அடைய பலநாள் நிட்டையில் இருந்த செய்திகள் இந்த இரகசியத்தை வெளிப்படுத்தும். வேறு இடத்தில் இருந்தால் மறதி என்ற துட்டநாய் நம் நினைவை கவ்வி ஓடிவிடும். எனவே அண்ணாமலையின் அடித்தலத்தில் யோகம் செய்வது பெருத்த குறிக்கோள். நம் போலியர்கட்கு ''அண்ணாமலை'' என்று திருநாமம் செப்பி ஒரு நொடி நினைத்தாலும் சால பலன்தரும். ''யான்'' 'எனது' என்பவை அடங்காதவர்கள் ஞானிகள் ஆக மாட்டார்கள். அவர்கள் வெறும் கர்மிகளே யாவர். ஞானமடங்கள் பிறந்த இடம் திருவண்ணாமலைதான். சைவத்தையும் வீர சைவத்தையும் காத்து சிதம்பர தலத்தை மாற்றார் நொடிப்பிலிருந்து மீட்டு திருவண்ணாமலையில் அழல் பிழம்பாய் நிறை சோதி தில்லையில் அருட்தாண்டவம் சதா காலம் நிகழ்த்தி பஞ்சகிருத்தியம் செய்து உயிர்கள் திருவோலக்கங்கண்டு உய்ய உறு துணையாய் நின்றவரும் திருவாவடுதுறையில் நமச்சிவாய மூர்த்தியையும் அம்பலவாண தேசிக குரு மூர்த்தியையும் பிடாரோகணம் செய்வித்து, விஜயநகர அரசின் அமைச்சர் இலிங்கதுரை அளித்த பல கிராமங்களைக் கொண்டு திருவண்ணாமலையில் உயர் ஞான மடம் தாபித்தவர் அருள் திரு ஆதி **சிவப் பிரகாச சுவாமிகளாவர்.** இவர் பல சித்திகள் பெற்று உடலை துறக்காமலே பட்டீச்சரம் நவலிங்க தீர்த்தக்கரையில் சோதியில் கலந்த பெருமையுடையவர். இவரே அருள் திரு ஞானக் கூத்தரை அரவின் விடத்தினின்று மீட்பித்து துறையூரில் (முசிரி தாலுகா, திருச்சி மாவட்டம்) பெரிய **வீரசைவ மடம்** நிறுவியவர். திருவண்ணாமலையிலுள்ள மடங்கள் கணக்கிடல் அரிது. குகை நமச்சிவாயரும் அருணகிரியாரும் வதிந்ததலம் மடங்கள் பல சீர் குறைந்து இன்று மங்கிக்கிடக்கின்றன. சமீபகாலத்தில் திருவண்ணாமலையில் வதிந்தவர்களில் தவத்திரு ரமணமகரிஷி ஒருவராவர். திருவண்ணாமலையின் சிறப்பை இவர் பிரசித்தமாகப் பாடியுள்ளார். மேனாட்டு அன்பர்களில் பால் பிரன்டன் (Paul Brunton) என்பவர் திருவண்ணாமலையின் சிறப்பைப் பற்றி தமது ஆங்கில நூல்களில் எழுதியுள்ளார்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவண்ணாமலையின் இயற்கை அழகை தமது திருப்பதிகங்களின் ஒவ்வொரு அடியிலும் பாடியருளுகிறார். அண்ணாமலையாரின் அருள், கைவந்த ஒரு பொருளாகையால் அதையும் போற்றுகிறார்.

திருவண்ணாமலையில் சோதிப் பிழம்பாய் நின்று ஞான நாடகம் ஆடிய பெருமான், நல்ல அடியார்கட்காக ஊன நாடகம் ஆடி அவர்கட்கு தலையளிப்பான், இது உண்மை என்பது இதன் பொருள். நல்ல அடியார்கள் யார்? தமிழில் ''நல்ல'' என்ற சொல் ஒப்பற்றது, தன்னை இழந்து முத்தி நலம் தேடுபவர் நல்ல அடியார்கள். அவர்களின் அடிமைத்திறம் ஞானத்தின் மெய்வடிவம். ''நினைத்துத் தொழுவார் பாவந் தீர்க்கும் நிமலருறை கோயில்'' என்றும் வந்திருக்கும் அடியார்கள் வருமேல் வினையோடு பந்தித்திருந்த பாவந்தீர்க்கும் பரமனுரை கோயில்'' என்றும் பாடித் துதிக்கிறார்.

அயனும் மாலும் தேடியும் அளக்கமுடியாத பரமனை குறமடவார்கள் முத்துக் குவியல் செய்து திருவண்ணாமலைக்கு நிகராகக் குவித்து அளந்து விடுகிறார்கள். என்ன விந்தை! நல்ல உள்ளம் எதையும் அளக்கும். ''விபு'' (பெரியது) வான நம்மை, நம் ஆணவம் ''அணு'' (சிறியதாக) ஆக்கிவிடுகிறது.

'' தேடிக்காணார் திருமால் பிரமன் தேவர் பெருமானை
முடியோங்கி முதுவேயுகுத்த முத்தம்பல கொண்டு
கூடிக்குறவர் மடவார்குவித்துக் கொள்ள வம்மினென்
ருடிப்பாடி யளக்குஞ் சாரலண்ணா மலையாரே"!

('அளத்தல்' என்பதற்கு புகழ்தல் என்றும் பொருள்.)

ஸ்ரீமத் அருணகிரிநாதர் திருவண்ணமலையில் ஆறுமுகச் சிவனுரால் ஜபமாலே தரப்பெற்று உபதேசமும் செய்யப்பெற்று ஆட் கொள்ளப் பட்ட மகான். அவர் சுமார் 70 திருப்புகழி லும், வேறுபல பாக்களிலும் அருணுசலத்தின் மகிமையை பரக்கப் பாடியுள்ளார். ''**ஏறு மயிலேறி**'' என்று திருப்புகழ் மிகப்பிரசித்த மானது. அருணேயில் குடிகொண்ட அறுமுகப் பெருமான் அரி, அரன், பிரமன், புரந்தான் என்ற யார்க்கும் ''தம்பிரான்'' என்று பாடு கிருர்.

" ...செம்பொன் மேரு
அணேயன கனவித சண்ட கோபுர
அருணேயி லுறையு மருந்து ணுமுலே
அபிநவ வனிதை தருங்குமார நெருங்குமால் கொண்டு
அடவியில் வடிவு காந்து போயொரு
குறமகள் பிறகு திரிந்த காமுக
அரியர பிரம புரந்த ராதியர் தம்பிரானே! "

என்று வெகு விசித்திரமாகப் பாடுகிருர். அரியும் அயனும் தேடிக் காணுத பரம் பொருள் ''வள்ளி சன்மார்க்கம்'' உலக மறிய குறவர் மனே புக்கு அவளே எளிதில் ஆண்ட அதிசயத்தை வியந்து பாடுகிருர். 'நல் துணேடு இச்சுடராகாசத்தை அணேந்து விளங்கு அருணுசலம் திகழ் தம்பிரானே' என்ற பாடலில், **சுடர்தாணுவாய்** நின்ற செய்தி கூறப்படுகிறது. திருவண்ணுமலேயில் ''அறிவை அறிவது பொருளென'' பரமன் அரு ளினுன் என்று பரமரகசியத்தைக் கூறுகிருர். கனல் மால்வரை பரமனே இன்னும் பலவாறு புகழ் பாடுகிருர். **திருப்புகழில்** கண்டுகளிக்க கற்பனேக் களஞ்சியம் துறை மங்கலம் சிவப் பிரகாச சுவாமிகள் தமது **சோண சைல மாலேயில்** திருவண்ணுமலேயின் மகிமையை அழகுபடப் பாடியுள்ளார். சைவ எல்லப்ப நாவலர் தாமியற்றிய ''**அருணுசலபுராணத் தில்**'' அண்ணுமலே அண்ணலின் அருட்டிறத் தைப் பாடியுள்ளார். வள்ளலார் இராம லிங்க அடிகளாரும் திருவண்ணுமலே அருட்பா பாடியுள்ளார்.

அடிமுடிகாணுத மகத்துவத்தை கச்சியப்ப சிவாச்சாரியார் தாமியற்றிய **கந்தபுராணத் தில்** ஒரு பாட்டில் விளக்கியுள்ளார்.

" என்னிக ரெவரு மில்லென் றிருவரு மிகலு மெல்லே
அன்னவர் நடுவு தோன்றி அடிமுடி தெரியா தாகி
உன்னினர் தங்கட் கெல்லாம் ஒல்லேயின் முத்தி நல்கித்
தன்னிக ரின்றி நிறை தழற் பெருஞ் சயிலங் கண்டான் "


என்பது பாட்டு

(கந்த புரான வழிநடைப்படலம்—10)

சிவபெருமானது அநாதி முறைமையான பழமையை பல புராணங்கள் கூறும். அவை களில் முக்கியமான செய்திகள் (1) திருப் பாற்கடலில் வந்த ஆலகாலத்தை உண்டு தேவர்களேக் காப்பாற்றியது (2) திரிபுரத்தைச் செற்றது (3) அயனும் அரியும் அடிமுடிகாணுது நின்று தமது பரத்துவத்தைக் காட்டியது (4) மார்க்கண்டனுக்கு காலனேக் காலால் உதைத்தது முதலியன. இவைகளில் நமக்கு உகந்தது திருவண்ணுமலேயில் நிகழ்த்திய அருட்பாலிப்பு. நாம் தேவர்களும் அல்ல, அசுரர்களும் அல்ல. நாம் மானுடர், சித்துப் பொருள். ஆனுல் மல சம்பந்தத்தினுல் பிறப்பு இறப்பு என்ற பேர் கருவாவில் உழல் கிருேம். சத்தோடு கூடினுல் சத்துப் பொருள். அசத்தோடு கூடினுல் அசத்துப் பொருள். திருவள்ளுவநாயனுர் கூறியபடி சார்பறிந்து சார்புகெடலே நமது குறிக் கோள். இறைவன் நாம் உய்ய தனுகாண புவன போகங்களேத் தந்துள்ளான். அவை களின் உதவி கொண்டு சிவமாம் தன்மை அடைவது சாத்தியமே. ஆனுல் பிரதிபந்த மாய் நிற்பது ஆணவம் என்ற மூலமலம். அது ஒழிந்தால் இறைவனேடு ஒட்டி ஒளி வாழ்வை அடையலாம். இதைத்தான் திரு வண்ணுமலே ஐதிகம் நமக்குப் புகட்டுகிறது. இதை ஸ்ரீமத் அருணகிரியார் அழகிய வாக் கில் தாக்குடன் விளம்புகிருர்—

" யான்ரு னெறுஞ்சொல் லிரண்டுங் கெட் டாலன்றி யாவர்க்குந்
தோன்ருது சத்தியந் தொல்லேப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்ருன் மருகன் மருகன் முருகன்க்கு பாசரன் கேள்வியினுற்
சான்ருரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே "

சுகோதயம் அடைய திருவண்ணுமலேயை தொழுமின், நினேமின், உய்வு நமதே !



ஞான இயல்புகள், பக்தி இயல்புகள் என்று வேறுபிரித்துச் சொல்லுகிறோம் நாம்: ஆனால் இந்த வேறுபாடுகளை எல்லாம் ஒருமைப் படுத்திய ஒரு மகான் அருணகிரிநாதர்.

அருணகிரிநாதருடைய ஞானதரிசனம் ஒரு தனிப் பண்பு வாய்ந்தது. எப்படி என்றால், பக்தி எங்கே தொடங்குகிறது, ஞானம் எங்கே தொடங்குகிறது என்று இலக்கணம் சொல்ல முடியாதபடி பக்தியே ஞானயாகவும் ஞானமே பக்தியனுபவமாகவும் இணைந்த ஒரு தரிசனத்தை அருணகிரிநாதருடைய வாக்கிலே பார்க்கிறோம். இந்த ஒரு பக்தி ஞான இணைப்பு அவருடைய கந்தரலங்காரம், கந்தரனுபூதி, அவருடைய திருப்புகழ் ஆகிய எல்லா இலக்கியங்களிலும் ஈரிழைகொண்டு முறுக்கிய ஒரு நாதநூலாகப் பின்னிக்கிடக்கிறது. இந்தப் பின்னலிலே அவருடைய இலக்கியத்தின் தனிப் பணியாக, ஞானக்கனலாகவும், பக்திப்புனலாகவும் ஒருசேர நம்மை ஆட்கொள்ளுகிறது.

ஆம்! அருணகிரிநாதருடைய ஞானதரிசனம் என்பது இரண்டு பார்வைகள் கொண்டது. ஒன்று தத்துவப் பார்வை. மற்றொன்று பக்திப் பார்வை. ஒன்று அறிவின் கொடுமுடி. மற்றொன்று ஆனந்தத்தின் ஆழமான வெள்ளப் பள்ளம். இந்த இரண்டுமே தனித்தனியாகப் பிரிந்து நில்லாமல், குரலும் சுருதியும்போல் இணைந்து ஒலித்து, அவருடைய பாடல்களுக்கு தனியான ஒரு ஞானப் பண்பையும் பக்திச் செறிவையும் ஒருமித்துத் தருகின்றன.

அருணகிரிநாதருடைய வரலாற்று நிகழ்ச்சிகளை ஆராய்ந்தோமானால், அவருடைய ஆசைகள் பாசங்கள் என்பன, சொந்த அனுபவங்களாக விளங்கியவை ஒருபுறம் இருக்க, மற்றவர்களுக்காக, இந்த மனித சமுதாயத்துக்காகப் பிறர் அனுபவங்களையும் தமது இதயத்திலே தேக்கிப், பிறருக்காகத் தாம் அடைந்தவேதனைகளின் வெளியீடு என்றும், சொல்லலாம்.

நமது நாட்டு ஆழ்வார்களும் நாயன்மார்களும் நம் சமய ஞானியர்களும் நமக்காக நம்முடைய துன்பங்களையும், பாச அல்லல்களையும் நமது இதயத்தின் விபரீத வேதனைகளையும் தங்கள் அனுபவங்களாகவே, தங்களுடைய துன்பங்களாகவே தம்மீது ஏற்றி, இந்தத் துன்பங்களில் இருந்து விடுதலை பெறுவதற்காக இறையருளை நாடும் பக்தி நிலையிலே நின்று, பல பாடல்களைப் பாடியுள்ளார்கள் அல்லவா! அவ்வாறே அருணகிரி நாதருடைய வாக்கிலும் மனித சமுதாயத்தின் துன்பமும், ஆசையின்

மீ.ப.சோமசுந்தரம்

வேதனைகளும் பல சிக்கல்களாகத் தோன்றி, ஆன்ம அனுபவத்தின் பல நிலைகளாக, பல படிகளாக விளங்கி, மிளிர்வதைக் காண்கிறோம் இந்த வகையிலே.

''ஆசா நிகளம் துகள் ஆகிய பின்
பேசா அனுபூதி பிறந்ததுவே''

என்று அருணகிரியார் பாடும்போது மனித சமுதாயத்தின் குரலாக, ஆயிரம் ஆயிரம் மனிதர்களின் குரலாக அருணகிரியாரின் குரல் ஒலிக்கிறது.

இந்தத் தத்துவ நிலையாகிய பார்வை ஒரு புறமும், பக்தனாக நின்று பாடுகிற நிலை ஒரு புறமுமாக ஒரு நாணயத்தின் இரண்டு புறங்களைப் போல அருணகிரிநாதரின் வாக்கு இப்படியும் அப்படியும் ஒளி வீசுகிறது.

ஆசையின் விலங்கு, விதியின் விலங்கு என்று மனித வாழ்வைப் பிணைத்துள்ள நிகளங்கள் மிகுந்த வலிமை பொருந்தியவை. இந்நிலையில் ஆசையிலிருந்தும் அல்லலில் இருந்தும் விடுதலை பெறுவதற்குரிய ஞானம் அருணகிரிநாதருக்கு எப்படித் தரிசனம் காட்டுகிறது?

உலக நாடுகள் பலவற்றிலும் தோன்றி, உண்மையை உலகுக்கு உணர்த்தியுள்ள ஞானியர்கள் பலரும் விதியின் எழுத்தைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள். எத்தனை சிக்கல்களுக்குள் நம்மைப் பிணையவைத்து ஊழ்வினை எத்தனை எத்தனை துன்பங்களை நமக்கு ஊட்டுகிறது என்று ஏங்கி மறுகிய வரலாறே மனிதகுலத்தின் வரலாறாக இருப்பதைக் காண்கிறோம். இதையே உலக மகாகவிஞர்கள் எல்லாரும் கூறியிருக்கிறார்கள். உமர்கய்யாம் என்ற பாரசீகக் கவிஞன் பாடினான்:

" The moving finger writes and
Having writ moves on — "

தலையிலே எழுதுகிற விதியின் கை, எழுதி எழுதி மேற் செல்கிறது.

" Nor all thy piety nor wit
small lure it back
To cancel half a line "

தொழுது கெஞ்சி நின்றாலும் சூழ்ச்சி பலவும் செய்தாலும் அந்த விதியின் எழுத்தை அரை வரி கூட அழிக்க முடியுமா? முடியாது.

" Nor all thy tears
wash out a word of it

ஆறாகக் கண்ணீர் பொழிந்தாலும் தலையெழுத்திலே ஒரு வார்த்தையைக் கூடக்கண்ணீரால் கழுவி விடமுடியாது, என்று பாடினான் உமர்கய்யாம். ஆனால் விதியின் எழுத்தை என்ன செய்கிறார் அருணகிரி?

சேல்பட்டழிந்தது செந்தூர் வயற்பொழில் ;
தேங்கடம்பின்
மால் பட்டழிந்தது வேலையும் பூங்கொடியார்
மனம் ; மாமயிலோன்
வேல்பட்டழிந்தது வேலையும் சூரும்
வெற்பும் ; அவன்
கால் பட்டழிந்தது இங்கு
என்தலைமேல் அயன் கையெழுத்தே

முருகப்பெருமானுடைய திருவடிகள் பட்ட மாத்திரத்தில் என் தலையில் ப்ரும்மா எழுதிய எழுத்து, தலையெழுத்து, ''அவன் கால் பட்டழிந்தது இங்கு என்தலைமேல் அயன் கையெழுத்தே'' என்றார் அருணகிரி. தலையெழுத்தை அழிக்க முடியாது என்று சொல்லவில்லை. முருகனுடைய திருவடிகள் பட்ட மாத்திரத்தில் அப்படியே அந்த எழுத்து அழிந்தது என்கிறது அருணகிரியின் ஞான தரிசனம்.

பக்தியின் நிலை இது. அறிவு எத்தனையோ வாதங்களைப் பேசும். அன்று எழுதிய எழுத்தை அழித்து எழுத ஒண்ணாது என்றெல்லாம் தத்துவ அறிவு கூறும். ஆனால் பக்தி நிலை அவ்வாறு பேசாது. அவன் கால்பட்டு அழிந்தது இங்கு என்தலைமேல் அயன் கையெழுத்தே என்று வெற்றி வாகை சூடிய நிலையிலே பக்தி உள்ளம் பரவசக் கூத்து ஆடுகிறது.

ஆசாநிகளம் துகள் ஆகியபின் பேசா அனுபூதி பிறந்த நிலை ஒன்று. இது தனக்குள்ளே தான் அறிந்த பேரின்பம். இதுபோலவே அவன் கால்பட்டுத் தலையெழுத்து அழிந்தது என்று பாடுகிற நிலையிருக்கிறதே இது தத்துவ அறிவுநிலைகளைக் கடந்த பக்திநிலை. எது பக்தி, எது ஞானம் என்று வேறு பிரித்துச் சொல்ல இயலாத ஒருநிலையிலே ஞானமும் பக்தியும் ஒன்றிய ஒரு ஞானநந்த நிலையிலே நின்று குரல் கொடுக்கிறார் அருணகிரிநாதர். இந்தக் குரல்

''பாருளீர் வாருமே'' என்று நம்மை அழைக் கிறது. அழைத்தது ஆசையின் விலங்கு மட்டு மல்ல, தலையெழுத்தாகிய விதியின் விலங்குமே துகளாகி அந்த விடுதலையிலே ஒரே பேரானந் தம் இருக்கிறது, அந்த ஆனந்த அமுதத்தை அள்ளிப்பருகலாம் என்று நம்மை அழைக்கிறது, அண்ணுமலையின் உச்சியிலே ஒலிக்கிற அந்தக் குரல். சென்ற ஆறு நூற்ருண்டுகளாக இந்தக் குரல் நமது இதய அரங்கத்திலே ஒலித்து வந் திருக்கிறது. அதோடு ஆயிரம் ஆயிரம் பக்தர் களை ஒன்ருகக் கூட்டி, அத்வைதம் என்ற இலக் கணத்திற்கு இலக்கியமாக, அத்தனை உள்ளங் களும் அத்தனை குரல்களும் சுருதி சேர்ந்து அத் வைதமாக ஒன்றி ஒரே லயத்திலே முரு கனுடைய திருவருளின் பாங்கைப் பாடச் செய் திருக்கிறது. எத்தகைய பெரிய சாதனை இது!

அனலிடை நின்றும், உடலைப் பலவாறு வருத்தியும் விதியை வெல்லுகிற முயற்சியிலே ஈடுபடுகிற மனிதகுலத்தைப் பாடிக்கொண்டும் தாளம் தட்டிக்கொண்டும் உல்லாசமாக, ஆனந்தக் களிப்போடு பேரின்பம் பெறும்படி செய்வது என்ருல் அது எத்தகைய பெரிய ஞானதரிசனம்! இதுவே அருணகிரிநாதரின் ஞானவேள்விக்குரிய தனிச் சிறப்பு. தனிப் பண்பு. அந்தப் பண்பு ஞானத்திலே முளைத் துப் பக்தியிலே மலர்ந்து இசையிலே கனிந்தது. அது சொல்லாலாகிய இசைத் தீங்கனி. ஞான இசைப்பழம். இதன் இலட்சியம் பேரின்பம். அதை அடைவதற்குரிய அதன் மார்க்கமுமே இசையாகிய இன்பநெறி. இலட்சியமும் மார்க்கமும் இரண்டுமே இன்பமாக அமைந் திருப்பதே அருணகிரிநாதருடைய ஞானத்தின் தனிச்சிறப்பும் தனிப் பண்புமாகும்.

1925ல் திருக்கார்த்திகை விழா

''சோறு மணக்கும் மடங்களெலாம்'' என்று முற்காலப் பெரியார் ஒருவர் கூறிய தமிழ்வாக்கு ஈண்டு கண்கூடாகும். மடங்கள்தோறும் சோறிடப்படுகிறது. இங்கு வருகிற எந்த ஜாதியாருக்கும் உபசாரத்தோடு சாப்பாடு கொடுக்கப்படுகிறது. பிராமண குலத்தவரில் ஆண் பெண் ஆகிய இருபாலருக்கும் கோட்டையூர் மெ. க. வகையாரின் சத்திரத்தில் இரவு பகல் எந்த நேரத்திலும் அறுசுவையுண்டியளிக்கப் பெறுகிறது. சாதுக்களுக்குக் காரைக்குடி சா. நா. சா. வகையாரின் சாதுக்கள் மடத்தில் நல்ல உண்டி உதவப்பெறுகின்றது. நகரத்தாருக்குப் பல இடங்களில் சுவையுணவு நல்கப்படுகிறது. கோவிலூர் மடத்தைச்சார்ந்த ஈசானிய மடத்திலும் பிற பல இடங்களிலும் சாப்பாடு நடைபெறுகிறது. நகரத்தாருக்கு நடைபெறும் விருந்துகளில் ராவ்பகதூர் ஸ்ரீமான் பெ. க. அ. சித. ஜாகையில் நடைபெறும் விருந்தே முக்கியமானதாகும். நகரத்தாரின் மடமாகிய ஓயா மடத்தில் ஏழாந் திருவிழா முதல் மகேசுவர பூஜை நடைபெறுகின்றது. ஜாதி சமய பேதமின்றி வந்தவர்கட்கெல்லாம் உணவளிக்கப்படுகின்றது. நகரத்தாரின் பேருதவி பெற்று நடைபெறும் அறுபத்து மூவர் மடம், பவளக்குன்று மடம் முதலிய இடங்களிலும் உணவளிக்கப்படுகின்றது.

மலையில் ஏற்றப்படும் தீபத்திற்கு தேவஸ்தானத்திலிருந்து நெய் சிறிதே அனுப்பப்படுகிறது. ஆனல் ஒவ்வொரு தரும ஸ்தாபனங்களிலிருந்தும் நெய்க் குடங்கள் அனுப்பப்படுகின்றன. பிரார்த்தனைசெய்து கொள்பவர் அனுப்பும் குடங்களே எண்ணமுடியாதனவாகும். தீபத்தன்று காலை முதல் மாலை வரையும் நெய்க்குடங்கள் சென்ற வண்ணமாக இருக்கின்றன. இக்குடங்கள் யாவும் மலையில் வாசஞ் செய்கின்ற வேடர்களே கொண்டு செல்கின்றனர். மலையில் உச்சியில் இருக்கிற செப்புக் கொப்பராவில் இந்நெய் கொட்டப்பட்டு தீபம் போடப்படுகிறது. கீழிலிருந்து நெய்க் குடங்களை அனுப்புபவர்கள் குடத்தை வாங்கிப் பொடியாக்கி நெய்க் குடத்தினுள் கொட்டி நன்ருகக் கலந்துவிடுகின்றனர். விளக்கேற்றுவதற் காகத் துணி வாங்கி அதனைத் துண்டு துண்டாகக் கிழித்து அதனையும் நெய்க்குடத் தினுள் போட்டுவிடுகின்றனர். நெய்யாவது துணியாவது திருட்டுப்போகாதிருப்ப தற்காகவே இப்படிச்செய்யப்படுகிறது. —குமரன் வாரப்பதிப்பு, காரைக்குடி

(2-12-1925 பக்கம் 3, 6; 9-12-1925 பக்கம் 4, 8.)

ஞானமலை



குன்றக்குடி அடிகளார்

திருவண்ணாமலை, திருத்தலத்தின் பெயரன்று; திருமலையின் பெயர், திருவருள் மலையின் திருப்பெயர். திருவண்ணாமலை ஞானமலை; ஞானத் திரளாய் நிற்கும் மலை. அந்த மலையில் மாந்தர் தம் ஊனத்திரளை நீக்கும் உத்தம ஞானிகள் காலத்திற்குக் காலம் தோன்றியுள்ளனர். உயிர்களின் உய்தி, ஞானம் ஒன்றாலேயே கைகூடும். ஞானம் பேரறிவு. ஞானம் எளிதிற் கிடைக்காது. செருக்குடையவர்கள் ஞானத்தை அடைதல் இயலாது. 'நான்' என்ற செருக்கு அறியாமையின் சின்னம். 'எனது' என்ற செருக்கு அறிவிற்குப் பகை; அன்பிற்குப் பகை. ஞானத்தினைப் பெற 'நான்' 'எனது' என்ற செருக்கை அகற்றிக் கொள்ள வேண்டும். ஞான நூல்களை ஓதுதல் வேண்டும். அயரா அன்பில் அரனை அருச்சித்திடுதல் வேண்டும். சிவனடியார்களைக் கண்டபொழுது தாழ்வெனும் தன்மையோடு அவர்களுக்குப் பணிசெய்து ஞானத்தினைப் பெற்றிடுதல் வேண்டும். ஞானம் ஒன்றே நன்மை. மற்ற நன்மைகளெல்லாம் நன்மை போலத் தோற்றமளிப்பன. ஆனால், நன்மையன்று. ஞானமலையாகிய திருவண்ணாமலையின் தோற்றம் செருக்கறுப்பது. அந்த மலை செம்மேனி அம்மானைக் காட்டும் மலை. செம்பொருளை உணர்த்தும் மலை. இத்திருவருள் மலைச்சாரலில் தோய்தலே பிறப்பின் பயன். வலம் வந்து வணங்குதல் வாழ்க்கையின்பயன்.

இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, தெய்வசிகாமணி என்ற திருப்பெயரில் முப்போதும் இறைவனைத் தீண்டும் பேறு பெற்ற சிவாசாரியார் குலத்தில் ஞானாசிரியர் தோன்றினார். ஞானாசிரியர் இதயக் கமலத்தில் அண்ணாமலை அண்ணலின் அடிக்கமலங்கள் எழுந்தருளி ஞானாசிரியரை ஞானமலை ஆக்கின. இந்த ஞானமலையின் சாரலில் நனைந்து உய்தி பெற்ற உயிர்கள் ஏராளம்! இந்த ஞானமலை காண்பார்க்கும் ஞானத்தைத் தந்தது; கேட்டார்க்கும் ஞானத்தை வழங்கியது. உற்றிருந்து உணர்ந்தார்க்கும் உணர்வரிய ஞானத்தை வழங்கியது. 'வல்லாளன்' என்ற பேரரசன் இந்த ஞான மலையைப் பூசித்தவன். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வள்ளலார் கண்டு பாடிய செத்தாரைப் பிழைக்க வைக்கும் கலை, இந்த ஞானிக்குக் கைவந்திருந்தது. வல்லாள அரசனின் இறந்துபோன அரசுப் புரவியை எழுப்பித் தந்தவர் இவர்! இந்த வரலாற்றினை இன்றும் திருக்கோயில் தெற்குமலைச் சுவர் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்த ஞானமூர்த்தி இன்றும் அருள் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள சந்நிதி ஞானிகளை உருவாக்கும் சந்நிதியாகும். திருவண்ணாமலையில் வந்து தங்கி ஞானத் தவம் செய்வோர் அடையும் முதலிடம் இந்தச் சந்நிதியேயாகும். இரமண மகரிஷி சில நாள் தங்கித் தவம் செய்து பெற்ற ஞானம் இந்தச் சந்நிதியிலேயே என்பதை இரமண விஜயம் கூறுகிறது. திருவண்ணாமலையில் விளங்கும் ஞானமலையும், செம் பொருட் சோதிமலையும் ஒரு கீற்றாக இந்த ஞானக் கதிர் தோன்றியது. திருவண்ணாமலை ஞானிகளைத் தோற்றுவிக்கும் மலை; ஞானிகளை வளர்க்கும் மலை; ஞானத்தை வழங்கும் மலை. அந்த மலையடியில்தோன்றி மாந்தரிடையில் பேசும் ஞானமலையாகத் திகழ்ந்து ஞானத்தின் திருவுருவாக விளங்கும் அருட் குருமூர்த்திகளின் சந்நிதி இன்றும், ஞானத்தை வழங்கும் சந்நிதி. சென்று வழிபடுவோம்!

ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகர்

திருவண்ணுமலேயில் வாழ்ந்த ஞானிகள் பலர். அவர்களுள் முக்கியமான ஒருவர் ஈசான்ய ஞான தேசிகர். இவர், அரிய சித்திகள் கைவரப் பெற்றவராய், அண்ணுமலேயாரின் பேரருள் நிறைந்த சான்ருேராய்த் திகழ்ந்தவர்.

பெயர்க் காரணம்

இப்புனிதத் தலத்தின் ஈசான்ய பாகத்தில் எழுந்தருளி இருந்ததால் இவர் ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகர் என்று பெயர் பெற்ருர். இப் பெரியாரது, சமாதிக் கோயிலுக்கு அருகே ஈசான்ய மடம் உளது.

அதிசயச் சிறுவர்

அருளுருவாய் அடியவர்கட்கு அருள் முகிலாய், அகண்டாகாரப் பொருளதுவாய், புலியுடனே விளேயாடும் புனித மூர்த்தியாய், விளங்கிய ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகர், கி.பி. 1750 அளவில் வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரில் வேளாளர் குலத்தில் திருநீலகண்ட தேசிகர் மகனுய்ப் பிறந்தார். அவருடைய பிள்ளேத் திரு நாமம் கந்தப்பன்.

கந்தப்பர் குழந்தைப் பருவத்திலேயே தம் பிற்கால ஞானப் பெருவாழ்விற்கு உரிய சில முற்குறிகளே வெளியிடலானுர். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் பாடங்களேக் கற்பிக்கும் முன்னமே அப் பாடங்களே ஒப்புவித்து விடுவார். பிறகு மௌனமாக இருப்பார்.

இத்தகைய செயல்களேக் கண்டு இவரது தந்தையார் இவருக்கு ஏழாவது வயதிலேயே 'தேசிகர்' என்ற பட்டம் சூட்டி சிவபூசை முறைகளேக் கற்பித்தார். அன்று முதல் கந்தப்ப தேசிகர், தம் 16வது வயதுவரை நியமத்துடன் சிவபூசையில் ஈடுபட்டிருந்தார். இடையருது தியானமும் செய்து வந்தார். திருமணம் செய்து கொள்ள மறுத்து, அன்னே யாரிடம் விடைபெற்று, தீர்த்த யாத்திரை புறப்பட்டார்.

நடராசர் தரிசனமும் குரு தரிசனமும்

கோயில் என்னும் சிதம்பர ஸ்தலத்திற்கு வந்து, நடராஜப் பெருமானே வழிபட்டார். அங்கேயே அவருக்குக் குரு தரிசனமும் கிடைத்தது.

ஸ்ரீமௌன சுவாமிகளேத் தரிசித்ததும் கந்தப்ப தேசிகருக்கு, நாமும் துறவியாகி நிஷ்டானுபூதி நிலேயில் நின்று சிவஞான போத நிலே பெற வேண்டும் என்னும் எண்ணம் ஏற்பட்டது. அதற்காக உபதேசம் பெற வேண்டுமென்று தீர்மானித்தார்.

'இதம் பெற வைப்பார் சிதம்பர ஞான தேசிகர்' என்று நம்பினுர்.

மார்கழி மாதம், பனியும் குளிரும் அதிகம். தேசிகரோ கொஞ்சமும் அஞ்சவில்லே. அன்று மழையும் பெய்தது. அந்த மழையில் நனேந்து கொண்டே நெஞ்சம் அஞ்சாமல் உடல் நடுக்கமும் இன்றி வந்து தம்மை வணங்கிய தேசிகரைக் கண் குளிர நோக்கினுர், ஸ்ரீமௌன சுவாமிகள்.

அன்று யாரோ தம்மீது போர்த்தியிருந்த கம்பளத்தை ஸ்ரீமௌன சுவாமிகள் அப்படியே எடுத்துத் தேசிகருக்குப் போர்த்து விட்டார். உணர வேண்டிய உண்மையையும் உபதேசித்தார். அப்போது அங்கேயே தியானத்தில் அமரச் செய்தார்.

அந்த அருள் விழிப் பார்வையால், அந்தத் தியானத்தின் தனிச் சிறப்பால், நெடுநாளாகச் சூரியன் இல்லாமல் ஒரே இருட்டாகியிருந்த வானம் தெளிந்து ஒளிபெற்றது போன்ற மெய் யுணர்வு பிறந்தது.

சித்தர்களுக்குரிய யோகதண்டு, யோகப் பட்டை முதலிய கைக்கொண்டு ஜடாமகுடம் தரித்து ஸ்ரீமௌன சுவாமிகளிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார் ஸ்ரீ கந்தப்ப தேசிகர்.

சமாதியும் இடையூறும்

உலகமாகிய புருஷ வடிவத்திற்குச் சிதம் பரம் இதயம் என்றால், திருவாரூரை மூலா தாரம் என்பர். இத்தலத்தில் சில காலமும் அருகேயுள்ள மடப்புரத்தில் மகா சித்த மூர்த்தி யாக வீற்றிருந்த ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமி களுடன்கூடிச் சில காலமும் தங்கியிருந்தார். பிறகு சிக்கல் அருகேயுள்ள பொருள்வைத்த சேரியில், ஸ்ரீ உகந்த லிங்க ஞான தேசிகரைத் தரிசித்தார். மனித சஞ்சாரம் இல்லாத ஒரு பிரதேசத்தைத் தேர்ந்தெடுக்கத் தேசிகர் விரும்பினார்.

திருவண்ணாமலைக்கு அடுத்த வேட்டவலத் திற்குச் சமீபமான பாக்கத்து மலையில் ஒரு குகையிலே யாரும் அறியாவண்ணம் பல ஆண்டுகளாக நிர்விகல்ப சமாதி கூடியிருந்தார்.

அப்போது அவ்வூர் முத்துசாமி உடையார் என்பவர் நாள்தோறும் தேசிகருக்குப் பசும் பால் கொடுத்து வந்தார். அவ்வுதவி வீண் போகவில்லை. வீடு கட்ட நிலம் தோண்டிய போது, உடையாருக்குப் புதையல் கிடைத்தது. இதை அறிந்து அவ்வூரார் அனைவரும் தேசிகரு டைய அனுக்கிரகம் வேண்டி இவரைத் துதித் தும், பலவாறு வேண்டியும் தியானத்துக்கு இடையூறு செய்தனர். எனவே, யாரும் அறியா வண்ணம், தேசிகர் அங்கிருந்து புறப் பட்டார்.

அருணையார் கருணை

ஸ்ரீ தேசிகர், பாக்கத்து மலைக் குகையை விட்டு யாரும் அறியாது வந்துவிட்ட அந்த நாள் முதல் பாக்கத்துக் கிராமவாசியான முத்துசாமி உடையார் மழைமுகம் காணாத பயிர்போல் வாடினார். அவர் கனவில் அண்ணாமலையார் ஸ்ரீ தேசிகரைப் போல் தோன்றி, ''அப்பா, நீ வருந்தவேண்டாம், நாம் அருணாசலத்தின் ஈசான்ய பாகத்தில் இருக்கிறோம். அங்கு நீ வரக்கடவாய்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அண்ணாமலையார், தேசிகருக்கும் தரிசனம் அளித்தார்.

அண்ணாமலையாரின் கருணைத் திறனை நினைத்து உருகி ஸ்ரீ தேசிகர் அண்ணாமலையார் மீது 'தோத்திரப் பாமாலை' என்னும் சில அருட் பாடல்களைப் பாடினார். பாடிக் கொண்டே ஈசான்ய திசைக்கு எழுந்தருளி வந்து, மாமரங் களும் செடிகளும் சூரைப்புதர்களும் நெருங்கி யிருந்த ஈசான்ய தீர்த்தத்தின் தென்கரையில் உள்ள ஒரு பெரிய ஆலமரத்தின் கீழே சிவ யோக சமாதியில் அமர்ந்து சுந்தர ஞானச் சுடராக விளங்கினார்

அருளே சேமநிதி

ஸ்ரீ தேசிகர் நிஷ்டை கூடியிருக்கும் காலத் தில் இடையூறின்றும் நேராதபடி புலி காவ லாய்ப் படுத்திருக்கும். நிஷ்டை கலைந்ததும் ஸ்ரீ தேசிகர், 'அண்ணாமலையாரே இவ்வடிவம் தாங்கி நமக்குக் காவலாயிருக்கிறார்' என மகிழ்ந்து '**அண்ணாமலையே என் அரசே**' என அழைத்துப் புலி மீது தம் கைகளால் தடவிக் கொடுப்பார்.

வரிப் புலிகள் காவல் புரிய வீற்றிருந்த தேசிகரை, அன்பர்கள் தரிசிக்க வரும்போது இவர் அப்புலிகளை நோக்கி, **அவர்கள் அஞ்சுவர் சற்றே விலகியிருங்கள்** என்று கூறுவார். அவை அவருடைய யோக சக்திக்குக் கட்டுப் படும்.

தேசிகர் பெருமையை அறிந்த கலெக்டர் ஐடன்துரை அவரைத் தரிசித்து அவர் அரு ளால் காசநோய் நீங்கப்பெற்றார்.

ஸ்ரீ தேசிகர் தமது விதேக கைவல்ய காலத்தை முன்கூட்டியே உணர்ந்து கொண் டார். சில நாட்களுக்கு முன்பே ஓலை நறுக்கு ஒன்றில் தாம் பரிபூரணமாகும் காலத்தை வரைந்து தமது ஆசனத்தின்கீழ் வைத்து விட்டார்.

ஸ்ரீ ஈசான்ய ஞானதேசிகரின் பரிபூரண காலம்: கலியுகம் 4930க்குச் சரியான சாலி வாகன சகாப்தம் 1751 (கி.பி. 1829)விரோதி வருஷம் மார்கழி மாதம் 26ம் தேதி குருவாரம் மிருகசீர்ஷ நட்சத்திரம் கூடிய சுபதினம்.

இவருடைய வாழ்க்கைக் குறிப்பு, அன்பர் களுக்கு மணிவிளக்காக உதவி வழிகாட்டி வருகிறது.

விருப்பாட்சித் தேவர்

எஸ். எஸ். வி. எஸ். முத்தையா செட்டியார்
திருவண்ணமலை

விருப்பாட்சித் தேவர், திருவண்ணமலைத் தொடர்புடைய ஒரு பெரிய மகான். சில நூற்றுண்டுகளுக்குமுன் இங்கு தவம் செய்தவர். அண்ணமலையார் இவருக்குப் பிரத்தியட்சம் என்பர். இவர் அண்ணமலையார் கிரிபிரதட்சனம் வந்தபோது, அந்த இறைவனுல் அழைக்கப்பெற்றுப் பல்லக்கில் இடம் பெற்றவர் என்பர்.

குகை நமச்சிவாய மூர்த்திகளின் குகைக்கு மேல், பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் வண்ணம், மலைமீது மற்ருெரு குகையின்கண் விபூதி லிங்கமாய், ஜோதியாய் விருப்பாட்சித் தேவர் விளங்கி வருகிறுர் என்பது ஐதிகம்.

இவரைப்பற்றி வழங்கும் வரலாறுகள் பல. ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடலாம். அன்பர் பலர் இவரைச் சோதிக்க நினைத்து, காய்ச்சின மழுவைத் தொடச் சொன்னுர்கள். விருப்பாட்சித்தேவர் அதைத் தொட்டுப் பார்த்து, அப்படியே எடுத்துச் சாப்பிட்டபடியால் இவருக்கு ''காயல் விருப்பாட்சித் தேவர்'' என்று பெயர் வந்தது என்பர்.

குகை நமச்சிவாயரும் குரு நமச்சிவாயரும்

மல்லிகார்ச்சுனம் என்னும் ஸ்ரீ சைலத்திலிருந்து (இத்தலம் திருப்பருப்பதம் என்று தேவாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது) ''கன்னடசர'' குகை நமச்சிவாயர் எனப்பட்ட சிவயோக சித்தர், திருவண்ணுமலைக்கு எழுந்தருளினர். ''கன்னடசர'' என்ற அடைமொழியால் இம்மெய்ஞ்ஞானி கன்னட நாட்டினர் போலும்! என்று எண்ணும்படியுள்ளது. இப்பெயரில் 'சர' என்ற எழுத்துக்கள் 'சரணர் என்ற சொல்லின் பகுதியோ என்றெண்ணுமாறுமுள்ளது. அடியவர்களைக் கன்னட தேயத்தில் 'சரணர்' என்று கூறுவர்.

அருணகிரி (திருவண்ணுமலை)க்கு வந்தருளிய இம்முனிவர், அம்மலைமீதுள்ள குகையொன்றில் தவம் புரிந்தமையால் குகை நமச்சிவாயர் எனப்பட்டார். அக்குகையின் வாயிலில்நின்ற பெருமரத்தில் ஊஞ்சலமைத்து அதில் அவர் யோக நித்திரை (அறிதுயில்)யில் அமர்வதுண்டாம்.

இவருக்கு அணுக்குத் தொண்டராயிருந்தவர் பேரும் நமச்சிவாயர் என்பது. குருவைப் பேதம் காட்ட, குரு, குகை என்னும் அடைமொழிகள் வழங்கப்பெற்றன. அணுக்கத் தொண்டர், குகை முனிவரைக் கண்கண்ட கடவுள் எனப் பேரன்புடன் போற்றிப் பணிவிடை செய்து வந்தார். குரு பத்திமையின் சிறப்பால் இவரும் பெரும் முனிவராய் விட்டார். சித்தராகிவிட்டார். முக்காலமும் உணரும் ஆற்றல் பெற்றுவிட்டார். ஒருபோது நமச்சிவாயர் சிரித்தார். குரு, ஏன் சிரித்தாய் என்று கேட்டார். ''திருவாரூரில் தியாகப் பெருமான் முன்பு நடனமாடிய நடிகை ஒருத்தி விழுந்துவிட்டாள். அங்கிருந்தார் நகை ஒலி செய்தனர். நானுஞ் செய்தேன்'' என்றார். இதனுல், தம் மாணவரின் பெருமைகளை அறிந்தகுரு, இவரை யாட்கொண்டருளத்தாம் வாந்தி எடுத்ததனை அவரிடந்தந்து ''இதனை மனிதர் காலடி படாத இடத்திலிடுவாய்'' என்றார். அடியார், அவ்விடம் தன் வயிறே என்றுணர்ந்து அதனை அமுதம்போல் அருந்திவிட்டார்.

இதனையறிந்த ஆசான், ''அப்பா! நமச்சிவாயம், இனி நீ சீடனல்ல; குருவாந்தன்மையடைந்து விட்டாய். ஆகவே, நீ சிதம்பரம் சென்று அம்பலக் கூத்தனை வணங்கி அவன் கோயிலுக்கான திருப்பணிகளைச் செய்வாயாக'' என்று அருளிச் செய்தார். அதனுல், நமச்சிவாயர் குரு நமச்சிவாயர் என்னும் பெயர் பெற்றார்.

குகை முனிவரே, தமக்கு அம்பலவராக நாடொறுங் காட்சி வழங்கினுலன்றித் தாம் சிதம்பரம் செல்லேன் என்றார். குகை முனிவர் அதற்கிணங்கினர். பின்னர் குரு முனிவர் விருத்தாசலம் முதலிய ஊர்கள் வழியாகச் செல்லுகையில் பசியால் அவ்வூர்களிலுள்ள உமை அம்மையாரைப் பாடல்களால் பாடிச் சோறு கேட்க, உலக நாயகி அவரன்பின் திறமறிந்து அவ்வவ்வூர்களில் தாமே சோறு

மறை திருநாவுக்கரசு

கொணர்ந்து வழங்கினர். இறுதியில் இப் பெருமான் சிதம்பரம் சேர்ந்து கூத்தப் பெருமானை வணங்கித் தனியிடத்தில் தவம் புரிந்திருந்தார்.

அக்காலத்தில், தில்லைக் கோயிலுக்கான அறக்கட்டளைகள்—ஆபரணங்கள், வாகனங்கள் ஒன்றுமில்லாமற்போகத் தில்லை வாழந்தணர்கள் சிவபிரானை வேண்டினர். அவன் ஆணைப்படி தீட்சிதர்கள் தவம் புரிந்திருக்கும் குரு நமச்சிவாயரை வணங்கி நடமாடும் பெருமான் ஆணையைக் கூறி அவரைத் திருக்கோயிலுக்கு அழைத்து வந்தனர்.

அம்பலவன் அருளைத் தலைமேற்கொண்டார், குரு நமச்சிவாயர். பல அற்புதங்களை அவனருளால் நிகழ்த்தினர். பொது மக்களான அடியவர்களும், பெருஞ்செல்வர்களும் ஏராளமான பொன்னையும், நிலத்தையும் பிறவற்றையுங் குரு நமச்சிவாயர் ஆணைப்படி அறக்கட்டளையாகத் திருக்கோயிலுக்குக் காணிக்கையாக்கினர். மேலும், இச்சித்தர் பல ஊர்கள் சென்று, குறுநில மன்னர்களையும், பெருஞ்செல்வர்களையும் அணுகி அம்பலர் கோயிலுக்குப் பலவகையான திருப்பணிகளையுஞ் செய்தார். இதுபற்றி ஆவணங்களை எல்லாம் சிதம்பரம் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களால் விளக்கமாக அறியலாம். இறுதியிலவர் திருப்பெருந்துறை சென்று அங்கே சிவன் சேவடியடைந்தார்.

இவ்விரு சிவயோகிகள் காலம் இற்றைக்கு முந்நூறுண்டுகட்கு முந்தியதெனக் கருத இடமுண்டு. இருவருமே, சிவனருட் செல்வத்தோடு செந்தமிழ்ப் பாடல்களை அருளும் புலமையும் பெற்றிருந்தார்கள். இதனைக் குகை நமச்சிவாயர் அருளியுள்ள, ''அருணகிரி அந்தாதி'' என்ற நூலாலும், குரு நமச்சிவாயரருளிய ''திருவருணைத்தனி வெண்பா'', ''அண்ணாமலை வெண்பா'' என்னும் நூல்களாலும் அறியலாம்.

குகை நமச்சிவாயர்

சிதம்பரத்தில் வடக்கு மாடி வீதிக்கு வடபால் சிறிது தூரத்தில் தில்லைக் காளியம்மன் கோயிலுக்குச் செல்லும் வழியில் குகைமடம் உள்ளது.

இக்குகை மடம் வீரசைவக் கொள்கையுடைய குரு நமச்சிவாயரால் ஏற்பட்டது. இவர் தம் குருவான குகை நமச்சிவாய மூர்த்திகளின் கட்டளைப்படி நடராசப் பெருமான் ஆலயத் திருப்பணி புரியும் நிமித்தம் வந்து தங்கி இருத்தற்கு அமைத்த இடமே சிதம்பரம்—குகை மடம் எனப் பெயர் பெற்றது. இது சுமார் 700 ஆண்டுகளுக்குமுன் தோன்றியதாகத் திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார் பாளையம்வட்டம் இளங்கம்பூர் கிராமத்திலுள்ள ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

இளங்கம்பூர் கிராமம் சர்வமானியமாக நடராசப் பெருமான் பூசை முதலிய கட்டளைக்காக குரு நமச்சிவாயாரது மரபில்—வழியில்—வந்த சீடர்களில் ஒருவருக்கு உரியது என அக்கல்வெட்டால் தெரிகிறது.

[மேற்கண்ட விவரங்கள் தருமை ஆதீனத்து வெளியீடான ''ஞான சம்பந்தம்'' இராட்சச கார்த்திகைத் திங்கள் 10-12-1975 இதழில் 25-26 ஆம் பக்கங்களில் உள்ளன]

—'சோமலெ'

வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகளும் திருவருணைத் தலமும்





தவத்திரு சுந்தரசுவாமிகள்

உண்ணுமுலையம்மையுடனுக விளங்கும் அண்ணுமலைப் பெருமான், திருக்கோயில் கொண்டு விளங்கும் திருவருணைத்தலம், திருஞான சம்பந்தர் முதலாகச் சைவ சமயக் குரவர்கள் நால்வர்களாலும், குகைநமசிவாயர், குருநமசிவாயர், சிவப்பிரகாசர் முதலிய அருளாளர்களாலும், பாடிப் புகழ்ப்பெற்ற சிறப்புடையதாகும். திருப்புகழைப் பாடியருளிய, அருணகிரிநாத சுவாமிகளால், அருணைப் பதி மேலும் சிறப்பமையப் பெற்றது.

இற்றைக்கு, நூற்று முப்பதாண்டுகளுக்கு முன், திருநெல்வேலியிற் சைவ வேளாள மரபினரான செந்தில் நாயகம் பிள்ளையென்பவரது தவப்புதல்வராகத் தோன்றியவர், வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள்; திருப்புகழ்ச் சுவாமிகள் என்னும் தண்டபாணி சுவாமிகள் தனது ஆறுவது வயதிலேயே, திருநெல்வேலியிற் சீதாராம நாயக்கர் என்பவர்பால், விநாயகர், இலக்குமி, முருகன் ஆகிய தெய்வ மந்திரோபதேசம் பெற்றுத் தினமும் வேற்பூசை செய்யும், நியதியை மேற்கொண்டனர், தியான செபம் செய்து பல திருவருட் காட்சிகளையும் கண்டனர்.

திருநெல்வேலியை அடுத்துள்ள 'சுரண்டை' என்ற பதியிலுள்ள, 'பூமிகாத்தாள்' என்னும் பெயருடைய அம்மன் கோயிலில் நடைபெற்ற திருவிழாவிற்குச் சிறு வயதினரான இவர் சென்றிருந்தனர். அங்குள்ளவர்களிடம் இந்த அம்மன் பெயர், என்ன காரணத்தால், பூமி காத்தாள் என வந்தது என வினவினர். அங்குள்ளவர்களுக்கு அக்காரணம் தெரியவில்லை. இவரே, அப்பெயர்க் காரணத்தை ஒரு வெண்பாவாற் கூறினர்.

"அமுதங் கடையுநா ளாலம் வெடித்துத்
திமுதிமெனத் தீயெரித்துச் செல்ல
—அமுதமெனத்
தீக்கடவுள் உண்டார் திருக்கண்டத்தைப் பிடித்துக்
காத்ததனுற் பூமிகாத் தாள்"

இறைவனுகிய சிவபெருமான் தேவர்கள் பாற்கடல் கடைந்தபோது நஞ்சத்தை, உண்ணலானுர். அது இறைவனுக்கு ஏதேனும் ஊறு செய்யுமானுல், உலகம் முழுவதும் அதனுல் அழிந்துவிடுமே என்றெண்ணிய அம்மை, இறைவனது திருக்கண்டத்தைப் பிடித்து நஞ்சு உட்புகாமல் காத்ததனுற் ''பூமிகாத்தாள்'' என அம்மைக்குப் பெயர் வந்த காரணத்தை அறிந்து பாடலைக் கேட்ட பலரும் வியந்தனர்.

அதுமுதலாகப் புதுப்புதுப் பாடல்கள் பாடி— எழுத்தாணியாற் பனையோலை ஏட்டிற் பிழையற எழுதுவாராயினர். ஆறு சமயக் கடவுளர்கள் மீதும், பொதுக் கடவுள் மீதும், பல்லாயிரம் பாடல்கள் பாடியுள்ளார். சமயபேத மற்ற சமரசக் கருத்துடையவர் சுவாமிகள். பல தலங்கள்தோறும் சென்று ஆங்காங்குள்ள கடவுளர்மீது துதிப்பனுவல் பாடியுள்ளனர். அம்முறையில் திருவருணைத்தலத்திற்கு வந்தனர். அதுசமயம், அங்குள்ள ஈசான்ய மடத்திற்கு வந்தனர். ஒருநாள் முருகப்பெருமான் இவர் கனவில் சுப்ரமண்யக் குருக்கள் என்ற பெயருடைய அருச்சகர் வடிவில் தோன்றி ''நீ, நமது கோபுரத்திற்கு வருக'' என்றனர். அப்படி முருகப்பெருமான் கனவில் சொல்லும்போது, அந்தக் கோபுரத்தை முற்காலத்தில் கட்டிய ''வல்லாள மன்னனும்'' உடனிருக்கக் கண்டனர்.

''அருணைக்கு வட்டின் ஈசானம் அதிற்போய் அயில் வேல் அணிதருகைக்—கருணைக்குகனைத் துதித்து நினைத்திருந்தேன் அவனென் கனவில் தன்—அருமைப் பெயர் சேர் குருக்களுரு வாய்த் தன் சிகரிக் கழைத்தான் அப்-பெருமைச் சிகரி செயு மன்னன் தானும் வந்து பிறங்கினனே'' எனத் தம் வரலாற்று நூலான ''குருபர தத்துவ''த்திற் கூறியுள்ளார்.

அவ்வாறு மறுநாட்காலை தன்வழிபாட்டினை முடித்துக்கோயிலுக்குச் சென்றனர். வல்லாளன் கோபுரம் நேர் சந்நிதிச் சுவர் வைத்து மறைக் கப்பட்டும், சிறுவாயில் வைத்தும், சில பொருட்களை வைக்கப்பட்டும் இருந்தது கண்டு மனம் வருந்தினர். அண்ணுமலையாரையும், உண்ணுமுலையம்மையையும் வணங்கினர். அந் தக் காலத்தில், அவ்வூரில், இராமசாமி முதலி யார் என்பவர் பெரிய செல்வராயிருந்தனர். அவரது உதவியால், நேர் சந்நிதியை மறைத் திருந்த சுவரை நீக்கிவிட்டு, தங்கியிருந்த வௌவால்களையும் விரட்டி, இடத்தைத் தூய் மையாக்கினுர். முருகப் பெருமான் திருவுரு வம் சிறிய அளவில் அழகுடனிருந்தது. அருண கிரிநாதர் கோபுரத்திலிருந்து குதித்த சமயம் குருவடிவில் முன்னிலைப்பட்டு அருளிய பெருமையுடையது அவ்வுருவம்.

முருகப்பெருமானுக்கு முக்கியமாயிருக்க வேண்டியது வேலாயுதமாகும். வழிபாடின்றி யிருந்த அப்பெருமானிடம் வேலில்லை. தன் வழிபாட்டிலிருந்த வேலாயுதம், பெரு மானுக்கு ஏற்றதாக இல்லை. இருப்பினும் பக் கத்தில் சாத்தி வழிபட எண்ணினுர். வேலணிய வேண்டுமென்ற விண்ணப்பப் பதிகத்தைப் பாடி வழிபட்டார். பின்னர் ''வேலரிந்து கொண்டானே'' என்ற மற்ருெரு பதிகம் பாடி, திருப்புகழ் இருபத்து நான்கும் பாடினர். ''சகத்திரதீபம்'' என்னும் பெய ருடைய நூல் ஒன்றையும் ஆயிரம் பாடல்க ளால் இயற்றினர். அச்சமயம் நடந்த தெய் வீக நிகழ்ச்சிகள் பலவாகும். தண்டபாணி சுவாமிகள், தமக்கு, முருகனது தலங்கள் எல் லாவற்றின்மீதும் அபிமானமிருப்பினும் மூன்று தலங்களின்மீது ''மிகுந்த அபிமானமுள்ளது'' எனத் தனி வெண்பா ஒன்றில் கூறியுள்ளார்.

''செந்திற் பதியிற் றிருவருணைக் கோபுரத்தின்
மந்தியுலாம் சோலை மயிலவெற்பில்—வந்தித்துச்
செவ்வேளைக் கண்டோர் திருப்புகழோன்
சிந்தையினுக்
கெவ்வெளை யும்இனியோ ரே''

அவ்வாறுள்ள திருவருணைக் கோபுரத்து முரு கனுக்குப் பாடிய பாடல்கள் மிகப்பல. அவர் கள் சாத்தி வழி பாடாற்றிய வேலாயுதம் இன்றும் அம் முருகன் பக்கம் சாத்தப்பட் டுள்ளது. திருவருணை மக்கள் அடியார் பக்தி யிற் சிறந்தவர்கள். தம்மை நாடி வரும் அடி யவர்களுக்கு அறுசுவை உண்டி, உபசாரத்து டன் அளிப்பவர்கள். ''சகத்தீபம்'' காப்புச் செய்யுளில் சுவாமிகள், இதனைக் குறிப்பிட் டுள்ளார்கள். அருணகிரிநாதசுவாமிகளுக்கு அருளியது போன்று குருவடிவமாக வந்து அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று, ''கோபு ரத்திளையனுர்'' சந்நிதியிலேயே தங்கிச் செபம், தியானம் செய்தனர். சில நாட்க ளுக்குப்பின், மலைமீது முலைப்பால் தீர்த்தத் திற்குச் சமீபமாக, அருணை இராமசாமி முதலி யாரின் உதவியால் ஒரு தவச்சாலை ஏற்படுத்தி அதில் தங்கித் தவமியற்றினர். இரவு நேரங் கள், சாலைக்கு வெளியில் புலி உருமும் சப்தம் கேட்கும். முருகனது திருவருளே துணையாக அச்சாலையிலேயே தங்கித் தவமியற்றி வந்தார். ஒருநாள் காலையில் மலையிலிருந்து கீழேயிறங்கி வந்து அண்ணுமலையப்பரையும் அம்மையையும் கோபுரத்திளையனுரையும் வழிபட்டு அன்று இரவு மலைக்குச் செல்லாமல் கோபுரத்திளை யனுர் சந்நிதியிலேயே தங்கினர். மறுநாட் காலை ஆச்சிரமத்திற்குச் சென்ருர். அங்கு, எப் படியோ புலி ஒன்று தவச்சாலைக்குள் சென் றுள்ளது என்பதற்காக புலியின் அடிச்சுவடு இருந்ததைக்கண்டு, திருவருளை வியந்து நேற் றிரவு தன்னைக் கீழே வரும்படி செய்து புலி யாலேற்படும் ஆபத்தைத் தவிர்த்தருளியது பெருமானது கருணையே என எண்ணித்துதித் திருந்தார். தாம் பாடிய ''பழனித் துரவா யிரம்'' என்ற நூலில் ஒரு பாடலில் இந்நிகழ்ச் சியைக் கூறுகிருர். ''வேங்கை அணுகல்முதற் சொல், அவமிருத்தாயிரம் விலக்கியதும்'' என் பது அது. ''தென்னருணைப் புலி, குகையிற் பிடியாமற்காத்து'' என வேறு பாடலிலும் இதனைக் குறிப்பிடுகின்ருர்.

இப்படித் திருவருணையில் சுவாமிகள் வாழ்ந்த காலத்தில், கோபுரத்தைப் புதுப்பிக் கவும், வேறு சில திருப்பணிகளையும் செய்யவும் தம் மனத்திலெண்ணி அதை நிறைவேற்றித் தரத் திருவருளைச் சிந்தித்திருந்தார்.

''ஆங்கு திகழும் பெருங்கோயிற்கான பணி களவை செய்ய—ஓங்குஞ் சிகரியினைப் புதுக்க உலப்பிலடியார் தமைக் கூட்ட...'' என ஒரு பாடலிற் கூறியுள்ளார். இவ்வாறு தண்டபாணி சுவாமிகள் கருதிய திருப்பணி, இக்காலத்தில் நிறைவேறியுள்ளது, மகிழ்ச்சிக் குரியதாகும். ''ஆறெழுத்தலங்காரம்'' என்னும் நூல் திரு வருணைக் கோபுரத்தில் தங்கியிருந்த சமயம் பாடியது என அந்நூலின் இறுதிப் பாடல் அறிவிக்கின்றது. ''நெல்லிக் கனியிரண் டன்ன பொற் கொங்கை நிலவு தெய்வ,— வல்லிக்கும் கான மறத்திற்கும் கேள்வன் வயற் புனலில்—அல்லிக்கணைகொள் அருணையின் கோபுரத்தண்டினர்க்குச் — சொல்லித்தரு மெழுத்தாறலங்காரச் சுகந்தருமே''.

தண்டபாணிசுவாமிகள், திருவருணையைப் பற்றிப் பாடிய பாடல்கள் அச்சாகி வெளிவந் துள்ளன. இன்னும் அத்தலத்திற்குரிய பல பாடல்கள் அச்சாகி வெளிவராதுள்ளன. கோபுரத்திளையனூர் திருவருளால் அப்பாடல் களும் வெளிவரவேண்டுமென்று திருவருளை மனமொழி மெய்களால்—நினைத்து வாழ்த்தி வணங்குவோமாக.


திருவண்ணுமலை

இந்தத் திருவண்ணுமலை வட ஆர்க்காடு அல்லது கூடலூர் ஜில்லாவைச் சார்ந்த ஒரு தாலுக்காவாகவும், அதன் தலைநகராகவும், இப்போது ஒரு முனிசிபல் பட்டணமாகவும் இருக்கிறது. இது சென்னை தென்னிந்தியா ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 141 மைல்கள் தூரத்தி லிருக்கிறது. இங்கு சூர்யோதய காலத்தில் மலையில் தோற்றம் சிவப்பு வர்ணமாயிருப்பதால் இதற்குத் திருவண்ணுமலை என்று பெயர் உண்டாகியது போலும். இது சமுத்திர மட்டத்திற்கு 266 அடிகள் உயரமுள்ளது.

இங்கிருக்கும் தேயுலிங்கமுள்ள பெரிய சிவன் கோயில் 9 முதல் 11 அடுக்குகளுள்ள 4 பெரிய கோபுரங்களினுலும், மதில் சுவர்களி னுலும், 5 சிறிய கோபுரங்களினுலும் பிரகாசிக்கிறது. கோயிலுக்குள் அநேக சாசனங்களும் சித்ர விநோத வெட்டுகளும் இருப்பதன்றியில் அழகிய கணேசர் கோயிலும், ஆயிரக்கால் மண்டபமும் இருக்கின்றது.

பார்வதி தேவியின் தபசு நீங்கிச் சிவபெருமான் தேயு ரூபமாகத் தரிசனம் கொடுத்தமையால் ஓர் விசேஷ உற்சவம் 10 நாள் வரை கொண்டாடப்படுகிறது. அதாவது, ஒரு பெரிய பாத்திரத்தில் கற்பூர தீபத்தோடு மூலஸ்தானத்திலிருந்து கொண்டுவந்து மத்திய மண்டபத்தில் அருணுசலேஸ்வரருக்கு எதிரில் கொட்டவே, மலையின் மீது முன்னதாக தயார் செய்திருந்த கூம்பு கொட்டகைக்குத் தீப மேற்றிவிடுகிறுர்கள். இந்தக் கூம்புக்கு யாத்திரைக்காரர் ஏராளமாக நெய்யையும் கற்பூரத்தையும் போடுவதனுல் அவை யாயும் கூடி ஜெகஜோதியாக 2, 3 நாள் வரையில் விடாமல் எரிகின்றது.

சேலம் பகடால நரசிம்மலு நாயுடு
'தக்ஷிண இந்தியா சரித்திரம்' 1919
பக்கம் 321, 322




பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி



அண்ணாமலையார் கோயிலும் சிவகங்கைக் குளமும்



சுவாமி கோயில் — விமானம்



சம்பந்த விநாயகர் கோயில்



அருள்மிகு அணி அண்ணாமலை திருக்கோயில்



காவ்யகண்ட கணபதி முனிவர்



ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள்



அருணகிரிநாதர்




YOGI RAMSURAT KUMAR

GODCHILD TIRUVANNAMALAI


யோகி ராம் சூரத் குமார்




ஈசான்ய மடம், திருவண்ணாமலை




ஸ்ரீ ரமணாச்ரமம் - முன் தோற்றம்



கோயில் யானை



தலவிருட்சம் - மகிழ மரம்




அங்கப் பிரதட்சணம் அண்ணாமலை சுவாமி

அவர் கட்டிய அறுபத்துமூவர் மடம்





லிங்கோத்பவ மூர்த்தி
(புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம்
சத்திய கிரீசுவரர் சிவன் கோயில்)



திருக்கல்யாண மண்டபம் : உள்தோற்றம்

சைவ எல்லப்ப நாவலர்

16ஆம் நூற்றுண்டில் தோன்றிச் சைவ சமயத்தையும் தமிழ் இலக்கியத்தையும் வளர்த்த பெரும் புலவர்களில் சைவ எல்லப்ப நாவலரும் ஒருவர். 'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்' என்று பாடிய பெருமையாலும், நாவன்மையின் சிறப்பாலும், இவருக்குச் சைவ என்ற அடையும் நாவலர் என்ற பட்டமும் அக்காலத்தில் வந்து பொருந்தின. இவர் திருவெண்காட்டருகேயுள்ள இராகவ நல்லூர் என்னும் இராதா நல்லூரில் கார்காத்த வேளாள குலத்தில் காலிங்க ராய கோத்திரத்தில் பிறந்தவர். தந்தைபெயர் உண்ணுமுலைப் பிள்ளை. இவரது இயற்பெயர் எல்லப்பர். தாய்வீட்டில் வளர்ந்தமையால், தாழை நகர் எல்லன் என்றும் இவரைச் சொல்வதுண்டு. (தாழை—அடுத்துள்ள பூந்தாழை என்ற ஊர்). இவர் பல புராணங்களும் பிரபந்தங்களும் செய்தார்: புராணங்கள்—திருவண்ணுமலை (அருணுசலபுராணம்), திரிசிராமலை (செவ்வந்திப் புராணம்), திருவெண்காட்டுப் புராணம், தீர்த்தகிரிப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், திருச்செங்காட்டங்குடிப் புராணம். இவற்றுள் திருச்செங்காட்டங்குடிப் புராணம் இன்னும் அச்சாகவில்லை. பிரபந்தங்கள் திருவருணைக்கலம்பகம், திருவருணை யந்தாதி, திருவாரூர்க் கோவை, திருப்பாலைப் பந்தல் உலா என்பன. உலாப் பிரபந்தம் கிடைக்க வில்லை. இவருடைய வாக்கின் சிறப்புப்பற்றி இவருக்குத் திவ்வியகவி என்ற ஒரு பட்டமும் வழங்கும்.

இவர் பாடிய நூல்களுள் அருணுசலபுராணம் சோழ நாட்டில் அதிகமாகப் பயிலப்பட்டது. சைவ வேளாளர் அனைவர் வீடுகளிலும் இதன் ஏட்டுப் பிரதிகளைக் காணலாம்.

இந்நூல்களையன்றி, இவர் வீரை-கவிராச பண்டிதர் பாடிய தமிழ்ச் சௌந்தரியலகரிக்கு விளக்கவுரையும் எழுதினுர். அதன் மூலம் இவரது சாக்த சமய அறிவும் நன்கு விளங்கும்.

எந்த இடத்திலும் தம் நூல்களில் சைவ ஆசாரங்களையும் தத்துவங்களையும் உயர்த்திப் பேசுவது இவர் இயல்பு. சிறப்பாகப் பலர் சைவ நூலும் புராணமும் பாடியிருப்பினும், இவர் ஒருவருக்கே சைவ என்ற அடைமொழி உரியதாயிற்று. அன்றி முருகபக்தியிலும் இவர் தலைசிறந்தவர்;

தோகைமேல் உலவும் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவது எமக்கு வேலை

என்று இவர் பாடிய செவ்வந்திப் புராண வேல் வணக்கப்பாடற் பகுதி அனைவரும் அறிந்தது. நடராசப் பெருமானுடைய துதியாக இவர் பாடியுள்ள பாடலிலேயே நடன ஒலியைக் கேட்க முடிகிறது:

முதிரும் சுவை மதுரம் பெற மொழியும் தமிழ் விரகன் புகழ்
பதிகம் புனை பவனம்பினர் பவபஞ்சன னமலன்கதி
குதிரும்படி பகிரண்டமும் விடையும்படி இலகும்படி
அதிரும்படி நடனம்புரி அதிருங்கழல் அதிருங்கழல்.

இவருடைய மனைவி பெயர் சிவகாமசுந்தரி என்றும் அவரும் சிறந்த தமிழ்ப்புலமை பெற்றவரென்றும் சொல்வதுண்டு.

மு. அருணுசலம்

திரு அண்ணாமலையும் திரு அருட்பிரகாசரும்

நா. மகாலிங்கம், பி. எஸ்சி., எப். ஐ. இ.,

தமிழ்நாடு ஒரு காலத்தில் பல பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. முடியுடை மூவேந்தர்கள் ஆண்ட முத்தமிழ் நாடுகளோடு தொண்ட நாடு, நடு நாடு, கொங்கு நாடு முதலிய வேறு பல பிரிவுகளையும் கொண்டு புகழ் பெற்றிருந்தது என்று வரலாறு கூறுகின்றது.

தேவார ஆசிரியர்களான மூவரும், திருவாசகம் பாடி அருளிய மணிவாசகரும் வாழ்ந்த காலம் வரையில் இப்பிரிவுகள் விளங்கின. அவர்களின் பாக்களில் மேற்குறிப்பிடப்பெறும் நாடுகளின் பெயர்கள் செம்மையாகக் கூறப் பெறுகின்றன.

தமிழ்நாட்டின் இப்பகுப்புக்களுள் நடு நாடும் ஒன்று. தேவாரப் பாடல்பெற்ற நடு நாட்டுத் திருத்தலங்கள் இருபத்து நான்கு. அவற்றுள் திரு அண்ணாமலை பெரும் புகழ்பெற்ற திருத்தலம்.

திரு அண்ணாமலை பஞ்ச பூதத் தலங்களில் நடுநாயகமாக விளங்குவது. பஞ்சபூதத் தலங்கள் என்று கூறப்படும் பேர்பெற்ற திருத் தலங்கள் திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, திருத்தில்லை ஆகியன. இவை நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களையும் குறிக்கும் திருத்தலங்கள் ஆகும். இவற்றுள் அக்கினித் தலமாக வழங்கப்பெறும் சிறப்பு திரு அண்ணாமலைக்கே உண்டு.

இந்தத் தலத்தின் தத்துவப் பெருமையைத் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஞானிகள் பலர் போற்றிப் பாடியிருக்கிறார்கள்.

''அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளி காட்டி'' என்கிறார் திருமூலர்.

''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் ஜோதி'' என்கிறார் மாணிக்கவாசகர்.

''செருவில் ஒருகால் வளைய ஊன்றிச் செந்தீ யெழுவித்தார்'' என்கிறார் திருஞான சம்பந்தர்.

''சோதியே துளங்கும் எண்தோள் சுடர் மழுப் படையினானே'' என்கிறார் திருநாவுக்கரசர்.

''சுடரான தொருசோதி மலைமேவு'' என்று அருணகிரிநாதர் கூறியுள்ளார். இவ்வாறு அடியார்கள் எல்லாம் ஜோதிவளர் மலைச்சுடராகத் திரு அண்ணாமலையைக் கண்டனர்.

ஜோதிச் சுடரான இந்தத் திரு அண்ணாமலையைப் பற்றிச் சென்ற நூற்றாண்டில் தோன்றிய திருஅருட்பிரகாச வள்ளலாரும் மிகச் சிறப்பாகப் பாடியிருக்கிறார். பத்துப் பாடல்கள் அடங்கிய ''திரு அண்ணாமலைப் பதிகம்'' என்று ஒரு பதிகமே அருளியிருக்கிறார்.

மேலும் தனிப்பாசுரப் பகுதியிலும், விண்ணப்பக் கலிவெண்பாவிலும் திரு அண்ணாமலையைப் பற்றிப் பாடியிருக்கிறார். பழமலைப் பதிகத்தில் ''சோதி மலையைப் பழமலையில் சூழ்ந்து வணங்கிக் கண்டேன்'' என்று பாடித் திரு அண்ணாமலையைச் சோதி மலை எனக் குறிப்பிடுகிறார். அருணாபுரி, அருணகிரி, அருணை என்று பலவேறு பெயர்களாலும் திரு அண்ணாமலைத் திருத்தலத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

அது மட்டுமல்ல. வள்ளலார் தலயாத்திரையைப் பற்றிச் சிந்திக்கும்போது அருட்பிரகாசர் அடிச்சுவட்டில் திரு அண்ணாமலை ஒரு தனி இடம் பெறுகிறது.

கருங்குழியில் இருந்து சிதம்பரத்தை வழிபட்டு வந்த அடிகள் இடையிடையே பிறதலங்

களுக்கும் சென்று வழிபட்டார்கள். திரு அண்ணுமலைப் பதிகப் போக்கின்படி வள்ளலார் திரு அண்ணுமலையைத் தரிசிக்கவில்லை எனினும் பின்னளில் அவர் திருவண்ணுமலை சென்று வழிபட்டிருத்தலும் கூடும் என்று ஊகிக்க முடிகிறது.

''பூத்திடும் அவனும் காத்திடும் அவனும்
புள்விலங்கு உருக்கொடு நேடி
ஏத்திடும் முடியும் கூத்திடும் அடியும்
இன்னமும் காண்கிலர் என்றும்
கோத்திடும் அடியர் மாலையின் அளவில்
குலவினை என்றுநல் லோர்கள்
சாற்றிடும் அதுகேட்டு உவந்தனன் நினது
சந்நிதி உறஎனக் கருளே!''

இந்தப் பாடல் வள்ளலார் அருளிய திரு அண்ணுமலைப் பதிகத்தில் மூன்றுவது பாடலாக அமைந்துள்ளது. இது திரு அண்ணுமலை தோன்றிய வரலாற்றையே விளக்கிக் கூறுகிறது.

கலைமகளின் கணவரான பிரம்மதேவனும், திருமகளின் நாயகனுன திருமாலும் தங்களுக்குள் யார் பெரியவர் என்று முடிவில்லாமல் விவாதமிட்டுக்கொண்டிருந்தனர். இவர்கள் விவாதத்துக்கு முடிவுகட்ட இறைவனே முன் வந்தார்.

இருவருக்கும் இடையே இறைவன் அக்கினிச் சுடரே ஒரு மலையாக ஓங்கி நிற்பதுபோல அடிமுடி காண முடியாமல் வந்து நின்ருர். ''உங்களுக்குள் விவாதம் வேண்டாம். உங்களில் யார் பெரியவர் என்று நான் தீர்ப்புக் கூறுகிறேன்'' என்ருர்.

பிரம்மதேவனும் திருமாலும் இறைவன் என்ன சொல்லப் போகிருர் என்று ஆவலுடன் பார்த்துக்கொண்டு இருந்தனர்.

இறைவன் திருமாலைப் பார்த்து ''நீர் எனது அடியைப் பார்த்துவிட்டுத் திரும்பி வரவேண்டும்'' என்ருர்.

பிரம்மதேவனைப் பார்த்து ''நீர் எனது முடியைப் பார்த்துவிட்டுத் திரும்பி வரவேண்டும்'' என்ருர்.

பிரம்மதேவனும், திருமாலும் இறைவன் திருமுடியையும், திருஅடியையும் பார்க்கக் கிளம்பினுர்கள். அப்போது இறைவன் அவர்களைக் கூப்பிட்டு ''என் அடியையோ, முடியையோ பார்த்துவிட்டு யார் முதலில் வந்து என் முன் நிற்கிறீர்களோ அவரே உங்களில் பெரியவர்'' என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

இருவரும் இன்னமும் இறைவனின் திரு அடியையும், திருமுடியையும் தேடிக் கொண்டிருக்கிருர்கள். இந்தச் சம்பவத்தைச் சொல்லிவிட்டு வள்ளற் பெருமான் மேலும் சொல்கிருர்:

''உம்முடைய அன்பர்கள் கோக்கின்ற மாலைகள் எப்படி முடிவில்லாமல் வளர்ந்து கொண்டே இருக்கின்றனவோ அப்படியே அயனும் அரியும் உம் திருஅடியையும், திருமுடியையும் தேடுவதற்கும் முடிவில்லை. ஆனுல் உம் அடியார்களுக்கோ உன் திருஅடியையும் திருமுடியையும் காண்பது மிக மிக எளிதாக இருக்கிறது. இவ்வாறு நீ திருவிளையாடல் புரிந்து வருகிருய் என்று நல்லோர்கள் உம்மைப் பற்றிச் சொல்வதைக் கேட்டு நான் மகிழ்கிறேன். அரியையும் அயனையும் அலைக்கழித்ததுபோல என்னை அலைக் கழிக்காமல் நான் உன் சந்நிதிக்கு வந்து உன் திருஅடியையும், திருமுடியையும் பார்த்து மகிழ எனக்கு அருள்புரிய வேண்டுகிறேன்'' என்று பாடிப் பரவுகிருர் வள்ளலார்.

இந்தப் பாடலில் வள்ளலார் அயனும், அரியும் இறைவனின் திருமுடியையும், திருஅடியையும் தேடிக்கொண்டிருக்கும் கதையை மட்டுமா சொல்கிருர்? இன்னுேர் அருமையான தத்துவ விளக்கத்தையும் தருகிருர்.

கல்வியில் சிறந்த கலைமகளின் நாயகனுக இருந்தாலும், செல்வத்தில் சிறந்த திருமகளின் தலைவனுக இருந்தாலும் இறைவனின் திருமுடியையும், திருஅடியையும் காண முடியாது. அதாவது இறைவனைக் கல்விச் செருக்காலும், செல்வச் செருக்காலும் காண முடியாது. ஆனுல் அன்பின் ஆற்றலாலும் தொண்டின் சிறப்பாலும் இறைவனை எளிதில் கண்டு மகிழலாம் என்கிருர்.

விண்ணப்பக் கலிவெண்பாவில் வள்ளலார் அண்ணுமலையாரையும் உண்ணுமுலை அம்மையையும் அருட்பெருஞ் சோதியாகவும், தனிப் பெருங்கருணையாகவும் எடுத்துக் காட்டுகிருர்.

''உண்ணு முலையாள் உமையொடு மேவுதிரு
அண்ணு மலைவாழ் அருட்சுடரே!—''

என்று அண்ணுமலையில் ஜோதி வடிவமாக விளங்கும் இறைவனை வணங்குகிருர். இறை

வனும் இறைவியும் இணைந்து நின்று திரு அண்ணுமலையில் அருள் புரிகிறுர்கள் என்கிறுர். அதாவது இறைவன் அருட்பெருஞ் ஜோதியாகவும், இறைவி தனிப்பெருங் கருணையாகவும் ஒன்றி நின்று அருள் புரிகிறுர்கள் என்பதை விளக்குகிறுர்.

யோகிகள் அண்ணுமலைக்கும் உண்ணுமுலைக்கும் வேறு ஞானயோகப் பொருள் சொல்கிறுர்கள். அண்ணுமலை என்ருல் நமது அண்நாக்கின் மேல் பகுதியில் இருக்கும் ஜோதி மலையைக் குறிக்கும். இந்த அண்ணுமலையில் உள்ளே இருக்கும் அகண்ட ஒளியை யோகிகள் கண்டு மகிழ்ந்து இருக்கும் போது அவர்கள் உண்ணுமுலையின் அமுதைப் பெறுவார்கள். அதாவது அவர்கள் உள்நாக்கின் முனையிலிருந்து அமுதம் சுரந்து அவர்கள் உடலைப் பொன்உடலாக மாற்றும். அப்போது அவர்கள் பசிப்பிணி முதலிய தொல்லைகள் இல்லாமல் இருப்பார்கள் என்று பொருள் சொல்லுகிறுர்கள்.

ஆந்திர நாட்டில் மும்முடிவரத்திலிருக்கும் பாலயோகிகள் பல ஆண்டுகளாக எந்த ஆகாரமும் இல்லாமல் யோகத்தில் இருக்கிறுர்கள் என்பதை நாம் அறிவோம். இதற்குக் காரணம் அவர்கள் அண்நாக்கின் மேலே உள்ள அண்ணுமலையில் இருக்கும் அகண்ட ஒளியைக் கண்டு அதில் தங்களை மறந்து உலகம் உய்யத் தவம் இருக்கிறுர்கள். அந்த யோகிகளின் உள்நாக்கின் முனையிலிருந்து அமுதம் சுரந்து அவர்களின் உடலைப் பொன்னுடலாக மாற்றி வருகிறது. அதனுல்தான் அவர்கள் உடல் பொன் உடலாகவும் மாறி இருக்கிறது. பல ஆண்டுகளாக எந்த ஆகாரமின்றியும் இருக்கிறுர்கள் என்று சொல்கிறுர்கள்.

வங்காளத்தில் பருதுவான் மாவட்டத்தைச் சேர்ந்த நாவாப்கஞ்ச் என்ற ஊருக்கு அருகில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் கிரிபாலா என்ற ஒரு அம்மையார் இருக்கிறுர்கள். அவர்கள் ஒரு ஞானி. அவர்களுக்கு இப்போது தொன்னூற்று இரண்டு வயது ஆகிறது. அவர்கள் தமது பதின்மூன்ருவது வயதிலிருந்தே எதுவுமே சாப்பிடுவதில்லை. அவர்கள் அப்படி இருப்பதற்குக் காரணம் அவர்களும் அண்நாக்கின் உள்ளே இருக்கும் அகண்ட ஒளியைக் கண்டவர்கள். அதனுல் அவர்கள் உள்நா முனையிலிருந்து சுரக்கும் அமுதத்தை உண்டு எந்த ஆகாரமும் இன்றி வாழ்ந்து வருகிறுர்கள் என்று இதற்கு யோகிகள் ஞான விளக்கம் சொல்லுகிறுர்கள்.

உள்நா முனையிலிருந்து சுரக்கும் அமுதத்தை உடல் தானே ஏற்றுக்கொள்வதனுல் அதற்கு உண்ணுமுலை என்று ஞானயோகிகள் பெயர் சூட்டினுர்கள் போலும்.

இதைத்தான் திருஅருட்பிரகாச வள்ளலாரும் ''அம்மையைக் கண்டேன்! அவர் அருள் கொண்டேன்! அமுதம் உண்டேன்!'' என்று ஆனந்தப் பரவசமாகப் பாடுகிறுர்.

இந்த ஞானயோக விளக்கத்தைச் சாதாரண மக்களுக்கும் புரியும்படிக் குறிப்பதற்காகத் தான் நமது சைவ சமயப் பெரியோர்கள் திருஅண்ணுமலைத் தலத்தில் ஆண்டவனை அண்ணுமலையாகவும், அவர் பெருங்கருணையை உண்ணுமுலை அம்மையாகவும் உருவகப் படுத்தி அதற்கு ஒரு திருக்கோயில் எடுத்துத் திருவிழா எடுத்து வருகிறுர்கள். திருஅண்ணுமலையின் உச்சியில் பெரிய விளக்கேற்றி இந்த ஞானயோக ரகசியத்தை எல்லாரும் காணும்படியும் காட்டி வருகிறுர்கள்.

திருஅண்ணுமலையில் நடைபெறும் விழாக்கள் எல்லாம் ஞானயோக உண்மைகளைப் பாமர மக்களும் புரிந்துகொள்ளும்படி வெளியில் காட்டும் அடையாளங்களாகும்.

உண்மையான நிகழ்ச்சிகளோ யோகிகளின் உடலின் உள்ளேயே நிகழ்கின்ற அற்புதங்களாகும். இந்த உண்மையைத் திருஅருட்பிரகாச வள்ளலார் இன்னெரு பாடலில் தெளிவாக எடுத்துக் காட்டுகிறுர்.

''உலகுயிர் தொறும்நின்று ஊட்டுவித்து ஆட்டும்
ஒருவனே உத்தம னேநின்
இலகுமுக் கண்ணும் காளகண் டமும்மெய்
இலங்குவெண் ணீற்றுஅணி எழிலும்
திலகஒள் நுதல்உண் ணுமுலை உமையாள்
சேர்இடப் பாலுங்கண்டு அடியேன்
கலகஐம் புலன்செய் துயரமும் மற்றைக்
கலக்கமும் நீக்குமா அருளே!''

உலகில் உள்ள உயிர்களின் உடம்புகள்தோறும் நிலைபெற்று இருப்பவர் இறைவன் ஒருவனே! அவர் அந்த உயிர்களுக்கு வேண்டுவனவற்றை ஊட்டுவித்தும் அவர்களை ஆட்டுவித்தும் வருகிறுர். அப்படிப்பட்ட இறைவனின் திருநீறு பூசிய திருமேனியையும், திருநீலக் கண்

டத்தையும், மூன்று கண்களையும் பார்க்க விரும்புகிறார். அத்துடன் இறைவனின் இடப் பாகத்தில் எழுந்தருளியிருக்கும் சுடர்விடும் திலகம் தரித்த உண்ணாமுலை அம்மையாரை யும் சேர்த்துத் தரிசிக்க விரும்புகிறார்.

இப்படிப்பட்ட திருக்கோலத்துடன் இறை வனைக் காணும் பேறுபெற்றால் தம்முடைய ஐந்து புலன்களும் செய்துவரும் துன்பங்கள் தொலையும் என்கிறார். இது மட்டுமா? தம் முடைய மனம் அடைந்து வரும் கலக்கமும் நீங்கிவிடும் என்கிறார். இந்தப் பெரும்பேற் றைத் தமக்குத் தந்து அருளவேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகிறார்.

உலகில் உள்ள ஒவ்வோர் உயிரிலும் இருந்து வரும் ஒரே இறைவனே அவைகளை ஊட்டுவித் தும், ஆட்டுவித்தும் வருகிறார். அந்த இறை வனின் அண்ணாமலையான அகண்ட ஒளியை யும், அதன் கருணையாகிய உண்ணாமுலை அமுதத்தையும் தாம் கண்டு உண்டு அனுப விக்க அருளவேண்டும் என்று இறைவனை வேண்டுகிறார் வள்ளலார்.

இந்த ஞானயோக அனுபவத்தைப் பெறு தற்காகவே திருஅண்ணாமலையை நாடிப் பல ஞானிகள் தொன்றுதொட்டுச் சென்றுகொண் டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து வரு கிறோம். அருணகிரிநாதர், குகை நமசிவாயர், குருநமசிவாயர், ஈசான்ய ஞானதேசிகர், சிவப்பிரகாசர், சேஷாத்திரி சுவாமிகள், ரமணமகரிஷி போன்ற பல பெரிய மகான் கள் திருஅண்ணாமலையிலேயே தங்கியிருந்து உலக நலன்களுக்காக ஞானயோக சாதனை களைப் புரிந்திருக்கிறார்கள்.

திருஅண்ணாமலையின் ஞானயோக ரகசியங் களைத் திருஅருட்பிரகாச வள்ளலாரின் திரு அருட்பாப் பாடல்கள் பலவற்றில் காணலாம்.

திருவண்ணாமலையைப் பற்றி

கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து சமயப் புகழ் பெற்ற அண்ணாநாட்டு அண்ணாமலையார் திருக் கோயிலைப் பார்க்கும் பேறு எனக்குக் கிடைத்தது. இதன் அமைப்பு மிக்க சிறப்புடையது. மிகப்பெரிய கோயில். இதனை இதன் ஆட்சியாளர்கள் தங்கள் உயிர் போலப் பேணி வருதல் கண்டு மகிழத் தகும்.

டாக்டர் மா. இராசமாணிக்கம்
துணைத் தமிழ்ப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக் கழகம்

16—8—'61

காவிய கண்ட கணபதி சாஸ்திரிகள்

பிராமண சுவாமி என்று அழைக்கப்பட்டு வந்த திருச்சுழி வெங்கடராமனுக்கு, ரமணர், ரமண மகரிஷி, பகவான் என்ற பெயர்களைச் சூட்டியவர் இவரே.

கணபதி சாஸ்திரிகள் வேத உபநிடதங்களிலும் சகல சாஸ்திரங்களிலும் காவியங்களிலும் இதிகாசப் புராணங்களிலும் வியாகரணத்திலும் அலங்கார சாத்திரங்களிலும் பெரும் புலமை பெற்றவர். ஆசு கவியாக விளங்கியவர்.

பரம்பரையாக ஜோதிடக்கலை, தந்திர சாஸ்திரம், ஆயுர்வேதம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற ஒரு குடும்பத்தில் 1878—ல் பிறந்தார். 1903—ல் திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார். அண்ணாமலையார்மீது பக்திப் பரவசத்தில் பல கவிதைகள் இயற்றியுள்ளார்.

கணபதி சாஸ்திரி, சக்தி உபாசகர். 1907—ல் மூன்று நாட்களில் உமாதேவியைப் பற்றி ஆயிரம் சுலோகங்கள் இயற்றியவர்.

மந்திர ஜபத்தாலும் தியானத்தாலும் தவத்தாலும் அரும்பெரும் சக்திகளை இவர் பெற்றிருந்தார்.

தீண்டாமை ஒழிப்பு இயக்கத்திற்கு இவர் ஆதரவாக இருந்தார். எனவே 1925—ல் பெல்காமில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் மகாத்மா காந்தி இவரைப் பாராட்டிக் கட்டித் தழுவிக் கொண்டார்.

சாஸ்திரிகள் 1930 வரை திருவண்ணாமலையில் தங்கியிருந்தார். 1936—ல் இயற்கை எய்தினர்.

—ஆதாரம் **பரணீதரன்** அவர்கள் எழுதிய ''**அருணாசல மகிமை**''

பாரத நாடு எல்லாவிதத்திலும் உயர்வடைய வேண்டுமென்றும் சீரிய நோக்கத்துடனேயே வாழ்நாள் முழுவதும் தவம்புரிந்த கணபதி முனிவர் ஆந்திரப் பிரதேசத்தில் விசாகபட்டினம் ஜில்லாவில் பொப்பிலியை அடுத்துள்ள கலவராயி என்னும் கிராமத்தில் 1878—ம் ஆண்டு கார்த்திகை மாதம் பிறந்தார். இளமையிலேயே வேத சாஸ்திர அறிவும் ஆசு கவித்வமும் வாய்க்கப் பெற்றார். பதினெட்டாம் வயதிலேயே தவத்திற்காக வெளிப்போந்து காசி, நாசிக்—பஞ்சவடியருகேயுள்ள திரியம்பகம் முதலான இடங்களில் சிவ பஞ்சாக்ஷரி ஜபத்தில் ஈடுபட்டு, காஞ்சிபுரத்தில் பஞ்சாக்ஷர கோடியைப் பூர்த்தி செய்தார். தலயாத்திரையினிடையில் வங்காளத்திலுள்ள ஸமஸ்கிருத கலாசாலையாரிடமிருந்து காவிய கண்டப் பட்டத்தைப் பெற்றார். திருவண்ணாமலைக்கு வந்து மலை மீதிருந்த பிராமண ஸ்வாமி என்னும் பெரியாரைத் தரிசித்து, அவரிடம் உபதேசம் பெற்று, பகவான் ரமண மஹரிஷி என்னும் பெயரால் அன்னாரை உலகுக்கு அறிவித்து, அவர்தம் உபதேசங்களை **ஸ்ரீ ரமண கீதை** என்னும் 300 சுலோகங்கள் கொண்ட இறவாப் புகழ் வாய்ந்த நூலாக்கினர். வேதஸம்ஹிதைகள் ரிஷிகளின் அனுபூதிக் களஞ்சியம், வெறும் கர்மகர்ண்டம் அல்லவென்று உலகுக்கு விளக்கிய இப்பெரியார், விஸ்வ மீமாம்ஸா, மஹாவித்யா சூத்ரம், ராஜயோகஸார சூத்ரம் முதலிய அரிய நூல்களையும், ஆயுர்வேத வைத்ய, சோதிட கிரந்தங்களையும் அருளியுள்ளார். கல்கத்தா செல்லும் வழியிலுள்ள கரக்பூரை அடுத்த நிம்புராவில் 1936 ஆம் ஆண்டில் இவர் விதேஹரானர். ''இனி எங்கே, அவரைப் போன்ற ஒருவரைப் பார்க்கப் போகிறோம்'' என்று தமது குருவே இவ்வுத்தமரைப் போற்றியுள்ளார்.

ரா. விஸ்வநாத ஸ்வாமி

திரு. ரா. அ. பத்மநாபன் எழுதியுள்ள '**ரமண மஹரிஷி**' என்ற கட்டுரையிலும், சாஸ்திரிகளைப் பற்றிய குறிப்பு உள்ளது. பார்க்க, பக்கம் 127—பதிப்பாசிரியர்

ஸ்ரீ சேஷாத்திரிசுவாமிகள்

''சென்றது கருதார் நாளை சேர்வது நினையார்
கண் முன்
நின்றது புசிப்பார் வெய்யினிலவாய் விண்
விழுது வீழ்ந்தும்
பெரன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையாய்
ஒன்றும் பாரார்
நன்று தீதென்னுர் சாட்சி நடுவான ஜீவன்
முக்தர்''

என்று கைவல்யம், ஜீவன் முக்தரின் லக்ஷணத்தை விளக்குகிறது.

ஊமர் போலும், உன்மத்தர் போலும், சேயே போலும், பேய்போலும் திருவண்ணு மலையில் விளங்கிய ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள், காம கோடி வம்சத்திலே அவதரித்தார்.

காஞ்சி காமாக்ஷி தேவியின் பூஜைக்கு என்று ஸ்ரீ சங்கரர் முப்பது குடும்பங்களை நர்மதா தீரத்திலிருந்து அழைத்து வந்தார். இக் குடும்பங்களில் ஸ்ரீவித்வையில் ஸித்தி பெற்று விளங்கிய ஒரு வம்சத்தில் ஸ்ரீ காமாக்ஷி தேவி யின் அருளினுல் பிறந்தவர் இம்மகான்.

நான்கு வயதிலேயே துதிகள், கீர்த்தனைகள் முதலியன தாயின் மூலம் கற்றுணர்ந்தார். வயது ஏறஏற வடமொழியில் தேர்ச்சி பெற்று சம்பு, அமரம், நிகண்டு முதலிய நூல்களைத் தமது அபார புத்தி விசேஷத்தால் தன் வசப் படுத்தி, தமிழிலும் நன்னூல், நைடதம், நாலடியார் போன்ற பழம்பெரு நூல்களை ஆராய்ந்து அறிந்து ஓர் அசாதாரணக் குழந்தையாக விளங்கினுர். ஏழாவது வயதில் உபநயனம் நடைபெற்றதும் தந்தையின் மரணத்தால் பாதிக்கப்பட்டார். தந்தை அடிக்கடி கூறிவந்த ''அனுபவ ஞானமே பெரிது'' என்ற சொல் கனலாகி கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. ஜபமும், தவமு மாக பெரும் பொழுதைக் கழித்தவருடைய வாழ்க்கையில் மற்ருெரு திருப்பம் நேர்ந்தது. தாய் காலக்ரமத்தில் மரணமெய்தியவள், மரண காலத்தில் சுவாமிகள் மார்பில் மும் முறை அடித்து காசியந்தே மரணுன் முக்தி: ''ஸ்மரணுதருணுசலே'' என்று கூறி, ''அருணு சல அருணுசல'' என்று கூவியபடி தலையைச் சாய்த்தாள். தாயிட்ட பேரை ஊரிட்டு அழைக்கும் என்பது போல் தாயிட்ட ''அருணு சல நெருப்பு'' அகண்டாகாரமாகப் பற்றி எரிந்தது. வீட்டில் கட்டுப்பாடு அதிகரிக்கவே கோயிலிலும் மயான பூமியிலும் ஜபம் செய்ய ஆரம்பித்தார். ஒருநாள், பிதாவின் வரு டாந்தர சிரார்த்தம் அன்று அறையில் பூட்டி வைத்து, கடைசியில் திறந்து பார்த்தால் சுவாமி மாயமாய் மறைந்து விட்டார்! காஞ்சி ஸர்வ தீர்த்தக் கரையில் ஓர் உத்தம சந்நியாசி யிடம் தீட்சை பெற்ருர். காஞ்சியிலிருந்து கிளம்பியவர், திருவண்ணுமலையை அடைந் தார். பிறகு திருவண்ணுமலையை விட்டு நகரவே இல்லை. 'அருணைப் பித்தன், ஆனந் தன், பைத்யம்' என்று பலபேர் பல விதமாகப் போற்றியும் தூற்றியும் வந்தார்கள்.

ஸ்ரீ சுவாமிகள் சேஷ்டைகள் பல செய்து பைத்தியம் போல் திரிந்து, நிரந்தர வாஸம் என்று ஒரு குறிப்பிட்ட இருக்கையின்றி காற்று போல் சுதந்திரமாக இருந்தார். அன்ன ஆகாரம் என்ற தேவையின்றி தவக்கோலம் பூண்டு அருணையில் உலாவினுர். எங்கு சாப் பிடுகிருர், எங்கு இருப்பார், எப்போது வரு வார் என்று சொல்ல முடியாது—எல்லோர் வீட்டிலும் ஸ்ரீ சுவாமிகளுக்கு என்று ஒரு பங்கு உணவு வைத்திருப்பார்கள். பெரும் பாலும் மறுநாள் அது வீணுகவே போகும். தவறி வந்து சாப்பிட உட்கார்ந்தாலும், ஒரு பருக்கை உள்ளே போனுல் ஒன்பது பருக்கையை வாரி யிறைத்து, அள்ளி, பிசைந்து, குழந்தை போல் தான் கூத்தடிப் பார். அவர் அனுக்ரஹம் என்றும் செய்ய வில்லை. நிக்ரஹம் என்றும் செய்யவில்லை. ஆனுல், போகிற போக்கிலே சொன்னது எல்

லாம் பலிக்கும்—தொட்டால் தங்கம் கொழிக்கும்—அப்படியொரு தனிச் சிறப்பு பெற்றிருந்தமையால் எல்லோருக்கும் சுவாமிகளிடம் பயம், பக்தி அதிகம். தவங் கிடந்தாலும் அவரைக் காண முடியாது. ஆனுல், திடீரென்று அவரே வருவார். எதிலும் பற்றுமல் தன் தேக நினைவு, குளிப்பு, தேய்ப்பு, உடை, ஊன் என்ற ஸ்மரணையே இன்றி பறவை போல் சுயேச்சையாகத் திரிந்து வாழ்ந்து வந்தார். ரமண மகரிஷிகளின் தவத்தின் தன்மையை உணர்ந்து ''பாலயோகி'' என்று சுட்டிக் காட்டி, உலகுக்கு ஸ்ரீ ரமண மகரிஷியை அறிமுகப்படுத்திய சுவாமிகள்—1929ம் ஆண்டு ஜனவரி மாதம் 4ம் தேதி காலை பூரண நிஜஸ்வரூபரானுர்.

திருவண்ணுமலையில் ஸ்ரீ ரமணுச்ரமத்திற்கு வெகு சமீபமாக ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் திவ்ய சமாதி அமையப் பெற்றிருக்கிறது. ஜீவிய காலத்தில் சேஷாத்ரி சுவாமிகளைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற ஒரு நல்ல மனிதர் ஸ்ரீ அருணுசலம்—பிரபல சித்த வைத்தியர் சாது நாராயணசாமி பிள்ளை போன்ற சேஷாத்ரி பக்தர்களின் உதவியோடு தினசரி சமாதி பூஜைகளையும் ஆராதனையும் செய்து வருகிறுர்.

ஸ்ரீ சுவாமிகளிடம் மிக மிக ஈடுபாடு கொண்டிருந்த ஸ்ரீ காவேரியம்மாளின் வம்ச வழி வந்தோர், சமீப காலமாக ஸ்ரீ சேஷாத்ரி சேவையில் பூரணமாக ஈடுபட்டுள்ளனர். அவர்களுடைய ஈடுபாட்டை அங்கீகரிப்பதே போல் ஸ்ரீ சுவாமிகள் சூட்சுமமாகக் கொடுமுடி அருகில் உள்ள ஊஞ்சலூரில் ஒரு சமாதியில் ஜீவன் முக்தராயிருந்து வருகிறுர்கள். ஊஞ்சலூர் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் சூட்சும அதிஷ்டானம் மிகப் பிரசித்தி அடைந்து வருகிறது. அதன் தோற்றத் தலைவராகத் திகழ்கிறுர் ஸ்ரீமதி காவேரி அம்மாளின் புதல்வன் ஸ்ரீ சிவராமகிருஷ்ணன். ஊஞ்சலூரில் வருடந்தோறும் விமரிசையாக நடைபெறும் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் ஆராதனை பற்றித் தமிழகம் நன்கு அறிந்திருக்கிறது. கோவையில் ஸ்ரீ சுவாமிகளின் பக்தர்கள் அநேகர் ஒன்றுபட்டு ஒரு தெய்வீக சங்கம் அமைத்துக் கொண்டு மிகச் சிறப்பாகத் தெய்வத் தொண்டில் ஈடுபட்டுள்ளனர். ஸ்ரீ சிவராமகிருஷ்ணன், பூஜையில் மெய்ம் மறந்து அமரும் வேளைகளில், அவ்வப்போது ஸ்ரீ சுவாமிகள் அவர் மனம் பூராவிலும் வியாபித்து, எதிரிலுள்ள பக்தர்களுக்கு அருள்மொழி பகர்வதைக் கேட்பவர்கள் பாக்யசாலிகள்.

*''**ஆனந்த விகடன்**'' தீபாவளி மலரில் 1969-ல் வெளிவந்த இக்குறிப்பு, ''**ஆனந்த விகடன்**'' ஆசிரியர் அவர்களின் அனுமதி பெற்று இம் மலரில் பிரசுரிக்கப் பெற்றிருக்கிறது.*

I am indeed happy to have been able to visit this great temple and bathe for a moment in the atmosphere of all it represents and stands for.

Sri Prakasa

3-12-1953
Governor of Madras

..................vast temple..................well looked after............

Karan Singh

2-1-1955
Maharaja of Kashmir



ரமண மகரிஷி

ரா. அ. பத்மநாபன்

அருணாசலம் அளித்த வான்சுடராகிய ரமண மகரிஷி அவர்களின் பக்தரும், ''ஸண்டே டைம்ஸ்'' என்ற பிரபல ஆங்கில வாரப் பத்திரிகையின் ஆசிரியருமான ஸ்ரீ எம். எஸ். காமத்தின் தலைமையில் .நாங்கள் பத்துப் பதினைந்து பேர் சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கு ஸ்ரீ ரமணாசிரமத்துக்கு 1938 மே மாதத்தில் ஒரு நாள் வந்து சேர்ந்தோம். ஸ்ரீ காமத் தவிர மற்றவர்களெல்லாரும் இளைஞர்கள். அனைவரும் ''ஸண்டே டைம்ஸ்'' ''ஹிந்துஸ்தான்'' அலுவலகங்களில் பணிபுரிபவர்கள்.

ஸ்ரீ பகவான் ரமணரது அறையில் அவர் முன் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டோம். ஸ்ரீ பகவானது தரிசனத்துக்குமுன் அவரவர் மனத்தில் இருந்த கேள்விகள் அனந்தம். குடும்பப் பிரச்னைகள் முதல் ஆத்மீக சந்தேகங்கள் வரை பல. வழியெல்லாம் இவை பற்றிப் பேசி வந்தோம். ஸ்ரீ பகவானிடம் தீர்த்துக் கொள்ள வேண்டிய சந்தேகங்கள் ஒவ்வொருவருக்கும் இருந்தன.

ஆனால், ஸ்ரீ ரமணரது அறையில் போய் அவரது சந்நிதானத்தில் அமர்ந்த எங்களில் யாருக்கும் ஒரு கேள்விகூடக் கேட்கத் தோன்றவில்லை! ஏதேதோ கேட்கவேண்டும் என்றிருந்தவர்களெல்லாம் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள்! சிலர் கண்ணை மூடித் தியானத்திலிருந்தார்கள்; சிலர் கண் திறந்து ஸ்ரீ பகவானது தரிசனத்தில் மெய்மறந்திருந்தார்கள்!

ஆம், ஸ்ரீ ரமணரது முன்னிலையில் போய் அமர்ந்ததுதான் தாமதம், அனைவர் மனத்திலுமிருந்த சந்தேகக் கேள்விகளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன! கேட்க நினைத்த கேள்விகளெல்லாம் மறந்து போயின! அதற்கு மாறாக, கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைத்து விட்டதுபோல, ஒவ்வொருவர் மனதிலும் ஆழ்ந்த அமைதி குடி கொண்டுவிட்டது! அதன் களிப்பு சொல்லிலடங்காதது!

பெரியவர்களது தரிசனத்தின் மகிமையை அன்று இளைஞர்களான நாங்கள் அனைவரும் நேரில் உணர்ந்தோம். தக்ஷிணாமூர்த்தியின் மௌன உபதேசம் என்றெல்லாம் அறிந்தவர்கள் கூறுவதன் பொருளை ஒருவாறு கிரகித்துக் கொண்டோம். ஸ்ரீ ரமண பகவானின் மௌனக் கடாக்ஷ மகிமையை நாங்களும் ஓரளவு புரிந்து கொண்டோம்.

* * *

அன்று மாலை, வேத பாராயணம் நடந்தது. ஸ்ரீ ரமணர் அதைக் காதுகொண்டு கேட்டு அனுக்கிரகித்தார்.

பிறகு, மறுநாளது மகா பூஜைக்கான பல்வேறு காரியங்களில் ஈடுபட்டோம். பெரிய அண்டாக்களில் தண்ணீர் நிரப்புதல், மூங்கில் தட்டிகளைக் கொண்டு சில அறைகள் நிறுவுதல், காய்கறி மூட்டைகளை சமையலறையை ஒட்டிய

பெரிய கொட்டகை ஹாலில் கொண்டு சேர்த்தல், பல்லாயிரக்கணக்கான பேர் அமர்ந்து சாப்பிடப் போகும் திறந்தவெளியில் தரையில் உள்ள கல், கரடுகளை நீக்கி, மண்தூவி சமன் செய்தல்—இவ்வாறு பல்வேறு வேலைகள் எங்களைக் கவர்ந்தன.

இரவு உணவு அருந்தியபின், கண் விழித்து வேலை செய்யக் கூடியவர்கள் காய்கறி நறுக்கும் பணியில் ஈடுபடலாமென ஆசிரியர் காமத் கூறினார். ஒரு சிலர் தவிர, மற்றெல்லாரும் அந்தச் சாப்பாட்டு ஹாலில் அமர்ந்து காய்கறிகள் நறுக்க ஆரம்பித்தோம். நறுக்கத் தெரியாதவர்கள் தெரிந்து கொண்டு செயலில் ஈடுபட்டார்கள்; கற்றுக்கொள்ளவே முடியாதவர்கள், காய்கறி நறுக்கலில் விழுந்த தோலிகள், தேங்காய் உரித்த நார்கள் முதலியவற்றை அப்புறப்படுத்த உதவினார்கள்.

இரவு பத்து மணிக்கு எங்களுக்கு மகிழ்ச்சிகரமானதோர் அனுபவம் ஏற்பட்டது. ஸ்ரீ ரமணரும் வந்து எங்களோடு ஒருவராக உட்கார்ந்து கொண்டு, தாமும் ஒரு அரிவாள்மனையில் காய்கறி நறுக்கி உதவினார். அவரது மலர்ந்த வதனம் எங்களுக்கு அளித்த உற்சாகத்திற்கு அளவில்லை; நடுநடுவே நகைச்சுவையுடன் அவர் பேசிக் கொண்டிருந்தது, எங்களுக்கு அளித்த மகிழ்ச்சியை விவரிக்க முடியாது. விளையாட்டுப்போல, மலையளவு இருந்த காய்கறிகளை நறுக்கித் தள்ளி விட்டோம். எல்லாவற்றையும் முடித்து எழுந்தபோது தான் மணி ஒன்றுக்குமேல் ஆகிவிட்டது என்பதை உணர்ந்தோம். அதுவரை பொழுது போனதே தெரியவில்லை!

*　　*　　*

விடியற்காலை மூன்று மணிக்கு எழுந்து, ஆசிரமத்துக்கு அருகிலிருந்த குளம் ஒன்றில் குளித்துவிட்டு வந்த நாங்கள், ஸ்ரீ ரமணரை தரிசித்துவிட்டு அவரவருக்கு அளிக்கப்பட்டிருந்த பணிகளில் ஈடுபடலானோம்.

இரவே பக்தர்கள் கூட்டம் கூடவாரம்பித்திருந்தது; விடியற்காலையிலோ ஆசிரமத்துக்கு கிராம மக்கள் ஏராளமான பேர் வந்து கொண்டிருந்தார்கள். காலையில் நடக்கவிருந்த ஸ்ரீ மாத்ருபூதேசுவர பூஜைக்குக் குந்தகமில்லாமல் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது பெரிய காரியமாகவிருந்தது. அப்போது ஸ்ரீ மாத்ருபூதேசுவரர் கோயில் எழவில்லை. ஆனால், மக்களின் பக்திக்குக் குறைவில்லை. பூஜை மிகுந்த பக்தி சிரத்தையுடன் நடந்தது.

கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்காக அரிசிச் சோறு அண்டர் அண்டாவாகச் சமைக்கப்பட்டிருந்தது, அவ்வளவு பெரிய சோற்று மலையை நான் அதற்கு முன் கண்டதில்லை; அதற்குப் பின்னரும் காணவில்லை.

மலையாகக் குவிந்த சோறு மட்டும்தானா? ஆள் உயரத்துக்கு இருந்த பல பித்தளை சோடு தவலைகளில் குழம்பும் மோரும் இருந்தன. இவைகளை எடுத்துப் பரிமாற அன்ன வெட்டிகளும், சாதத் தட்டுகளும், நீண்ட கரண்டிகளும், கோகர்ணப் பாத்திரங்களும், மூக்குக் கற்சட்டிகளும், கொத்து சட்டிகளும், நீர் வார்க்கச் செம்புகளும் டம்ளர்களும் எல்லாம் இருந்தன.

சுமார் ஒன்பதரை மணிக்கு அன்னதானம் ஆரம்பமாயிற்று. வரிசை வரிசையாக ஆயிரக்கணக்கான மக்களை உட்கார வைத்து, இலை போட்டு, சாதம், குழம்பு, மோர் பரிமாறினோம்; தாகத்துக்குக் குளிர் நீரளித்தோம். அன்னம் உண்டவர்களில் வயிறு உலர்ந்த ஏழை எளியவர்கள் எத்தனை பேர், எத்தனை பேர்! ஒரு நாளாவது அவர்களுக்கு வயிறூர உணவு பரிமாறும் வாய்ப்பு. இது ஒரு பெரும் பாக்கியமெனக் கருதி, நாங்கள் அலுக்காமல் சலிக்காமல் பந்திமேல் பந்தியாக உணவு பரிமாறினோம். சாதத் தட்டுகளையும் குழம்புக் கற்சட்டிகளையும் கங்காதீர்த்தப் பாத்திரங்களையும் தூக்கித் தூக்கிக் கைகள் கடுத்து விட்டன; நடந்து நடந்து கால்கள் சோர்ந்து விட்டன. ஆனால், யாருமே சளைக்காது உற்சாகத்தோடு ஓடியாடிப் பணி புரிந்தோம்.

அன்று பிற்பகலில், ஸ்ரீ ரமண மஹரிஷிகளை வணங்கி விடைபெற்றுக் கொண்டோம். அவர் என்ன சொன்னார் என்பது நினைவில்லை, எவ்வாறு விடைகொடுத்தார் என்பது ஒன்றுதான் நினைவிருக்கிறது. ஒவ்வொருவரும் வணங்கிய பின் கை அசைத்து ஆசீர்வதித்து, தலையாட்டி முறுவலித்ததுதான் நினைவில் நிற்கிறது. ஆசிரியர் காமத்திடம் மட்டும் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தார்.

ஸ்ரீ ரமணாசிரமத்தில் இரண்டு தினங்கள் முக்கியமாகக் கொண்டாடப்படுகின்றன; ஒன்று ஸ்ரீ மாத்ருபூதேசுவர பூஜை, வைகாசி மாதம் கிருஷ்ணபக்ஷநவமியன்று வருவது ; மற்றது,

மார்கழி மாதம் ஆருத்திரா தரிசனத்தன்று வரும் ஸ்ரீ ரமண ஜயந்தி. ஸ்ரீ மாத்ரு பூதேசுவர பூஜையை மகா பூஜை என்றும் கூறுவதுண்டு. ஸ்ரீ ரமணரை ஈன்றெடுத்த தாயாரின் அடக்கதின பூஜை இது. இவ்விரு விழாக் காலங்களிலுமே அன்னதானம் பெருமளவில் நடைபெறும். பசித்தவர்களுக்கு அன்னமிட்டு உபசரிப்பதில் ஸ்ரீ மஹரிஷிகளுக்கு மகா திருப்தி. சாதாரண தினங்களில் கூட, ஆசிரமத்துக்கு வரும் அடியார்களுக்கு அன்னமிடுவதில் மிகுந்த அக்கரை காட்டுவார் ஸ்ரீ ரமணர். ஏழை பணக்காரர் என்ற வேறுபாடின்றி, ஜாதி மத பேதமின்றி, அனைவருக்கும் உணவளிக்கப்படும். ஆசிரம போஜனமே பிரசாதம் என்ற கருத்து அனைவருக்கும் உண்டு. அன்னதானம் ஸ்ரீ பகவத் பூஜை என்றே ஸ்ரீ மகரிஷிகள் கருதினர்.

* * *

ஸ்ரீ ரமண மஹரிக்ஷிகள் கொண்ட வாழ்க்கை எளிமையானது; நம்பிக்கை நிறைந்தது. அவரது ஆசிரமத்தில் அவரை அணுகுதலும் அவ்வாறே மிக எளிதாகவிருந்தது. யாரும் அவரைச் சுலபமாக தரிசிக்க முடிந்தது. யார்க்கும் இன்முகத்துடன் ஆறுதலளித்தார் அம்மகான்.

* * *

இராமநாதபுர மாவட்டத்தில் திருச்சுழி என்ற ஊரில் ஆருத்திரா புண்ணிய தினத்தில் (1879, டிஸம்பர் 30ஆம் தேதி) வேங்கடராமன் என்ற பாலகனைப் அவதரித்த அவர் அருணசலம் என்ற பெயர் கேட்டுப் புளகாங்கிதமடைந்ததும், பிறகு ஒரு நாள் மரண பயம் கொண்டு ஞான திருஷ்டி பெற்றதும் அவரது வாழ்க்கையை மாற்றி விட்டது. படிப்பில் சிரத்தை குறைந்தது. தமயன் கோபித்துக்கொள்ளவே, ''உண்மைதானே! என் ஐயன் அருணசலன் அழைக்கும்போது பள்ளிக்கூடத்தில் இருந்து கொண்டிருப்பதன் நியாயமென்ன?'' என்ற எண்ணமேற்பட்டது. கையில் மூன்று ரூபாயை எடுத்துக் கொண்டு, ''நான் என் தகப்பனுரைத் தேடிக் கொண்டு அவருடைய உத்தரவின்படி இவ்விடத்தை விட்டுக் கிளம்பி விட்டேன். இது நல்ல காரியத்தில்தான் பிரவேசித்திருக்கிறது. ஆகையால் இந்தக் காரியத்திற்கு ஒருவரும் விசனப்பட வேண்டாம். இதைப் பார்ப்பதற்காகப் பணமும் செலவு செய்யவேண்டாம்'' என்று சீட்டு எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டுக் கிளம்பி விட்டான் வேங்கடராமன்.

செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி, காலை, திருவண்ணுமலையை அடைந்து, ஒரே ஓட்டமாக கோயில் மூலஸ்தானத்தை அடைந்து, ''அய்யனே, வந்து விட்டேன்!'' என்று தன்னை அர்ப்பணித்துக் கொண்டான் வேங்கடராமன். பிறகு, முடியெடுத்து மொட்டையடித்துக் கொண்டு, வேட்டியைக் கிழித்துக் கோவணம் தரித்து, சந்நியாசக் கோலத்துடன் கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தில் தவத்தில் ஆழ்ந்தான்.

பாலயோகி வேங்கடராமன் பிறகுஅருணுசல மலைமீது சென்று பல குகைகளில் தவமிருந்தார். உணவு தண்ணீர் இன்றிப் பல தினங்கள் சமாதியில் இருப்பார். கண்ணைத் திறந்து பார்த்தபோது கிடைக்கும் உணவை உட்கொண்டு, மீண்டும் தவத்தில் ஆழ்வார்.

இப்படியொரு பாலயோகி திருவண்ணுமலையில் இருப்பதறிந்து தாயும் தேடி வந்தாள், ஆனுல் பாலயோகி வீடு திரும்ப மறுத்துவிட்டார்; தாய் ஊர் திரும்பினுள்.

1907இல் காவ்யகண்ட கணபதி சாஸ்திரிகள் என்ற மகா பண்டிதர் மூலம் உலகம் பாலயோகியை ஸ்ரீ ரமண மஹரிஷி என அறிந்தது. கரைகண்ட கல்வி கற்றும் தவத்தின் தாத்பரியத்தை உணர்ந்தேனில்லை என்று ஸ்ரீ ரமணரின் பாதங்களைப் பற்றிக் கொண்டு இறைஞ்சினுர் காவ்யகண்டர். ஸ்ரீ ரமணர் மௌனமாய்ப் பதினைந்து நிமிடங்கள் அருள்பாலித்து, ''நான், நான் என்பது எங்கேயிருந்து புறப்படுகிறது? அதை உணர்ந்தால் அதுவே தவம்'' என உபதேசித்தார். கணபதி முனிவரின் ஐயங்கள் தீர்ந்தன. ''மறுவிலாக் காட்சிப் பெரியனை இனிமேல் மஹரிஷியென்றே வணங்கிப் பணிக'' என்று பாடிப் பரவசரானுர்.

ஸ்ரீ ரமண மஹரிஷிகளது பெருமையை இதன்பின் பலரும் உணரலானுர்கள். காவ்யகண்டர் ஸ்ரீ ரமணரிடமிருந்து பெற்ற ஞான மணிகளை ''ஸ்ரீ ரமண கீதை'' என்ற நூலாகப் பாடினுர். ஸ்ரீ ரமண மஹரிஷிகளும், விருபாக்ஷகுகையில் தவமிருந்தபோது ''அக்ஷரமண மாலை'' என்னும் பாடலை அருளினுர். பிற பாடல்களும் பின்னர் பாடி அருளினுர். இக்காலத்தில், போலீஸ் உயர் அதிகாரியாகவிருந்த ஐரோப்பியர் எப். எச். ஹம்ப்ரீஸ்

ஸ்வாமிகளை வந்து தரிசித்து, உபதேசம்பெற்று பிறகு கிறிஸ்தவத் துறவியானர். ஸ்ரீ ரமண ரின் பெருமையை உணர்ந்த முதல் ஐரோப் பியர் அவர். பிற்காலத்தில், மேஜர்சாட்விக், பால் பிரண்டன், ஆர்தர் ஆஸ்போர்ன் முத லியவர்கள் ஸ்ரீ ரமணரது பக்தர்களானுர்கள். புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் ஸாமர் ஸெட் மாமும் ஸ்ரீ ரமணரை தரிசித்துச்சென்று 'தி ரேஸர்ஸ் எட்ஜ்' ("The Razor's Edge" —கத்தியின் கூர்முனை) என்ற நாவலில் அவர் புகழை எடுத்தோதினுர்.

1916இல் ஸ்ரீ ரமணரது அன்னை அவருடன் வந்து நிரந்தரமாகத் தங்கினுர். 1922 இல் அன்னை வியோகமானதும் அவரது உடலை தற்போதைய ஆசிரமம் இருக்குமிடத்தில் அடக்கம் செய்து சமாதி கட்டி, லிங்கம் ஸ்தாபித்து ஸ்ரீ மாத்ருபூதேசுவராக அவரை வழிபடலானுர்கள். அன்னையின் சமாதி ஏற்பட்ட இடமே பின்னர் ஸ்ரீ ரமணுசிரமமாக மலர்ந்தது.

* * *

ஸ்ரீ ரமணுசிரமம் மற்றெத்தனையோ ஆசிர மங்களைப் போல் கடுமையான கட்டுப்பாடுகள் நிறைந்ததன்று. அடிப்படையான ஆத்மிக ஒருமைப்பாட்டில், எளிமை கலந்த சூழ்நிலை அங்கு நிலவியது, நிலவுகிறது. சிறியோர், பெரியோர், படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரர், ஆண், பெண் யாவரும் சமமாக ஸ்ரீ ரமணரை நெருங்கி, ஐய விளக்கம் பெற்று, அமைதி உற்றனர். மாந்தர் மட்டுமன்றி, அணில்கள், குரங்குகள், நாய்கள், பசுக்கள் யாவுமே அவருடைய அன்புக்குப் பாத்திரமாகி ஆசிரமத்தில் சுயேச்சையுடன் வாழ்ந்தன.

1950ஆம் ஆண்டு ஸ்ரீ ரமண மஹரிஷிகள் தமது இடது கையில் புற்றுநோய் கண்டு, தாங்க முடியாத வலியையும் இன் முகத்துடன் தாங்கியிருந்து, பலவித வைத்திய முயற்சிகளுக் கும் உட்பட்டு, முடிவில் ஏப்ரல் 14ம் தேதி இரவு 8-47க்கு விதேஹ முக்தியடைந்தார். பக்தர்கள் புடைசூழ்ந்து ஸ்ரீ மஹரிஷிகளது ''அருணசலமாலை'' தோத்திரப் பாக்களைப் பாடிக் கொண்டிருக்க, ஸ்ரீ மஹரிஷிகள் ஸ்தூல சரீரத்தை விட்டு விதேஹமானுர். பிரகாசம் மிகுந்த பெரிய எரிநட்சத்திரமொன்று அவர் விதேஹ முக்தியடைந்த அந்த க்ஷணம் வானில் சுடர்விட்டுப் பிரகாசித்தது. இந்த எரி நட் சத்திரம் சென்னையிலும் காணப்பட்டது. அக் காலத்திய ''ஹிந்து'' முதலிய ஆங்கிலப் பத் திரிகைகளும் இந்த அதிசயத்தைச் செய்திகளில் தந்தன.

''நான் ஏதோ போகிறேன் என்று சொல்லு கிருர்கள். நான் எங்கே போவேன்? இங்கு தான் இருப்பேன்'' என்று ஸ்ரீ மஹரிஷிகள் அந்திய காலத்தில் கூறிய விளக்கம், அவரது மகாசக்தி இன்னும் அருணசலத் தலத்தில் சுடர் விட்டுப் பிரகாசிப்பதைக் காட்டும். அருணசல மலையென்பது ஏதோ ஜடப்பொருள் அல்ல, அதை ஒரு முறை பிரதக்ஷிணம் செய்து வா, தெரியும் என்று அடியார்களுக்கு அருளு வார் ஸ்ரீ ரமணர். அருணசலத்தின் மகிமை அளவிடற்கரியது! கும்பாபிஷேகத்திற்கு அங்கு கூடும் அடியார்கள் ஆதி அருணசலத்தின் புகழ் பாடி ஆன்மிக வளம் கூடுவார்களாக!

ஜடிநி சண்முக யோகினி

பாண்டி நன்னுட்டைச் சேர்ந்த சிவகிரி என்னும் தலத்தில் தொண்டை மண்டல சைவ வேளாளர் குலத்தில் சண்முகம் என்னும் பெயருடன் பிரம்ம சாரிணியாய் விளங்கிய அம்மையார். இவரது இருபத்து நான்காம் வயதில் ஒரு நாள் இரவு, அண்ணுமலையார் அடியாராக வந்து ஆட்கொண்ட நிலையில் கனவு கலைந்து நோக்க, தம் தலைமுடி சடைமுடியாக மாறி விடுகிறது. உள்ளம் உருக உடலம் சிலிர்ப்பெய்த, திருவண்ணுமலைக்கு வந்து முக்கரணங்களாலும் தெய்வப்பணி யாற்றி வந்தவர்.

சமயாசிரியர் நால்வருக்கும் குருபூசை நிகழ்த்தி, மலேவலம் வந்து, தட்சிணுமூர்த்தி, அண்ணுமலேயார், அம்பாள் முதலிய சுவாமிகளுக்கு பாலாபிடேகம் செய்வித்து, தும்பை மாலே அணிவித்து, கற்பூர தீபம் காட்டுவித்து, சுமார் ஐம்பது வருடங்களாக தவம் செய்துவந்த பெரும் தவசியார் இவர் ஆவார். பருத்து நீண்ட ஒற்றைச் சடையும், பரந்த முகத்தில் ஒளிரும் கண்களும், ஆழ்ந்த நோக்கும், தூய நெஞ்சமும் இதை வெளிப்படுத்தும்.

பாணி பத்திரர்

இம் மகான் அண்ணுமலேயார் அரும்பெரும் மகிமைகளேக் கேட்டறிந்து, இத்தலத்தில் சுவாமியை வலம்வந்து பூசித்து, முத்தியடைந்தவர்.

பத்திராசல சுவாமிகள்

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இங்கு வாழ்ந்த பெரியார். எப்பொழுது பார்த்தாலும் அக்கிள் இடுக்கில் ஒரு மூட்டை இருந்துகொண்டே இருக்கும். சதா தியானத்தில் ஆழ்ந்து இருப்பார். 'உண்பது எல்லாம் மலமே' என்னும் வள்ளலார் வாக்குக்கு இணங்க வாழ்ந்தவர். கருத்த கம்பீரமான தோற்றமுடைய இப்பெரியார் சமாதி, திருவண்ணுமலே சேஷாத்திரி மடாலயம் அருகில் உள்ளது.

ஈசுவர சுவாமிகள்

இப்பெரியார் சோழவள நாட்டில் திருக்கோயிலூருக்கு அடுத்த இறைவாசநல்லூர்ப் பதியில் அருணுசல தீட்சிதர்-சதி பாலாம்பிகை தம்பதிகள் பெற்ற தவப்பயனுய், கலி 4981 விக்ரம வருடம் கார்த்திகை மாதம் 9ம் நாள் தோன்றியவர். 'ஈசுவரன்' என்னும் நாமம் பூண்டு, திருக்கோயிலூர் ஆங்கிலக் கல்லூரியில் கல்வி பயின்று, அருணகிரிப் பெருமானின் திருவருட் செயலுக்கு உள்ளம் மிக மகிழந்து, கலி 5011 சாதாரண வருடம் மாசி சிவராத்திரியில் திருவண்ணுமலே வந்து, 'ஈசுவர சுவாமிகள்' என்னும் தவப்பெயர் பூண்டு ஒழுகி வந்தவர்; தமிழ், வடமொழி, ஆங்கில மொழிகளில் புலமை பெற்ற இவர், அடியாரின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிப்பார். 'மகாதேவா! மகாதேவா!'-என்று கணப்பொழுதும் இடைவிடாது தியானம் செய்பவர்,

பிட்சைக்கே இச்சித்த இவர் ஸ்ரீ அண்ணுமலேயார் ஆலயத்தின் மூல மண்டபத்தில் வாழ்ந்து, தினமும் ஏழாம் பிரகார வலமும், கிரி வலமும் செய்வார். இவருடைய சமாதித்தானம், இங்குள்ள ஈசான்ய தீர்த்தத்திற்கு அருகில் உள்ளது.

— மேற்கண்ட நான்கு குறிப்புகளுக்கும் ஆதாரம் திருவண்ணுமலே (வரலாற்றுச் சித்திரம்)
ஆசிரியர்: திரு. சி. ஈ. எஸ். பெருமாள், இந்து சமயப் பிரசாரகர்
வெளியிட்டோர்: ஸ்ரீ புவனேஸ்வரி புத்தகாலயம், பிள்ளேயார்பாளேயம், காஞ்சிபுரம்.

யாழ்ப்பாணம்
ஞானப்பிரகாசர்

''திருவண்ணுமலை ஞானப்பிரகாசர்'' என்ற பெயரால் வழங்கப்பெறும் இவர் ஈழநாட்டில் (ஸ்ரீலங்காவில்) யாழ்ப்பாணத்திலுள்ள வீணுகானபுரம் சாலிவாடீசுர (திருநெல்வேலி) என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவர் காலம் 1550 முதல் 1610 அளவில் இருக்கக்கூடும்.

இவர் திருப்புகலூரை அடைந்து, ஆதி சைவராகிய பெரிய அண்ணுசாமி குருக்களிடம் தீட்சை பெற்ருர். பின்னர், சில காலம் சிதம்பரத்தில் தங்கியிருந்தார். அங்கிருந்து கௌடதேயமடைந்து அவ்விடத்தில் பிராமண சந்நியாசி ஒருவர் தம் சீடர்களுக்குக் கற்பித்து வந்த தர்க்க மீமாஞ்ச வேதாந்த சாத்திரங்களை அருகேயிருந்து கண்ணுற்றும் கேட்டும் நாள்தோறும் அவற்றைக் குறித்துச் சிந்தித்து வந்தார். ஒருநாள் அவ்வாசிரியர், இவரை நோக்கி, ''நீவிர் யாவிர்? நீர் இச் சாத்திரப் பாடங்களின் சாரத்தை யுற்றுக் காலந்தோறும் கவனிப்பதில் நன்கு புலப்படுகின்றனவா?'' என்று வினவினர். ஞானப்பிரகாசர் கூறிய விடைகளைக் கேட்டு ஆச்சரியமுற்று அத்துறவியார் இவருக்கு அச் சாத்திரங்களை முற்றும் கிரமமாய்க் கற்பித்து வந்தார். ஓராண்டுக்குள் ஞானப் பிரகாசர் அச்சாத்திரங்கள் அனைத்திலும் பெரும் புலமை பெற்ருர்.

பிறகு, ஞானப்பிரகாசர் திருவண்ணுமலையை அடைந்து, அங்கிருந்த (இப்போது குன்றக்குடியில் உள்ள) ஆதீனத்து அக்காலத்து மடாதிபதிகளிடம் சந்நியாசம் பெற்று, சிவ ஆகமங்களை ஓதி உணர்ந்தார். பின்னர் இவர் சிதம்பரம் அடைந்து பல்லாண்டுகள் அங்கேயே தங்கி, சமய சாத்திர நூல்கள் பலவற்றை வடமொழியில் இயற்றினர். இவர் தங்கியிருந்த மடத்திற்கு அடுத்த நிலத்தில் இருந்த நிதிக் குவையைக் கொண்டு மிகப் பெரியதொரு திருக்குளமும் அதன் அருகில்திரு மடமும் அமைத்தார். இவை **ஞானப் பிரகாசர் குளம்** என்றும் **ஞானப் பிரகாசர் மடம்** என்றும் சிதம்பரத்தில் கனக சபை நகர் அருகே இன்றும் நின்று நிலவுகின்றன.

இவர் இயற்றிய பல நூல்களுள், இப்போது கிடைப்பது **சித்தியார் சுபக்கவுரை** மட்டுமே. இதன் இறுதியில் இவரைப் பற்றி ஒரு பாடல் காணப் பெறுகிறது:

''சொல்லில் நாவில் துரிசறும், சோத்திரத்து
ஒல்லுமேற் சிவஞானம் உதித்திடும்,
செல்லு மெய்அரு ணந்திசெய் சித்திக்கு
நல்ல ஞானப்ர காசன் நவிற்றுரை''.

இக்கட்டுரைக்கு ஆதாரம்: தமிழ் இலக்கிய வரலாறு: 16ம் நூற்ருண்டு. பாகம் 3, பப: 62-69. ஆசிரியர்: மு. அருணுசலம்.

பதிப்பாசிரியர் குறிப்பு: இதுவரை குறிப்பிடப் பெற்றவர்கள் அண்ணுமலையில் வாழ்ந்த ஞானியர், இப்பெரும் தலத்தில் இன்றும் ஞானியர் பலர் மலையிலும் குகைகளிலும் நகரிலும் உள்ளனர். அவர்களுள் ஓரளவு விவரம் நமக்குத் தெரிகின்ற ஞானி ஒருவரைப் பற்றியது அடுத்த கட்டுரை.

*

யோகி ராம் சூரத் குமார்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இந்திய நாடு ரிஷிகள் பலரை உருவாக்கியிருக்கிறது. புரிந்து கொள்ளக்கூடிய ரிஷிகள் உள்ளனர். புதிராக உள்ள ரிஷிகள் உள்ளனர். செல்வச் செழிப்பில் திகழும் ஞானிகள் இருக்கின்றனர். பற்றற்றவர்களாக மிளிரும் ஞானிகளும் இருக்கிறார்கள்.

ராம் சூரத் குமார் கங்கைக் கரையில் சிறு வயதில் ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருந்த போது ஒரு நாள் ஞானக் குரல் ஒன்று அவரை அழைத்தது. திடீரென்று அவருக்கு ஒரு துணிவு பிறந்தது. இருள் அகன்றது. ஒளி தெரிந்தது. கடவுளை உணர்ந்தார். இறைவனையே தன் தந்தையாகக் கருதி, வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

நீண்டு உயர்ந்த தோற்றம்; அடக்கம்; எளிமை; நேர்மை; விறுவிறுப்பான நடை; குழந்தைபோல ஒளிவு மறைவு இல்லாத சிரிப்பு; ஆரவாரமில்லாத வாழ்வு; திருவண்ணாமலை இரயில் நிலையத்துக்கு அருகே ஒரு மரத்தடியில் காணலாம். அங்குதான் எல்லோரும் தரிசிக்கிறார்கள். அந்தத் திறந்தவெளிதான் அவருடைய ஆசிரமம், அலுவலகம் எல்லாம்! உடையில் பிச்சைக்காரரின் தோற்றம். அவருடைய முக்கியமான உடைமைகள் பழைய பேப்பர்க் கட்டுக்கள் (செய்தித்தாள்கள்). அண்ணாமலையார் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஸ்தபதி ஒருவருடைய கடைத் திண்ணையில் இரவு நேரத்தில் தூங்குகிறார்.

ராம் சூரத் குமார் எந்தக் கொள்கையையும் பிரச்சாரம் செய்வதில்லை. உலக அமைதியையும் தெய்வீகத் தன்மையையும் வலியுறுத்திச் சில கருத்துக்களை அவர் கூறும்போது, அவற்றில் சுவாமி விவேகானந்தரின் சாயல் தொனிக்கிறது.

இவரை நாடிவருபவர்கள் பலர், பல திக்குகளிலிருந்தும் வருகிறார்கள். பல மொழியார்களும் வருகிறார்கள். வெளிநாடுகளிலிருந்து வந்து இவருடைய சீடரானவர்களும் உள்ளனர். ட்ருமன் கெய்லர் வாட்லிங்டன் என்ற அமெரிக்க எழுத்தாளர் இவரைப் பற்றி **Yogi Ramsurat Kumar — The God-child — Tiruvannamalai** என்று ஒரு நூல் எழுதியுள்ளார்.

வருபவர்கள் பழங்கள் முதலியவற்றை இவருக்குப் படைக்கிறார்கள். அனைத்தையும் அடுத்தடுத்து வருபவர்களுக்கு வழங்கிவிடுகிறார்.

12 வயதுப் பாலகனாக இவர் தன் வீட்டில் கிணற்று நீரை இறைத்துக் கொண்டிருந்த போது கேணிச் சுவரில் அமர்ந்திருந்த சிறு பறவை ஒன்றை, கேணிக் கயிற்றால் அடித்து விட்டார். நல்ல வேளையாக அது சாகவில்லை. ஆனால் அதைத் துன்புறுத்தி விட்டேனே என்று கண்ணீர் விட்டுக் கதறினார். இன்றும் அதை நினைத்தால் மனம் உருகுகிறார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எல்லா உயிர்களிடத்தும் அளவு கடந்த அன்பு காட்டி வருகிறார்.

16ம் வயதில் வீட்டை விட்டுப் புறப்பட்டார். அப்போதே அவர் ஆங்கில மொழியிலும், உலக வரலாற்றிலும், கீழை நாடுகள்—மேலை நாடுகளின் இலக்கியங்களிலும் பெரும் புலமை பெற்றுவிட்டார். கையிலே காசு இல்லை. எங்கே சாப்பிடுவது, எங்கே தங்குவது என்ற சிந்தனைகள் அவருக்கு ஏற்படவில்லை. யாரோ ஒருவர் இவருக்குச் சோறு போட்டு, காசிக்குப் போக இரயில் டிக்கட் வாங்கிக் கொடுத்தார். விசுவநாதரை வழிபட்டார். பல நாட்கள் காசியிலும் புத்தர் பெருமான் வாழ்க்கையில் சிறப்பிடம் பெற்ற சாரநாத்திலும் திரிந்தார்.

கங்கைக் கரையில் குடிசைகள் கட்டிக்கொண்டிருந்த துறவிகள் வாயிலாக ஸ்ரீ அரவிந்த கோஷ் பற்றியும் பகவான் ரமணமகரிஷிகளைப்

பற்றியும் கேள்விப்பட்டு அவர்களைக் காண வேண்டும் அவர்களைச் சந்தித்துப் பேரின்பம் பெறவேண்டும் என்று உறுதி கொண்டார்.

1947ல் புதுச்சேரிக்கும் திருவண்ணாமலைக்கும் வந்து அரவிந்த ஆசிரமத்திலும் ரமணாசிரமத்திலும் தங்கி இரு பெரும் ஞானிகளுக்கும் சீடர் ஆனார். கேரளத்திற்குச் சென்று சுவாமி ராமதாசரையும் தரிசித்தார்.

1948ல் ''இந்தப் பிச்சைக்காரன்'' மீண்டும் திருவண்ணாமலை வந்து ரமணாச்சிரமத்தில் இரண்டு மாதம் தங்கினார். நாள்தோறும் ரமணர் முன்னிலையில் தியானத்தில் ஆழ்ந்தார். ரமணரிடமும் ஆசிரமத்திலுள்ள பிற துறவிகளுடனும் அங்கு வருகை புரிந்த பிறருடனும் பல விஷயங்கள் குறித்துச் சர்ச்சைகளைச் செய்தார். ரமணருடன் ஏனையோர் பேசியவற்றையெல்லாம் கூர்ந்து கேட்டார். இந்த அனுபவங்களால் ராம் சூரத் குமார் தம்மை அறியாமலே ஒரு புது வடிவமெடுத்து வந்தார்.

1950ல் இரு மகான்களும் சமாதிநிலை அடைந்தனர். அது ராம் சூரத் குமாருக்குப் பேரிழப்பாக இருந்தது. பின்னர் 1952ல் அவர் திருவனந்தபுரத்துக்குச் சென்று சுவாமி ராமதாசரை மீண்டும் தரிசித்தார்.

1947ல் தொடங்கி, ஐந்து ஆண்டுகளில் ராம் சூரத் குமார் பரிபக்குவ நிலையை அடைந்து இனி இறைவனையே தேடுபவர் ஆகி விட்டார்.

எங்கெங்கே சென்ற போதிலும் ஞானபூமியாகிய திருவண்ணாமலையே இவரை ஆட்கொண்டது. 25 ஆண்டுகளாக இவர் இத்தலத்திலேயே பெரும்பாலும் இருந்து வருகிறார்.

இவருடைய அருள் என்றும் நம்மைக் காப்பதாக!


சோழர் காலத்துச் செப்புச் சிலை

அண்ணாமலையார் கோயிலை விட்டு வெளியேவருமுன் உங்களை ஒரு அற்புதமான மூர்த்தியின் முன் கொண்டு சென்று நிறுத்த விழைகிறேன். ராஜராஜ சோழனுக்கு முந்திய சோழ மன்னர்கள் கட்டிய கோயில்களில் எல்லாம் கர்ப்பக் கிரகத்திற்கு வெளியே மேற்கே பார்த்த கோஷ்டத்தில் அர்த்தநாரியின் அழகிய சிலாவுருவம் இருக்கப் பார்ப்போம். ஆனால், அற்புதமாக செப்புச் சிலாவடிவத்தில் நடராஜரையும், திரிபுராந்தகரையும், பிக்ஷாடணரையும் வடித்தெடுத்த சோழநாட்டுச் சிற்பிகள் அர்த்தநாரியை மட்டும் செப்புச் சிலை வடிவில் அமைக்க மறந்து விட்டிருக்கிறார்கள். இதன் காரணம் யாதோ? திருச்செங்கோட்டு மலையில் உள்ள கோயிலில் அர்த்தநாரி என்னும் மாதிருக்கும் பாதியன், கல்லிலும் செம்பிலுமே உருவாகி இருக்கிறான் என்றால் அது சோழர்களுக்கு மிகவும் பிந்திய காலத்தில்தான். ஆனால் அந்த மாதிருக்கும் பாதியனை, பஞ்சில் மெல்லடியாள் பாகனை அற்புதமான செப்புச்சிலை வடிவில் பார்ப்பது திருவண்ணாமலை தலத்தில்தான். நல்ல சோழர் காலத்துச் செப்புச் சிலை. நிரம்ப அழகு வாய்ந்த திரு உருவம்.

வேங்கடம் முதல் குமரி வரை என்ற நூல் வரிசையில்
" பொன்னியின் மடியிலே " என்னும் நூலில் பக்கம் 26-ல்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

நன்றி : எஸ். ஆர். எஸ். பிரதர்ஸ், திருநெல்வேலி



முத்தமிழும்
முத்தித் தலமும்

○ இயல் ○ இசை ○ நாடகம்

தமிழ் இலக்கியத்தில் திருவண்ணாமலை



சில பழஞ் செய்திகள்

டாக்டர் ஔவை நடராசன்

தென்பெண்ணையாற்றின் வடகரையில் உள்ள பழம்பதிகளில் திருவண்ணாமலை சிறந்ததாகும். தொண்டை நாட்டில் மேல் எல்லையாகப் பாலியாற்றின் தென்கரைக்கும் தென்பெண்ணையின் வடகரைக்கும் இடையில் நிற்கும் பவள (சவ்வாதி) மலைத்தொடரின் சிதறலாகத் திகழ்வது இத் திருவண்ணாமலை. இம்மலையின் கீழ் உள்ள நிலப்பகுதி அண்ணா நாடு; இது பழங்கால வழக்கு; இங்கே, கீழ் அண்ணாத்து ஊர் என்பது கீழ்நாத்தூர் என இன்று வழங்குவது இதற்கு ஏற்ற சான்றாகும். அண்ணாநாட்டுமலை அண்ணாமலை; மேற்கில் நிற்கும் பவளமலைத் தொடரின் கிளைத் தொடர்களில் ஒன்றாதல் பற்றி இது பவளமலை என்றும் வழங்கும்.

பவளமலைத் தொடரும் அதன் கீழுள்ள நாடும் செம்மண் நிறைந்து செம்மை பரந்து இருப்பது கண்டே சங்கச் சான்றோர் இந்த நாட்டையும் மலையையும் உரிமை கொண்ட தொண்டை வேந்தரை, தொண்டைமான்களைச் ''செவ்வரை நாடன்'' என்று குறித்துரைப்பாராயினர். தொண்டைமான் இளந்திரையனைப் பெரும்பாணாற்றுப்படை பாடிச் சிறப்பித்த கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

"ஓடாத்தானை ஒண்தொழிற் கழற்கால்
செவ்வரை நாடன்"

என்று பாராட்டினர்.

இச் செவ்வரையில் தோன்றிச் சிவந்த நிலப்பரப்பில் பாய்ந்தோடும் ஆறு செய்ய ஆறாகி, சேயாறாகி, வடஆர்க்காடு மாவட்டத்தில் ஓடி வடக்கிழக்கில் பால்போல் பரந்த வெண்மணலில் ஓடிவரும் பாலியாற்றோடு கலக்கின்றது. சேயாற்று நீரால் சிறப்புறும் பகுதி இன்று ''செய்யாறு'' எனக் குறிக்கப்படுகிறது. இச் சேயாற்றைச் சங்கச் சான்றோர், 'காணுநற் வயாஅம் கட்குஇன் சேயாறு'' என்றும்,

''நெடுவரை இழிதரும் நீத்தம் சால் அருவிக்
கடுவரற் கலுழிக் கட்கின் சேயாறு''

(மலைபடு) என்றும் பாடியுள்ளனர்.

திருவண்ணாமலைக்கு வடமேற்கில் பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் சேயாற்றின் வடகரையில் அழகிய குன்றொன்று சிவன் கோயிலைத் தன் நெடுமுடியில் கொண்டு நிற்கிறது. சங்கச் சான்றோர் நவிரம் என்று குறித்து அங்குள்ள சிவனைப் ''பேரிசை நவிரம் மேய் உறையும், காரியுண்டிக்கடவுள்'' என்றும்,

" வளம் பிழைப்பறியாது வாய்வளம் பழுநிக்
கழை வளர் நவிரம்''

(மலைபடு) என்றும் கூறுகின்றனர்.

சங்க காலத்தில் இம்மலையை உள்ளிட்ட நிலப்பகுதியில், சேயாற்றின் தென்கரையில் உள்ள செங்கைமா என்ற நகர்க்கண் இருந்து சேய் நன்னன் என்ற வேள் குலத்தலைவன் ஆட்சி செய்தான்; அதனால் நவிரமலையை ''நன்னன் வெற்பு'' ''நன்னன்மலை'' எனச் சங்க காலத்தவர் குறிக்கின்றனர். கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் இப்பகுதியை ஆண்ட பல்லவ குல

வேந்தன் கோப்பெருஞ்சிங்கன் தனது கல்வெட்டொன்றில், நவிர மலையை, ''நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பு'' எனச் சங்க கால வழக்கை நினைவிற்கொண்டு பொறித்துள்ளான். (கல். தொ. 69)

சேயாற்றையும் நவிர மலையையும் பாடிய ஆற்றுப் படைகள் கார்த்திகை விளக்கீட்டால் பாடு புகழ் பெற்ற அண்ணுமலையைக் குறிக்க வில்லை; அதற்குக் காரணம் ஆற்றுப் படைகளைப் பாடிய சான்றோர் அது வழியாகச் செங்கை மாவுக்குச் செல்லவில்லை போலும். மேலும் வேளாகிய சேய் நன்னனது சீர்த்த புகழால் சிறந்து விளங்கிய செங்கைமா, செவ்வரையைக் கிழக்கெல்லையாகக் கொண்டு அந்நாளில் கொடைப்புகழ் பெற்றிருந்த அதியமான் நெடுமான் அஞ்சியின் தகடூர் நாட்டுக்குத் தொண்டைநாட்டினின்றும் நடந்து செல்வோர்க்கு மலை வழியின் மேற்கு வாயிலாக இருப்பதால் அது நன்கு தெரிந்திருந்தது என்னலாம்.

சங்ககாலத் தமிழகம் மேற்கொண்டு போற்றிய விழாக்களில் கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் தெருத் தோறும் மனைகளில் விளக்குகளை வரிசை வரிசையாகவும் மலையுச்சியில் நந்தாப் பெருவிளக்கையும் ஏற்றி நாடு முற்றும் ஒளி விளக்கும் பெருவிழாவும் ஒன்ருகும்.

'' அறுமீன் பயந்த அறஞ்செய்திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி நற் 202

என்று பாலை பாடிய பெருங்கடுங்கோவும்

'' மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறு முயல் மறு நிறம் கிளர்மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவு உடன்அயர வருகதில் அம்ம !

என்று நக்கீரரும், அகம் 141

'' கலிகொள் ஆயம் மலிபுதொகு பெடுத்த
அஞ்சுடர் நெடுங்கொடி '' அகம் 11

என்று ஔவையாரும் இதனைப் புகழ்ந்துள்ளனர்.

கி. பி. ஏழாம் நூற்ருண்டில் தமிழ்நாடு முற்றும் ஊர்தோறும் சென்று சிவநெறியின் செம்மை நிலையைத் தீவிய இனிய பண்கனிந்த தமிழ்ப்பாவால் பாடிப் பரப்பிய ஞானசம்பந்தர் முதலிய பெருமக்கள் அண்ணுமலையைத் திருவண்ணுமலையாகத் திகழ்வித்தனர். அவர்கள் ஏற்றிய சிவஞானத் திருவருள் விளக்கம் இன்றும் அங்கே ஒளி செய்து கொண்டிருக்கிறது. ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் மலையுச்சியில் நந்தாப் பெருவிளக்கேற்றி நாடு முழுதும் நல்லொளிபரப்பும் பழம் பெருவிழா நடைபெறுகிறது. கார்த்திகை விளக்கீட்டைக் கண்டு கடவுளின் திருவுரு எனக் கருதி வழிபடுவது பெரும் பேறு என்பர். ''தொல் கார்த்திகை நாள், தளத் தேந்தின முலைத்தையலார் கொண்டாடும் விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய்'' என்று ஞானசம்பந்தர் பாடுவது இதன் பெருமையைப் புலப்படுத்துகிறது. சங்க காலத் தேயே மிக்கு விளங்கியது பற்றியே அவர் ''தொல் கார்த்திகை நாள் விளக்கீடு'' என்று சிறப்பிக்கின்ருர். 'வேலின் நோக்கிய விளக்கு நிலையும்' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரைகண்ட, உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர் ''இது **கார்த்திகைத் திங்களிற் கார்த்திகை நாளின்** ஏற்றிய விளக்கும், கீழும்மேலும் வலமும் இடமும் திரிபரந்து சுடர் ஓங்கிக் கொழுந்து விட்டெழுந்தது என்று அறிவோர் ஆக்கம் கூறப்படுவதாம்'' எனக்குறித்துள்ளதும் ஈண்டு எண்ணத்தக்கது. இவ்வாறு திருவண்ணுமலைத் திருத்தலம் பழம்புகழ் வாய்ந்த அருந்திறல் நகராக அமைந்து சிறப்புற்று ஒளிர்கின்றது. ●

வறுமைகள் நீங்க வேண்டும்
வாழ்வுகள் பெருக வேண்டும்
சிறுமைகள் ஒழிய வேண்டும்
சீரெல்லாம் ஓங்க வேண்டும்
அறிவொளி வளர வேண்டும்
அன்பெங்கும் பரவ வேண்டும்
நறுமலர்ச் சோலை சூழும்
திருவண்ணு மலையின் நாதா.

நல்லவை பெருக வேண்டும்
நாடெலாம் வாழ வேண்டும்
அல்லவை ஒழிய வேண்டும்
அனைத்துயிர் வாழ வேண்டும்
பொல்லவை கலியும் நீங்கிப்
புதுயுகம் பூக்க வேண்டும்
செல்வமிக் கோங்கும் அண்ணு
மலைவளர் தேவ தேவே.

— பரலி சு. நெல்லையப்பர். திருவருணைப் பாமாலைகள் 1959



தேவார திருவாசகங்களில் திருவண்ணாமலை

சம்பந்தர், அப்பர் தேவாரங்கள்

தேவாரம் பெற்ற நடுநாட்டுத் தலங்கள் இருபத்திரண்டுள் இருபத்திரண்டாந் திருத்தலமாகத் திகழ்வது திருவண்ணாமலையாகும். நினைத்த அளவிலேயே பெரும்பயன் அளிக்க வல்ல இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் இரண்டும் திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் மூன்றும் ஆக ஐந்து திருப்பதிகங்கள் கிடைத்துள்ளன.

தொண்டைநாட்டுத் திருத்தலங்களை வழிபட எண்ணிய திருஞானசம்பந்தர் சீர்காழிப் பதியிலிருந்து புறப்பட்டுத் தில்லைக்கூத்தப் பெருமானைப் பணிந்து ஆமாத்தூர், கோவல், வீரட்டம் ஆகிய தலங்களை வழிபட்டு அறையணி நல்லூர்ப் பெருமானை இறைஞ்சிப் போற்றி வலம் வரும் பொழுது திருவண்ணாமலை இதோ தோன்றுகின்றது என அன்பர்கள் பிள்ளையார்க்குக் காட்டினர். அழல்வண்ணனாகிய சிவபெருமானது வடிவு போன்று திருவண்ணாமலை தோன்றிய காட்சியை அறையணி நல்லூரிலிருந்தே கண்ணாற்கண்டு கைதொழுது மகிழ்ந்த திருஞானசம்பந்தர் அப்பொழுது பரவிப் போற்றியதிருப்பதிகம்,

உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

என்ற பாடலை முதலாகவுடைய நைவளமென்னும் நட்ட பாடைப் பண்ணமைந்த திருப்பதிகமாகும். இதன் கண் திருவண்ணாமலையின் வளமும் அம்மலையின் இழிந்தோடும் அருவியின் ஓசையும் அண்ணாமலையண்ணலை அன்புடன் உருகிப் போற்றுவார் வினையும் நோயும் நீங்கிப் புகழுடன் பொலியுந் திறமும் விரித்துரைக்கப் பெற்றன. திருமாலும் பிரமனும் தாம்தாம் பெரியர் எனத் தருக்குற்று மயங்கிய நிலையில் அவர்கள் இருவரும் அணுகி அடியும் காண ஒண்ணாத நிலையில் சிவபெருமான் அழற்பிழம்பாய்த் தோன்றிய ஒளிவளர்திருமலையே திருவண்ணாமலை என்னும் இத்திருத்தலத்தின் வரலாற்றினை,

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில் புகழோனும்
அளவாவணம் அழலாகிய அண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை தலைவன்னடி சரணே.

எனவரும் இப்பதிகத்திருப் பாடலில் ஆளுடைய பிள்ளையார் விரித்துப் போற்றியுள்ளமை காணலாம்.

க.வெள்ளைவாரணன்

மேற்குறித்த திருப்பதிகத்தைப் பாடிப்போற்றிய திருஞானசம்பந்தர் திருவண்ணுமலையை அடைந்து அண்ணுமலை மீது வீற்றிருந்தருளும் இறைவனுடைய திருவடித் தாமரைகளைத் தம் முடிக்கு அணிந்து பேரின்பம் அடைந்தார். அப்பொழுது பாடிய திருப்பதிகம்

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானேர்கள்
மூவர் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கருள் செய்தார்
தூமா மழைநின் றதிரவெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணுமலையாரே

எனவரும் தக்கேசிப் பண்ணமைந்த பதிகமாகும். இதன் கண் மலைமேல் மேகங்கள் இடிக்கும் இடியோசைக்கு அஞ்சிக் காட்டுப் பசுக்கள் மலைச் சாரலை வந்தடைதலும், வேட்டுவப் பெண்கள் தினைப் புனத்தில் பரண் மீது அமர்ந்து 'ஆயோ' எனக் கிளிகளையோட்டுதலும், இரவில் காட்டுப் பன்றிகளும் மான்களும் யானைக் கூட்டமும் மலையிலிருந்து இறங்குதலும், மலைக் குறவர்கள் குவித்த மணிகளை அருவிகள் அரித்தொழுகுதலும் குறவர் மகளிர் தாம் விற்கக் கொண்டு வந்துள்ள முத்துக்களைக் மலைச்சாரலிற் குவியலாகக் குவித்து ஆடிப்பாடி யளந்து கொடுத்தலும் பாம்புகளும் சிங்கங்களும் மலையில் திரிதலும் ஆகிய இம்மலையின் இயற்கைக் காட்சிகள் பலவற்றை ஆளுடைய பிள்ளையார் விரித்துக் கூறுகின்றுர்.

அன்பினல் நினைப்போர்க்கெல்லாம் வீடு பேறளிக்கும் பெருமை வாய்ந்த தேவர் பெருமான் எழுந்தருளிய திருவண்ணுமலைச் சாரலில் ஆயனெருவன் பசுக்களையும் எருமைகளையும் மேய்க்குந் தொழிலில் ஈடுபட்டுள்ளான். மாலைப் பொழுது வந்தது. அந்நிலையில் மாடுகளையெல்லாம் ஒன்ருகத் திரட்டி அழைத்துச் செல்லும் கடமை அவனுக்கு ஏற்பட்டது. ஒளி மங்கிய அந்திநேரத்தில் மரச் செறிவுகளிடையே சென்று புல்மேயும் எருமையொன்றை அவன் தேடிக் காணமுடியவில்லை. எனினும் இடையிடையே அவ்வெருமையின் கனைப்பொலி மட்டும் அவன் செவிக்குக் கேட்கிறது. அதனைக் கேட்ட ஆயன் தன்கையிலிருந்த வேய்ங்குழலை எடுத்து ஊதி இனிய இசையை எழுப்புகிருன். அவ்வின்னிசையினல் ஈர்க்கப்பட்டு .அம்மலைச் சாரலில் மேயும் எருமை முதலிய எல்லா மாடுகளும் ஒன்று சேர்ந்து அவனையடைகின்றன. உள்ளத்திற்கு இனிமை தரும் இவ்வியற்கைக் காட்சியினை,

எனைத்தோருழி யடியார் ஏத்த இமையோர் பெருமானர்
நினைத்துத் தொழுவார் பாவந்தீர்க்கும் நிமலர் உறைகோயில்
கனைத்த மேதிகாணு தாயன்கைம்மேற் குழலூத
அனைத்துஞ் சென்றுதிரளுஞ் சாரல் அண்ணுமலையாரே

எனவரும் திருப்பாடலில் ஞானசம்பந்தர் வனப்புற எடுத்துக்காட்டியுள்ளார். மந்தமதியினதாகிய எருமையினையும் குழலோசையால் அழைக்கவல்ல இசையினைத் திருவண்ணுமலையில் ஆநிரைமேய்க்கும் ஆயர்கள் கற்று இசை வளர்த்தார்கள் என்னும் உண்மை இத்திருப் பாடலால் இனிது புலனுதல் காணலாம்.

திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்தில் இறைவனுற் பொதிசோறளிக்கப்பெற்ற திருநாவுக்கரசர் அங்கிருந்து புறப்பட்டுப் பலதலங்களையும் பணிந்து பாடிப் போற்றிச் செங்கண் விடையார் அமர்ந்தருளும் திருவண்ணுமலையை யடைந்தார். அங்கு இறைவனைப் போற்றித் தங்கு பிறப்பே வீட்டினுக்குமேலாம் பெருமையுடையது என்பதனை வலியுறுத்தும் முறையில் அத்தலத்தில் தங்கி இறைவனுக்குப் பாமலை யணிந்து மகிழ்ந்தார். அவர் பாடிய பதிகங்களுள் திருக் குறுந் தொகையிரண்டும் திருநேரிசை ஒன்றும் ஆகமூன்று பதிகங்கள் கிடைத்துள்ளன. இவற்றுள்,

ஓதிமா மலர்கள்தூவி உமையவள் பங்காமிக்க
சோதியே துளங்கும் எண்தோள்சுடர் மழுப் படையினனே
ஆதியே அமரர்கோவே அணியணு மலையுளானே
நீதியால் நின்னையல்லால் நினையுமா நினைவி லேனே

எனவரும் திருநேரிசைத் திருப்பதிகம் உமையவள்பங்கனும் சோதிப்பிரானும் ஆகிய அழகிய அண்ணுமலையண்ணலை அன்பினல் உளமுருகியழைத்து அம்முதல்வனது பொருள்சேர் புகழ்த்திறங்களை உள்ளவாறு எடுத்து ஓதி மலர் தூவி அருச்சித்துப் போற்றும் நிலையில் அமைந்ததாகும். இதன் கண் சிவபெருமானை உளங் குழைந்து அழைத்து 'நின்னையல்லால் வேறு யாரையும் நினையேன்', 'உன்னைத் தவிர வேறு யாரையும் புகழ்ந்து சொல்லேன்', 'எனக்கு உன் திருவடிகளையன்றி வேறு பொருள் இல்லை', 'நின்திருவடித்தாமரையை என்றும்

மறக்கமாட்டேன்', 'நின்பாதமன்றி வேறு எதனையும் பற்றுகக்கொள்ளேன்' எனத் திருநாவுக்கரசர் உள்ள முருகி அண்ணுமலையண்ணலைப் போற்றும் முறையில் அமைந்துள்ளது. இப்பதிகம் சிவபூசை செய்யுங்காலத்துத் தோத்திரமாகப் பாடி மகிழ்தற்குரிய முறையில் அமைந்துள்ளமை காணலாம்.

திருவண்ணுமலையைப் பரவிய திருக்குறுந்தொகையிரண்டனுள்,

வட்ட னைம்மதி சூடியை வானவர்
சிட்ட னைத்திரு வண்ணு மலையனை
இட்டனை யிகழ்ந்தார் புரமூன்றையும்
அட்டனை யடியேன் மறந் துய்வனே

எனத் தொடங்கும் திருப்பதிகம் பிறை சூடிய பெருமானும் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் மதயானையுரித்தமைந்தனும் வினை தீர்த்து அடியாரை யாட்கொண்டருளும் வித்தகனும் தன்னை மதியாத தக்கனது வேள்வியைச் சிதைத்தவனும் வானேருய்ய ஆலகாலநஞ்சினை மிடற்றிலடக்கிய பெருந்தகையும் ஐந்தலை நாகத்தையணிந்தவனும் ஆகிய திருவண்ணுமலையண்ணலை அடியேன் மறந்து உய்தலுங் கூடுமோ என அம்முதல்வனைப் பிரிந்துறைதலாற்ருதபெற்றியை நினைந்து அன்புமீக்கூரும் நிலையிற் பாடப் பெற்றதாகும். இப்பதிகத்தின் பாடல் தோறும் இறைவன் திரிபுரமெரித்தருளிய அருட்செய்தி தொடர்ந்து போற்றப் பெற்றுள்ளமையறியத் தகுவதாகும்.

பட்டி ஏறுகந் தேறிப் பலஇ(ல்)லம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்தி யண்ணுமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை கேடில்லை காண்மினே

எனத் தொடங்கும் இரண்டாம் பதிகம் அண்ணுமலைப் பெருமானைக் கைதொழுது போற்றிய அளவில் தீவினைகள் அறவே கெட்டு நல்லன பலவும் வந்தெய்தும் உண்மையினை உலக மக்களுக்கு அறிவுறுத்தும் முறையில் அமைந்தது.

மறையி னுநெடு மாலவன் காண்கிலா
நிறையு நீர்மையுள் நின்றருள் செய்தவன்
உறையு மாண்பி னண்ணுமலை கைதொழப்
பறையும் நாம்செய்த பாவங்க ளானவே

எனவரும் இதன் கடைசித் திருப்பாடல் நான்முகனும் திருமாலும் தேடிக்காண முடியாத நிலையில் நின்று பின்னர் அவ்விருவர்க்கும் சிவபெருமான் வெளிப்பட்டருள் புரிந்த தல வரலாற்றையும் அத்தகைய முதல்வன் வீற்றிருக்கும் திருவண்ணுமலையைக் கைதொழுது போற்றினுல் நாம் செய்த தீவினைகள் யாவும் கெட்டொழியும் என்பதனையும் ஒருங்கே எடுத்துக் கூறித் திருவண்ணுமலையை அன்பினுல் வழிபடுவர் பெறும் இன்பநிலையை எடுத்துரைத்தல் காணலாம்.

அண்ணு மலைமேல் அணிமலையை
ஆரா அன்பின் அடியவர்தம்
கண்ணுர் அமுதை விண்ணேரைக்
காக்கக் கடலில் வந்துஎழுந்த
உண்ணு நஞ்சம் உண்டானைக்
கும்பிட்டு உருகும் சிந்தையுடன்
பண்ணுர் பதிகத் தமிழ்ப்பாடிப்
பணிந்து பரவிப் பணிசெய்தார்.

—சேக்கிழார்

பெற்ருள்சகத்து அண்டங்கள் அனைத்தும், அவைபெற்றும்
முற்ருமுகிழ் முலையாளொடு முக்கண்ணர் விரும்பும்
பற்ரும்என மிக்கோர் இகழ் பற்றுஒன்றினும் உண்மை
கற்ருர்தொழும் அருணுசலம் அன்போடுகை தொழுதான்.

—வில்லிப்புத்தூர் ஆழ்வார்

சுந்தரரும் திருவண்ணாமலையும்

ஔவை சு. துரைசாமிப் பிள்ளை

நம்பி ஆரூராகிய சுந்தரரும் திருவண்ணாமலையை வணங்கிப் பல திருப்பாட்டுக்கள் பாடினர். அவர் பாடியன 3700 திருப்பதியங்கள் என்றும், அவற்றுள் நூறு பதியங்களே இப்போதுள்ளன என்றும் கூறுவர். இறந்துபோனவற்றுள், திருவண்ணாமலைத் திருப்பதியமும் இருக்கலாம்.

திருப்பதியம் ஒன்றும் கிடைக்காவிடினும் அண்ணாமலைப் பெருமானது நினைவு சுந்தரர் திருவுள்ளத்தில் இல்லாமல் இல்லை. திருப்பரங்குன்றத்தில் பரமன் திருமுன்,

''தென்னத்தெனத் தெத்தன என்று பாடிச்
சில்பூதமும் நீரும் திசை திசையன
பன்னன் மறை பாடுதிர் பாடுதிர் உளீர
படம் பக்கம் கொட்டும் திருவொற்றியூரர்
பண்ணார் மொழியாளை ஓர் பங்குடையீர்
படுகாட்டகத் தென்றும் ஓர் பற்றொழியீர்
அண்ணாமலையேன் என்றீர் ஆரூர் உளீர்
அடிகள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே.''

என்று பாடுமிடத்து அண்ணாமலையான் நினைவு எழுவதைக் காண்கின்றோம். பிறிதொரு திருப்பதியத்தில்,

''தேனைக் காவல் கொண்டு விடை
கொன்றைச் செழுந்தராய்
வானைக் காவல் கொண்டு நின்றார்
அறியா அறிவானே
ஆனைக்காலில் அரனே பரனே
அண்ணாமலையானே
ஊனைக் காவல் கைவிட்டுன்னை
உகப்பார் உணர்வாரே''

என்று பாடுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகங்களில்

திருவண்ணுமலை பற்றிய விவரங்கள் காணப்படும் பாடல்கள்

பண் : தக்கராகம்

மாவாய் பிளந்தானும் மலர்மிசையானும்
ஆவா அவர்தேடித் திரிந்து அலமந்தார்
பூவார்ந் தனபொய்கைகள் சூழுந்துறையூர்த்
தேவா! உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே! 1

பண் : நட்டராகம்

பண்டைய மால்பிரமன் பறந்தும் இடந்தும் அயர்ந்தும்
கண்டிலராய் அவர்கள் கழல் காண்பதரிதாயபிரான்;
தெண்திரை நீர்வயல் சூழ் திருக்கோளிலி எம்பெருமான்
அண்ட மதாயவனே! அவை அட்டித்தரப்பணியே! 2

பண் : பியந்தைக்காந்தாரம்

அருவிபாய்தரு கழனி அலர்தருகுவ ளையங்கண்ணூர்
குருவியாய் கிளிசேப்பக் குருகினம் இரிதரு கிடங்கில்
பருவரால் குதிகொள்ளும் பைப்பொழில் வாஞ்சியத்துறையும்
இருவரால் அறியொண்ணு இறைவனது அறைகழல் சரணே! 3

பண் : புறநீர்மை

மண்ணினை உண்டுமிழ்ந்த மாயனும் மாமலர் மேல்
அண்ணலும் நண்ணரிய ஆதியை மாதினொடும்
திண்ணிய மாமதில்சூழ் தென்திருவாரூர்புக்(கு)
எண்ணிய கண்குளிர என்று கொல் எய்துவதே? 4

திருவண்ணுமலையும் திருவாசகமும்

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணு மலைக்கு வந்து இங்கே தங்கித் திருவாசகத் தின் பகுதிகளான 'திருவெம்பாவை' 'திருவம் மானை' என்னும் பாடல்களைப் பாடியுள்ளார். இவர் மார்கழி மாதத்தில் இங்கே தங்கினுர் என்று ஊகிக்கலாம். திருவாதிரைக்கு முந்திய பத்துநாள் பெண்கள் விடியற்காலையில் எழுந் திருந்து வீட்டை மெழுகிக் கோலமிட்டுக் குளத் திற்கு நீராடச் செல்வதை மணிவாசகப் பெரு மான் பார்த்தார். அப்பெண்கள் ஒருவரை யொருவர் எழுப்பிக் கூட்டமாக 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி'யாகிய அண்ணுமலையாரின் புகழைப் பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் சென்றதைக் கண்டு மகிழ்ந் தார். திருவெம்பாவை பாடினுர்.

ஒரு நாள் கன்னிப் பெண்கள் தெரு முற்றத் திலிருந்து அம்மானை ஆடுவதைக் கண்டார். அண்ணுமலையார் புகழை அப்பெண்கள் கூற்ருக அமைத்துத் 'திருவம்மானை' பாடினுர்.

மணிவாசகப் பெருமான் வந்து தங்கிய அந் தக் காலத்திலே திருவண்ணுமலை நிலவளமும் நீர்வளமும் நிறைந்து, காடும் சோலையும் மாட கூடங்களும் பச்சை போர்த்தமலையும் கோவி லும் குளங்களுமாய்க் காட்சி அளித்தது. தேவாரம் பாடிய மூவரும் கண்ட வளங்களை யும் வனப்புகளையும் மணிவாசகப் பெருமானும் கண்ணுற்ருரெனக் கருதலாம்.

நல்ல மழை பெய்து நாடு செழித்து நீர் நிலைகள் நிறைந்து பொலியும் திருவண்ணு மலையைத் திருவெம்பாவையில் பிரதிபலிக்கக் காண்கிருேம். அத்தகைய குளம் ஒன்றிலே குளிர் மிகுதிக்கு அஞ்சிப் பெண்கள் மெல்ல மெல்ல இறங்காமல் பளிச்சென்று குதித்து நீந்தி நீராடுவதையும் மணிவாசகப் பெருமான்

மொய்யார் தடம்பொய்கை
புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து
குடைந்துன் கழல்பாடி

எனக் கண்டு காட்டுவதுபோல், திருவெம் பாவையில் பாடியுள்ளார். வளைகள் கல கலென, மேகலைகள் சலசலெனப் 'பூத்திகழும் பொய்கை' பொங்கப் பாய்ந்து பாய்ந்து பெண் கள் நீராடியதையும் வருணித்திருக்கிருர்.

தண்ணீர் பொங்கி அலைமோதும் பொய் கையை மணிவாசகப் பெருமான் வாய் குளிர வருணிப்பது, அன்று திருவண்ணுமலையில் பக்தி யும் ஞானமும் பொங்கிப் பாய்ந்து வெள்ள மிட்டதற்கும், அந்த ஞானனந்த வெள்ளத்திலே நீராடி நிர்மலராய்ச் சான்ருேர்கள் திகழ்ந்த தற்கும் ஓர் அறிகுறியாகும்.

மணிவாசகர் காலத்திற்குப் பின்பும் திரு வண்ணுமலையின் ஞான வெள்ளம் எத்தனை அன்பர்களுக்குத் தாபமும் தாகமும் போக்கி யிருக்கிறது! ஆண்டி, அரசன் முதலான பலரும் வேற்றுமையின்றி அண்ணுமலையைப் போற்றிப் பேறு பெற்றிருக்கின்றனர். தொண்டக் குலம் ஒரு குலம்தானே. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்பது திருமூலர் திருவாக்கு.

திருவண்ணுமலை **ஸ்ரீ. ஈசான்ய ஞானதேசிகர்** என்றும் வெளியீடு: ஈசான்ய மடம், 1952

திருவண்ணாமலைத் திருப்புகழ்

திருமுருக

கிருபானந்தவாரியார்

கேதகைய பூமுடித்த மாதர்தம யாலிலுற்று
    கேவலம தான அற்ப நினைவாலே
கேள்வியதி லாதிருக்கு மூழ்வினையினால் மிகுத்த
    கேடுறுக வேநினைக்கும் வினையாலே

வேதனையி லேமிகுத்த பாதகனு மாயவத்தில்
    மேதினியெ லாமுழற்று மடியேனை
வீடுதவி யாளவெற்றி வேல்கரம தேயெடுத்து
    வீறுமயில் மீதிலுற்று வருவாயே

நீதிநெறி யேயழித்த தாருகனை வேரறுத்து
    நீடுபுகழ் தேவரிற்கள் குடியேற
நீடருளி னால்விடுத்த பாலகும ராசெழித்த
    நீலநிற மால்தனக்கு மருகோனே

சோதியன லாவுதித்த சோணகிரி மாமலைக்குள்
    சோபைவட கோபுரத்தி லுறைவோனே
சோனைமழை போலெதிர்த்த தானவர்கள் மாளவெற்றி
    தோளின்மிசை வாளெடுத்த பெருமாளே.

பதவுரை

நீதிநெறியே அழித்த—நீதியையும், நெறியையும் அழித்தவனாகிய; தாருகனைவேர் அறுத்து—தாருகாசுரனை அவன் வமிசத்துடன் வேரோடு களைந்து; நீடுபுகழ்தேவர்—புகழினால் நீண்ட தேவர்கள்; இல்கள் குடியேற—தத்தம் வீடுகளில் குடியேறியின்புறுமாறு; நீடு அருளினால்விடுத்த—கரையற்ற கருணையினால் நிலைபெறச் செய்தருளிய; பாலகுமார—என்று மகலாத இளமையுடையவரே!; செழித்த நீலநிற மால் தனக்கு மருகோனே—செழிப்புடையவரும் நீல நிறங்கொண்டவருமாகிய நாராயணமூர்த்தியின் திருமருகரே! சோதிஅனலா உதித்த—(பிரமவிட்டுணுக்கள் மலைவுதீரும் பொருட்டு இருவருக்கும் நடுவே) சோதிப் பிழம்பான நெருப்பு வடிவாக உதித்துநின்ற; சோணகிரி மாமலைக்குள்—திருவண்ணாமலை என்னும் பெருமை தங்கிய திருத்தலக்கோயிலுள்; சோபை வட கோபுரத்தில் உறைவோனே—அழகிய வடக்குக் கோபுர வாசலருகில் எழுந்தருளியிருப்பவரே; சோனைமழைபோல் எதிர்த்த—விடாமழைபோல் போர்க்களத்தில் எதிர்த்து வந்த; தானவர்கள் மாள—அசுரர்கள் இறந்துபட; வெற்றி தோளின்மிசை—வெற்றியையுடைய திருத்தோளின்மீது வாள்எடுத்து—ஞானவாளை எடுத்தருளிய; பெருமாளே—பெருமையின் மிக்கவரே; கேதகைய பூமுடித்த—தாழம்பூவைக் குழலில் முடித்த; மாதர்தம் மயாவில் உற்று—பெண்களினுடைய மயக்கத்தில் ஆழ்ந்து; கேவலம் அது ஆன அற்பநினைவாலே—மிகவும் கேவலமும் அற்பமுமுள்ள தீயநினைவாலே; கேள்வி அது இலாது இருக்கும் ஊழ்வினையினால்—''ஏன் இப்படிச் செய்தனை'' என்று யாராலும் கேட்க முடியாமல் விளையக்கூடிய பண்டை ஊழ்வினையினால்; மிகுந்த கேடு உறுகவே நினைக்கும் வினையாலே—மிகுந்த துன்பமும் விளைவதற்குரிய சிந்தனையால் (இப்பிறப்பிற் செய்யும் வினைகளினால்; வேதனையிலே—மனவருத்தமுற்று; மிகுந்த பாதகனும் ஆய்—மிகுந்த பழியை அடைவதோடன்றி பாதகனுமாகி; அவத்தில் மேதினி எலாம் உழற்றும்—வீணாக உலகெலாம் உழன்றுவாடும்; அடியேனை—அடியவனாகிய என்னை; வீடு உதவி ஆள—தேவரீருடைய முத்திவீட்டை தந்தருளியாட்கொள்ளும் பொருட்டு; வெற்றிவேல் கரம்அது

எடுத்து—வெற்றி வேலாயுதத்தை திருக்கரத்தில் எடுத்துக் கொண்டு; வீறுமயில்மீதில் உற்று-பெருமை நிரம்பிய மயில் வாகனத்தின் மீது பொருந்தி; வருவாயே—வந்தருளவேணும்.

பொழிப்புரை

நீதியையும் நன்னெறியையும் அழித்து அமரர்க்கு இடர் விளைத்த தாருகனை அடியுடன் அவன் கிளையோடு மாய்த்து, சிறந்த புகழ் படைத்த தேவர்கள் பொன்னுலகில் தத்தம் மாளிகையில் குடிபுகுந்து இன்புறுமாறு எல்லையில்லாத இன்னருளால் உதவி செய்த என்றும் மாறாத இளம் பூரணரே! வளமையுடன் கூடிய நீலமேகம் போன்ற திருமேனியுடைய திருமாலினது திருமருகரே! ''திருமாலுந்திசைமுகனும் நான்பரம் நான்பரம்'' என்று மலைவுற்றபோது அவ்விருவருக்கும் நடுவே அழற்பிழம்பாகத் தோன்றிய திருவண்ணாமலைத் திருக்கோயிலின் வடகோபுர வாயிலில் எழுந்தருளியுள்ளவரே! விடாத மழைபோல் பாணி மழை பொழிந்து எதிர்த்த அவுணர்கள் மாயுமாறு வெற்றிபெற்ற திருத்தோளின்மீது ஞானவாளை எடுத்த பெருமிதமுடையவரே! தாழம்பூவை முடித்த கூந்தலையுடைய மாதர்களின் மயக்கத்தில் மயங்கி மிகுந்த கேவலமான அற்ப எண்ணங்களாலும் ''ஏன் இவனையடுத்தாய்'' என்று யாராலும் கேட்டுத் தடுக்க முடியாததான ஊழ்வினையாலும், பின்னர் கேடு வருவதற்கு ஏதுவாக இம்மையிற் புரியும் ஆகாமிய வினையாலும், மிகுந்த வேதனையடைந்து பாதகம் நிறைந்தவனும் வீணாக இந்த உலகமெல்லாம் சுற்றியுழன்று கேடுறுகின்ற அடியேனை முத்திவீட்டைத் தந்து ஆட்கொள்ளும் பொருட்டு வெற்றிவேலாயுதத்தை ஏந்திக் கொண்டு பெருமை பொருந்திய மயில் வாகனத்தின்மீது வந்தருளுவீர்.

விரிவுரை

கேதகைய பூமுடித்த மாதர் :

தாழம்பூவும், ஜாதி மல்லிகையும்

தாழம்பூவை முடித்த பெண்கள் என்றனர். மலர்கள் பலவிருக்க தாழம்பூவைக் கூறுவானேன்? என்ற ஐயம் நிகழ்கின்றது. சிறிய மடல்களையுடைய மகிழம்பூ, ஜாதி மல்லிகை முதலிய மலர்களிலுள்ள நறுமணம், பெரிய மடல்களையுடைய தாழையில் இராது. அதுபோல் குலமகளாகிய மனைவியிடமுள்ள நற்குணங்கள் விலைமகளிடங்காணமுடியாது. தாழை எப்படி பெரிய மடல்களோடு கூடியிருக்கின்றதோ அதுபோல் விலைமகளிர் மிக்க ஆடம்பரமாகப் பகட்டுடன் இருப்பர். தவிர தாழம்பூவிடம் அரவினங்கள் வாழும். விலைமகளிரிடமும் பல தீயவர்கள் இருப்பர். தாழை, சேற்றில் முளைக்கும். அதுபோல் விலைமகளிரும் பாவமாகிய சேற்றில் வாழ்வர். ஆதலினால், அவ்விலை மகளிர் ஆசையை அறவே ஒழிக்கவேண்டும் என்று சுவாமிகள் குறிப்பாகக் கூறுகின்றனர்.

கேள்வியதிலாதிருக்கும் ஊழ்வினை

பண்டைப் பிறப்புகளில் செய்த நன்மை தீமைகளுக்குத் தக்கவாறு, அவைகளின் பயனாக ஊழ்வந்து இப்பிறப்பில் மூழ்கின்றது. அதை ''ஏன் அவனைப் பற்றுகின்றன?'' என்று யாராலுங் கேட்டுத் தடுக்கமுடியாது.

**'' ஊழிற் பெருவழியாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் ''**

என்றார் தெய்வப்புலவர். அவ்வூழ் வந்து தொடர்கின்றபோது அதனை ஞானிகளாலுந் தடுக்கமுடியாது. ஆனால் ஞானிகள் உடல் வேறு, தான் வேறாகத் திகழ்பவராதலின் அவர்கட்கு அது உடலூழாய்க் கழியும்.

**முதிர்தரு தவமுடைமுனிவ ராயினும்
பொதுவறு திருவொரு பொலிவராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார்.**
—கந்தபுராணம்

இந்த ஊனெடுத்த பின் செய்த தீவினை யாதொன்றுமில்லை. பிறப்பதற்கு முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே.
—திருவெண்காடர்

கேடுறுகவே நினைக்கும் வினை

மறுமையில் கேடுறும்படி இம்மையில் செய்யும் வினை, ஆகாமியம் வினை மூவகைப் படும்; ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என்பவையாம். ஆகாமியம் இப்பிறப்பிற் செய்வது, சஞ்சிதம் முன்செய்து பக்குவப்படாமல் சிறைகட்டப்பட்டிருக்கும் இருப்பு; பிராரப்தம் பக்குவப்பட்டு இப்போது புசித்து வருவது.

இம்மூன்று வகையும் முடிந்தாலொழிய பிறப் பென்னும் பெருந்துயர் நீங்காது.

ஒருவன் வயலில் 10 கலம் நெல்லை விதைத் துப் பயிரிடுகின்ருன். இருப்பாக 100 கலம் நெல்லைக் குதிரில் சேமித்து வைத்தான்: 35 கலம் நெல்லைக் குத்தி உணவுக்கு மனைவியிடங் கொடுத்தான். வயலில் விதைத்தானே அது இப்போது விளையும். அது ஆகாமியம்; குதி ரில் வைத்த சேமிப்பு சஞ்சிதம்; உணவுக்குத் தந்தது பிராரப்தம். மழை பொழியாமல் வயலில் விதைத்தது தீய்ந்துவிட்டது; வீடு தீப் பிடித்து குதிரில் உள்ள நெல் கரிந்துவிட்டது. உணவுக்குக் கொடுத்தது உண்டு முடிந்தது. எனவே மூன்றுங் காலியாயின. அதுபோல் ஆகாமியம் செய்யாமலும், சஞ்சிதம் ஞான அக்கினியால் எரிந்தும், பிராப்தம் உடலூ ழாய் துய்த்துமுடிந்தும் மூவகையான வினை களும் காலியானல் பிறப்பு நீங்கிவிடுகிறது.

வெற்றிவேல்

ஞானமே எல்லாவற்றையும் வெல்லும், ஆத லின் ஞானமாகிய வேலை வெற்றிவேல் என்ற னர். ஞானமே வேலாயுதம். ஞானம் கூர்மை யாக இருக்கும். வேற்படையுங்கூர்மையாகத் திகழும்.

"சுரர்பதி அயனுமரலு
முறையிட அசுரர் கோடி
துகளெழவிடுமெய்ஞான ஆயிலோனே;
—(ஒருவரை ஒருவர்) திருப்புகழ்

''நாளிகேரம் வருக்கை பழுத்துதிர்
சோலைசூழ் பழநிப்பதி யிற்றிரு
ஞானபூரண சத்தி தரிந்தருள் பெருமாளே!
—(ஆலகாலமெனக்) திருப்புகழ்

நீதிநெறியே யழித்த தாருகன்

அரசர்கள் ஒழுகவேண்டிய நீதியையும், பிற நெறிகளையும் தாரகன் அழித்து வானவரை அலக்கழித்து மதங் கொண்டு திரிந்தனன். சூரனுக்கு இளவலாகிய அவன் திருமாலுடைய ஆழியாயுதத்தைப் பூமாலையாக மார்பில் அணிந்து கொண்ட பேராற்றலுடையவன். அவனல் அமரர் பெரிதும் அல்லலுற்றனர். இடுக்கணுற்ற இமையவர் முறையிட, ஐம்முகச் சிவனர் அறுமுகச் சிவனராக எழுந்தருளி தார கனை யழித்து அவனுக்குத் துணையாக இருந்து மாயையை விளைவித்த கிரௌஞ்ச மலையையும் தகர்த்து, அமரரைத் தத்தம் இல்லிற் குடி புகச்செய்தனர்.

சோதி அனலாய் உதித்த சோணகிரி

திருவண்ணுமலை வரலாறு

ஒரு சமயம் நான்முகக் கடவுள் ''அண்ட கோடிகளை யெல்லாம் படைப்பவனுதலின் நானே பரம்பொருள்'' என்று தருக்குற்று மொழிந்தனர். திருமால், ''காத்தற்கடவுளா தலால் நானேபரம்பொருள்'' என்று எதிர்த் தனர். இங்ஙனம் இருவரும் செருக்கி நெடுங் காலம் போர்புரிந்தனர். அதனல் உலகிலுள்ள உயிர்கள் வருந்தின. உலகிற்குற்ற இடரும், பிரமவிட்டுணுக்களின் தருக்கும் நீங்க பரம சிவப் பெருமான் இருவருக்கும் நடுவே ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதியாக—தாணுவாக நின்றருளினர். அதுகண்ட இரு வரும் வெருவுற்று ''இதன் அடியையும் முடி யையுங் காணுமுகத்தால் நமது வழக்கைத் தீர்த்துக் கொள்வோம்'' என்று துணிந் தனர். திருமால் பன்றி வடிவமெடுத்து ஆயி ரம் ஆண்டு அடியைத் தேடினர். ஏழுலகங் களையும் அகழ்ந்து போனர். பாதாளமேழி னுங் கிளைத்துச் சென்று திருவடிகாணது திகைத்தனர்; மதித்தனர்; துதித்தனர்; உருகினர்; அன்பு பெருகினர்; தருக்கு அகன்று வந்தித்து அருள் பெற்றனர்.

விஷ்ணுர்வை வராஹம் ரூபமாஸ்தாய பூமிம்
விதாரயன்
ஸஹஸ்ரம் ஸமா ஆஸந்தபாதான்வேஷண
பரோ பூத்வா
த்வமேவ மாதரஸிடத்வமேவ பிதாஸி!
த்வமேவ ப்பிராதரஸி த்வமமேவ ஜயேஷ்டோஸி,
த்வமேவச்ரேஷ்டோஸி: யாயேவ மஹிமாகம் வேத
த்ரிஷ்டாவதி! விஜ்ஞாதாபவதி! கர்த்தாபவதி!
கார்யிதா பவதி! யயேவம் வேத!
சிவாஸாயுஜ்யமாப்நோதி! சிவாஸாயுஜ்ய
மாப்நோதி!
— ருக்வேத சம்மிதை

(பொருள்:—விஷ்ணு வராகமாகி பூமியைக் கிழித்துச் செல்லுங்கால் ஆயிரம் ஆண்டுகளா யின: சிவனரது சேவடிகளைத் தேடுவதில் அவாவுடையவர்; தாயும் நீர்; தந்தையும் நீர்; உடன் பிறந்தாரும் நீர்; மூத்தவரும் நீர்; உயர்ந்தவரும் நீர் என்று துதித்தனர். இந்த மகிமையை அறியவல்லவன் எவனே அவனே காண்கின்றவனுகின்ருன்; அவனே அறிந்த

வணுகின்ருன்; கர்த்தாவாகின்ருன்; காரியங்களைச் செய்கின்றவனுகின்ருன்; இவ்விதமறிய வல்லானெவனே அவன் சிவஸாயுஜ்யத்தை யடைகின்ருன்; சிவஸாயுஜ்யத்தை யடைகின்ருன்)

மணிகொண்ட நெடுங்கடலில்விழிவளருந்
திருமாலு மறையினுனும்
பணிகொண்ட பாதலத்தும் பூதலத்து
மீதலத்தும் பரிந்துதேட
அணிகொண்ட பிரமாண்ட கோள்கை பொற்
கோள்கையா யழகு காட்டக்
கணிகொண்ட வொருவரையா மொருவரையா
மகலாது கருத்துட்சேர்ப்பாம்
— *அருணுசல புராணம்*

" அனத்துனுங் கமலாலய மீதுறை
திருக்காலந்திடு மலரடு தேடிய அரற்கு '
(மனத்திரைந்தெழு) திருப்புகழ்
'' ஆதியந்த மங்கறியாத திகழருண'
திரி சொருபன் ''
—*(ஒருவரையும்)* திருப்புகழ்

''நான் இறைவனைக் காண்பேன்'' என்ற முனைப்பு உள்ளவரை, காணமுடியாது; முனைப் பற்ற விடத்தே இறைவன் தானே தோன்றி நிற்பன்.

விட்டே னுலகம் விரும்பேனிருவினை வீணருடன்
கிட்டே னவருரை கேட்டுமிரேன் மெய்கெடாத
நிலை
தொட்டேன் சுகதுக்க மற்றுவிட்டேன் தொல்லை
நான்மறைக்கும்
எட்டே றெனும்பர மென்னிடத்தே வந்திங்
கெய்தியதே,

பின்னும் இறைவனை வெளியே தேடித் திரிவதனுல் காணமுடியாது. உயிர்க்குயிராயுள்ள ஒருவன் பார்வையை அகமுகப்படுத்தி அசைவற நிற்பார்க்குக் காணக்கிடைப்பன்.

உடலுமுட லுயிருநிலை பெறுதல் பொருளென
உலக
மொருவிவரு மநுபவன சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிது பரவச மழிய விழிசெருகி
உணர்வு விழிகொடு நியதி தமதூடு நாடுவதும்
உருவெனவு மருவெனவு முனதெனவு மிலதெனவு
முழலுவன பரசமய கலையார வாரமற
உரையவிழ உணர்வவிழ உளமவிழ உயிரவிழ
உளபடியை யுணருமவ ரநுபூதி யானதுவும்
— *சீர்பாத வகுப்பு*

தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு
நான்முகனும்
தேடித் தேடொண்ணுத்தேவனை யென்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்.
— *அப்பர்*

சோபைவட கோபுரத்திலுறைவோனே :

திருவண்ணுமலைத் திருக்கோயிலுள் வட கோபுரத்தின் வாயிலில் எழுந்தருளிய பெருமானைத் துதிக்கின்றனர்.

திருவண்ணுமலை : செல்வத்துக்கு நாயகனுன திருமாலும், கல்விக்கு நாயகனுன பிரமாவும் அண்ணமுடியாதபடி நின்ற சிவமலை அண்ணுமலை மிக உயர்ந்த ஞானமலை திருவண்ணுமலை.

அருணுசலம் : அருணம் - சிவப்பு;

அசலம் - மலை - சிவந்தமலை

அருணுத்ரி: சிவகிரி சோணுசலம், திருவருணை, சோதிகிரி, அருணகிரி என்பன போன்ற பல திருநாமங்களை உடைய சிறந்த திருத்தலம்.

கருத்துரை

தாரகனை வென்று தேவரை வாழ்வித்ததயாபரரே! திருமால் மருகரே! திருவருணையில் வாழ்பவரே! அவுணரை யழித்த பெருமாளே! மாதர்மயக்கிலாழ்ந்து வினையினுல் அடியேன் நலியாவண்ணம் முத்தி வீட்டைத்தர வேலாயுதத்துடன் வந்து காத்தருளுவீர்.

I have fulfilled my wish cherished for many many years to pay a visit to this world famous temple.

HAJIME NAKAMURA
Professor, University of TOKYO, Japan (1960)

கந்தர் அநுபூதி



கி.வா. ஜகந்நாதன்

முருகப் பெருமானுடைய திருவருளால் இந்த உலகத்தில் வாழும் பொழுதே பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுச் சீவன் முக்தராக விளங்கியவர் அருணகிரிநாத சுவாமிகள். அவர்பாடிய திருப்புகழ் இன்று தமிழ் வழங்கும் இடமெல்லாம் பரவி, மக்கள் உள்ளத்தை உருக்கி இன்பம் அளிக்கிறது. அருணகிரி நாதர் பதினாறாயிரம் திருப்புகழ்ச் சந்தப்பாக்களைப் பாடினார் என்று தெரிய வருகிறது. அவற்றுள் இப்போது ஆயிரத்து முந்நூற்றுச் சொச்சம் பாடல்களே கிடைக்கின்றன, ''திருப்புகழ் விருப்பமொடு செப்பு'' என்று முருகப் பெருமான் ஆணையிட்டதனாலும், அவ்வாறு பாடுதற்குரிய ''அரிய தமிழ்தான் அளித்த''தனாலும், ''பக்தர்கள் அற்புதம் என ஓதச் சத்தமிகுத்த திருப்புகழைச் செப்பென வைத்துலகிற் பரவத்தரிசித்த அனுக்ரகத்''தைப் பெற்றார் அம் மா முனிவர்.

இவ்வாறு முருகனை ஆயிரக்கணக்கான சந்தப்பாடல்களைப் பாடியும் அவர் நாத்தினவு தீரவில்லை. ஒரு ஞானமண மாலையாக 51 பாடல்கள் அடங்கிய நூல் ஒன்றைப் பாட வேண்டும் என்ற ஆசை அவர்பால் எழுந்தது. அந்த ஆசையை முருகப் பெருமானிடமே விண்ணப்பித்துக் கொண்டார்.

'' ஆசைகூர்பக்த னேன்மனோபத்
மானபூவைத்து—நடுவேஅன்
பானநூல்இட்டு நாவிலேசித்ர
மாகவேகட்டி—ஒருஞான
வாசம்வீசிப்ர காசியாநிற்ப
மாசிலோர்புத்தி—அளிபாட
மாத்ருகாபுட்ப மாலைகோலப்ர
வாளபாதத்தில்—அணிவேனோ ?''

என்று பாடினார். 'நினைத்த காரியம் அநுகூலமேபுரி பெருமாளா'கிய முருகன் அவர் விருப்பத்தை நிறைவேற்றினான்.

அவர் விரும்பியது என்ன? ''மனம் என்னும் தாமரை மலரை நடுவிலே வைத்து, அன்பு என்னும் நூலிலே சொல் மலர்களைக் கோத்து, ஞானமணம் வீசும் அந்தமாலையில் முக்குற்றம் அகற்றிய ஞானியர்களுடைய புத்தியாகிய வண்டுகள் பாட, மாத்ருகா புஷ்பமாலை உன் திருவடியில் அணிய வேண்டும்'' என்று அவர் விண்ணப்பம் செய்தார். மாத்ருகா மாலை என்பது அட்சர மாலை அல்லது எழுத்து வரிசைக்குப் பெயர், நெடுங்

கணக்கு என்று தமிழில் வழங்கும், அட்சரவரிசை 51. ''ஐம்பதொருவிதமான லிபிகளும்'' என்று அருணகிரிநாதரே பாடுகிறுர். கோயில்களில் அட்சாராலத்தி என்ற தீபம் உண்டு. அட்சரங் களின் எண்ணிக்கையாகிய 51 விளக்குகள் உள்ள தீபம் அது. ஒன்பது வேறு வகையான பாடல்கள் அடங்கிய பிரபந்தத்துக்கு நவமணி மாலே என்று பெயர். அதுபோல 51 பாடல் கள் அடங்கிய பிரபந்தத்துக்கு மாத்ருகாமாலே என்று பெயர் சொல்லலாம். ஆகவே அருண கிரிநாதர் 'மாத்ருகா புட்பமாலே' என்று குறித்தது, 51 பாடல்கள் அடங்கிய நூலேயே. கந்தர் அநுபூதி 51 பாடல்களே உடைய நூல். அருணகிரிநாதர் விரும்பிய படி அநுபூதியைப் பாடும் அருள் வலிமையை முருகன் அருளினுன்.

மேலே சொன்ன விண்ணப்பப் பாட்டில், ''மாசிலோர் புத்தி அளிபாட'' என்ற விருப் பத்தைச் சொல்லியிருக்கிறுர், அருணகிரி நாதமுனிவர். பல ஞானிகளும் புலவர் களும் அநுபூதிப் பாடல்களேப் பாராட்டியிருக் கிறுர்கள்.

''கந்தரநு பூதிபெற்றுக்
கந்தர்அநு பூதிசொற்ற
எந்தைஅருள் நாடி
இருக்கும்நாள் எந்நாளோ?''

என்று தாயுமானவரும்,

''சும்மா இருவெனநீ சொல்லப்
பொருளொன்றும்
அம்மா அறிந்திலமென்
றன்றுரைத்த—பெம்மான்
அருணகிரி நாதன்
அநுபவம்நா யேற்குக்
கருணைபொழி போரூரா
காட்டு''

என்று போரூர்ச் சிதம்பர சுவாமிகளும் பாராட்டுவது காண்க.

அநுபூதி என்பதற்கு அநுபவம் என்பது பொருள்.

''உரையவிழ உணர்வவிழ
உளம்அவிழ உயிர்அவிழ
உளபடியை உணருமவர்
அநுபூதி யானதுவும்''
''ஆணவ அழுக்கடையும்
ஆவியை விளக்கிஅநு
பூதியடை வித்ததொரு
பார்வைக் காரனும்''

என்று அந்த அநுபவத்தைப் பற்றித் திருவகுப் பில் அருணகிரிநாதர் பாடுகிறுர். கந்தர் அநுபூதியில்,

''தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூ திபிறந் ததுவே''

என்று சொல்லுகிறுர்.

கந்தர் அநுபூதியில் முதலில் விநாயகப் பெரு மானுடைய காப்புச் செய்யுளும் பிறகு 51 பாடல்களும் உள்ளன. எல்லாம் கலி விருத்தங்கள்.

சிறந்த அநுபூதிமானுக இருந்த அருணகிரி நாதர் திருப்புகழ் முதலிய நூல்களில் தம்மை இழித்துக் கொண்டு பல பாடல்களேப் பாடி யிருப்பது போலவே இந்த நூலிலும் தாம் மங்கையர் மையலில் அகப்பட்டது போலவும், ஆசை, அகந்தை முதலிய கெட்ட குணங்களே உடையவர் போலவும் பாடுகிறுர். அவற்றை அவருடைய வரலாற்று நிகழ்ச்சிகளேக் காட் டும் அகச் சான்றுகள் என்று ஆராய்ச்சிக் காரர்கள் சொல்லலாம். இந்த நாட்டு அரு ளாளர்கள் அவ்வாறு கூறிக்கொள்வது மரபு, அவற்றை அவர்களுடைய வாழ்க்கையில் நடந்தனவாகக் கொள்ளல் கூடாது.

அருணகிரிநாதர் பாடிய பாடல்களில் தம்மிடத்தி லுள்ளனவாகச் சொல்லியுள்ள குற்றங்கள் எல்லாவற்றையும் தொகுத்து வைத்துப் பார்த்தால், அவ்வளவையும் ஒரு மனிதன் ஒரு வாழ்நாளில் செய்ய முடியாது.

'ஆரம்பக் காலத்தில் குறையுடையவராக இருந்து, பிறகு வளர்ச்சிபெற்று அநுபூதிமானுக விளங்கினுர். அந்தத் தொடக்கக் காலத்தில் அவ்வாறு பாடியிருக்கிறுர்' என்று சொல்ல லாம். முதிர்ந்த அநுபவம் பெற்று, 'பேசா அநு பூதி பிறந்ததுவே' என்று சொல்லும் நிலேயில் இருந்து பாடியது கந்தர் அநுபூதி. ''கந்தர் அநுபூதி பெற்றுக் கந்தர் அநுபூதி சொற்ற'' என்ற தாயுமானவர் வாக்கு இதை மெய்ப் பிக்கும். அத்தகைய கந்தர் அநுபூதியில்,

''வளேபட் டகைமா தொடுமக் களெனும்
தளேபட் டழியத் தகுமோ தகுமோ?'' (4)

''மட்டூர் குழல்மங் கையர்மை யல்வலேப்
பட்டு சல்படும் பரிசென் றெழிவேன்'' (9)

"கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வேன் அருள்சே ரவும்எண் ணுமதோ?" (24)

"சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரம் தருவாய்" (34)

என்று வரும் பகுதிகள் அவர் மாதர் மையலில் பட்டு வருந்துவதைக் குறிப்பதாகத் தோன்று கின்றன.

"பொறையாம் அறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே" (37)

என்பதில் அகந்தையையும்;

"உய்வாய் மனனே, ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநா சியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே" (14)

"பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையேன் உழலத் தகுமோ?"(16)

என்பதில் ஆசையையும் உடையவராகத் தம்மைச் சொல்லிக் கொள்கிறார். இப்படியே மனித வாழ்வில் விருப்பம், மாயையுள் அகப் பட்டுத் துன்புறல், மூவேடணை, அறியாமை, வினை ஆகியவற்றை உடையவராகச் சொல்லிக் கொள்கிறார். "ஐயா அருணகிரி அப்பா, உனைப்போல, மெய்யாக ஓர் சொல் விளம் பினர் யார்" என்று தாயுமானவர் வியப்படை யும்படி அநுபவத்தைச் சொல்லும் அருணகிரி யார் அந்த உயர்நிலையிலிருந்தபடியேஇத்தகைய இழிந்த தன்மைகளை உடையவராக இருந்தார் என்று கொள்வது முறையாகுமா?

அப்படியானால் அவ்வாறு பாடியதற்கு என்ன காரணம்?

இறைவன் திருவருளால் இந்த உடம்பு இருக்கும் போதே பேரின்ப அநுபவம் பெற்ற பெரியவர்கள், தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறவேண்டும் என்ற கருணை உடைய வர்கள், மக்களுக்கு நல்லுபதேசம் செய்வார் கள். அது ஒருவகை. மக்களுடைய துன்பங் களைக் கண்டு வருந்தி, "இறைவனே, இவர் களுடைய அல்லல்களைப் போக்கி அருளவேண் டும்" என்று விண்ணப்பித்துக் கொள்வார்கள். இது உபதேசம் செய்யும் கருணையைவிட ஒரு படி உயர்ந்தது. வக்கீல் தம் கட்சிக்காரருக் காக வாதாடுவது போன்றது இது.

இதைவிடப் பலபடி மேலே போய், மக்கள் செய்த இழிசெயல்களைத் தாமே செய்ததாகச் சொல்லி இறைவனிடம் முறையிட்டுக் கொள் வது மாபெருங் கருணை. இதை நைச்சியாநு சந்தானம் என்பார்கள். வெவ்வேறு மொழி பேசும் இரண்டு பேர்களுக்கு நடுவில் இரு மொழியும் தெரிந்த ஒரு மொழி பெயர்ப் பாளன் இருந்து ஒருவர் கருத்தை மற்றவ ருக்குப் புலப்படுத்துவார். முருகப்பெருமான் திருச் செவியில் ஏறும்படி முறையிட்டுக் கொள்ளத் தெரியாதவர்கள் நாம். நம் குறை களை நமக்காக அருணகிரிநாதர் இறைவனிடம் மொழிபெயர்ப்பாளரைப் போல நின்று விண் ணப்பிக்கிறார். மொழிபெயர்ப்பாளர், ஒருவர் சொல்வதை அப்படியே மொழிபெயர்த்துச் சொல்வார். "நான் தங்களைக் காணவேண் டும் என்று நெடுநாள் விருப்பம் கொண்டிருந் தேன்" என்று ஒருவர் சொன்னால், 'இவர் தங்களைக் காணவேண்டும் என்று விரும்பினா ராம்' என்று சொல்லமாட்டார். நான் என் பதை நான் என்றும், நீங்கள் என்பதை நீங்கள் என்றுமே சொல்வார். பேசுபவர் சொல்வதை அப்படியே சொல்வார். அவ்வாறே, இறை வனிடம் நாம் சொல்ல வேண்டியதை நாம் சொல்வது போன்ற முறையிலேயே அருணகிரி நாதர் சொல்கிறார். இந்தக் கருணையை எண் ணியே, "கருணைக்கு அருணகிரி" என்று பாராட்டினார்கள்.

இவ்வாறு அருளாளர் சொல்வதற்கு ஆணித் தரமான சான்று ஒன்று இருக்கிறது.

காரைக்கால் அம்மையார் பாடிய திரு விரட்டை மணி மாலையில் ஒரு பாட்டு வரு கிறது. அதில் அம்மையார் தம் நெஞ்சத்துக்குச் சொல்கிறார். 'மனைவியையும் மக்களையும் பற் றிக் கொண்டு நம்பி, சிவபெருமானை நினைக் காமல் வீண் பொழுது போக்குகிறாயே, என் நெஞ்சமே!' என்று பாடுகிறார்.

"நினையா தொழிதிகண் டாய்நெஞ்ச
மேஇங்கோர் தஞ்சமென்று
மனையா ளையும்மக்கள் தம்மையும்
தேறி;ஓர் ஆறுபுக்கும்
நனையாச் சடைமுடி நம்பன்நந்
தாதை,நுந் தாதசெந்தீ
அனையான் அமரர் பிரான்,அண்ட
வாணன் அடித்தலமே!"

என்பது பாட்டு, இதில் தாம் **மனையாளையும் மக்கள் தம்மையும்** தஞ்சமென்று தேறி, இறை வனை நினையாதிருந்ததாகச் சொல்கிறார். பெண்ணுக்கு மனைவி ஏது? ஆகவே, இது தம்மை எண்ணிச் சொன்னது அன்று என்று உறுதி

யாகச் சொல்லலாம். மற்ற மக்கள் இவ்வாறு இருப்பதையே தம்மேல் ஏற்றிச் சொல்லிக் கொண்டது இது. இப்படியேதான் மற்ற அருளாளர்களும் பாடியிருக்கிறார்கள்.

கந்தர் அநுபூதியைப் பாடியது எதற்காக? அருணகிரிநாதர் தம்முடைய அநுபவத்தை விளம்பரப் படுத்துவதற்காக அன்று. முருகப் பெருமானுடைய புகழை விளம்பரப்படுத்துவ தற்காகவும் அன்று, மற்ற மக்கள் தம்மிடம் உள்ள குற்றங்களை நினைந்து நெகிழ்ந்து, முருக னுடைய பெருமையையும் கருணையையும் நினைந்து உருகி, அருணகிரிநாதர் பெற்ற அநுபவம் நமக்கும் கிடைக்காதா என்று ஏங்கி முயற்சி செய்து நன்னெறியை அடைய வேண்டும் என்பதே அவர் திருவுள்ளம்; கந்தர் அநுபூதியில் உள்ள காப்புச் செய்யுள் இந்தக் கருத்தை உள்ளடக்கி வைத்திருக்கிறது.

“ நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனைபதம் பணிவாம் ”

‘நெஞ்சமென்னும் கனமான கல் நெகிழ்ந்து உருகும்படியாக, தஞ்சம் புக்கால் கருணை புரியும் ஆறுமுகநாதனுக்கு, பொருளாற்சிறந்த சொற்களையுடைய அலங்கரிப்பதற்குரிய இந்த ஞானமாலையைச் சிறந்த நிலையில் இருந்து அணி வதற்காக, ஐந்து கரத்தையுடைய விநாயகரைப் பணிவோம்’ என்கிறார்.

நூலின் பயனைப் பெரும்பாலும் இறுதியில் சொல்வது வழக்கம். இங்கே அருணகிரிநாதர் முதலிலே சொல்லி விடுகிறார். ‘நெஞ்சக் கன கல்லும் நெகிழ்ந்து உருகுவதே பயன்’ என் கிறார். அவ்வாறு உருகினால் முருகன் அருளைப் பெற்றுவிடலாம். நெஞ்சமென்னும் கனத்த கல்லைக் கட்டிக் கொண்டு பிறவிப் பெருங் கடலில் நாம் வீழ்ந்திருக்கிறோம். அதன் கனத்தால் அந்தக் கடலில் மேலும் மேலும் ஆழ்ந்து கொண்டிருக்கிறோம். கடலின் மேலே ஆண்டவன் கருணைத் தோணி இருக்கிறது. மேலே வந்து மிதந்தால் அதில் ஏறிக் கொள்ள லாம். நெஞ்சக் கனகல் நெகிழ்ந்து உருகி விட்டால் நாம் அன்பராகி மேலே மிதக்க லாம்; கருணைத் தோணியில் ஏறிக் கொள்ள லாம். ஆகவே நெஞ்சம் உருகுவது மிகவும் இன்றியமையாதது.

‘நெஞ்சக் கனகல் நெகிழ்ந்துருகி’ என்று பாடு கிறார் அருணை முனிவர். நெகிழ்வது, உருகு வது என்று இரண்டு சொல்கிறார். முதலில் செறிவான நிலை மாறி இளகிப் பிறகு நீராள மாய் உருக வேண்டும். நாம் அடையும் துன் பங்களையும் நம்மிடமுள்ள குறைபாடுகளையும் எண்ணி நெகிழவேண்டும்; பிறகு இறைவன் பெருமையையும் கருணையையும் நினைந்தும் அவனருளால் அருணகிரிநாதர் பெற்ற அநுப வத்தை நினைந்தும் உருக வேண்டும். இதற் காகவே அருணகிரிநாதர் நம்முடைய அவலங் களையும், இறைவன் பெருமைகளையும், தாம் பெற்ற அநுபவங்களையும் இணைத்து அநு பூதியைப் பாடியிருக்கிறார். ஒரு பெரிய மாலை யில் பல வண்ணப்பூக்களினிடையே இலைகளையும் வைத்துத் தொடுத்ததுபோல, இந்த ஞான மாலையில் முருகன் பெருமை, கருணை, தாம் பெற்ற அநுபவம் ஆகிய மலர்களையும், நம் அவல நிலையாகிய இலைகளையும் சேர்த்துத் தொடுத்திருக்கிறார்.

கந்தர் அநுபூதி சிறந்த பாராயண நூல். மந்திரங்களைப் பாராயணம் செய்வது போல ஓதுவதற்குரியது. ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு சக்கரமும் அதைப் பூசிக்கும் முறை களும் பிற்காலத்தில் வகுத்திருக்கிறார்கள். மந் திரங்கள் ஓம் என்னும் பிரணவத்தை முதலிலே கொண்டு தொடங்கும். மந்திரம் என்று வேதத்தையும் குறிப்பிடுவார்கள். ‘‘மந்திரமும் தந்திரமும் ஆயி னன்காண்’’ என்று தேவா ரத்தில் மந்திரம் என்பது வேதத்தையும், தந்திரம் என்பது ஆகமத்தையும் குறிக்கும். வேதம் ஓம் என்று தொடங்குவது.

தமிழ் மறையாகிய தேவாரமும் ஓம் என்ற பிரணவத்தை முதலில் வைத்துத் தொடங்கு கிறது. தேவாரத்தின் முதற் பாசுரம், திரு ஞான சம்பந்தர் பாடியருளிய, ‘‘தோடுடைய செவியன்’’ என்பது. அதில் **தோ** என்பது ஓங் காரத்தைத் தன்னுள் அடக்கியது. **த்** என்ற பீடத்தில் **ஓ** என்றதைப் பதித்து வைத்தது அது.

“ எல்லையிலா மறைமுதல்மெய்
யுடனெடுத்த எழுதுமறை ”

என்று சேக்கிழார் பாடுவார். ‘எல்லையில்லாத தாகிய வடமொழி மறையின் முதலாகிய பிரணவத்தை, **த்** என்றும் மெய்யுடன் எடுத்துத் தொடங்கிய எழுதும் மறையாகிய தேவாரம்’ என்பது இதன் பொருள்.

ஞான சம்பந்தர் போலத் தாமும் பாட வேண்டும் என்று விரும்பியவர்அருணகிரிநாதர்

"புமியதனிற் ப்ரபுவான
புகலியில்வித் தகர்போல
அமுதகவித் தொடைபாட
அடிமைதனக் கருள்வாயே"

என்று முருகனை வேண்டுகிறார். சம்பந்தப் பெருமான் பதினாறுயிரம் பதிகம் பாடினார். அருணகிரிப் பெருமானும் பதினாறுயிரம் திருப் புகழ் பாடினார். அவர் பிரணவத்தை அமைத்து முதற் பாசுரத்தைப் பாடினார். இவரும் கந்தர் அநுபூதியின் முதற்பாட்டின் முதலில் பிரணவத்தை அமைத்தார்.

"ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

என்பது முதற் பாட்டின் முற்பகுதி, ஓங்காரம் என்பது அகார உகார மகாரங்கள் இணைந்த எழுத்து. அருணகிரிநாதர் அகரத்தைச் சற்று நீட்டி **ஆ** ஆக்கினார். உகரத்தை ட் என்ற மெய்யின்மேல் ஏற்றி டு ஆக்கினார். ம் என்ற மகரத்தை அப்படியே வைத்துக் கொண்டார். **ஆடும்** என்ற சொல்லில் உள்ள மூன்று எழுத் துக்களில் பிரணவத்தில் உள்ள மூன்று எழுத் துக்களையும் அமைத்து, "**ஆடும்பரி**" என்று தொடங்கினார். பரி என்றது மயிலைக் குறித் தது. மயில் என்றே பாடினால் புணர்ச்சியில் 'ஆடு மயில்' என்று வந்து மகரம் கெட்டு விடும். குதிரை என்று போட்டால் 'ஆடுங் குதிரை' என்று மகரம் திரிந்துவிடும். ஆகவே மகரம் திரியாமல் அப்படியே நிற்கும்படி 'ஆடும்பரி' என்றார். இவ்வாறு, ஆடும் என்ற முதற் சொல்லில் பிரணவத்திலுள்ள எழுத்தை இணைத்தார்.

பொருளை நோக்கும் போதும் பிரணவத் தின் எண்ணம் உண்டாகச் செய்தார். மயிலை ஆடும் நிலையில் பார்த்தால் **ஓ** என்ற எழுத்தின் வடிவாக இருக்கும். உண்மையில் முருகன் பிரணவத்தையே மயிலாகக் கொண்டு அதனி டையே காட்சி தருகிறான். "ஓங்காரத் துள் ளொளிக் குள்ளே முருகன் உருவம் கண்டு" என்று கந்தர் அலங்காரத்தில் பாடுவார். இதையே முருகன் மயிலிடையே வீற்றிருக்கும் கோலம் புலப்படுத்துகிறது. ஓங்காரமே மயில் என்பதை, "ஆன தனி மந்த்ர ரூப நிலை கொண்டது ஆடுமயில் என்ப தறியேனே" என்று திருப்புகழில் பாடுகிறார். அதிலிருந்து ஆடும் மயில் தனி மந்திரமாகிய பிரணவம் என்பது தெளிவாகும்.

ஆகவே, ஆடும் என்ற சொல் பிரணவ எழுத்துக்களைத் தன்னுள்ளே அடக்கி வைத்தி ருப்பதோடு, "ஆடும்பரி" என்பதும் ஓங் காரத்தை நினைப்பூட்டுகிறது.

* * * *

அருணகிரியார் பலவகையில் தாம் பெற்ற சிறந்த அநுபவத்தை இந்த நூலில் சொல்கிறார்.

"எல்லாம் அற என்னை இழந்த நலம்" (2)

"உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே" (13)

"நவிலத் தகுமோ
யானாகிய என்னை விழுங்கிவெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே" (28)

"செவ்வா னுருவில் திகழ் வேலவன் அன்று
ஒவ்வாத தென உணர்வித் ததுதான்
அவ்வா றறிவார் அறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே" (30)

"செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே" (42)

"ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூ திபிறந் ததுவே" (43)

"சரணம் சூடும்படி தந்தது சொல்லுமதோ" (44)

"தன்னந் தனிநின் றதுதான் அறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ." (49)

முருகன் தமக்கு உபதேசித்து அநுபவம் பெறும் வழியைக் காட்டியதைப் பல பாடல் களில் சொல்கிறார்.

"பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா" (8)

"கூகா எனஎன் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா!" (21)

"சும்மா இருசொல் அறஎன் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே" (12)

"அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதே சம்உணர்த் தியவா!"

தம்முடைய இயற்கையறிவும் கல்வியறிவும் முருகப் பெருமான் அருளால் பெற்றவைஎன்று கூறுவார்.

"யாம்ஓ தியகல் வியும்எம் அறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனுல்" **(17)**

இறைவன் திருநாமங்களைச் சொல்லிச் சொல்லி உருகி உணர்வு பெறவேண்டும் என்பார்.

"முருகன் குமரன் குகன்என் றுமொழிந்து
உருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்"
(15)

இறுதிப் பாட்டில் குருநாதனுக வந்து அருள் புரிய வேண்டுமென்று நமக்காக வேண்டிக் கொள்கிறுர். மிகவும் நுட்பமாக உள்ள பொருள் முருகன். அவன் திட்பமான வடிவில் வந்தால்தான் நாம் அவனை அணுகி அருள் பெறலாம். அவன் வரும் போது திட்பமாக வந்து, அருள் செய்யும்போது நுட்பமான நிலையில் நுட்பமான அநுபவத்தைத் தருவான். இப்படித் திட்பமாக வந்து நுட்பமாக அருள் செய்யவேண்டும் என்பதையே உருவக வகையில் திட்பமான பொருளையும் அந்தப் பொருளில் அநுபவிப்பதற்குரிய நுட்பமான பாங்கையும் இணைத்து இறுதிப் பாட்டில் பாடுகிறுர்.

'திட்பமான உருவாக வந்து, நுட்பமான அருவாய் அருள்வாய்; திட்பமாக உள்ள பொருளாய் வந்து நுட்பமாய் இலதான சூன்ய அநுபவம் அருள்வாய்; திட்பமான மலராய் வந்து நுட்பமான மருவாய் அருள்வாய்; இப்படியே திட்பமான மணியாய் வந்து நுட்பமான ஒளியாகவும், திட்பமான உடம்பாக வந்து நுட்பமான உயிராகவும், திட்பமான கதியாக வந்து நுட்பமான விதியாகவும் அருள் செய்ய வேண்டும் என்கிறுர். இறுதியில் உருவகமாகச் சொன்னதைத் தெளிவாகப் புலப்பட வைத்துத் திட்பமான குருவாக வந்து நுட்பமான குகனுக அருள்வாய் என்கிறுர். தகராகாசம் என்னும் குகையில் அதி சூட்சுமப் பொருளாய் இருப்பவன் குகன்.

"உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்,
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்,
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே!"

[மரு—மணம். செய்யுளாதலின் எதுகை நோக்கி மரு என முன்வைத்தார். அதை எதிர் நிரல் நிறையாகக் கொண்டு மலராய் வருவாய், மருவாய் அருள்வாய் என்று கூட்டவேண்டும். கரு—உடம்பு. கதி—செல்லும் நெறி. விதி—லட்சியமாக வரையறுக்கப்பட்ட முடிவு.]

கந்தர் அநுபூதியைப் பாராயணம் பண்ணிஞல் நம்முடைய அவல நிலைகளையெல்லாம் நினைந்து நெஞ்சு நெகிழலாம்; முருகன் திருநாமங்களையும் கருணையையும் பெருமைகளையும் நினைந்து நெஞ்சு உருகலாம்; அருணகிரியார் தாம் பெற்றதாகச் சொல்லும் அநுபவத்தை நாமும் பெறவேண்டும் என்ற ஆர்வம் உந்த அவர் காட்டும் வழியிலே செல்ல முற்பட்டு, பேசா அநுபூதியைப் பெறலாம். ●

We were much struck and impressed not only by the temporalities attached to the temple but also by the extraordinary state of order and extreme cleanliness of the temple premises.

SIR KANDIAH
VAITHIANATHAN
CEYLON.

7-1-1936

கந்தர் அலங்காரம்

அருணகிரிநாதர், நம் செந்தமிழ் நாட்டின் பெருங்கடவுளாம் முருகனின் அடியார்களுள் தலை சிறந்த ஒருவர். ஒப்புயர்வற்ற சிறந்த அருட்பெருங் கவிஞர்.

''வருக்கைச் சுளையும் பொருக்கரை மாவும்
கொழுங்கனி வாழையும் செழுஞ்சுவைக் கன்னலும்
ஒருங்குதலை மயங்கிய அரும்பெருங் கலவையின்
அருஞ்சொல் வழக்கமும் திருந்திய நடையும்
வண்ண வேற்றுமையும் தண்ணெனும் ஒழுக்கமும்
ஒன்றி நிரம்பிய குன்றாத் திருப்புகழ்''

—மறைமலையடிகள்

என்று தமிழ்ப் பெருஞ்சான்றோர்கள் போற்றும் திருப்புகழ் என்னும் சந்த நலம் சான்ற செந்தமிழ்த் தெய்விகப் பாடல்களைப் பாடியருளியவர். அவர் பாடியருளிய நூல்களுள், கந்தர் அலங்காரம் என்பதும் ஒன்று. சிவபெருமானுக்குத் திருவாசகம் போல, முருகப் பெருமானுக்கு மிகவும் உவகை விளைவிக்கும் சிறந்த துதிநூல், கந்தர் அலங்காரம். ''கந்தர் அலங்காரத்தின் உட்பொருளை ஆய்ந்து கற்றுக்களிப்பதுவே, நம் தேகம் கலங்கா, அலங்காரம்'' என்று தணிகையுலா, கந்தர் அலங்காரத்தினைப் புகழ்ந்து போற்றுகின்றது.

சலங்காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார்;
யமன் சண்டைக்கு அஞ்சார்;
துலங்கா நரகக்குழி அணுகார்;
துட்டநோய் அணுகார்;
கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும்;
கந்தர் நன்னூல்
அலங்காரம் நூற்றுள் ஒருகவிதான்
கற்று அறிந்தவரே

என்னும் பாடல், கந்தர் அலங்காரத்தினை அன்புடன் காலை மாலை வேளைகளில் நியமமாகப் பாராயணம் செய்து, முருகனைத் துதித்து வழிபடுபவர்கள் அடையக் கூடிய, பல சிறந்த பேறுகளைக் குறித்துக் கூறுகின்றது.

இந்நூலானது, ஆங்காங்கே பல பாடல்களில் கந்தப் பெருமானின் கருணைத் திறனையும், வள்ளி தெய்வயானை யம்மையாரின் அருள் நலங்களையும், சேவல், மயில், வேல் ஆகியவற்றின் சிறப்புக்களையும், அழகுற அலங்காரமாக விவரித்து விளக்கிப் பாடுகின்றது. அதனால் இதற்குக் **கந்தர் அலங்காரம்** எனப்பெயர் அமைந்தது. இது நூறு பாடல்களைக் கொண்டது. அதற்கு மேலும் சில தனிப் பாடல்களும், இந்நூலின்கண் தொகுக்கப் பெற்று வழங்கி வருகின்றன.

தாம் பெற்ற அருள் நலனைக் கூறித், தமது அகமகிழ்ச்சியை வெளியிடும் பாடல்களின் இடையிடையே, தமது குறைகளைக் கூறித் தமக்கு அருள் சுரக்குமாறு வேண்டும் பல பாடல்களும் இதன்கண் காணப்படுதலின், இஃது ஒரே சமயத்தில் தொடர்ந்து

ந.ரா.முருகவேள்

பாடப்பட்டதன்று. ''உளங்குளிர்ந்தபோதெல்லாம் உவந்துவந்து பாடுவனே'' என்ற போல, அப்போதைக்கு அப்போது தமது மனமும் தவமும் அமைந்த நிலைக்கு ஏற்ப, இஃது அருணகிரிநாதரால் பாடப் பெற்றதாகும்.

இந்நூலின் காப்புச் செய்யுள், திருவண்ணாமலைக் கோயிலில், ஒரு கோபுரத்தின் வடக்குப் புறத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் ''**கோபுரத்து இளையனார்**'' என்னும் முருகப் பெருமான் மீது அமைந்துள்ளது. இப்பெருமானே அருணகிரிநாதரைத் தடுத்தாட் கொண்டருளியவர். அருணகிரிநாதர்க்கு ''முத்தைத் தரு பத்தித் திருநகை'' என்ற திருப்புகழ்க்கு அடியெடுத்துக் கொடுத்தவரும், இந்தக் ''**கோபுரத்து இளையனார்**'' என்னும் பெருமானே ஆவர்.

நூலின் தொடக்கத்தில், விநாயகர் வணக்கம் அமைதல் வேண்டும் என்பது மரபு நெறி. எதனைப் பாடினும், எத்தெய்வத்தைப் போற்றினும், முருகனொடு சார்த்தி, முருகனை முதன்மைப் பொருளாகக் கொண்டே பாட வேண்டும் என்பது, அருணகிரிநாதர் கடைப் பிடித்த கொள்கை நெறி. இவ்விரு நன்னெறிகளையும் முரண்பட விடாமல், ஒரு சேர நன்கினிது போற்றி,

அடலருணைத் திருக்கோபுரத்தே
அந்த வாயிலுக்கு
வடஅருகிற் சென்று கண்டுகொண்டேன்:
வருவார்தலையில்
தடபடெனப் படு குட்டுடன்
சர்க்கரை மொக்கிய கைக்
கடதட கும்பக் களிற்றுக்கு
இளைய களிற்றினையே

என்று, பாடலின் பெரும்பகுதி விநாயகரைப் பற்றியும், ஆனல் அதன் முடிவான முதன்மைப் பகுதி, முருகப் பெருமானைப் பற்றியும், அழகுற அமையுமாறு, அருணகிரிநாதர் பாடியிருக்கும் சதுரப்பாடு, பெரிதும் வியந்து போற்றுதற்கு உரியது.

கந்தர் அலங்காரம், சிறந்த இனிய செஞ்சொற்களால் இயன்றது; ஓதுதற்கு எளிய இனிய நல்ல கவிதை நடையில் அமைந்தது; பக்திச் சுவை மிக்கது; பயில்பவர் உள்ளம் கவரும் சொற்சுவை, பொருட்சுவைகள் நிரம்பியது; பல்லாயிரக் கணக்கான பக்தர்களால் நாடோறும் அன்புடன் பாராயணம் செய்யப் பட்டு வருவது. கந்தப் பெருமான் கருணையைப் பெறுவதற்கு விரும்பி, உருகி உருகி அருணகிரிநாதர், கந்தரலங்காரத்திற் பாடியுள்ள கவிதைகள் எவருள்ளத்தையும் கொள்ளை கொள்ள வல்லன.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
வாழும் செழுஞ்சுடரே!
வைவைத்த வேற்படை வானவனே!
மறவேன் உனைநான்;
ஐவர்க்கு இடம்பெறக் கால்இரண்டு
ஓட்டி, அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையும் முன்னே
வந்து காத்தருளே!

மைவரும் கண்டத்தர் மைந்த! கந்தா
என்று வாழ்த்தும் இந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறியேன்;
கற்ற கல்வியும் போய்ப்
பைவரும் கேளும் பதியும்
கதறப் பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும்
போதுன் அடைக்கலமே.

காவிக் கமலக் கழலுடன் சேர்த்து
எனைக் காத்தருளாய்!
தூவிக் குலமயில் வாகனனே!
துணை ஏதும் இன்றித்
தாவிப் படரக் கொழுகொம்
பிலாத தனிக்கொடிபோல்,
பாவித் தனிமனம் தள்ளாடி
வாடிப் பதைக்கின்றதே

என்பன போல, முருகப் பெருமான் தம்மைக் காத்தருளல் வேண்டும் என்று, அருணகிரியார் இரந்து வேண்டிக் கொள்ளும் இனிய பாடல்கள், எவர் உள்ளத்தையும் கவர வல்லனவாகும்.

இங்ஙனமே, உலக மக்களுக்கு அறிவுரைகள் கூறும் முறையிற் பல சிறந்த பாடல்கள் கந்தர் அலங்காரத்திற் பயின்று வருகின்றன.

தடுங்கோள் மனத்தை; விடுங்கோள்
வெகுளியைத்; தானம் என்றும்
இடுங்கோள்; இருந்தபடி இருங்கோள்;
எழுபாரும் உய்யக்
கொடுங்கோபக் குருடன், குன்றம் திறக்கத்
துளைக்க, வைவேல்
விடும்கோன் அருள்வந்து தானே
உமக்கு வெளிப்படுமே!

வையிற் கதிர்வடி வேலோனை
வாழ்த்தி, வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்;
நுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின்
வெறும் நிழல்போல்
கையிற் பொருளும் உதவாது
காணும் கடைவழிக்கே.

என்பன போல வரும் பாடல்கள், அருணகிரி நாதர் உலக மக்களுக்கு அறிவுறுத்தும் சிறந்த ஞானோபதேசங்கள் ஆகும்.

கந்தர் அலங்காரத்திற் காணும் சிற்சில பாடல்கள், முதன் முறையாகக் கேட்ட மாத்திரத்திலேயே மக்கள் நெஞ்சகத்தில் செவ்விதிற் பதிந்து மகிழ்வுறுத்தும் தகையன வாகும்.

சிந்திக்கிலேன்; நின்று சேவிக்கிலேன்;
தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன்; ஒன்றும் வாழ்த்துகிலேன்;
மயில் வாகனனைச்
சந்திக்கிலேன்; பொய்யை நிந்திக்கிலேன்;
உண்மை சாதிக்கிலேன்;
புந்திக் கிலேசமும், காயக்
கிலேசமும் போக்குதற்கே.

விழிக்குத் துணை, திரு மென்மலர்ப்
பாதங்கள்; மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா எனும்
நாமங்கள்; முன்புசெய்த
பழிக்குத் துணை, அவன் பன்னிரு
தோளும்; பயந்ததனி
வழிக்குத்துணை, வடி வேலும்
செங்கோடன் மயூரமுமே.

சேந்தனைக், கந்தனைச், செங்கோட்டு
வெற்பனைச், செஞ்சுடர்வேல்
வேந்தனைச், செந்தமிழ் நூல்விரித்
தோனை, விளங்குவள்ளி
காந்தனைக், கந்தக் கடம்பனைக்,
கார்மயில் வாகனனைச்,
சாந்துணைப்போதும் மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே.

என்பன போல வரும் பாடல்கள், முதன் முறையாகக் கேட்ட அளவிலேயே, எவர் மனத் திலும் இனிது பதிந்து இன்பம் விளைவிப்பன வாகும்.

ஒரு நூல் மிகவும் சிறப்புடையது என்ப தற்கு அடையாளம், அதன்கண் வரும் பாடல் களை அறிஞர்கள் வியந்தும் நயந்தும் அடிக்கடி எடுத்துக் கையாளுவதாகும். அம்முறையிற் பின்வரும் அழகிய இனிய கந்தரலங்காரப் பாடல்கள், பல்காலும், அறிஞர்களால் பெரி தும் கையாளப்படும்.

மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன்; முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன்:
வெய்ய வாரணம்போற்
கைதான் இருப துடையான், தலை
பத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள்
பயந்த இலஞ்சியமே.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்;
முழுதும் கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப்படார்;
வெற்றி வேற் பெருமாள்;
அடியார்க்கு நல்ல பெருமாள்;
அவுணர்குலம் அடங்கப்;
பொடியாக்கிய பெருமாள்
திருநாமம் புகல்பவரே.

தோலாற் சுவர்வைத்து, நாலாறு
காலிற் சுமத்தி, இரு
காலால் எழுப்பி, வளைமுதுகு ஒட்டிக்,
கைநாற்றி, நரம்
பால் ஆர்க்கை இட்டுத் தசைகொண்டு
மேய்ந்த அகம்பிரிந்தால்,
வேலாற் கிரிதுளைத்தான் இருதாள்
அன்றி வேறில்லையே.

என்பன போன்ற பாடல்கள், மிக்க சுவை பொருந்திய விழுமிய அழகிய பாடல்கள் ஆகும். இவற்றை அறிஞர்கள் அடிக்கடி எடுத்துரைத் துப் போற்றிப் பாராட்டுவர்.

அருணகிரி நாதர், முருகன் அருளை முழு தாக நிரம்பப் பெற்று மகிழ்ந்த சிறந்த அருட் பெருஞ் சான்றோர். ஆதலின், அவர் பிறப் பச்சமும், இறப்பச்சமும் அறவே நீங்கப் பெற்றவர் ஆவர். ஆதலின், அவர் பிறப் பிக்கும் தொழிலையுடைய பிரமனையும், இறப் பிக்கும் செயல் புரியும் இயமனையும், எளியர் என எண்ணிக் குறை கூறியும், இகழ்ந்து ஏளனம் புரிந்தும், கந்தரலங்காரத்திற் பாடு வர்.

மாலோன் மருகனை, மன்றுடி
மைந்தனை, வானவர்க்கும்
மேலான தேவனை, மெய்ஞ்ஞான
தெய்வத்தை, மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்
சென்று கண்டுதொழ
நாலாயிரம் கண்படைத் திலனே
அந்த நான்முகனே.

பங்கே ருகன் எனைப் பட்டோலையில்
இடப், பண்டுதலை
தங்காலில் இட்டது அறிந்திலனோ?
தனிவேல் எடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னம்
சிலம்பு புலம்பவரும்
எங்கோன் அறியின் இனி நான்
முகனுக்கு இருவிலங்கே

கோடாத வேதனுக்கு யான் செய்த
குற்றமென்? குன்றெறிந்த
தாடாளனே! தென் தணிகைக் குமர!
நின் தண்டையந்தாள்
சூடாத சென்னியும், நாடாத
கண்ணும், தொழாத கையும்
பாடாத நாவும் எனக்கே
தெரிந்து படைத்தனனே

வேல்பட் டழிந்தன வேலையும், சூரனும்,
வெற்பும்; அவன்
கால்பட் டழிந்ததிங் கென்றன்
தலைமேல் அயன் கை எழுத்தே

எனப் பிரமதேவனைக் குறைகூறும் முறையில் அமைந்துள்ள அரிய இனிய செய்யுட்கள் பெரிதும் சுவை மிக்கனவாகும்.

இவ்வாறே, யாவரும் அஞ்சி வெருவி நடுங்குதற்குரிய இயமனையே அச்சுறுத்தி எச்சரிக்கும் வகையிற் பல பாடல்கள், அருணகிரி நாதரால் கந்தரலங்காரத்திற் பாடப்பெற்று உள்ளன.

தண்டா யுதமும் திரிசூல மும்விழத்
தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடுவேன்;
செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத
ஞானச் சுடர்வடிவாள்
கண்டாய் அடா, அந்தகா! வந்துபார்
சற்றென் கைக்கெட்டவே!

பட்டிக் கடாவில் வரும் அந்தகா!
உன்னைப் பார் அறிய
வெட்டிப் புறங்கண் டலாது விடேன்!
வெய்ய சூரனைப் போய்
முட்டிப் பொருத செவ்வேற் பெருமாள்
திருமுன்பு நின்றேன்!
கட்டிப் புறப்படடா! சத்திவாள்
என்றன் கையதுவே!

வாராது அகல், அந்தகா!
வந்தபோது உயிர் வாங்குவனே!

எமராசன் விட்ட கடை ஏடு
வந்தினி என் செயுமே!

என்பன போல வரும், இனிய கந்தரலங்காரச் செய்யுள்கள், அருணகிரி நாதரின் திருவருட் பேற்றையும், சிந்தை ஊற்றத்தையும், செவ்வி தின் விளக்கும்.

கவிதை என்பது கவிஞனின் அனுபவத்தினின்று அரும்பி மலர்வது; கவிஞனின் அனுபவச் சிறப்புக்கு ஏற்பக் கவிதை நூலின் சிறப்பும் உயர்ந்து விளங்கும். அம்முறையில் கந்தர் அலங்காரத்தின் சிறப்புக்குக் காரணமான அருணகிரிநாதரின் அருளனுபவங்கள், பல பாடல்களில் அழகுறப் புலப்படுத்தப் பெற்று உள்ளன.

பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல்
காக்கின்ற பேதைகொங்கை
விரும்பும் குமரனை, மெய்யன்பினுல்
மெல்லமெல்ல உள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம்,
தித்தித்து அறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்து,
அறக் கைத்ததுவே

நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லாம்
ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு
என்னை மறந்திருந்தேன்; இறந்தே
விட்டது இவ்வுடம்பே.

என்பன போன்று வரும் பாடல்களில், அருணகிரி நாதரின் அருளனுபவ நலங்கள் தெளிவுற விளங்குகின்றன.

கந்தர் அலங்காரம் ஓர் எளிய சாதாரணமான சிறு நூல் அன்று. கல்வி நலஞ்சான்ற புலவர் பெருமக்களும், கடவுள் நெறிப் பெருஞ் சான்றோர்களும் வியந்து போற்றிப் பயின்று மகிழ்ந்த ஓர் அரும்பெறல் நூலாகும்.

நமது தமிழ் நாட்டில் தோன்றியருளிய அருட்பெருஞ் சான்றோர்களுள், தாயுமான சுவாமிகளின் அருமை பெருமைகளை அறியாதார் இல்லை. அவர் வேதாந்த சித்தாந்த சமரசச் செந்நெறி வித்தகர்! யோக ஞான அனுபவ நலங்களில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி உயர்ந்து சிறந்து விளங்குபவர். அவர் கந்தர் அலங்காரத்தினை மிகவும் விரும்பிப் பயின்று போற்றிப் பயன் கொண்டுள்ளார்!

யான்தான் எனும்சொல் இரண்டும்
கெட்டால் அன்றி யாவருக்கும்
தோன்றாது சத்தியம்; தொல்லைப்
பெருநிலம் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்
கிருபாகரன் கேள்வியினால்
சான்று, ஆரும் அற்ற தனிவெளிக்கே
வந்து சந்திப்பதே

என்னும் கந்தர் அலங்காரச் செய்யுளின் அரும் பெரும் கருத்தில், தாயுமான சுவாமிகள் பெரிதும் ஈடுபட்டு, நினைந்து நினைந்து வியந்து மகிழ்ந்து அதனைப் பெரிதும் புகழ்ந்து போற்றியிருக்கின்றார்.

''யான்தான் எனல் அறலே
இன்ப நிட்டை என்று அருணைக்
கோன்தான் உரைத்த மொழி
கொள்ளாயோ நன்னெஞ்சே''

என்று, தாயுமானவர் அருணகிரி நாதரின் கந்தர் அலங்கார ஞானோபதேசத்தினைத் தமது நெஞ்சத்திற்கு எடுத்துக் கூறி அறிவுறுத்தியிருத்தல் காணலாம்.

இங்ஙனம், தாயுமான சுவாமிகள் முதலான பெருஞ் சான்றோர்கள் அனைவரும் விரும்பிப் பயின்று, போற்றிப் பயன்கொண்ட, கந்தரலங்காரத்தினை, நாமும் அன்புடன் போற்றிக் கற்று அருணகிரி நாதரின் அருளைப் பெற்று, உய்ய முயல்வோமாக!

—நன்றி : திருக்கோயில்

NOTHING EQUAL TO IT IN ALL INDIA

After an all-night train journey, I arrived at Tiruvannamalai just as the sun was clearing the horizon. The stars were fading out of the sky and the **Gopurams** of the Temple were silhouetted against the perfect cone of Arunachala Hill. It rose three thousand feet out of flat terrain. and being so close it completely dominated the scene. The summit was at that moment hidden in a cloud which deepened to a Crimson coronet as it caught the first rays of sunlight. Ten minutes later the display was over and the heat of the day began. I had seen the Taj Mahal by moonlight, and the vast expanse of the snow-clad Himalayas stretching for a hundred miles, but in all India I never saw anything to equal this first glimpse of the holy hill, rose–crowned by the glory of the morning light. It so dominated my mental horizon that I feel unequal to the task of impartial judgement. To many, Arunachala is just an ordinary and rather uninteresting hill covered with rough gross and shale, but I always see it through the rosy glow of that cloud on the summit.

Arunachala Hill Is, according to local myth, the symbol of Spirit incarnate in Matter. The Tamils declare that it is the oldest hill in the world, the heart of the earth and its centre; Mount Meru, in fact. It is one of their most sacred places of pilgrimage.

—Hunting the Guru in India by

ANNE MARSHALL

London

Victor Gollancz Ltd., 1963 pp. 72-73

அருணகிரிப் புராணம்

மு. அருணசலம்

திருவண்ணமலைக்குரிய இரு புராணங்களில், காலத்தால் இதுவே முதலில் பாடப்பட்ட புராணம். இதைப் பாடியவர், 16ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து, சைவ சமயநெறி, சிவதருமோத்தரம் முதலான எண்ணற்ற சிறந்த சைவசமய நூல்கள் செய்த சிதம்பரம் - கண்கட்டி - மறைஞான சம்பந்தர்.

இப்புராணம் எட்டுச் சருக்கங்களும் 613 பாடல்களும் உடையது. இவ்வாசிரியர் மிகச் சிறந்த புலமை யுடையவர். இப்புராணம் முழுமையும் சிறந்த சந்தப் பொலிவும் மடக்கணியும் கொண்டது. பாயிரப் பகுதியில் வணக்கப் பாடல்கள் அதிகமாகச் சொல்கிறுர். மலையாகிய அண்ணமலையாரையும், பராசக்தியையும், ஆலயத்துள்ளிருக்கும் அருணசலேசரையும் உண்ணமுலையம்மையையும் தனித்தனியே போற்றுகிறுர். சபாநாதர், அதிகார நந்தி, நந்திகேசுவரர், மகாகாளர், இடபதேவர் என்போரையும், காரைக்காலம்மையார், நால்வர், திருமாளிகைத் தேவர், மெய் கண்டார் ஆகிய அடியாரையும் இவர் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கது. இவர் பாடிய மெய் கண்டார் வணக்கம் சைவ உலகம் நன்கறிந்தது:

வேதத்தின் அரும்பொருளை விமலனருள் நந்திக்குப்
போதித்த சிவஞான போதத்தைக் குருமரபால்
ஓதித்தேர்ந் தருந்தமிழால் எமக்குணர்த்தி எம்மனம்
சேதித்த மெய்கண்ட தேவனடி சிந்திப்பாம்,

திருநாட்டுச் சிறப்பு திருநகரச் சிறப்பு என்ற அங்கங்களோடு நூல் தொடங்குகிறது. நூல் பெருங் காவியத் தன்மை பொருந்த அழகுபெறச் செய்யப்பட்டது, அருணசலோதயச் சருக்கம், சோதி வடிவமாக அருணசலேசர் தோன்றிய செய்தியைப் பாடுகிறது. அருந்தவச் சருக்கம், உமாதேவியார் திருக்கண் புதைத்த குற்றம் போகக் காஞ்சியில் பூசித்து இங்குத் தவம் செய்ததைக் கூறுகிறது. மகிடாசுர வதமும் இங்கு விரிக்கப்படுகிறது. வலம்புரிச் சருக்கத்தில், திருமலையை வலம் செய்தல், பலன், ஆலய தரிசனம் முதலியன சொல்லப் படுகின்றன. பிறகு நகரம் அமைத்த வரலாறும் பூனை புழுகு சாத்திய வரலாறும் உள்ளன.

சிவத்தையும் சத்தியையும் துதிக்கின்ற இருபாடல்களை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம்.

தண்ணர்மதி சூடும்சடை முடியான் அடல் விடையான்
அண்ணர் புரத் தொருமூவரை நயந்தன் றருள் புரிந்தான்
பண்ணர் மொழி உமையாள் வலப் பாகன் பரிப்பாகன்
அண்ணமலை யமலன்னடி பணிவாம் முடி அணிவாம்.

நாலாகிய மறையாகமம் நாலேழையும் நவின்றே
மேலாகிய வழிதன்னையும் விரித்தான் உய எவரும்
மாலாகிய இருவர்க்கரு மருந்தான வன் வாமப்
பாலாகிய உண்ணமுலை பாதம் பணிவாமே.



அருணாசலப்புராணம்

க.வச்சிரவேல் முதலியார்

அருணாசலம் என்பது வடஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை என்னும் தலத்தில் உள்ள திருமலை. அஃது இறைவன் திருவுருவே எனக் கருதப்படுவது. அதன் பழைய வரலாறு பின்வருவது:

உலகமெல்லாம் ஊழிக்காலத்தில் முறையாக ஒடுங்கி நின்றது. மீள அவ்வாறே படைக்கப் பெற்றபோது, படைப்புக் கடவுளாகிய அயன், தன் ஆக்கச் செயல் குறித்து இறுமாந்து, திருமாலை நோக்கித் தானே முதல்வன் என, அவரும் அவ்வாறே எதிர்த்துத் தாமே முதல்வன் என்றார். இங்ஙனம் இவர் தம்முள் மாறுபட்டு நின்றபோது, இவர் பூசலை நீக்குதற்கு இறைவன் இவர்முன் அளக்கவொண்ணாத பேரழற்பிழம்பாய்ப் புலப்பட்டு நின்றான். தம்பெருமையினை மெய்ப்பித்தற்பொருட்டு இருவரும் அதன் முடியினையும் அடியினையும் முறையே காண்குவம் எனச் சூள் உரைத்தனர். அயன் அன்னமாய் விசும்பிற் பறந்தான்; திருமால் பன்றியாய் நிலத்தைக் கீண்டு கீழே சென்றார். ஆயிரம் தேவ யாண்டுகள் முயன்று சென்றும், அனற்பிழம்பின் முடியோ அடியோ காணப்பட்டிலது. இளைப்பு அடைந்த திருமால் மேல் ஏறி நில மட்டத்திற்கு வந்தார். அவ்வாறே இளைத்த அன்னமாகிய பிரமன், பன்னெடுங்காலம் அனற்பிழம்பின் முடியினின்றும் இறங்கி வந்த தாழம்பூவைத் தனக்குப் பொய்ச்சான்றுபகரச் சொல்லி, கீழ் இறங்கித் தான் முடியைக் கண்டதாகப் பொய் சொன்னான். அப்போது அனற்பிழம்பாகிய சிவலிங்கத்தினின்றும் இறைவன் தோன்றி அயனை வெகுண்டு, ''நீ மக்களாற் பூசிக்கப்படாதொழிக'' எனக் கூறினன். தாழம் பூவையும், ''யாம் உனைத் தீண்டேம்'' என வெகுண்டு உரைத்தனன்.

பின், அயன்மால் இருவரும் வேண்ட, காண்டற்கு அரிய அனற்பிழம்பு வடிவை மலையளவினதாகச் சுருங்கக் காட்டினன். அம்மலையே அருணாசலம். அருணம்—சிவப்பு, அசலம்—மலை. தான் சிவந்து நெருப்பாக இருந்தமையாலும் உலகனைத்தையும் சிவந்து காணச் செய்தமையாலும், அஃது அருணாசலம் எனக் கூறப்படுவது ஆயிற்று. திருவண்ணாமலை என்பதும் அம்மலையின் பெயரே ஆகும்; அணுக முடியாத மலை என்பது பொருள். அம்மலையை மூர்த்தியாகக் கொண்டுள்ள அவ்வூர்க்கும் அதுவே பெயர் ஆயிற்று.

இத்தகைய மலையே இங்குத் தொழப்படும் மூர்த்தியாயினும், யாவரும் எளிதின் பூசித்து வழிபடுதற் பொருட்டு, அயன் மால் என்னும் இருவர்தம் வேண்டுதலுக்கு இரங்கிச் சிவபிரான் அம்மலையின் கிழக்குப் பக்கத்திலும் மேற்குப் பக்கத்திலும் இரண்டு சிவலிங்கங்

களாக எழுந்தருளினன். தேவ தச்சனுல் கோயில்கள் அமைத்து, அவ்விருவரும் அவற்றைப் பூசித்து நலம் பெற்றனர். கிழக்கே திருமாலால் பூசிக்கப்பெற்ற மூர்த்தி அண்ணு மலே நாதர் எனவும், மேற்கே அயனுல் பூசிக்கப் பெற்ற மூர்த்தி அணி அண்ணுமலே நாதர் எனவும் வழங்கப் பெறுகின்றன. இஃது இப் புராணத்தின் மைய வரலாறு.

இப்பழைய வரலாறு இறைவன் உலகினைக் கடந்தவன் (விச்சுவாதிகன்) என்னும் உண்மையினையும், யான் எனது என்னும் செருக்கோடு நிகழும் எவ்வகை முயற்சிக்கும் இறைவன் எட்டப்படான் என்பதையும், அவன் தன் கடவுள் தன்மையினையும் பேரருளேயும் நினைந்து உருகி அன்பால் தொழுவோர்க்கு எளிவந்து அருள் செய்வன் என்பதையும் உணர்த்துவதற்கு இலிங்கபுராணம் என முதற்கண்பண்டு எழுந்தது. திருஞானசம்பந்தர் தாம் அருளிச் செய்த திருப்பதிகந் தோறும் இவ்வரலாற்றை ஒன்பதாம் பாட்டில் குறிப்பிடுகின்ருர். திருநாவுக்கரசர் இலிங்க புராணத் திருக் குறுந்தொகை என ஒரு திருப்பதிகமே அருளிச் செய்துள்ளார். இதனை மக்கள் உளங்கொண்டு உயர்வற உயர்நலம் பெற்று உய்தற் பொருட்டு மிகப் பழங்காலந் தொட்டுத் திருவண்ணுமலே என்னும் தலத்தில் உள்ள திருமலேயோடு இவ்வரலாற்றைத் தொடர்புபடுத்திப் பெரியோர்கள் சில மரபுகளேக் கடைப்பிடித்து ஒழுகியும் ஒழுகுவித்தும் வந்துள்ளனர்.

இம் மரபுகளுக்கு என்றும் அழியாச் செய்யுள் வடிவங்கொடுத்து, இத்திருமலே, தலம், தீர்த்தம் முதலியவற்றின் சிறப்புக்களேயும் பெருமைகளேயும் சிறுகாப்பிய வடிவில் படித்தும் கேட்டும் நன்மை பெறவைப்பதே 'அருணுசல புராணம்' என்னும் இலக்கியப் படைப்பு ஆகும்.

இச்சீரிய, படித்துணர்தற்கு இனியபுராணம் காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம், கதை வரலாறு என்பவற்றைக் கூறும் பாயிரமும், திருநகரச் சருக்கம், திருமலேச் சருக்கம் முதலாகப் பழைய வரலாறு கூறும் பதின் மூன்று சருக்கங்களும் உடையதாய், 650 செந் தமிழ்ப் பாடல்களால் ஆக்கப்பெற்றுள்ளது. மேற்கூறிய வரலாறு இதில் திருமலேச் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது. பொய் உரை பகர்வோரும் பொய்ச் சான்று கூறுவோரும் இழிவடைவர் என்னும் அறநெறி உணர்வும் இவ் வரலாற்ருல் உணரப்படுகிறது.

இப்புராணத்தைத் தமிழில் ஆக்கிய ஆசிரியர் திவ்விய கவி சைவ எல்லப்ப நாவலர் ஆவர். இவர் சோழ நாட்டிலே பூந்தாழை என்னும் ஊரில், சைவ வேளாண் குலத்திலே காலிங்கராயர் கோத்திரத்தில் தோன்றியவர். தருமபுர ஆதீனத்தில், அதன் முதல்வர்களுள் ஒருவராகிய சிவஞான தேசிகர்பால் சிவதீக்கையும் உபதேசமும் திவ்வியகவி, நாவலர் என்னும் பட்டங்களும் பெற்றுச் சிறந்தவர். இவர் காலம் 17ஆம் நூற்ருண்டின் இறுதி எனக் கொள்ளத் தக்கது. இவர் இயற்றிய பிற நூல்கள் திருவெண்காட்டுப் புராணம், செவ்வந்திப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், தீர்த்தகிரிப் புராணம், திருச்செங்காட்டங் குடிப் புராணம், திருவாரூர்க் கோவை, திரு அருணேக்கலம்பகம், திரு அருணே அந்தாதி என்பன. திருவெண்காட்டுப் புராணத்தைப் பதிப்பித்தோர் இவர் பிறந்த ஊரை 'திருவெண்காட்டின் தென்மேற்கில் ஒரு கடிகை தூரத்தில் காவிரியின் வடகரையில் உள்ள இராத நல்லூர்' என்றெழுதியுள்ளார். வீரைகவி ராஜபண்டிதர் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியுள்ள சௌந்தரிய லகரி என்னும் தோத்திர நூலுக்கு இவ்வாசிரியர் அரியதோர் உரையும் செய்துள்ளனர். அது எஸ். அனவரதம் பிள்ளே அவர்களால் 1907ல் மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில் முகவுரையுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

அருணுசல புராணத்தின் முற்பகுதியாகிய வல்லாளச்சருக்கம் வரையுள்ளவை திருக்கயிலேயில் திருநந்திதேவர், முனிவர்கள் சூழ வீற்றிருந்து, மார்க்கண்டர் கேட்க உரைப்பவையாய் உள்ளன; காந்த புராணத்தின் உருத்திர சங்கிதை அதற்கு மூலம். பின் தீர்த்தச் சருக்க முதல் புளகாதிபச் சருக்கம் வரையுள்ள ஆறு சருக்கங்களுக்கு மூலம் இலிங்க புராணம். பிரமன் சனகருக்குச் சொல்லி வருவதாக உள்ளவை.

பாயிரத்தில் கூத்தப்பிரான் துதி, அருணே வளம் பதிப் பெருமை, பரசிவம், அருணு சலேசர், உண்ணுமுலே அம்மை, யானேதிறை கொண்ட விநாயகர், முருகர், மூவர், திருவாதவூர் அடிகள், இயற்பகையார் முதலிய திருத் தொண்டர்கள், திருநந்தி, துர்க்கை, கௌதமர், சண்டேசர் என்போர் துதிகள், அவையடக்கம், நூல் வரலாறு, நூற்பொருட் சுருக்கம் என்பவை முறையாக இருபத்துமூன்று செய்யுட்களால் தரப்படுகின்றன.

ஒருமானைக் கரத்தினில் வைத்தொரு
மானைச்
சிரத்தினில்வைத் துலகம் ஏழும்
தருமானை இடத்தினில்வைத் தருள்வானைப்
பவளநெடும் சயிலம் போல
வரும் ஆனை முகத்தானை அளித்தானைப்
பெரும் ஆனை மகிழ ஏறும்
பெருமானை அருணகிரிப் பெம்மானை
அடிபணிந்து பிறவி தீர்ப்பாம்

என்னும் பாட்டு, புராண ஆசிரியரது சொல்லாட்சித் திறனுக்கும் நயத்திற்கும் எடுத்துக் காட்டாக மிளிர்வது.

தேவதாருவன முனிவர் விடுத்த மானைக் கையிற்கொண்டார்; மான்போன்ற கங்கையை முடியிலும் உலகம் ஈன்ற உமையம்மையை இடப்பாகத்திலும் வைத்தார்; பவள மலை போன்ற ஆனைமுகனைப் பெற்றவர்; பெரிய ஆனை (இடபத்தை) ஊர்தியாகக் கொண்டார்; இப்படிப்பட்ட பெரிய மகானை அருணகிரி வடிவாக உள்ள தலைவனைப் பணிந்து பிறப்பு அறுப்போம்—என்பது பாட்டின் பொருள்.

திருநகரச் சருக்கத்தில் உலகில் எத்தனையோ தலங்களும் தீர்த்தங்களும் இருப்பினும், நினைத்த அளவில் சிவசாயுச்சியபர முத்தியைப் பயக்கவல்ல திரு அருணையை எதுவும் ஒவ்வாது எனக் கட்டுரைக்கின்றார். திருவண்ணாமலை முதல் யுகத்தில் நெருப்புமலையாயிருந்தது; இரண்டாம் யுகத்தில் மாணிக்க மலையாயிருந்தது; மூன்றும் யுகத்திற் பொன்மலையாய்ச் சுடர்ந்தது; இப்போது கல்மலையாய் உள்ளது. சிவபிரான், திருமால் அயன் என்போர்க்குப் பின்வருமாறு பகர்கின்றார்:

கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒருசோதி
மலைநுனியிற் காட்டா நிற்போம்;
வாய்த்த அந்தச் சுடர்காணிற் பசிபிணிஇல்
லாதுலகில் மன்னி வாழ்வார்;
பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும்; இது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்றார்.

உமையம்மை தக்கன் மகளாயிருந்தது, தக்கன் யாகத்தின் அழிவு, பின் மலையரையன் மகளாகி இறைவனை மணந்து முருகப் பிரானால் உலக இன்னல்களைந்தது, திருக்கண் புதைத்துக் கழுவாயாகக் காஞ்சியில் வந்து இறைவனைப் பூசித்தது, திரு அருணையில் தவம் புரிந்து இடப்பாகம் பெற்றது, திருமலையை வலம் வரும் சிறப்பு, வலம் வரும் இயல்பு, வச்சிராங்கத பாண்டியனும் சேரமன்னனாகிய வல்லாளனும் அன்பு செய்து அருள்பெற்றது, காசிமன்னன் பிரதத்தன் திருக்கோயில் வழிபாட்டில் உள்ளபோது நாடக மாதரைப் பார்த்துக் காதலித்தமையால் குரங்கு முகம் பெற்றது, பின் அண்ணாமலையார் அருளால் அது நீங்கப் பெற்றது, அட்டவசுக்கள் முதலிய தேவர்கள் சுற்றிலும் உள்ள மலைகளிற்றங்கி அண்ணாமலையாரைப் பூசித்துப் பாவம் தீர்ந்து நன்மை எய்துதல், புளகன் என்னும் ஓர் அசுரன் புழுகு பூனையாய்ப் புழுகை அருணாசலத்தின் மேல் சிதறி ஒழுக, அதற்கு இறைவன் மகிழ்ந்து தேவர்களால் மாற்றப் படாத வன்மையுறுதல் முதலிய பலபல அற்புதமான வரலாறுகள் எளிய இனிய சொல் நயம் அமைந்த பாடல்களால் தெரிவிக்கப்படுகின்றன. புளகனுக்குச் சிவ சாயுச்சியம் வழங்கியே இறைவன் தேவர்களது குறையைத் தீர்க்கின்றான். மேலும் அவன் இறுதி விருப்பின்படி புழுகணி இறைவன் என்னும் திருப்பெயரையும் தரித்துக் கொள்ளுகிறான்.

திலோத்தமையை இந்திரன் பொருட்டுப் படைக்கலுற்று, தான் படைத்தவள் அழகு வெள்ளத்தில் தன் மதியை இழந்து அவளைத் தேடினமையினைப் பிரமனே சனகருக்குக் கூறுகிறார்.

கன்னிமானாகச் சென்றாள்;
கலையதாய்த் தொடர்ந்தேன்; பேட்டு
வன்னியாய்ப் பறந்தாள்; சேவல்
வடிவமாய்த் தொடர்ந்தேன்; மங்கை
பின்னை ஓர் கதியும் காணாள்,
பிறங்கலாம் அருணைநாதன்
தன்னையே தூரக் கண்டாள்
சரணம் என்றுரைத்துச் சார்ந்தாள்.

[பேட்டு வன்னி—பெட்டைக்கிளி; சேவல்—ஆண்கிளி]

அண்ணாமலை அண்ணல் அம்மலையினின்றும் வேடனாக நால் வேத நாய்கள் சூழவெளிப் போந்தான். உடனே பிரமன், தன்மை நோயை நீங்கிச் சிவபிரான் என் செய்யுமோ

என அஞ்சி நடுங்கினுன். ''வேடனைப் பறவை கண்டால் வெருவுமோ வெருவுறுதோ?'' என வேற்றுப் பொருள் வைத்து நம்மை வினவு கிறுர் புராண ஆசிரியர். பிரமன் அன்னப் பறவை யானமையை நினைப்பிக்கின்றுர். சிவ பிரான் பல வேடங்களும் கொள்பவர்தானே!

ஆனுல் சிவபிரான், 'கடிதோச்சிமெல்ல எறிக' என்னும் நயம்பற்றி,

வெற்பெனும் முலையாள் தன்னை
விதித்த நீ விரும்பும் தன்மை
கற்பகோடியினுந்தீரா(து);
ஆயினும் கருணையாம் இத்
தற்பரமலை கண்டாயே
ஆதலால் தவிர்த்தோம்; போ என்(று)
அற்புதன் மொழிந்து, மீளப்
புகுந்தனன் அருணைவெற்பில்

இங்ஙனம் புராணத்தைப் படித்துச் சொற் சுவை பொருட்சுவையோடு திருவருட் சுவை யினையும் கலந்து அனுபவிக்கலாம்.

அறுபது ஆண்டுகளுக்கு முன் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் இறுதியாகப் படித்துக் கல்வியை நிரப்பிக் கொள்வது இப் புராண மும் அதன் உரையுமே ஆம்.

ARUNACHALA

"The name is composed of two words, **'Aruna'** and **'Achala',** which mean red mountain, and since it is also the name of the presiding deity of the temple its full translation should be 'sacred red mountain'".

"Then where does the holy beacon come in ?"

"Ah ! Once a year the temple priests celebrate their central festival. Immediately that occurs within the temple, a huge fire blazes out on top of the mountain, its flame being fed with vast quantities of melted butter (ghee) and camphor. It burns for many days and can be seen for many miles around. Whoever sees it, at once prostrates himself before it. It symbolizes the fact that this mountain is sacred ground, overshadowed by a great deity."

The hill now towers over our heads. It is not without its rugged grandeur, this lonely peak patterned with red, brown and grey boulders, thrusting its flat head thousands of feet into the pearly sky. Whether the holy man's words have affected me or whether for some unaccountable cause, I find a green feeling of awe arising in me as I meditate upon the picture of the sacred mountain, as I gaze up wonderingly at the steep incline of Arunachala.

"Do you know," whispers my companion, "that this mountain is not only esteemed holy ground, but the local traditions dare to assert that the gods placed it there to mark the spiritual centre of the world !"

—The Maharshi and his Message by
PAUL BRUNTON
Page 6



க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

மு. அ.

மிகவும் பிரசித்தி பெற்ற சிவஞான போதமா பாடியம் செய்த திருவாவடு துறைச் சிவஞான சுவாமிகளின் மாணாக்கரில் காஞ்சிபுரம் சிதம்பர முனிவர் என்பவரும் ஒருவர். இவருக்கு உடலில் ஒரு நோய் இருந்தது. இவருடன் ஒரு சாலை மாணாக்கராயிருந்த கச்சியப்ப முனிவர், முருகன் மீது ஒரு துதி நூல் பாடி, அவன் அருளால் நோயைப் போக்கிக் கொள்ளுமாறு இவருக்கு அறிவுறுத்தினார். அதன்மேல், சிதம்பர முனிவர் முருகன் மீது ஒரு பிள்ளைத் தமிழ் பாடத் தொடங்கி, பிள்ளைத் தமிழுக்குரிய பாடல் ஒவ்வொன்றிலும் முருகன் தலம் ஒவ்வொன்றைக் குறிப்பிட்டு ஒரு பிள்ளைத் தமிழ் பாடினார். இது **க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்** எனப் பெயர் பெறும். பாடல் தோறும் இவர் அந்தந்தத் தலத்துக்குரிய செய்திகளைத் தெரிந்து குறிப்பிடுவது மிகவும் சிறப்புடையது. இதன் 81 ஆம் பாடல் திருவண்ணாமலைக்குரியது. இங்கு அருணைக் கோபுரத்து வாழ் முருகனைப் போற்றுகிறார். இப் பாடலில் அருணகிரிநாதர் பொய்யாமொழிப் புலவர் வரலாறுகளும் சுட்டப்படுகின்றன. பாடல் பின் வருவது:

தருப் பொலியும் அமரா பதிக்கர சானவன்
சபையில் நடராச ரங்கைத்
தமருகத் தெழுசத்த சூத்திர வியா கரண
சாகரம் தான் விரித்தோன்
பொருப்புயர் பரங்கிரியின் மறுகினன் மெய்க்கவிசொல்
பொய்யா மொழிப் புலவராய்
பொன்போ லெனுங்கவியுன் முன்பாட உன்பாடல்
பூவுலகிலே கொண்டு மேற்
கருப்பவம் அகற்றவரும் அருணகிரி நாதராய்க்
கந்தரின் னருள் பெற்றபின்
கற்பகக் கனிரசக் கடலமுத வாரி தேன்
கடலென மகிழ்ந்து பாடும்
திருப்புகழ் முழக்கு மணி ஈராறு செவியனே,
சிறுபறை முழக்கி யருளே,
தென்னருணை வளர்கோபு ரத்துவாழ் முருகனே,
சிறுபறை முழக்கி யருளே.

சோண சைல மாலை

"சைவத்தின் மேல் சமயம் வேறு இல்லை — அதில், சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லை" என்ற உறுதிமொழி யெழுந்த இடம் திருவண்ணாமலை. உலகெலாம் திகழும் உள்ளத் துறவிகளை ஒருங்கிழுத்துச் சேர்க்கும் பேராற்றல் படைத்த தலம் திருவண்ணாமலை.

இப்பெருந்தலத்தைச் சிறப்பிக்கும் பிரபந்த வகை நூல்களுள் ஒன்று சோண சைல மாலை.

சோண சைலம் என்பது திருவண்ணாமலைக்கு உரிய பெயர்களுள் ஒன்று. சோணம் - சிவப்பு. சைலம் - மலை.

இந்நூல் நூறு பாடல்களைக் கொண்டது. எளிய இனிய தெளிவான நடையில் சொற்பொருட்சுவை நலங்கள் நிறைந்து, கற்பனை நலம் மிகுந்து விளங்குவது. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் பெருமான், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் முதலிய சான்றோர்கள் இந்நூலையே தம் மாணாக்கர்களுக்கு முதன் முதலில் கற்பிக்கத் தொடங்குவர் என்பர். காரணம், சைவர்கள், சமயத் தமிழ்க்கோயிலில் நுழைவதற்குத் தலைவாசல் கோபுரமாகத் திகழ்வது சோண சைல மாலை.

இந்நூலை அருளிச் செய்த பெருமான் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் வீர சைவப் பெருஞ் சான்றோர்.

இந்நூலின்கண் திருவண்ணாமலையின் சிறப்புக்கள் பின்வருமாறு விளக்கப் பெற்றுள்ளன.

1. நினைத்த அளவிலேயே முத்தி தருவது திருவண்ணாமலை.
2. மிகவும் பெரிய மலையுருவில் - அதி தூய வடிவில் இறைவன் இங்கு எழுந்தருளி யுள்ளான்.
3. 'நாம் மலையாகவே இருந்தால், வழிபட விரும்புபவர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே நம்மை வழிபடலாம்' என்று இறைவன் கருதினான்.
4. திருவண்ணாமலை என்னும் தலம் உலகத்துக்கே உரிய கருவறை. அத்தலத்துச் சிவலிங்கமாகத் திகழ்வது, மலை.

திருக்கார்த்திகைச் சிறப்பையும் இந்நூல் விரிவாகக் கூறுகிறது.

"உலகத்திலுள்ள மற்ற மலைகள் வீடு கட்ட உதவும் மரங்களை வளர்க்கின்றன. அவ்வீடுகள் நிலையானவை அல்ல. அழிவற்ற வீடு மோட்சம் - மோட்சமாகிய அந்த வீட்டைத் தரும் மலை நீயே" என்றும் சிவப்பிரகாசர் பாடியிருக்கிறார்.

"ஒவுறும் மனைசெய்பவர் கொள மரம் தாங்கு
ஓங்கல்கள் நாண உன்னினர்க்குத்
தாவுறும் உயர்வீடு அளித்தருள் சோண
சைலனே கைலை நாயகனே"

திருவருணைக் கலம்பகம்

கருணை வடிவாகிய அருணையப் பனுக்குக் கலம்பல புனைந்து கைதொழுத பாவலர் பலர். கலம்பகம் புனைந்த நாவலர் பெருமையைச் சைவ எல்லப்ப நாவலர் என்ற பெயரே இனிது விளக்கும்.

பல இனப் பூக்களைத் தொடுப்பது மாலையாவது போல, பல வகைப் பாக்களை இணைப்பது கலம்பகமாகும்.

எண்சீர் கழி நெடிலடி விருத்தம்

நிலமெலாம் சுற்றிநீரெலாம்மூழ்கி அலையாதீர் ஒருமைமனத்
துடன் அருணையைச் சேருங்கள்; உயர்வீர்கள்
பரவை ஆடினும் நதிகள் ஆடினும் படியெலாம் நடந்து
அடிகள் தேயினும்
குரவராயினும் கனலில் நின்று அதன் கொதி பொறுக்கினும்
கதி கிடைக்குமோ ?
அரவம் ஆடு செஞ் சடிலர் அங்கனுர் தான் நினைந்து
அன்பர் தம்மொடும்
விரவி நீறு அணிந்து அருணை சேர்வரேல்வெற்றர் ஆயினும்
முக்தராவரே.

ஈரடித் தாழிசை 3

பண்ணும்நீ சுவையும்நீ பரிதியும்நீ பனிக்கதிர்நீ
பெண்ணும்நீ யாணும்நீ பேதமும்நீ யபேதமும்நீ
செங்காலிற் கருங்காலன் சிரம்உருள உதைத்தனையே
சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தனையே
ஆராலும் அளவிடுதற்கு அரியவுனை ஒருகரத்து
நீராலும் மலராலும் நெஞ்சுருகப் பணலாமே.

நேரிசை வெண்பா

வேதம் நுவல் சோணகிரி வித்தகர்க்கு ஆர் வேருவார் ?
சோதி இயமானன் இவர் சோமன் இவர் — ஆதவனும்
மண்ணும் காலும் புனலும் மானும் அழல் தானும் இவர்
எண்ணும்கால் எல்லாம் இவர்.

குறிப்பு: *திருக்கோயில் 1971 டிசம்பர் இதழில் (ப. 97 முதல் 104 வரை) ஒரு விரிவான கட்டுரை வெளிவந்திருக்கிறது.*

அண்ணாமலை வெண்பா

அண்ணாமலையான் மீது அகங்கனிந்து புனைந்த அருள் நூல் **அண்ணாமலை வெண்பா**வாகும்.

நானூறு ஆண்டுகட்கு முன்னர் சிதம்பரம் குரு நமச்சிவாய சுவாமிகள் தேனூறப் பாடிய ஒரு நூறு பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அரிய அமைப்புடன் பெரிய செய்திகளை வழங்கும் இவ்வெண்பாக்கள் அனைத்தும் அண்ணாமலை என்றே முடிவுறுகின்றன.

அழைக்கும் அருள்மலை !

ஆதி, நடம் ஆடுமலை; அன்றுஇருவர் தேடுமலை;
சோதிமதி ஆடுஅரவம் சூடுமலை;—நீதி
தழைக்குமலை; ஞானத் தபோதனரை 'வா' என்று
அழைக்குமலை, அண்ணா மலை.

அருந்தமிழை ஆய்ந்தமலை !

பொருந்து, தலைச் சங்கப் புலவர்தமைப் போலே
விரிந்தபுகழ்க் கூடலிலே மேவி,—அரும்தமிழை
ஆய்ந்தமலை; பார்மீதில் ஐந்துஎழுத்தன் ஆகிவந்து
வாய்ந்தமலை. அண்ணா மலை.

தாங்கும் தனிமலை !

வண்மைக் குணத்தவரை, மாதவரை, வந்தடைந்தோர்
தம்மைத் தளராமல் தாங்குமலை;—உண்மை
பொருந்துமலை; விண்ணவர்கள் போகாமல் ஆலம்
அருந்துமலை, அண்ணா மலை.

திருப்புகழ் படிக்கத் தெரிந்தால், செந்தமிழ்
வார்த்தைகளில் பிழை வராது. உளறுகின்ற
நாக்கும் குளறுகின்ற நாக்கும்கூட
நேர்பட்டு தெளிவாகப் பேசும்.

கவிதாமணி
அ. வ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

உ

சிவமயம்

அருணைச்சிலேடை


வெண்பா மாலை

நூறு வெண்பாக்கள் கொண்ட இந் நூல் தேவகோட்டை. மேலவீட்டு வீர. லெ. சிந்நயச் செட்டியார் அவர்களால் இயற்றப் பெற்றது. இதை, சென்னை ஊ. புஷ்பரதச் செட்டியார் என்பார் பார்த்திப ஆண்டில் அதாவது 1885-ல் வெளியிட்டார்.

நூலாசிரியர் காலம் 1855 முதல் 1900 வரை ஆகும். வன்றொண்டர், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் ஆகிய மகா வித்துவான் களிடம் பயின்ற சிந்நயச் செட்டியார், இலக்கண இலக்கியப் புலமை உடையவர். ஆசுகவி. மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் மதுரை யில் தமிழ்ச் சங்கம் கண்ட பாண்டித்துரைத் தேவர் அவர்களும் சிந்நயச் செட்டியாரைப் பெரிதும் போற்றியுள்ளனர். மகாமகோ பாத்தியாய டாக்டர் உ. வே சாமிநாத அய்யர் அவர்களும் சிந்நயச் செட்டியார் அவர்களைப் பாராட்டி உள்ளார்கள்.

இவருடைய பிற நூல்கள்:

1. தேவைத் திரிபந்தாதி
2. சிலம்பைப் பதிற்றுப்பத்தந்தாதி
3. மயின்மலைப் பிள்ளைத்தமிழ்
4. மதுரை மீனாட்சியம்மை பதிகம்
5. காசியமக வந்தாதி



வீர. லெ. சிந்நயச் செட்டியார்

காப்பு

ஞாலத் தருணை நவிவகற்று நாயகற்குச்
சீலத் தருணைச் சிலேடைவெண்பா-மாலைசொல
யானைதிறை கொண்ட தெனுதிதயக் கார்வரையில்
யானைதிறை கொண்ட விபம்.

மாகவிஞர் நூன்முகத்தில் வைணீகர் யாழிசை
ஆக ரிவரும் அருணையே-நாகர் [யில்
மெயிலாய வெற்பினன் மேம்படுதார் வேய்ந்த
கயிலாய வெற்பினன் காப்பு. (1)

முப்பொருளிற் ருபதரு மொய்தெருவிற் கந்துக
அப்பிரியமுந்தும் அருணையே-யொப்பரிய [மும்
மாதார கத்தன் வயன்றுதித் தாரகத்தன்
கேதார கத்தன் கிரி. (2)

சீரங் கனையார் திருக்குஞ் சுரிகுழலும்
ஆரம் பரிக்கும் அருணையே-யீரிரண்
டாரண வாசிய னங்கண வாசியன்
வாரண வாசியன் வாழ்வு. (3)

நித்த விரதர் நியதியும் பாதவமும்
அத்த மனத்தாம் அருணையே—பத்தரது
மாச யிலத்தன் மனமாந் தனியிலத்தன்
சீச யிலத்தன் சிலம்பு. (4)

தேறு கலைப்பயில்வுந் தேங்குமுயிர் நீங்குநரும்
ஆறுதலை யாக்கும் அருணையே—மாறனடித்
தேக ரணத்தான் செலாத கரணத்தான்
கோக ரணத்தான் குடி. (5)

தீத்தொழிலி னின்று சிவாகமமுங் கான்யாறும்
ஆத்தி கரைத்தீர்க்கும் அருணையே—மூத்தமக
ஞங்கான மாடத்தா ஞைகட்பெற் றூர்ந்தபெம்
றூங்கான மாடத்தான் றேய்வு. [மான் (6)

மேதகுகல் லூரிகளின் மெய்யுணர்ந்தார் பொய்
ஆதரங் கூரா அருணையே—மோதகழி [யுடம்பில்
நீடலை யாற்றிருந்தார் நில்லாமே யோட்டெ
கூடலை யாற்றிருந்தார் குன்று. [டுக்குங் (7)

மேவாப்பெய் யென்றஞ்சி வேந்துமுரு விற்
ஆவா கணிமே வருணையே—யேவாய் [சுரரும்
நதிணகத் தலத்தா னகுகைத் தலத்தா
னதிகைத் தலத்தா னகம். (8)

வேக வமர்க்களமு மேலோ ரவைக்களமும்
ஆகமங்க ளுடும் அருணையே யாக
கருத்தா சலமுற்றுன் காதலன்பர் தம்பால்
விருத்தா சலமுற்றுன் வீடு. (9)

ஒற்றரொன்ன ரூரி லொருவெள்ளம் யூபத்தில்
அற்ற மறியும் அருணையே—தெற்றலுற்ற
வேணி குழியான் வியோமகங்கை பாய்ந்துமன்று
மாணி குழியான் மனை. (10)

காமருப டப்பைகளிற் கார்குலங்கள் சீர்க்கிடங்
ஆமலக மாரும் அருணையே—சாமத்தை [கில்
மெச்சியே கம்பத்தான் மேலொழித்த கம்பத்
கச்சியே கம்பத்தான் காப்பு. [தான் (11)

சாற்றுமட வார்வயிறுஞ் சார்ந்தவரைத்
[தேர்ந்தவரும்
ஆற்றுப் படுக்கும் அருணையே—கூற்று
வருமேற் றளியார் வதைப்பரவ ராய
திருமேற் றளியார் சிலம்பு. (12)

உத்தமகு லச்சேயு மொண்குமுதப் பூந்தடமும்
அத்துவரி நேரும் அருணையே—பத்தர்
சினேகதங் காவதத்தார் தேவவென்பார்க்
மனேகதங் காவதத்தாரார்பு. [காக்கு (13)

மாதரெழிற் செய்குன்றும் வாயிலின்கண்
[வேரமுஞ்செய்
யாதவரை யேய்க்கும் அருணையே—யேதங்
குறிக்காரைக் காட்டான் கொடுங் காலனுக்கு
நெறிக்காரைக் காட்டா னிலம். (14)

முத்தருள நிந்தனைக்கு மொய்குழலார் நீள்
[விழிக்கும்
அத்தியந்த மாறும் அருணையே—சக்தி
கரங்கணின்முட் டத்தான் கூருளுலகுக் காக்குங்
குரங்கணின்முட் டத்தான் குடி. (15)

மங்குலொலி யாலலையின் மண்புரப்பார்
[திண்புயத்தில்
அங்கதம லங்கும் அருணையே—கங்குலிற்றீஞ்
சொற்கோலமாதேவன் றெண்டனைமு
விற்கோல மாதேவன் வீடு. [யங்குகென்ற (16)

பற்பல் வரநதியும் பண்பிகவாச் சான்றேரும்
அற்பரவைக் கோடும் அருணையே—பொற்பக்
கருவாலங் காட்டினுன் கண்டமட்டுந்
திருவாலங் காட்டினுன் சேர்பு. [துய்த்துத் (17)

கொம்பனையார் நம்புகற்பிற் கோயிலின்றி
[வீற்றிடத்தில்
அம்ப லமலா அருணையே—யும்பருய்ய
உண்பாக்க மைந்த னுசிதநஞ்சு முண்டமைந்தன்
வெண்பாக்க மைந்தன் விருப்பு. (18)

காட்டிற் கடுந்தரக்குங் கண்ணுர் கவினரங்கும்
ஆட்டைக் கலக்கும் அருணையே கேட்டெழும்பூ
பாளத் திநகரன் பன்மாந் தினகரன்
காளத் திநகரன் காப்பு. (19)

இல்லவர்க்கு வள்ளியோ ரீகையுமா னுர்கதுப்பும்
அல்லகண்ட மாற்றும் அருணையே—நல்லமுது
நீதி புரியார் நினைத்த படிபுரியா
ராதி புரியா ரகம். (20)

போற்றலர்கண் ணேற்றவரும் பொற்புன்னையை
[நீவாரும்
ஆற்றலைத்து கைக்கும் அருணையே—யேற்ற
புலிதாய வாசன் புலிதாய வாசன்
வலிதாய வாசன் மனை. (21)

மேயோர்க்குச் சத்திரமும் வேழக்கு மீளிகளும்
ஆயோ தனமூட் டருணையே—தீயோர்
திடமுல்லை வாயிலார் சிந்தைபலி கொண்ட
வடமுல்லை வாயிலார் வாழ்வு. (22)

பூவையர்தோள் புல்லினரும் போர்க்களத்திற்
[பேய்க்கணமும்
ஆவலங் கொட்டும் அருணையே—தாவி
வருவிடைச்சு ரத்தன் மதுக்குழலி பாகன்
திருவிடைச்சு ரத்தன் சிலம்பு. (23)

சேண்டொடவேள் கோட்டத்திற் றேனிசை
[கேட்டீர்ம்பொழிலில்,
ஆண்டலையசைக்கும் அருணையே—வேண்டுநரை
நோத கிரியா னுவலருஞ்சீ ரங்கிரியான்
வேத கிரியான் விருப்பு. (24)

கார்க்கு நிகர்தடக்கைக் காவலருங் காவலரும்
ஆர்க்கு மளிகூர் அருணையே—போர்க்குநவை
யிச்சிறுபாக் கத்தன் பிலிக்கு மிரங்கியரு
ளச்சிறுபாக் கத்த னகம். (25)

பாயகலை நுண்பொருளைப் பாலருநி யாசிகளும்
ஆயத் தியங்கா அருணையே—மாயன்
றுருவக் கரையான் றெழார்க்குக் கரையான்
திருவக் கரையான் சிலம்பு. (26)

வேய்ந்தபுகழ் நாற்சாதி மேவகத்துங் காவகத்
ஆந்தருமஞ் சாரும் அருணையே—காந்தள் [தும்
பொரும்பைமா காளத்தார் பூண்டு களிக்கு
மிரும்பைமா காளத்தா ரில். (27)

தக்கவர்சார் மற்றையருஞ் சால்பரத்தி மார்
[கலனும்
அக்கதை யேற்கும் அருணையே—பிக்கை
யுணுவிற் கலந்தா னுடைதலைக லந்தா
னணுவிற் கலந்தா னகர். (28)

தாவற்றோர் தாழ்ந்தாரைத் தையலர்கால்
சஞ்சலத்தை
ஆவத்துக் காக்கும் அருணையே—தேவியொடு
கொஞ்சமாக் கூடலான் கொஞ்சியங்ஙன் கூட
வெஞ்சமாக் கூடலான் வீடு. [லான் (29)

வாரா வருந்தவர்க்கு மைந்தருமின் னார்விழியும்
ஆரா தநஞ்செய் அருணையே—போராற்றி
யாண்டிக் கொடுமுடியா னைம்முடிய வேளை
பாண்டிக் கொடுமுடியான் பற்று. [வென்ற (30)

நம்பினர்க்குச் சித்தியொரு நாலிரண்டு மீராறும்
அம்பிகைவ ழங்கும் அருணையே—வெம்பியெழு
நஞ்சைக் களத்தா னராயணன்கா ணுக்களத்தா
னஞ்சைக் களத்தா னகம். (31)

மையுண்கண்ணார் நுசுப்பும் வண்டலையுந்
[தண்டலையும்
ஐயம் புகுக்கும் அருணையே—வையைமண்முன்
கல்லைச் சிற்றம்பலத் தன் கௌரியெச் சிற்றம்
றில்லைச்சிற்றம்பலத்தன் சேர்பு [பலத்தன் (32)

வாக்கியத் தான்றேரு மாலை யினைஞருஞ்சை
யாக்கிரக மண்ணும் அருணையே—நோக்கி
னுருக்கழிப் பாலையா னுற்றிடப்பு ரிந்த
திருக்கழிப் பாலையான் சேர்பு. (33)

பூசா கிரியைகளைப் புங்கவர்துன் னுரைமன்னர்
ஆசாரத் தாக்கும் அருணையே—மாசா
மவேதகா னத்தான் வழுத்தலர்கா னத்தான்
சுவேதகா னத்தான் றொடர்பு. (34)

செவ்வியோர் நெஞ்சிற் சிறப்பரு வீதிகளில்
அவ்வியமு ழக்கும் அருணையே—தெவ்வை
யுழுமலவி ருப்பா னுளத்தகவி ருப்பான்
கழுமலவி ருப்பான் கலப்பு. (35)

தீனமைந்தர் மொய்ம்பாற் றெருவுதொறு
[மங்கலத்தால்
ஆனகந்தி ஊக்கும் அருணையே—நானத்
தொடைமுடி வள்ளல் சுளிகுழலாள் பங்கன்
கடைமுடி வள்ளல் கலப்பு. (36)

மன்னியவேழ் மஞ்சினெடு மால்வரையு
[மாண்டவரும்
அன்னியமஞ் சாடும் அருணையே—துன்னுபிலம்
விண்ணிப் படிக்கரையன் வெம்பவவே லைக்
[கரையன்
மண்ணிப் படிக்கரையன் வாழ்வு. (37)

கங்கணக ரத்தியர்கண் கண்டாருங் கைரவமும்
அங்கணம் பூக்கும் அருணையே—தங்கண்
விருப்பனந் தாளார் விரவரிய தாளார்
திருப்பனந் தாளார் சிலம்பு. (38)

சோதித் தருவுந் துரிய நிலையினரும்
ஆதித் தனைத்தே றருணையே—வேதியர்க
ளோம்பழ னத்தின னெண்பழ நத்தினன்
பூம்பழ னத்தினன் பூ. (39)

பூமாண் பொழிலிற் புறவத்தில் வேங்கையால்
ஆமா விரியும் அருணையே—சாமாந்தர்
மையாற்றி னையன் மறுத்தஞ்ச லென்றருள்செ
யயாற்றி னைய னகம். (40)

தப்பருநீள் காவுந் தளிதொறும்வி நாயகரும்
அப்ப மிசையும் அருணையே—யொப்புயர்வின்
மெய்த்தான மாட்சியான் மேவாத மாட்சியா
னெய்த்தான மாட்சியா னேர்வு. (41)

பேசுபுல வோர்மனைப்புன் பேதையரும் வாவி
ஆசிரியம் பாடும் அருணையே—நேச [களும்
மருவானைக் காவான் மருந்தெனக் காவான்
றிருவானைக் காவான் சிலம்பு. (42)

இம்மையொடு ஞானியரு மேற்பாருக் கீவாரும்
அம்மை கடுக்கும் அருணையே—யெம்மையாள்
மைஞ்ஞீலி யத்தன் மழுமா னணியத்தன்
பைஞ்ஞீலி யத்தன் பதி. (43)

மாசறக்கற் றோர்வாக்கின் மாதரார் பார்வை
ஆசு கமழும் அருணையே—தேசுடையைந் [களின்
தேச்சிலாச்சி ராமமத்தா ரீர்ஞ்சடையா
[யென்னவருள்
பாச்சிலாச்சி ராமத்தார் பற்று. (44)

காசினதி தோய்ந்தவர்க்குங் காரிகையார்
[தோய்ந்தவர்க்கும்
ஆசை யகற்றும் அருணையே—பேசளவி
ஞட்போக்கி யம்மா னளித்தான் றே
[டும்மம்மான்
வாட்போக்கி யம்மான் மனை. (45)

மெத்துகுணத் தார்முனிவும் வேண்டலர்கண்
அத்திர மேவும் அருணையே—துத்தி [மாரதரும்
யராப்பள்ளிக் கண்வளர்வா னம்புயத்தான்
[போற்றச்
சிராப்பள்ளிக் கண்வளர்வான் சேர்பு. (46)

மந்திரிகள் வேறிசைந்த மந்திரத்திற்
[பொய்கைகளில்
அந்தரங்கஞ் சூழும் அருணையே—நந்த
மடுங்கள வண்ணலா ராசையற்றூர்க் குற்றூர்
நெடுங்கள வண்ணலார் நேர்வு. (47)

நாயகருடன் சென்ற நல்லாரை வேய்ங் குழலை
ஆயர் குறிக்கும் அருணையே—நேயந்தஞ்
சாந்துருத் திக்கண்ணூர் தாமுணர்சோ
பூந்துருத் திக்கண்ணூர் பூ. [திக்கண்ணூர் (48)

செம்பவள வாய்ச்சியர்கள் சிற்றிடைக்குங்
[கட்கடைக்கும்
அம்பரமழுங்கும் அருணையே—தம்புகழ்ச்சிப்
பாற்றுத் துறையார் பவமகலப் பாராத
சோற்றுத் துறையார் தொடர்பு. (49)

தேடவருங் கேகயமுந் தீர்ந்தொருவா
[ருற்றுநரும்
ஆடவரைக் கண்ணும் அருணையே—சாடுவிட
முன்குடித் திட்டையன் முன்னோர்க்காத்
[திட்டையன்
றென்குடித் திட்டையன் சேர்பு. (50)

மல்கலரிற் றேனைவண்டும் வாளரவும்
[புன்மாதர்
அல்குலைத் தூற்றும் அருணையே—பல்கலைதேர்ந்
துள்ளமங்கை யுற்று ருணர்விற் புணர்வரியார்
புள்ளமங்கை யுற்றூர் புரம். (51)

புங்கவர்கள் பூசனையைப் பூதவேள் விச்சமித்தை
அங்கி கரிக்கும் அருணையே—திங்களணி
நக்கரப் பள்ளியார் நான்முகிலை வேணிவைத்த
சக்கரப் பள்ளியார் சார்பு. (52)

கண்டுமொழி யார்மருங்குங் காப்பமைந்த
[நீண்மதிலும்
அண்டந் தரிக்கும் அருணையே—மண்டுபவ
வேலைத் துறையான் விழாமே யெடுத்தாண்ட
பாலைத் துறையான் பதி. (53)

தம்மிலமின் னூர்மனையிற் சத்திநிபா
[தத்தருள்ளில்
அம்மனை யாடும் அருணையே—தம்மிடத்துப்
பத்திமுற் றத்திருப்பான் பாவியர்கள்—
[பாழ்மனத்தைச்
சத்திமுற் றத்திருப்பான் சார்பு. (54)

சுத்தமறைக் கந்தணருந் துன்றுகல்லில்
[வாணிபரும்
அத்த முரைக்கும் அருணையே சித்தசற்கொல்
கட்டீச் சரத்தான் கருத்திற் ககோசரத்தான்
பட்டீச் சரத்தான் பதி. (55)

சந்ததந்தொ ழும்பரன்புந் தாயாரை நந்தனரும்
அந்தரியா கத்தாழ் அருணையே—முந்த
நலஞ்சுழிச் சம்பு நடைத்துரகம் விற்ற
வலஞ்சுழிச் சம்பு மனை. (56)

போகுயர்காப் பூந்துணரும் புக்கறியாக்
[காலனெஞ்சும்
ஆகுல மேயும் அருணையே—யோகை
நடமூக் ககத்தார் நணுக வெளியார்
குடமூக் ககத்தார் குடி. (57)

தாரிளைஞர் மார்பகமுஞ் சைவவிபூ திப்பொலி
[வும்
ஆர மணக்கும் அருணையே—மாரனெய்த
வில்லம் புணர்ந்தான் விழித்தவனைக் கண்டிலா
னல்லம் புணர்ந்தா னகர். (58)

தேநந்து செய்யிற் சிவஞா னியருளத்தில்
ஆநந்த மண்டும் அருணையே—தாநவனும்
வேழம்ப மாதரித்தான் வெண்பொடியம் மாத
கோழம்ப மாதரித்தான் குன்று. [ரித்தான் (59)

பெண்மைமிக்கார் கண்ணும் பிறங்கு பொன்
[ஞட்டிற் பரியும்
அண்மைய வாவும் அருணையே—வண்மை
நிறைசை யமலர் நெடுநீர்கொண் டான்ருழ்
துறைசை யமலர் தொடர்பு. (60)

மாசில் சுளையினரு வார்கனியை வண்மையரை
ஆசினிதந் தீண்டும் அருணையே—மாசுணத்த
கேயூர வாகரன் கேடிலருட் சாகரன்
மாயூர வாகரன் வாழ்வு. (61)

தொக்கவடி யார்மனமுந் தூயதிரு நீற்றுடம்பும்
அக்கவட மல்கும் அருணையே—மிக்கவரா
லெள்ளாறு வந்தா ரிழிகுழிபு கச்சிவந்தார்
நள்ளாறு வந்தார் நகர். (62)

ஏரியுறிஇ நீரை யெழுபுயலும் விப்பிரரும்
ஆரியமு கக்கும் அருணையே - பேரியம்பி
யும்பர்மா காள னுவந்தூது மாகாள
னம்பர்மா காள னகம். (63)

எஞ்சுதலில் வேட்டத் திறைவருஞ்சை
[வக்குழுவும்
அஞ்சுமா னூக்கும் அருணையே - நெஞ்சி
னலதைப் பதியார் நணுகாப் பதியார்
திலதைப் பதியார் சிலம்பு. (64)

மாண்டவெழிற் கன்னிமட வாரு மடிமைகளும்
ஆண்டவரை நாடும் அருணையே - நீண்ட
வுருப்பாம் புரத்தா னுமைசேர் புரத்தான்
திருப்பாம் புரத்தான் சிலம்பு. (65)

வேலைதோ றன்பினரு மிக்க சுவைக்கரும்பும்
ஆலைய ருமரும் அருணையே—பாலுருவத்
தாழி மிழலையா னம்பகங்கொண் டாழிநல்கு
வீழி மிழலையான் வீடு. (66)

சாகாதி யைக்கரியுந் தாம்பரித்தே ரைக்கிரியும்
ஆகார மொக்கும் அருணையே மோகப்
பெருக லுடையார் பெருத்தோ லுடையார்
மருக லுடையார் மனை. (67)

காண்டகுகி ழாரிலிளங் காலுமெய்யைத்
[தாபதரும்
ஆண்டுபல வாட்டும் அருணையே-யீண்டுவையை
நீத்தமங்கை யார்வா னிகழ்த்து குறட்களித்
சாத்தமங்கை யார்வான் றலம் [தான் (68)

கல்விதைய நல்லார் கருங்குழலுஞ் செவ்வாயும்
அல்லி குவிக்கும் அருணையே-மல்லிரித்த
வாகைக்கா ரோணத்தான் மாலுநிரு
ஞகைக்கா ரோணத்தா னடி. [வாணத்தா (69)

சேமவெண்ணீ ருக்குநருஞ் சிற்பரந் தேர்ந்
ஆமய மாயும் அருணையே—வாமத் [தாருளமு
தமலா லயத்தா னகநி லயத்தான்
கமலா லயத்தான் கலப்பு. (70)

பார்வருமா யுள்வேத பண்டிதரு நீத்தாரும்
ஆர்வ மொழியும் அருணையே—கார்வல்
லிரவையுண் மண்டளியா ரீர்ங்கோதை பாகர்
பரவையுண் மண்டளியார் பற்று. (71)

சீலத்தின் வேந்தர் திருப்பவனி யிற்பொழிலில்
ஆலத்தி சுற்றும் அருணையே—சால
வளம ரமருவா ரன்றெயின்மூன் றட்டார்
விளம ரமருவார் வீடு. (72)

திரவுயர் சோலைகளிற் றேசிகர்தம் பொன்மனை
ஆரவிட்ட மாட்டும் அருணையே—யேர [யில்
மரவீர மாநகரன் மாயமதி லெய்த
கரவீர மாநகரன் காப்பு. (73)

கச்சுவிடா தாய்க்குலமுங் கற்பத்தால் யோகி
[களும்
அச்சுதனைப் போற்றும் அருணையே—நச்சி
தலையாலங் காட்டா ரருச்சியார்க் கெட்டாத்
தலையாலங் காட்டார் தலம். (74)

விற்பனர்வாய்ச் சொற்பொருளு மெய்யடியார்
கண்ணிணையும்
அற்புதமடுக்கும் அருணையே—வெற்பின்
மடவாயி னம்பன் மணிநகைகாட் டென்னுங்
குடவாயி னம்பன் குடி. (75)

கோலமக ளீர்விழியாற் கோங்கு விரிநிழலால்
ஆலமர மானும் அருணையே—கால
விரிதிறிய மத்தா னெமைத் தொழுவார்த்
பரிதிநிய மத்தான் பதி. [தீர்ந்தென் (76)

திண்டடந் தோட் காவலருஞ் சேதாவின்
[சிஃறுயரும்
அண்டரண்ட மாளும் அருணையே—தொண்ட
[ராய்
மற்றேம மன்னன் மறுத்தடைந்தா ரைப்
சிற்றேம மன்னன் சிலம்பு. [புரக்குஞ் (77)

பூதரநேர் போதகமும் பொன்ருக் கொடை
[முரசும்
ஆதரிக்க வேங்கும் அருணையே—வேதன்
மருவுசாத் தாநத்தன் வாஞ்சாதா நத்தன்
றிருவுசாத் தாநத்தன் சேர்பு. (78)

சாடமரில் யானைகளுஞ் சால்வினைப்பொற்
[கம்மியரும்
ஆடகமு ருக்கும் அருணையே—தோட
மடும்பா வனத்தா னழல்போல் வனத்தா
னிடும்பா வனத்தா னிடம். (79)

வாம்பரியோ டுந்தெருவின் மைந்தருந்தேனைச்
[சுரும்பும்
ஆம்பல்வாய்த்துய்க்கும் அருணையே—வேம்பன்
றருக்கடிக்கு ளத்தான் றழற்கடிக்கு ளத்தான்
றிருக்கடிக்கு ளத்தான் சிலம்பு. (80)

விஞ்சுற்ற தந்நிழன்மேல் வேழமுமே தக்காரும்
அஞ்சக் கரமோ தருணையே—கஞ்சனுயிர்
வீட்டியத் தான்குடியான் வெய்யவிட மல்ல
நாட்டியத் தான்குடியா னுடு. [வற்றை (81)

ஊக்கமுளார் யாரு முறுகொலையை
[நுண்ணறிவும்
ஆக்கத் தடுக்கும் அருணையே—பூக்கும்
பெருவலிவ லத்தான் பிரியாவ லத்தான்
றிருவலிவ லத்தான் சிலம்பு. (82)

கத்திதீர் கானகத்திற் கற்றவர்செய் காவியத்தில்
அத்தியா யஞ்சேர் அருணையே—பத்திமரீஇ
மைச்சின மாண்டார் மனநச் சினமாண்டார்
கைச்சின மாண்டார் கலப்பு. (83)

யாகமனு விண்ணவரை யேற்றத்தார்
[சீற்றத்தை
ஆகருட ணிக்கும் அருணையே—நாகத்து
மின்றிருவாய் மூரன் மெலவரும்ப நோக்கிமகிழ்
தென்றிருவாய் மூரன் சிலம்பு. (84)

மங்கையர்கள் கொங்கையிலும்வான் றுறவர்
[செங்கையிலும்
அங்கசனம் பெய்யும் அருணையே—
[நங்கைதும்பைப்
போதா ரணியத்தன் பொன்முடி வளைத்த
[பிரான்
வேதா ரணியத்தன் வீடு. (85)

பம்பிசையைக் காரளியும் பஃறொடையைக்
[காளையரும்
அம்புயத்தி லார்க்கும் அருணையே—யெம்பாற்
றவாதசாந் தத்தான் றகித்தசாந் தத்தான்
றுவாதசாந் தத்தான் றொடர்பு. (86)

துச்சரிகட் கான்றேருந் தோகையன்னர்
[கந்தரமும்
அச்சங் கவிக்கும் அருணையே---நிச்சன்
மனவாயி லுள்ளார் மதிவெறுத்தென் னுள்ளார்
புனவாயி லுள்ளார் புரம். (87)

கஞ்ச முகத்தியர்கள் கையின் மலர்த்தடத்தில்
அஞ்சங் குலாவும் அருணையே—விஞ்சுபய
மற்றுல மேயா ரமுதாக்கித் தோமேயார்
குற்றுல மேயார் குடி. (88)

மின்னனையார் மென்னடைக்கு மேவு
[மதிதியர்க்கும்
அன்ன மருளும் அருணையே—தன்ம
வுருவாப்ப னூரா னுடையான் சடையான்
றிருவாப்ப னூரான் சிலம்பு. (89)

சிந்தனையின் மிக்கீவார் சீர்த்தியும் டந்தையரும்
அந்தரதிக் கேயும் அருணையே—சுந்தரர்க்கா
வாடக மேவினு ணுற்றிலிருந் தாவிபுக
வேடக மேவினு னில். (90)

மைவனத்த வேட்டுவரும் வாரணத்தைக்
[கேசரியும்
ஐவனம டிக்கும் அருணையே—வைவளரும்
வல்வே லிவருவான் வாகுதந்த சாமிதந்தை
நெல்வே லிவருவா னேர்வு. (91)

மிக்கார்வ நீடுதொண்டர் மெய்யைமட
[வார்மொழியை
அக்கார மூடும் அருணையே—யெக்காலு
நேவைத் திருப்பதியார் நெஞ்சோ
[வதிலுறையுந்
தேவைத் திருப்பதியார் சேர்பு. (92)

ஓங்கார மோர்ந்தா ருளத்திலினை யார்தோளில்
ஆங்காரந் துஞ்சும் அருணையே—
[பூங்கணைக்கை
வேடானை வாழ்வான் விழிமுளரி சற்றலர்த்தி
யாடானை வாழ்வா னகம். (93)

மாலதா மாடுகண்ட வெம்புலியுந் தண்பணை
ஆலவா லங்காட் டருணையே—சீலத் [யும்
தரங்குன்ற வாணர் தமைப்புரியா ரென்றும்
பரங்குன்ற வாணர் பதி. (94)

நிட்டா பரருமன்பர் நீடநின்றூர் பான்மதனும்
அட்டாங்கஞ் செய்யும் அருணையே—
[யொட்டாக்
கழியற் பரமர் கடியரணங் காய்ந்த
சுழியற் பரமர் தொடர்பு. (95)

பாடினர்க்குப் பார்த்திபரும் பலகதியிற்
[பாய்பரியும்
ஆடிக் களிக்கும் அருணையே—மூடர்
திருப்பத்து ரத்த னிடபத்து ரத்தன்
திருப்புத்து ரத்தன் சிலம்பு. (96)

போரரசர் பாழிமொய்ம்பிற் பூசுரச்சி ரூர்
[கிடையில்
ஆரணங் கற்கும் அருணையே—கூருகிரி
லூனப்பே ராளி யுரங்கிழித்துக் கொக்கரித்த
வானப்பே ராளி கலப்பு. (97)

மாண வுயர்ந்தோர் மனத்திலறச் சாலைகளில்
ஆண வமிகும் அருணையே—வாணியைநீ
மூக்கொடுங் குன்றன் முரணறவென் றஃதரிந்த
மாக்கொடுங் குன்றன் மனை. (98)

மானவய வீரர் மகாரினமும் வேதியரும்
ஆனைவலங் கொள்ளும் அருணையே—வானக்
[கொண்
மூவண வேந்தன் முளரியினுன் காண்பரிய
பூவண வேந்தன் புரம். (99)

வாகைத்தார் மன்னவரும் வாச்சியமுந்
[தேங்கமலை
ஆகத்து வைக்கும் அருணையே—பாகத்திற்
காண மலையான் கருமலையான் செம்மலையான்
கோண மலையான் குடி. (100

அருணைச்சிலேடை வெண்பா முற்றிற்று

இப்பாடல்களையும் படத்தையும் பேணிவைத்திருந்து எங்களுக்குத்தந்து உதவியவர்: நூலாசிரியரின் பேரன், திரு. L. S. T. இராமநாதன் செட்டியார், எம். ஏ. சிர்கேடாகச் சிதைந்த நிலையிலும், செப்பம் செய்யும் வகையில் காத்துத் தந்த அன்னாருக்கு எங்கள் நன்றி.

திருவண்ணாமலை

ஏ. கே. செட்டியார்

''அண்ணாமலைக் கரோகரா'' என்ற சத்தத்தைக் கேட்டாலும், ''அன்னக் காவடி தர்மம் தாயீ!'' என்ற சத்தத்தைக் கேட்டாலும், நீங்கள் திருவண்ணாமலை யில் இருப்பதாக எண்ணிக்கொள்ளலாம்.

அழகான மலை. உயரம் சுமார் இரண்டாயிரம் அடிக்குமேல் இருக்கலாம். வலம் வந்தால் சுமார் எட்டு மைலாகும். இந்த எட்டு மைல் தூரத்தில் 365 குளங்கள் இருக்கின்றனவாம். ஒவ்வொரு குளமும் ஒவ்வொரு தீர்த்தம். மலைக்குப் பின்புறத்தில் அடியண்ணாமலை என்னும் ஊரில் அழகான கோயில் ஒன்று உண்டு. மலையை வலம் வரும்பொழுது, பின்புறத்திலிருந்தும் மற்றப்புறங்களி லிருந்தும் மலையைப் பார்ப்போம். ஒவ்வொரு புறத்திலிருந்து பார்க்கும் பொழுதும், மலையின் உருவம் வெவ்வேறு விதமாகத் தோன்றும்.

இரண்டாவது மிக முக்கியமானது. குறிப்பிட்ட ஓர் இடத்தில் நின்று கொண்டு, 'உண்ணாமுலைத் தாயே!' என்று கூப்பிட்டால் 'ஏன்?' என்ற குரல் கேட்குமாம். 'பாலும் சோறும் தருகிறாயா?' என்றால் 'தருகிறேன்' என்ற பதில் கிடைக்குமாம். இந்த அதிர்ஷ்டம் எல்லோருக்கும் கிட்டாதாம். பக்தர்களுக்கு மட்டுந்தானாம்.

—''பிரயாணக் கட்டுரைகள்''

குமரி மலர் காரியாலயம், சென்னை-18. இந்நூல் 1957ல் வெளிவந்தது. இக்கட்டுரை 1939-ல் எழுதப்பெற்றது.



தமிழ்க்கடல் ராய. சொ.

எழுதிய திருத்தலப் பயணம் என்னும் நூலிலிருந்து.

விழுப்புரம் - காட்பாடி இருப்புப் பாதையில் உள்ள ஓர் இரயில் நிலையம். கோயில் மிகப்பெரியது. திருமாலும் பிரமனும் சிவபிரானின் அடிமுடி தேடிக் காண முடியாத தலம் இது. பஞ்சபூதத் தலங்களுள் இஃது ஒன்று. நெருப்புத் தலம். இத்தலத்தைச் சுந்தரரும் பாடியிருக்கத்தான் வேண்டும்.

"விளவார்கனி படநூறிய
கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய
அண்ணாமலை அண்ணல்"

என்பது தேவாரம். அண்ணாமலையார் கோயில் மலையின் அடிவாரத்தில் இருக்கின்றது. திருக்கார்த்திகை விழா இங்குப் பெருஞ் சிறப்பாக நடைபெறுகின்றது. மலையின் உச்சியில் பேரொளியுடன் கூடிய விளக்கு ஏற்றப்படுகின்றது. 'அண்ணாமலை தீபம்' என்றே அதற்குப் பெயர்.

அருணகிரிநாதர் வாழ்ந்த ஊர் திருவண்ணாமலையே ஆகும். சில ஆண்டுகளாக இத்தலத்தில் அருணகிரியாருக்கு ஆகஸ்டுப் பதினைந்தாம் நாளில் பெருவிழா எடுக்கின்றனர்.

இத்தலத்தில் ஏராளமான சத்திரங்களும் விடுதிகளும் இருக்கின்றன. நாட்டுக்கோட்டை நகரத்தார் இங்கு நிறைந்த அறங்கள் செய்திருக்கின்றனர்.

இத்தலம் திருவாசகப் பெருமையும் பெற்றிருக்கின்றது. திருவாசகம் திருவண்ணாமலையை 3 இடங்களில் குறிப்பிடுகின்றது. திருவெம்பாவை இத்தலத்திலேயே எழுந்தது என்று கூறும்.

இத்தலத்துக்கு **அண்ணாமலை வெண்பா** என்னும் பெயருடன் ஓர் அரிய நூலை குரு நமச்சிவாயப் புலவர் இயற்றியிருக்கின்றார்.

மலைச் சுற்றில் அணிஅண்ணாமலை என்ற ஒரு சிவன் கோயில் இருக்கின்றது. குகை நமச்சிவாயர், குருநமச்சிவாயர், ஈசான்ய ஞான தேசிகர், குன்றக்குடியில் திருவண்ணாமலை ஆதீன மடாலயத்தைக் கண்ட தெய்வசிகாமணி தேசிகர், ரமண மகரிஷிகள் முதலிய ஞானச் செல்வர்கள் இப்பதியில் வாழ்ந்தனர்.

மணிவாசகர்

விண்ஆளும் தேவர்க்கும் மேலான வேதியனை,
மண்ஆளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானை,
தண்ஆர் தமிழ்அளிக்கும் தண்பாண்டி நாட்டானை,
பெண்ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ஆர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதும்காண் அம்மானாய்!

உண்ணுமுலையம்மை பிள்ளைத்தமிழ்

மு. அருணாசலம்

காஞ்சிபுரம் சோணாசல முதலியார், புராணிகர் என்றும் சோணாசல பாரதி என்றும் பெயர் பெற்று இந்நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கல்வியாளரால் பாராட்டப் பெற்று வாழ்ந்தவர். இன்று சைவ சித்தாந்தப் பேரறிஞராயுள்ள வித்துவான் அருணை வடிவேல் முதலியாரின் பாட்டனார். அவர் பாடிய பிரபந்தங்கள் பல. அவை ஒரு தொகுப்பாகச் சமீபகாலத்தில் அழகாக வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் **திருவருணை உண்ணுமுலையம்மை பிள்ளைத் தமிழ்** என்பதும் ஒன்று. பிரபந்த மரபை யொட்டி 100 பாடல் கொண்ட அப்பிரபந்தத்துள் பின்வரும் பாடல், வருகைப் பருவத்தில் பத்தாம் பாடல் :

மருளே ரிடைய பவப் பிணிக்கு மருந்தே வருக, வாழ்வளிக்கும்
மணியே வருக, மனம்விளக்கும் மதியே வருக, குறையாத
பொருளே வருக, மாற்றறியாப் பொன்னே வருக, பொன்னாய
பூணே வருக, வேதாந்தப் பொலிவே வருக, சித்தாந்தத்
தெருளே வருக, சிவஞானத் தேனே வருக, திருவாளர்
தேடி வைத்த பேரின்பத் திரளே வருக, சன்மார்க்க
அருளே வருக, திரு அருணை அருந்தா முலையாய் வருகவே!
அலகில் விளையாட்டு அயரும் எங்கள் அம்மே, வருக வருகவே!

திரு அண்ணாமலையார் வண்ணம்

மு. அருணாசலம்

வண்ணம் என்பது சந்தப்பாட்டு. பண்டைய இலக்கணங்கள் வண்ண இலக்கணம் கூறும்: அது வேறு, சந்தப்பாட்டு வேறு. விருத்தப் பாவில் அமைந்து வருகிற தாளத்திற்கேற்ற ஓசையைப் பிற்காலத்தார் சந்தம் அல்லது வண்ணம் என வழங்கலாயினர். சிலப்பதிகாரம், தேவாரம் முதலியவற்றில் சந்தப் பாடல்களைக் காண்கிறோம். அருணகிரிநாதர் பாடிய **திருப்புகழ் திருவகுப்பு வேல் விருத்தம் மயில் விருத்தம்** ஆகியன சிறந்த சந்தப் பாடல்களே. ஆனால் அவற்றை வண்ணம் என்று சொல்வதில்லை.

பட்டினத்தார் பாடிய உடற்கூற்று வண்ணம் முதல் வண்ணப்பாட்டு ஆகும். பாடல் மிக நீண்ட ஆசிரிய விருத்தம், வண்ணம் முதல் ஒவ்வோரடியும், 2, 4, 8, 16, 32 அடிகளைக் கொண்டதாக இருக்கும். அடிதோறும் ஒரே சந்தம் மூன்று முறையோ பின்னும் பல முறையோ மடங்கிவரும்; இது சந்தக் குழிப்பு. இறுதியில் ஒரு தொடர்; இத்தொடரும் அடிதோறும் ஒரே சந்த அமைப்புக் கொண்ட தாய் இருக்கும். இத்தொடர் தொங்கல் எனப்படும். விருத்தத்தின் நான்கடி களும், தொங்கலுடன், நான்கு கலைகள் எனப்படும். முதல் இரண்டும் ஆண்கலை. பின்னிரண்டும் பெண்கலை. முற்பாதியில் தலைவனின் சிறப்பு; பிற்பாதியில் காதல் கொண்ட பெண்ணின் அவலநிலை சொல்லப்படும்.

சேறை-கவிராச பிள்ளை என்பவர் 16ஆம் நூற்றுண்டின் பிற்பாதியில் வாழ்ந்த பெரும் புலவர். அதிவீரராம பாண்டியர் ஆதரவு பெற்றவர் எனத் தெரிகிறது. திருக்காளத்திநாதர் உலா முதலான பல சிறந்த பிரபந்தங்கள் பாடியிருக்கிருர். இவர் திரு அண்ணுமலையார் வண்ணம் என ஒரு பாடல் பாடினுர். இப்பாடல் அகத்துறையில், 'அவயவம் எழுதரிது என்று ஏந்தலை விலக்கல்' என்று கூற்றுப் பொருளாக உடையது. பாடல் முழுமையும் கீழே தருகிறேம். இதன் முதலடியின் பிற்பாதியில் 27 தலப்பெயர்களை அடைமொழியின்றி அடுக்கிக் கூறியிருப்பது மிக்க அருமையுடையது

சிலைக்காமன் உடலெரிய விழித்தாடல் புரிபரமர்
செருக்கோல நமனுயிரை உண்ட சரணர்
மலர்ப்பாவை வருசகல கலைப்பாவை தொழுபசிய
மலைப்பாவை கவுரியொரு பங்கி லுறைவார்
சினத்தாலும் மிகவுமெதிர் விழித்தாலும் முனிவினெடு
சிரித்தாலும் அழல்வடிவு கொண்ட பரனர்

—அரவுகுடி யேறுநீடு குழையார்

திருக்கோயில் திருஅதிகை திருச்சேய்ஞல் திருமருகல்
திருத்தோணி திருவரதை வஞ்சி பனையூர்
திருச்சேறை தருமபுரம் மறைக்காடு திருமயிலை
திருக்கோவல் தினைநகரம் அன்பில் கடவூர்
திருக்காவை பொதியமலை கழிப்பாலை கயிலைமலை
தெளிச்சேரி இடைமருது தஞ்சை வழுவூர்

—சுழியல் புனவாயில் கூடலுறைவார்

புலித்தோலி னுடையழகர் பலிக்கேகு நடையழகர்
பொடிப்பூசு நுதலழகர் செங்கை மழுவார்
நெருப்பாறு வரும்வழியில் மயிர்ப்பால மெனும்மனதில்
நினைப்பார்கள் வினைகளையும் எங்கள் பரனர்
புயத்தோடு நெடியவரை எடுத்தானை வெகுளியொடு
புடைத்தானை உரியையணி கொண்ட திறலார்

—குமுதமலர் மாலை சூடு விடையார்

புகைப்போல எழுபடல முகிற்கூடம் இடறிவிழு
பொழிற்கூடு வளர்கமுகு நின்ற நிலையே
குருத்தோடு மிடறெடிய முடத்தாழை விரியவெதிர்
குதித்தேற வருகயல்கள் துன்று வயல்சூழ்
புகழ்ச்சோண கிரியிறைவர் விடைப்பாகர் அமரர்விழி
புதைத்தேபின் இருகைதொழும் அங்கி வடிவார்

—தடவரையெ னவி போலும் மயிலார்

மலைப்பாரம் எனவளரு தனப்பாரம் எழுதிடினும்
வனத்தோடு பெறுகுணம்இ ரண்டும் வருமோ
விருப்பான கரியகுழல் இருட்போல எழுதிடினும்
மிகுத்தேறு வரியளிமு ரன்று வருமோ
மதர்ப்பான இணைவிழிகள் வடுப்போல எழுதிடினும்
மடப்பார்வை இருகுழைக டந்து வருமோ

—குழைஎழுதின் ஊசலாடி வருமோ

மலர்த்தாளை வனசமலர் தனைப்போல எழுதிடினும்
மலர்ப்பாயல் அனமெனந டந்து வருமோ
உறுப்பான திலகநுதல் விதுப்போல எழுதிடினும்
உவப்பான குறுவியர்வ ரும்பி வருமோ
மணிக்கோல மிடறுகமு கினைப்போல எழுதிடினும்
மரப்பாவை உருகுமிசை இன்பம் வருமோ

—விரலெழுதின் வீணைபேச வருமோ

இலைப்பாதி யிழையுமென நுசுப்பாக எழுதிடினும்
இதைப்போல ஒசிவொடுத ளர்ந்து வருமோ
வனப்பேறு திகிரிஎன மணித்தோள்கள் எழுதிடினும்
மயிர்க்கால்கள் புளகிதம்எ றிந்து வருமோ
இதழ்க்கோவை அதனைமிகு சிறப்பாக எழுதிடினும்
இனைப்பான பொழுதமுத விந்து தருமோ

—உகிரெழுதின் மீதுலாவி வருமோ

எழுத்தோடு முறுவல்முலை நகைக்காக எழுதிடினும்
எதிர்த்தாடு புலவிநகை இங்கு வருமோ
மதிப்பான உடலையொரு கொடிப்போல எழுதிடினும்
மயிற்சாயல் ஒருசிறிது தங்கி வருமோ
எடுத்தாடு படமெனஅல் குலைப்பேணி எழுதிடினும்
இதத்தோடும் அமுதுகுதி கொண்டுவருமோ

—கிழிஎழுதின் ஏதுலாபம் உரையீர்.

அண்ணுமலை பற்றிய பழமொழிகள்

ஆழம் தெரியாமல் காலைவிட்டேன் அண்ணுமலையப்பா காலை விடு.
அண்ணுமலையாரின் அருள் உண்டானல் மன்னர்சாமியைக் கேட்பானேன்.
அருணும்பரமே கருணும்பரம்.
விஷ்ணுவைப் பெரிதென்பர் ஸ்ரீரங்கத்தில், சிவனைப் பெரிதென்பர் அருணசலத்தில்.
சோணசலத்தில் சிறந்த க்ஷேத்திரமில்லை ;
சோமவாரத்தில் சிறந்த விரதமில்லை.

பேராசிரியர் **வ. பெருமாள்,** தங்கவயல்—உரிகம்.

திருவண்ணமலை : சில குறிப்புக்கள்

[சித்தாந்த கலாநிதி உரைவேந்தர் ஔவை துரைசாமி பிள்ளை அவர்கள், இந்திய அரசின் பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவி பெற்ற பேராசிரியராய் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றியபோது **தமிழ் நாட்டு ஊர்ப்பெயர் வரலாறு** என்ற தலைப்பில் வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பற்றி 1970ல் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். அவர்களுடைய ஆராய்ச்சி நூல் கையெழுத்துப் படியாகவே உள்ளது. அந்தச் சுவடியில் 164ம் பக்கம் முதல் 219ம் பக்கம் வரை திருவண்ணமலையைப் பற்றி, கல்வெட்டு செப்பேடு ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்த நுட்பமான விவரங்கள் உள்ளன. அதிலிருந்து சில பகுதிகளை இங்கே தந்திருக்கிறோம்.]

இடைக் காலத்தில் அரசியல் போர்கள் நடைபெற்றபோது, இக்கோயில் மக்கட்குச் சிறந்த அரணகவும் காப்பிடமாகவும் இருந்தது.

* * *

செம்மலைச் சிதறலாகிய அண்ணுமலையை வடமொழியில் பெயர்க்க முயன்ற வட மொழி அறிஞர், தங்கள் மொழியில் அருண என்ற சொல் செம்மை நிறத்தைக் குறிப்பது கொண்டு அருணசலம் என்றும் சோணசலம் என்றும் கூறுவாராயினர். அவர்கள் மலையை அசலம் என்றும், கிரி என்றும் கூறுவது வழக்கு ஆதலால், அருணகிரி என்றும் சோணகிரி என்றும் வழங்குவர். வடமொழியின் செல்வாக்குப் பெருகவும், அருணசலம், அருணகிரி, சோணசலம், சோணகிரி என்ற பெயர்கள் நாட்டில் பரவின. உண்ணமுலை என்ற அம்பிகையின் பெயரை, ''அபீதகுசாம்பாள்'' என்று மொழி பெயர்த்தனர். ஆனல் அது அருகிய வழக்கமாக உள்ளது.

* * *

மூன்ரும் இராஜராஜனின் நான்காம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் அழகிய சீயன் அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன் திருவண்ணமலை நாயனருக்குப் பதக்க மாலை தருகின்ருன். இதன்கண் நாயக்கக் கண்டம் ஒன்று, அருகு கண்டம் ஆறு, கடைத்தொழில் இரண்டு, படுகண் ஒன்று, கோக்குவாய் ஒன்று இவற்றில் ஆவேசித்துக் கட்டின மணிகளில் கோமளம் 28, வைரம் 1106, பெருமுத்து 790, சிறுமுத்து 360, திரள் பவழம் 291, மாந்தொட்டுப் பத்தி 30, சிலந்தி—1, விதரம் 99; தடவல் பளிங்கு 1.

* * *

இடைக்காலத்தில் பரமேசுரப் புலவன்; உண்ணமுலை எல்லப்பர், சம்பந்தாண்டான் எனப் புலவர் பலர் திருவண்ணமலையில் புகழுடன் வாழ்ந்தனர். ★

அண்ணுமலையும் அணிமிகு சதகங்களும்

இரா. முத்துக்குமாரசாமி

தமிழ் இலக்கியத்தில் ''சிறு பிரபந்தம்'' என்ற ஒரு பகுதி உண்டு. அதைச் சிற்றிலக்கியம் என்றும் கூறலாம். அது தொண்ணூற்ருறு வகைப்படும். அவற்றுள் ஒன்று ''சதகம்'' என்பதாகும். ''சதகம்'' என்ருல் ஏதாவது ஒரு பொருளைப் பற்றி நூறு பாடல்கள் பாடப் பெற்ற நூல். ஒரு சில இடங்களில் பத்துப் பாடல்களைக் கொண்டதும் ''சதகம்'' என்று அழைக்கப் பெறுதல் உண்டு. சங்க இலக்கியத்தில் ஒன்ருன ''பதிற்றுப்பத்து' நூலைச் ''சதகம்'' எனக் கொள்ளலாம். அதில் நூறு பாடல்கள் உள்ளன. எனினும் ''சதகம்'' என்ற பெயருடன் முதலில் எழுந்தது ''திருவாசகத்''தின் ஒரு பகுதியான ''திருச் சதகம்'' ஆகும். இது மணிவாசகப் பெருமான் பாடியது.

சதகம் வகை மூன்று

பிற்காலத்தில் எழுந்த சதக நூல்களைப் பொருளடிப்படையாகக் கொண்டு மூவகையாகப் பிரிக்கலாம். அவை வரலாற்றுச் சதகம், நீதிச்சதகம், பக்திச் சதகம் ஆகும். நாட்டின் வரலாற்றைக் கூறுபவை மண்டல சதகங்கள்; நீதியையும் நியதியையும் கூறுபவை நீதிச் சதகங்கள்; பாட்டுடைத் தலைவனுகக் கொண்ட இறைவனின் அளவிடற்கரிய ஆற்றலை எடுத்துக் கூறுவன பக்திச் சதகங்கள்.

அண்ணுமலையும் சதகங்களும்

திருவண்ணுமலை தொடர்பாக நான்கு சதகங்கள் பாடப் பெற்றுள்ளன. அவை சோணுசல சதகம், அண்ணுமலைச் சதகம், அருணுசல சதகம், உண்ணுமுலையம்மன் சதகம் ஆகியவையாம்.

1. சோணுசல சதகம்

பத்து வெண்பாக்களால் ஆனது இந்நூல். இதன் ஆசிரியர் புராணிகர் சோணுசல முதலியார்.

''சோகந் துடைத்தருள்வாய் சூர்பனகச் சிறுக
ஞகந் தனையுரித்த நம்பனே—மேகமோடு
சந்திரன்ருழ் சோணுசலவாம பாற்றைய
லந்தி வன்னத்தையா வருள்''

என்ற அமைப்பில் சோணமலை நாதனின் பெருமையைப் பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன. இதில் பத்துப் பாடல்களே இருப்பினும் ''சதகம்'' என்ற பெயர் சூட்டப் பெற்றிருப்பது நோக்கத் தக்கது.

2. அண்ணுமலைச் சதகம்

103 பாடல்களைக் கொண்ட இந்நூல், மாம்பாக்கம் உபாத்தியாயரென்னும் திருச்சிற்றம்பல நாவலர் பாடியது.

அண்ணுமலையாரைப் பற்றிய குறிப்புக்கள் இந்நூலில் இடம் பெற்றிருப்பினும் நடைமுறைகளையும் நியதிகளையும் விளக்குவதையே இது முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. நூலாசிரியர் தம்மை ஆதரித்த வள்ளலாகிய சிங்கபுரி வசந்தராயர் என்பார்க்கு நன்றி செலுத்தும் வகையில் ஒவ்வொரு பாடலிலும் அவர் பெயரைப் பொதித்து வைத்துள்ளார். பாடலின் ஈற்றடி மகுடம் எனப்படும். மகுடத்தில் அவ்வள்ளலின் பெயர் சேர்க்கப் பெற்றிருப்பதுடன் நூலுக்கே ''வசந்தராயர் சதகம்'' என்ற மாற்றுப் பெயரொன்றையும் நூலாசிரியர் சேர்த்துள்ளார். ''வசந்தராயர் அண்ணுவினிற்றுதி செய் உண்ணுமுலைக்குரிய அண்ணுமலைத் தேவனே'' என்பது ஒவ்வொரு பாட்டின் மகுடமாகும். இங்குக் குறிப்பிடப் பெறும் ''வசந்த ராயர்'' இற்றைக்கு 300 ஆண்டுகட்குமுன் இக்கோயில் அறங்காவலராக இருந்த வேட்டவலம் பெருந்தகையர். அவர் தம் பெயரால் இப்புலவர் அண்ணுமலை ஆண்டவர்க்குச் சதகம் செய்த செய்தி 102-வது பாடலால் தெரிகிறது.

நாடு, இறைவன், தலம், வழிபாடு, மூவர், அடியார், நால்வகைச் சாதி, ஆண்,

பெண், வாழ்க்கை நெறி, சமயநெறி, குதிரை இலக்கணம் போன்ற பல தலைப்புக்களில் இந் நூலிலுள்ள பாடல்கள் அமைந்துள்ளன.

திருவண்ணுமலை அமைந்துள்ள திருமுனைப் பாடி நாட்டின் பழம் பெருமையையும் வர லாற்றையும் நூலில் நன்கு உணரலாம். அண்ணுமலைக்கு அடுத்துள்ள திருக்கோவலூர் என்ற ஊரின் பெயர்த் தோற்றம் சுவையாக விளக்கப்பட்டுள்ளது. கருணுகரக் குக முனிக் காக முருகன் விடுத்த கைவேல் வந்து ஊன்றிய இடமானதினுல் ''திருக்கையில் வேலூர்'' எனப் பெயர் மாற்றம் பெற்றிருக்க வேண்டு மென்று நூலாசிரியர் புதுமையான விளக் கத்தைக் கொடுத்துள்ளார். திருவண்ணுமலை யில் இந்திரன் தீர்த்தம், அக்கினி தீர்த்தம், எமதீர்த்தம், வருணதீர்த்தம், குபேர தீர்த்தம் போன்ற 360 தீர்த்தங்கள் இருந்த செய்தியை நூல் காட்டுகின்றது.

இன்று வழக்கிலிருந்து மறைந்து போன வழிபாட்டு முறைகளை இச்சதகம் நினைவூட்டு கிறது. அத்தனுக்கு எத்தனைவிதமான அபி டேகங்கள் செய்வது என்பதை விளக்குவதுடன் செங்கழுநீர், தும்பை, செண்பகம் போன்ற பூசைக்காகும் பூக்களின் வகைகளையும் இச்சதகத் தால் நன்கறியலாம்.

''நீரில்லா நெற்றி பாழ்'' என்ற வகையில் திருநீற்றின் பெருமையைச் சிவநெறிச் செல்வர் கள் நன்குணரும் பொருட்டு விபூதி குழைத்திடு முறைமை, தரிக்கும் முறை, விபூதியிடுங்காலம் ஆகியவை நன்கு விளக்கப் பெற்றுள்ளன. விபூதியைக் குழைத்திட்டு மூன்றங்குலத்தளவு தலைமேலும் எட்டங்கலத்தளவு நெற்றியிலும், பின் மார்பினும், புயத்திலும், உந்தியிலும், முழங்கை, மணிக்கட்டி, கழுத்து, இடுப்பு, ஆகியவற்றிலும் இடவேண்டுமென்று குறிப் பிடப் பெற்றுள்ளது.

இவ்வாறு மக்களுக்குப் பயன்படக்கூடிய பலவகையான செய்திகளைத் தரும் சதகம் ''ஒன்பது பாடல்களில்'' அசுவ இலக்கணம் கூறுகிறது. குதிரையின் நிறம், வகை, சுழி அமைவதால் உண்டாகும் பலன் போன்ற பல அரிய செய்திகள் இதில் அடங்கியுள்ளன. பல்பொருட் களஞ்சியம் போல் பயனுடைய செய்திகள் அனைத்தையும் ஒரு சேரத் தொகுத் துத் திரட்டித் தருவதில் ''அண்ணுமலைச் சதகம்'' தலைசிறந்து நிற்கின்றது.

3. அருணுசல சதகம்

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தலை சிறந்து விளங்கிய தமிழ்ப் புலவர்களுள் மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலி யார் ஒருவர். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம்பிள்ளை சென்னைக்கு வந் திருந்தபோது அவரிடமும் பாடங்கேட்டார்.

''அருணுசல சதகம்'' பிற சதகங்கள் போல் நீதிகளை எடுத்துக் கூறுவதையே நோக்கமாகக் கொள்ளாது அண்ணுமலையில் உறைந்துள்ள இறைவனின் சிறப்பையே விளக்கி நிற்கின்றது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ''அருணுசலா அருணுசலா'', என்ற மகுடத்தை உடையது. இந்நூலில் மொத்தம் 100 பாடல்கள் உள்ளன.

இறைவனது உருத் தோற்றத்தைப்பாடும் போது மானேந்தினை, மழுவேந்தினை, மதி யேந்தினை, நதியேந்தனை, எருக்கேந்தினை, கமலன் முடி கரத்தேந்தினை, எலும்பேந் தினை என்று அவன் மான், மழு, மதி, நதி, எருக்க மாலை, பிமணது முடி முதலியவற்றை ஏந்தியுள்ளதை அழகாக வருணிக்கிருர்.

இறைவன் இவ்வுலகு நிலைத்து நிற்றற்குக் காரணமாயிருக்கின்ற ஐம்பெரும் பூதங்கள ளைத்துமாய் நீக்கமற நிறைந்திருக்கின்ரு னென்ற கருத்தை,

பாரின்கணே ஐந்தாகினை பகர்நீரிடை நான் காகினை
சேருந்தழற் கண்மூன்றெனச் செறிந்தாய்வளிக் கிரண்டாகினை
நேரும் வினை வொன்ருகினை நிமிரும்முயிர்க்குயி ராகினை
ஆருன்னிலை யறிவார்சொலா யருணுசலா அருணுசலா

என்று பாடுகிருர். ஐவகை நிலம், நால்வகை நீர், முத்தீ, காற்று இரண்டு, விண் ஒன்று என்று இவற்றின் பாகுபாடுகளையும் இப் பாடலில் எடுத்துக் காட்டியுள்ளது பாராட்டத் தக்கது.

மீண்டும் மீண்டும் பிறந்து பிறவித் துன்பத் தில் உழல விரும்பாத ஆசிரியர் பிறவிகள் தாமெத்தனை வகை என்று வருத்திப் பாடுகிருர். ''புல்லாகி, பூடாகி, புழுவாகி, மரமாகி, கல்லாகினேன். எங்ஙனே பொல்லாப் பிறப்

பொழிந்துய்குவேன்'' என்று ''இமயந்தரும் அல்லாற் குழற்கொரு பாகனை''க் கேட்கிறார்.

தன்னுடைய நெஞ்சம் வஞ்சம் நிறைந்தது. ''பாய்வானதி நீர் பாய்ச்சினும் படரெட்டியின் கனி கைப்பருது என் நெஞ்சமும் அதுபோலாதல் ஓர்த்தே உய்வான்வேண்டி உன் அருளை அண்டினேன்'' என்கிறார் அவர்.

இறைவனது அருட் செயல்களை மட்டும் பாடாது, தம்முடைய உளநிலையையும் எடுத்துச் சொல்லி நால்வர், தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரிநாதர், இராமலிங்கர் போன்று தன்னுடைய கடைத் தேற்றத்திற்கும் இறைவன் அருள் புரிய வேண்டுமென்று ஆசிரியர் இச்சதகத்தில் பாடுவதால் இது மற்ற எல்லாச் சதகங்களினின்றும் மாறுபட்டு உயர்ந்து விளங்குகின்றது. பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப் பெற்ற சிறந்த சதக மிதுவாகும்.

4. உண்ணுமுலை யம்மன் சதகம்

அண்ணுமலையில் உறையும் உண்ணுமுலை யம்மன் மீது சின்னகவுண்டரவர்கள் ''உண்ணுமுலையம்மன் சதகம்'' என்று பாடியுள்ளார். இது நூறு பாடல்கள் கொண்டது. ''தருமேவு மருகிரி யீசர் பாலுறையுலகு தாயுணுமுலை யம்மையே'' என்ற மகுடம் ஒவ்வொரு பாடலில் ஈற்றடியாக அமைந்துள்ளது.

இச்சதகம் இறைவியின் பெருமையை எடுத்துக் கூறுவதாயமையாது நீதிகளையும் நியதிகளையும் எடுத்துக்கூறும் சதகமாகவே அமைகின்றது. இந்நீதிகளும் நியதிகளும் மக்கள் அன்றாட வாழ்க்கையில் மேற்கொள்ளும் பல செயல்களுக்கு விளக்கம் தருவதாயமைவதோடு, முறையான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்குத் துணை புரியும் பல இன்றியமையாச் செய்திகளை மக்களுக்கு எளிதில் புரியும் வகையிலும் நினைவில் வைத்துக் கொள்ளும் வகையிலும் பாடல்களாகத் தருகின்றது.

எல்லாச் சதகங்களிலும் போலவே இதிலும் பிராமணர், அரசர், வேளாளர், வைசியர் ஆகியோரின் இயல்புகள் தனித்தனிப் பாடல்களில் கூறப்பட்டுள்ளன. மக்களுக்கு நல்வழி, தீமை, பெருமை, படிவினை, பாவம், புண்ணியம் ஆகியவற்றில் தன்மையும் தனிப் பாடல்களிலே விளக்கப் பெற்றுள்ளன.

அறுவகை உட்சமயம், அறுவகைப் புறச்சமயம் எவ்வெவை என்று விளக்கப் பெறுவதுடன் சரியை, கிரியை, யோகம், ஞானம், தத்துவம் முதலியவற்றைப்பற்றிய விளக்கமும் சமய அன்பர்களுக்குச் சமய நெறி முறைகளை அறிந்து கொள்வதற்குப் பயன் படுவன.

மக்களின் பலவகை ஊர், அவர்கள்இயல்பு இன்னதென்றறிந்து கொண்டால் அவர்களுடன் பழகுவதைத் தவிர்த்து நல்லாரோடிணக்கம் கொள்ளலாம். இது மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு வழியாகும். எனவே பல்வகை மானிடரின் இயல்பை இச்சதகம் தெளிவாக விளக்குகின்றது. அற்பர், உலுத்தர், நல்லோர், சின்னமனிதர், தியாகிகள், பயனற்றவர், மூடர்கள், அஞ்ஞானிகள், பகைக்கவொண்ணுர், அரிதானவர், புகழ் பெற்றோர், யாரெவர் அவர்தம் தன்மைகள் யாவையும் நூலுட் காணலாம்.

வழிப்பயணம் செய்வோர்க்கு உதவியாயிருக்கும் பொருள்கள் என்று, கட்டுச் சாதம், தாகநீர் கொளப் பாத்திரம், வெள்ளிலை, அடைக்காய், சுண்ணம், ஒரு நாழியரிசி ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இக்கால நிலைக்கு இவை வியப்பைத் தரினும் அக்காலச் சூழ்நிலையை நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

நீதிகளை யெடுத்துக் கூறுவதை முதன்மையாகக் கொள்ளினும் இறைவியை வாய்ப்பு நேரும்போ தெல்லாம் அவளுடைய அருட் செயல்களையும் அருங்குணங்களையும் போற்றி மகிழ்கிறார் ஆசிரியர். ''சதுர்மறையி லெட்டாத திருநயனவல்லியே சத்தியவேதமுதலே கலத்திற்கரா வெற்றமாலின் சகோதரிசாம் பவி மதுரையரசி'', ''தைலே பரிமள மடந்தை பவி மதுரையரசி, ''தைலே பரிமள மடந்தை பங்கேருகத் தற்பரானந்த வல்லி'' ''சத்தி சிவ சாம்பவி காதலி மனோன்மணி சடாதரி வேத முதல்வீ'' ''சதுர் மறை புகழ்ந்திடுங் கருணைநிறை வாரியே சைவ கோனுதவுமயிலே'' என்று இறைவியைப் பலவாருகப் பாடுகின்றார்.

அருணைத் தலத்தையும் நகரையும் ''திருவுயர்ந்திரு சிவஸ்தல மதில் சிரேஷ்ட நீ தங்கு புகழருணை நகராம்'' என்று பாராட்டித் ''தலமெலாம் புகழ் தங்கு மருணைத் தலத்தினுக் கொப்பாயோ'' என்று வினவுகிருர். நாமும் அவர் வழி நின்று தனக்கு ஈடும் இணையும் இல்லாத அருணைத் தலத்திலுறையும் அண்ணுமலை நாதரையும் உண்ணுமுலையம்மையையும் பணிந்து வாழ்வோம்.

திருவருணைப் பாக்கள்

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

மலர்களொடு மரமெல்லாம் வானத்தை நோக்கியன்றோ
அலர்ந்துனக்கே வழிபாட்டில் ஆர்ந்தனபோல் மகிழ்வனவாம்
பலபறவை பறப்பதுவும் பார்விட்டு வானிலன்றோ
மலைகளவை அண்ணாநின் மலரடியைத் தொட எழுமால். 1

மனிதன்நேர் நின்றதுவும் வானமதை நோக்கவன்றோ
இனிதவன்றான் விமானமதில் எழுந்தோங்கிப் பறந்திட்டுப்
பனிமுகில்மேல் இந்திரன்போல் படர்வதுவும் விண்ணிலுமே
நனிதூய்தாம் அண்ணாஉன் நல்லடியை வருடவன்றோ. 2

வானகத்தை வென்றிடவும் வான்மதியிற் குடிபுகவும்
ஊனகத்தின் உண்மையெலாம் உளவாக அறிந்திடவும்
கானகத்தும் உழைப்பவன்றன் கருத்தகத்தேன் அன்பில்லை
தேனகத்தில் தித்திக்கும் திருவண்ணா மலையானே. 3

அருளுருவன் நீயென்றே அறிஞரெலாம் ஒருகுரலாய்த்
தெருளுறநின் நிலையுணர்ந்தே தேக்கெறிந்து பாடுகின்றார்
மருளுற்ற மனம் கொண்ட அடியவனேன் வழுக்கி விழுந்
துருளுற் றிங்கலைவதென்னே ஓங்கண்ணா மலையானே. 4

மழையாகிப் பயிர்விளைத்து மக்கள் எல்லாம் பசிதன்னாற்
குழையாது காக்குமுன் னன்பிருந்தும் எளிய ரெலாம்
அழையாகிப் புலம்பியலைந் தடுக்க இடம் இலரானார்
மழையதுவே பிழையாதல் வழக்காமோ அண்ணாவே. 5

—திருவருணைப் பாமாலைகள்
(சிந்தாரிப்பேட்டை ஷண்முக பக்தஜன சபை வெளியீடு 13–12–1959)

பதிகங்கள்

'அருணாசலேச்சுரர் பதிகம்' என இரண்டு வெவ்வேறு நூல்கள் உள்ளன.

''ஓதுமலை'' என்ற தொடக்கத்தையுடைய நூலின் ஆசிரியர் எவர் என்று தெரியவில்லை.

''மணிகொண்ட'' என்ற தொடக்கம் உடையது அஷ்டாவதானம் சபாபதி முதலியாரால் ஆக்கப்பெற்றது.

இரண்டு பதிகங்களும் செம்பாகமானவை.

திருவண்ணுமலைச் சிற்றிலக்கியங்கள்

உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

சிவத்தலங்களுள் நினைத்தாலே வீடுபேறு தரவல்லது திருவண்ணுமலையே. அண்ணுமலையின் சிறப்புக்களைப் பாடிய கவிஞர் பற்பலர். பல்வேறு காலத்தவர். அந்நூல்களில் பெரும்பாலன அளவால் சிறியனவாயினும் கவிதைத்தரத்தாலும், பொருளாலும் போற்றத்தக்க சிறப்புடையன. அவற்றுள் ஒரு சிலவற்றை ஆய்வதே இங்கு நோக்கம்.

1. **கார்த்திகைத் தீபவெண்பா :** திருவண்ணுமலை என்றவுடனே மனக் கண்ணில் தெரிவது குன்றின்மேல் நின்றொளிரும் பெருந்தீபமேயன்றோ: காப்பு வெண்பாவும், வாழ்த்துப்பாடலும் நீக்கி ஒருநூறு வெண்பாக்கள் கொண்ட இத்தொகுப்பை யாத்தவர் புராணிகர் சோணுசல முதலியார் அவர்கள். ஒவ்வொரு வெண்பாவின் ஈற்றடியும் 'கார்த்திகைத்தீபம்' என்றே நிறைவுறுகிறது.

'அன்னம் அளிக்குந்தீபம் அண்டினரை ஆதரித்துப்
பொன்னும் அளிக்குந்தீபம்'
'சிந்தைக் கலக்கந் தெளிவிக்கும் தீபம் தாய்
தந்தைக்கு இணையாகச் சார்தீபம்'
'பொன்னுலகைக்
கீழாக்கும் சோணகிரித் தீபம் வெவ்வினையைப்
பாழாக்கும் கார்த்திகைத் தீபம்'

எனத் தீபத்தின் பயன்சொல்லும் ஆசிரியர், அதைச் சுட்டிக் காட்டும் பாங்கு சுவையுடையது.

சிவபிரானின் பல்வேறு திருவிளையாடல்களையும், நாயன்மார்களின் வரலாற்றுக் குறிப்புக்களையும் ஆங்காங்கே காணமுடிகிறது.

'சீரார் சிறுத்தொண்டர் செல்வன் கறியுண்ணப்
பேராசை வைத்த பெருந்தீபம்'

என்ற தொடர் அவலத்தை நகைச்சுவையாக்குவது.

ஓரிரு வெண்பாக்களில் அண்ணுமலையின் இயற்கையழகும் தவழ்கிறது.

'புள்ளிசேர் மான்கள் பொலியருணை'
'கழனிபுடை சூழருணைக் காமர்மலை'

2. **சோணுசல வெண்பா :** இந்நூலின் ஆசிரியரும் முன்னவரே. காப்பு நீக்கி நூறுபாடல்கள் சற்றுக் கடுநடைகொண்டன.

எற்றை நாள் மாது உமையோடு என்முன் வருவாயோ
அற்றை நாள் நல்லநாளான நாள்—மற்றைநாள்
கன்மநாள் வீணுள் கரிநாள் இருட்டுநாள்
சன்மநாள் சோணு சலா.

என்ற பாடல் பேரானந்தம் பெறத்துடிக்கும் நூலாசிரியரின் உள்ளத்தைப் படம்

பிடித்துக்காட்டுவதாகும். 'சோணுசலா' என்றே அனைத்து வெண்பாக்களும் முடிகின்றன.

'கோயில் வலம் செய்யேன் கும்பிடேன் நின்றுருகேன்
வாயில் எழுத்தஞ்சும் வழுத்துகிலேன்—நாயிற்
கடையாளாப் பேய்போற் கவல்கின்றேன்'

என நைந்துருகுகிருர் கவிஞர்.

மனத்தின் நிலையற்ற தன்மையை,

'தெய்வம் உண்டென்று ஓர்வேளை தெய்வம் இன்றென்று ஓர்வேளை
மைவளரும் துட்ட மனம்'

என்ற தொடரால் அழகுறச் சுட்டுகிருர்.

'என்னைப்போல் ஏழையிலை எவ்வெவ் வுலகத்தும்
நின்னைப் போல் வள்ளலிலை நிச்சயமே!'

என அருணையம் பெருமானைப் போற்றி,

'காலத்தே சென்றுசிவ கங்கையிலே நீராடிப்
பாலத்தே நீற்றைப் பரிந்தணிந்து—மூலமா
மந்திரமே ஓதிநினை மன்னிவலம் செய்வதுஉய்யும்
தந்திரமே'

என உணர்ந்து

கரங்குவித்து மெய்சிலிர்த்துக்கண்ணீர் உதிர்த்துச்
சிரங்குனித்துத் தெண்டனிட்டுத் தேம்பி'

அழுதால் வரம் கிடைக்கும் எனும் நம்பிக்கையில் இறைவனை வாழ்த்துகிருர்.

'அன்பே திரியா வருளே நெய்யாக' எனும் தொடர் ஆழ்வாரை நினைவுறுத்துகிறது.

குகைநமசிவாயர், குருநமசிவாயர் ஆகியோர் காலத்திற்குப்பின் வாழ்ந்தவர் இவர் என்பதற்கும் அகச்சான்றுளது.

தமிழை 'மதுரைநேயத்தமிழ்' எனக்குறிப்பதும் புதுமையே.

3. **திருவருணைக் கலிவெண்பா:** இந்நூலும் புராணிகர் சோணுசல முதலியார் இயற்றியதே. 31 கண்ணிகள். இறைவன் நடமாடும் ஐந்துசபைகளை.

'செம்பம்பலம் நெல்லை சித்ரசபை குற்ருலம்
பம்பு மணியம்பலம் ஆலங்காடு—உம்பர்தில்லை
பொன்னம்பலம் கூடல் புக்க வெள்ளியம்பலங்கள்'

எனக் குறிப்பிடுகிருர்.

சிவபெருமானின் ஐம்பூத நிலைகளை,

''மண்இலிங்கம் காஞ்சி மழைஇலிங்கம் ஆனைக்கா
விண்இலிங்கம் தில்லை வியன்மூதூர்—திண்ணர்சார்
வாயுலிங்கம் காளத்தி மற்றிவைக்கு மத்தியாந்
தேயுலிங்கம் சோணகிரி''

எனச் செப்புவர்.

காசியில் இறக்கமுத்தி; திருவாரூரில் பிறக்க முக்தி; பார்க்க முக்தி தில்லை; நினைக்க முக்தி அண்ணுமலை என்றும் புகல்வார்.

4. **திருவருணைத் தனிவெண்பா:** ஆசிரியர் குகை நமச்சிவாய தேவர். 35 வெண்பாக்கள்.

சோணு சலனைத் துதியாமல் தொல்லுலகில்
வீணுசை கொண்டிருந்து விட்டோமே—பூணுரம்
பெண்டிர் மக்கள் சுற்றம் பெருவாழ் வெனக்கருதி
உண்டி தனக்கா யுழன்று

என உருகும் இவர், அண்ணுமலையான் அருளால்,

'மண்ணும் பொன்னுகாதோ, மாற்றுன் விலகானே
பண்ணுந் தவங்கள் பலியாவோ'

என வினவுகிறுர்.

'' .... ஓயாமல்
ஊசலுக்கு நேராய் உழலும் மனந்தான் ஒருவர்
வாசலுக்குப் போகா வரம் ''

வேண்டுகிறுர்.

'வடம்பிடிக்க வாருங்கள் வந்தவர்க்கு முத்தி
இடம்கிடைக்கும் பாருங்கள்' எனும் வரிகள்,

எல்லோரும் வாருங்கள்—சுகம் இருக்குது பாருங்கள்' எனும் நந்தன் சரித்திரக் கீர்த்தனை வரிகளோடு ஒப்புநோக்கத்தக்கன:

5. **ஸ்ரீ அருணுசலேசர் நவகாரிகைமாலை:** காப்பு நேரிசை வெண்பா உட்பட, கட்டளைக் கலித்துறையாலான பாடல்கள் பத்து.

'படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே' எனக் குலசேகராழ்வார் பாடியதுபோலவே இவரும்,

'கோளானவைபல கற்றேே வயிற்றின் கொடுமையினுல்
வாளா அலைந்துழந்தேன் அவரேறிடும் வாகனத்தைத்
தோளால் சுமந்து அவன் ஊர்ந்திடும் தேரினைத் தொட்டிழுக்கும்
ஆளாய்ப் பிறந்திலனே அருணுபுரி அத்தருக்கே'

என மனமுருகிப் பாடுகிறுர்.

'' தடமானது ஈது என்று அறியாக் குருடரின் தன்மையைப்போல்
மடமாதர் மோக வலையினிற் பட்டு மயங்குகின்றேன்' எனவும்

'நில்லாது காயம் நிலையாது வாழ்வு இவை நிச்சயமே
பொல்லாத புத்தியை ஏன்படைத்தாய்' எனவும்

உருகிப்பாடும் வரிகள் வாழ்க்கைத் தத்துவத்தை விட்டு இறைத்தத்துவத்தை நாடச்செய்வன.

6. **சாரப் பிரபந்தம்:** 15 ஆசிரிய விருத்தங்களால் அமைந்த இப் பாடற்றெகுப்பு நூலை யாத்தவர் நமசிவாய சுவாமிகள்.

இறைவனைச் சார்ந்து,
'வறுமையது தீரவும் வதுவையது செய்யவும்
வந்தனன் உமைநாடியே' என நூலாசிரியர் கூற

விடையேறியவன் அதற்கு விடையாகத் தன் நிலைமை புலவரைவிட மோசமாக உள்ளது என்று கூறுமாறு அமைந்தது நகைச்சுவை விருந்து.

'யாமென்ன செய்குவோம் எமக்கொருவர் செய்வதன்றி
என்கையில் யாதுளது' எனவும்,
'உடுக்கின்ற வஸ்திரம் உழுவையின் தோல்

உடற்குளிர் பொருமலே யானையை உரித்துமேல் போர்த்தினேன்
காளியுடன் ஆடிஒரு காலுமோ நான்றவாதக்கால்
எடுக்கின்ற மாடொன்று மானென்று கையினில்
இதன்றி வேறில்லை' எனவும் சிவபெருமான் கூற,

'அகிலகாரணனும் நீ, எள்ளுக்குள் எண்ணெய்போல்
அநேக உயிருக்கு உணர்வுநீ, அகமும்நீ புறமும் நீ

ஆதிநடு ஈறு நீ' எனப்புலவர் பலவாறு புகழ்ந்து பாராட்டி ஒரு வழியாக, அச்சரப்பாக்க வைசியரிடம் பொருள் பெறும் வகையில் இறைவனிடம் திருமுகம் வாங்கி விடுகிறார். அக்காலத்து வள்ளல்களாக வாழ்ந்த செட்டிப் பெருமக்களின் பட்டியலையும் பாடல் தருகிறது.

7. **அண்ணாமலை பஞ்சரத்தினம்:** ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. ஆசிரிய விருத்தப்பாக்கள் ஐந்துள. 'அண்ணாமலைக்கதிப, உண்ணாமுலைத்தலைவ அண்ணாமலைத்தேவனே' என முடிவன. முதலிரு பாடல்களில் சிவபிரானது திருக்கோலத்தையும் மூன்றாவது பாடலில் மயக்கும் மங்கையரின் எழிற் கோலத்தையும் நான்காவதில் நால்வரைப் பற்றியும் அழகுற வருணித்துள்ளார். இறுதிப்பாடலில் வழிபாடும் காண்கிறோம். இவர் காலத்துத் திருவண்ணாமலை மழைவளம் சிறந்து,

'ஆர்கொண்ட புயல்வரவு சோலையொடு கழனிகள் அமைந்து
திருவோங்கு நகராய்'த் திகழ்ந்தது போலும்!

8. **அருணசல அட்சர மாலை:** ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 'அ' முதல் 'ஔ' வரையிலும், 'க' முதல் 'ன' வரையும் தமிழ் நெடுங் கணக்கின் எழுத்துக்களை முதலெழுத்தாகக் கொண்டு இணைக் குறட்டாழிசையால் 114 கண்ணிகள் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது. 'அருணசலா' என்பது ஈற்றுச் சொல். நிட்களாங்கம், சகளாங்கம், சகள நிட்களாங்கம் என முப்பெரும் பகுப்புக்கள் கொண்டது. பண், லாலிசந்தம் எனக் குறிக்கப்பெற்றுள்ளது. குருஸ்வரூபம், சிவலிங்கஸ்வரூபம், கோயில், குளம், அபிடேகம், புட்பம், தூபம், நைவேத்தியம், தோத்திரம், இசை, சிவாக்கினி, சிவபத்தி, வயிராக்கியம், சங்கமஸ்வரூபம் எனப்பல உட்பிரிவுகளில் மெய்ப்பொருளின் வழிபாடு விரித்துக் கூறப்பெறுகிறது.

'எட்டுகுணம் எட்டு வடிவாய் எட்டெட்டு
ஒட்டுகலை எட்டு முடிவாய்
பட்டுமவை எட்ட அரிதாப் பாசமறு
சிட்டர்புகழ் அருணசலா'

சிவனடியார் பெருமைகளை இந்நூல் நிரம்பப்பாடுகிறது.

9. **அருணகிரி அந்தாதி:** திருவருணைத் தனி வெண்பா இயற்றிய குகை நமசிவாய தேவரே இவ்வந்தாதியையும் பாடியுள்ளார். இவர் கன்னட நாட்டு மல்லிகார்ச்சுனத்திலிருந்து தெற்கே தலயாத்திரை செய்து வருங்கால் தன் குருவுருவாக எழுந்தருளிய அண்ணாமலையாரின் ஆசியுடன் திருவண்ணாமலையி லேயே குகையினிடத்து இருந்தபோது இந்நூலையியற்றினர் என்பர். காப்புச் செய்யுள் நீக்கி வெண்பாக்கள் நூறு, அந்தாதித் தொடையில் அமையப் பெற்றது.

காய நெகிழாமுன் கண்க ளிருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன்—காயம்பார்த்
தோடி நமன் வாராமுன் உள்ளமே சோணகிரி
நாடி நமவென்றே நட.

10. திருவருணையந்தாதி: ஆசிரியர் சைவ எல்லப்ப நாவலர். 'சைவத்தின் மேற்சமயம் வேறிலை' எனச் சாற்றியவர். உயர்நடையும், இலக்கியவளமும் சிறந்து அகப்பொருள் இலக்கணக்கட்டுக்கோப்போடு தலைவன் தலைவியர் காதலொழுக்கம் பற்றிப்பேசும் இவ்வந்தாதித்தொடைநூல் திருவண்ணாமலையையும், அண்ணாமலையாரையும் மையமாகக்கொண்டு புகழ்பாடும் பெற்றியது. தக்க உரை எழுதப்பெற்றாலன்றி மேலோட்டமாகக்கற்று மகிழ்தல் இயலாது.

பேய்த்தேரை நீரென்று உழல்வீர் கலுழன்பிடித்தபணி
வாய்த்தேரை நீர்மைகண்டீர் இந்தவாழ்க்கை அம்மாயமெல்லாம்
சாய்த்தேரை நீர்பெறுபேறு சொல்கேன் கற்பதாருநிகர்
ஆய்த்தேரை நீள்கொடிசூழ் அருணேசர் அடிதொழுமே.

இருப்பதற்குள்ளே எளிமையான பாடல் இது.

11. ஸ்ரீ அருணாசலீசர் பதிகம்: மகாவித்துவான் புரசை அட்வதானம் சபாபதி முதலியார் இயற்றியது. ஆசிரிய விருத்தத்தால் ஆன பத்துப்பாடல்கள்.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றில்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிகமாம் பதிகம் கூறுதற்குத் தொந்திக்
கணபதியைக் கைதொழுதக்கால்

என்ற காப்புவெண்பா அனைவரும் நன்கு அறிந்த ஒன்று.

'அருணாசலீசர் வரவேணும் என்றன் அருகே'

என்ற தொடரோடு ஒவ்வொரு பாடலும் நிறைவுறுகிறது.

''பணியாத கோயில் அணியாத நீறு பசியாத சோறு தருவாய்
துணிவான வாசி சிவஞானமோன சுகமே யெனக்கருள்வாய்''

''அடிமூல வட்டம் அதிலாறு திட்டம் அதன்மேலிருந்த பரனே
துடியான சத்தி சிவரூபவல்லி சுகமான வேதவடிவே''

என்ற தொடர்கள் தத்துவச் சாற்றைக் குழைத்துத் தருவன.

12 அருணாசலேஸ்வரர் பதிகம்: ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 'ஆசிரிய விருத்தத்தாலமைந்த பதினோரு பாடல்கள். திருவண்ணாமலையின் மலையழகை முதற்பாடல் சிறப்பிக்கிறது. எல்லாப் புலவர்க்கும் இயல்பான வறுமை இவரையும் பிடித்தாட்டியதை

'வாலிபந் தன்னிலே ஒருநலமும் எய்திடாது
வறுமை வந்தெனை வருத்த
வண்புவியில் ஒருசாண் வயிற்றினை வளர்க்க உளம்
வாடினேன் தேடிவந்தேன்'

என்ற வரிகள் புலப்படுத்துவன.

முந்தைய பதிகத்தைவிட இந்நூல் ஆற்றொழுக்காய் நெஞ்சை உருக்குவதாய் அமைந்து 'அரகர மகேசனே பரமகுரு ஈசனே யணியணாமலை வாசனே' என்ற ஈற்றடி கொண்டு முடிகிறது.

13. உண்ணாமுலையம்மன் பதிகம்: ஆசிரியர் யாரென அறியக்கூடவில்லை. சந்த விருத்தத்தில் அமைந்த இனிமையான பத்துப்பாக்கள். 'உண்ணாமுலை நாமதேவி வரவேண்டும் என்றன் அருகே' என்ற ஈற்றடி கொண்டு இலங்குவன.

14 உண்ணாமுலையம்மை வருகைப் பதிகம்: காப்பு வெண்பாவும் ஆசிரிய விருத்தங்கள் பதினொன்றும், இறுதியில் ஒரு கட்டளைக் கலித்துறையும் கொண்டது.

'சற்றுகிலும் உள்ளுடையா உலுத்தர் சமூகத்திலேகிக்
கவிபாடித் தாழ்வுறாமல்
இணையம் புயங்கள் எனும் நின் சரண்கள் எளியேன்
வித்தாரமான தமிழ்பாடி ஞானவிறல் மேவ வைத்திடுதிபால்
வற்றாத உண்ணாமுலை நாமதேவி வரவேண்டும் என்றன் அருகே'

எனும் பாடல் நம் நெஞ்சத்தை உருக்குவதாகும்.

15. திருவண்ணாமலைப் பதிகங்கள்:

ஆசிரியர் திருக்குருகூர் ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகள். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். அறுசீர் விருத்தத்தில் பத்தும் கலி நிலைத்துறையில் பத்தும் எழுசீர் விருத்தத்தில் பத்தும், எண்சீர் விருத்தத்தில் பத்துப்பாடல்களுமாக நாற்பது பாடல்கள் பாடியுள்ளார். தொடக்கத்திலும், முடிவிலும் 'திருவருட்சகாயம்' என்ற தொடர் காணப்படுகிறது. பல புராண வரலாற்றுக்குறிப்புக்கள் பொதிந்துள்ளன.

'உண்ணும் பொழுதே உளத்தோங்கிய உத்தம!' என்றும்,
'ஞானக் கனவாகிய அண்ணாமலை நாதனே' என்றும்

'அன்றுதொட்டு அடியேன் அகம் வளர்அமுதே' என்றும் அண்ணாமலையாரை இவர் அழைக்கும் அழகே அழகு!

16 திருவண்ணாமலை திருவருட்பதிகம்: வடலூர் வள்ளலாரின் பாடல்கள். எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாக்கள் பத்து.

'பூத்திடும்அவனும், காத்திடுபவனும்
புள், விலங்கு உருக்கொடு நேடி
ஏத்திடும் முடியும், கூத்திடும் அடியும்
இன்னமும் காண்கிலர்'

எனும் அடிகள் தலவரலாறு புகல்வன.

'ஏது செய்திடினும் பொறுத்தருள் புரியும்
என்னுயிர்க்கொரு பெருந் துணையே'

என்பன போன்ற தொடர்களை இராமலிங்கரேயன்றி வேறு யாரால் பாடஇயலும்?

17, உருத்திர சங்கிதைத் தோத்திரம்:

இயற்றியவர் பெயர் இல்லை. இருபது பாடல்கள் பல்வேறு சந்தங்களில் அமைந்தன.

'பகலற்று இரவற்று உன்பாதம்
பரவப்பதம் வைத்தெனை ஆளாய்'

எனப்பாடும் இந்நூலாசிரியர் கூறுமாறு

'எழுது புகழ்உடையார் எழில் அருணகிரியார்' என்பது மிகையன்று.

அண்ணாமலையாரை எண்ணற்ற கவிஞர்கள் பண்ணோடு கூடிய பாடல்களால் பாடிப் பரவியுள்ளார்கள். ஈண்டுக்குறித்த இவ் இலக்கியச் சிறுபனுவல்களேயன்றி ஏனையவற்றையும் ஆராய்தல் அறிஞர் கடன். ★

அண்ணுமலையார் கோயில் வெளியீடுகள்

அருணுசல மகாத்மிய வசனம். திருவருணை ஞானுச்ரமம் ஸ்ரீமத் ஈச்வர சுவாமிகள் எழுதியது. 1928

திருவண்ணுமலை வரலாறு. சைவசித்தாந்த சமாஜச் செயலாளர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆக்கியது. 1940

திருவண்ணுமலைத் தல விளக்கம். ஈசான்ய மடம் ஸ்ரீ இராமநாத சுவாமிகள் இயற்றியது. 1974

தமிழ்க் கடல் ராய. சொ. அவர்கள், விளக்க உரையுடன் பதிப்பித்த பின்வரும் இரு நூல்கள் :

1. குகை நமச்சிவாயர் இயற்றிய அண்ணுமலை வெண்பா.

2. சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய அருணுசலப் புராணம்.

காவியப்பேரறிஞர் புரிசை முருகேச முதலியார் அவர்கள் விளக்கத்துடன் கூடிய சோணசைல மாலை.

TIRUVANNAMALAI THE HILL OF THE HOLY BEACON—By G. Kalyanam. Revised by A. Narayanaswamy Mudaliar. 1974.

ஆடிப்பூரம்

ஆயிரக்கால் மண்டபத்துக்கு எதிரில் உள்ளது வளைகாப்பு மண்டபம். இங்கு ஆடிப்பூரத்தன்று முருகன் அடியார்கள் 800 பேர்களுக்கு வைதீக உடைகள், எண்ணெய் முதலியன கொடுத்து அம்மனுக்கு அபிஷேகம் செய்து வளைகாப்பு அணியப் பெறும் இடமாதலால் இவ்வாறு பெயர் பெற்றது. இம் மண்டபத்தில் 16 தூண்கள் இவற்றுள் உள்ளன.

கம்பங்கள் இவற்றுள் ஒரு கம்பத்தில் அமர்ந்த முருகன் கம்பத்து இளையனுர் எனப் பெயர் பெற்ருர்.

திருவிழாக்களில் சிறப்பான நிகழ்ச்சிகள்

1. அம்மன் சந்நிதிக்கு எதிரில் ஆடிப்பூரத் தன்று தீ மிதிக்கும் வழக்கம் இக்கோயிலில் நெடுங்காலமாக நிலவிவருகிறது. வேறு எந்தச் சிவன் கோயிலிலும் இவ்வழக்கம் இல்லை.

2. சித்திரை வசந்த உத்சவம் பத்தாவது நாளில், பவுர்ணமியன்று, மன்மத தகனம் மகிழ மரத்தின் அடியில் நிகழும். வேறு எந்த சிவன் கோயிலிலும் இத்தகைய நிகழ்ச்சி இடம் பெறுவதில்லை. பிற தலங்களில் வசந்த உத்ச வத்துக்கும் சிவன் கோயிலுக்கும் தொடர்பு கிடையாது.

அருணாசல புராணச் சிறப்பு

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் எழுதிய பதிப்புரை

சிவபெருமான் சகளீகரித்துத் திருக்கோயில் கொண்டுள்ள க்ஷேத்திரங்கள் பல. அவைகளுட் சிறந்தவை ஆயிரத்தெட்டு. அவைகளில் மேம்பட்டவை திருவாரூர், சிதம்பரம், காசி, அருணாசலம் என்னும் நான்கு க்ஷேத்திரங்கள். அந்நான்கினுள்ளும் மேம்பட்டது, நினைக்க முத்தி தருவதாகிய திருவண்ணாமலையாகும். அத் திருவண்ணாமலை பஞ்ச பூதத் தலங்களுள் ஒன்றாகவும், ஆருதாரத் தலங்களுள் ஒன்றாகவும் இருப்பது. சிவமே திருவண்ணாமலையாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அருணாசலத்தின் மான்மியம் வேத வேதாந்தங்களானும், ஆகமங்களானும், பதினெண் புராணங்களானும், தேவார திருவாசகங்களானும் பெரிதும் வியந்துரைக்கப் பெற்றிருக்கிறது. திருவண்ணாமலையின் வரலாற்றையும், அதன்கண் தவங்கிடந்தோர் சரிதங்களையும் விரித்துக் கூறியுள்ள தமிழ் நூல்களில் இரண்டே எவரும் போற்றத்தக்கவை. அவை அருணகிரி புராணமும், அருணாசல புராணமுமாம்.

இவ்விரண்டனுள் தமிழுலகெங்கணும் பரவியிருப்பதும், சிறுவர் சிறுமியர் நாவில் உலவுவதும் அருணாசல புராணமேயாம். மூவர் முதலிகள் அருளிச்செய்த அடங்கன் முறையிற் கயிறிட்டுக் கருத்தறிவதுபோல, அருணாசல புராணத்திலுங் கயிறு சாத்தித் திருவுளக் குறிப்பையறியும் வழக்கந் தமிழ் நாடெங்கணும் நிலைத்திருக்கிறது. இஃதொன்றே அருணாசல புராணத்தின் தெய்வீகத் தன்மையை இனிது விளக்கும்.

—'அருணாசல புராணமும் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய எல்லப்ப நாவலர் சரிதம், தீபமாட்சி, தீபவிதி, கார்த்திகை விரதம், கார்த்திகைத் தீபச் சிறப்பு முதலியனவும்.' வெளியிட்டோர்: அ. இரங்கசாமி முதலியார் சன்ஸ், பூமகள்விலாச அச்சுக்கூடம், சென்னை. *1917*.

அருணாசல புராணக் கீர்த்தனைகள்

கி.பி. *1800*-இல் (சகம் *1722*) காஞ்சிபுரத்தைச் சார்ந்த வீரணப் புலவர் என்பார் அருணாசல புராணத்தை ஒட்டி, பல கீர்த்தனைகளை இசையமைப்போடு பாடி ''அருணாசலக் கீர்த்தனை'' எனும் பெரிய நூலை இயற்றினர். இந்நூலுள் அமைந்த *208* சந்தவிருத்தங்கள் இன்னிசை பாடுபவர்க்கும், கேட்பவர்க்கும் மகிழ்வூட்ட வல்லனவாய்த் திகழ்கின்றன. புராணத்தில் உள்ளவாறே பல சருக்கங்கள் பகுக்கப்பட்டுள. பாயிரத்தில் தொடங்கிப் புளகாதிபச் சருக்கத்தில் கீர்த்தனை முடிகிறது. கீர்த்தனை உருப்படிகள் *190*. இந்நூல் *1856*-இல் அச்சிடப்பெற்றது. இப்போது கிடைப்பது அரிதாக இருக்கிறது.

இவ்வாசிரியர், தம் *80*-ஆம் வயதில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் இக் கீர்த்தனைகளைப் பாடத் தொடங்கி, உரிய காலத்தில் முடித்து, பின் தம் *85*—ஆம் வயதில் (கி.பி. *1800*) திருவண்ணாமலையில் அண்ணாமலையார் சந்நிதியில் அரங்கேற்றியதாகக் கூறுகிறார். *90* வயதில் பெரிய புராணக் கீர்த்தனை பாடி வந்தபோது காலமானர். பின்வருவது இவர் அருணாசலக் கீர்த்தனைபாட அருள் புரியுமாறு திருவண்ணாமலையில் கோயில் கொண்டுள்ள இறைவனைத் துதிக்கும் கீர்த்தனையாகும்.

மோகனராகம் ஆதிதாளம்

பல்லவி

பாதமே துணையே—தமிழ்
பரிவுட னுரைசெய—மருமலர் நிகர் இரு (பாதமே)

அனுபல்லவி

பாதிமதி சடை மீது தரித்தருள்
சோதி அருணகிரி நாதர் நடித்திடும் (பாதமே)

சரணங்கள்

1. அதிசயங்கள் நிறைவான கொலுவிலே
புதிய செந் தமிழை யோதும் வலுவிலே
சதியிதென்று புகலப் பழவினை
சிதறி யஞ்சி யகலப் பெருகிய
நிதியு மிதற் கிணை மதியு மகிழ்ச்சியும்
அதிக மெனத் தரு முதலருணைப் பதி (பாதமே)

2. மனுவிருந்து சதிராகமுன் னூலதாய்
இனிய தென்று புகழும்படி மேலதாய்க்
கனிவினின்று பாடித் தவமிகு
புனிதமென்று கூடிச் சொல வுயர்
பனியை யடக்கிய தினகரனுக் கருள்
முனமுதவிச் செயும் அனகன் மலர்த்திருப் (பாதமே)

3. தாணு நேர் இமயமாது பாகன்
பேணு வோர்களுள் மேவு மேகன்
பூணு மானணி கரன் நிறைவுறு
சேணு லாவிய வரன் இருளெனும்
ஆணவ முற்றயன் வேண விதத்தரி
காணரு மெய்ப்பொருள் சோணகிரிக் கிறை (பாதமே)

நாட்டுப் பாடலில் திருவண்ணாமலை

(1) கார்த்திகைத் தீபம்
அண்ணாமலைக்கு,
எண்ணெ விளக்கு!
துளசிமணிமாலை
தொடுத்துநான் வைத்தேன்!
ஒருநாளும் அறியேன்,
திருவண்ணாமலையை!
மறு நாளும் அறியேன்,
மண்டபப்படியை!

(2) மாவளி சுற்றுதல்

கார்த்திகைத் தீபத்தின்போது, சிற்றூர்களில் 'சொக்கப்பனை' கொளுத்துவர். சிறுவர்கள் 'மாவளி' சுற்றுவர். மாவளியை சுளுந்து என்றும், 'கார்த்திகைப் பொறி' என்றும் கூறுவர். பனம்பூவைக் கரியாக்கி, தூள் செய்து துணியில் வைத்து மெத்தைபோல் சுற்றிச் செய்யும் கரிப்பந்து 'மாவளி' எனப்படும். அதனை மூன்று குச்சிகளுக்கு இடையில் வைத்து நெருப்பு மூட்டிச் சுற்றுவர். சுற்றும்போது தீப்பொறி சுற்றிவிழும். அப்போது சிறுவர் பாடும் பாடல்:

மாவளியோ மாவளி!
மாவளிக் காரன் பெண்டாட்டி
மரக் கால்பிள்ளை பெற்றாளாம்!
பார்க்கப் போன சீமாட்டி
பல் ஒடிந்து போனாளாம்!
எடுக்கப் போன சீமாட்டி
இடுப்பு ஒடிந்து போனாளாம்!
மாவளியோ மாவளி!

★

அம்மையும் அப்பனும்

உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

பண்: கல்யாணி   தாளம்: ஆதி

ஆலத்தைக் கண்டஞ்சி ஓலமிட்டார்க் கன்று
அபயம் கொடுத்தவனே அண்ணாமலை—அண்ட
கோளத்தைக் காப்பதற்குத் தோளொடுதோள் நின்ற
நாயகி பெயர்தானே உண்ணாமுலை!

(ஆலத்தை)

காலத்தைக் கடந்துநின்று காலத்தை வரையறுத்து
காலனை உதைத்தவனே அண்ணாமலை—இந்த
ஞாலத்தில் உயிர்க்கூட்டம் நாளும் வளர்வதற்குத்
தாயாக இருப்பவளே உண்ணாமுலை!

(ஆலத்தை)

மூலத்தைக் காண்பதற்கு மேலும் கீழும்சென்று
முயன்றும் முடியாத அண்ணாமலை—திரு
மாலும் அயனும்தேடிக் காணாத போதும்என்றன்
மனத்தில் வளர்பவனே அண்ணாமலை!

(ஆலத்தை)

ஆவிக்குத் துணையாக அமைந்தமலை—அன்பன்
அருணகிரி வாழ்ந்த அண்ணாமலை—நெஞ்சில்
பாவித்தாலே போதும் பாவமெல்லாம் தீரும்
பாலூட்ட வருவாளே உண்ணாமுலை!

(ஆலத்தை)

ராகம் : கல்யாணி
தாளம் : ஆதி

ஆ : ஸரிகமபதநிஸ்
அ : ஸ்நிதபமகரிஸ

;, ஸ்ா ஸ் ஸ்ா ஸ்ஸா ஸ்ா ஸ்ா ஆலத்தைக் கண்டஞ்சி	;, நீரிக்ா, ஓலமிட்	ஸ்ஸ்ா நிஸ்ாதா,
, பபபா, மபம காரீ, அபயம் கொடுத்தவனே	;, நீரிரீ, அண்ணா	டார்க்கன்று
;, பாத பாதா, ததா தா, கோளத்தைக் காப்பதற்குத்	; பதா பதா, தோளொடு	கா; பா பா மலை-அண்ட
நிதா நிஸ்ாஸ்ா, நிரீக்ர்ரீ, நாயகி பெயர்தானே	நிஸ்ா நிதபபா,	நீ,நீ,நீ, தோள் நின்ற
	உண்ணாமுலை	தபமக மபதநி.....................
;, பாபபா மபாகமாபா, காலத்தைக் கடந்து நின்று	;, மாதபா, காலத்தை	மபாகரீரீ வரையறுத்து
;, நீரிகா நிரீகமாதா, காலனை உதைத்தவனே	;, தநிதஸ்நி, அண்ணாமலை	பா, பாபா லை இந்த
;, பாப பாம பாரிரீகா, ஞாலத்தில் உயிர்க் கூட்டம்	;, மாதமா, நாளும்	தாஸ்நிதாதா, வளர்வதற்கு
;, தாம தாபா, மகரிகா, தாயாக இருப்பவளே	; ஸ்நிபாமா, உண்ணாமுலை	மதபமகரிஸா.....................
;, மாத மாதா, தததா, மூலத்தைக் காண்பதற்கு	; மதாநிஸ்ா, மேலும்	ரிகமதபா; கீழும் சென்று
; மநீ தநீ மதபமகரிஸா, முயன்றும் முடியாத	; பபாகமா, அண்ணாம	பா; பாபா லை. திரு
; மதாநிநீதஸ்ா தபாபா, மாலும் அயனும் தேடி	; மா, தமா, காணாத	தநீஸ்ரீரீ போதும் என்றன்
; ஸ்ஸ்ாநிஸ் நிதநீதமாபா, மனத்தில் வளர்பவனே	பபாகா, மா, அண்ணாமலை	கரிஸா............................

(4-வது சரணத்தை 2-வது அநுபல்லவி போல் பாடவும்)

இசையமைப்பாளர் :

D. B. இராமசந்திரன்

திருவண்ணுமலை இலக்கியம்

அட்டவணை

1. வடமொழிக் கேனுேபநிஷத்—இது பற்றி, இம்மலரில் தனியே ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளோம்.

2. திருமந்திரம். திருமூலர் செய்தது. இதனுள் இரண்டாம் தந்திரத்தில் 9 பாடல்கள் (372—380) அடிமுடிதேடல் என்ற தலைப்பு உடையன. முதற்பாடல் அண்ணுமலை வரலாற்றைக் கூறுகிறது.

3. தேவாரம்—சம்பந்தர், பண் நட்டபாடை:11 பாடல்கள்.

4. தேவாரம்—அப்பர் திருநேரிசை 10 பாடல்கள்.
தேவாரம்—அப்பர் திருக்குறுந்தொகை, வட்டனைமதி 10 பாடல்கள்.
தேவாரம்—அப்பர், பட்டி ஏறுகந்தேறி 10 பாடல்கள்.

5. திருவாசகம்—மாணிக்கவாசகர் திரு எம்பாவை.
திரு அம்மானை ; எம்பாவை 18—ஆம் பாடல், அம்மானை 10—ஆம்பாடல், போற்றித் திரு அகவல் அடி 150 ;
அண்ணுமலை எம் அண்ணு போற்றி.

6. பதினேராந் திருமுறை 11.15, 22.14, 23.42, 29.63
(நான்கு பாடல்கள்; பாடியவர்: நக்கீரர், கபிலர், பரணர், பட்டினத்தார்.)

7. அருணகிரிநாதர்—திருப்புகழ் 87 பாடல்கள்
15-ஆம் நூற்றுண்டுத் தொடக்கம் (பார்க்க: சமாஜப் பதிப்பு).

8. அருணகிரி புராணம்: காழி மறைஞான தேசிகர் சருக்கம் 8; பாடல் 613. காலம்: 16-ஆம் நூற்றுண்டு.

9. அருணுசல புராணம்—சைவ எல்லப்ப நாவலர் 8 சருக்கம் 550 பாடல்.

10. பெரிய புராணம் 27.311—314, 34.969—972 (எட்டுப் பாடல்கள்)

11. கந்த புராணம்—இரண்டு பாடல்.
திருவிளையாடற் புராணம்: பரஞ்சோதி முனிவர் ; ஒரு பாடல் (அருச்சனைப் படலம் 15).

12. திரு அருணை அந்தாதி—சைவ எல்லப்ப நாவலர், கட்டளைக் கலித்துறை 102 பாடல்.

13. திரு அருணைக் கலம்பகம்—சைவ எல்லப்ப நாவலர் 102 பாடல்.

14. அருணகிரி அந்தாதி—குகை நமசிவாய சுவாமிகள் 101 வெண்பா.

15. அருணைத் தனி வெண்பா மாலை: குகை நமசிவாய சுவாமிகள் 35 வெண்பா.

16. அண்ணுமலை வெண்பா. குரு நமசிவாய சுவாமிகள் 103 வெண்பா.

17. திரு அண்ணுமலையார் வண்ணம்—சேறை கவிராச பிள்ளை (கவிராச சிங்கம்)

18. திரு அண்ணுமலைக் கோவை. சைவ எல்லப்ப நாவலர். நூல் கிடைக்கவில்லை : பதினுரும் நூற்றுண்டு.

19. திரு அண்ணுமலைக் கோவை—கமலை ஞானப்பிரகாசர். நூல் கிடைக்கவில்லை: 16-ஆம் நூற்றுண்டு.

20. சோண சைல மாலை—சிவப்பிரகாச சுவாமிகள். 102 கட்டளைக் கலித் துறை. 17-ஆம் நூற்றுண்டு.

21. சாரப் பிரபந்தம்—தபோமயம் நமசிவாய சுவாமிகள். 16 விருத்தம். 19-ஆம் நூற்றுண்டு.

22. அண்ணுமலைச் சதகம்—திருச் சிற்றம்பல நாவலர் 105 பாடல்கள்.

23. திருவண்ணுமலைத் திருவருட் பதிகங்கள். இராமலிங்க சுவாமிகள். பத்து விருத்தம்.

24. அருணுசலேசர் வருகைப் பதிகம்—பிரதாபம் சரவணப் பெருமாள் பிள்ளை. 11 விருத்தம்.

25. அருணுசலேசர் பதிகம்—பிரதாபம் சரவணப் பெருமாள் பிள்ளை. 12 விருத்தம்.

26. உண்ணுமுலை அம்மன் வருகைப் பதிகம்—பிரதாபம் சரவணப் பெருமாள் பிள்ளை. 13 விருத்தம்.

27. உண்ணுமுலை அம்மன் பதிகம்—பிரதாபம் சரவணப் பெருமாள் பிள்ளை. 11 விருத்தம்.

28. உண்ணுமுலை அம்மன் சதகம்—சின்னக்கவுண்டர். 102 விருத்தம்.

29. அருணுசல சதகம்—காஞ்சிபுரம் சபாபதி முதலியார். 101 விருத்தம்.

30. அருணுசலேசுவரர் பதிகம்—புரிசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார்.

31. அருணுசலேசர் விருத்தம்.

32. அருணுசலேசர் நவகாரிகை மாலை—கச்சிக் கச்சாலை தேசிகர். 10 கட்டளைக் கலித்துறை.

33. அருணுசல அட்சரமாலை—ரமண மஹரிஷி. 117 தாழிசை.

34. கார்த்திகைத் தீப வெண்பா. சோணுசல பாரதி (சோணுசல முதலியார்). 102 வெண்பா.

35. சோணுசல வெண்பா. சோணுசலபாரதி

36. சோணுசல பதிகம். சோணுசலபாரதி

37. திருவருணைக் கலி வெண்பா—சோணுசல பாரதி. 31 கண்ணி.

38. திரு அண்ணுமலைப் பதிகங்கள். குருகூர் ஞான சித்த சுவாமி. கலிப்பா முதலிய 40 பாடல்கள்.

39. அண்ணுமலை பஞ்சரத்னம். ஆசிரியர் தெரியவில்லை. 5 பாடல்கள்.

40. அண்ணுமலை நான்மணிமாலை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 42 பாடல்கள்.

41. உண்ணுமுலையம்மை பிள்ளைத்தமிழ் : சோணுசல முதலியார்.

42. அண்ணுமலையார் வண்ணம். யாழ்ப்பாணம் தியாகராசபிள்ளை.

43. அருணுசல மகாத்மிய வசனம்.

44. அருணுசல அக்ஷர மணிமாலை

45. அட்சரப் பாமாலை.

46. ஸ்ரீ அருணுசலேசுவரர் உயிர் வருக்கம் படைத்தற் பாமாலை.

47. அருணுசல நவமணிமாலை

48. அருணுசல பதிகம்

49. அருணுசல அஷ்டகம்.

50. அருணுசல பஞ்சரத்னம்.

51. அருணைச் சிலேடை வெண்பாமாலை. வீர. லெ. சிந்நயச்செட்டியார்.

52. அருணுசல புராணக் கீர்த்தனைகள்.

53. வல்லாள மஹாராஜன் கும்மி

54. வல்லாள மஹாராஜன் நாடகம்

55. ஸ்ரீ அருணுசல ஸ்தோத்திரங்கள்: சமஸ்கிருதத்தில் (1) ஸ்ரீ ஆதி சங்கரர் அருளிய ஸ்ரீ அருணுசல அஷ்டகம், (2) ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அருளிய ஸ்ரீ அபீத குசாம்பாள் ஜ்வர நிவாரணுஷ்டகம் ஆகிய இரு ஸ்தோத்திரங்களையும் சமஸ்கிருத சுலோகங்கள் தமிழ் விளக்கம் ஆகியவற்றுடன் அண்ணுமலையார் கோயில் தலைமை அர்ச்சகர் பட்டம் திரு இராமலிங்க சிவாசாரியார் அவர்களும் சென்னை காளிகாம்பாள் கோயில் சாம்பமூர்த்தி சிவாசாரியார் அவர்களும் பதிப்பித்து 4–4–1976 அன்று நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது கையடக்கச் சிறுநூலாக வெளியிட்டிருக்கிறுர்கள்.

நூற்றுண்டு வாரியாகத் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதிவரும் திரு. மு. அருணுசலம் அவர்களும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் 'தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியத்தின்' பதிப்பாசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களும் தெரிவித்த விவரங்களைக் கொண்டும் அண்ணுமலையார் கோயில் தல விளக்கம் என்னும் நூலில் கொடுக்கப்பெற்ற பட்டியலைக் கொண்டும், இந்த அட்டவணை தொகுக்கப் பெற்றிருக்கிறது.

கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா

ஆல் இந்தியா ரேடியோ—சென்னை

தேதி : 15-3-76 இந்திய நேரம் : மாலை 5-15 மணி

தென் கிழக்கு ஆசிய நிகழ்ச்சி

'திருவண்ணாமலை'

(வரலாற்றுச் சித்திரம்)

எழுதியவர் : "சோமலெ" அவர்கள்

(கோயில் மணி ஓசை)

பல குரல்கள் அண்ணாமலையாருக்கு அரோகரா!

'ஏறுமயில் ஏறி' என்ற அருணகிரிநாதர் திருப்புகழ்

மகள் அப்பா! நல்ல நேரத்தில் வந்திருக்கிறோம். கோயில் மணியோசை கேட்கிறது. இந்தப் பாட்டு யார் இயற்றியது அப்பா...

அப்பா இது திருப்புகழ்ப் பாடல். இதை இயற்றியவர் அருணகிரிநாதர். அருணகிரிநாதருக்கும் திருவண்ணாமலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவர் இந்த ஊரில் தான் பிறந்தவர். அவருக்கு இந்தக் கோயிலில் தனிச் சந்நிதி இருக்கிறது.

மகன் ஏனப்பா! இவருக்குத்தானே, சமீபத்தில் ஆறுவது நூற்றாண்டு விழாக் கொண்டாடினார்கள். தபால்தலை கூட வெளியிட்டார்கள் இல்லையா?

அப்பா சரியாகச் சொன்னாய். சென்ற ஆண்டுதான் அவருக்கு ஆறுவது நூற்றாண்டு விழாக் கொண்டாடினோம். இந்தத் திருவண்ணாமலையில் கோயிலிலுள்ள கோபுரத்து இளையனார் என்னும் முருகப் பெருமானே இவருக்கு 'முத்தைத்தரு' என்று அடி எடுத்துக் கொடுக்க இவர் 16 ஆயிரம் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியிருக்கிறார். அவற்றுள், இன்று நிலைத்துள்ளது ஏறக்குறைய 1,400 திருப்புகழ்ப் பாடல்கள் தான்.

அம்மா 1,400 திருப்புகழ்ப் பாடல்களும் நமக்குச் சரியாகத் தெரியா விட்டாலும் தெரிந்த பாடல்கள் மிகவும் சிறப்பாக இருக்கின்றன. அவற்றை மனத்தில் பதியும்படி படித்து அவற்றின்படி நடந்தால், நாம் வாழ்க்கையில் உயர முடியும்.

மகன், மகள் படிக்கலாம் அம்மா! ஆனால் வாயில் நுழைவது கஷ்டமாக இருக்கிறதே. வார்த்தைகள் சிக்கலாக இருக்கின்றன.

அப்பா அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்கள் எல்லாம் சந்தங்களின் அடிப்படையில் உருவாகியவை. வண்ணப் பாடல்கள் என்னும் சந்தப் பாடல்கள் கலிப்பாவின் ஒரு முடுகியலாகும். அந்தப் பாடல்களில் ஆங்காங்கு தாளச் சொற்கட்டுக்களுடன் கையாண்டிருக்கிறார். பக்கவாத்தியத்துடன் இதை இசைக்கும் பொழுது சிறப்பாக இருக்கும். முதலில் சிரமமாக இருந்தாலும் பழக்கப்படுத்திக் கொண்டு வந்து விட்டால் 'ல' கரம் 'ழ' கரம் முதலியவை எளிதாகிவிடும். இசை வளரும்.

மகன், மகள் நாங்கள் முயன்று படிக்கிறோம் அப்பா.

அம்மா அருணகிரிநாதர், திருப்புகழ்மட்டும் தான் பாடியிருக்கிருரா?

அப்பா இல்லே, திருப்புகழ் தவிர, கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் முதலியவைகளும் மற்றும் சில பாடல்களும் பாடியிருக்கிருர்.

மகள் திருவண்ணுமலேயினுடைய சிறப்பு என்ன?

அப்பா பிறந்தால் முத்தி தரக்கூடியது திருவாரூர்.
இறந்தால் முத்தி தரக்கூடியது காசி.
தரிசித்தால் முத்தி தரக்கூடியது சிதம்பரம்.
நினைத்தாலே முத்தி தரக்கூடியது திருவண்ணுமலே.

மகள் ஏனப்பா? எங்கேயோ இருக்கும் காசியையும், இங்கே இருக்கும் திருவண்ணு மலேயையும் சேர்த்துச் சொல்லிவிட்டீர்களே.

அப்பா நம்முடைய பண்பாடே அதுதான். தேசபக்தியையும் தெய்வ பக்தியையும் சேர்த்தே வளர்த்து வந்திருக்கிருேம்.

அம்மா அதற்காகத்தானே தீர்த்தயாத்திரையெல்லாம் காசியில் ஆரம்பித்து இராமேச் சுரத்தில் முடிகிறது. கன்னியாகுமரியில் ஆரம்பித்துப் பத்ரிநாத், கேதாரநாத்தில் முடிகிறது.

குழந்தைகளுக்கு, இந்தத் திருவண்ணுமலேயின் புராணக் கதைகளேச் சொல்லுங்களே.

அப்பா திருவண்ணுமலேயைப் பற்றி ஏற்பட்டது அருணுசல புராணம். அதிலிருந்து ஒரு முக்கியமான நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன்.

முன்பு ஒரு முறை பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் இடையே தங்களுக்குள் யார் பெரியவர்கள் என்று சண்டை மூண்டது. தேவர்களும் மனிதர்களும் கண்டு நடுங்கும்படி இருவரும் கடுமையான போர் புரிந்தனர். இருவருடைய அகந்தை யையும் அடக்க வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார் பரமசிவன். ஒரு பிரம்மாண்டமான அக்கினி மலேயாக உருவெடுத்தார். இம்மலேயினுடைய முடியை யும் அடியையும் யார் முதலில் கண்டு பிடிக்கிருர்களோ அவரே பெரியவர் என்று பிரம்மாவும் விஷ்ணுவும் தங்களுக்குள் ஒரு பந்தயம் வைத்துக் கொண்டார்கள்.

அம்மா அதன்படி பிரம்மா அன்னப் பறவையாகவும், விஷ்ணு வராகமாகவும் உருவெடுத்துக் கொண்டு அம்மலேயின் அடி-முடியைத் தேடிப் புறப்பட்டனர். பிரம்மா எத்தனே உயரம் மேலே பறந்தும் முடியைக் கண்டுபிடிக்க முடியவில்லே. விஷ்ணு எவ்வளவு கீழே தோண்டிக் கொண்டு போயும் அடியைக் கண்டு பிடிக்க முடியவில்லே. இருவரும் பொறுமை இழந்தார்கள். தோல்வியை ஒப்புக் கொண்டு விஷ்ணு திரும்பி விட்டார். ஆனுல் பிரம்மா உயரத்திலிருந்து கீழே வந்து கொண்டிருந்த ஒரு தாழம்பூவைப் பார்த்து, தாம் சிவனின் முடியைப் பார்த்து விட்டு வந்ததாக ஒரு பொய்யைச் சொல்லும்படி அதனிடம் வேண்டிக் கொண்டார். தாழம்பூவும் அவ்வாறே சொல்லியது.

அப்பா பொய்ச் சாட்சி கூறிய தாழம்பூ, தம்முடைய பூசைக்கு உதவக்கூடாது என்று சாபம் இட்டார், சிவபெருமான். ஏமாற்ற நினைத்த பிரம்மாவுக்குப் பூலோகத்தில் தனிக் கோயிலோ, பூசையோ இருக்கக் கூடாது என்றும் சிவபெருமான் ஆணே. பிரம்மா, விஷ்ணு இருவருக்கும் அகந்தை அடங்கியது, புத்தி வந்தது. அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, சிவபெருமான் தனது அக்கினி வடிவத்தை மாற்றி அங்கு ஒரு மலேயாக நின்ருர். மலேக்குக் கிழக்குப் பக்கத்தில் லிங்க வடிவத்தில் எழுந்தரு ளினர். அந்த நிகழ்ச்சியை நினேவு படுத்துவதற்குத்தான் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தன்று மலேயின் முகட்டில் சோதியாகக் காட்சி தருகிருர்.

அம்மா அதுதான் திருவண்ணுமலைக்கே பெருமை தருகிற திருக்கார்த்திகைப் பெருவிழா. நான் திருக்கார்த்திகை விழாவைப் பார்த்து 15 ஆண்டுகள் இருக்கும்.

மகள் தீபத்தன்று மலை உச்சியில் தீபம் எரிகிறதே. இதை எப்படி ஏற்றுகிருர்கள்?

அப்பா இந்த மலையின் உயரம் கடல் மட்டத்திலிருந்து 2,600 அடி. மலை மீது பெரிய தொரு செப்புக் கொப்பரையில் நெய், கற்பூரம், துணி முதலியவற்றைப் பெய்து, மாலை 5 மணி அளவில் தீபத்தை ஏற்றுவார்கள். இங்கு வரும் லட்சக்கணக்கான மக்கள் ஆண்டவனுக்குக் கற்பூரம் செலுத்துவர். இந்தத் தீபத்தின் ஒளி சுற்றிலும் உள்ள பல ஊர்களிலும் சில நாட்களுக்குத் தொடர்ந்து தெரியும்.

மகன் ''குன்றிலிட்ட தீபம், மலைமேல் விளக்கு'' இந்தப் பழமொழிகளெல்லாம் திருவண்ணுமலையில் தான் தோன்றினவோ?

மகள் இந்தக் கார்த்திகைத் திருவிழா எத்தனை நாளைக்கு நடக்கும்?

அம்மா இந்தத் திருவிழா பத்து நாட்களுக்கு நடைபெறும். கொடியேற்றத்துக்கு முன்ன தாக மூன்று நாட்கள், திருவண்ணுமலைக்குரிய கிராம தேவதைக் கோயிலாகிய துர்க்கைஅம்மன் கோயிலில் கொண்டாடப்படும். முதல்நாள் துர்க்கைக்கும், மறுநாள் பிடாரிக்கும், மூன்றும் நாள் விநாயகருக்கும் விழா எடுக்கப்படுகிறது. நான்காம் நாள்தான் அண்ணுமலையார் கோயிலில் கார்த்திகைத் திருவிழாவின் முதல்நாளாகத் தொடங்கும். அதாவது பஞ்சமி அன்று தான் கொடியேற்றம். அது முதல் பத்து நாள் பவுர்ணமி வரை திருவிழா. கொடியேற்றத்திலிருந்தே நாளுக்கு நாள் கூட்டம் அதிகரிக்கும். ஐந்தாம் திருநாள் முதல் லட்சக் கணக்கில் ஜனங்கள் கூடுவார்கள். ஒவ்வொரு நாளும் வாண வேடிக்கையும் வகை வகையான அழகான பெரிய வாகனங் களில் இறையுருவங்களில் திருவீதிக் காட்சியும் கண்களுக்கு விருந்து. நகைகள் தான் எத்தனை லட்சம் ரூபாய் மதிப்பு, எவ்வளவு அழகு.

மகள் இக்கோயிலோடு தொடர்பு கொண்ட அரச வம்சங்கள் . . . . . .?

அப்பா பல்லவர்கள், பாண்டியர்கள், ஹொய்சாள மன்னர்கள், விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர், தஞ்சாவூரை ஆண்ட நாயக்க மன்னர்கள், தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்த எத்தனையோ ராஜாக்கள், சிற்றரசர்கள், இப்போது சில ஆண்டுகளாக நகரத்தார் பெருமக்கள் ஆகியோர் இந்தக் கோயிலின் வளர்ச்சிக்கு உதவியிருக்கிருர்கள்.


மகன் அக்கினி ஸ்தலம் என்பதற்கு ஆதாரங்கள் உண்டா?

அப்பா ஆடிப் பூரத்தில் உண்ணுமுலை அம்மன் சந்நிதியில் பராசக்தி முன்பாக தீ மிதிக்கும் பழக்கம் உண்டு. அன்று இறைவனும் இறைவியும் திருவீதி உலாவும் வருவார்கள். தமிழ் நாட்டில் வேறு எந்தப் பெரிய கோயிலிலும், கோயிலுக்குள்ளேயே தீ மிதிப்பது கிடையாது. சித்திரை மாதத்தில் வசந்த உற்சவம் நடைபெறுகிறது. பத்தாம் நாளில் அதாவது பவுர்ணமி யன்று மூன்றும் பிரகாரத்தில் மன்மத தகனம் உண்டு.

மகன் இந்தக் கோயில், மலையின் மேல் இருக்கிறதா?

அம்மா இல்லை. மலைக்கு அருகில் கோயில் தனியாக இருக்கிறது. தீபம் மட்டும் மலையின் உச்சியில் ஏற்றுவார்கள். மலையில் ஏராளமான குகைகள் இருக்கின்றன. மலையின் உயரம் 2665 அடி, மலை வலம் வரும் சாலையின் நீளம்: $8\frac{1}{4}$ மைல்.

மகள் இந்த மலையை வலம் வரும் சாலையில் 13ம் நூற்றுண்டிலேயே ஒரு மைல் கல் இருந்த தாகச் சில வாரங்களுக்கு முன் பத்திரிகையில் செய்தி வந்ததே.



1856-இல் திருவண்ணாமலை (ஆதாரம் : அருணாசல புராணக் கீர்த்தனைகள்)

அப்பா	இதையெல்லாம் நீ தெரிந்து வைத்திருப்பது அறிந்து மகிழ்ச்சி. இந்த மலேக்கு அருணுசலம், சோணுசலம், கௌரி நகரம், தோஜோ நகரம், முக்தி நகரம், ஞான நகரம் என்றெல்லாம் எத்தனேயோ பெயர்கள் உண்டு.

மகள்	இந்த மலேயை வலம் வருவதன் தத்துவம் என்ன?

அம்மா	இந்த அண்ணுமலேயை வலம் வந்தவர்கள், கயிலாயத்துக்குள் நுழையும் போது சந்திரன் வெள்ளேக் குடை ஏற்றுவான். சூரியன் விளக்கேற்றி மரியாதை செய்வான். இந்திரனும் குபேரனும் மலர்களேத் தூவி வரவேற்பார்கள்.

இந்த மலேவலம் வருவதற்குக் குறிப்பிட்ட முறைகள், நியதிகள் உண்டு.

அப்பா	குளித்துவிட்டு, திருநீறு பூசிச் செருப்பு இன்றி, மெதுவாக நடந்து, பக்திப் பாடல் களேப் படித்துக் கொண்டும் இடையிடையே நமசிவாய என்று சொல்லிக் கொண்டும் மலேவலம் வரவேண்டும். இதற்குச் சிறப்பான மாதங்கள், ஐப்பசி, கார்த்திகை, மார்கழி.

மகன்	இந்தக் கோயிலின் அமைப்புப் பற்றி ஒன்றும் சொல்லவில்லேயே?

அம்மா	அதைப் பற்றித் தெரிந்து கொள்ளுமுன் இங்கு வாழ்ந்து புகழ்பெற்ற ஞானியர்கள் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். இப் பதியால் பதவி பெற்ற பாவலர் பலர். நாவலர் பலர். துறவியர் பலர். தூய திருவடிகளின் சுவடு பதிந்த இத் திருத்தளி யில் அடியார் பெருமையையே தங்களுக்கு அணிகலனுகக் கொண்டு அண்ணுமலே அப்பரும் உண்ணுமுலே அம்மையும் மகிழ்கின்றனர்.

அண்ணுமலேயாருக்கு அரோகரா என்று சொல்லி நாம் மகிழும் போது, அண்ணுமலே யாரை மட்டும் வாழ்த்தவில்லே. இந்தப் பெருந் தலத்துடன் தொடர்பு கொண்ட ஞானச் செல்வர்களேயெல்லாம் வாழ்த்துகிருேம். வணங்குகிருேம். அவர்களே வாழ்த்துவது நாம் வாழ்வதற்கே.

மகள்	ரமண மகரிஷிக்கு ஸ்டாம்பு போட்டார்களே அவர் திருவண்ணுமலே தானே.

அப்பா	ஸ்டாம்பு போட்டால்தான் உங்களுக்கு இந்தக் காலத்தில் தெரியும். பகவான் ரமண மகரிஷி சில ஆண்டுகளுக்கு முன் தான் சமாதி நிலே அடைந்தார். அவர் சென்ற தலே முறையில் திருச்சுழியிலிருந்து திருவண்ணுமலேக்கு வந்து ஞானம் பெற்று, அண்ணுமலே தந்த வான் சுடராய் விளங்கி உலகெங்கும் தனக்குச் சீடர்களே உண்டாக்கிக் கொண்டார்.

மகன்	அவருடைய ஞாபகமாக அங்கே என்ன இருக்கிறது?

அப்பா	அவர் ஞான ஒளி பெற்ற பாதாள லிங்கக் குகை, கோயிலுக்குள் இருக்கிறது.

அம்மா	கும்பாபிஷேகத்துக்குப் போகும்போது குழந்தைகளே அழைத்துப் போகலாமே.

மகன்	கும்பாபிஷேகமா? எப்பொழுது அப்பா?

அப்பா	40 லட்சம் ரூபாய் செலவில் இந்தக் கோயிலே இப்போது புதுப்பிக்கும் வேலே முடியும் நிலேயில் இருக்கிறது. பங்குனி மாதம் 22-ஆம் தேதி, ஏப்ரல் 4-ஆம் தேதி கும்பாபிஷேகம்.

மகள்	எங்கள் இரண்டு பேருக்குமே தேர்வுகளெல்லாம் முடிந்துவிடும். விடுமுறைதான்! உற்சாகமாக வருகிருேம்!! அப்பா.

அப்பா சினிமாவுக்குப் போவதுபோல் வராமல், பக்தி சிரத்தையோடு வாருங்கள், கும்பாபிஷேகத்தின்போது பெரும் கூட்டமாக இருக்கும். இப்போது ஒருமுறை போய் ஆறுதலாகக் கோயிலைப் பார்த்துவிட்டு வருவோம்.

மகன் திருப்பணிக்குச் செலவு 40 லட்சம் ஆகுமா?

அப்பா திருப்பணி, திருப்பணி என்று நாம் சொல்லுவதே சரியில்லை. கருங்கல் கொண்டு வந்து, புதிதாக ஒரு கோயிலையோ அல்லது ஏற்கெனவே இருக்கிற கோயிலில் புதிதாக ஒரு மண்டபத்தையோ கட்டினால் அதுதான் திருப்பணி. எத்தனையோ நூற்றாண்டுகளாக சேர,. சோழ, பாண்டிய மன்னர்களும் மற்றும் ஜமீன்தார்களும், நகரத்தார்களும் பெரிய அளவில் திருப்பணிகள் செய்து விட்டார்கள். இப்பொழுது நாம் திருப்பணி என்று சொல்லுவதெல்லாம் இருக்கிற கோயிலைச் சுத்தம் செய்து, பழுதுபார்த்து வெள்ளை அடிக்க வேண்டிய இடங்களில் வெள்ளை அடித்து மதில் சுவர்கள், கோபுரங்கள், விமானங்களையெல்லாம் அவற்றுக்கு ஏற்றவண்ணங்களில் பூசுவதுதான்.

மகன் திருவண்ணாமலைக் கோயிலில் எத்தனை கோபுரங்கள் இருக்கின்றன?

அம்மா இந்தக் கோயிலில் மொத்தம் 9 கோபுரங்கள் உண்டு. அதில் முக்கியமானவை; ராஜ கோபுரம், கிளிக் கோபுரம், பேய்க்கோபுரம் இந்த மூன்றையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நான்கு திக்குகளிலும் மதில் சுவர்களின் ஊடே நான்கு பெரிய கோபுரங்கள் இருக்கின்றன.

அப்பா ராஜகோபுரம் என்பது, இந்த ஒன்பது கோபுரங்களில் பெரியது. அது தான் பிரதானமான கிழக்கு வாயில். இதைவிடப் பெரிய கோயில் கோபுரம் எங்கேயுமே கிடையாது. 11 மாடம்; 217 அடி உயரம்; தரை மட்டத்தில் இது 135 அடி நீளம்; 98 அடி அகலம். இந்தக் கோபுரத்தை புதுப்பிக்க ஐந்து லட்சம் ஆகியிருக்கிறது. இந்தக் கோபுரத்தையே இறைவனாகக் கருதுகின்ற பழக்கம் உண்டு. ஆகையால் திருவிழாக்களுக்கு உத்சவ விக்கிரகங்களை எடுத்துச் செல்லும் போது, இந்தக் கோபுரத்தின் வழியாகக் கொண்டு போவது இல்லை.

மகள் பிறகு, எப்படி சுவாமி அம்பாள் எல்லாம் திருவீதி உலாவுக்குப் போகும்?

அம்மா அதற்காக, இந்தக் கோபுரத்திற்குப் பக்கத்தில் திட்டி வாசல் என்று தனியாக ஒரு வாயில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அப்பா இந்தக் கோபுரத்து அடியில் ஒரு முக்கியமான விநாயகர் இருக்கிறது. அந்த கோபுர கணபதியைக் கும்பிட்டுவிட்டு உள்ளே போவோம். முதலில் நாம் வழிபடவேண்டியது கம்பத்து இளையனார் கோயில்.

அம்மா பதினாறு கால்கள் உள்ள வளைகாப்பு மண்டபம், அந்தப் பதினாறு தூண்களில் ஒரு தூணிலே முருகன் எழுந்தருளியிருக்கிறார். அந்தத் தூணைச் சந்நிதியாக வைத்து ஒரு கோயில் கட்டியிருக்கிறார்கள். அதனால் அதற்குக் கம்பத்து இளையனார் என்று பெயர். அருணகிரிநாதருடைய பிரார்த்தனைக்கு இரங்கி, முருகப் பெருமான் அவருக்கு ஒரு கம்பத்தில் காட்சி கொடுத்தார்.

மகன் இது என்ன குளம்?

அப்பா இது தான் சிவகங்கைக் குளம். முக்கியமான தீர்த்தம். அடுத்த பிரகாரத்தில் இன்னொரு தீர்த்தம் இருக்கு. அதற்குப் பெயர் பிரம்ம தீர்த்தம். அது குடி தண்ணீருக்கு ஏற்பட்டது.

மகள் அப்படியானல் அதிலே குளிக்கக் கூடாதா?

அப்பா Every Rule has an exception. சந்திர கிரகணத்து அன்றும், சூரிய கிரகணத்து அன்றும் சுவாமி தீர்த்தவாரிக்கு வரும்பொழுது பக்தர்கள் பிரம்ம தீர்த்தத்தில் குளிக்கலாம்.

அம்மா இதோ தெரிகிறது நந்தி. அந்த நந்திக்கு எதிரில் இருப்பது வல்லாள மகாராஜா கோபுரம். அதற்குப் பக்கத்தில் கிளிக் கோபுரம் இருக்கிறது.

இந்தக் கோபுரத்தின் முதல் நிலையில் கிளியின் உருவம் இருக்கிறது. அருணகிரி நாதர், கிளி வடிவம் தாங்கி, பாரிஜாதமலர் கொண்டு வந்த காலத்தில் தாம் விட்டுச் சென்ற தமது திருமேனியைக் காணுது, கிளி உருவமாகவேயிருந்து அநுபூதி பாடி யருளினுர் என்பது வரலாறு.

அப்பா கிளிக்கோபுரத்திற்கு வெளிப்புறம் நான்காம் பிரகாரம். உட்புறம் மூன்றும் பிரகாரம். உட்புறத்தில் 16 கால் மண்டபம் இருக்கிறது. கார்த்திகைத் தீபத் திருவிழா அன்று மாலையில் பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளி மலையை நோக்கி நிற்க, ஏக காலத்தில் தீபதரிசனக் காட்சி நடக்கும்.

மகள் வல்லாள மகாராஜாவைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே அப்பா.

அப்பா வல்லாள மகாராஜா 500 வருஷங்களுக்கு முன்பு இருந்தார். திருவண்ணுமலையே அவருடைய தலை நகரம். அவருக்குக் குழந்தைப் பேறு இல்லை. அவருடைய பக்தியை மெச்சி, அண்ணுமலையாரே அவருக்குக் குழந்தையாகக் காட்சி கொடுத்து அவர் இறந்த பிறகு ஈமக் கிரிகைகளையும் செய்தார். ஆண்டுதோறும் மாசி மாதம் மக நட்சத்திரத்தன்று அந்த உற்சவம் நடைபெறுகிறது.

அம்மா இந்த இடத்திலேயே நாம் இன்னும் பார்க்க வேண்டியது, ஆயிரக்கால் மண்டபம். அதில் ஒரு பகுதியில் தான் பாதாள லிங்கேஸ்வரர் சந்நிதியில் ரமண மகரிஷி தவம் இருந்தார். கோபுரத்து இளையனுர் கோயிலுக்கு முன்னுலே தான் ஆண்டு தோறும் ஆகஸ்டு 15ஆம் நாளில் அருணகிரிநாதர் திருவிழா நடைபெறுகிறது.

மகள் கோபுரத்து இளையனுருக்கும், கம்பத்து இளையனுருக்கும் என்ன வித்தியாசம்?

அப்பா கோபுரத்து இளையனுர், வள்ளி—தெய்வானை சமேதராய் இருக்கிறுர். இந்தக் கோயிலுக்குள்ளேயே அருணகிரிநாதருக்கு மூலஸ்தானமும் இருக்கிறது. அடுத்தாற் போல் நாம் பார்க்க வேண்டியது புரவி மண்டபம். இந்த மண்டபத்திற்குள்ளே தான் வாகனங்கள் எல்லாம் பாதுகாப்பாக இருக்கின்றன. தமிழ் நாட்டிலேயே வேறு எந்தக் கோயிலிலும் அண்ணுமலையார் கோயிலில் இருப்பதைப் போல அழகான கம்பீரமான, விலைமதிக்க முடியாத வாகனங்கள் இல்லை. நகைகள் விலைமதிக்க முடியாத அணிகலன்கள் ஆகியவற்றிலும் அண்ணுமலையார் கோயிலுக்கு ஈடு இணை யாக எதையும் சொல்ல முடியாது.

மகள் இந்தப் பக்கம் ஒரு கோபுரம் தெரிகிறது. அந்தப் பக்கம் ஒரு கோபுரம் தெரிகிறது. இதில் எது பேய்க் கோபுரம்?

அம்மா நாம் கிழக்கேயிருந்து மேற்கு நோக்கி கர்ப்பக்கிரக்கத்திற்குப் போய்க் கொண்டிருக்கி றேம். இந்த இடத்தில் தெரிவது ஒன்று வடக்குக் கோபுரம். மற்றென்று தெற்குக் கோபுரம். வடக்கே இருப்பது அம்மணி அம்மாள் கோபுரம். தெற்கே இருப்பது திருமஞ்சனக் கோபுரம். பேய்க் கோபுரம், கர்ப்பக்கிரத்திற்குப் பின்னுல் மதிற் சுவர் மீது இருக்கிறது.

மகன் அப்படியென்றுல், அந்தக் கோபுரத்தில் பேய் இருக்கிறதென்று சொல்லுங்கள்.

அப்பா பேயும் இல்லை. பிசாசும் இல்லை. மேற்குக் கோபுரம் என்பதை, பழம் பெரும் தமிழ்ப் புலவர்கள் இலக்கண இலக்கியமாக இரத்தினச் சுருக்கமாக ''மேக் கோபுரம்'' என்று எழுதி வைத்தார்கள். எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான். படிச்சவன் பாட்டைக் கெடுத்தான் என்பது போல, மேக்கோபுரம், பேய்க் கோபுரமாகிவிட்டது.

அம்மா கிளிக் கோபுரத்தைத் தாண்டி இப்போது நாம் வந்திருக்கிற இடம் காட்சி மண்டபம்.

அம்மா இதோ கொடிமரம் தெரிகிறது. விழுந்து கும்பிடுவோம். கொடி மரத்திற்குப் பக்கத்தில் இருப்பது பலிபீடம். நாம் மனத்தைக் கட்டுப்படுத்தி ஆண்டவனை மட்டுமே நினைத்து அண்ணுமலையார் சந்நிதிக்குள்ளும், உண்ணுமுலை அம்மன் சந்நிதிக்குள்ளும் செல்ல வேண்டும். இந்த இரண்டுக்கும் சேர்த்து கர்ப்பக்கிரகம் அல்லது கருவறை என்று பெயர். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இவை மட்டும் தான் கருங்கல்லால் அமைக்கப்பெற்றிருந்தன. மற்ற பகுதிகளெல்லாம் செங்கல்லால் கட்டப்பட்டிருந்தன. மண்சுவரே மதில் சுவராய் இருந்தது.

அப்பா சம்பந்த விநாயகர் பெரிய திரு உருவம். இங்கே வணங்கிவிட்டு, கர்ப்பகிரகத்துக்குள் போவோம். இந்த அண்ணுமலையாரைப் பற்றி நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது. இவர் சுயம்புலிங்கம். மற்ற இடங்களில் இருக்கிற சிவன் மாதிரி இல்லை. இவர்...

மகள் நெருப்பு, அக்கினி ஸ்தலம் என்று சொல்லியிருக்கிறீர்களே.

அப்பா எவ்வளவு அருமையான வேலைப்பாடு பார்த்தீர்களா? உற்றுக் கவனிக்க வேண்டும்.

மகள் அடிக்கு ஆயிரத்து எட்டு சிவலிங்கங்கள் இந்தத் திருவண்ணுமலையில் மறைந்திருப்பதாகச் சொல்லுவார்களே.

அம்மா அப்படித்தான் ஐதீகம். இப்பொழுது உண்ணுமுலை அம்மன் கோயிலுக்குப் போவோம். பிற எல்லாக் கோயில்களிலுமே அம்மன், சுவாமிக்கு வலது புறத்தில் இருக்கும். திருவண்ணுமலையில் அம்மன் கோயில் இடது பக்கத்தில் இருக்கிறது. சிவபெருமான் இடப்பாகத்தை கொடுத்த நிகழ்ச்சியே திருவண்ணுமலையில் தான் நடந்தது.

மகள் அதற்கு ஆதாரம்?

அப்பா இதோ, மலையில் தெரிகிறதே பவளக்குன்று அங்கே அர்த்தநாரீசுவரர் மூலஸ்தானம் இருக்கிறது.

அம்மா உண்ணுமுலை அம்மன் சந்நிதியின் முன்னுலே அஷ்ட லெட்சுமிகள் மண்டபத்தைப் பாருங்கள். இனி கொடிக்கம்பத்துக்கு முன்னுலே போய்ப் பிறகு திருக்கல்யாண மண்டபத்தைப் பார்த்துவிட்டுப் பவளக்குன்றுக்குப் போவோம்.

இந்தக் கல்யாண மண்டபம் மிக அழகாக அமைந்தது. இதையும் இப்போது பெரும் செலவில் புதுப்பித்துக் கொண்டிருக்கிருர்கள். ஆடி மாதத்தில் திருக் கல்யாண விழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது.

பலகுரல்கள் : அண்ணுமலையார்க்கு அரோகரா!

[சென்னை வானெலி நிலையத்தாரின் இசைவுடன் வெளியிடப் பெறுகிறது.]

சமஸ்கிருத இலக்கியத்தில் திருவண்ணாமலை

பெ. திருஞானசம்பந்தன்

'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' என்ருர் அப்பரடிகள். ஆரியமும் தீந்தமிழும் உலக மொழிகளுள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. சொல் வளமும் இலக்கிய வளமும் பெற்று நீண்ட வரலாறு கொண்ட மொழிகள். இம்மை மறுமை நலம் பெருக்கும் கருத்துக் கருவூலங்கள். நான்மறைகளும், தேவார திவ்யப் பிரபந்தங்களும் சாத்திர தோத்திரங்களும், கலைகளும், காவியங்களும் மலிந்தவை, தெய்வ மணங் கமழும் மொழிகள். ஈசனைத் துதிக்கும் பனுவல்கள் பலவற்றைக் கொண்டவை.

விண்ணவரும் மண்ணவரும் ஏத்தும் அண்ணாமலையானை திருவெம்பாவை, திருவம்மானை, அருணாசலபுராணம், திருவருணைக் கலம்பகம் போன்ற தமிழ்நூல்களேயன்றி வடமொழிப் புராணங்களும், ஆகமங்களும், அருணாசலாஷ்டகம், அருணாசலஸ்தோத்ரம் முதலான வட மொழித் தோத்திர நூல்களும் போற்றிப் பரவுகின்றன. அவன் தோற்றத்தையும் ஏற்றத்தையும் எடுத்தியம்புகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றைக் காண்போம்.

அருணகிரி, அருணாசலம், முத்திநகர், சுத்த நகர், ஞானநகர், தென்கயிலை என்றெல்லாம் போற்றப்படுகிறது இன்று திருவண்ணாமலை என்று வழங்கும் திருத்தலம். அத் திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் பெருமான் 'நாயேனை ஆட்கொண்ட அண்ணாமலையானைப் பாடுதும்' என்று கூறிய வண்ணம் சமய குரவருள் ஒருவராகிய மாணிக்கவாசகரை ஆட்கொண்ட பெருமான்.

அருணாசலாஷ்டகத்தில் சிதம்பரத்தை தரிசித்தாலும், திருவாரூரிற் பிறந்தாலும், காசியில் இறந்தாலும், அருணாசலத்தினை நினைத்தாலும் முத்தி சித்திக்கும் என்று சொல்லப்படுவதினின்றும் திருவண்ணாமலை எத்தனை பெருமை வாய்ந்த புண்ணியத்தலம் என்பது விளங்கும். அத்திருத்தலத்தில் வீற்றிருந்தருளும் அருணாசலேசுவரரை இத்தோத்திர நூல் பரக்கப் போற்றுவதைப் பார்க்கிறோம். அவர் கடைக்கண் பார்வையினின்றும் கருணை வெள்ளம் பெருகிப் பாய்கிறது. உனக்கே நாம் ஆட் செய்வோம் என்று அடைக்கலம் புகுந்தவர்க்கு அருள் சுரப்பவன், சந்திர சேகரனை அப்பெருமான். உலகம் யாவையும் நிலைபெறுத்துகிற அவன் சச்சிதானந்த சொரூபன் என்று சொல்லுகின்ற புலவன், அவ்விறைவனுடைய தடத்த இலக்கணத்தையும் சொரூப இலக்கணத்தையும் கூறியவனாகிறான். சந்திரசேகர மூர்த்தியாகவும், அர்த்தநாரீசுவர வடிவினனாகவும் லிங்கோத்பவமூர்த்தியாகவும் அவ்வக்காலங்களில் தோன்றி அருள் புரிபவன் அருணாசலேசுவரன். 'அணோரணீயான் மஹதோ மஹீயான்' என்று உபநிடதம் கூறியுள்ளபடி அணுவினும் சிறிய உருவத்தை ஏற்கவல்லவன். 'அப்பாலுக்கப்பாலாய்' இருக்கின்ற அவன் அடிமுடி தெரியவொண்ணா அண்ணாமலையென மாபெரும் விசுவரூபத்தை எடுத்து மகத்துக்கும் மகத்தான மாபெரும் உருவத்தையும் ஏற்க வல்லவன். மிக கனமான பொருளாகவும் மிக லேசான பொருளாகவும் தோற்றம் தரவல்லவன். எதையும் அடையக்கூடியவன் அடைவிக்கக் கூடியவன், விரும்பியதனைத்தையும் பெறவல்லவன் தரத்தக்கவன். அனைத்தையும் தன்வயப்படுத்தக் கூடியவன். உலகனைத்தையும் ஆளக் கூடிய

வன். எவ்விடத்திலும் விரும்பியவாறு நின்று விளங்கக் கூடியவன். இவ்வண்ணம் அணிமா, மஹிமா, லகிமா, பிராப்தி, பிராகாம்யம், வசித்வம், ஈசித்வம், காமவசாயித்வம் என்று சொல்லப்படுகின்ற எண்வகை ஐசுவரியங்களையும் உடையவன் அருணுசலேசுவரன். இணையற்ற தேவர்கோனுகிய இவன் விஷ்ணு, பிரம்மா, இந்திரன் ஆகியோரால் சேவிக்கப்படுகின்றவன். மந்தாரம், மல்லிகை, ஜாதிப்பூ, அல்லி, சம்பகம், தாமரை ஆகிய மலர்களைக் கொண்டு இந்திராதி தேவர்களால் பூசிக்கப் பெறும் உண்ணுமுலை யம்மையின் ஈசன் செந்தளிர் போன்ற பாதங்களை உடையவன்; சூரியன், சந்திரன், அக்னி ஆகியவற்றை மூன்று கண்களாகக் கொண்டவன்; புன்முறுவல் பூக்கும் மலர் முகத்தான். அவனை என்றும் நினைந்து நினைந்து உய்வோமாக என்று கூறுகிறது அருணுசலாஷ்டகம்.

லிங்கபுராணத்திலும் பிற புராணங்களிலும் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி' தோன்றிய வரலாறு கூறப்படுகிறது. படைத்தற்கடவுளான பிரமனும், காத்தற் கடவுளான விஷ்ணுவும் தாம்தாமே பெரியவர் என்று வாதிடத் தொடங்கியபோது ஓமெனும் ஒலியுடன் எழுந்தது ஒரு நாதம். சுத்த ஸ்படிகரூபமான ஜோதி மற்றுமோர் சூரிய மண்டலமோ என்று வியக்கும் வண்ணம் வானளாவத் தோன்றியது. இதனைக் கண்ணுற்ற பிரமன் மிகுந்த தன்னம்பிக்கையுடன் அச்சோதியன் முடியைக் கண்டுவந்து தன்பெருமையை நிலைநாட்டும் பொருட்டு அன்னப் பறவை உருவெடுத்து மேலே மேலே பறந்து சென்றுராம். விஷ்ணுவும் பன்றியுருவம் கொண்டு அச்சோதியின் அடியை அகழ்ந்தாராய்ந்து வந்து விடுவதாக மோகமுற்று கீழே கீழே சென்றுராம். பிரமன் மேலே மிதந்த தாழம்பூமடலைக் கொணர்ந்து பரமன் முடியைக் கண்டு விட்டதாகக் கூறினுராம். விஷ்ணுவோ பரமன் திருவடியைக் காணுது சோர்ந்து வந்தார். பரமன் திருமுடியைக் காட்டிலும் திருவடிக்கே பெருமை மிக்குண்டு. ஆகவேதான் திருவள்ளுவர் தொடங்கி சைவசித்தாந்த சாத்திரங்கள் ஈருக முத்தி தரும் திருவடியை, நடராசப் பெருமானின் தூக்கிய திருவடியைப் போற்றிப் பரவுகின்றனர். போதத்தையும் அதன் வாயிலாக முத்தியையும் அளிக்கவல்ல பெருமையை உடைய திருவடியை நோக்கிச் சென்று அதைக் காண இயலாத உண்மையை உரைத்த விஷ்ணுவிற்கு எங்கும் கோவில்கள் இருக்க, செருக்கி மேலே திரிந்து உண்மையைத் திரித்துக் கூறிய பிரமனுக்கு கோவில்களே இல்லாமற் போவதாக என இறைவன் ஆணையிட்டான் என்று பேசப்படுகிறது. இப்பரஞ்சோதியை அமுதன், நிஷ்கலன், நிர்துவந்துவன் (இணையற்றவன்) ஆனந்தன், ஆதி நடு அந்தம் கடந்தவன், சுத்தஸ்படிக உருவினன் என்றெல்லாம் வருணிக்கிறது இலிங்க புராணம்.

இவ்வரலாற்றை உள்ளடக்கி எல்லப்ப நாவலர் தான் இயற்றிய திருவருணைக் கலம்பகத்தில் இவ்வண்ணம் பாடுகிறுர்.

'மணிகொண்ட நெடுங்கடலில் விழிவகை
மாதவனும்
அணிகொண்ட புண்டரிகமகலாத சதுமுகனும்
ஞானக்கண்ணது கொண்டு நாடுமாறுணராதே
ஏனத்தின் வடிவாகி எகினத்தின் வடிவாகி
அடிதேடி அறிவலெனல் வளியெலா முழு
திடந்தும்
முடிதேடி வருவலென மூதண்ட மிசைப்பறந்தும்
காணரிய வொருபொருளாய்க் களங்கமற
விளங்கபெரும்
சோணகிரியென நிறைந்த சுடரொளியாய் நின்
றருள்வோய்,'

குகைநமச்சிவாயரால் 'கருமாமுகில் வண்ணன் கஞ்சனுக்கும் எட்டாப் பெருமான்' என்றும் 'ஏமாந்த சோணகிரி ஈசர்' (ஏம். இம்மை இன்பம், ஆந்த மறுமை ஆனந்தம் ஆகியவற்றை அருளும் அருணுசலேசுவரர்)என்றும் போற்றிய பெருமானை ஒவ்வொரு சிவபெருமான் கோவிலிலும் கருப்ப கிருகத்தின் மேற்புறச் சுவரில் பதிந்த உருவமாக அமைக்கும் முறைமையை சிவாகமங்கள் கூறுகின்றன.

உத்தரகாமிகாகமத்தில் கூறப்பட்டுள்ளவாறு லிங்கோத்பவ மூர்த்தியின் வடிவம் பின் கண்டவாறு அமையப் பெறுதல் வேண்டும். 'ஜோதி லிங்க வடிவமான லிங்கத்தின் ஐந்தில் ஒரு பாகம் முழங்கால் பகுதிக்குக் கீழ் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். பிம்பத்தின் முகத்தின் அளவு மேலே அன்னத்தின் உருவம் பொறிக்கப்பட வேண்டும். முகத்தின் இரண்டளவு பன்றியின் உருவம் கீழே பொறிக்கப்பட வேண்டும். பிம்பத்தின் இரு பக்கங்களிலும் பிரமனும் விஷ்ணுவும் வணக்கத்தைத் தெரிவிக்கும் முறையில் அமைக்கப் பெறலாம்.

சில்பரத்னம் என்ற சிற்ப நூலில் சற்று மாறுபட்ட முறையில் பிம்பம் சந்திரசேகர மூர்த்தியைப் போல் அமைக்கப் பெறுதல்வேண்டும் எனவும், பிரம்மா அன்ன உருவில் மேலே இடதுபுறமும், விஷ்ணு பன்றி உருவில் கீழே வலது புறமும் அமைக்கப் பெறுதல் வேண்டும் எனவும், சிவந்த மேனியுடைய பிரமனும், கருமேனியனுன விஷ்ணுவும் மார்பகத்தில் கூப்பிய கையினராய் லிங்கத்தைப் பார்த்து தொழுகின்ற கோலத்தில் அமைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

காரணுகமத்தில் மேலே கூறப்பட்ட முறையினின்றும் சிறிது வேறுபாடு காணப்படுகிறது. பிரமனின் நிறம் மஞ்சள், விஷ்ணுவின் நிறம் நீலம், சிவனின் நிறம் சிவப்பு. சந்திரசேகரரின் நான்கு திருக்கரங்களும் வரதம், அபயம், மான், மழு என்ற வகையில் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

ஸ்ரீ தத்வநிதி என்ற நூல் வழிபடவேண்டிய இப்பெருமானின் திருவுருவத்தை இவ்வாறு வருணிக்கிறது.

> அபயவரத ஹஸ்தம் ஸௌம்ய சிருங்கார பாவம்
> விபுலவதன நேத்ரம் சந்த்ர பிம்பாம்சமௌளிம்
> ருஜூதநு சமபாதஸ்தானகம் வித்ருமாபம்
> ஹரிணபரசுபாணிம் பத்மபீடோபரிஸ்தம்.

இதன் பொருள்—'ஒரு கை அஞ்சேல் என்று அருளும் கை, மற்றுென்று வேண்டிய வேண்டியாங்கு அருளும் கை. மற்றும் இரு கைகள் மான் மழு ஏந்தியவை. பரந்த முகத்தில் ஒளிரும் கண்கள் அருட்பார்வை மூலம் அருளைப் பொழிவன. பிறையணிந்த முடியுடையவன் அப் பெம்மான். நின்ற திருக்கோலம் பதும பீடத்தில் நிற்கும் நேரான கால்கள், நிமிர்ந்த உடல்; பவழம்போல மேனி.' எல்லோராவில் உள்ள தசாவதார குகையில் சோதிர் லிங்கத்தின் உருவம் அழகாக வடிக்கப்பட்டுள்ளது. அதர்வ வேதத்தில் கூறப்படுகின்ற 'ஸ்கம்பம்' (கம்பம்) என்பதை நினைவுறுத்துவதாக இருக்கின்றது இவ்வடிவம். உபநிடதங்களும் 'சோதிகளுக்கெல்லாம் (சந்திர சூரியாதிகளுக்கெல்லாம் ஒளியூட்டுகின்ற) மேலான சோதி' என்றுபோற்றப் படுகின்ற பொருள் அருணுசலத்தில் நாம் காணும் பரம் பொருள்.

இக்குகையில் காணப்படும் உருவம் செந்தழல் மேனியது. நான்கு திருக்கரங்களைக் கொண்டது. ஒன்று அஞ்சேல் என்று அருளும் கை. மற்றுென்று இடுப்பில் பொருந்தியது. மூன்றுவது மானையும் நான்காவது மழுவையும் ஏந்தியுள்ளது. நான்கு தலைகளை உடைய பிரமன் மேலே பறக்கிறுன். பன்றி உருவம் கொண்ட விஷ்ணு தன் இருகைகளாலும் மூக்கினுலும் பூமியைத் தோண்டுகின்ற திருக்கோலம். கம்பத்தின் இரு பக்கங்களிலும் அக்கினி சுவாலைகள் வீசுகின்றன. பிரமனும் விஷ்ணுவும் இக் காட்சியை இரு புறங்களிலும் கைகூப்பி நின்று காண்கின்றனர்.

ஸ்ரீஅருணுசலஸ்தோத்ரம் என்ற வடமொழி தோத்திர நூல் அருணுசலலேசுவரரை பன்னிரண்டு சுலோகங்களில் துதி செய்யும் வகையில் ஒவ்வொரு அடியிலும் 'வந்தே (வணங்குகிறேன்) என்ற சொல் இருமுறை அமையப் பெற்றதாய் விளங்குகிறது. முதல் சுலோகம் பின் வருமாறு:—

> **வந்தே சம்பும் உமாபதிம் சுரகுரும்**
> **வந்தே ஜகத் காரணம்**
> **வந்தே பந்நக பூஷணம் மிருகதரம்**
> **வந்தே பசூனும் பதிம்**
> **வந்தே சூர்ய சசாங்க வந்ஹி நயனம்**
> **வந்தே முகுந்த ப்ரியம்**
> **வந்தே பக்த ஜனுசிரயம் ச வரதம்**
> **வந்தே சிவம் சங்கரம்.**

இதன் பொருள்—'மங்களத்திற்குத் தோற்றுவாயான (சம்புவை) உமையின் பதியை, தேவர்களின் குருவை, உலக கருத்தாவை, பணியணி பூண்டவரை, மானைக் கையில் ஏந்தியவரை, உயிர் வருக்கங்களுக்கெல்லாம் தலைவரானவரை, சூரியன், சந்திரன், அக்னி ஆகியோரை முக்கண்களாக உடையவரை, நாராயணனிடம் அன்பு பூண்டவரை, பக்தர்களுக்குப் புகலிடமானவரை மங்களத்தைச் செய்பவரை, சிவபெருமானுரை வணங்குகிறேன்'.

இவ்வாறு சிவபெருமானின் லீலைகளையும் யானைத்தோலை உரித்த வீரச் செயலையும், சூரியனின் அகங்காரத்தை அடக்கிய பெருமிதப் போக்கையும், தக்கன் வேள்வியைத் தகர்த்த தீரச் செயலையும், பூமியைத் தேராகவும், மேருவை வில்லாகவும், சேடனை நாணுகவும், தாமரைக் கண்ணனை அம்பாகவும் கடலை அம்பறுத் தூணியாகவும், பிரம்மாவை சாரதியாகவும் கொண்டு முப்புரம் எரித்த சாகசச் செயலையும், யமனைக் காய்ந்து பக்தனைக்காத்த

அருட் செயலையும், அடிமுடிதேடிய பிரம்மா விஷ்ணு ஆகியோரின் கர்வத்தைக் குலைத்த பெருஞ்செயலையும், நரசிம்மத்தை அடக்கி யாண்ட அருஞ் செயலையும், காமனைக்காய்ந்த தீரச் செயலையும் விதந்து போற்றியருளு கிறார் ஆசிரியர்.

பன்னிரண்டாவது சுலோகத்தில் பின்வரு மாறு முடிக்கிறார் :

வந்தே பாவநம் அம்பராத்மம் அமலம்
வந்தே மஹாதைவதம்
வந்தே பக்தவராசிரயாமரதரும்
வந்தே நதாபீஷ்டதம்
வந்தே — அபீதகுசாம்பிகேசம் அநிசம்
வந்தே அருணாதீசுவரம்
வந்தே பக்தஜநாசிரயம் ச வரதம்
வந்தே சிவம் சங்கரம்.

அனாதி பாசமுத்தராகையால் புனிதர், சிதா காச சொரூபியாய் இருப்பவர், தூயவர், மகா தேவர், பக்திமான்கள் சாரத்தக்க கற்பதரு, வணங்கியவருக்கு வேண்டியதைக் கொடுப் பவர், வரங்களை அருளுபவர், சிவன் என் றும் சங்கரன் என்றும் போற்றப்படுபவர், **உண்ணாமுலையோடு கூடி உறையும் அண்ணா மலை நாதர்** — அவருக்கு மீண்டும் மீண்டும் என் வணக்கங்கள் உரித்தாவன என்று கூறி முடிக்கிறார்.

இடையிடையே அவரது பல்வேறு தோற் றங்களை நம்மனக்கண் முன் கொண்டு வருகிறார். நாம் புரிந்து கொள்வதற்கு தோற்றங்களைக் கூறிய போதிலும் அவருடைய சொரூபத் தையும் இடையிடையே காட்டிச் செல்கிறார். அவருடன் தொடர்பு கொண்டவர்களையும் சுட் டிக் காட்டுகிறார்.

அவருடைய அருவத்தை சூக்குமர், மாய இருளகற்றுபவர், வாலறிவர், சிந்தைக்கப் பாற்பட்டவர், ஆதியந்தமிலாதவர், அதிசாந் தர், நம் அறிவால் சுட்டி அறியப்படாதவர், நாதசொரூபர் என்றெல்லாம் கோடி காட்டு கிறார்.

இடையிடையே அவர் குபேரன் நண்பர், பூதகணத்தலைவர், இராவணன், பாணாசுரன், பிருங்கிமுனிவர் போன்றோரால் துதிக்கப் படுகிறவர், நான்முகன், விஷ்ணு ஆகியோ ரால் பூசிக்கப்பட்டவர் என்று ஒரு சிறிது அறிமுகப்படுத்துகிறார்.

பிறகு நம் உள்ளக்கிழியில் அவர் உருவத் தைப் பதித்துக் கொள்வதற்காக வடி வழகை ஆங்காங்கு எடுத்துக் காட்டுகிறார்.


அவர் ஜடாமகுடம் தரித்திருக்கின்றார்; ஆகாசமே சடைக்கற்றை; சந்திரனை முடியில் அணிந்திருக்கிறார். திரிபுண்டிரமாகிற திருநீறு நெற்றியில் பளிச்சிடுகிறது. அவரது கண்கள் மந்த கடாட்சத்தை வீசுகின்றன. திருமேனி யில் ஆங்காங்கு நாகாபரணங்கள். அண்ணா மலை நாதரை ஆசிரியர் லிங்கோத்பவ மூர்த்தி யாக தியானிக்கிறார் போலும். ஆகமத்தில் விதித்துள்ளவாறு பாதங்கள் வெளிப்படக் காணப் பெறாததால் திருவடிகளை வரு ணிக்கவில்லை என்று கருதத் தோன்றுகிறது.

இம்மூர்த்தியை இங்ஙனம் துதித்து வழி படுவோர் அறம் பொருள் இன்பங்களைப் பெறு வர், இம்மையில் துன்பம் போகும்; பூதாதி களின் தொல்லை இராது; நீண்ட ஆயுளையும் புண்ணியத்தையும் பெறுவர்; மறுமையில் நிலைத்த பேரானந்தப் பெருவாழ்வையும் பெறுவர் என்று நூற் பயனைக் கூறி முடிக்கிறார் ஆசிரியர்.

ARUNACHALA !

Thou dost root out the Ego of those
Who Meditate on thee in the
Heart, Oh Arunachala !

—The Marital Garland of Letters
Verse 1



* வரலாறு
* கல்வெட்டு
* தொல் பொருள் இயல்



அண்ணாமலையார் கோயில் வண்ண ஓவியங்கள்

டாக்டர் இரா. நாகசாமி, எம்.ஏ., பிஎச்.டி.

இந்திய ஓவிய வரலாற்றில் திருவண்ணாமலைக் கோயிலிலுள்ள ஓவியங்கள் சிறந்த நிலையைப் பெறுகின்றன. விஜயநகரப் பேரரசன் கிருஷ்ணதேவராயன் தோற்றுவித்த கோபுரத்திலும் மண்டபத்திலும் இவை காணப்படுகின்றன. அம் மாமன்னனின் கால ஓவியக் கலைக்கு இவை சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

திருவண்ணாமலைக் கோயிலில் கட்டிடப் பகுதிகள் சோழர் காலத்திற்கும் முன்பிருந்தே எழுப்பப் பட்டிருக்கின்றன. இருப்பினும் பல்லவர் கால ஓவியமோ, சோழர்கால ஓவியமோ இங்கு இல்லை. இரண்டாம் திருச்சுற்றின் மாளிகையின் விதானத்தில் ஓவியங்கள் காணப் படுகின்றன. இந்த ஓவியங்களில் ஒன்று ஒரு வீரன் பெரும் புலியுடன் சண்டை போடுவது போல் காணப்படுகிறது. பெரும்பாலும் புலியோடு போரிடும் வீரனை போசள மன்னர்கள் தங்கள் கட்டிடங்களில் காட்டுவது மரபு. இந்த ஓவியம் மிகவும் அழகான ஓவியமாகும். புலி மிகவும் கடுமையாக வாயைப் பிளந்து கொண்டும், கால்களை மேலே தூக்கிக் கொண்டும் வீரன் மீது பயங்கரமாகப் பாய்கிறது. வீரனும் கடும் போர் புரிந்து புலியைக் கத்தியால் குத்துவது மிகச் சிறந்த ஒரு காட்சியாகும். இதற்கு அருகில் ஒரு மகரத்தின் மீது முனிவர் ஒருவர் அமர்ந்திருப்பது போல மற்றொரு காட்சியும் காணப்படுகிறது. இது 'மத்ச்யேந்திரநாதர்' என்ற முனிவரின் உருவமாகத் தோன்றுகிறது. 'கோரக்ஷநாதர்', 'மத்ச்யேந்திரநாதர்' முதலிய முனிவர்கள் நாதர் மரபு என்ற சமயப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று வடஇந்திய சமய வரலாற்றிலிருந்து அறிகிறோம். திருமூலர் இந்நாத மரபைப் பின்பற்றினார் என்றுகூடக் கூறலாம். இம்மரபு தமிழகத்திற்கு கி. பி. 7, 8 ஆம் நூற்றாண்டுக்குள்ளாக வந்தது எனக் கொள்ளலாம். விஜயநகரர் காலத்தில் பல கோயில்களில் மகரத்தின் மீது அமர்ந்துள்ள முனிவரைச் சிற்பங்களில் காணலாம். மத்ச்யேந்திரநாதரின் நல்ல ஓவிய உருவமாக இதைக் கூறலாம்.

இதே பகுதியில் மூன்றாவதாக ஒரு வட்டத்திற்குள் அன்னத்தின் மீது அமர்ந்திருக்கும் எழிலான தோற்றம் உடைய ஒருவரைக் காண்கிறோம். இது மன்மதனுடைய உருவமாகக் காட்டப்படுகிறது. இவை தவிர இத் திருச்சுற்று மாளிகை விதானத்தின் பல பூ வேலைப்பாடுகள் ஓவியங்களாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு சதுரத்திற்கும் ஒரு டிசைன் ஆக இவை காட்சியளிக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக இருப்பது அக்காலக் கலைஞர்கள் எவ்வாறு புதுமைகளைக் கையாண்டார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இதற்கு அடுத்து, சிறந்த ஓவியம் என்று கருதக்கூடிய அளவிற்குக் காணப்படுவது கிருஷ்ணதேவராயன் எடுப்பித்த மாபெரும் கோபுரத்தின் மேல் முகட்டில் இருக்கிறது. இதன் நடுவில் ஒரு பெரும் பட்டத்து யானை அணிகலன்களுடன் அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அதன் முன்புறத்திலும் பின்புறத்திலும் புறத்திற்கு ஒன்றாக இரு வீரர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் கையில் படைக்கலன்கள் தாங்கி யானையை வேட்டையாடி அடக்கி வருவது போல் இக்காட்சி அமைந்துள்ளது. இருப்பதிலேயே மிகவும் பெரிய ஓவியமாக இது காட்சியளிக்கிறது. மிகவும் உயர்ந்த முகட்டில் இருப்பதால் அதிகம் சேதமடையாமலும் காணப்படுகிறது. விஜயநகர மன்னர்கள் கஜவேட்டை காண்பதில் ஆர்வம் கொண்டவர்கள். அவர்களது மெய்க்கீர்த்திகளில் 'கஜவேட்டை கண்டருளிய' என்று குறிப்புக் காணப்படுகிறது. அந்தக் கருத்தைச் சித்திரிக்கும் வண்ணம் இது தோன்றுகிறது.

இதற்கும் மேல் பகுதியில் நடுவில் ஓர் அரசன் போன்ற உருவம் ஓவியத்தில் காணப்படுகிறது. அவனுக்குப் பின்னால் அவனது மனைவி காணப்படுகிறாள். இவர்களுக்கு முன்னரும் பின்னரும் கோலாட்டம் ஆடுகின்ற பெண்கள் உள்ளனர். இந்த உருவம், கிருஷ்ணதேவராயன் ஆணைப்படி இக்கோபுரத்தைக் கட்டுவித்த செவ்வப்ப நாயக்கனின் உருவம் போல தோன்றுகிறது. செவ்வப்ப நாயக்கனுடைய பல கல்வெட்டுகளும் இந்தக் கோபுரத்தில் காணப்படுகின்றன. செவ்வப்ப நாயக்கன்தான் பின்னர் தஞ்சை நாயக்கர் வழியை சோழ நாட்டில் ஏற்படுத்தியவர் என்பது அனைவருக்கும் தெரியும். அவனது சிம்கால் உருவத் தோற்றமாக இந்த ஓவியம் இருப்பது வரலாற்றிற்கு மிகவும் சிறந்ததாகும். இது தவிர குறுக்குக் கல்விட்டங்களிலும் அழகிய ஓவியங்களும், மலர் சித்திரங்களும் காட்சி அளிக்கின்றன.

இப்பொழுது யானைகட்டும் மண்டபத்தின் மேல் சற்றேறக்குறைய அதே காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்களும் காணப்படுகின்றன. ஆனால் மிகவும் புகையுண்டு காணப்படுகின்றன. ஒரு சில இடங்களில் மட்டும் ஓவியத்தில் உருவம் தெரிகிறது. பாற்கடல் கடைந்த காட்சியும், சிவபெருமான் உமையன்னையை மணக்கின்ற காட்சியும் இதில் இடம் பெறுகின்றன. கோயிலின் உட்பகுதியில் காணப்படும் பண்டைய ஓவியங்கள் இவைதான்.

மலையைச் சுற்றி வரும்பொழுது பின்புறத்தில் எழுத்து மண்டபம் என்று ஒரு மண்டபம் உள்ளது. அம்மண்டபத்தில் ஆங்காங்கே சில எழுத்துக்கள் தெரிகின்றன. ஓர் இடத்தில் ''கிருஷ்ண.......மண்டபம்'' என்று பெயர் காணப்படுகிறது. இது கிருஷ்ண தேவராயன் மண்டபம் என்று தோன்றுகிறது. இதில் நான்கு கதைகளின் காட்சிகள் இடம் பெறுகின்றன. ஒன்று திருப்பாற்கடலைக் கடைவதையும், சிவபெருமான் பார்வதியை மணந்து கொள்வதையும் சித்திரிக்கிறது. இரண்டாவது இராமாயணக் காட்சிகளாகும். மூன்றாவது கண்ணன் கோபிகையருடன் விளையாடும் பல்வேறு காட்சிகள். நான்காவது முருகன் வள்ளியை மணந்து கொள்ளும் முழு வரலாறாகும். இந்த ஓவியங்களின் கீழே ஒவ்வொரு காட்சிக்கும் விளக்கம் தமிழில் எழுதப்பட்டுள்ளது. பல இடங்களில் ஓவியம் மறைந்து விட்டது. எஞ்சியுள்ள பகுதி கிருஷ்ணதேவராயன் காலத்திய ஓவியக் கலையின் உன்னதப் படைப்பு எனலாம். ஆடை அணிகலன்கள் கிருஷ்ணதேவராயன் காலத்திய சிற்பங்களிலும் பிற ஓவியங்களிலும் காணப்படுவதை ஒத்திருக்கின்றன. பொதுவாகத் திருவண்ணாமலை ஓவியங்கள் மிகச் சிறந்த கலைப் படைப்புகள் என்பதில் ஐயமில்லை.

I am very happy to visit this wonderful temple.

UJJAL SINGH
Governor of Tamilnadu
3-11-1968

வரலாற்றுத் துணுக்குகள்

மதில்கள்

கோயில் மதில்களுக்குப் பெயரிடும் வழக்கம் 13 - ஆம் நூற்றுண்டிலேயே இருந்தது. வீராகரன் திருமதில், வாணுதிராயன் திருமதில், திருவேகம்பமுடையான் திருமதில் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இவை, மதில்களைக் கட்டியவர்கள் பெயர்கள் போலும்.

அதிகாரிகள்

இக்கோயிலை நிர்வாகம் செய்ய ஸ்ரீருத்திரர், ஸ்ரீமாஹேசுரர், ஸ்ரீ மாஹேசுரக் கண்காணி செய்வார், தானத்தார், தானபதி மாஹேசுரர், தேவகன்மிகள், கோயிற் கணக்கர், ஸ்ரீகார்யஞ் செய்வார் என்று பல அதிகாரிகள் இருந்தனர். அறப் பணிகளைக் கண் காணித்து, அவை ஒழுங்காக நடைபெற ஆவன செய்யும் உரிமை பெற்றவர் ஸ்ரீமாஹேசுரர்.

தேரோடும் திருவீதிகள்

கோயிலைச் சுற்றிலும் உள்ள தேரோடும் திருவீதிகளைத் தூய்மை செய்து செம்மையாக வைத்திருப்பதற்குத் 'திருவீதியாண்டார்கள்' என்ற பெயருடைய பணிமக்கள் இருந்தனர். அவர்களுக்குத் 'திருவீதி நாயகம்' என்போர் தலைவராய் இருந்தனர். பத்துத் திருவீதியாண்டார்களை திருவீதிநாயகம் என்ற பதவிப் பெயருடைய ஒருவர் கண்காணித்து வந்தார்.

ஆங்கிலேயர் காலத்தில்

திருவண்ணுமலைப் பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றியபின், போர்க்கருவி, வெடிமருந்து, பீரங்கி முதலியவற்றை வைக்க அண்ணுமலையார் கோயிலைப் பயன்படுத்தினர். வெடிமருந்து செய்யும் கிடங்கு உள்ளே நிறுவப்பட்டது. படைவீரர்கள் தங்கி இருக்கும் காவல் மிகுந்த படை வீடாகக் கோயில் பயன்பட்டது. போர்க் குதிரைகளுக்கும் கோயிலுள் இடம் தரப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில், மிகுந்த வலிமை மிகுந்த கோட்டையாய் — தேடாத காவல் மிகுந்த படைவீடாய் — பகைவர் எளிதில் நுழைய முடியாத பெரிய அரணுய் அண்ணுமலையார் கோயில் இருந்தது. ஆங்கிலேயரின் பகைவர்கள் கோயில் உள்ளே நுழைய கோயில் மதில்களையும் தாக்கியபோது, மதிற்சுவர்கள் சில இடங்களில் இடிந்தன.

அருணகிரிநாதர் காலம் என்ன?

திருப்புகழ் தந்த அருணகிரி நாதர் காலம் எது? இவர் 15-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் என்று இதுகாறும் கூறினர். ஆனுல் இவர் 14-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். ஒரு கல்வெட்டு இச்செய்தியைக் கூறுகிறது. திருவண்ணுமலையில் உள்ள இந்தக் கல்வெட்டு, சம்பந்தாண்டான், அருணகிரி, சோமநாதஜீயர் என்னும் மூவரையும் கூறுகிறது. இதன்படி கி. பி. 1340-ல் அருணகிரிநாதர் வாழ்ந்தார் என்பது தெளிவு.

ஆதாரம் "கல்வெட்டு" இதழ் 1 பக்கம் 5. இதைப்பற்றி மேலும் அறிய விரும்புவோர் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1973-ல் வெளியிட்ட தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை பவள விழா மலரில் பக்கம் 230 முதல் 232 வரை அண்ணுமலைக் கல்வெட்டும் அருணகிரி நாதர் காலமும் என்ற தலைப்பில் திரு. இரா. நாகசாமி அவர்கள் எழுதிய கட்டுரையைப் பார்க்க.



மு. வை. அரவிந்தன்

தமிழக வரலாற்றை அறிவதற்குக் கல்வெட்டுகள் பெரிதும் துணை செய்கின்றன. அதனால் கல் வெட்டுகளை வரலாற்றுக் கருவூலம் என்று ஆராய்ச்சியாளர்கள் போற்றுகின்றனர். வரலாற்றுக் கருவூலமாய் விளங்கும் கல் வெட்டுகளைத் தாங்கி நிற்கும் பேறு பெற்றவையாய்ப் பழம்பெரும் கோயில்கள் உள்ளன.

திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலையார் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள், சுவையான வரலாற்றுச் செய்திகள் பலவற்றை நமக்கு அறிவிக்கின்றன. இக் கோயிலில் உள்ள கல்வெட்டுகளில், தென்னிந்தியக் கல்வெட்டுப் பதிவு நிலையத்தார் 1929 வரை 119 கல்வெட்டுகளைப் பதிவு செய்து வெளியிட்டுள்ளனர்.* இவற்றுள் பெரும்பாலானவை சோழப் பேரரசை ஆண்ட சோழ மன்னர்களுக்கு உரியவை. ஏனையவை கோப்பெருஞ் சிங்க பல்லவர், பாண்டிய மன்னர், ஹொய்சாள மன்னர் வீர வல்லாள தேவர், விஜய நகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர், தஞ்சாவூர் நாயக்க மன்னர் சேவப்பர்—ஆகிய மன்னர்க்கு உரியவை.

காலப்போக்கிலே-கோயிலின் வளர்ச்சி

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பழந்தமிழ் நூல்களில் திருவண்ணாமலை குறிப்பிடப்படவில்லை. பத்துப்பாட்டில் உள்ள மலை படுகடாம், திருவண்ணாமலைக்கு மேற்கேயுள்ள செங்கம் (செங்கண்மா), செய்யாறு (சேயாறு), பர்வதமலை (நவிரமலை) ஆகியவற்றை விளக்கமாகப் பாடுகின்றது. ஆனால் திருவண்ணாமலையைப் பற்றி அந்தப் பாடல் குறிப்பிடவில்லை. முற்காலப் பல்லவ மன்னர்களின் கல்வெட்டு எதுவும் திருவண்ணாமலைக் கோயிலில் காணப்பட வில்லை.

திருநாவுக்கரசர் (கி.பி. ஏழாம் நூற்றாண்டு) திருவண்ணாமலையை வழிபட்ட நிகழ்ச்சியைப் பெரிய புராணம் பாடியிருப்பதை (திருநாவுக்கரசர் புராணம், செய். 311-313) உற்று நோக்கினால், அக் காலத்தில் அண்ணாமலையார் கோயில் சிறிய அளவில் செங்கற் சுதை மாடமாக இருந்தது என்று கருதலாம்.

கி.பி. 850-ஆம் ஆண்டிற்கு முற்பட்ட கல்வெட்டு ஒன்றும் இக் கோயிலில் இன்மையால், விஜயாலய சோழன் வழிவந்த மன்னர்கள் இக் கோயிலின் கருங்கல் திருப்பணியைத் தொடங்கி வைத்தனர் என்றும், பின்னர்க் காலப் போக்கில் கோயிலின் பல்வேறு பகுதிகள் வளர்ந்தன என்றும் அறியலாம்.

மிகப் பழமையான கல் வெட்டுகள் கோயிற் கருவறைச் சுவர்களில் மட்டுமே காணப்படுகின்றன. சிறிது பிற் காலத்துக் கல்வெட்டுகள் முதற் பிரகாரச் சுவர்களில் உள்ளன. மிகவும் பிற்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் நான்கு பெருவாயில்களிலும் இருக்கின்றன. இவற்றைக் கொண்டு இப்போதுள்ள கோயிலின் பல வேறு பகுதிகளின் படிப்படியான வளர்ச்சியை அறியலாம்.

வரலாற்று அடிப்படையில் நோக்கினால் முதற் பராந்தக சோழனின் மைந்தன் இராசா

---
* South Indian Inscriptions, Vol. VIII. Nos. 57-165.

தித்த சோழன் காலம் வரையில் (கி.பி. 955) கருவறை மட்டுமே கல் திருப்பணியாக இருந்தது என்பது புலனுகும். முதற் பிரகாரச் சுவரில் முதல் இராசேந்திர சோழனின் 18ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1028) கல்வெட்டு உள்ளது. எனவே அம் மன்னன் காலத்திலோ அதற்கு முன்னரோ முதற் பிரகாரம் கட்டப் பட்டிருக்க வேண்டும். மேலும் மூன்றும் குலோத்துங்கன், மூன்றும் இராசராசன், குலசேகரபாண்டியன் ஆகியோருடைய கல்வெட்டுகளும் முதற் பிரகாரத்தில் உள்ளன. ஆதலின் இம் மன்னர்களின் காலத்திலேயே முதற் பிரகாரத்தில் உள்ள ஏகாம்பரநாதர் கோயிலும், சிதம்பரேசர் கோயிலும் தோன்றி இருக்கின்றன. கிளி கோபுரத்தில் உள்ள 33 கல்வெட்டுகளில் தொன்மையானது இரண்டாம் வீரராசேந்திர சோழ மன்னருடைய தாகும் (கி.பி. 1063). ஆதலின் அக் கோபுரம் அம்மன்னர் காலத்திலோ அதற்கு முன்னரோ கட்டப் பட்டிருக்க வேண்டும்.

வல்லாள மன்னர் பெயரால் வழங்கும் கோபுரத்தின் சுவர்களில் கி.பி. 1377 இல் ஏற்பட்ட கல்வெட்டு உள்ளது. ஹொய்சாள மன்னர் வீர வல்லாள தேவரோ அவருக்குப் பின் வந்த ஹொய்சாள மன்னர்களோ இக் கோபுரத்தைத் தம் நினைவுச் சின்னமாகக் கட்டி இருக்க வேண்டும்.

இரண்டாம் பிரகாரத்து மேலைக் கோபுர வாயிற் சுவரில் கி.பி. 1388-ஆம் ஆண்டுக் கல்வெட்டும், மூன்றும் பிரகாரத்தில் மேற்கே உள்ள பேய்க்கோபுரச் சுவரில் கி.பி. 1374-ஆம் ஆண்டுக் கல்வெட்டும் உள்ளன. ஆதலின் இக் கோபுரங்களும் சுற்று மதில்களும் கி.பி. 14-ஆம் நூற்றுண்டில் தோன்றி இருக்க வேண்டும்.

விஜய நகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர், ஆயிரங்கால் மண்டபத்தையும் அதன் எதிரேயுள்ள சிவகங்கைக் குளத்தையும் நிறுவினர்; கிழக்கு வாயிலில் உள்ள பெரிய (ராயர்) கோபுரத்தை அமைக்க அடிப்படையான ஏற்பாடுகளையும் செய்தார்.

கிருஷ்ணதேவ ராயர் தொடங்கி வைத்த பெரிய கோபுரத் திருப்பணியைத் தஞ்சை நாயக்கமன்னர் சேவப்பர் தொடர்ந்து கட்டி முடித்தார்.

இவ்வாறு காலப் போக்கில் அண்ணுமலையார் கோயில், கருவறையும் மதில்களும் கோபுரங்களும் மண்டபமும் குளமுமாய் விரிவடைந்து வளர்ந்த வரலாற்றை அறிந்து மகிழக் கல்வெட்டுகள் துணை செய்கின்றன.

மிகச்சிறந்த திருப்பணிகளைச் செய்த மன்னர்கள்

அண்ணுமலையார் கோயிலுக்கு மிகச்சிறந்த திருப்பணிகளைச் செய்த மன்னர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் பிற்காலப் பல்லவ வேந்தர் கோப்பெருஞ் சிங்கர், விஜய நகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர், தஞ்சை மன்னர் சேவப்ப நாயக்கர் ஆகிய மூவரும் ஆவர்.

கோயிலின் முதற் பிரகாரத்தில் உள்ள மேற்குச் சுவரில் கோப்பெருஞ்சிங்கரும் அவர் மைந்தர் வேணுவுடையாரும் செய்த சிறந்த திருப்பணிகளை மிக அழகான நடையில் எடுத்துரைக்கின்ற ஓர் ஆசிரியப்பா உள்ளது. அண்ணுமலையார் பூசைக்கும் திருப்பணிக்கும் பயன்படும் வகையில் கோப்பெருஞ்சிங்கர் ''அண்ணுமலை நாதர் தேவதானப் பற்றுகளும் அண்ணுநாடு நாற்பாக்கு எல்லைக்கு உட்பட்ட நன்செய் புன்செய் ஆகவுள்ள நிலத்திற்கு ஆயம், பாடி காவலால் வந்த நெல்லும் காசாயமும் மற்றும் எப்பேர்ப்பட்ட பல்லாயங்களும்'' தானமாகக் கொடுத்த செய்தி ஒரு கல்வெட்டில் உள்ளது.

கிருஷ்ண தேவராயர், தம் தலைநகரிலிருந்து தெற்கு நோக்கி வந்து காளத்தி மலையைக் கண்டு அங்குள்ள இறைவனை வணங்கியபின் திருவண்ணுமலைக்கு வந்தார். வந்து அண்ணுமலையார் கோயிலுக்கு, கி.பி. 1516-ஆம் ஆண்டில் பல தானங்களை வழங்கி, திருப்பணிகள் சிலவற்றைச் செய்தார். ஆயிரங்கால் மண்டபம் கட்டி, அதற்கு எதிரே வசந்த உற்சவம் நடைபெறச் சிவகங்கை என்னும் பெயரையுடைய திருக்குளம் ஒன்றை அமைத்தார். இக் குளத்திற்குத் தண்ணீர் நிரப்ப, திருமலை தேவியம்மன் சமுத்திரம் என்னும் பெயரால் ஓர் ஏரியை வெட்டினர்; அண்ணுமலையார் கோயிலில் உள்ள உண்ணுமுலை நாச்சியார் கோயில், சடைப்பெருமாள் நாயனர் கோயில் ஆகியவற்றின் வாயிற் கதவுகளைச் செப்பனிட்டு, பலகணிகளுக்குப் பொன் போர்த்தினர்; வேறு சில கோயில் வாயில்களின் முகப்பிற்குப் பத்தரை மாற்றுத் தங்கம் வேய்ந்தார்; நாச்சியார் கோயிலின் மடப்பள்ளிக்கு முன், கிணறு ஒன்றை வெட்டினர். அண்ணுமலையாருக்குக் 'கிருஷ்ண தேவ

ராயர் பதக்கம்' என்று பெயரிட்டு மிகவும் விலையுயர்ந்த திருவாபரணம் ஒன்றை வழங்கினார். மேலும் நாகா பரணம் பொன்னார்சிலை வாகுபுரி உத்தரீயம் முதலியவற்றை வழங்கினார்; அஸ்திர தேவ நாயனாருக்கு வெள்ளித் தகடு போர்த்தி, உச்சிக்குப் பொன் பூசினார்; திரு மஞ்சனம் எடுக்க வெள்ளிக்குடம் ஒன்றை அளித்தார். இச் செய்திகள் அனைத்தையும் ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

கிருஷ்ண தேவராயர் தொடங்கி வைத்த பெரிய கோபுரத் திருப்பணியை, தஞ்சை நாயக்க மன்னர் சேவப்ப நாயக்கர் தொடர்ந்து மேற்கொண்டு கி.பி. 1590-இல் செய்து முடித்தார். இது இராயர் கோபுரம் என்று பெயர் பெற்றுள்ளது. சேவப்ப நாயக்கர் கிருஷ்ண தேவராயர் திருப்பெயரைக் கோபுரத்திற்கு இட்டுச் சிறப்புச் செய்தார். இக் கோபுரத்தின் உயரம் 217 அடி; நீளம் 135 அடி; அகலம் 98 அடி. பதினோரு நிலைகள் அமைந்த இப் பெருங் கோபுரம் கம்பீரமான தோற்ற முடையது; சுதைச் சிற்பக் கலைத் திறனுக்கு எடுத்துக் காட்டாய் விளங்குகின்ற கலை வடிவங்களைக் கொண்டது; அண்ணாமலையார் கோயிலின் கிழக்கு வாயிலைப் பெருமிதத் தோடு அணி செய்வது; கட்டிடக் கலை வல்லுநர்கள் வியந்து போற்றும் அமைப்புடையது. இக் கோபுரத்தில் உள்ள பல கல்வெட்டுகள், சேவப்ப நாயக்கரின் திருப்பணிகளை அறிவிக்கின்றன. ●

இக்கட்டுரைக்கு ஆதாரம் : **"திருவண்ணாமலை வரலாறு"** பக்கம் 22—38. மேற்படி நூல், சமாஜக் காரியதரிசி பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களால் 1940இல் எழுதப்பெற்று அண்ணாமலை கோயிலாரால் வெளியிடப்பட்டது.

THE HOYSALA RULER WHO BUILT A GOPURAM

Vira Ballala III (1291-1342 A.D.)

According to inscriptions Vira Ballala III was crowned on the 31st of January 1292 A.D. He checked the growing power of the rulers of Kanchi and Tondainad. Tiruvannamalai became his subsidiary capital ...... He was away in the Tamil country for a long time.

... P. 142 of OUTLINES OF SOUTH INDIAN HISTORY
with special reference to Karnataka:
M. N. Venkata Ramanappa (Vikas)

Welcome Address

Presented to

H. E. Sri C. Rajagopalachari

(Governor-General of India)

on the Occasion of the opening of

PATALALINGAM TEMPLE

On 14th May, 1949

Your Excellency, brothers and sisters,

My revered Guru, Ramanabhagavan's blessings have made this day a red letter day in my life and in the history of Tiruvannamalai. It is my proud privilege to welcome Your Excellency, Ladies and Gentlemen on this unique occasion. The temple of Patala Linga where Sri Bhagavan Ramana Maharishi performed Tapasya in his early days will now be declared open by Your Excellency. It is our good fortune that Your Excellency as Head of the State guides the destinies of this land of ours, a spiritual home of Saints and Sages from time immemorial.

As everyone knows Sri Ramana Bhagavan was born in Tiruchuli. He was studying in Madurai. Then he got an inner urge to realise the self. In his seventeenth year he got the clarion call from Lord Arunachala and left Madurai for Tiruvannamalai and reached the latter place on 1-9-1896. From that time to the present day he adorns this place and radiates light and love all over the World.

After a few days of his arrival here, he made the temple of Patala Linga his sanctuary and started Tapas here. Some of the Bakthas visiting the temple had come to know of the young sage. They found that he was in deep samadhi with the lower part of his thighs bleeding caused by insect bites. From that day the World recognised his greatness and began to pay its homage. After sometime he left this for a garden, thence to Pavalak Kunru, to the Virupaksha cave, to Kanda Ashramam and lastly he came to the present Ramanasramam after the death of his mother.

As a devotee of Sri Bhagavan I had a great desire to make all these sacred places of his birth, education, penance and present retreat as fitting monuments for the posterity to know and find true inspiration. The house at Tiruchuli where he was born has been acquired and Sri Bhagavan's portrait has been installed in it. The house at Madurai

where he first obtained the insight into self beyond birth and death has also been acquired. The Big temple of Mathrubutheeswara has been recently built in the peaceful surroundings of Ramanasramam and this will remain for all time as the seat of Light and learning.

Just as I was trying to renovate the temple of Patala Linga I had to overcome a lot of obstacles and my grateful thanks are due to Sri Omandur Ramaswamy Reddiar who helped me a good deal. With his help and Your Excellency's blessings I got the permission for renovating the dilapidated temple of Patala Linga. So far as the actual construction work is concerned I cannot adequately thank Mr. Jehanbux H. Tarapore who very magnanimously came forward to finance and have the work done under his instruction and supervision.

We are really very fortunate that Your Excellency has been pleased to accept the invitation to come to this distant place despite multifarious State duties. We are very grateful to Your Excellency for the kindness. I request Your Excellency be pleased to declare open the temple of Patala Linga.

JAI HIND

Mrs. FEROZA TALEYARKHAN

THE HEAD AND THE RULER

Rajaji said smiling:

"I am going to Tiruvannamalai to associate myself with the reconstruction of a Hindu shrine there."

The ceremony at the temple was a solemn affair, Rajaji told them.

"You have referred to me as the Governor-General. When we enter a house of worship, we leave our shoes outside, and therefore, when I entered this shrine I left my office at the Gopuram Gate and I am the humblest of the subjects of the State, of which He whom we worship here, is the Head and the Ruler."

—BIMANESH CHATTERJEE
in THOUSAND DAYS WITH RAJAJI
(*Affiliated East-West Press Pvt. Ltd. New Delhi, 1973*) *pp. 117-118*.

திருவண்ணாமலையில் 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட சாலைக் கற்கள்

க. இராசகோபால்

பண்டைத் தமிழ்நாட்டில் சீரிய முறையில் சாலைப்போக்குவரத்து நிலவியிருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக அண்மையில் தமிழகஅரசு தொல் பொருள் ஆய்வுத் துறை நான்கு சாலைக் கற்களை கண்டுபிடித்துப் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது. அவற்றில் மூன்று திருவண்ணாமலையைச் சார்ந்தவை. ஒன்று தர்மபுரியைச் சார்ந்தது.

சாலைக் கற்கள்

திருவண்ணாமலையில் கண்ட மூன்று சாலைக் கற்களும் மலையைச் சுற்றி வருகின்ற கிரிப் பிராகாரத்தில் அமைந்துள்ளன. ஒன்றில்

''ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம பாண்டியத் திரு வீதி நாலாம் வகுப்பு'' என்றும்,

மற்ற இரண்டில்

''ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம பாண்டியத் திரு வீதி ஆறும் வகுப்பு'' என்றும்

கி. பி. 13ஆம் நூற்றாண்டுகாலத் தமிழ் எழுத்துக்களில் செய்திகள் பொறிக்கப்பட்டுள்ளன. மூன்று சாலைக் கற்களிலும் கல் வெட்டுப் பகுதியின் கீழே பாண்டியர்களின் முத்திரையான இரு மீன்களும் ஒரு செண்டும் (சாட்டை) பொறிக்கப்பட்டுள்ளன. இக்கற்கள் இன்றைய மைல் கற்கள் போன்றே மேல் பகுதி வட்டமாகவும், ஏறக்குறைய இன்றைய உயர அகல அளவுகளுடனும் அமைந்துள்ளன. எனினும் இன்றைய மைல்கற்கள் போன்று இவற்றில் செய்திகள் இருபுறமும் பொறிக்கப்படவில்லை. ஒருபுறம் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் இவை தங்களைக் கடக்கும் பயணிகளை நோக்காது சாலையை நோக்கியே நிற்கின்றன. ''நாலாம் வகுப்பு'' என்ற பிரிவு பொறிக்கப்பட்ட கல் இன்றைய சாலையின் இடது புறமும் ''ஆறும் வகுப்பு'' என்ற மற்ற கற்கள் சாலையின் பக்கத்திற்கு ஒன்றாகவும் சாலையை நோக்கி நிற்கின்றன.

இவற்றிலிருந்து நமக்குச் சில செய்திகள் கிடைக்கின்றன. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் அதாவது இன்றைக்கு 700 ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழ் மக்கள் சீரிய சாலைப்போக்குவரத்தை அறிந்திருந்தனர்; பயணிகள் நலனைக் கருதி சாலைகளின் ஓரங்களில் கடக்க வேண்டிய அல்லது கடந்த தொலைவைக் குறிக்கும் வண்ணம் சாலைக்கற்களை நிறுத்தினர்; அவை சாலையின் இருபுறமும் சாலையை நோக்கியவண்ணம் நடப்பட்டன; திருவண்ணாமலையில் உள்ள கிரிப் பிரகாரத்தின் சாலை 700 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போலவே இன்றளவும் தடம் மாறாது உள்ளது; இது அக்காலத்தில் சிறப்புடன் விளங்கிய விக்கிரம பாண்டியனின் பெயரால் விக்கிரம பாண்டியன் திருவீதி என்று அழைக்கப்பட்டது என்பவை அச் செய்திகளாகும்.

ஆனால் இத்திருவீதி மொத்தம் எத்தனை வகுப்புகளாக, அதாவது பிரிவுகளாக, பிரிக்கப் பட்டிருந்தது என்பதனையும் மற்ற பிரிவுகளில் நடப்பட்ட கற்கள் என்னவாயின என்பதனையும் இன்றைய அளவில் நம்மால் அறிய இயலவில்லை.

அடையாளக் கற்கள்

அடையாளக்கற்கள் நடும் பழக்கம் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலும் இருந்தது. சிவன் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் சூலம் பொறித்த கற்களைக் கொண்டு எல்லை குறிக்கப்பட்டன. இவை திருச்சூலக்கல் என்று அழைக்கப்பட்டன. திருமால் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் சக்கரம் பொறித்த கற்களைக் கொண்டு எல்லை குறிக்கப்

பட்டன. இவை 'திருச்சக்கரக்கல்' என்றும் 'திரு ஆழிக்கல்' என்றும் அழைக்கப்பட்டன. சமணக் கோயில்களுக்குரிய நிலங்கள் முக்குடை பொறிக்கப்பட்ட கற்களைக் கொண்டு எல்லை குறிக்கப்பட்டன. இவை 'திருமுக்குடைக்கல்' என்று அழைக்கப்பட்டன. இதே போன்று நெடுந் தொலைவு செல்லும் சாலைகளிலும், ஊர் வீதிகளிலும் கற்கள் வைக்கப் பட்டன. இவை என்ன பெயரில் அழைக்கப் பட்டன என்பது தெரியவில்லை.

திருவீதிகள்

தமிழகத்தில் இறைவனது உறைவிடங்களைச் சுற்றி அமைந்த வீதிகள் திருச்சுற்று என்றும் திருவீதி என்றும் அழைக்கப்பட்டன. திருவீதியில் எடுத்துச் செல்லப்படும் உற்சவ விக்கிரகங்கள் 'திருவீதி நாயகர்', 'திருவீதி நாயகி' என்று அழைக்கப்பட்டன.

மேலும் 'திருவீதி ஆண்டார்கள்' 32 பேர் திருவண்ணாமலைக் கல்வெட்டு ஒன்றில் குறிக்கப் படுகின்றனர். இவர்களுக்கு நிவந்தம்



மலைச்சுற்றில் காணப்படும் மைல் கல்
(700 ஆண்டுகளுக்கு முற்பட்டது)

அளிக்கப்பட்டுள்ளது. இவற்றை நோக்கி இவர்கள் திருவீதி நாயகர், நாயகிகளைப் பல்லக்கில் சுமந்தவர்களாகவோ, அல்லது திருவீதிகளைச் சுத்தம் செய்து பாதுகாத்தவர்களாகவோ இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

திருவீதிகள் இறைவனது பெயராலும் அக் கோயில்களில் திருப்பணி செய்த மன்னர்களது பெயராலும் அழைக்கப்பட்டன. திருவண்ணாமலையில் விக்கிரம பாண்டியன் திருவீதி என்று ஒரு திருவீதி இருந்தது போலவே 'திருவண்ணாமலை உடையார் திருவீதி' என்று மற்றொரு திருவீதியும் இருந்ததை நாம் கல்வெட்டு வாயிலாக அறிகின்றோம்.

விக்கிரம பாண்டியன்

பிற்காலப் பாண்டியர்களில் மூன்று மன்னர்கள் விக்கிரம பாண்டியன் என்ற பெயருடன் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களது பெயரில் திருவண்ணாமலையில் இதுவரை கல்வெட்டுக்கள் கிடைக்கவில்லை. இவர்களில் திருவண்ணாமலையின் சாலைக்கற்கள் வைக்கப் பட்ட காலத்தில் ஒருவரும், அதற்கு முற்பட்ட காலத்தில் ஒருவரும், பிற்பட்ட காலத்தில் ஒருவருமாக ஆட்சி புரிந்துள்ளனர்.

1. விக்கிரம பாண்டியன் கி.பி. 1180இல் அரியணை ஏறியவன்.
2. மாறவர்மன் விக்கிர பாண்டியன் கி.பி. 1283இல் அரியணை ஏறியவன்.
3. ஜடாவர்மன் விக்கிரம பாண்டியன் கி.பி. 1401 இல் அரியணை ஏறியவன்.

மூன்றாவது மன்னனான ஜடாவர்மன் விக்கிரம பாண்டியனது ஆட்சிக் காலத்தில் பாண்டியப் பேரரசு குறிப்பிடத்தக்க அளவு சீருடனும் சிறப்புடனும் விளங்கவில்லை. தமிழகத்தின் வடபகுதியில் விஜயநகர மன்னர்களுக்கு இடம் கொடுத்துத் தென் பகுதிக்குள் ஒடுங்கி விட்டது. மேலும் இம்மன்னனது காலம் சாலைக்கற்கள் நடப்பட்ட காலத்திற்கு, இரண்டு நூற்றாண்டுகள் பிற்பட்டதாக உள்ளது. எனவே இம்மன்னனது காலத்தில், இவனது பெயரில் தமிழகத்தின் வட பகுதியில் உள்ள திருவண்ணாமலையில் திருவீதி அமைக்கப் படவோ சாலைக் கற்கள் நடப்படவோ வாய்ப்புக்கள் இல்லை.

கி. பி. 1180ல் ஆட்சிக்கு வந்த விக்கிரம பாண்டியன், மூன்ரும் குலோத்துங்க சோழனுல் அரியணையில் அமர்த்தப்பட்டு, சோழர்களுக்குக் கீழ்பட்டு ஆட்சி செய்து வந்தவன். இவன் தனது ஆட்சிக்காலம் முழுவதையும் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு தன் அரியணையைத் தக்க வைத்துக் கொள்வதிலேயே செலவழித்தான். எனவே இவனும் திருவண்ணுமலையில் தன் பெயரில் திருவீதி அமைக்கவோ சாலைக்கற்கள் நடவோ வாய்ப்பில்லை. எனினும் இவனது மைந்தர்களாகக் கருதப்படுகின்ற ஜடாவர்மன் குலசேகர பாண்டியன், மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோரால் இத்திருவீதி தங்களது தந்தையின் பெயரால் பெயரிட வாய்ப்புக்கள் உள்ளன. இவர்களது கல்வெட்டுக்கள் தமிழகத்தின் வடபகுதியில் கிடைக்கின்றன. இவர்கள் தங்கள் தந்தையைக் கல்வெட்டுகளில் 'பெரிய நாயனுர் விக்கிரம பாண்டிய தேவர்' என்று குறிப்பிடுகின்றனர்.

கி. பி. 1283இல் அரியணை ஏறிய மாறவர்மன் விக்கிரம பாண்டியனின் ஆட்சிக் காலம் 13ஆம் நூற்ருண்டிலேயே அமைந்துள்ளது. இவனது ஆட்சி தமிழகத்தின் வடபகுதிகளிலும் பரவியிருந்தது. இவனது காலத்தில் பாண்டியர்களது துறைமுகமான கொற்கை வாணிபச் சிறப்புடன் விளங்கியது. இவனுக்குக் 'கொற்கைக் காவலன்' என்று ஒரு சிறப்புப் பெயரும் உண்டு. மார்க்கோ போலோ (Marco Polo) என்ற வெளிநாட்டு யாத்திரிகரும், வாஸ்சாஃப் (Was Saf) என்ற முகமதிய வரலாற்றறிஞரும் இவனது காலத்தில் பாண்டிய நாட்டில் சுற்றுப் பயணம் செய்து பல குறிப்புகள் எழுதியுள்ளனர். இவர்களது குறிப்புக்களில் வெளிநாட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்கு இறக்குமதியான குதிரை வாணிபம் சிறப்பாகக் காணக் கிடக்கின்றது. இவற்றைக் கருத்தில்கொண்டு இவனது காலத்தில் நிலவிய வாணிபத்தையும் அதற்கு இன்றியமையாத சாலைப் போக்குவரத்தையும் ஒருவாறு உணரலாம். இதன் மூலம் இவனது காலத்தில் நிலவிய சீரிய சாலையமைப்பின் பிரதிபலிப்பே திருவண்ணுமலையில் நடப்பட்ட சாலைக்கற்கள் என்றும் இவனது பெயராலேயே அத்திருவீதி 'விக்கிரம பாண்டியன் திருவீதி' என்று அழைக்கப்பட்டது என்றும் ஒரு முடிவுக்கு வரலாம்.

திருவண்ணுமலைக் கல்வெட்டுகளிலிருந்து ''திருக்கோவலூர் பெருவழி'' ''மலையான் பாடிக்குப் போன வழி'' என இரண்டு சாலைகள் குறிப்பிடப் பட்டுள்ளன. இங்கும் சாலைக் கற்கள் நடப்பட்டிருந்தனவா என்பது தெரியவில்லை. இதனைக் காலம் தான் வெளிப்படுத்தி வரலாறு படைக்க வேண்டும்.

உதவிய நூல்கள்

1. THE PANDYAN KINGDOM — K. A. Nilakanta Sastri
2. SOUTH INDIAN INSCRIPTIONS Vol. VIII
3. SOUTH INDIAN TEMPLE INSCRIPTIONS Vol. III, Part II



(தொல்பொருள் துறையினர் தொகுத்தது)

திருவண்ணுமலைக் கோயிலில் நூற்றுக் கணக்கான கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவற்றில் சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகர ஹோய்சாள மன்னர்கள் முதலிய வர்களுடைய கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

பல்லவர்களுடைய ஆட்சியின் கீழ் இப்பகுதி இருந்த போதிலும் பல்லவர் காலக் கல்வெட்டுக் கள் சிறப்பாக இங்கு கிடைக்கவில்லை. சோழ மன்னர்களில் பராந்தக சோழன், முதல் ராஜ ராஜன், முதல் ராஜேந்திர சோழன், முதல் ராஜாதிராஜ சோழன், முதல் குலோத்துங்கன், மூன்றும் குலோத்துங்கன் முதலிய சோழ அரசர் களுடைய கல்வெட்டுக்களும் இருக்கின்றன. 13-ம் நூற்ருண்டில் ஆண்ட பல்லவ சிற்றரசன் கோப்பெருஞ்சிங்கன் என்பவனுடைய பல கல் வெட்டுக்கள் இங்கே இருக்கின்றன. இவன் ஹோய்சாள மன்னர்களாலும், பாண்டிய மன்னராலும் தோற்கடிக்கப்பட்டான். இங்கு சுந்தர பாண்டியன், விக்கிரம பாண்டியன், குலசேகரன் முதலிய பாண்டியர்களுடைய கல்வெட்டுக்களும் இருக்கின்றன.

ஹோய்சாளர்களில் வல்லாளன் என்ற அரசர் காலத்தில் திருவண்ணுமலை அவரது தலைநகராகவே திகழ்ந்தது. வல்லாளன் தன் மகனுக்குத் திருவண்ணுமலையில் முடிசூட்டி ஞன் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிருர் கள். ஹோய்சாள வல்லாளன் பெயரால் ஒரு கோபுரம் இன்றும் வழங்கப்படுகிறது. ஹோய்சாளருக்குப் பிறகு விஜயநகர அரசர் கள் இங்கு சிறப்பாகப் பணிபுரிந்திருக்கிருர் கள். இவர்களில் கிருஷ்ண தேவராயன் மிகுந்த சிறப்பிடம் வகிக்கிருன்.

ராஜேந்திரன் காலத்தில் ராஜேந்திர சோழ னுடைய பணிமகன் உதயதிவாகரன் என்பவன் பிக்ஷாடனர் விக்கிரகத்தை இங்கு எழுந்தருளி வித்தான். அவன் காலத்தில் கார்த்திகைத் திருநாள் மிகவும் சிறப்பாக இங்கு கொண்டா டப்பட்டது. அந்தத் திருநாளில் திருவேட்டை எழுந்தருளிச் சட்டிச்சோறு அவருக்குக் கொடுத் தார்கள். அதே காலத்தில் உத்தராயணம், தக்ஷிணுயணம் ஆகிய புண்யகாலங்களில் 1008 கலசம் வைத்து விசேஷமாக அபிஷேகங்கள் நடத்தினுர்கள். அன்று, ராஜேந்திர சோழ னுடைய பெயரினுல், வெளியூரிலிருந்து வருபவர்கள் உண்பதற்கு ராஜேந்திர சோழன் சாலை என்று ஒரு சாலை இருந்தது. அப்பொழுது இருந்த அளவுகளுக்கெல்லாம் திருவண்ணுமலை பெயரே இருந்தது. திருவண்ணுமலை மரக்கால், திருவண்ணுமலை நாழி என்ற அளவுகள் இருந் தன.

ஒரு கல்வெட்டில் திருவெண்ணெய்நல்லூர் உடையார் மெய்கண்ட தேவர் ஆன ஊருடை யப் பெருமாள் என்ற வேளாளர் குறிக்கப்படு கிருர். இவர் மெய்கண்டீஸ்வரம் கோயில் எடுத்ததையும் அந்தக் கல்வெட்டு கூறுகிறது. இந்த வெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவர் என்பவர் தான் சைவ சித்தாந்த முதல் ஆசான் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருது கிருர்கள்.

மூன்ருவது குலோத்துங்கன் காலத்திய பல கல்வெட்டுகளும் இங்கே காணப்படுகின்றன. அவன் காலத்தில் பொன் பரப்பினுன் மஹறதைப் பெருமாள் என்பவனைப் பற்றிப், புகழ்ந்து பல பாடல்கள் கல்வெட்டில் குறிக்கப்பட்டு இருக்கின்றன. அவனி ஆளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன் என்ற பல்லவ அரசனும், சிற்றரசனும், அவன் மகனும் இந்தக் கோயிலுக்கு ஏராளமான தானங்களும், நிலங்களும், கட்டிடங்களும் கொடுத்து இருக்கிருர்கள். அவனி ஆளப் பிறந்தான் திருவாசி என்ற ஒன்றும் பொன்னுல் ஆன சிம்மாசனம், கர்ப்பக விருஷம், முத்துப்பந்தல், மாணிக்கமும் வைரமும் கட்டின கூடமஞ்சமும் நடராஜப் பெருமானுக்குப் பரதம் வல்லப் பெருமாள் என்ற திருவாசியும் கோப்பெருஞ்சிங்கன் செய்து கொடுத்தானும். உண்ணுமுலை தேவியாருக்குப் பொன்னுடையும், குன்றெரிந்த முருகனுக்கும், தேவிக்கும் பொன் அணிகள் பலவும் அவன் கொடுத்தான். அவனுடைய மகன் பல மண்டபங்களைக் கட்டினுன். திருப்பள்ளி அறை, அமுது மண்டபம், அவனி ஆளப் பிறந்தான் மண்டபம் முதலியவைகளைச் செய்திருக்கிருன். நாடு காத்த பெருமாள் தடாகம், வாள் வல்ல பெருமாள் கிணறு, காடவ குமாரன் தடாகம்; ஐயன் ஏரி, வென்று மலை கொண்ட பெருமாள் ஏரி முதலிய ஏரிகளையும், குளங்களையும் வெட்டி வைத்தான். காங்கேயன் மடம், அம்மை மடம் என்று பல மடங்களைக் கட்டி வைத்தான். அவனி ஆளப் பிறந்தான் தோப்பு, சேனைத்தலைவன் தோப்பு என்று பல தோப்புக்களையும் உண்டாக்கினுன். மிர்சங்கமல்லன் பெரும் பண்டாரம் என்னும் பண்டாரத்தையும் அமைத்தான் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இதிலிருந்து கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும், அவன் மகன் காலத்திலும் திருவண்ணுமலையில் சிறந்த திருப்பணிகள் தொடர்ந்து நடந்தன என்று அறிய முடிகிறது.

ஹோய்சாள மன்னர்களில் மூன்ருவது வல்லாளன் காலத்தில் கோபுரமும், திருச்சுற்றும் எடுக்கப்பட்டன. அந்தத் திருச்சுற்று மதிலில் மேலே ஒரு அரசன், மற்ருெரு அரசனுக்கு முடி சூட்டுவது போலச் சிற்பங்கள் தொடர்ந்து காணப்படுகின்றன. அந்தச் சிற்பத்தில் மீன் உருவமும், செண்டும் காணப்படுகின்றன. ஹோய்சாள மன்னன் பாண்டியர் ஆட்சியை நிலை நிறுத்தினுன் என்று வரலாறு கூறுகிறது. அந்நிகழ்ச்சியை இச் சிற்பங்கள் காட்டுகின்றன போலும்!

ஹோய்சாளருக்குப் பிறகு திருவண்ணுமலைக் கோயிலில் சிறந்த திருப்பணிகளைச் செய்தவன் கிருஷ்ணதேவராயன். அவன் காலத்தில் அவன், தான் அடைந்த வெற்றிகளின் நினைவாக இந்தக் கோயிலில் கீழ்வரும் திருப்பணிகளைச் செய்தான் :

1. ஆயிரக்கால் மண்டபம்
2. இதன் எதிரில் வசந்த உத்சவத்திற்குத் திருக்குளம்
3. இதற்குத் தண்ணீர் வருவதற்கு திருமலை தேவி அம்மன் சமுத்திரம் என்னும் ஏரி
4. 11 நிலைக் கோபுரம்
5. 7-ஆம் திருநாள் மண்டபம்
6. விநாயகருக்குத் தேர்
7. வாசல் கதவு
8. உத்தமச்சோழன் வாசல் கால்
9. மேற்படி வாசலுக்குப் பொன்
10. பத்தரை மாற்று கொடி கொடுங்கை
11. உண்ணுமுலை நாச்சியார் கோயில் வாசல் கால் கதவு
12. சடைப்பெருமாள் கோயில் வாசல் கால் கதவு
13. மடப்பள்ளிக்குமுன் கிணறு
14. கிருஷ்ணராயன் பதக்கம்
15. நாகாபரணம்
16. இந்திர விமானம் (வெள்ளி)
17. பொன்னுல் சேகண்டி
18. திருமஞ்சனம் எடுக்க வெள்ளிக்குடம்
19. கிருஷ்ணதேவராயன் பேரில் ஒரு சந்திப் பூஜை
20. இவை தவிர, திருப்பாட்டு ஓதுவார்கள், தேவரடியாள், அத்யனம் பண்ணுவார், பல்லக்கு சேர்வை முதலியவற்றுக்கு ஆட்களையும் நியமித்தான்.

கிருஷ்ணதேவராயனுடைய பணிகளுக்கு உறுதுணையாக இருந்தவர் அவனுடைய தானைத் தலைவராக இருந்த செவ்வப்ப நாயக்கன் என்பவர். அவரோடு புகழ் மிகுந்த கோவிந்த தீக்ஷிதர் அங்குச் சில காலம் தங்கிப் பணிபுரிந்திருக்கிருர் என்றும் கல்வெட்டிலிருந்து அறிகிருேம்.

திருவண்ணமலையில் முதல் இராஜேந்திரசோழன் காலப் பணிகள்

டாக்டர் ஆர். நாகசாமி

பண்டைய காலத்தில் ஊர்ச்சபைகள் இருந்தன. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், பங்கு கொண்டு ஊர்க் காரியங்களைக் கவனித்தனர். அதுபோல வியாபாரிகள் தங்களுக்கென ஒரு சபை அமைத்துக் கொண்டிருந்தனர். அந்தச் சபைக்கு 'நகரம்' என்று பெயர். வியாபாரிகள் நிறைந்த இடத்துக்கும் நகரம் என்று பெயர். அவர்களது சபைக்கும் நகரம் என்றே பெயர். இதில் அங்கம் வகித்தவர்களே நகரத்தார் எனப்படுவர். இராஜேந்திர சோழன் காலத்தில் (கி.பி. 11-ம் நூற்றுண்டில்) திருவண்ணமலையில் நகரத்தார் இருந்தனர். அவர்கள் இன்றுள்ள நகரத்தார் போலவே திருவண்ணமலைநாதர் கோயிலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். அந்த நகரத்தார்களின் பெயர்களும் நமக்குக் கிடைத்துள்ளன.

1. திருவண்ணமலை வியாபாரி வயிலி அரயன்
2. அடைக்கலவன் படியனும்
3. விக்ரமாதித்தன் மருதமாணிக்கம்
4. கோயில் திருவாலி
5. சாத்தன் அடைக்கலம்
6. காவன் குட்டேறன்
7. மாதேவன் விளக்கண்

என்பது அவர்கள் பெயர். இந்த நகரத்தார் திருவண்ணமலை நாதருக்கு உத்திராயணத்தன்றும், தக்ஷிணயன சங்கிரமத்திலும் 1008 கலசம் அபிஷேகம் செய்யவும், மகாநைவேத்யம் (பெருந்திருவமுது) படைக்கவும் ஏற்பாடு செய்தார்கள்.

திருவண்ணமலைக்குப் பக்கத்தில் முள்ளூர் என்று ஓர் ஊர் இருந்தது. அந்த ஊர் நிலங்களில் இந்நகரத்தார் பயிர் செய்தார்கள். இவ்வாறு பயிர் செய்ய பக்கத்து ஊரான மாத்தூர் ஏரியிலிருந்து நீர்ப் பாய்ச்சினார்கள். வடதூம்பாறு என்னும் ஆறு வழியாக நீர்ப் பாய்ச்சினார்கள். அவ்வாறு பயிர் செய்து தாங்கள் அனுபவித்ததற்குப் பதிலாக அந்த ஊர் கட்ட வேண்டிய வரிகளை எல்லாம், கோயிலுக்குக் கொடுத்து விட்டார்கள். அவ்வாறு கோயிலுக்குக் கொடுக்க வேண்டியது ஆண்டுக்கு 32 கழஞ்சுப் பொன் என்று நிர்ணயிக்கப்பட்டது. இதை நிர்ணயித்தவன் இராஜராஜ மூவேந்த வேளான் என்னும் அரசாங்க அதிகாரியாவார். இந்த 32 கழஞ்சுப் பொன் கொண்டுதான் ஆண்டாண்டு தோறும் அண்ணமலை நாதருக்கு 1008 கலசம் அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். நகரத்தார்கள் இவ்வாறு செய்த ஏற்பாட்டை முதல் பிரகாரத்தில் இருக்கும் ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. (ARE 479/1902) இந்த கல்வெட்டு இராஜேந்திர சோழன் காலத்தது.

இந்த இராஜேந்திர சோழன் காலத்தில் திருவண்ணமலைக் கோயிலில் பல பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இராஜேந்திர சோழனுடைய பணிமகன் ஒருவன் பெயர் பாண்டி உதய திவாகரன் என்பது. அவன் சோழ மண்டலத்து அருமொழித்தேவ வளநாட்டு ஆர்வலக்கூற்றத்து ராஜராஜ நல்லூரைச் சேர்ந்தவன். அவன் திருவண்ணமலைக் கோயிலில் ஒரு பிக்ஷாடனர் விக்ரஹம் செய்து வைத்தான்; அதற்குத் தினமும் பூஜை செய்ய ஏற்பாடு செய்தான்; அதற்கு நாள்தோறும் மூன்று கால பூஜை—சிறுகாலை, உச்சியம்போது, இரவு என்ற மூன்று கால பூஜை—அதற்கு நைவேத்தியத்துக்குக் காலையில் அரிசி 2 நாழி, உச்சியம்போது 4 நாழி, இரவு 2 நாழி கொடுக்க ஏற்பாடு செய்தான். இதுதவிர கறியமுது, பொரிக்கறி, புழுக்குக்கறி முதலியவைகளும்

நைவேத்யமாகப் படைக்கப்பட்டன. இதற்கு மிளகு, உப்பு, நெய், தயிர், அடைக்கலம் (பாக்கு), வெறும்பாக்கு 4, வெற்றிலை எட்டு எண்ணெய்–முதலியவைகளும் ஒவ்வொரு கால பூஜைக்கும் கொடுக்க ஏற்பாடு செய்தான். இவைகளுக்காகக் கோயிலில் நெல் அளக்க வேண்டும். ஒரு ஆண்டுக்கு 160 கலம் நெல் இவ்வாறு அளக்க ஏற்பாடு செய்தான். அங்கு அளக்கும் மரக்காலுக்குத் திருவண்ணாமலை மரக்கால் என்றே பெயர்.

இந்த நெல் விளைவதற்கு நாலுபட்டி நிலம் வாங்கிக் கொடுத்தான், கீழைப்பட்டி, நடுவில் பட்டி, மேலைப்பட்டி, ஆனைஏத்தப்பட்டி என் பன இந்த நான்கு பட்டிக்கும் பெயராகும், இந் நிலங்களை உழுது மேல்வாரத்தால் வந்த நெல்லை, கோயிலில் அளக்க வேண்டும். அந்த நெல்லைக் கொண்டு மேல் சொன்னபடி பிக்ஷா டனருக்கு மூன்று காலம் பூஜை செய்ய வேண்டும் என ஏற்பாடு செய்தான்,

இதே உதயதிவாகரன் இன்னும் சில பணி களும் செய்திருக்கிறான். திருவண்ணாமலை நாதர் கார்த்திகை மாதம் திருவேட்டைத் திருவிழாவிற்கு எழுந்தருளும்போது மகா நைவேத்யம் செய்ய ஏற்பாடு செய்தான். அதே சமயத்தில் அடியார்களுக்குச் 'சட்டிச் சோறு' பிரசாதம் கொடுக்கவும் ஏற்பாடு செய்தான். அதற்காக ஏழு கழஞ்சுப் பொன் கொடுத் தான். இந்த ஏழு கழஞ்சில் நான்கு கழஞ்சை புலியூர் என்னும் ஊர்ச்சபையார் பெற்றுக் கொண்டார்கள். இதிலிருந்து ஆண்டுதோறும் மகா நைவேத்யத்துக்கு நெல் அளக்க ஒப்புக் கொண்டார்கள். இந்த நெல்கொண்டு திரு வமுது, 5 கறி, புளிங்கறி, மிளகு, உப்பு, சீரகம், நெய், தயிர், எட்டு வாழைப்பழம், 20 பாக்கு, எண்பது வெற்றிலை, விறகு, வாழைக்குருத்து, குசக்கலம், கலமிடும் குய வன், முதலியவற்றிற்கு கொடுக்க ஏற்பாடு செய்தான்.


மீதம் மூன்று கழஞ்சுப் பொன்னையும் வயிர மேக சதுர்வேதிமங்கலம் என்னும் ஊர்ச்சபை பெற்றுக்கொண்டது. அதற்கு வட்டியாக ஆண்டுதோறும் நெல் அளக்க ஒப்புகொண் டது. இதிலிருந்து திருக்கார்த்திகை திருவிழா வில் திருவேட்டை எழுந்தருளும்போது அடி யார்களுக்கு 'சட்டிச் சோறு' கொடுக்க ஏற் பாடு செய்தான். 'சட்டிச் சோறு' என்றால் ஒரு சட்டிக்கு 2 நாழி அரிசி, கறி, புளிங்கறி, மிளகு, சீரகம், உப்பு, நெய், தயிர், நாலு பாக்கு முதலியவை கொடுக்க வேண்டும். இது சமைக்க விறகுக்கும், விறகு கொண்டு வந்து கொடுப்பவருக்கும், சட்டி மூடிக்கொடுக்க வாழையிலைக்கும் நெல் கொடுக்க வேண்டும். இதற்காக குயவன்கலம், 20 சட்டி, பேரகல் நாற்பது, சிற்றகல் இருபது கொடுக்க வேண் டும் என்று ஏற்பாடு செய்தான். அக்காலத் திலேயே அடியார்களுக்குக் கொடுக்கும் சட்டிச் சோற்றைப்பற்றி இவ்வளவு குறிப்பு இருப் பது வியப்பாக இருக்கிறது,

இதே பெருமகன் திருவண்ணாமலைநாதருக்கு நாள்தோறும் பஞ்சகவ்யம் (ஆவின் ஐந்து) அபிஷேகம் செய்யவும் ஏற்பாடு செய்தான். பிக்ஷாடனருக்கு இரண்டு நந்தாவிளக்கு எரிய வகை செய்தான். கோயிலில் விமானத்தைச் சுற்றி இரவில் 14 சந்தி விளக்கு எரிக்க வகை செய்தான். இந்த விளக்குகள் எரிக்க 528 ஆடுகள் கொடுத்து எண்ணெய் அளக்கச் செய் தான். இன்றைய கணக்கில் ஆடுகளுக்கு மட் டும் இவன் கொடுத்தது 25,000 ரூபாய் ஆகும். திருவண்ணாமலைநாதரிடம் அவ்வளவு பக்தி பூண்டவனாகத் திகழ்ந்திருக்கிறான் இந்த அரசு அதிகாரியான பாண்டி உதயதிவாகரன்.


இராஜேந்திர சோழன் காலத்தில் அம்மன்னன் பெயரால் இங்கு ஒரு உண்ணும் சாலை இருந்தது. இராஜேந்திர சோழன் சாலை என் னும் இந்தச் சாலையில் வெளியூரில் இருந்து வருபவர்கள் உண்பதற்கு வகை செய்யப்பட் டது. இதற்காக கோயிலிலிருந்து பல ஊர்ச் சபைகள் பொருள் வாங்கிக்கொண்டு நிலம் விற்றுக் கொடுத்தார்கள். இவ்வாறு நிலம் கொடுத்த ஊர்கள் ஆடையூர், ராஜேந்திர சோழ நல்லூர், மைசாற்றூர், மதுராந்தக எறிமதிபி கண்ட நல்லூர், குளக்குடி ஆகிய ஊரினர் நிலம் விற்றுக் கொடுத்தார்கள். இந் நிலம் ஒரு பட்டியில் விலை நாற்பது கழஞ்சு பொன். இந்நிலத்திலிருந்து வரும் பொருள் கொண்டு உணவு அளிக்க வகை செய்யப் பட்டது.




பிரதான யாகசாலை புறந்தோற்றம்



யாகசாலை அகந்தோற்றம்



பரிவார தேவதைகள் யாகசாலை-தோற்றம்




இரவில் யாகசாலை



யாகசாலையில் முக்கியஸ்தர்கள்




கோவிலூர் மடாதிபதி தவத்திரு
இராமநாத ஞானதேசிகர் அவர்களுக்கு
பூரண கும்ப மரியாதை





யாகசாலையில் தீபம் ஆகிறது



அன்பர்கள் வழிபடுகிறார்கள்




யாகசாலை அம்மன் கலசம்

யாகசாலையிலிருந்து கடங்கள் ஊர்வலமாக எடுத்துவரப் பெறுகின்றன — இரு தோற்றங்கள்



கும்பாபிஷேகத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பக்தர்கள் கூட்டம்




யாகசாலையிலிருந்து மங்கல வாத்தியங்கள் முழங்க, கடங்கள் எடுத்து வரப்பெறுகின்றன




திருச்சி சுவாமிகள், கோவிலூர் சுவாமிகள், திரு. சிதம்பரம் செட்டியார்
ஆகியோர் கும்பாபிஷேக நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்




கும்பாபிஷேகத்தன்று ஒரு காட்சி: கவர்னர் அவர்களின் ஆலோசகர்களான திரு. பி. கே. தவே,
திரு. ஆர். வி. சுப்பிரமணியமும் அவர் குடும்பத்தினரும், கவர்னர் அவர்களின் மனைவி
திருமதி மதுபென்ஷா ஆகியோர்



அண்ணாமலையார் விமான கும்பத்தில் புனிதநீர் ஊற்றப்பெறும் மங்கலக் காட்சி



அம்மன் விமானம்: கும்பாபிஷேகக் காட்சி



4-4-1976

கும்பாபிஷேகம்

திருப்பணி நிதி

1.	அரசு மானியம்	ரூ. 7,25,000
2.	ஆணையர் பொதுநல நிதி	ரூ. 1,50,000

திருக்கோயில்களின் நன்கொடை

1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி (மேற்கு ராஜ கோபுரம்)	ரூ. 1,35,000
2.	அருள்தரும் கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு (வடக்கு — தெற்கு கட்டைக் கோபுரங்கள்)	ரூ. 1,00,000
3.	சிவகங்கை தேவஸ்தானம், சிவகங்கை (வல்லாள மகாராஜா கோபுரம்)	ரூ. 1,00,000
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி	ரூ. 35,000
5.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்	ரூ. 30,000
6.	டி.பி. சூரியநாராயண செட்டியார் அன்னதான தேவாரப் பாடசாலை, திருவண்ணாமலை	ரூ. 25,000
7.	அருள்மிகு கலியுகவரதராஜ பெருமாள் திருக்கோயில், கல்லங்குறிச்சி	ரூ. 25,000
8.	அபீஷியல் டிரஸ்டி, சென்னை	ரூ. 30,000
9.	இராமநாதபுரம் சமஸ்தானம், ஆவுடையார் கட்டளை நிதி	ரூ. 10,000
10.	அருள்மிகு நவநீதேஸ்வரர்சுவாமி திருக்கோயில், சிக்கல்	ரூ. 10,000
11.	அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில், மதுரை	ரூ. 10,000
12.	ஆரிய வைசியர் மடம், நெரிஞ்சிப்பேட்டை	ரூ. 5,000
13.	அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், சென்னை	ரூ. 5,000
14.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேச்சுரம்	ரூ. 5,000
15.	தருமபுரம் ஆதீனம், தருமபுரம்	ரூ. 5,001
16.	காஞ்சி காமகோடி பீடம், காஞ்சிபுரம்	ரூ. 1,001
17.	ஆதீன கர்த்தர், கோவிலூர் மடாலயம், கோவிலூர்	ரூ. 1,111
18.	குமாரதேவர் மடாலயம், விருத்தாசலம்	ரூ. 1,001

முக்கிய பிரமுகர்களின் நன்கொடை

1.	டால்மியா சிமெண்ட் பாரத் லிமிடெட், புதுதில்லி	ரூ. 10,000
2.	திரு பி. கோவிந்தபட், உடுப்பி பிருந்தாவன் ஹோட்டல், ஆத்தூர், சேலம்	ரூ. 10,001
3.	மெஸர்ஸ் அண்ணாமலையார் மில்ஸ், திண்டுக்கல்	ரூ. 10,000
4.	ஸ்ரீ வெங்கடேஸ்வரா மில்ஸ், உடுமலைப்பேட்டை	ரூ. 10,000
5.	எம்.எஸ்.என். சுந்தரம் பிள்ளை & கோ., திருச்சி	ரூ. 10,000

கும்பாபிஷேக ஏற்பாடுகள்

அண்ணுமலையார் கோயில் கும்பாபிஷேகம் 1944-இல் நடைபெற்ற பிறகு, மீண்டும் மருந்து சாத்தி அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்ய வேண்டிய தேவையைப் பொது மக்களும், அறங் காவலர்களும், அதிகாரிகளும் 1966ஆம் ஆண்டு முதலே உணர்ந்தனர். கோயிலின் பல பகுதிகள் பழுதடைந்திருந்ததால் அவற்றைப் புதுப்பிக்கும் வேலையையும் மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நிலவியது. அதன் பயனுக, அருள்மிகு அண்ணுமலையார் கோயில் அறங் காவலர் குழுவினர் 26-3-1970இல், திருப்பணிக் குழு ஒன்றினை அமைத்தனர். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று, இத் திருப்பணிக் குழு பணி புரியத் தொடங்கிற்று.

திருப்பணிக் குழுவினர் வருமாறு:
புரவலர்

1. தவத்திரு இராமநாத ஞானதேசிக சுவாமிகள் அவர்கள்,
அதிபர், கோவிலூர் திருமடாலயம், கோவிலூர்.

தலைவர்

2. திரு. சா. நா. அ. சொ. அண்ணுமலைச் செட்டியார் அவர்கள்.

கும்பாபிஷேகக் குழுத் தலைவர்

3. திரு. அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள்.

துணைத் தலைவர்

4. திரு. டி. வி. சுப்பிரமணியச் செட்டியார் அவர்கள்.

உறுப்பினர்கள்

5. திரு. சா. கணேசன் அவர்கள்.
6. திரு. ஏ. கே. ஏ. சிடி. வி. அழகப்ப செட்டியார் அவர்கள்.
7. திரு. பி. வி. ஆர்எம். குழந்தையன் செட்டியார் அவர்கள்.
8. திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்கள்.
9. திரு. என். மகாலிங்கம் அவர்கள்.
10. திரு. மணலி எஸ். ராமகிருஷ்ண முதலியார் அவர்கள்.
11. திரு. ஏ. எல். ஏ. ஆர். சோமநாதன் செட்டியார் அவர்கள்.
12. திரு. எஸ். வி. ஆர். எம். நடராஜ முதலியார் அவர்கள்.
13. திரு. எம். கே. நடேச முதலியார் அவர்கள்.
14. திருமதி மா. எப். தலையார்கான் அவர்கள்.
15. திரு.கே. சீனிவாசாச்சாரியார் அவர்கள்.
16. திரு. டி. எஸ். பத்ராசலம் பிள்ளை அவர்கள்.
17. திரு. எஸ். எஸ். வி. எஸ். முத்தையா செட்டியார் அவர்கள்.
18. திரு. ஆர்எம். ஆர்எம். இராமநாதன் செட்டியார் அவர்கள்.

19. திரு. ஆர். எம். பி. என். அருணுசலம் செட்டியார் அவர்கள்.

20. திரு. எஸ். ஜெயராம பிள்ளை அவர்கள்.

21. திரு. எம். தருமலிங்கம் அவர்கள்.

22. திரு. ஏ. நடராசன் அவர்கள்.

வேலைக் குழுத் தலைவர்

23. திரு. பி. எஸ். மாணிக்கவேலு அவர்கள்.

செயலாளரும் பொருளாளரும்

24. திரு. தி. ந. பரமசிவம், பி.ஏ. அவர்கள் (நிர்வாக அலுவலர்).

வருமான வரியினின்றும் விதிவிலக்கு

நிதி திரட்டும் வேலை, பெரிய அளவில் செய்யப்பட வேண்டும் என்பதைத் திருப்பணிக் குழுவினர் உணர்ந்தனர். எனவே, திருப்பணிக்கு வழங்கப்பெறும் நன்கொடைகளுக்கு வருமான வரியிலிருந்தும் விலக்குப் பெறப்பெற்றது. 1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் 80 (G) பிரிவின் செயல் நோக்கத்திற்காக, திருவண்ணுமலை அருள்மிகு அருணுசலேஸ்வரர் தேவஸ்தானம், தொல்பொருள் முக்கியத்துவமும், கலை நுணுக்கமும் கொண்டது என்று புதுதில்லி, இந்திய அரசு நிதி அமைச்சின் (வருவாய் காப்புறுதித் துறையில்) 5-6-1970 நாளிட்ட 92ஆம் எண் அறிவிப்பில் (F. No. 176/27/70-II (AI)) அறிவிக்கப் பட்டுள்ளது.

மலேசியா-சிங்கப்பூர் வசூல்

ஆண்டுகள் செல்லச் செல்ல, விலைவாசிகள் ஏறின. அதனுல், முன்னர்த் திருப்பணிக்குத் திட்டமிட்டதைப்போல், பணம் இருமடங்கு தேவைப்பட்டது. ஆனுல் எதிர்பார்த்தவாறு நன்கொடைகள் சேரவில்லை. இச்சூழ்நிலையில், செல்வம் செழிக்கும் சிங்கப்பூருக்கும், மலேசியாவுக்கும் சென்று அங்குள்ள நகரத்தார்களிடம் நன்கொடை திரட்டுவது என்று முடிவு செய்யப் பெற்றது. திரு. சி. வி. சி. டி. வெங்கடாசலம் செட்டியார் அவர்களும், அறங்காவலர் குழுத் தலைவர் திரு. டி. வி. சுப்பிரமணியம் செட்டியார் அவர்களும் மலேசியாவுக்குச் சென்றனர். அங்கு அவர்களுக்கு வேண்டும் உதவிகளை எல்லாம் திருப்பணிக் குழுத் தலைவர் திரு. அ. சொ. அண்ணுமலைச் செட்டியார் அவர்களும், திரு. க. வீ. அள. ராம. ராம. இராமநாதன் செட்டியார் அவர்களும் செய்தனர். இதன் பயனுக ஓரளவு நிதி வசூலாயிற்று.

நினைவு அஞ்சலி

அண்ணுமலையார் கோயில் திருப்பணி வேலைகளை ஆர்வத்துடன் தொடங்குவதற்கும், தக்கவர்களிடமிருந்து நன்கொடை பெறவும் உறுதுணை புரிந்தவர்கள் காலஞ்சென்ற தமிழ்க் கடல் சிவம் பெருக்கும் சீலர் ராய. சொ. அவர்கள் ஆவர். அவர்களை என்றும் நினைப்போமாக!

புரவலர் பணி

கோவிலூர் மடத்தின் தலைவர் தவத்திரு. இராமநாத ஞான தேசிகர் அவர்கள், திருப்பணிக் குழுவின் புரவலரும் கும்பாபிஷேக மலர்க் குழுவின் தலைவரும் ஆவார்கள். இவர்கள் ஈசானிய மடத்தின் தலைவராய்ப் பல ஆண்டுகள் இருந்து, அண்ணுமலையாரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு தல விளக்கமும் எழுதியுள்ளார்கள். திருப்பணி இனிது நிகழ அல்லும் பகலும் உடனிருந்து அனைவரும் நயக்கும் வண்ணம் உவப்பக் கூறி, இவர்கள் செய்திருக்கும் தொண்டுகள் என்றும் நினைக்கத் தக்கன.

அனைவருக்கும் வாழ்த்துக் கூறியும், கும்பாபிஷேக நடைமுறை, யாகசாலை வேலைகள் ஆகியன குறித்துப் பக்குவமாய் அறிவுரை நல்கியும், மலர் உருவாகப் பண்புடன் வழிகாட்டியும் ஊக்குவித்துள்ளார்கள். சுவாமிகளுக்கு அண்ணுமலையார் என்றும் திருவருள் பாலிப்பாராக!

உதவிக் கச்சேரிகள்

இசைப் பேரறிஞர் சங்கீத கலாநிதி டாக்டர் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள், பக்தி உணர்வும், அறச் செயல்களுக்கு உதவும் உள்ளமும் உடையவர்கள். கச்சேரிகள் செய்து, திருப்பணி நிதி திரட்ட அவர்கள் ஆதரவு நல்கி இருக்கிருர்கள். அவர்களுக்கும் திரு. சதாசிவம் அவர்களுக்கும் அகங்கனிந்த நன்றி.

உபரி வருவாய்க் கோயில்கள்

வருவாய் மிகுதியாக உள்ள குறிப்பிட்ட சில கோயில்களிலிருந்து, அண்ணுமலையார் கோயில் திருப்பணிக்குப் பெரிய அளவில் நன்கொடைகள் பெறவும் முயற்சி செய்யப்பெற்றது. மேற்கண்ட கோயில்களின் அறங்காவலர் குழுத் தலைவர்களையும், அறங்காவலர்களையும் சந்தித்து, ஆணையர், துணை ஆணையர்கள் ஆகியோரின் உதவியுடன் அவர்களுடைய ஆதரவைப் பெற்றேம். ஒவ்வொரு கோயிலுக்கும் பலவகையான செலவுகள் இருந்த போதிலும் அண்ணுமலையார் கோயிலின் நிலைமையை உணர்ந்து அவர்கள் அனைவரும் மனமுவந்து பெருந் தொகைகளை வழங்கினுர்கள். விவரம் 222-ஆம் பக்கத்தில் காண்க.

ஆணையர் ஆதரவு

அற நிலையத்துறை ஆணையர் நிதியிலிருந்தும் நன்கொடைகள் கிடைத்தன. விவரம் 222-ஆம் பக்கத்தில் கொடுக்கப்பெற்றுள்ளது.

அரசு மானியம்

தமிழக அரசு, தாராளமாக மானியங்கள் வழங்கி இருப்பதை அடுத்தபடியாகக் குறிப்பிடவேண்டும்.

அண்ணுமலையார் கோயிலின் பரப்பையும் கோபுரங்களின் எண்ணிக்கையையும் உயரத்தையும் நோக்கத் தனியார் நன்கொடைகளும், உபரி நிதியுள்ள கோயில்களின் உதவியும் போதியனவாக இல்லை. எனவே, விதிவிலக்காக அரசாங்கம் இக் கோயிலுக்கு உதவ வேண்டுமென்று கேட்டோம்.

அவ்வாறே அரசினர் உதவினர். அத்தகைய உதவி மேலும் தேவைப்பட்டபோது, குடியரசுத் தலைவருடைய ஆட்சியில் 1976 மார்ச்சு மாதத்தில், தமிழக ஆளுநர் அவர்கள் ஒரே நாளில், ஐந்து லட்ச ரூபாய் அளிப்பதற்கு ஆணை பிறப்பித்தார்கள். தமிழ்நாட்டுக் கோயில்களின் வரலாற்றிலேயே எந்த ஒரு கோயிலுக்கும், தமிழக அரசு, இவ்வாறு வாரி வழங்கியதில்லை. உரியவர்கள் அனைவர்க்கும் எங்கள் நன்றியும் வணக்கமும் உரியன.

நகரத்தார் பங்கு

1974 நவம்பர் மாதத்தில் திரு. அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார் அவர்களுடைய சென்னை இல்லத்தில் அறங்காவலர்கள், திருப்பணிக் குழு உறுப்பினர் சிலர், அறநிலையத் துறை ஆணையர் ஆகியோர் கூடி, திருப்பணி வேலையைப் பற்றிப் பேசினுர்கள்.

அண்ணுமலையார், உண்ணுமுலை அம்மன் சந்நிதிகளில் அடங்கிய பகுதிகளையும் அவற்றையடுத்து மூன்றும் பிரகாரத்தில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தையும் ஏனைய மண்டபங்களையும், பஞ்சபூத ஸ்தலங்களுக்குரிய கோயில்களையும் சொந்தமாக ஸ்தபதிகளை வைத்துச் சுதை வேலை செய்து, பல லட்சம் ரூபாய் செலவு செய்து விமானங்கள் முதலிய எல்லாவற்றையும் செம்மையாகவும் சிறப்பாகவும் புதுப்பித்துத் தருவதாகவும், யாகசாலை முதலியவற்றை மிக நன்ருக அமைத்து, மருந்து சாத்திக் கும்பாபிஷேகத்தையும், மகா அபிஷேகத்தையும், சுவாமி புறப்பாட்டையும் தங்கள் செலவிலேயே நடத்தித் தருவதாகவும் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சார்பில் திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள் முன்வந்தார்கள். இவ்வாறு பொறுப்பேற்றுக் கொள்வதற்கு அவர்கள் ஒரு நிபந்தனையையும் விதித்தார்கள். மேற்கண்டவாறு வேலை செய்வதற்கு எவ்வித இடையூறும் இருக்கக்கூடாது என்றும், உட்பகுதித் திருப்பணியையும் கும்பாபிஷேக வேலைகள் அனைத்தையும் நகரத்தார்களிடம் ஒப்படைப்பதாக அறங்காவலர் குழுவில் முடிவு செய்து, ஆணையருடைய இசைவையும் நகரத்தார்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

ஆறு மாத காலத்திற்குப் பிறகு, திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள் கேட்டுக் கொண்டபடி உரிய இசைவு வழங்கப்பெற்றது.

அதன் பிறகு, நகரத்தார்களிடம் நன்கொடை பெற்றும், தாங்களும் உதவியும் திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள் திருப்பணி வேலையைத் தொடங்கினுர்கள். கர்ப்பக்கிரகங்கள் (கருவறைகள்), மதில் சுவர்கள், தீப தரிசன மண்டபம், நான்கு கால் மண்டபம், பஞ்சபூத ஸ்தலக் கோயில்கள், பிடாரிகோயில், ஆகியவை இவ்வாறு சீராகவும் சிறப்பாகவும் தக்கவர்களுடைய மேற்பார்வையிலும் புதுப்பிக்கப்பெற்றன. மூலவர் சந்நிதிகள் சுத்தம் செய்யப் பெற்று ஒழுக்குகள் ஏற்படாது சுவாமி கோயில், அம்மன் கோயில் ஆகியவற்றின் தார்சுகளும் பழுது பார்த்துப் புதுப்பிக்கப் பெற்றன. எல்லா விமானங்களுக்கும் வர்ணம் வைக்கப்பெற்றது.

திருக்கல்யாண மண்டபத்தில் தேவையான பழுதுகள் பார்த்துத் தார்சு செப்பனிடப் பட்டதோடு, செப்புத் தகடுகளைப் பிரித்து ஒழுக்கு ஏற்படாதவாறு மீண்டும் போடப் பெற்றது.

கோயிலின் முதல் பிரகாரத்திலும் இரண்டாம் பிரகாரத்திலும் தளவரிசைகள் சிமெண்ட் பாயிண்டிங் செய்யப் பெற்றன.

மேற்கண்ட வேலைகள் யாவும் நகரத்தார்களின் நன்கொடை பெற்று, கும்பாபிஷேகக் குழுவினரால் செய்யப் பெற்றன. இவை தவிர, கீழ்க்கண்ட பணிகளும் நகரத்தார்களால் செய்யப் பெற்றன.

க. வீ. அள. குடும்பத்தார், சிவகங்கைத் தீர்த்தத்தின் கரையிலுள்ள சர்வசித்தி விநாயகர் கோயிலை ஏறத்தாழ ரூபாய் நாற்பதாயிரம் செலவில் புதுப்பித்தார்கள்.

ராம. பெ. குடும்பத்தார் ராஜகோபுரத்தின் முன்பாக உள்ள 16 கால் மண்டபத்தைக் கவர்ச்சியாகப் புதுப்பித்துக் கொடுத்தார்கள்.

இக் கும்பாபிஷேகத்தை யொட்டி, அணி அண்ணுமலைக் கோயிலில் வெள்ளையடித்தல், வண்ணம் பூசுதல் போன்ற பணிகளும் மேற் கொள்ளப் பெற்றன.

ஏனைய திருப்பணிகள்

கிளிக் கோபுரத்திற்கு வெளியேயுள்ள பகுதிகளைப் புதுப்பிக்கும் வேலையைத் தேவஸ்தானத்தார் செய்தார்கள். இவ்வகையில் ரூபாய் இருபது லட்சத்திற்குமேல் செலவாகியிருக்கிறது. பணம் சேரச் சேரத்தான் வேலையை நடத்தக் கூடியதாக இருந்தது. மேலும், இந்த வேலைகள் டெண்டர் விட்டு ஒப்பந்தக் காரர்கள் மூலம் செய்யப் பெற்றன. இவ்வாறு ஏற்பட்ட கால தாமதங்களால் கும்பாபிஷேகத்தை 1976 ஜுன் மாதம் வாகில் வைத்துக் கொள்ளலாம் என்று முதலில் திட்டமிடப் பெற்றது.

கும்பாபிஷேக நாள் முடிவு

1976 ஏப்ரலுக்குப் பிறகு, அதாவது நள ஆண்டில் முதல் ஒன்பது மாதங்கள் கும்பாபிஷேகம் செய்வதற்கு ஏற்றதாக இல்லையென்று தெரிய வந்தது. காஞ்சி காமகோடி பீடம் பெரியவர்கள் நாள் பார்த்துக் கொடுத்தபடி 1976 ஏப்ரல் 4-ம் தேதி ராட்சச பங்குனி 22-ல் கும்பாபிஷேகம் செய்வதென்று கும்பாபிஷேகக் குழுவினர் முடிவு செய்தனர்.

கும்பாபிஷேகத்துக்குச் சில நாட்கள் முன்னதாக, கும்பாபிஷேகக் குழுத் தலைவர் திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள், காஞ்சிப் பெரியவர்களைத் தரிசித்து அவர்களுடைய ஆசியும் பெற்று வந்தார்கள். அண்ணுமலையார் கோயில் கும்பாபிஷேகத்துக்கு மறுநாள் (5-4-76) காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலில் கும்பாபிஷேகம் வைக்கப் பெற்றிருந்தது; எனினும், காஞ்சிப் பெரியவர்கள், அண்ணுமலையார் கோயில் யாகசாலை முதலியவற்றுக்குத் தேவைப்பட்ட வைதீகப் பிராமணர்களை அனுப்பி உதவிய பெருந்தன்மை போற்றத் தக்கது.

சுவரொட்டிகள், அழைப்பிதழ்கள்

கும்பாபிஷேகத் தேதி முடிவு செய்யப் பெற்றதும், திருக்கோயிலார் இரு வண்ணச் சுவரொட்டிகளை அச்சிட்டு, தமிழ் நாடெங்கும் ஒட்ட ஏற்பாடு செய்தனர். எல்லாத் திருக்கோயில்களுக்கும் இவை அனுப்பப் பெற்றன.

சிவகாசி காரனேஷன் லித்தோ ஒர்க்ஸ் உரிமையாளர்கள், கும்பாபிஷேக அழைப்பிதழை அச்சிட்டு அன்பளித்தார்கள். இதைத் திருக்கோயிலார், கோயில்களுக்கும், அறநிலையத் துறை அலுவலகங்களுக்கும், திருமடங்களுக்கும், நன்கொடையாளர் முதலிய பலருக்கும் அனுப்பினர்கள்.

அழைப்பிதழின் சுருக்கம் நாளிதழ்களிலும் வார இதழ்களிலும் விளம்பரமாக வெளியிடப் பெற்றது.

கும்பாபிஷேகக் குழுவின் ஏற்பாடுகள்

இந்த அழைப்பிதழ்களைப் பெற்று, கும்பாபிஷேகக் குழுவினர் நகரத்தார் சங்கங்களுக்கும், நகரக் கோயில்கள் ஒன்பதுக்கும், நகரத்தார்கள் வாழும் ஊர்களிலுள்ள கோயில்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும், கும்பாபிஷேக மலருக்கு விளம்பரங்கள் மற்றும் கட்டுரைகள் கொடுத்தவர்களுக்கும் அனுப்பிவைத்தனர். மேலும், மலேசியாவுக்

கும் அழைப்பிதழ்கள் அனுப்பப் பெற்றன. மலேசியாவிலும், இலங்கையிலும் வெளி வரும் தமிழ் நாளிதழ்களிலும், திருவண்ணு மலைக் கோயிலைப் பற்றிய கட்டுரைகளும் படங்களும், கும்பாபிஷேகக் காட்சிகளும் வெளிவர ஏற்பாடுகள் செய்யப் பெற்றன.

யாகசாலை

இதுவரை எந்தக் கும்பாபிஷேகத்திலும் அமைக்கப் பெற்றதைவிட மிகச்சிறந்த முறை யில் யாகசாலை ஏற்பாடு செய்யப் பெற்றது.

அம்மணி அம்மாள் கோபுரத்துக்கு அருகே நெருஞ்சிமுள் காடாக இருந்த இடம், அறங் காவலர் குழுவின் முன்னுள் தலைவர் திரு. எஸ். எஸ். வி. எஸ். முத்தையா செட்டியார் அவர்களுடைய மேற்பார்வையில் நன்கு சுத்தம் செய்யப்பெற்றது. யாகசாலைக் கொட் டகை போடும் வேலையையும், தளம் அமைக்கும் பணியையும் பல நாட்கள் உட னிருந்து கவனித்த அன்னுருக்கு நன்றி.

1976 ஜனவரி 26-ஆம் நாளில் யாகசாலைக் கொட்டகைக்கு முகூர்த்தக்கால் நடப்பெற் றது. சம்பந்த விநாயகர் சந்நிதியில் வைத்துச் சிறப்புப் பூசைகள் செய்யப்பெற்று, முகூர்த் தக்கால் மங்கல வாத்தியங்களுடன் யாக சாலை இடத்துக்குப் எடுத்துச் செல்லப் பெற்றது. அங்கு மங்கல நீராட்டப்பெற்று, பட்டும் பூவும் அணியப் பெற்று, மஞ்சள் தடவி, உச்சியில் மாங்கொம்பு செருகப் பெற்றபின் அதிர்வேட்டு முழங்க முகூர்த்தக் கால் நடப்பெற்றது. பிறகு, இவ்விழாவில் கலந்துகொண்ட சிவாசாரியார்களுக்குத் திருக்கோயில் அலுவலகத்தில் கோயில் மரி யாதைகள் செய்யப் பெற்றன. அனைவர்க் கும் கும்பாபிஷேகக் குழுவினர் மெ. க. அன் னச் சத்திரத்தில் விருந்து படைத்தனர்.

கலை அழகுடன் யாகசாலைக் கொட்டகையை உருவாக்கும் பொறுப்பு, இந்தத் துறையில் அனுபவம் பெற்ற தஞ்சை மாவட்டம் மாயூ ரம் காண்டிராக்டர் திரு. பக்கிரிசாமியிடம் ஒப்படைக்கப் பெற்றது.

யாகசாலையை மின் விளக்குகளால் அலங் கரிக்கும் பெரும் பொறுப்பை, திண்டுக்கல் அங்குவிலாஸ் கம்பெனியார் தங்களுடைய அன்பளிப்பாக ஏற்றுக் கொண்டார்கள். மேற்படி தொழிற்சாலையின் பங்குதாரர்களான திரு. எம். வி. எம். அங்கமுத்துப்பிள்ளை அவர் கள், திரு. வீர முத்துப்பிள்ளை அவர்கள், திரு. செல்லமுத்துப்பிள்ளை அவர்கள், திருமதி மாரியம்மாள் அவர்கள் ஆகியோருக்கும் பல நாட்களுக்கு முன்னரே நல்ல தேர்ச்சி பெற்ற தங்கள் ஆட்களுடன் திருவண்ணு மலைக்கு வந்து அங்கேயே தங்கியிருந்து வேண் டிய ஏற்பாடுகள் அனைத்தையும் உடனுக் குடன் கவனித்து, பார்த்தவர்கள் வியப் படையும் வண்ணம் மின்சார அலங் காரத்தை மிக அழகாகவும் திறமையாகவும் செய்து கொடுத்த அங்குவிலாஸ் திரு. எம். வி. எம். செல்லமுத்துப்பிள்ளை அவர் களுக்கும் நம் நன்றி உரியது.

உரிய மின்சார இணைப்புப் பெறுவதற்கு வேண்டிய உதவிகளை, தமிழக அரசின் மின்சாரத் துறை உயர் அலுவலர்கள் அன்பு டன் செய்து கொடுத்தார்கள்.

கும்பாபிஷேகக் குழுத் தலைவர் திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள் தங்களு டைய சென்னை இந்திரா காட்டன் மில்லி லிருந்து ஜெனரேட்டரைத் திருவண்ணுமலைக் குக் கொண்டு வந்து யாகசாலையின் மின் அலங்காரத்துக்கு வசதி செய்து கொடுத்தார் கள்.

மருந்துகள் யாவும் சீரிய முறையில், ஆகம விதிப்படி, தகுந்த கண்காணிப்பில் காரைக் குடி கம்பன் மணிமண்டபத்தில் கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்களு டைய கவனிப்பில் செய்யப் பெற்றன.

ஆகம நியதிகளைக் கவனிக்கும் பணியைக் காமகோடிபீடம் சிவ ஆகம மணி சிவ ஆகம சிரோமணி திருவாடானை சிவஸ்ரீ ஐயாமணி சிவம் அவர்களும், அண்ணுமலை யார் கோயில் சிவஸ்ரீ சிவ ஆகம வித்யா சரஸ் வதி பட்டம் இராமலிங்க சிவாசாரியார் அவர்களும் தங்கள் மேற்பார்வையில் நடத் திக் கொடுத்தார்கள்.

தேவாரக் குழுவை மதுரை வணிகர் பாக னேரி திருமுறைப் புரவலர் இராம. முத்துப் பழநியப்பச் செட்டியார் அவர்களும், பாக னேரி திரு. ஏ. ஆர். கிருஷ்ணன் செட்டியார் அவர்களும், தேவகோட்டை திரு. ராம.லெ. ராம. லெட்சுமணன் செட்டியார் அவர் களும், மதுரை திரு. கே. எல். கோபால் அவர்களும் மிகச் சிறந்த முறையில் தங்கள் சொந்தச் செலவில் ஏற்பாடு செய்து கொடுத்

தார்கள். இந்த மெய்யன்பர்கள் யாகசாலை நடந்த எல்லா நாட்களிலும் 63 ஓதுவார் களைத் தேர்ந்தெடுத்து வரவழைத்து அவர் களுக்குப் பயணச் செலவு, சாப்பாடு, சம்பாவனை, பரிவட்டம் முதலியவற்றுக்காகச் செலவு செய்தது குறிப்பிடத் தக்கது. கும்பாபிஷேக நினைவாக திரு. முத்துப் பழநியப்பச் செட்டியார் அவர்களின் பொருளு தவியுடன் ''திருமுறைகளில் திருவண்ணுமலை'' என்ற நூல் மதுரை பன்னிரு திருமுறை மன்றத்தாரால் வெளியிடப் பெற்றது. திருவண்ணுமலையில் பல நாட்கள் தங்கியிருந்து நேர்த்தியாகத் தேவாரப் பாராயண ஏற்பாடு களைச் செய்து கொடுத்த திரு. முத்துப் பழநி யப்பச் செட்டியார் அவர்களின் பணி பெரி தும் போற்றுதற்குரியது.

பொள்ளாச்சி திரு. வி. எஸ். சுப்பிர மணியன் செட்டியார் அவர்கள் யாகசாலை சமித்து வகைகளை அன்பளித்தார்கள். திருச் சிராப்பள்ளி உறையூர் திரு. மு. ஆ. அருணுசல முதலியார் அவர்கள் யாகசாலைக்கு சமித்து, பன்னீர், பூ முதலியவற்றை அனுப்பி வைத்து உதவினுர்கள். இவர் களுக்கும் நாம் நன்றி பாராட்ட கடமைப் பட்டுள்ளோம்.

கருவறையில் புதிய சலவைக்கல்

அண்ணுமலையார் கருவறைச் சுவர்களில் சென்னை ஆனந்தா வி. ஆர். எஸ். சாரிட் டீஸ் என்ற அற நிறுவனத்தார் சலைவக்கல் பதித்துக் கொடுத்துள்ளார்கள். அவர்களு டைய பணி போற்றுதற்குரியது.

கால பைரவர் கவசம்

திருவண்ணுமலை ஸ்ரீ கணேஷ் இன்டஸ்டி ரீஸ் அண்ட் பைனுன்ஸ் கார்ப்பரேஷன் 24 கிலோ தாமிரத்தில் 2 கிலோ வெள்ளி முலாம் பூசிய கவசத்தைக் கால பைரவருக் குச் செய்து வழங்கியுள்ளார்கள். அவர்களுக் கும் நன்றி.

பிரதான கும்பாபிஷேகமும் பரிவார தெய்வங் களின் கும்பாபிஷேகமும்

அண்ணுமலையாரின் குடும்பம் பெரிது. எனவே அனைத்துத் தெய்வங்களுக்கும் ஒரே நாளில் கும்பாபிஷேகம் செய்வது எளிதன்று. நிர் வாக வசதியைக் கருதி, கும்பாபிஷேகம் இரு கட்டங்களாக நடத்தப் பெற்றது.

4-4-76இல் நடைபெற்ற பிரதானக் கும்பாபிஷேகத்தன்று பத்துக் கோபுரங்களுக் கும், பத்து விமானங்களுக்கும் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. அவையாவன:

1. ராஜகோபுரம்
2. வல்லாள மகாராஜன் கோபுரம்
3. கிளிக்கோபுரம்
4. திருமஞ்சனக் கோபுரம்
5. கட்டைக் கோபுரம் (தெற்கு)
6. மேற்படி (மேற்கு)
7. மேற்குக் கோபுரம் (பேக் கோபுரம்)
8. அம்மணி அம்மாள் கோபுரம்
9. கட்டைக் கோபுரம் (வடக்கு)
10. ரிஷி கோபுரம்

விமானங்கள்

1. சுவாமி கருவறை விமானம்
2. அம்மன் கருவறை விமானம்
3. பள்ளி அறை விமானம்
4. சம்பந்த விநாயகர் விமானம்
5. பழனி ஆண்டவர் விமானம்
6. நடராஜர் விமானம்
7. சோமாஸ்கந்தர் விமானம்
8. வேணுகோபாலர் விமானம்
9. ஆறுமுகசுவாமி விமானம்
10. வைரவர் விமானம்

மலைமீது...

பிரதான கும்பாபிஷேகத்தன்று அதிகாலை யில் குருக்கள்மார் மூவர் கும்பங்கள் முதலிய அபிஷேகப் பொருள்களுடன் மலை உச்சிக் குச் சென்று திருக்கார்த்திகை நாளில் தீபம் ஏற்றப்பெறும் இடத்தில் கும்பாபிஷேக நேர மாகிய காலை 8-45 மணிக்கு அபிஷேகம் செய்து தீப ஆராதனை காண்பித்தார்கள். இந்தக் காட்சியை அங்கு அந்த நேரத்தில் சென்றிருந்த அயல் நாட்டவர் சிலர் பார்த் ததும் அதிர்வேட்டு முதலியவற்றையும் ரிஷி கோபுரத்திலிருந்து ஒலிபரப்பப் பெற்ற அறி விப்புக்களையும் தெளிவாகக் கேட்டு மகிழ்ச்சி யடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

மலையும் மழையும்

கும்பாபிஷேகத்திற்காகக் கூடும் திரளான மக்களுக்குத் தேவையான தண்ணீர் வசதி யைச் செய்ய வேண்டியதிருந்தது. இரண்டு ஆண்டுக் காலமாக இப்பகுதியில் மழை இல்

லாததால் வறட்சி நிலவியது. ஆனால் பரிவார தெய்வங்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்ற 2-4-76 அன்று மாலையில் அரை மணி நேரத்திற்கு நல்ல மழை பெய்தது. மலையையே அண்ணாமலையாராகக் கருதும் தத்துவத்துக்கு ஏற்ப அண்ணாமலைப் பெருமான் தனக்குத்தானே கும்பாபிஷேகம் செய்து கொண்டார் போலும்!

அரசாங்க ஏற்பாடுகள்

வட ஆர்க்காடு மாவட்டத்துக் கலெக்டர் அவர்கள் மாவட்டம் எங்குமுள்ள நகராண்மைக் கழகங்களிலிருந்து தண்ணீர் வண்டிகளை வரவழைத்தும், தெருக்களில் இரும்புத் தொட்டிகளை இறக்கி அவற்றில் தண்ணீர் நிரப்பியும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றினார்கள்.

முன் எச்சரிக்கையாக, தீயணைப்பு இயந்திரங்கள் வரவழைக்கப் பெற்றிருந்தன. முதல் சிகிச்சை செய்யும் துறையினரும் தயாராக இருந்தனர். சுகாதாரத் துறையினர் தக்க ஏற்பாடுகள் பலவற்றைச் செய்திருந்தார்கள். போலீசுத் துறையினர், பாதுகாப்பு ஏற்பாடுகளை மிகவும் விரிவாகவும் பாராட்டத்தக்க முறையிலும் செய்திருந்தார்கள்.

தமிழக அரசின் போக்குவரத்துத் துறையினரும், தனியார் பஸ் நிறுவனங்களும் முந்நூறுக்கும் மேற்பட்ட ஸ்பெஷல் பஸ்களை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

வானொலி

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதில் வானொலித் துறையினர் பேரார்வம் காட்டினர். குறிப்பாகச் சென்னை வானொலி நிலையத்து இயக்குநர் திரு. எம். எஸ். கோபால் அவர்களுக்கும், புதுச்சேரி நிலையத்து இயக்குநர் திரு. கே. பி. எஸ். ஹமீது அவர்களுக்கும் நம் நன்றி உரியது.

சென்னை வானொலி நிலையத்தார், சென்னையிலிருந்து ஒலிபரப்பப்பெறும் தென்கிழக்கு ஆசிய நிகழ்ச்சியில் 15—3-76ல் திருவண்ணாமலையைப் பற்றிய ஒரு சித்திரம் ஒலிபரப்பினார்கள்.

2-4-76ல் திருச்சி நிலையத்தார், திருவண்ணாமலையைப் பற்றி ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

3-4-76 அன்று புதுச்சேரி நிலையத்தார், சிறப்பு நிகழ்ச்சி ஒன்றை ஒலிபரப்பினார்கள். இந்த வரலாற்றுச் சித்திரத்தின் ஊடே, அண்ணாமலையார் கோயிலுடன் தொடர்புடைய பெருமக்கள் அறுவரின் பேட்டிகளும் இணைக்கப் பெற்றிருந்தன. இந்த நிகழ்ச்சியைச் சென்னை, திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய நான்கு நிலையங்களும் அஞ்சல் செய்தன.

கும்பாபிஷேகத்தன்று புதுச்சேரி நிலையத்தார் நேர்முக வருணனைக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சியும் தமிழ் நாட்டிலுள்ள எல்லா நிலையங்களாலும் ஒலிபரப்பப் பெற்றது. வருணனையாளரில் ஒருவர் கிளிக் கோபுரத்தின் உச்சியிலிருந்தும், மற்றொருவர் அண்ணாமலையார் கோயில் மீதுள்ள ரிஷி கோபுரத்தின் உச்சியிலிருந்தும், மற்றும் ஒருவர் அண்ணாமலையார் கோயில் கருவறையிலிருந்தும் வருணனை செய்தனர். இவற்றுக்கு ஏற்றவாறு அவர்களுக்கு ஏற்பாடுகளும் வசதிகளும் செய்து கொடுக்கப் பெற்றன.

வானொலி இதழில் திருவண்ணாமலையைப் பற்றி ஒரு கட்டுரை வெளியிடப் பெற்றது.

டெலிவிஷன்

சென்னை தொலைக்காட்சி நிலையத்தார், கும்பாபிஷேகத்தன்று நிகழ்ச்சிகளைப் படமாக எடுத்து, பிறகு செய்திச் சுடரில் காண்பித்தார்கள்.

திரைப்படங்கள்

தமிழக அரசின் திரைப்படத் துறையினரும் இந்திய அரசின் பிலிம்ஸ் டிவிஷனின் செய்திப் பிரிவினரும் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளைத் திரைப் படங்களாக எடுத்தனர்.

கும்பாபிஷேகக் குழுவின் ஆதரவில் நிகழ்ச்சிகள் வண்ணப் படமாக எடுக்கப்பெற்று, பிராசசிங்கிற்கு அமெரிக்காவுக்கு அனுப்பப் பெற்றிருக்கிறது.

பத்திரிகைகள்

ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவரும் நாளிதழ்களும் வார இதழ்களும் கும்பாபிஷேகத்தைப் பற்றிச் சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டன.

தங்கும் இட வசதி

கூட்டத்தின் மிகுதியால் கும்பாபிஷேகத்துக்கு வந்திருந்த முக்கியஸ்தர்களுக்கு வசதியான முறையில் தங்கும் இடம் ஏற்பாடுசெய்து கொடுப்பது சற்றுச் சிரமமாக இருந்தது. எனினும், கூடுமானவரை, இந்த ஏற்பாடுகள் நன்முறையில் செய்யப் பெற்றன.

உணவு

வெளியூர்களிலிருந்து வந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு அன்னம் பாலிக்கும் பணியைப் பல அமைப்புக்கள் மனமுவந்து ஏற்றன. ஜெயின் சங்கம், சமரச சுத்த சன்மார்க்க சங்கம், குமரன் பைனன்ஸ் கார்ப்பரேஷன், சேத்துப்பட்டு ஊராட்சி மன்ற ஒன்றியம், வேலூர் அம்பிகா டிரான்ஸ் போர்ட்ஸ் திருவாளர் தங்கவேலு முதலியார், ஏ. பி. டி. ஏஜெண்டு திரு. வெங்கடாசலம் ஆகியோர் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினார்கள்.

கும்பாபிஷேகத்துக்கு வந்த முக்கியமான அன்பர்களுக்கு உள்ளூர்ப் பெருமக்கள் பலர் விருந்து படைத்தார்கள். அ. க. மாளிகையில் நகரத்தார்களுக்கும், மற்றும் அங்கு வந்த அனைவருக்கும் பல நாட்களுக்கு உணவு படைக்கப்பெற்றது. க. வீ. அழ. ராம. ராம. அவர்கள் வீட்டிலும், அ. சொ. அவர்கள் வீட்டிலும், சாதுக்கள் மடத்திலும், யஜுர் வேத பாடசாலையிலும், மெ. க. அன்னச் சத்திரத்திலும், ஈசான்ய மடத்திலும், ஒயா மடத்திலும் ஏராளமான அன்பர்களுக்கு, தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப் பெற்றன.

நினைவுக் காசு

கும்பாபிஷேக நினைவாக, கும்பாபிஷேகக் குழுவினர், நன்கொடையாளர்களுக்கு, தங்கத்தில் துவைத்த வெள்ளிக் காசுகளைத் தயாரித்து வழங்கினார்கள்.

டெலிபோன்

கும்பாபிஷேகக் குழுவின் வேலைகள் இனிது நடைபெற உதவியாக, குழுவின் தலைவர் திரு. சிதம்பரம் செட்டியார் தங்கியிருந்த இல்லத்தில் டெலிபோன் பொருத்தப் பெற்றது.

கும்பாபிஷேக டிக்கெட்டுகள்

திருக்கோயிலுக்கு வருவாய் பெறுவதற்காக, அண்ணாமலையார் விமான தளத்திலிருந்து கும்பாபிஷேகத்தைக் காண்பதற்கு ரூ. 50 வீதமும், உண்ணாமுலை அம்மன் விமான தளத்திலிருந்து காண விரும்புபவர்களுக்கு ரூ. 25 வீதமும் வசூல் செய்து, அதற்குரிய டிக்கெட்டுகளைத் திருக்கோயிலார் வழங்கினார்கள். அதிகாரிகளுக்கும், நகரத்தார்களுக்கும் மற்றும் நன்கொடையாளர்களுக்கும் இலவசமாகச் சிறப்பு அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப் பெற்றன.

பெருமக்கள் வருகை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் தலைவர் அவர்களும், திருச்சி சுவாமிகளும், கோவிலூர் சுவாமிகளும், தருமபுர மடத்துத் தம்பிரான் ஒருவரும் வந்திருந்து கும்பாபிஷேகத்தைச் சிறப்பித்தனர்.

தமிழக அரசின் மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர்களான திரு. பி. கே. தவே, திரு. ஆர். வி. சுப்பிரமணியன் ஆகியோரும், ஆளுநர் அவர்களின் மனைவி திருமதி மது பென் ஷா அவர்களும், முன்னாள் முதலமைச்சர் திரு. மீ. பக்தவத்சலம் அவர்களும், இராமநாதபுரம் அரசர் திரு. எஸ். இராமநாத சேதுபதி அவர்களும், பல கோயில்களிலிருந்து அறங்காவலர்களும், அறநிலையத் துறை ஆணையரும், ஏராளமான அரசாங்க அலுவலர்களும் வந்திருந்தனர்.

இருவகைச் சிறப்பு

வேறு எந்தக் கும்பாபிஷேகத்திலும் இல்லாத அளவு யாகசாலை அமைக்கப் பெற்றிருந்தது. எந்த அளவு போற்றினாலும் தகும் என்றநிலையில் யாகசாலை இனி நடைபெறவிருக்கும் கும்பாபிஷேகங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கியது. கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்களும், காரைக்குடி திரு. மு. மெ. முத்துராமன் செட்டியார் அவர்களும், அவர்கள் குழுவினரும் மிகவும் போற்றுதற்குரிய முறையில் யாகசாலையை நடத்திக் கொடுத்தார்கள். அண்ணாமலையார் அவர்கள் அனைவருக்கும் அருள் பாலிப்பாராக.

நிகழ்ச்சிகள் யாவும் குறித்த முறையில், குறித்த நேரத்தில் எவ்விதமான விக்கின

மும் இன்றி இனிது நடைபெற்றன. ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்த போதிலும் ஒரு விபத்தோ, ஒரு சிறு காயமோ, யாருக்கும் எவ்வகையான அசம்பாவிதமோ, இன்னலோ நிகழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கும்பாபிஷேகத்தன்று வெய்யிலும் இன்றி, மழையும் இன்றி மப்பும் மந்தாரமும் ஆக இருந்தது, அண்ணுமலையாரின் அருளே எனலாம்.

குறித்த நேரத்துக்குச் சற்று முன்னர் ஐந்து கருடன்களும், கிளிக் கோபுரத்தின்மீது ஒரு கிளியும் வட்டமிட்டது குறிப்பிடத்தக்கது.

மகா அபிஷேகம்

கும்பாபிஷேகத்தன்று மாலையில், கும்பாபிஷேகக் குழுவினர் சிறந்த முறையில் மகா அபிஷேகத்தை நடத்திக் கொடுத்தார்கள்.

பஞ்சமூர்த்திகள் உலா

கும்பாபிஷேகத்தன்று இரவு கும்பாபிஷேகக் குழுவினர் பஞ்சமூர்த்திகளையும் எழுந்தருளச் செய்தனர். அண்ணுமலையார் கோயிலின் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு எல்லா வாகனங்களும் ஒரே நாளில் ஒரு சேரப் பயன்படுத்தப் பெற்றன. சுவாமியும் அம்பாளும் ரிஷப வாகனத்திலும் தனி அம்மன் வெள்ளி ரதத்திலும், சுப்பிரமணியர் கர்ப்பக விருட்சத்திலும், விநாயகர் இந்திர விமானத்திலும், சண்டிகேசுவரர் வெள்ளிக் கேடகத்திலும் எழுந்தருளியது மிகவும் விசேடமாகும்.

கலை நிகழ்ச்சிகள்

30–3–76 முதல் 5–4–76 வரை ஒவ்வொரு நாளும் மாலையில் அருணகிரிநாதர் சந்நிதிக்கு முன்பாக அமைக்கப் பெற்ற அலங்காரக் கொட்டகையில் இசை நிகழ்ச்சிகள் முதலியன தேவஸ்தானத்தாரால் ஏற்பாடு செய்யப்பெற்று, சிறப்பாக நடத்தப் பெற்றன. ஏராளமான மக்கள் கூடியிருந்து இவற்றைக் கண்டும் கேட்டும் அனுபவித்தனர்.

மார்ச் 30-ம் தேதி பன்னிரு திருமுறை திருவீதி உலா நிகழ்ந்தது. பன்னிரு திருமுறைப் பாராயணமும் அன்று தொடங்கி ஒரு வாரம் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும், இத்திருக்கோயில் நாதஸ்வர வித்துவான் திருநகரி இரா. முருகையன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெற்றது. புலவர் கீரன், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஆகியோரின் கதாகாலட்சேபங்களும், வீரமணி ராதா குழுவினர், சீர்காழி கோவிந்தராஜன் குழுவினர், நாகர்கோவில் அம்சராஜன் குழுவினர், சூலமங்கலம் சகோதரிகள், மதுரை திரு. வி. சுவாமிநாதன் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. காவியப் பேரறிஞர் புரிசை முருகேச முதலியார் சொற்பொழிவும் நடைபெற்றது. நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன் குழுவினர், திருவிடைமருதூர் ராஜா குழுவினர் முத்துப்பேட்டை (ஆடுதுறை) சண்முகசுந்தரம் குழுவினர் ஆகியோர் நாதஸ்வரக் கச்சேரிகள் நடத்தினர்.

மண்டலாபிஷேகம்

மண்டாலபிஷேகத்தை நடத்தும் பொறுப்பைத் திருக்கோயிலாரே ஏற்றுக் கொண்டனர். இச் செலவுகளை ஈடுகட்ட முன் வந்த அன்பர்கள், ஒவ்வொருவரிடமும் ரூ. 250 வசூலிக்கப்பட்டு 45 நாட்களுக்கு, மண்டலாபிஷேகம் சிறப்பான முறையில் இத்தொகையைக் கொண்டு செய்யப் பெற்றது.

மண்டலாபிஷேக நிறைவு

நள ஆண்டு வைகாசித் திங்கள் 6-ஆம் நாள் 19–5–1976 புதன்கிழமை மண்டலாபிஷேக நிறைவு விழா, இந்து சமய அறநிலையத் துறைத் துணை ஆணையர், திருப்பணிக்குழுத் தலைவர், கும்பாபிஷேகக் குழுத் தலைவர், அறங்காவலர் குழுத்தலைவர் மற்றும் திரளான மக்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

18–5–1976 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு விநாயாகர் பூசையும், தான்ய பூசையும், கலச ஸ்தாபனமும், அன்று இரவு 8 மணிக்கு யாகப் பூசையும், பூரணுகுதியும், தீப ஆராதனையும் நடைபெற்றன.

19–5–1976 காலை 6 மணிக்கு மகா அபிஷேகம் ஆரம்பமாகி யாக பூசையும் நடந்தது. காலை 8–30 மணிக்குப் பூரணுகுதி, தீப ஆராதனை நடைபெற்றன. 9–30 மணிக்கு மகா சாந்திக் கலச அபிஷேகங்கள் நிகழ்ந்தன. பிறகு தீப ஆராதனை நடைபெற்றது.

அன்று மாலையில் மதுரை சோமு குழுவினரின் கச்சேரியும், இரவு பஞ்ச மூர்த்திகள் திருவீதி உலாவும் நடைபெற்றன.

உண்ணுமுலை உமையாள் உடனுறைய அண்ணாமலையார்

குடநீராட்டுப் பெருவிழாவில் யாகசாலை அமைப்பு

மு. மெ. முத்துராமன், காரைக்குடி

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியாய் ஓங்கி மக்கள் மனத்து அகங்கார மமகாரங்களைச் சுட்டெரித்து மெய்யறிவூட்டும் பொற்புடைய திருத்தலம் திருவண்ணாமலை. கோயில் பெரிது; கோபுரம் பெரிது; குளம் பெரிது; தத்துவம் பெரிது; வாகனங்கள் பெரிது; மூர்த்திகள் பெரிது; மதில் பெரிது; பிரகாரம் பெரிது; எல்லாம் பெரிது.

இங்ஙனம் எல்லாம் பெரிதாய் இலங்கும் திருக்கோயிலில் நடைபெறும் குடநீராட்டுப் பெருவிழாவில் யாகசாலையும் பெரிதாய் அமைவது இன்றியமையாத தன்றோ? அங்ஙனமே யாகசாலையும் ஒப்பற்ற அலங்காரங்களுடன் அமைந்து ஆகமரீதியில் யாக பூஜைகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் முயற்சியாலும், பொருட் செலவாலும், சுவாமி, அம்மன், விநாயகராதி பரிவார தேவதைகளின் கோயில்கள், விமானங்கள், முகசாலைகள் யாவும் நன்கு புதுப்பிக்கப்பட்டன.

திருவாளர் சா.நா.அ.சொ. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தலைமையில் திருப்பணிக் குழு பணியாற்றியது. திருவாளர் அ.க.அ. சித.அழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் குடநீராட்டு விழாக் குழு பணியாற்றியது. திருவாளர் டி.வி. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் அமைந்த அறங்காவலர் குழு எல்லா வகையாலும் ஒத்துழைத்துப் பணியாற்றியது. திருவாளர் முத்தையா செட்டியார் அவர்கள் யாகசாலை அமைப்பதற்கு வேண்டிய அடிப்படையான பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றினர்கள்.

சுவாமிக்கு உத்தமோத்தம பட்சமான 33 குண்டங்களும் அம்மனுக்கு உத்தமோத்தம பட்சமான 25 குண்டங்களும் சம்பந்த விநாயகருக்கு 5 குண்டங்களும் வேணு கோபால சுவாமிக்கு 5 குண்டங்களும் மற்ற மூர்த்திகட்கெல்லாம் ஒவ்வொரு குண்டமாக மொத்தம் 88 யாககுண்டங்கள் அமைக்கப் பெற்றன.

சுவாமிக்கு பஞ்சாசன வேதிகையும் அம்மனுக்கு கமலவேதிகையும் அமைக்கப்பெற்றது. சுவாமி யாகசாலை 64 கால்களுடன் கூடிய நான்கு சுற்றுப்பத்திகளாக அமைக்கப்பெற்றது. அம்மன் யாகசாலை 36 கால்களுடன் கூடிய மூன்று சுற்றுப் பத்திகளாக அமைக்கப்பெற்றது.

யாகசாலை முழுவதும் கட்டுத் திருப்பணி போல அழகுற அமைக்கப் பெற்றிருந்தது. திண்டுக்கல் அங்கு விலாஸ் புகையிலை நிறுவனத்தார் பெரும் பொருட் செலவில் அற்புதமாக மின் விளக்கு அலங்காரம் செய்திருந்தனர்.

325 × 100 அடி அதாவது 32,500 சதுரடி கொட்டகை போடப்பெற்றிருந்தது. அமைப்பு, அலங்காரம், மின் விளக்குகள் எல்லாம் கூடி கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க பொலிவுடன் விளங்கின.

இராட்சச ஆண்டு பங்குனித் திங்கள் 14ஆம் நாள் (27-3-76) சனிக்கிழமை காலை அனுக்ஞை தனபூசை, ஆசாரிய வரணம். அதன் பிறகு கணபதி ஹோமமும் விக்னேச்வர பூசையும் நடைபெற்றன. இரவு 6 மணிக்கு பிரவேச பலி, ராக்ஷோக்னம் நடைபெற்றன.

மறுநாள் (28-3-76) காலை நவக்கிரக ஹோமமும் மாலை வாஸ்து சாந்தியும் நடைபெற்றன. மூன்ரும் நாள் (29–3–76) காலை ஆசார்ய தச வித ஸ்நானமும் மாலை மிருத் சங்கிரஹனமும், அங்குரார்ப்பனமும் நடைபெற்றன. நான்காம் நாள் (30-3-76) காலை

தான்யஸ்தாபனம், ரக்ஷாபந்தனமும், இரவு கலாகர்ஷணமும் நடைபெற்றன. இரவு 8 மணிக்கு கும்பஸ்தாபனம் செய்து யாகபூஜை தொடங்கப்பெற்றது.

ஒன்பதாம் நாள் (4—4—76) ஞாயிற்றுக் கிழமை காலை வரை மொத்தம் 10 வேளை, யாக பூஜை நடைபெற்றுக் காலை சரியாக 8-45 மணிக்கு எல்லாக் கோபுரங்கட்கும், எல்லா விமானங்கட்கும் மட்டுமின்றி அண்ணாமலைக்கும் ஏககாலத்தில் திருக்குடநீராட்டு நடைபெற்றது.

திருவாடானை சிவத்திரு ஐயாமணி சிவாசாரியார் சர்வபோதகராக இருந்தும், திருவண்ணாமலை பட்டம் இராமலிங்க சிவாசாரியார் சர்வசாதகராக இருந்தும் யாகாதி காரியங்களை நடத்தினர். தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து சுமார் இருநூறு சிவாசாரியர்கள் நூல் முறைப்படி வேள்விகளைச் செய்து பொலிவும் பயனும் கூட்டினர்.

எல்லாவற்றிலும் சிறப்பு திருவண்ணாமலைக்கே உரியதும் ஜோதி சொரூபமாக மதிக்கப் பெறுவதும் ஆன அந்த அண்ணாமலையை ஒரு சிவலிங்கமாகக் கொண்டு அதற்கும் யாகாங்கத்தில் இடமளித்துக் கும்பஸ்தாபனம் செய்து திருக்குட நீராட்டுச் செய்த ஒன்றே என்றால் மிகையாகாது.

இப்படியாக இதுவரை எங்கும் கண்டிராத முறையில் திருவண்ணாமலைக் குடநீராட்டு விழா அத்தனை சிறப்புடன் நடைபெற்றது. இதற்கான செலவுகள் அனைத்தையும் ஏற்று நடத்திய நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சிவத் தொண்டினை நல்லோரெல்லாம் மனமாரப் பாராட்டினர்.

வாழ்க உலகெலாம்!

வளர்க சிவநெறி!

திருவண்ணாமலை கும்பாபிஷேகம்:
ஐந்து லட்சம் பேர் தரிசித்தனர்

திருவண்ணாமலை, ஏப்ரல் 4

திருவண்ணாமலையில் அருணாசலேசுவரர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. 5,00,000க்கும் அதிகமான பக்தர்கள் கும்பாபிஷேக வைபவத்தைக் கண்டு களித்தனர்.

காலை 8-45 மணி முதல் 9 மணி வரை 15 நிமிஷ நேரத்துக்கு ஆலயத்தின் 9 கோபுரங்களின் உச்சியில் உள்ள கலசங்களுக்கு அபிஷேகங்கள் நடந்தன. அப்போது 5 லட்சம் பக்தர்களும் 'அண்ணாமலையாருக்கு அரோகரா' என்று கோஷமிட்டனர்.

கும்பாபிஷேக வைபவம் துவங்குவதற்கு அடையாளமாக 51 வெடிகள் வெடிக்கப் பட்டன. நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் நாதஸ்வரம் வாசிக்க ஸ்வாமி பஞ்சநாத தேசிகர் தலைமையில் 63 ஓதுவார்கள் தேவாரம் ஓதிக்கொண்டிருந்தார்கள்.

அருணாசலேசுவரர் ஆலயப் பகுதியில் எங்கு பார்த்தாலும், மக்கள் வெள்ளத்தைத் தான் காண முடிந்தது. நகரில் நடமாடுவதற்கே துளிக்கூட இடமில்லாத வகையில் மக்கள் கடலெனத் திரண்டிருந்தனர்.

கும்பாபிஷேகம் துவங்குவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னதாக இந்த வைபவம் நடக்க விருப்பதை அறிவிப்பதுபோல ஆலயப் பகுதியில் வானில் கருடன்கள் வட்டமிட்டன.

தென்னிந்திய மடாதிபதிகள் ஆலயத்தின் கும்பாபிஷேக வைபவத்தைக் கண்டுகளித்தார்கள். திருவேற்காடு தேவி கருமாரி அம்மன் ஆலயத்தைச் சேர்ந்த ராமதாஸ்

சாது, தருமபுரம் ஸ்ரீ மகாலிங்க சுவாமி, திருச்சி சுவாமிகள், காஞ்சி மடம் சார்பாக சமயபுரம் ராமநாத சுவாமிகள் ஆகியோர் வந்திருந்தார்கள்.

தமிழ்நாடு கவர்னரின் ஆலோசகர்களான பி. கே. தவே, ஆர். வி. சுப்பிரமணியன், கவர்னரின் மனைவி திருமதி மதுபென்ஷா, தமிழ்நாடு முன்னாள் முதல்வர் பக்தவத்சலம், உயர் அதிகாரிகள் ஆகியோரும், நாட்டுக்கோட்டை செட்டியார் சமூக பிரமுகர்களும் இவ்வைபவத்துக்கு வந்திருந்தார்கள். சில்ப சாஸ்திரம், ஆகம சாஸ்திரங்களின்படி நிர்மாணிக்கப்பட்ட யாகசாலையில் கடந்த ஒரு வார காலமாக பிரதம குருக்கள் திருவாடானை ஸ்ரீ ஐயாமணி சிவம் தலைமையில் 200 சிவாசார்யர்கள் ஹோம பூஜைகளைச் செய்து வந்தார்கள்.

கும்பாபிஷேகத்துக்கு மட்டும் ஆன மொத்த செலவு ரூ. 6 லட்சம் இருக்கும். இந்தச் செலவில் பெரும் பகுதியை நாட்டுக்கோட்டை நகரத்தார் ஏற்றுள்ளனர். ராஜகோபுரம், மற்றும் இதர 8 கோபுரங்களின் திருப்பணிக்கான செலவு ரூ. 40 லட்சம். 3 கோபுரங்களின் திருப்பணி முடிவடைந்து விட்டது. இதர கோபுரங்களின் திருப்பணி நடந்து வருகிறது.

கும்பாபிஷேகம் துவங்குவதற்கு முன்னதாக அர்ச்சகர்கள் புனித நீர்க் கலசத்தை எடுத்துக் கொண்டு ஊர்வலமாகப் புறப்பட்டு பின்னர் தாங்கள் அபிஷேகம் செய்ய வேண்டிய கோபுரங்களுக்கு ஏறிச் சென்றனர். சரியாக 8-45 மணிக்கு கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு அடையாளமாக வெடி வெடிக்கப்பட்டவுடன், பக்தர்கள் போட்ட அண்ணுமலையாருக்கு 'அரோகரா' கோஷங்களுக்கிடையே கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

25 ஏக்கர் பகுதியில் அமைந்துள்ள அருணசலேசுவரர் ஆலயம் நாட்டில் உள்ள பெரிய ஆலயங்களில் ஒன்ருகும். இந்தக் கோயில், சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சமூகத்தினரால் ரூ. 35 லட்சம் செலவில் திருப்பணி செய்யப்பட்டது. 1903ம் ஆண்டு ஜுன் 6ந் தேதி மகா கும்பாபிஷேகம் நடந்தது. அஷ்டபந்தன கும்பாபிஷேகம் 1944ம் ஆண்டு ஜுன் 4ந் தேதி ரூ. 44,000 செலவில் நடந்தது.

தற்போது ஆலயத்தில் திருப்பணி மும்முரமாக நடந்து வருகிறது. இதற்கு மொத்தச் செலவு ரூ. 50 லட்சம் ஆகும்.

ஆலய நிர்வாக அதிகாரி திரு. பரமசிவம் தலைமையில், ஆலயத்தைச் சேர்ந்த இதர அதிகாரிகளும் கும்பாபிஷேகக் கமிட்டித் தலைவர் திரு. அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியாரும் மாவட்ட போலீஸ் அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள் ஆகியோரும் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். மகா மண்டலாபிஷேகம் மே 19ந் தேதி நடைபெறும்.

தினமணி, சென்னைப் பதிப்பு 5-4-'76

LAKHS WATCH KUMBABHISHEKAM

EXPRESS NEWS SERVICE

TIRUVANNAMALAI, APRIL 4

Upwards of 5,00,000 pilgrims gathered in this historic town this morning to witness the Mahakumbabhishekam of the Arunachaleswara temple.

The ceremonial bathing of the sikharas on the nine gopuras lasted full 15 minutes—from 8.45 a.m. to 9 a.m. As pot after pot of lustral water was emptied on the spires which glittered in the morning sun, the teeming half million kept up the chant of "Annamalaiyarkku Aro Hara."

Rising above the frenzied, full throated call to Lord Siva were the defeaning blasts of adir-vedi—51 were fired in all giving the signal for a start to the colourful ceremony. Sweet strains of Nadaswaram music flowing from the pipe of Namagiripettai Krishnan, followed by groups of other pipers, mingled happily with the Thevaram renderings led by Swami Panchanatha Desikar and his 63 minstrels.

It was a vast sea of humanity in and around the renowned Siva shrine, its vast quadrangles, aisles and corridors packed with chanting men and women.

In the distance the gaunt sides of the Arunachala Hill were dotted with dense devout groups who had camped on the lower reaches overnight for lack of even moving space anywhere in the town. Two white-throated kites cut large circles over the 25-acre temple area, seemingly heralding the approach of the Kumbha lagna under the Rohini asterism, chosen for the momentous ceremony.

Watching the proceedings were the heads of leading South Indian maths, notable among them being Ramadasa Sadhu of Devi Karumari temple of Thiruverkadu, Sri Mahalingaswamy of Dharmapuram, Tiruchi Swamigal and Samayapuram Ramanatha Swamigal, representing the Kanchi Math.

Also present were the Advisers to the Governor, P. K. Dave and R. V. Subrahmanian, Mrs. Madhuben Shah, wife of Governor K. K. Shah, former Chief Minister of Tamil Nadu M. Bhaktavatsalam, top State officials, leading lights of the Nattukottai Chettiar community which has been continually associated with the renovation and beautifying of the temple.

Under the direction of Chief priest Sri Ayyamani Sivam nearly 200 Sivacharyas earlier in the week performed homas in the Yagasala specially erected according to Silpa Sastra and Aagama Sastra, beginning with the Vigneswara puja and followed by Dhana Puja, Vaastu Shanti, Vaastu Homam and Navagraha propitiation. There were 33 homakunds for Annamalai, 25 for Unnamulai Ammai, and others for Vinayaka, Venugopalaswami. When the deities were established in the kumbhas, or ceremonial vessels, the ashtabandhana fixation took place for all the deities in the temple.

The total expenditure on the Kumbabhishekam alone will exceed Rs. 6 lakhs and the brunt of it borne by Nattukottai Nagarathars. Work on Rajagopuram and eight others will cost Rs. 40 lakhs.

Apart from gallons of sandalwood paste the holy libation was made up of Ganga water blended with camphor, gorojana, kasturi and saffron and 96 leaves from sacred herbs. An hour before the start of the kumbabhishekam, began a procession of priests carrying some 1,200 pots of holy water earmarked for the various gopurams. Priests chanting vedic hymns climbed improvised wooden stairs held together by heavy scaffolding. The Sivacharyas wearing heavy Rudraaksha beads, colourful multi-coloured gold laced cloth around their waists, made their way to the top of the gopuras awaiting the signal from the chief priest to begin the abhisheka.

At the stroke of 8.45 a deafening adirvedi blast signalled the start of the ceremonies followed by cries of "Annamalaiyarkku Arohara" from the vast concourse.

When the ritual was over priests sprinkled water from the pots and sandalwood paste on the gathering below. Garlands of the holy tulasi, marigolds, roses and bilwa leaves were showered on the faithful.

The most famous of the Pancha Bhoota Kshetras, Tiruvannamalai is dedicated to the Tejo Linga. The Arunachala Hill, which provides a striking backdrop to the temple town, is 2,666 feet above the sea level and said to be rich in the panchalohas—copper, gold, silver, lead and iron. In its various caves saints had carried on meditation and realised godhood. A glorious example was Sri Ramana Maharishi, whose ashram at the foot of the hill is still the international port of call for spiritualism long after the passing of the "Saint of Silence".

Seventy years ago, the Nattukottai Chettiars took up the renovation work of the temple at a cost of Rs. 35 lakhs. The Mahakumbhabhishekam was held on June 6, 1903. An Ashtabandhana Kumbhabhishekam was held on June 4, 1944, at a cost of Rs. 44,000.

The temple authorities, led by its chief executive Mr.Paramasivam, the chairman of the Kumbhabhishekam committee A.K.A.CT.AL. Chidambaram Chettiar and district police and health officials contributed in no small measure to the success of the ceremonies. The Mahamandalabhishekam will be held on May 19.

—INDIAN EXPRESS, MADRAS
APRIL 5, 1976

கும்பாபிஷேக நேர்முக வர்ணனை

புதுச்சேரி வானொலி நிலையத்து நிகழ்ச்சி

1. லால்குடி திரு. ஜி. கனகசபை, எம். ஏ.

(ரிஷி கோபுரத்திலிருந்து)

ஞானத்தபோதனரை வாவென்று அழைக்கும் திருவண்ணுமலை அருள்மிகு அண்ணுமலையார் உடன் உண்ணுமுலையம்மன் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக் காண மக்கள் கூட்டம் இவண் நிறைந்து வழிகிறது.

ஒரு மாபெரும் புனிதத் திருத்தல எல்லையிலே நுழையுங்காலே வானளாவிய மலையின் புறத்தே விண்ணை முட்டும் கோபுரங்கள் நம்மை வரவேற்கிறதென்ருல், அது ஞானிகள், தேவர்கள், சித்தர்கள் உறையும் திருவண்ணுமலையாகத்தான் இருக்கமுடியும்.

ஆதியந்தமில்லாத அரும் பெரும் சோதியாய் விளங்கும் பரம்பொருள், ''அருவன் ஆயினும் அன்பர்க்கு உருவனுய் வருவன்'' என்ற மாமறைக் கிணங்க, அருவுருவத் திருமேனியான 'இலிங்க' வடிவில் 'தன்னை வெளிப்படுத்திக் கொண்ட சிறப்புப் பெற்ற திருத்தலம்' திருவண்ணுமலை! ஆதிநாதன் அருவ வடிவாய் மலையின் கண்ணே இருந்து பின்னர் லிங்கநாதனுய் அருட் கோயிலிலே அமர்ந்து காட்சி தருகிருன்.

முக்திபுரி, சிவலோகம், சோணுசலம், சோணகிரி, அருணுசலம், அருணகிரி, திருவருணை என்ற பல திருநாமங்களைக் கொண்ட இந்தத் திருவண்ணுமலையானது இன்று திருவிழாக் கோலம் பூண்டிருக்கிறது. பஞ்சபூதத் தலங்கள் ஐந்தனுள் நடுநாயகமாக விளங்கி சிந்திப்போருக்கே முக்தியருளும் புனிதத் தலமாக இது மாபெருஞ் சிறப்புப் பெற்றிருக்கிறது.

விழுப்புரத்திலிருந்து 42 கல் தொலைவிலுள்ள இத்திருக்கோயில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 24 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் வானளாவிய கோபுரங்களுடன் எழில்மிகு தோற்றத்துடன் காட்சியளிப்பது ''பவக்கடல் கடந்து முத்தியங்கரையில் படர்பவர்களுக்கு'' ஒரு கலங்கரை விளக்கம் போலுள்ளது.

ஐதீக நகரினுள்ளே நுழையும் போது வானளாவி செம்மாந்து நிற்கும் ராஜகோபுரத்தைப் பார்க்கிருேம். 217 அடி உயரமுள்ள இந்த கோபுரம் விஜய நகர மன்னர்களின் பாரம்பரிய பண்பாட்டுக் கலை நுணுக்கத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு.

நுழைவு வாயிலின் வழியே ஐந்தாம் பிரகாரம் வருகிருேம். இடது புறத்திலே சிவகங்கைத் தீர்த்தம். அதன் சுவர்மேலே இரு ரிஷபங்களுக்கிடையே பூதகணம் ஒன்று நம்மை சங்கொலி நாதம் எழுப்பி வரவேற்பது போலக் காணப் படுகிறது. இத் தோற்றம் ''சேவார்த்திகளே! வாருங்கள்''—இந்த சிவகங்கையில் நீராடுங்கள். அண்மையிலுள்ள சர்வ சித்தி விநாயகரைச் சேவித்து விட்டு உட் செல்லுங்கள் என்று கூறுவது போலுள்ளது.

வடபுறம்—ஆயிரக்கால் மண்டபம். மண்டபத்தின் தென் மேற்கே தரணி காணுத ரமண மகரிஷி வழிபட்ட பாதாள லிங்கம் பூமியின் கீழே அமைந்துள்ளது. ரமண பகவான் தவம் செய்து, ஞானத்தியானத்திலே மூழ்கி, முக்தி பெற்ற இடமும் இதுவேதான்.

தென்புறம்—'கம்பத்து இளையனர் சந்நிதி'. திருப்புகழை வழங்கிய அருணகிரிப் பெருமானுக்கு முத்தியளிக்க வந்த இந்த சந்நிதி 16 தூண்களைக் கொண்டது. முருகப் பெருமான்

அங்கே 'அதல சேதனுராட'த் திருப்புகழைத் தமிழுக்காகப் பெற்றுக் கொண்டு 16ஆவது தூணின் அடித்தளத்தில் பக்தனுக்கு அருள் பாலிக்கின்ருன். அடுத்து—மனம் வெறுத்து அருணகிரிநாதர் வல்லாள மகாராஜன் கோபுரத்திலிருந்து கீழே விழும்போது, பெருமானை விழாதவாறு கரத்தினுல் தாங்கி, தனது அருள் பாலித்து வள்ளி தெய்வானை சமேதராய்க் காட்சியளித்த இடம் 'கோபுரத்து இளையனர் சந்நிதி'.

இதையும் கடந்து கிளிக்கோபுரம் நுழைந்து 3-ஆம் பிரகாரம் வருகிறேம். கிளிக்கோபுரம் சிறப்புமிக்க சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டது. ''தேவலோகத்திலிருந்து பாரிஜாத மலர் கொணர்க'' எனப் பிரபு தேவராயர் சொல்ல, அது கொணரும் பொருட்டுத் தன் சடலத்தை விட்டு அருணகிரிநாதர் ஒரு கிளி உருவில் செல்ல, சம்பந்தாண்டான் இதனைத் தெரிந்து கொண்டு அருணகிரிநாதர் மரித்தார் எனச் சொல்லி சடலத்தை தகனம் செய்து விட்டார்கள். சில நாள் கழித்து தேவலோகம் சென்று திரும்பிய அருணகிரி விட்டுச் சென்ற சடலத்தைக் காணுது, நடந்த நிகழ்ச்சியினைத் தெரிந்து கொண்டு கிளியாகவே இந்த கோபுரத்தில் வாழ்ந்து 'கந்தர் அநுபூதி' போன்ற அற்புதமான பாடல்களை இயற்றினர். எனவேதான் இதற்குக் கிளிக் கோபுரம் என்ற பெயர். கோபுர கீழ்ப்புற மாடத்திலே ஒரு சுதை வேலைப் பாடமைந்த கிளியை நீங்களும் பார்க்கலாமே.

நேயர்களே 3-ஆம் பிரகாரம் வந்தவுடன் பார்ப்பது கால பைரவர் சந்நிதி இடது புறத்தில். எதிர்ப்புறம் பிரம்ம தீர்த்தம். இங்கிருந்து தெற்கே உயரமாகக் காட்சியளிப்பது திருமஞ்சனக் கோபுரம் (157 அடி). வடக்கே—அம்மணி அம்மாள் கோபுரம் (171 அடி); மேற்கே பேய்க் கோபுரம் (144 அடி). ஓர் விந்தை பாருங்கள்—ஒவ்வொரு பிரகாரம் தாண்டியவுடனே ஒவ்வொரு சிறு கோபுரம் **கட்டைக் கோபுரமாக** 70 அடி உயரத்தில் காட்சியளிக்கிறது.

கிளிக்கோபுரத்தின் நேர் எதிரே 16 கால் மண்டபம். கார்த்திகை அகண்ட தீபத்தின் போது பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளும் இடம் இதுதான். அர்த்தநாரீஸ்வரர் தீபம் தாங்கி வந்து பலி பீடத்தின் முன்னர் தீபம் ஏற்றியவுடன்— கார்த்திகை தீபம் அண்ணுமலையிலும் எரிய லக்ஷக்கணக்கான சேவார்த்திகள் ''அண்ணுமலைக்கு அரோகரா'' என்று ஒன்று சேர்ந்து ஒலி எழுப்பும் போது 'பிரணவத்தின் நாதத்தில்' நாமும் திளைத்து நிற்கிறேம். திருக்கார்த்திகைத் தீபப் பெரு விழாவிலே 10-ஆம் நாள் காலை 5 மணிக்கு உஷத்கால பரணி தீபமும், மாலை 6 மணிக்கு மலைஜோதி தீப தரிசனமும் இத்திருக் கோயிலிலே நடைபெறக் கூடிய மிகச் சிறப்பான நிகழ்ச்சி.

இந்தநாளிலே தான் எல்லா கிராமப்புறக் கோயில்களிலும் பனை ஓலையால் சொக்கப்பனை வேய்ந்து அதனைக் கொளுத்தி ஒளி வடிவாக ஆண்டவனை வழிபடும் பழக்கமும், வீடுகளிலே ஜோதிவடிவாக அகல் விளக்கு ஏற்றி வழிபடும் வழக்கமும் இருந்து வருகிறது.

மூன்றும் பிரகாரத்தில் ஒருசேர காளத்தீசுவரர், ஏகாம்பரேசுவரர், சிதம்பரேசுவரர், ஜம்புகேசுவரர் ஆகிய மூர்த்திகளின் சந்நிதிகள் உள்ளன. மற்றைய பஞ்ச பூதத்தலங்களுக்கு செல்ல முடியாதவர்கள் இந்தத் தலத்திலேயே ஐவரையும் காணும் வாய்ப்பாக இவண் அமைந்துள்ளது இவ்வாலயத்தின் தனிச் சிறப்பேயாகும்.

தெற்குப் பிரகாரத்தில் நமக்கு நிழல் கொடுத்து மனத்தோடு வரவேற்பது இக்கோயிலின் ஸ்தல விருக்ஷமாகிய 'மகிழமரம்'.

அடுத்து அதே தெற்குப் பிரகாரத்தில் ஒரு கவினுறு மண்டபத்தைக் காணுகிறேம். மர விதானத்தின் மேலே செப்பு ஓடு வேயப்பெற்ற மண்டபத்தினுள் நுழைகிறேம். 1903-ஆம் ஆண்டு நாட்டுக் கோட்டை நகரத்தார்களால் பாங்குற அமைக்கப்பெற்ற இந்தத் **திருக்கல்யாண மண்டபத்தை** அண்ணுந்து நோக்கினுல்—என்ன ஓவிய வேலைப்பாடு—என்ன அழகிய தூண்கள்—எத்துணை பழங்கால லஸ்தர் விளக்குகள்! உண்மையிலேயே இது ஒரு கலைக்கூடம். நகரத்தார்கள் படைக்கும் கட்டிடச் சிறப்பிற்கு ஒரு உதாரணம்!

சுவாமி சந்நிதி

பிரகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றி வந்து, இடதுபுறத்திலேயுள்ள சம்பந்த விநாயகரைத் தரிசித்து விட்டு, துவாரபாலகர்களைத் தாண்டி, அதிகார நந்தி அனுமதியை இடைக்கட்டினிலே பெற்று உள்ளே செல்கிறேம். அங்கே ஓர் அற்புதம். ஒரு யாளியின் வாயிலிருந்து வளையங்கள் பல சங்கிலி கோத்தாற்போல் பிணைந்து தொங்கவிட்டிருக்கும் காட்சி!—பந்தம், பாசம்

மாயை, ஆசை இன்னபிற மனிதனின் மன மாச்சர்யங்களை நினைவுபடுத்தும் வகையிலே பிணைந்துள்ளதை நமக்கு உணர்த்துகிறது. **"பிறவித் தளையிலே அழுந்திக் கிடக்கும் உலகீரே! பிறப்பறுக்கும் நாயகனைக் காணச் செல்லுங்கள்"** என்று நம்மை அந்த 'கண்ணார் அமுதமுமாய் நின்ற பெருமான்' கூறுவது போல இருக்கிறது.

'மாலறியா நான்முகனும் காணா மலையானை'த் தரிசிக்க இருக்கின்றீர்கள். உங்கள் வாழ்வும் இனி ஒளிமயந்தான் என்பதை உணர்த்துவது போல உள்ளது அங்குள்ள சூழல். கருவறைக்கு வெளிமண்டபத்தில் ஹோம குண்டம் வளர்த்து, சூரியன்—நந்தி—துவார பாலகர்கள்—வாசற்கால் பூஜை முடித்து, வல்லப கணபதி அபிஷேக ஆராதனை நிறைவு செய்து, கடைசியாகத்தான் அண்ணாமலை அண்ணலின் உஷத்கால பூஜை தினமும் நடைபெறுமாம்.

இது ஓர் உயர்ந்த தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது:

தலமோ—அக்னிப் பேரண்ட வடிவத்தின் பேரொளி அரும்பெரும் ஜோதியாக உள்ள அவனை அணுகு முன்னர் இச்சா சக்திகளை ஒழிக்க—ஹோமகுண்டத் தீ வளர்த்துப் பொசுக்கி, சூரிய ஒளியிலே நனைந்து புனிதம் பெற்று, ஞான வடிவாம் நந்தி தேவரின் போதம் பெற்று, துவாரபாலகர்களின் அனுமதியுடன், ஐயன் இருப்பிடம் நுழையும் வாயிலை வணங்கி, வல்லப விநாயகரின் அருளை நம்பால் திருப்பி கடைசி நிலையாக கண்ணார் அமுதமுமாய் நின்ற பெருமானின் திருவடி காண நாம் நற்கதி பெறுகிறோம்.

அண்ணலின் வெளிப் பிரகாரத்திலுள்ள 63 திருத் தொண்டர்களின் உருவங்களை வணங்கி, அண்ணாமலையான் கோயிலையே தோற்றுவிக்கக் காரணமான நாரணனின் வேணுகோபாலச் சந்நிதிக்கு வந்து, ஊழி முதல்வனாய் நின்ற பெருமானுக்கு பூஜை செய்த மாலவனை வணங்கி, வைகுந்த வாயில் வழியாக பிராட்டியின் சந்நிதி வருகிறோம்.

அம்பிகை உண்ணாமுலை சந்நிதி

அம்பிகை சந்நிதிக்குள் நுழையு முன்னர் நவக்கிரகங்கள் சந்நிதி இருக்கிறது. மாந்தர்களின் தலைவிதியினை நிர்ணயிக்கும் இந்தக் கோள்களை வணங்கி வலம் வரும் பொழுது—அந்த விதியின்படி நாம் செய்யும் செயல்களைக் கணக்கெடுத்துப் பதிந்து வைக்கும் தர்ம தேவதையின் கணக்கன் சித்திராபுத்திரன் சந்நிதியையும் கண்டு வணங்குகிறோம்.

இங்கு மகாமண்டபத்திலுள்ள கற்தூண்கள் கொள்ளை அழகு. 16 தூண்களும் அருங்கலைப் பெட்டகங்கள். சிற்பசாஸ்திர நுணுக்கங்களோடு நம்மை சக்தியின் பிரபாவங்களிலே ஆட்படுத்தி விடுகின்றன.

உள்ளே கருவறையில் அம்பிகை 'பால சுவரூபிணி'யாகக் காட்சியளிக்கிறாள். இதுவும் ஓர் அற்புத விளக்கத்தை நமக்கு உணர்த்துகிறது. அம்பிகையின் வலது கையில் தாமரை மலர், இடதுகை குலமகள் பாங்கில் அடக்க ஒடுக்கத் தன்மையிலே இருக்கின்ற ஒரு நிலை—நிர்மலமான பூவின் மென்மையோடு—தன்னடக்க உணர்வோடு—ஒருவர் வாழ்ந்தால் உலகின் கஷ்ட நஷ்டங்களுக்கே இடமில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி விளக்குகிறது.

அணி அண்ணாமலையுளானின் ஆக்ஞைப்படி பவழக்குன்றிலே பரண் அமைத்துத் தவம் புரிந்து, மன்பதை உய்யக் கார்த்திகைத் திருநாளில் பெருவிழா நடத்தி, முழுநிலவோடு கூடிய கிருத்திகை பிரதோஷ காலத்தில் மலைமேல் ஜோதி தரிசனம் கண்டு, எல்லை இலாக் களிப்பெய்தி, எம்பெருமான் இடப் பாகம் பெற்ற பெருமிதத்தை இங்கே அம்பிகையின் முகத்திலே காண்கிறோம் அல்லவா?

சீர் ஒழுகும் பதத்தாளின் பிரகாரம் சுற்றி வருகிறோம். அருளாளர்களான ஞான சம்பந்தர், நாவரசர், அருணகிரிநாதர், மணிவாசகர் ஆகியோர் இத்தலத்தைப் பற்றி அருளிய தெய்வ வாக்குகள் திருச் சுவர்களிலே தீட்டப் பெற்றிருப்பதைப் பார்க்கிறோம். அந்தப் பெரியவர்களுக்குத் தான் எத்துணை பரந்த விரிந்த உள்ளம் என வியக்கிறோம். மலைமகளின் அருள் வெள்ளத்திலே மூழ்கியவாறே அவளின் கருணை மழையால் நனைந்தவாறே அவளின் கடைக்கண் பார்வை நம்பால் விழுந்து விட்டது என்ற ஸ்திரத் தன்மையோடு தண்டனிட்டு வழிபடுகிறோம்.

கார் ஒழுகும் குழலாள்—அருணை உண்ணாமுலையம்மன் நமக்கெல்லாம் 'இகபற சுகத்தோடு இனிதே வாழ்க' என நல்லாசி நல்கினாள் என்ற மனநிறைவோடு வெளிவருகிறோம்.

கிரி வலம் வருதல்

மால், அயன் சர்ச்சைக்குக் காரணமான சிவனின் அடிமுடி காண முடியாத, அண்ட பிரமாண்டமான அண்ணுமலையைச் சுற்றி வலம் வந்து அடிலோங்கிய ஓங்கலாக இருக்கும் பெருமானின் அருளை நாமும் பெறுவோமே. சைவ எல்லப்ப நாவலர் அருணுசலப் புராணத் திலே கூறியாங்கு நாமெல்லாம் கிரி வலம் வரும் போது பக்கலிலே தேவர்களும், மகான் களும் கண்ணுக்குத் தெரியாமலேயே சதாசர்வ காலமும் கிரிவலம் வருகிருர்கள் என்ற புனித எண்ணத்தோடு அமைதியாகச் செல்லவேண் டும் என்ற ஒரு முறையினை வகுத்துக் கொண்டு வலம் வருகிறோம்.

சரி, கிழக்கிலே தொடங்கி வலம் வரு வோமே! முதலிலே காண்பது 'இந்திர லிங்கம்'. பக்கலிலே இந்திர தீர்த்தம். அடுத்து அக்னி தீர்த்தம்—அக்னி லிங்கம். ஒரு விசேஷம் பார்த்தீர்களா! புற அழுக்கையும், அக அழுக் கையும் ஒருசேரப் போக்கிக் கொண்டு நட வுங்கள் என்பதே போல—கிரியைச் சுற்றிலும் தீர்த்தமும், திருவுருவமும் அமைந்திருக் கின்றன.

அக்னி தீர்த்தத்தின் பக்கலிலே மகனீயர் சேஷாத்ரி சுவாமிகளின் அதிஷ்டானம். அண் ணுமலையே வலம் வந்து வழிபட்ட அந்த மகா புருஷரின் சமாதியினை வணங்குகிறோம்.

அடுத்து நம்மை எதிர்நோக்குவது—பக வான் ரமண மகரிஷியின் ஆசிரமம். அந்தப் பெருமான் தியானத்திலே திளைத்த இடங்கள் —மோனத்திலே இருந்த பீடங்கள்—அவர் வழிபட்ட அண்ணுமலையார் கோயிலை—திரு வாய் மலர்ந்தருளிய வழிபாட்டுக் கூடம் இவை களைக் கண்டு புனிதம் பெறுகிறோம். பால் பிரண்டனைப் போன்ற வெளிநாட்டவரும் பக வானிடம் நாட்டங் கொண்டு சீடர்களாகத் தங்கி, மோனநிலையிலிருக்கும் பாங்கினைக்கண்டு நாமும் உள அமைதி பெற்று வெளி வருகிறோம்.

தொடர்ந்து தீர்த்தங்களும், மண்டபங்களும் வழிநெடுகிலும் உள்ளன. நாவரசர் பதிகங் களிலே ஒவ்வொரு பாடலிலும் 'அணி அணு மலையுளானே' என்று கூறுவது போல ஒரே நாளில் இத்தனை தரிசனமா என வியக்கிறோம்.

கிரியின் மேல வீதியில் அயன் பூஜை செய்த ஆதி அண்ணுமலைக் கோயிலுக்கு வருகிறோம். 1918-லும் 1967-லும் நகரத்தார்கள் திருப் பணி செய்து கும்பாபிஷேகம் நடத்திச் சிறப் புச் செய்த இக்கோயில் என்ன கம்பீராகக் காட்சியளிக்கிறது!

அதே வீதியில் திருவெம்பாவை, திருஅம் மானைப் பாசுரங்களை தேன் சொட்டும் வாசகத் தால் நமக்கு அருளிச் செய்த மாணிக்கவாசகர் சந்நிதி நமக்குக் காட்சியளிக்கிறது. அவ்வளவு பெரிய மகானுக்கு இவ்வளவு சிறிய சந்நிதியா என்று கூட எண்ணுகிறோம்!

கிரியின் வடக்கு வீதியில் பஞ்சமுகங்களாய் சதாசிவமூர்த்தி நம் கண் முன்னே காட்சி யளிக்கிறது. தொடர்ந்து ஈசான்ய மடம், ஈசான்ய தீர்த்தம் இவைகளைப் பார்த்துக் கொண்டே 'அருள்திரு தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள் முதல் பீடம் இருந்த இடத்தையும் தரிசித்து புனிதப் பயணத்தை மேல் தொடர்கிறோம்.

வரும் வழியில் குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர் ஆகிய மகான்களின் புண்ணிய இடங்கள் நம் கண்ணையும் கருத்தையும் கவர் கின்றன.

தொடர்ந்து மலை அடிவாரத்திலுள்ள பவழ கிரிநாதரையும், முத்தாம்பிகையையும் தரிசித்து விட்டுப் புறப்பட்ட இடத்திற்கு வருகிறோம்.

வலம் வந்தபின்னர் மலையைச் சுற்றிலும் எண் திசையிலும் அஷ்டலிங்கங்கள்—அஷ்ட நந்திகள், 360க்கு மேலான தீர்த்தங்கள்—மண்டபங்கள், ஆசிரமங்கள் இவைகளைத் தரி சித்ததின் பெருமையை உணர்கிறோம். நடந்து நடந்து கன்ம மலங்களைக் கழுவிக் கொண்டே செல்லும்போது கனத்த இதயம் இலேசாவதை உணர்கிறோம். மகனீயர்கள் வாழ்ந்த பூமியில் முத்திப் பெருவெளி நோக்கி, சக்திப் பரம் பொருள் தடத்தினைப் பார்த்து, வழிபாடு செய்கிறோம் என்ற மாருத நினைவுகள்—மலை ஈசன் அண்ணுமலையானைப் பார்க்குந்தோறும், வழி படுந்தோறும் நம்மை உம்பர் உலக இன் பத்திற்கே அழைத்துச் செல்கின்றதை நாம் உணர்கிறோம் அல்லவா?

கல்வெட்டுக்கள்

நாட்டின் வரலாறு எழுதப்படாத காலத் தில் கல்வெட்டுக்கள் தானே—ஆண்ட அரசன் பெருமை பேசும். அதுவும் அவர்கள் எழுப் பிய நினைவுச் சின்னமாகிய திருக்கோயில்களின் சுற்றுச் சுவர்களிலே பொறிக்கப்பட்ட கல்

வெட்டுக்கள் தானே அவர்களின் மெய்க் கீர்த்திகளைக் கூறும்:

ஆம் அண்ணுமலையார் ஆலயத்தின் 3-ஆம் பிரகாரக் கல் வெட்டுகள் மூலம் சோழர், பாண்டியர், பல்லவர், ஹோய்சாலர், விஜயநகர மன்னர்கள் மெய்க்கீர்த்திகள் பேசப்படுகின்றன.

அவனி ஆளப் பிறந்த 'கோப்பெருஞ் சிங்கன்' என்ற பல்லவ மன்னன் கோயிலுக்கு திருவாசி, நடராஜர் பாதம், பொன் சிம்மாசனம், பொன் அணிகலம் செய்து வைத்தான் என்று தெரிய வருகிறது—கல்வெட்டுக்கள் மூலமாக.

விஜயநகர மன்னர்கள் காலத்தில்—அதுவும் சிறப்பாக கிருஷ்ண தேவராயர் காலத்தில்—ஆயிரக்கால் மண்டபம், வஸந்த உற்சவ திருக்குளம், 11 நிலைக் கோபுரம், விஞயகர் தேர், இந்திர விமானம் போன்ற 20 பெரும் திருப்பணிகளைச் செய்தார் என்று பேசுகிறது கல்வெட்டுக்கள். எவ்வளவு செய்திகள்!

2. திருநெல்வேலி பேராசிரியர் எஸ். இராமச்சந்திரன் வழங்கிய நேர்முக வருணனை

நேரம் 8-21—8-27.

''கிளிக் கோபுரத்தின் உச்சியிலிருந்து இராமச்சந்திரன் வருணனையைத் தொடங்குகிறேன்.

அரி அயன் காணு அறிவுச் சோதியாய் சிவபெருமான் நின்ற அரிய தலம் திருவண்ணுமலை.

பஞ்சபூத க்ஷேத்திரங்களுள் தேயுத் தலமாய் தேயாப் புகழுடன் விளங்குவது இத்திருத் தலம்.

காஞ்சியின் ஈசனைப் பூசனை செய்த அம்பிகை அத்தவப் பலனுகச் சிவத்தை மணந்த சீராறும் தலம் இது.

பிரபஞ்சத்தின் மையஸ்தானம் என்றே இதனைக் கருதுகிறுர்கள்.

அப்பரும் சம்பந்தரும் நாவாரத் தேவாரம் பாடிய நன்னகரம் இது.

மணிவாசகரின் திருவெம்பாவை பிறந்தது இங்குதான்.

முருகக் குருவிடம் அருணகிரி அரும்பொருள் பெற்ற இடம் திருவண்ணுமலை.

கௌதமமுனிவரில் தொடங்கி சித்தயோகியர் பலரும் இடைக் காடரும் பட்டினத்தடிகளும் மாமேருக்களாக வாழ்ந்து உவந்த திவ்வியத் தலம் திருவண்ணுமலை.

''எல்லையில் அருணகிரி தனை நினைக்க எய்தலாம் முத்தி'' என்று போற்றப்படும் மோட்சபுரி திருவண்ணுமலை.

இங்கு அமைந்துள்ள கருணுசலமாம் அருணுசலர் கோயிலே கோயில். எத்தனை வானேங்கு கோபுரங்கள். எத்தனை விரிந்து பரந்த பிராகாரங்கள். எத்தனை மணி மண்டபங்கள். எத்தனை எத்தனை எழிலார்ந்த திவ்விய வடிவங்கள்!

வரலாற்றுப் புகழ்கொண்ட சோழப் பேரரசர் காலத்திலிருந்து வல்லாள மாகாராஜன், கிருஷ்ணதேவராயர், தஞ்சை நாயக்கர் ஆகிய அரசர்களின் ஆட்சியிலும் அண்மைக் காலத்தில் நகரத்தார் முதலிய வள்ளல்களின் ஆதரவிலும் மேலும் மேலும் புது வளர்ச்சி கொண்டு நம் கலைத்திறனுக்கும் இறைவனின் அருள் திறனுக்கும் அளப்பரிய வளப்பமிகு கருவூலமாகத் திகழும் மகா மகா ஆலயம் அருள்மிகு அண்ணுமலையார் அருள் தரும் உண்ணுமுலையம்மை ஆலயம்.

இந்த பிரும்மாண்டமான கோயிலின் திருப்பணி நிறைவெய்தி குடமுழுக்குப் பெருவிழா இதோ நடைபெறவிருக்கிறது.

எண்ணி முடியாத எத்தனையோ கோயில்களைக் கண்ணிலிறுத்திக் கலையோடு காத்துவரும் தன வணிகப் பெருமக்கள் அண்ணுமலை ஆலயத்திற்கு மாசற்ற பொன்னும் மணிவயிரமும் இரத்தினமும் தூசென்று எண்ணித் தூக்கிக் கொடுத்தார்கள் என்ருல் அது மிகையன்று. அவர் தம் பெரு முயற்சியின் காரணமாக 1903-ம் ஆண்டில் மகா கும்பாபிஷேகமும் 1944-ம் ஆண்டில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும் செய்விக்கப் பெற்றன. இன்று நிகழும் இந்த மகா கும்பாபிஷேகத்தையும் நகரத்தார்களே நடத்திவைக்க முன் வந்தது போற்றத்தக்கது.

இன்று இந்த விழாவிற்காக இங்கே பெருந் திரளான மக்கள் கூடியிருக்கிறார்கள். அருணா சலத்தின் பஞ்சமுகங்களும் தெளிவாகத் தோன்றும் அழகிய காட்சி. அழகுக்கு அழகு சேர்ப்பது போல வெண்முகில்கள் அருணா சலத்தின் உச்சியில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கின்றன. மலையின் அடிவாரத் திலும் மலைச்சரிவிலும் கோயிலைச் சுற்றி நாற்புறமும் அமைந்துள்ள வீடுகளின் மொட்டை மாடிகளிலும் கோயிலின் உள்ளே பிராகாரங்களிலும் ஆலயத்தின் மேல் தளம் முழுவதிலும் மக்கள் பெருந்திரளாகக் கூடியிருக் கிறார்கள். எள் போட்டால் எள் தரையில் விழாது என்று சொல்லத்தக்க அவ்வளவுபெரிய கூட்டம். அமைதியுடன் அமர்ந்து குட முழுக்கைக் காணும் பெரு விருப்புடன் கருமமே கண்ணாக உள்ளனர்.

இருபத்திநான்கு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த மகா ஆலயத்தின் நாற் புறமும் நெடிதுயர்ந்த திருமதில்கள் காணப் படுகின்றன. கோட்டைச் சுவர் போல் விளங் கும் திருமதில்களின் தென்வடல் நீளம் 700 அடி; கிழமேல் நீளம் 1500 அடி. கனம் உச்சியில் 7 அடி.

வடக்குத் திருமதிலின் மத்தியில் விளங்கு வது அம்மணி அம்மாள் கோபுரம். அம்மணி அம்மாள் பதினேழாம் நூற்றாண்டின் முற் பகுதியில் திருவண்ணாமலையில் வாழ்ந்த பக்தை. தருமம் வாங்கியே இந்த கோபு ரத்தை அவர் அமைத்தார். ஓர் அபூர்வச் சக்தியை அவர் பெற்றிருந்தார். தான் தரு மம் பெறச் செல்லும் வீட்டிலுள்ள பெட்டி யில் பணம் எவ்வளவு உள்ளது என்பதை அவர் சரியாக அறிந்து சொல்லி அதில் ஒரு பாகத்தைத் தனக்குத் தருமமாகத் தரவேண் டும் என அவர் கேட்டு வாங்கி இந்த கோபு ரத்தைச் அமைத்தார் என்று சொல்லப்படு கிறது.

★ ★ ★

இப்போது மணி 8-37. வானம் மப்பும் மந்தாருமுமாக இருக்கிறது. பகலவனின் கடுமை கொஞ்சமும் தெரியவில்லை. நாற் புறமும் மேகங்கள் சூழ்ந்திருக்கின்றன. பனிப் படலம் கூடத் தெரிகிறது. இந்தச் சூழலிலே இங்கே என் முன்னே வல்லாள மகாராஜா கோபுரம் தெரிகிறது. அதன் அருகிலே பிரம்ம தீர்த்தமும் அதற்கும் இராஜகோபுரத்திற்கும் மத்தியிலே சிவகங்கைத் தீர்த்தமும் தெரி கின்றன. ஆயிரக்கால் மண்டபத்தின் மீது மக்கள் ஆயிரம் ஆயிரம் பேர் கூடி அமர்ந் திருக்கின்றனர்.

இதோ குடமுழுக்கிற்கான நேரம் நெருங்கி விட்டது. மக்களிடையே பெரும் பரபரப்புக் காணப்படுகிறது. உட்கார்ந்திருந்த மக்கள் எல்லோருமே எழுந்து நின்று குடமுழுக்கை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறார்கள்.

வெடியோசை கேட்கப்போகிறது. அதற்கு அறிகுறியாக மங்கல வாத்தியங்கள் முழங்கு கின்றன. ஆலயத்தின் வெண்கல மணிகளின் மங்கல்நாத வெள்ளம் நான்கு திசைகளிலும் பரவுகிறது. ''அண்ணாமலைக்கு அரோகரா'' எனும் பக்தி முழக்கம் எழுந்து அருணாசலத்தில் மோதி அருள் அலைகளாகச் சிதறி எல்லாத் திசைகளிலும் எதிரொலிக்கிறது...''

''பெருத்த பாருளீர் இங்கு வாருமே'' என அருணகிரியார் அழைத்தார். அந்த அழைப் பிற்கிணங்க தமிழுலகத்தில் உள்ள மக்கள் பெரும் பகுதியினர் இங்கு வந்து விட்டனரோ என்று நினைக்கும்படியான ஒரு மயக்கம். இந்தக் கூட்டம் முழுவதுமே குடமுழுக்கு நீரைப் பெறுவதற்காகக் கையேந்தி நின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சி. அதன் பின் னர் நடைபெற்ற கற்பூர ஆரத்தியின்போது அவர்கள் கன்னத்தில் போட்டுக் கொண்ட காட்சி நான் விவரிக்கமுடியாத ஒரு மாட்சி.

இப்போது இங்கே பெரும் பரபரப்பு நிலவு கின்றது. ஒரு சந்நிதியின் முன் நின்ற மக்கள் மற்றோர் சந்நிதிக்குச் செல்ல முயலுகின்றனர். வெடியோசை ஆங்காங்கே முழங்குகின்றது. அந்த வெடியோசையிலிருந்து கிளம்பும் புகை இங்கே ஒரு பெரிய பனிப்படலம் போன்ற புகை மூட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குடங்களில் எஞ்சியுள்ள புனித நீரைச் சிவா சாரியார்கள் மக்களை நோக்கித் தெளிக்கின்ற னர். கூடி நிற்கும் மக்கள் பூஞ்சிதறலாக விழும் அந் நீர்த்திவலைகளைப் பெறும் பொருட்டு அவை வீழ்கின்ற திசை நோக்கி விரைகின்றனர்.

அருணகிரியண்ணல் பற்றிய ஒரு நிகழ்ச்சி இப்போது என் நினைவு வருகிறது.

பிரபுடதேவராயர் திருவண்ணாமலையை அர சாண்டபோது சம்பந்தாண்டான் என்ற

சமண பண்டிதர் அரசனுக்கு நெருங்கிய நண்பராகத் திகழ்ந்தார். அவர் ஒரு தேவி உபாசகர். நினைத்தால் தேவி அவருக்குத் தரிசனம் தருவாள். அருணகிரி நாதரின் புகழ் ஓங்கி வளருவதைக் கண்ட சம்பந்தாண்டான் அவரை அவமானப் படுத்தத் திட்டமிட்டார். அரசரிடம் சென்று நான் அம்பிகையை உங்கள் கண் முன் கொண்டு வந்து நிறுத்து கிறேன். அருணகிரியால் கந்தப் பெருமானை உங்களுக்குக் காட்ட இயலுமா? நான் அழைத்து அம்பிகை தரிசனமாகா விட்டால் நானும் என் மனைவி மக்களும் ஊரை விட்டு வெளியேறி விடுகிறோம். அருணகிரி அழைத்து முருகன் தரிசனம் தரா விட்டால் அருணகிரி ஊரை விட்டு ஓடி விட வேண்டும் என்று கூறி ஒரு பந்தயத்திற்கு ஏற்பாடு செய்தார். அதற்கு அருணகிரியாரும் இணங்கினார்.

பந்தயம் தொடங்கியது...

சம்பாந்தாண்டான் கடுமையான பூசைகள் இயற்றி அம்பிகையை அழைத்தார். உலக நாயகி அவருக்கு மட்டும் காட்சி தந்தாளே தவிர மன்னருக்குத் தரிசனம் தரவில்லை. அடுத்து அருணகிரியார் உள்ளம் உருக, ஊனெல்லாம் நெக்குருக பாடிப்பரவி முருகனை அழைத்தார்.

முருகன் வரவில்லை...

முருகனால் வரமுடியவில்லை...

அன்னை பார்வதியின் அரவணைப்பில் திக்கு முக்காடிக் கொண்டிருந்த பாலன் எப்படி வருவான்? மடியிலிருக்கும் குமரனைக் கீழே விட்டு விடாது கட்டியணைத்துக் கொள்ளுமாறு சம்பந்தாண்டான் அன்னையிடம் வேண்டிக் கொள்ள, பக்தனுக்குக் கட்டுப்பட்ட பராசக்தி அவ்வாறே செய்தாள்.

சம்பந்தாண்டானின் சூழ்ச்சியை அருணகிரியார் தமது ஞான திருஷ்டியால் உணர்ந்தார். முருகனது ஊர்தியாகிய மயிலை நினைத்து அவர் மனமாரத் தொழுதார். மயில் மனமிரங்கியது அன்னையின் முன் நின்று அக்கோல மயில் தன் நீலநிறத் தோகை விரித்து எழில் நடனம் ஆடியது. அம்மோகன நடனத்தைக் கண்டு அன்னை களித்தாள். அதில் தனது மனத்தைப் பறிகொடுத்தாள். தன்னை மறந்த அந்நிலையில் தனது மைந்தனின் மீதிருந்த பிடியை அவள் தளர விட்டாள். அப்போது அருணகிரியார்,

''அதலசேதனாட

அகிலமேருதாட...'' எனத் தொடங்கி ''மயிலுமாடி நீயாடி வரவேணும்'' என நெக்குருகப் பாடினார். பக்தன் அன்பொழுக அழைத்தது அறுமுகனின் செவிகளில் விழுந்தது. மறுகணம் அவன் ஆடிக்கொண்டே வந்து கற்றூணில் காட்சியளித்தான். அருணகிரியாரும் மன்னரும் மந்திரிப் பிரதானிகளும் அங்கு குழுமியிருந்த மக்களும் மெய் சிலித்தவராய், உடல் புளகித்தவராய் 'வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா' என்று பரவசமுடன் முழக்கமிட்டனர்.

அந்தக் காட்சியை நினைவுறுத்துவதுபோல இங்கே மக்கள் எல்லோருமே ''அண்ணாமலைக்கு அரோகரா'' ''வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா'' என்று முழக்க மிடுகின்றார்கள்...

இளவயதில் இதயத்தில் அருணாசலத் திருநாமம் ஓங்கார நாதமாய் ஒலிக்க ஒளியைத் தேடி திருவருணைத் தலம் வந்து அருணாசலத்தின் மடியில் தவழ்ந்து, அந்த ஞானமலையின் திருவடியாய்த் திகழ்ந்து நாடி வந்தவர்களுக்கெல்லாம் நற்கதியருளி, சரணடைந்தவர்களைச் சம்சாரக் கடலினின்றும் மீட்டு கலியுகத்தில் காண்பதற்கரிய கருணாமூர்த்தியாய்க் காட்சியளித்த பகவான் ரமண மகரிஷியின் ஆசிரமம் இதோ எனக்கு இடப்புறத்திலே அருணாசலத்தின் தென் பக்கலிலே வெகுதொலைவிலே தெரிகின்றது....

கும்பாபிஷேக வைபவத்தைக் கண்டு களித்த மக்கள் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து கொண்டிருக்கிறது.

கும்பாபிஷேக விழா முடிந்து அது நிறைவு பெறும் நேரம் வந்து விட்டதை உணர்ந்த மக்கள் மெதுவாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது அருள்மிகு அண்ணாமலையாரின் கருவறையிலிருந்து நண்பர் சிங்காரவேலன் வருணனையைத் தொடர்ந்து நிறைவு செய்வார். நேரம் 8-53—9-00.

திருவண்ணுமலை—அண்ணுமலையார் கருவறைக்கு முன்னுள்ள அர்த்த மண்டபத்தில் நின்று டாக்டர். சொ. சிங்காரவேலன் பேசுகின்றேன்.

இதோ என் வலதுபுறம் கிழக்கு நோக்கியபடி திருவண்ணுமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அண்ணுமலையார் கருவறையில் காட்சி வழங்குகின்ருர். என் முன்புறம் அமர்ந்து சிவாசாரியார்கள் மந்திரங்களை ஓதிக் கொண்டிருக்கின்ருர்கள். என் இடதுபுறம் மகாமண்டபம் தாண்டிக் கொடி மரம் தெரிகின்றது. அதற்கப்பால் மக்கள் நெருக்கியபடி மகாகும்பாபிஷேக வழிபாடு செய்யும் காட்சியை இதோ நான் காண்கின்றேன். கடமையைச் செய்தபடி காவல்துறையினர் கூட்டத்தினரைக் கட்டுப்படுத்தி நிற்பதையும் காண்கின்றேன்.

இதோ இந்தச் சந்நிதியில் நிற்கும் போது என் உள்ளத்தில் எழும் புனித நினைவுகள் எண்ணற்றவை; எத்தனை எத்தனை பெரியவர்கள் இங்கே வந்து வழிபட்டிருக்கிருர்கள்; எத்தனை எத்தனை சான்ருேர்கள் இங்கு வந்து வழிபாடு செய்து பயன் பெருக்கியிருக்கிருர்கள். குறிப்பாக ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் முதலியோர் இங்கே வந்து இந்தச் சந்நிதியிலே நின்று பெருமானை அற்புதமான தமிழ் மாலைகளால் அழகுபடுத்தியிருக்கின்ருர்கள்.

திருஞானசம்பந்தரது நட்டபாடைப் பண்ணில் **"உண்ணுமுலை உமையாளொடும் உடனுகிய ஒருவன்"** என்று தலத்து இறைவியையும் இணைத்துப் பாடுகின்ருர். **''அண்ணுமலை தொழுவார் வினை வழுவாவணம் அறுமே''** என்று எடுத்த எடுப்பிலேயே வினை தீர்க்கும் பெருமான் என்று பயன்காட்டிப் பேசியிருக்கின்ருர்.

''பூமாங்கழல் புனைசேவடி நினைவார்
வினையிலரே''

''அண்ணுமலை அண்ணல், காலன் வலி
தொலைசேவடி தொழுவாரன புகழே''

''உருகும் மனம் உடையார் தமக்கு
உறுநோய் அடையாவே''

''ஞானசம்பந்தன் தமிழ்வல்லவர்
அடிபேணுதல் தவமே''

என்றெல்லாம் வரும் திருஞானசம்பந்தர் தேவாரத்தின் புனிதமிகுந்த வரிகள் இப்போது என்நினைவில் எழுகின்றன.

இவ்வாறே **தக்கேசியில்** அமைத்த இத்தலத்தின் மற்ருெரு பதிகத்தில், இங்கு

''பூவார் மலர் கொண்டு அடியார்
தொழுவார்; புகழ்வார் வானேர்கள்''

என்கின்ருர்; ஆம்; இன்று இக்கும்பாபிஷேக நாளில் அடியார் கண்கள் நீர்வாரத் தொழுகின்ற காட்சியை நாம் காண்கின்ருேம்.

மகாகும்பாபிஷேகப் பெருநீராட்டுக்கு முன்னேடியாக வருண பகவான் மூன்று நாட்களுக்கு முன்பாகப் பெருமழை பொழிந்து அண்ணுமலைப் பெருமானுக்குக் குடமுழுக் காட்டி மகிழ்வித்த செய்தியை இங்கு எண்ணிப் பார்த்து வியக்கின்றேன்.

''ஞானத் திரளாய் நின்ற பெருமான்
நல்ல அடியார் மேல்
ஊனத்திருனை நீக்கு மதுவும்
உண்மைப் பொருள்போலும் . . .''

என்று அண்ணுமலையாரை **ஞானத்திரள்** என்று போற்றுகின்ருர் ஞானப் பிள்ளையார். 'நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலர்' உறையும் இக் கோயிலில் ஆயன் குழல் ஊதியவுடன் மேதிகள் திரண்ட செய்தியைத் தேவாரம் பாடுகிறது. உண்மை தானே! இதோ நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆன்மாக்கள் திரண்டு வந்து திருவருட் பெருங்கருணைக்கு இலக்காகியிருக்கிருர்கள்.

''நின்னையல்லால் எனக்கு வேறு நினைவு இல்லை'' என்கின்ருர்கள் அணி அண்ணுமலை போந்து தொழுத அப்பரடிகள். அப்பர் சுவாமிகளின் திருவண்ணுமலைப் பதிகங்களும் அவர்கள் இங்குப் பெற்ற அனுபவங்களையே காட்டுகின்றன.

''அட்ட மூர்த்தி அண்ணுமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை கேடில்லை
காண்மினே''

என்றும்,

''அல்லல் தீர்க்கும் அண்ணுமலை கைதொழ
நல்லவாயின நம்மை அடையுமே''

என்றும்,

''ஆடிப்பாடி அண்ணுமலை கைதொழ
ஓடிப்போகும் நம் உள்ள வினைகளே''

என்றும் பாடிப்பரவுகின்ருர்கள்.

நினைத்தால் முத்தி தருவான் இதோ வீற்றிருக்கும் பெருமான்,

இதோ போகசக்தி, கணபதி, மேரு ஆகிய மூர்த்திகட்கு மகாகும்பாபிஷேகம் நிகழ்கின்றது. சிவாசாரியார்கள் புனித கும்பங்களிலிருந்து நீரை இம்மூர்த்தங்களுக்கு அபிஷேகம் செய்கின்றூர்கள். வேத மந்திரங்களை முறைப்படி ஓதுகின்றூர்கள். நாடெங்கிலுமிருந்து வந்திருக்கும் அன்பர்கள் ''அண்ணுமலைக்கு அரோகரா'' என்ற ஒலியுடன் வழிபாடு செய்கிறூர்கள். என்முன் நிற்கும் இரண்டு அன்பர்கள் 'சிவபுராணத்தை' மனம் கனிந்து ஓதுகின்றூர்கள்.

இந்த மகாகும்பாபிஷேகத்திற்கு வந்து தரிசனம் செய்பவர்க்கு என்னென்ன பேறுகள் கிட்டும்? இதோ சிவப்பிரகாசர் பாடும் சோணசைல மாலை வரிகளைக் கேளுங்கள்:

''சீரணி புகழும், கல்வியும், சிறந்த
செல்வமும், இல்லில் வாழ்பவர்க்குப்
பேணி கலமென் புதல்வரும், கதியும்
பெறத் துதிப்பவர்க்கு அருள்பவன் நீ''

எண்ணற்ற சித்தர் வாழ்ந்த ஞான பூமி இத்தலம். 'நவகோடி சித்தர் புரம்' என்ற சிறப்பை இத்தலம் பெறுகின்றது.

இந்த மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு அமைக்கப்பெற்றுள்ள யாகசாலை நாட்டிலேயே மிகவும் பெரியது. திரு. சா. கணேசன் அவர்களை இந்த யாகசாலை பற்றிக் கேட்டபோது அவர்கள் தெரிவித்த விவரங்கள் சில: உத்தமோத்தம பட்சமாக அமைக்கப் பெற்ற இந்த யாகசாலையில், சுவாமிக்கு பஞ்சாசன வேதியையும், நான்கு பிராகாரப் பத்திகளும், கொண்ட மண்டபத்தில் 33 ஓமகுண்டங்கள். உண்ணுமுலை உமையாளுக்கு கமலாசன வேதியையும், மூன்று பிராகாரப்பத்திகளும் கொண்ட மண்டபத்தில் 25 ஓமகுண்டங்கள் சம்பந்த விநாயகர்க்கு 5 ஓமகுண்டங்கள் வேணுகோபால சுவாமிக்கு 5 ஓமகுண்டங்கள். மற்ற பரிவார மூர்த்திகள் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு ஓமகுண்டம். இவ்வாறு அமைக்கப் பெற்ற மகாயாகசாலை—ரூபாய் பெருஞ் செலவில் கட்டப்பட்டுள்ளது. சர்வபோதகராகத் திருவாடானை ஐயாமணி சிவாசாரியார் உள்ளார்.

இந்த யாகசாலையில் பூசிக்கப் பெற்ற கும்பாபிஷேகமே இப்போது பெருமானுக்கு நடைபெறுகிறது.

நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபினர் மிக்க ஆர்வத்துடன் தங்கள் செலவில் நிகழ்த்தும் இக்கும்பாபிஷேகப் பெருவிழாவில், இதோ மேலே விமானங்களுக்குக் கும்பாபிஷேகம் நிகழ்கின்றது. (காலை 8-55).

நாட்டின் நீதித்துறை நடுவர்கள், அறநிலையத்துறை ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகள், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் தலைவர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் தருமையாதீனம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள், பெங்களூரிலிருந்து திருச்சி சுவாமிகள், ஈசான்ய மடம் சுவாமிகள், கோவிலூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ இராமநாத சுவாமிகள் முதலிய அனைவரும், மற்றும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகப் பிரமுகர்களும் என் முன்னே கருவறைக்கு முன் அபிஷேகத்தைக் கண்குளிரக் காண்கின்றூர்கள்.

உடலெல்லாம் வியர்வை வெள்ளமாய் வழிந்தோடுகிறது. வாய்களெல்லாம் இறைவன் திருநாமத்தை ஒலித்த வண்ணம் இருக்கின்றன. அண்ணுமலையார் புனிதக் குடமுழுக்கேற்றுப் புன்னகை புரிகின்றூர். நாடெலாம் வாழ மகாகும்பாபிஷேகம் நிறைவேறுகின்றது.

அடியவர்கள் தலைமேற் கரம் குவித்து நிற்கச் சிவாசாரியார்கள் திருக்குடங்களிலுள்ள புனித நீரை பெருமான் திருமுடிமீது சாய்த்துப் பக்திப் பரவசத்துடன் அபிஷேகம் செய்யும் அருங் காட்சியை இதோ என் கண்கள் காண்கின்றன.

செவிகளில் பக்தர்கள் கூறும் பக்தி மயமான போற்றுதல் மொழிகள் வந்து பாய்ந்த வண்ணம் இருக்கின்றன. மகாகும்பாபிஷேகம் நிறைவு எய்தி முடிகின்றது.

நிறைவு: திரு. ஜி. கனகசபை

மிகப் புனிதமானக் குடமுழுக்கினைக் கண்டோம். ஒரு மாபெரும் விழாவிலே கலந்து கொண்டு அகத்தூய்மை பெற்ற நமக்கெல்லாம்

''பார்த்தனுக்கு அன்று நல்கிப் பாசுபதத்தை ஈன்ற பெருமானும்''. ''சீரொழுகும் பதத்தாள் அருணை உண்ணுமுலை பிராட்டியாரும்'' அருள் பாலித்தார்கள் என்ற நிறைந்த நெஞ்சமொடு இல்லம் திரும்புகிறோம்.

ஓம்
உ
சிவமயம்
ஸ்ரீ அண்ணுமலையார் துணை







அருள்தரும் அன்னை உண்ணுமுலை உடனுகிய அருள்மிகு அண்ணுமலையார் திருக்கோயில்

ஜீரணேத்தாரண அஷ்டபந்தன ஸ்வர்ணபந்தன மஹாகும்பாபிஷேகப் பத்திரிகை

திருஞானசம்பந்தர் தேவாரம்.

உண்ணுமுலை உமையாளொடும்
உடனுகிய ஒருவன்
பெண்ணுகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவு அதிரும்
அண்ணுமலை தொழுவார்வினை
வழுவா வண்ணம் அறுமே.

உண்ணுமுலையம்மை துதி.

கார்ஒழுகும் குழலாளை, கருணை வழிந்து
ஒழுகும் இரு கடைக்கண்ணுளை
முரல்இள நிலவு ஒழுகப் புழுகு ஒழுக
அழகு ஒழுகும் முகத்தினுளை,
வார் ஒழுகும் தனத்தாளை, வடிவு ஒழுகித்
தெரியாத மருங்கு லாளை
சீர் ஒழுகும் பதத்தாளை, அருணை உண்ணு
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்.

திருக்கார்த்திகை தீப மகிமை

கார்த்திகைக்குக் கார்த்திகை நாள் ஒருசோதி
மலைநுனியில் காட்டா நிற்போம்
வாய்த்த அந்தச் சுடர் காணில் பசி பிணி
இல்லாது உலகில் மன்னி வாழ்வார்
பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும், இது பணிந்தோர், கண்டோர்
கோத்திரத்தில் இருபத்து ஓர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம் என்ருர்.

கும்பாபிஷேகப் பலன்.

(அம்சுமான ஆகம சுலோக மொழி பெயர்ப்பு)
உமையொரு பாகத்து அமலனுகிய
சிவபிரானுக்குச் சிறப்புச் செய்யும்
கும்பாபிடேக பலன் கூறுதும் கேண்மோ
ஆகமங்கள் அருளியவாறே.
கும்பாபிடேகம் குயிற்றிய மனிதர்
பாபம் அனைத்தையும் பற்றற விடுவர்
வீடு விரும்பினேர் வீடு பெறுகின்ருர்
நாடு விரும்பினேர் நாடு பெறுகின்ருர்
புதல்வரை விரும்பினேர் புதல்வரைப் பெறுவர்
சிதைவின்மை விரும்பினேர் சிதைவின்மை பெறுவர்
பொருளை விரும்பினேர் பொருள் பெறுகின்ருர்
அருளை விரும்பினேர் அருள் பெறுகின்ருர்
ஞானம் விரும்பினேர் ஞானம் பெறுவர்
மோனம் விரும்பினேர் மோனம் பெறுவர்
அரோகம் விரும்பினேர் அரோகம் பெறுவர்
ஆயுளை விரும்பினேர் ஆயுளைப் பெறுவர்
இம்மையின் மகப்பே றிருஞ்செல்வ முடையராய்த்
தேகாந்தத்தில் சிவசாயுச்சியம்
பெறுவராதலிற் பெரிதா முயற்சியால்
தேவ தேவன் சிவபெருமானுக்கு
அட்டபந்தனம் செய்து அரிய பெரிய
கும்பாபிடேகங் குயிற்றுக வென்பவே.

*

அண்ணுமலையார் துதி.

ஒருமானைக் கரத்தினில் வைத்து ஒருமானைச்
சிரத்தினில் வைத்து உலகம் ஏழும்
தருமானை இடத்தினில் வைத்து அருள்வானை,
பவளநெடும் சயிலம் போல
வரும் ஆனை முகத்தானை அளித்தானை,
பொரும்ஆனை மகிழ ஏறும்
பெருமானை, அருணகிரிப் பெம்மானை,
அடிபணிந்து பிறவி தீர்ப்பாம்.

*

ஸ்தலமகிமை.

இரவிகள் சந்திரர் வயிரவர்
விஞ்சையர் இமையவர் எண்திசையோர்
உரகர் அருந்தவர் முனிவரர்
பங்கயர் உவண நெடுங்கொடியோர்
பரவி நெருங்கலில் உலகம்
நிறைந்தவர் பணியும் இடங்கிடையாது
'அரகர' என்பது கடலின்
முழங்கியது அருணை வளம்பதியே.

''அங்கு இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தி''யாக விளங்கும் ஏக பரம் பொருள், பாசத்தால் கட்டுண்டு பிறவிப் பெருங் கடலில் கிடந்து உழலும் ஆன்ம கோடிகள் உய்யும் பொருட்டு தம் இயல்பான கருணையினல் திருவுருவத் திருமேனி தாங்கி அருள் விளக்கம் செய்யும் ஆலயங்கள் பல. அவைகளில் ''தென்னுடைய சிவன்'' என்று சிறப்பாகப் போற்றப் பெறும் இறைவன் அருவுருவத் திருமேனி தாங்கி அருள் சுரக்கும் செந்தமிழ் நாட்டுத் திருத்தலங்கள் சிறப்புப் பெறுவன. அவைகளுள்ளும் சிவம் பெருக்கும் சீலர்களான சைவ சமய ஆசார்யர்களின் திருப்பாடல்கள் பெற்றிருப்பவை மிகச் சிறப்பு உடையன. எண்ணில்லாத புண்ணியத் தலங்கள் பலவற்றுள்ளும் உத்தம மானவை அறுபத்து எட்டு என வகுக்கப்பெற்று உள்ளன. அவற்றுள்ளும் உத்தமோத்தமம் எனப் போற்றத்தக்கவை, திருவாரூர், சிதம்பரம், காசி, **திருவண்ணுமலை** என்னும் நான்கு முத்தித் தலங்களாகும். முறையே முதன் மூன்று தலங்களும் பிறத்தலானும், தரிசித்தலானும், மரித்தலானும் முயன்று முத்தி பெறுவ தாயிருப்ப, எங்கிருந்தும், எப்படியிருந்தும், முயற்சி எதுவும் வேண்டாது நினைத்த மாத்திரத்தில் நினைப்பவருக்கு முத்தி அளிக்கும் பெரும் சிறப்புடைய தலம் **திருவண்ணுமலை**.

"காணுத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்''
என்று போற்றுவார் சேக்கிழார் பெருமான் இச் சிவலிங்கத்
திருக்கோலம் (லிங்கோத்பவர்) காட்டிய திருத்தலத் திருவண்ணுமலை

"அவரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டம்உற நின்றதுதான் என்னேடி?
நிலமுதற்கீழ் அண்டம்உற நின்றிலனேல் இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழலோ!'' – என்பார் மணிவாசகப் பெருமான்

அகம் உருகி அடியிணைகள் தொழுது ஏத்தி அவனைக் காண்பதல்லால் செல்வச் செழிப்பாலும் கல்வித் திறத்தாலும் இறைவனைக் காண்பது இயலாதென்பதே இதன் உண்மைத் தத்துவம். தேவியின் திருவிளையாடல் காரணமாகத் தேவிக்கு நேர்ந்த சாபம் நீங்க தேவி, திருவண்ணுமலை வந்து அருந்தவம் இயற்றித் திருக்கார்த்திகைத் திருநாளில் மீண்டும் இறைவன் இடப்பாகம் பெற்றது திருவண்ணுமலையின் பெருமையை அதிகரிக்கின்றது.

"உன்னினர் தங்கட்கெல்லாம் ஒல்லையில் முத்தி நல்கித்
தன்னிகர் இன்றி நின்ற தழல்''

வடிவின் நினைவாக ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் திருக்கார்த்திகை நன்னுளன்று அண்ணுமலையின் முடி மீது தீபம் ஏற்றித் திருவிழா கொண்டாப் பெறுகின்றது. உலகப் பிரசித்தி பெற்ற தீபத் திருவிழாவின் நிலைக்களம் திருவண்ணுமலையே யாகும். கயிலை மலைக்குத் தனிச் சிறப்பு உண்டு. அதனினும் சிறப்புடையது ''அண்ணுமலை'' என்று போற்றுவர். இறைவனுக்கு உறைவிடமாந் தன்மையால் கயிலை சிறப்புறுகின்றது. அண்ணுமலை, இறைவனுகவே விளங்குவதால் அதன் சிறப்பு மேலும் அதிக மாகின்றது. தேனினும் இனிய திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமானைப் பெரிதும் ஆட்கொண்டது அண்ணுமலை. ''சந்தக் கவிராஜயோகி'' எனப் புகழ்பெற்ற அருணகிரி நாதர் அவதரித்து அறுமுகப் பெருமானுல் ஆட்கொள்ளப்பெற்ற திருத்தலம் திருவண்ணுமலை.

''அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்'' பொங்கித் ததும்பிப் பூரணமாய், ''ஞானத் தபோதனரை வா'' என்று அழைத்துப் பூரண ஞானம் பொழிகின்றது திருவண்ணுமலையில். புராண, இதிகாசங்களும் நாட்டு வரலாறுகளும் திருவண்ணுமலையின் புகழுக்கு அணிசெய்கின்றன. அளப்பரும் புகழ் வாய்ந்த திருவண்ணுமலையின் சிறப்பு அகில உலகிலும் பிரசித்தமானது, எழுத்தில் வடிக்க இயலாதது. ''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி''யான அண்ணு மலையானை வழிபட்டுப் பேரானந்தப் பெரும் பேறு பெற்றவர் எண்ணிலர். அவர்களில் எத்தனை மகான்கள்; எத்தனை மகரிஷிகள்; எத்தனை மன்னர்கள்; எத்தனை அடியார்; இன்னும் மற்றவர் எத்தனை எத்தனையோ?

அண்ணுமலை அரன் அழகிய கோயில் போல்
எங்கும் காணற்கு இயலா தாகும்
நான்கு பெருமதில் நன்னன்கு வாயில்கள்
வாயில்கள் தவளுது வான்தொடும் கோபுரங்கள்

எப்பதியிலும் உள இராச கோபுரங்கள்
இங்கிது இராச ராசகோபுரம் காண்
இத்தரை மீது ஏற்றம் மிக்கவை
உத்தமர் செய்தவை ஊழூழி நிற்பவை

ஞானத் தலம் இது நண்ணிய புண்ணியர்
ஞானிகள் போற்றும் ஞானிகள் ஆவர்.
போகத் தலம் இது பணி செயும் புண்ணியர்
போகமும் யோகமும் பொருந்த வாழ்ந்திருப்பர்.

எண்ணில் பெரும் சிறப்புடை இத்தலத்தில் திருக்கோயில் கொண்டருளும் அன்னை உண்ணுமுலைக்கும், அருள்மிகு அண்ணுமலைப் பெருமானுக்கும், பரிவார மூர்த்தி களுக்கும் ஸ்வர்ண பந்தனம் அஷ்டபந்தனம் சார்த்தியும், எங்கும் காணு ஏற்றமுடைய இராச கோபுரங்கள், விமானங்கள் ஆகியன புதுப்பித்தும் நாளிது **இராட்சஸ ஆண்டு பங்குனித் திங்கள் 22-ம் நாள் (4-4-1976) ஞாயிற்றுக்கிழமை பூர்வபட்சம், பஞ்சமி திதி, ரோஹினி நட்சத்திரம், அமிர்தயோகம் கூடிய நன்னுளில் உதயாதி நாழிகை 5-30 க்கு மேல் 7-30 க்குள் (காலை 8-15 முதல் 9 மணி அளவில்) விருஷப லக்கினத்தில் மகா கும்பாபிஷேகமும்** அன்று இரவு பஞ்சமூர்த்திகள் வெள்ளி ரிஷப வாகனத் திரு உலாக் காட்சியும் நிகழ்ச்சி நிரலில் காணும் வண்ணம் சிறப்பாக நடைபெறும். அன்பர்கள் திரண்டு வந்து தெரிசித்து அருள் தரும் உண்ணுமுலை உடனுகிய அருள்மிகு அண்ணுமலைப் பெருமான் திருவருள் பெற்று எல்லா நலன்களும் எய்துமாறு வேண்டுகின்ருேம்.

இராட்சஸ பங்குனி

தமிழ் வருடம் மாதம் தேதி	ஆங்கில வருடம், மாதம் தேதி	கிழமை	காலை மணி	காலை நிகழ்ச்சிகள்	மாலை மணி	இரவு நிகழ்ச்சிகள்
14	27–3–1976	சனி		அதிகாலை உதயாதி நாழிகை 57½க்கு மேல் 60 நாழிகை அளவில் (மணி 5க்கு மேல் 6க்குள்) அனுக்ஞை, தனபூஜை, ஆச்சார்ய வரணம்.		
			8–00	பிரசன்ன கணபதி ஹோமம்—பூஜை	6–00	பிரவேச பலி, ராட்சோக்னம்
15	28–3–1976	ஞாயிறு	9–00	நவக்கிரக ஹோமம்	6–00	வாஸ்து சாந்தி
16	29–3–1976	திங்கள்	9–00	ஆச்சார்ய தசவித ஸ்நானம்	6–00	மிருத் ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம்
17	30–3–1976	செவ்வாய்	7–00 12–00	தான்ய ஸ்தாபனம், ரட்சா பந்தனம் பிரஸன்னபிஷேகம்	7–00 8–00 12–00	கலாகருஷணம் யாக பூஜை துவக்கம் (இரவு) பூர்ணாஹுதி
18	31–3–1976	புதன்	8–00 11–30	காலை யாகபூஜை துவக்கம் பூர்ணாஹுதி	7–00 10–00	யாக பூஜை துவக்கம் பூர்ணாஹுதி
19	1–4–1976	வியாழன்	8–00 11–30	காலை யாகபூஜை துவக்கம் பூர்ணாஹுதி	7–00 10–00	யாக பூஜை துவக்கம் பூர்ணாஹுதி
20	2–4–1976	வெள்ளி	4–00	(அதிகாலை) பரிவாரமூர்த்திகள் மஹா கும்பாபிஷேகம் துவக்கம்		
			8–00 11–30	காலை யாகபூஜை துவக்கம் பூர்ணாஹுதி	7–00 10–00	யாக பூஜை துவக்கம் பூர்ணாஹுதி
21	3–4–1976	சனி	8–00 11–30	காலை யாகபூஜை துவக்கம் பூர்ணாஹுதி	7–00 10–00	யாக பூஜை துவக்கம் பூர்ணாஹுதி
22	4–4–1976	ஞாயிறு	4–00 6–00	(அதிகாலை) யாகபூஜை துவக்கம் மஹா பூர்ணாஹுதி	4–00 8–00 9–30	மஹாபிஷேகம் திருக்கல்யாணம் பஞ்சமூர்த்திகள் திருவீதி உலாக் காட்சி
			8–15 முதல் 9–00	மஹா கும்பாபிஷேகம்		

பிரதி தினமும் வேத, சிவாகம தேவார தியானம், பன்னிருதிருமுறை பாராயணம், சமயச் சொற்பொழிவுகள், இன்னிசைக் கச்சேரிகள், நாதஸ்வரக் கச்சேரிகள் நடைபெறும்.

தி. ந. பரமசிவம், பி.ஏ.,
நிர்வாக அதிகாரி,
செயலாளர் & பொருளாளர்.

நாட்டுக் கோட்டை நகரத்தார்
சா. நா. அ. சொ. அண்ணாமலை செட்டியார்
திருப்பணிக் குழுத் தலைவர்.
அ. க. அ. சித. அழ. சிதம்பரம் செட்டியார்
கும்பாபிஷேகக் குழுத் தலைவர்.

டி. வி. சுப்பிரமண்ய செட்டியார், அறங்காவலர் குழுத் தலைவர்.
பி. எஸ். மாணிக்கவேலு
எஸ். ஜெயராம பிள்ளை
எம். தருமலிங்கம்
ஏ. நடராசன்
} அறங்காவலர்கள்.

நிகழ்ச்சி நிரல்

இராட்சஸ பங்குனி

தமிழ் வருடம் மாதம் தேதி	ஆங்கில வருடம், மாதம் தேதி	கிழமை	காலை மணி	காலை நிகழ்ச்சிகள்	மாலை மணி	இரவு நிகழ்ச்சிகள்
11	24–3–1976	புதன்			8–00	ஸ்ரீ துர்க்காம்பாள் உத்சவம்
12	25–3–1976	வியாழன்			8–00	ஸ்ரீ பிடாரி உத்சவம்
14	27–3–1976	சனி		(அதிகாலை) 5 மணி முதல் 6 மணிக்குள் அனுக்ஞை, தனபூஜை, ஆச்சார்ய வரணம்		
			8–00	பிரசன்ன கணபதி ஹோமம் பிரசன்ன கணபதி பூஜை	6–00	பிரவேச பலி, ராக்ஷோக்னம்
15	28–3–1976	ஞாயிறு	9–00	நவக்கிரக ஹோமம்	6–00	வாஸ்து சாந்தி
16	29–3–1976	திங்கள்	9–00	ஆச்சார்ய தசவித ஸ்நானம்	6–00	மிருத் ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம்
17	30–3–1976	செவ்வாய்	7–00 12–00	தான்ய ஸ்தாபனம், ரக்ஷாபந்தனம் ப்ரசன்னபிஷேகம்	7–00 8–00 12–00	கலாஹர்ஷணம் யாகபூஜை ஆரம்பம் பூர்ணாஹுதி, தீபாராதனை
18	31–3–1976	புதன்	8–00 11–30	யாகபூஜை ஆரம்பம் பூர்ணாஹுதி, தீபாராதனை	7–00 10–00	யாகபூஜை ஆரம்பம் பூர்ணாஹுதி, தீபாராதனை
19	1–4–1976	வியாழன்	8–00 11–30	யாகபூஜை ஆரம்பம் பூர்ணாஹுதி, தீபாராதனை	7–00 10–00	யாகபூஜை ஆரம்பம் பூர்ணாஹுதி, தீபாராதனை
20	2–4–1966	வெள்ளி	4–00	(அதிகாலை) பரிவார மூர்த்திகள் மகா கும்பாபிஷேகம்	7–00 10–00	யாகபூஜை ஆரம்பம் பூர்ணாஹுதி, தீபாராதனை, அஷ்டபந்தனம், சொணபந்தனம்
			8–00 11–30	யாகபூஜை ஆரம்பம் பூர்ணாஹுதி, தீபாராதனை		
21	3–4–1976	சனி	8–00	சாந்திஹோமம், திசாஹோமம், யாகபூஜை ஆரம்பம்	7–00	லக்ஷ்மி பூஜை, தீபஸ்தாபனம், யாக பூஜை ஆரம்பம்
			11–30	பூர்ணாஹுதி, தீபாராதனை	10–00	பூர்ணாஹுதி, தீபாராதனை, பிம்பசுத்தி, ரக்ஷாபந்தனம்
22	4–4–1976	ஞாயிறு	4–00 5–00 6–00 6–30 7–00	(அதிகாலை) யாகபூஜை ஆரம்பம் ஸ்பர்சாகுதி மஹா பூர்ணாஹுதி யாத்ராதானம் கடம் புறப்படுதல்—சுக்லபஞ்சமி, ரோகிணி நக்ஷத்திரம், அமிர்தயோகம், புதஹோரை கூடிய விருஷப லக்கின சுபவேளையில் காலை 8–15 மணி முதல் 9 மணியளவில் மகா கும்பாபிஷேகம்	4–00 8–00 9–00 9–30	மஹாபிஷேகம் திருக்கல்யாணம் பஞ்சமூர்த்திகள் தீபாராதனை விருஷப வாகனக் காட்சி திருவீதியுலா



பல்சுவை

- தத்துவ விளக்கங்கள்
- சிவ சின்னங்கள்
- பஞ்சபூதத் தலங்கள்
- முத்தி தரும் தலங்கள்
- பொதுக் கட்டுரைகள்
- அண்ணாமலை அருகே
- கவிதை

ஆலய வழிபாடு

சுவாமி சித்பவானந்தா

ஸ்தலம் என்பது யாது ?

இயற்கை முழுதிலும் அழகு உண்டு. சில இடங்களில் அமைந்துள்ள அழகு நம் உள்ளத்தை அறவே கொள்ளை கொண்டு போகிறது. மனத்தகத்து மேலான எண்ணத்தை, ஊட்டுதற்கும் அத்தகைய அழகு பயன்படுகிறது. உயர்ந்த எண்ணங்களை எண்ணுதற்கு அழகிய இடங்கள் பெரிதும் பயன்பட்டு வந்திருக்கின்றன. ஓர் இடத்தில் உதித்த உயர்ந்த எண்ணமானது பிறகு அந்த இடத்துக்கே புதிய அருள் சக்தியை நல்குகிறது. உயர்ந்த எண்ணம் அழிவற்றது என்பதும் ஆன்றோர்கள் துணிபு. அவர்கள் எண்ணிய உயர்ந்த எண்ணங்களும் இயற்கையின் பொலிவும் ஒன்று சேர்ந்து ஓர் இடத்தைப் புண்ணிய ஸ்தலமாக்குகின்றன. புண்ணிய ஸ்தலத்துக்கு மூல மகிமை இங்ஙனம் அமைகிறது.

தபஸ்விகளும் முனிவர்களும் பல காலங்களில் பல இடங்களில் வசித்து வந்துள்ளனர். அன்னவர்களின் உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள் ஓயாது உதித்து வந்தன. இந்த எண்ணங்களின் வலிவால் அவர்களுடைய வாசஸ்தலங்கள் புண்ணிய க்ஷேத்திரங்கள் ஆய்விட்டன. நாளடைவில் அத்தகைய க்ஷேத்திரங்களில் பெரிய மாறுதல்கள் உண்டாகக் கூடும். அத்தகைய மாறுதல்களை முன்னிட்டு பழைய மகிமை மறைந்து போய் விடுவதில்லை. மேலாம் கருத்துக்களைத் தங்கள் மனதிலே வளர்க்க முயலுகின்றவர்கள் அப்புண்ணிய ஸ்தலங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். புண்ணிய ஸ்தலங்களுக்கு எதிரிடையாயுள்ள இடங்களையும் உலகில் காணலாம். எங்கு கீழான எண்ணங்கள் திரும்பத் திரும்ப எண்ணப் படுகின்றனவோ ஆங்குச் செல்லுகின்றவர்களுக்கு இயல்பாக மனது கீழ் நிலைக்குப் போய்விடுகிறது, கீழ்மையில் தாங்களும் சிறிது சிறிதாகக் கலந்து கொள்கின்றனர். ஆத்ம சாதகர்கள் அத்தகைய சூழ்நிலையில் வசிக்கலாகாது. புண்ணிய க்ஷேத்திரங்கள் என்பவை ஆத்ம சாதனத்தில் மேல் நிலைக்குப் போக முயலுகின்றவர்களுக்கு முற்றிலும் அனுகூலமான சூழ்நிலையாகின்றன. சாதகர்கள் எண்ணும் மேலான எண்ணங்களுக்கு ஸ்தலங்கள் என்னும் சூழ்நிலைகள் மேலும் உதவி புரிகின்றன. இந்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே நம் நாட்டில் புண்ணிய க்ஷேத்திரங்கள் பல உண்டாயிருக்கின்றன, பாடல் பெற்ற ஸ்தலங்களுக்கு என்றென்றும் மறையாத மகிமை இங்ஙனம் வந்தமைவதாயிற்று.

ஆலயங்களுள் சிறந்தது

இப்பொழுது நம் நாட்டில் தென்படும் பெரிய கோயில்கள் எல்லாம் இடைக்காலத்தில் வந்தவை, வேதகாலத்தில் இவை இருந்ததில்லை. இயற்கையின் சூழ்நிலையே வழிபாட்டுக்குரிய இடங்களாயின. வேள்வித் தீயின் மூலம் வழிபாடு பெரிதும் நிகழ்ந்து வந்தது. நதிக் கரைகளிலும் மரச் சோலைகளிலும் தெய்வ வணக்கம் நிகழ்ந்து வந்தது. அத்தகைய விருக்ஷங்கள் நாளடைவில் ஸ்தல விருக்ஷங்கள் ஆயின.

பின்பு ஆகமத்தை அனுசரித்து ஆலயங்கள் கட்டுவிக்கப்பட்டன. மலையைக் குடைந்தும் ஆலயங்களை அமைத்து வைத்தார்கள், இப்படி அமைந்த ஆலயங்கள் மானுட சரீரம் என்னும் ஆலயத்தின்புறச் சின்னங்களாம். மானுட சரீரமே ஆலயங்களுள் மிகச் சிறந்தது என்று ஆன்றோர்களால் சர்வகாலமும் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. அண்டமெங்கும் குடி கொண்டிருக்கும் தெய்வம் சிறப்பாக மானுட சரீரத்தில் வீற்றிருக்கிறது. ஆனுல் சரீரத்தினுள் கடவுள் எழுந்தருளியிருக்கிறுர் என்னும் கோட்பாட்டைப் பாமரர்கள் எளிதில் அறிந்து கொள்ள முடியாது. பாமரர்களுக்குப் பயன்படுதற் பொருட்டே ஆலயங்கள் அமைக்கப் பெற்றன. உலகிலும் உடலிலும் உள்ள தத்துவங்களை விளக்குதற்கு ஆலயங்கள் வந்துள்ளன. நமக்குத் தோன்றியவாறெல்லாம் ஆலயங்களைக் கட்டலாகாதென்பதும், ஆகமங்கள் விதித்துள்ளபடியே அவைகளை அமைக்கவேண்டும் என்பதும் கோட்பாடு. அதற்குத்தக்க காரணமும் ஒன்று உண்டு. தேசப்படம் ஒன்றை நமக்குத் தோன்றியவாறு வரையலாகாது. முறையாக அமைந்த படத்தின் நகலாக ஏனைய படங்களை அமைக்கலாம். முறையாக அமைந்த தேசப்படமோ இயல்பாக அமைந்துள்ள தேசத்தின் சின்னமாகும். மூலஅமைப்பு ஆகிய தேசத்தின் வடிவைப் படம் முற்றும் ஒத்திருக்கின்றது. ஆகையினுல் அது தேசப் படம் என்று அங்கீகரிக்கப்படுகின்றது.

ஆலயம் ஒன்று உடல் என்னும் ஆலயத்தின் புறச் சின்னமாகும். புறச்சின்னத்தை நமக்குத் தோன்றியவாறெல்லாம் அமைத்து விடலாகாது. மூல அமைப்பு ஆகிய சரீரத்திலுள்ள தத்துவங்களுக்கு அது ஒத்திருக்க வேண்டும். ஆகையினுல்தான் ஆலயங்களை இன்னின்ன பாங்கில் கட்ட வேண்டும் என்று ஆகமங்கள் ஆணையிடுகின்றன. அத்தகைய ஆலயங்களின் மூலம் நம் உடல் அமைப்பிலுள்ள மகிமைகளையே நாம் மேலும் அறிந்து கொள்ள வேண்டும். தேசப்படத்தின் துணைகொண்டு தேசத்தை நன்கு அறிந்து கொள்வது போன்று கட்டுவிக்கப்பட்டுள்ள ஆலயத்தின் துணைகொண்டு நமக்கு இயல்பாக அமைந்துள்ள சரீரம் என்னும் ஆலயத்தின் தத்துவங்களை நாம் நன்கு அறிந்து கொள்ள முடியும். அந்த அறிவுக்கு ஏற்ப வாழ்க்கையைத் திருத்தியமைப்பதும் நம் கடமையாகும்.

ராஜ கோபுரம்

பெரிய பிராகாரம் ஒன்று எடுத்து அதற்கு வாயில் ஒன்று வைக்கப்படுகிறது. அந்த வாயிலுக்கு உயர்ந்த கோபுரம் ஒன்று அமைகிறது. கோயிலின் உள்ளிருக்கும் கோபுரங்களையெல்லாம்விட இது உயர்ந்ததாக இருக்கும். நெடுந் தூரத்துக்கு அப்பால் இருந்தும் இதைக் காணலாம். ஸ்தூலலிங்கம் என்று ராஜ கோபுரத்தை இயம்புவார்கள். கண்ணுக்கு அது தென்படும் பொழுது அதையே தெய்வ சொரூபமாக எண்ணி வணங்குவது முறை. எட்ட இருப்பவர்களுக்கும் கடவுளைப் பற்றிய ஞாபக மூட்டுதற்கே அது அமைந்திருக்கிறது.

ராஜ கோபுரத்தின் அருகில் வந்து அதன் அமைப்பைக் கவனித்துப் பார்த்தால் சில அதிசயங்கள் தோன்றும். கணக்கற்ற வடிவங்கள் அதன் கண் அமைக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளுள் மானுட வடிவங்களை ஏராளமாகக் காணலாம். அவர்களுடைய விதவிதமான வாழ்க்கை முறைகளும் ஆங்கு வடிவங்களில் விளக்கப் பெற்றிருக்கும். தேவர்களும் வேண்டியவாறு அதில் இடம் பெறுகின்றனர். தேவர்களின் செயல்களும் ராஜ கோபுரத்தில் விளக்கப் பெற்றிருக்கின்றன. விலங்குகளும் பறவைகளும் ஏனைய சிற்றுயிர்களும் அதில் இடம் பெறுகின்றன. பிரபஞ்ச அமைப்பில் இவை யாவுக்கும் இடமுண்டு என்பது கோட்பாடு. சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கு இனம், மக்கள் இனம், தேவர்கூட்டம் ஆகிய எல்லோரும் பிரபஞ்சத்தில் இருக்கின்றுர்கள். அண்டத்தினுள் இன்னதுதான் இருக்கிறது இன்னது இல்லை என்று பாகு படுத்த முடியாது. எல்லாப் படித்தரங்களிலும் உள்ள அனைத்தும் ஆங்கு இடம் பெற்றிருக்கின்றன. இக் கோட்பாட்டை ராஜ கோபுரம் உருவகப் படுத்தி விளக்குகிறது.

ராஜ கோபுரத்தில் அசுசியான சில வடிவங்களையும் அமைத்திருப்பதைக் காணலாம். நாகரிகமான பண்புக்கு அவைகள் அறிகுறிகள் ஆகா. மனத்தகத்து மேலான கருத்துக்களை ஊட்டுதற்கும் அவைகள் உதவி புரிய மாட்டா. கீழான எண்ணங்களைத் தோற்றுவிப்பதற்கே அவை துணை புரியும். ஆலய வழிபாட்டுக்குப் பொருந்தாத இத்தகைய பதுமைகளை ஆலயத்தின்கண் அமைப்பானேன் என்கின்ற ஆக்ஷேபம் பலரிடமிருந்து

வருவதுண்டு. அப்படி ஆக்ஷேபங்கள் வந்தாலும் அத்தகைய வடிவங்கள் சிலவற்றை அமைத்தே ஆகவேண்டுமென்று சிற்பிகள் சொல்லுவார்கள். ஆகம விதி அப்படி இருக்கிறதென்றும் அவர்கள் இயம்புவார்கள். அதற்குத் தக்க காரணமும் உண்டு. இயற்கையின் நடைமுறையின் புறச் சின்னமாகப் பெரிய கோபுரம் அமைந்திருக்கிறதென்ருல் இயற்கையில் உள்ளவைகளையெல்லாம் அதன் மூலம் விளக்கியாக வேண்டும். நாகரிகம், அநாகரிகம் ஆகிய இரண்டும் இயற்கையில் இடம் பெற்றிருக்கின்றன. பாராட்டத்தக்க பெருவாழ்வும் பாராட்டத்தகாத சிற்றியல்பும் சிறு செயல்களும் இயற்கையில் இடம் பெற்றிருக்கின்றன. நம்முடைய உடல், அமைப்பையே ஆராய்ந்து பார்த்தால் இக் கூற்று நன்கு விளங்கும். நம் உடல் அமைப்பில் விளம்பரப்படுத்தக் கூடிய பாங்கிலுள்ள அவயவங்கள் உண்டு. மறைத்து வைக்க வேண்டிய பகுதிகளும் அதில் இடம் பெற்றிருக்கின்றன. அதைக் குறித்து நாம் வருந்துவதில்லை; வெட்கப்படுவதும் இல்லை. அதுதான் உடலமைப்பு என்று உள்ளதை உள்ளவாறு அங்கீகரித்துக் கொள்கிறோம். அதே விதத்தில் இயற்கையில் நலம், கேடு ஆகிய எல்லாம் இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுதற்கே இந்த கோபுரம் அமைந்துள்ளது. வாழ்க்கையில் நம்முடைய குறிக்கோள் என்ன என்பதையும் இது விளக்குகிறது. ராஜ கோபுரத்தின்வாயில்கள் பொதுவாக ஒற்றைப் படை எண்ணில் அமைந்திருக்கும். மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று இங்ஙனம் அதில் அமைந்துள்ள வாயில்கள் ஒன்றன்மேல் ஒன்ருகப் பெருகிக் கொண்டே போகும். அத்தகைய வாயில்கள் தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்துள்ளன. மூன்று வாயில் உள்ள இடத்து ஜாக்கிரத, சொப்பன, சுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளை அவை குறிக்கின்றன. ஐந்து வாயில்கள் உள்ள இடத்து ஐம்பொறிகளை அவை குறிக்கின்றன. ஏழு வாயில் உள்ள இடத்து, மனம், புத்தி என்னும் இன்னும் இரண்டு தத்துவங்கள் சேர்க்கப் பெறுகின்றன. ஒன்பது உள்ள இடத்து சித்தம், அகங்காரம் என்னும் இன்னும் இரண்டு தத்துவங்கள் சேர்க்கப் பெறுகின்றன. இங்ஙனம் நம்முடைய அமைப்பில் உள்ள வெவ்வேறு தத்துவங்களுக்குக் கோபுர வாயில்கள் சின்னங்களாக அமைந்து இருக்கின்றன.

இத்தனை வாயில்களுள் கோயிலினுள்ளே செல்லுதற்குத் தரை மட்டத்திலுள்ள ஒரு வாயில்தான் உதவுகிறது. ஏனையவைகள் ஆங்கு அமைக்கப் பெற்றிருந்தும் ஆலயத்தினுள் செல்லுதற்குப் பயன்படுவதில்லை. இதன் மூலம் ஒரு கருத்து நமக்குப் புகட்டப்படுகிறது. புறக்கரணங்களும் அகக்கரணங்களும் பல நம்மிடத்து இருக்கின்றன வெனினும் கடவுள் நாட்டம் கொள்ளும்பொழுது மனது என்னும் ஒரு கரணம் தான் நமக்குப் பெரிதும் பயன்படுகின்றது. ஏனைய கரணங்களை யெல்லாம் இருக்கிறபடி வைத்துவிட்டு மனது இறைவனை நாடி உள்முகமாகப் போக வேண்டுமென்பது கோட்பாடு. பஞ்சேந்திரியங்களைக் கொண்டும், மனம், புத்தி முதலியவைகளைக் கொண்டும் புற உலகை அறிகிறோம். புற உலகை அறிகிற செயலை அப்படியே நிறுத்தி வைத்து விட்டு மனத்தைத் துணையாகக் கொண்டு பரம் பொருளிடத்து உள்முகமாகப் பயணம் போக வேண்டும் என்னும் கோட்பாட்டை ராஜ கோபுர வாயிலினுள் பண்ணும் பிரவேசம் விளக்கிக் காட்டுகிறது.

ரதம் என்னும் சின்னம்

ஒவ்வொரு ஆலயத்தோடும் சம்பந்தப்பட்டதாக ரதோற்சவம் என்பது ஒன்று உண்டு. ஆலயம் என்னும் சின்னத்தின் மற்றெரு பகுதியாக அது அமைந்திருக்கிறது. ஓடுதல் என்னும் செயலில் ரதம் உடல் தத்துவத்தை நன்கு விளக்குகிறது. சரீரத்தை ரதம் என்றும், அதன் உள்ளிருக்கும் ஆத்மாவை ரதி அல்லது ஊர்ந்து செல்லுபவன் என்றும் கருத வேண்டுமென ஞான சாஸ்திரங்கள் புகட்டுகின்றன. சரீரத்திலுள்ள இயல்புகளை யெல்லாம் ரதத்தில் அமைப்பதும் வழக்கமாய் இருந்து வருகிறது. ஒன்று நிலைத்திருக்கும் சின்னம்; மற்றது இயங்குகின்ற சின்னம். அவைகளின்மூலம் விளக்கப் பெறும் கருத்து ஒன்றேயாம்.

மனம் மாறியமைதல்

ராஜ கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றதும் நம் காட்சிக்கு வருவது பலிபீடம். அதனருகில் சென்று வீழ்ந்து வணங்க வேண்டும். வீழ்ந்து வணங்குகின்ற பொழுது வழிபடுகின்ற மனிதன் தன் மனதில் எண்ணும் எண்ணமே மிக முக்கியமானது. வெறுமனே

வீழ்ந்து வணங்குவதால் நலன் ஒன்றும் வந்து விடாது. வீழ்ந்து வணங்கும் பொழுது தனது கீழான இயல்புகளெல்லாம் அந்த இடத்திலே பலிகொடுக்கப் பட்டன. இனி அவை தலையெடுப்பதற்கு அவகாசம் இல்லை என்று ஆழ்ந்து எண்ணுதல் வேண்டும். மனிதனிடத்துள்ள கீழ்மையெல்லாம் ஆங்குக் கீழே வீழ்ந்து விட்டது. மேன்மையும் மேலான எண்ணமுமே எஞ்சியிருக்கிறது என்னும் எண்ணத்துடன் மனிதன் எழுந்திருக்க வேண்டும். விலங்குத் தன்மை வாய்ந்த மனிதன் கீழே வீழ்ந்து மாய்ந்து போய்விட்டான்; மனுஷத் தன்மை வாய்ந்த மனிதன் எழுந்திருக்கின்றான் என்ற எண்ணம் வலிவு பெறுகிறது. அந்த எண்ணத்தின் வலிவு அவன் புதியதொரு பிறவி எடுத்துக் கொண்டதற்குச் சமானமாகிறது. புதியதாக வருவித்துக் கொண்டுள்ள மேலான மனப்பான்மையை இனி தெய்வத்துக்குரியதாக மாற்றி விட வேண்டும். அதன் பொருட்டுச் சாதகன் கோயிலினுள் வலம் வருகின்றான். அவன் வலம் வரவேண்டிய முறையை பலிபீடத்துக்கு அடுத்த படியிலிருக்கும் துவஜஸ்தம்பம் அல்லது கொடிக் கம்பம் விளக்குகிறது. கொடி உள்முகமாகத் திரும்பிக் கொண்டிருக்கிறது. கோயிலைச் சுற்றி நடக்கும் பொழுது உள்ளிருக்கும் தெய்வம் தனது வலதுகைப் பக்கம் இருக்கும்படி பக்தன் பார்த்துக் கொள்கிறான். அதுவே வலம் வருதல் என்பதன் பொருளாம். வலம் வருதல் பிராணாயாமத்தின் சின்னமாகும். ஒழுங்குபட்ட மேலாம் மனது பிராணாயாமத்துக்குத் தகுதியுடையதாகிறது. மனத்தகத்து உண்டாகும் மாறுதலுக்கு ஏற்ப சுவாசிக்கின்ற வாயுவில் வேறுபாடு உண்டாகிறது. கீழான மனப்பான்மை உடையவர்க்கு சுவாசத்தின் போக்குவரவில் தடுமாற்றம் உண்டு. மேலான மனப்பான்மை உடையவர்க்கு சுவாசத்தின் போக்குவரத்து அல்லது பிராணாயாமம் முறையாக நிகழ்கின்றது. தங்குதடையின்றி அமைதியாக வலம் வருவது போன்று பிராணாயாமமும் ஒழுங்காக நிகழ்ந்து விடுகிறது. சூக்ஷ்மமாக உடலின்கண் நிகழும் நிகழ்ச்சி பிராணாயாமம். வலம் வருதல் என்னும் சரீரத்தின் ஸ்தூலமான செயல் அதன்புறச் சின்னமாகிறது.

துவஜஸ்தம்பத்துக்கு அடுத்தபடியில் இருப்பது தெய்வத்துக்குரிய வாகனம். சிவபெருமானுக்கு நந்திவாகனம், மகாவிஷ்ணுவுக்கு கருடன் வாகனம், அம்பிகைக்கு சிங்கம் வாகனம். வாகனம் எது வாயினும் அது ஜீவாத்மனைக் குறிக்கின்றது. மூலப் பொருளாகிய கடவுளைப் பார்த்த வண்ணமாய் வாகனம் அமைந்திருக்கிறது. கடவுளைச் சென்றடைய வேண்டியது ஜீவாத்மாவின் குறிக்கோள். கடவுளைச் சென்றடைவதற்கு சர்வகாலமும் மனது கடவுள் நாட்டத்திலேயே இருக்க வேண்டும் என்னும் கோட்பாட்டை வாகனம் விளக்கிக் கொண்டிருக்கிறது. சுற்றி வருகின்ற பக்தன் ஆலயத்தின் உள்ளிருக்கும் தெய்வத்தையும் அதைப் பார்த்த வண்ணமாயிருக்கும் வாகனத்தையும் சேர்த்து வைத்து வலம் வருகின்றான். குறுக்கே நுழைவது முறையன்று. வழி படுகின்ற அனைவர்க்கும் வழிபாட்டுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். இடைஞ்சல் செய்யலாகாது என்பது அதன் கருத்து. பிறர்க்கு இடைஞ்சல் செய்கின்ற அளவு தானே கடவுள் வழிபாட்டுக்குப் புறம்பாய் விடுகிறான். பிறர் வழிபாட்டுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து வைக்குமளவு ஒருவன் தானே வழிபாட்டில் முன்னேற்றமடைகிறான். பிறரைப் புறக்கணித்து யாரும் முன்னேற்ற மடைய முடியாது. பிறர்க்குப் பணிவிடை செய்து யாரும் முன்னேற்றமடையலாம். இக் கோட்பாடு ஆலய வழிபாட்டில் அடங்கியிருக்கிறது.

உட்புகுதல்

கோயிலின் கர்ப்பக்கிருஹத்துக்குச் செல்லும் பொழுது அது இருள் சூழ்ந்திருக்கிறது. காற்றுக்கோ சூரிய வெளிச்சத்துக்கோ ஆங்கு இடமில்லை. ஜன்னல் முதலியன வைத்து ஆலயத்தை ஏன் அமைப்பதில்லை என்று குறை கூறுபவர் உளர். ஆகம விதி அதற்கெல்லாம் இடம் தருவதில்லை என்ற விடை வருகிறது. நம் உடலமைப்பின் புறச் சின்னமாக கர்ப்பக் கிருஹம் அமைந்திருக்கிறது. கருவி கரணங்களை ஒடுக்கி மனத்தை உள்முகமாகத் திருப்பினால் என்ன அனுபவம் உண்டாகிறதோ அதற்குச் சின்னமாக ஆலயத்தின் கர்ப்பக்கிருஹம் அமைந்திருக்கிறது. உடலுக்குள்ளே நம் நெஞ்சத்தினுள் ஒரே கார்இருளைத்தான் கண்மூடி இருக்கும் பொழுது நாம் காண்கிறோம். புற உலகிலிருந்து ஆங்கு வெளிச்சம் ஒன்றும் வருவதில்லை. கர்ப்பக்கிருஹத்தின் அருகில் சென்று தரிசனத்துக்காக பக்தன் காத்திருக்கிறான். திரை மூடப்பட்டிருக்கிறது. சிறிது நேரத்துக்குள் மணி ஓசை கேட்கிறது, இனி விரை

வில் தரிசனம் கிட்டும் என்று பக்தன் ஆர்வத்துடன் அதை எதிர்பார்த்து நிற்கிறுன். திரை நீங்குகிறது. உள்ளே கற்பூர ஆராதனை காட்டப்படுகிறது. அதன் வெளிச்சத்தில் தெய்வத்தின் விக்கிரஹத்தைப் பக்தன் தரிசிக்கிறுன்; விக்கிரஹம் என்னும் எண்ணம் அவன் மனதில் உதிப்பதில்லை; தெய்வத்தையே தரிசிப்பதாக உணருகிறுன்.

மனத்தகத்து நிகழவேண்டிய ஞானக்காட்சியின் புறத் தோற்றமாகும் இது. மனதினுள் சிந்தையைச் செலுத்தும் ஆத்ம சாதகன் கார் இருளையே தன்னுள் காண்கின்றுன். ஆயினும் மனத்தை உள்முகத்தில் வைத்திருக்கப் பழக வேண்டும். அப்பழக்கம் உறுதி பெற நெடுங்காலம் பிடிக்கும். மனத்தை உள்ளத்தினுள் ஒடுக்கி வைத்துப் பழகுபவனுக்கு ஓர் அனுபவம் கிட்டும். தனது உள்ளத்தினுள்ளே ஒருவித இனிய ஓசையை அவன் கேட்பான்; புகைபோன்றும், மின்மினிப் பூச்சிகளின் நடமாட்டம் போன்றும் சில காட்சிகளைத் தன்னுள் காண்பான். ஒளி, ஒலி ஆகிய இரண்டும் மனதினுள் உதிப்பது சாதகன் சாதனத்தில் முன்னேறி வருவதன் அறிகுறியாகும். இறுதியில் மனத்தகத்திருக்கும் அஞ்ஞானம் என்னும் திரை நீங்குகிறது. ஞான ஒளியின் தரிசனம் கிட்டுகிறது. அந்த ஞான ஒளியும் ஆத்ம சொரூபமும் ஒன்றேயாம். அங்ஙனம் மனத்தகத்து உண்டாகின்ற ஆத்ம தரிசனத்துக்குப் புறச்சின்னமாக ஆலய தரிசனம் அமைந்திருக்கின்றது. மாந்தருக்குத் தோன்றியபடி அதை மாற்றியமைப்பதற்கு ஆகம சாஸ்திரம் இடம் தருவதில்லை. வேண்டுமானுல் நம் விருப்பப்படி மாற்றி யமைத்துக் கொள்ளலாம். ஆனுல் அது ஆத்ம தரிசனத்தின் புறச்சின்னமாகாது.

பூஜா விதி

ஆலயத்தினுள் எழுந்தருளியிருக்கும் தெய்வத்துக்குப் பலவிதமான உபசாரங்களுடன் ஆராதனை நிகழ்கின்றது. இத்தகைய ஆராதனைகளெல்லாம் ஆத்ம சாதகன் அடைந்து வரும் மனபரிபாகத்தின் புறச் செயல்களாம். ஆராதனை செய்கின்றவர்கள் சதாசாரமே வடிவெடுத்திருக்கவேண்டும். நல்லொழுக்கம் அவர்களிடம் ஓங்குமளவு வழிபாடு மேம்பாடு உடையதாகிறது. நல்லொழுக்கம் இல்லாதவனுக்கு ஆத்ம சாதனத்தில் முன்னேற்றம் ஒருபொழுதும் கிடையாது. தெய்வத்தின் அபிஷேகத்துக்காகத் தூய நன்னீர் கொண்டு வரப்படுகிறது. அதைக் கொண்டு இறைவன் நீராட்டப்படுகிறுர். மனத்தகத்து அன்பை வளர்ப்பதற்கு அறிகுறியாகப்புறத்தே ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்துக்குத் திருமுழுக்கு செய்விக்கப்படுகிறது. நீராடிய பிறகு நாம் ஓரளவு உள்ளத் தெளிவை எய்துகிறோம். அன்பைப் பெருக்குமளவு நமக்கு உள்ளத் தெளிவு உண்டாகிறது என்பதை நாம் உணர முடியும். பால், தயிர், நெய், பஞ்சாமிர்தம் முதலியவைகளைச் சொரிந்தும் அபிஷேகம் செய்வது வழக்கம். இவை யாவும் உடலை வளர்ப்பதற்கு நல்லுணவு ஆகின்றன. நல்லுணவு படைத்து உடலை வளர்ப்பது போன்று நல்லெண்ணங்களைஎண்ணி உள்ளத்தை வளர்க்க வேண்டும் என்பது கோட்பாடு. எண்ணத்திற்கு ஏற்ப உள்ளத்தில் உயர்வோ, தாழ்வோ உண்டாகிறது. நல்லெண்ணத்தை வளர்ப்பதே ஆலயவழிபாடு ஆகிறது. மூர்த்தியை முழுக்காட்டிய பிறகு அவரை அலங்கரிக்கின்றோம். ஆடை, ஆபரணம் முதலியன சாத்தி அலங்கரிப்பது வழக்கம். நம் உடல் வாழ்க்கையை எங்ஙனம் ஓம்புகின்றோமோ அதே கோட்பாட்டைத் தெய்வத்தின்கண் காண அன்பர்கள் முயலுகின்றனர். தெய்வத்துக்கு உணவும் உடையும் தேவையானவை அல்ல. இவை யாவையும் கடந்த நிலையில் இருப்பது பரம்பொருள். ஆனுல் இத்தகையவைகளை ஏற்று அங்கீகரித்து மகிழ்வுற்றிருக்கும் மூர்த்தியாக சாதகன் தெய்வத்தைப் பற்றிக் கருதுகிறுன். அதன் மூலம் அவனுடைய மனது விகசிப்பு அடைவதே ஆலய வழிபாட்டின் பயன்ஆகும்.

மூர்த்தியை அலங்கரித்தான பிறகு அவருக்கு இனிய நல்லுணவு நைவேத்தியமாகப் படைக்கப்படுகிறது. இறைவன் அதை அங்கீகரிக்கின்றுர் என்றே அன்பன் உணருகின்றுன். ஆத்ம சாதனத்தில் முன்னேற்ற மடைந்தவர்கள் உணவை தெய்வத்துக்கு நைவேத்தியமாகப் படைப்பதில் பொருள் மிக உண்டு என்று உறுதி கூறுகின்றனர். மிக அண்மையில் தோன்றி ஆலய வழிபாடு செய்து வந்த ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் இதற்கு அத்தாட்சி கூறுகிறுர். அன்புடன் தெய்வத்துக்குப் படைக்கப்படும் நைவேத்தியத்தை மூர்த்தியினிடமிருந்து அருட் ஜோதி ஒன்று கிளம்பி வந்து ஸ்பர்சிக்கிறது. அத்தகைய அருள் ஸ்பர்சம் ஆன பின்பே அது பிரசாதமாகின்றது. ஈசுவரப் பிரசாதமாக அன்பன்

அதை ஏற்றுக் கொள்கின்ற பொழுது அவனுடைய அந்தக் கரண சுத்திக்கு அது பேர் உதவி புரிகின்றது.

நைவேத்தியம் படைத்தான பிறகு தெய்வத்துக்கு ஸ்தோத்திரம், அர்ச்சனை முதலியன சமர்ப்பிக்கப்படுகின்றன. நம் வீட்டுக்கு வரும் நண்பர் ஒருவருக்கு நல்லுணவுபடைத்தான பிறகு நாம் அவருடன் உரையாடுகிறோம். உரையாடி அவரை மகிழ்விக்கிறோம். அதே பாங்கில் ஆலயத்தில் கடவுள் வழிபாடு நிகழ்கிறது. தெய்வத்துக்கு உணவு வகைகளை நைவேத்தியமாகப் படைத்தான பிறகு அவரை நாம் புகழ்ந்து பாடுகின்றோம், போற்றுகின்றோம், அர்ச்சிக்கின்றோம், ஆராதிக்கின்றோம். அதன்மூலம் நமக்கு மனப்பூரிப்பு ஏற்படுகிறது. ஆராதனையின்மூலம் ஆராதிக்கப்பெறும் தெய்வ சொரூபமாக படிப்படியாக நாம் மாறியமைகின்றோம். நாம் மேலோராக மாறியமைவதே பூஜையின் விளைவு. மேலோராக நாம் மாறியமையவில்லை என்றால் நாம் செய்தது சரியான பூஜையன்று என்னும் முடிவுக்கு வந்தாக வேண்டும்.

நைவேத்தியம்

கோயிலுக்குச் செல்லுகின்றவர்கள் வெறுங்கையுடன் செல்லலாகாது என்பது ஐதிகம். இக்கோட்பாடு இன்னும் பரந்த பாங்கில் வழக்கத்தில் இருந்து வருகிறது, பெரியோர்களையும், குழந்தைகளையும், கடவுளையும் தரிசிக்கச் செல்லுகின்றவர்கள் வெறுங்கையுடன் போகலாகாது. நல்ல உணவுப் பொருள் ஏதேனும் ஒன்றை எடுத்துச் செல்ல வேண்டும். உணவுப் பொருளின் மூலமாகவே குழந்தைகளோடு நாம் ஒற்றுமை பாராட்ட முடியும். அக்கோட்பாடு பிறகு பெரியோர்களுடைய இணக்கத்துக்கும் முதற்படியாகின்றது. கடவுள் வழிபாட்டிலும் அதே கருத்து அடங்கியிருக்கிறது. குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் எடுத்துச் செல்லும்பொருள்கள் அவர்களுக்கு விருப்பமானவைகளாக இருக்க வேண்டும். கடவுளுக்கு எடுத்துச் செல்லும் பொருள் தனக்கு மிக விருப்பமானதாக இருக்கவேண்டும். ஆலய வழிபாட்டுக்கு அது உகந்ததாகவும் இருக்கவேண்டும். தனக்கு விருப்பமான பொருளைக் கடவுளுக்குப் படைப்பதில் நலன் ஒன்று ஆத்ம சாதகனுக்கு விளைகின்றது. கடவுளுக்குப் படையாது தான் அதை உண்பதில்லை என்னும் கொள்கையிலிருந்து உணவுப் பொருள்மீது வைத்த பற்றுதல் குறைகிறது. கடவுளுக்குப் படைப்பதன் மூலம் அது தூய உணவாக மாற்றப் பெறுகிறது. அது ஈசுவரப் பிரசாதமான பிறகு மற்றவர்களுக்கெல்லாம் வழங்கியான பின்பே எஞ்சியிருக்கும் ஒரு சிறு பகுதியைத் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். தெய்வத்தின் பெயரால் மன்னுயிர்களையெல்லாம் தன்னுயிர் போன்று கருதும் மனப்பான்மையும் இதினின்று உண்டாகிறது. எல்லா உயிர்களும் கடவுளுக்குச் சொந்தம், எல்லா உயிர்களையும் ஓம்புதல் மூலம் கடவுள் நன்கு வழுத்தப்படுகின்றார். உணவு இல்லாது கடவுள் வழிபாடு நிகழலாகாது என்பதன் கருத்து இதுவேயாம். மாந்தர் சேகரிக்கும் நல்ல உணவுப் பொருள்களில் பெரும் பகுதி ஆலயத்துக்கு வந்து விடுவது முறை. கடவுளின் பெயரால் பிறகு அது பலர்க்குப் பகுத்துக் கொடுக்கப்படுகிறது. கடவுளின் பெயரால் கொடுக்கப் படுகின்றபொழுது கொடுக்கின்றவனுக்குத் தான் கொடையாளி என்கின்ற அகங்காரம் உதிக்காது. ஈசுவரப் பிரசாதத்தை ஏற்கின்றவர்களுக்குப் பிறரிடமிருந்து பொருளை ஏற்பது இகழ்ச்சி என்ற மனப்பான்மையும் வராது. கொடுப்பவரும் ஏற்பவரும் கடவுளுக்குரியவர் ஆய்விடுகின்றனர். மனப்பான்மை மேன்மையடைவதற்குப் பொருளைக் கடவுளுக்கு நைவேத்தியமாகப் படைப்பதே சிறந்த உபாயமாகும். பலர் கருதுகின்றபடி இதில் பொருள் நஷ்டமில்லை. பொது மக்களுக்குப் பொருள் நன்கு விநியோகிக்கப்படுகிறது.

கிரியைகள்

நமது ஆலயங்களில் கையாளப்படும் கிரியைகள் தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்துள்ளன. தீப ஆராதனையை அதற்குச் சான்றாக எடுத்துக் கொள்வோம். அஞ்ஞானம் என்னும் திரை நீங்கியவுடன் ஜோதிப் பிழம்பாக பலவிளக்குகள் கொண்ட அடுக்குத் தீபம் ஒன்று சுற்றப்படுகிறது. அஞ்ஞான இருளினின்று ஞான பூமிக்குள் பிரவேசிக்கின்ற ஆத்மா ஒரே ஒளிப் பிழம்பைக் காண்கிறான். அந்த ஒளிப் பிழம்பில் அவன் ஒன்றித்து விடுவதற்குச் சிறிது நேரமாகின்றது. பரம்பொருள் என்றைக்கும் அணையாத ஆத்மப் பிரகாசமாய் இருக்கிறார். அடுக்குத் தீபத்தில் கணக்கற்ற விளக்குகள் இருக்கின்றன. அதன் பிறகு காட்டப்படும் தீபங்

கள் எண்ணிக்கையில் குறைந்து வருகின்றன. கடைசியில் ஒரு தீபத்தில் வந்து ஆராதனை முற்றுப் பெறுகிறது. இதன் அடிப்படைத் தத்துவம் ஏகமாய் உள்ள பரமாத்மனே 'எண் ணிறந்த ஜீவாத்மாக்களாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார் என்பதேயாம்.

கடவுள் ஆராதனையில் பஞ்சேந்திரியங்களும் இடம் பெறுகின்றன. பஞ்சேந்திரியங்கள் பொதுவாகப் பிரபஞ்சத்தை விஷயமாக்குதற் கென்று அமைந்தவை. அவ்வைந்து பொறி களையும் பரமனை நுகர்தற்கென்று பயன் படுத் துங்கால் அது நல்ல ஆத்ம சாதனமாகிறது. தேவ ஆராதனையில் கண்கொண்டு காண்பது ஜோதி சொரூபமான பரம்பொருள். காதால் கேட்பது அவனிடத்திருந்து உண்டா கும் நாதம். அதற்குச் சின்னமாக மணி ஓசையும், சங்கு வாத்தியமும் அமைகின்றன. வேதமோதுதலும் ஆங்கு நிகழ்கிறது. மூக் கால் முகர்வது ஆராதனையோடு சம்பந்தப் பட்ட நறுமணம் கமழும் தூபமாகும். ஸ்பரிசித்து இன்புறுதற்கு பரமனுக்குச் சாத் திய பூமாலை தரப்படுகிறது. நாவால் சுவைத்து வணங்குதற்கு அவனுடைய பிரசாதம் வழங் கப் படுகிறது. இங்ஙனம் பஞ்சேந்திரியங் களைக் கொண்டும் பரம் பொருளே நுகரப் படுகிறார். இந்நிகழ்ச்சியில் ஆலய வழிபாடு உச்ச ஸ்தானம் பெற்று விடுகின்றது. உலகை அறிதற்கென்று அமைந்த பொறிகளை பரமனை அறிதற்கென்று பயன் படுத்துமிடத்து அது நல்ல பழக்கமாகிறது.

கோயிலைப்பற்றிய விரிவான தத்துவம் சிதம்பரம் போன்ற ஆலயத்தில் அமைந்திருக் கிறது. உபாசனைக்குரிய மூர்த்தியாகிய நட ராஜா நான்கு ஸ்தம்பங்களையுடைய ஒரு கொலு மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார். அந்த நான்கு ஸ்தம்பங்கள் நான்கு வேதங்களின் சின்னமாகும். அதற்குச் சற்று முன்பு ஆறு தூண்களுடைய மண்டபம் உள்ளது. ஆறு சாஸ்திரங்களுக்கு அவைகள் சின்னமாய் அமைந்துள்ளன. அதற்குச் சற்று வெளியே பதினெட்டுத் தூண்களுடைய மண்டபம் இருக்கிறது. பதினெட்டு புராணங்களுக்கு அவைகள் அறிகுறியாய் அமைந்துள்ளன. நடராஜாவின் அருகில் செல்லுதற்கு ஐந்து படிகளில் மேலே ஏறியாக வேண்டும். சிவனு டைய திருநாமமாகிய பஞ்சாக்ஷரம் அல்லது ஐந்தெழுத்தின் சின்னமாக இந்த ஐந்து படி கள் அமைந்துள்ளன. நடராஜாவுக்கு இடது புறம் சிவகாமி அம்மையார் எழுந்தருளி யுள்ளார். வலதுபுறம் சிதம்பர ரகசியம், அமைந்திருக்கிறது. இதிலும் மேலான கோட் பாடு புதைந்திருக்கிறது. பராசக்தியின் அரு ளால் சகுண பிரம்மமாகிய நடராஜமூர்த்தி யின் தரிசனம் கிட்டுகிறது. சகுண பிரம்மம் பிறகு நிர்குண பிரம்மத்துக்கு வழிகாட்டு கிறது. அது மனம் மொழியைக் கடந்திருப் பதால் ரகசியம் என்று இயம்பப்பெறுகிறது. நிர்க்குணப் பிரம்மத்தை அடைந்த ஜீவன் திரும்பவும் ஜீவ போதத்துக்கு வருவானாகில் சகுண பிரம்மத்துக்கு வந்து கீழிறங்கி வரு கிறான். சிதம்பரத்தில் நிகழும் தீபாராதனை இக்கோட்பாட்டை விளக்குகிறது.

மனப்பான்மை

மனம், மொழி, மெய் ஆகிய திரிகரண சுத்தியுடன் ஆலய வழிபாட்டுக்குப் போக வேண்டும் என்பது கோட்பாடு. ஆலயத்துக் குள் நுழையும்பொழுதே உலக வியவகாரங் களை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். கடவு ளைப் பற்றிய சிந்தனையே சித்தமிசை குடி கொண்டிருப்பது அவசியமாகிறது. பதை பதைப்புக்கோ வேகம் நிறைந்த நடமாட்டத் துக்கோ ஆங்கு இடமில்லை. அமைதியும் சாந் தமும் வடிவெடுத்தவனாக வழிபடுபவன் ஆய் விடுகிறான். கோயிலுக்குள் கூச்சலிட்டுப் பேசுகின்றவர்கள் வழிபடுபவர் ஆகார். கோயி லின் புனிதத்தையும் ஒருவிதத்தில் அவர்கள் பாழ்படுத்தி விடுகின்றனர். ஒருவரோடு ஒருவர் பேசாதிருந்து வழிபாடு செய்வது சாலச் சிறந்தது. வழிபாட்டை முடித்தான பிறகு ஓர் இடத்தில் அமைதியாக அமர்ந்திருந்து தியானம் பண்ணுவது முற்றிலும் அவசியம். பல பெரியோர் ஆழ்ந்து எண்ணிய உயர்ந்த எண்ணங்கள் நிறையப்பெற்ற இடம் ஆலயம். ஆங்கு வழிபடுபவன் அமைதியுற்று அமர்ந்திருப் பானாகில் அந்த உயர்ந்த எண்ணங்கள் அவ னது மனத்தகத்து பிரதிபலிக்கும். அதுவே ஆலய வழிபாட்டினின்று வழிபடுபவன் பெறு கின்ற பெரிய பேறு ஆகும். இத்தகைய மனப் பான்மையுடன் எத்தனைபேர் ஆலயத்துக்குள் வந்து வணங்குகின்றார்களோ அதற்கேற்ப ஆலயத்தினுள் ஏற்கெனவே அமைந்துள்ள அருள் பன்மடங்கு பெரியதாகின்றது. அருளைத் தானே அடைவதன் மூலம் ஆலயத்தின்கண் அன்பன் அருளைப் பெருக்குகின்றான். ஆலய வழிபாட்டின் ஒப்பற்ற பயன் இதுவேயாம்.

சமயமும் சமுதாயமும்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த
தேசிக பரமாசாரிய சுவாமிகள்
இளவரசு, மதுரை ஆதீனம்

உலக மக்கள் அனைவரும், சமயநெறியில் ஈடுபட்டு, இன்ப வாழ்வினைப் பெற்று உய்யவேண்டும் என்னும் பெருநோக்கங் கொண்டே, நம் முன்னோர்கள் வாழ்ந்து வந்தனர். அதனாலேயே, தாங்கள் படைத்த சாத்திர, தோத்திர இதிகாச, புராண இலக்கியங்களில் எல்லாம் கடவுள் வாழ்த்துக் கூறும்போது, உலகத்தை நினைத்தே பாடியிருப்பதைக் காணமுடிகிறது.

எடுத்துக்காட்டாக, ''உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்'', ''உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்'', ''உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு'', ''ஆதிபகவன் முதற்றே உலகு'' முதலிய தொடர்களைக் குறிப்பிடலாம்.

பழங்காலம் முதலே, நமது முன்னோர்களுக்குத் தங்களது வாழ்வில் ஒழுங்கு, அமைதி, நீதி, இன்பம், அன்பு, பண்பாடு, மனிதத் தன்மை ஆகியவை இருத்தல் வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வத்தின் தூண்டுதலே சமயமாக மலர்ந்தது.

சமயச் சிந்தனை

சமயம் என்பது, மனிதனின் மனத்தைச் சமைத்துப் பக்குவப்படுத்துவது. அவனுடைய வாழ்வில் நிகழும் ஆவேச உணர்வு, பரபரப்பு உணர்வு, பிறருக்குத் துன்பம் இழைக்கும் தீய உணர்வு ஆகியவற்றை அடக்கி, அவனை நல்வாழ்க்கைக்குப் பக்குவப் படுத்துவது.

சமயம் என்பது சமுதாயத்தை ஒட்டியதே ஆகும். சமயம் வேறு சமுதாயம் வேறு அல்ல. சமுதாயமானது, சமயத்தை ஏற்று வாழ்வதுதான், சமய வளர்ச்சி என்று கொள்ளல் வேண்டும். சமயமின்றிச் சமுதாயமோ, சமுதாயமின்றிச் சமயமோ இல்லை என்று கூறிவிடலாம்.

நம்முடைய சமய வாழ்க்கைக்காகக் கடந்த 2000 ஆண்டுகளுக்கு முன்பே திருக்குறள் தோன்றியது. அதன் பின்னர் திருமுறைகளும் தோன்றின. அவை, வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் தந்தன. தராதது ஒன்றும் இல்லை. அப்படிப்பட்ட சமயம், நம்முடைய சமுதாயத்தில் இன்னும் முழு அளவில் ஊடுருவி வளர்ச்சி பெறவில்லை.

அப்படி வளர்ச்சி பெறுவதற்கு, நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பல உள்ளன. வயது வந்தவர்கள் ஒருபுறம் இருக்க, வளரும் சமுதாயத்தின் முதற்படியில் இருப்பவர்கள் நமது மாணவர் சமுதாயமே. அதாவது இளந் தலைமுறையினர். இந்த இளந் தலைமுறையினரை முதலில் சமயநெறியில் ஈடுபடுத்துதல் வேண்டும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவ மாணவிகட்குச் சமய நெறியினைப் போதிக்க வேண்டும்.

மனிதத் தன்மையும், சிந்தனையும், பண்பாடும், பிறரை மதிக்கும் பெருங் குணமும்,

பெருந்தன்மையும் அவர்களிடத்தில் வளர்ந்திடுதல் வேண்டும். அதற்கேற்ப சமயப் பற்றும், இறை உணர்வும், நல்லொழுக்கமும் மிகுந்தவர்கள் ஆசிரியர்களாக வரவேண்டும். நன்னூல் ஆசிரியரும், ஆசிரியர் இலக்கணம் கூறும்போது, ''தெய்வ நம்பிக்கை'' உடையவராக இருத்தல் வேண்டும் என்று
''குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை''
—(நன்–பாயிரம் 26)
என்னும் அடியின்மூலம் குறிப்பிடுகிமுர்.

இத்தகைய பணிகளை மேற்கொள்வதற்கு, தற்காலச் சமுதாயமும், ஆட்சியாளர்களும் ஒன்றியிருந்து ஏற்பாடுகளைச் செய்திடல் வேண்டும். எனவே, இளந் தலைமுறையினரைத் திருத்தும் பணிதான் அனைவராலும் முதன் முதல் செய்யப்பட வேண்டிய அடிப்படைப் பணியாகும்.

எங்கும் நிறைந்தவனை வழிபடுவோம்

எங்கும் நிறைந்தவன் இறைவன். ''பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணுனந்தமே'', ''அங்கிங்கெனுதபடி, எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது'' என்று தாயுமான சுவாமிகள் கூறுவார்.

அப்படிப்பட்ட எம்பெருமான், கிடைத்தற்கரிய மனிதப் பிறவியான நமக்கு இரண்டு உடம்புகளைத் தந்திருக்கிருன். ஒன்று நாம் வெளியில் காண்கின்ற தூல உடம்பு. மற்ருென்று சொப்பனத்தில் தொழிற்படுகின்ற உள் உடம்பு. அந்த உள் உடம்பில் தான் உயிர் இருக்கின்றது. இது, தோலால் ஆகிய உதை பந்து. பந்துக்குள் பிளாடர். பிளாடருக்குள் காற்று என்பதுபோல ஆகிறது.

எனவே, அங்கு இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி நிறைந்திருக்கின்ற இறைவன், நாம் செய்து வருகின்ற எல்லா நன்மை தீமைகளுக்கும், சாட்சி மாத்திரமாகவே இருந்து, நம்மை ஆட்சிபுரிந்து வருகின்ருன்.

அவன் எங்கும் இருக்கின்ருன். ஆனுல் ஞானிகள் திருவுள்ளத்திலும், திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகிருன். மற்ற இடங்களில் மறைந்திருக்கிருன்.

''ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளி
யானே''
என்று மாணிக்கவாசகரும்,
''உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர்
தொறும்
ஒளித்து நின்ற கள்வன்''
என்று பரஞ்சோதி முனிவரும் கூறுவர்.

மூர்த்தி வழிபாடு

திருக்கோயில்களிலும், ஆகமங்களிலும், சாத்திரங்களிலும், தோத்திரங்களிலும், வேத உபநிஷத்துக்களிலும் விவரித்திருக்கின்ற மூர்த்திகள், சிற்பசாத்திர முறைப்படி சிலைகளாகத் தயாரிக்கப் பெற்று ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்யப் பெற்றவையாகும்.

எனவே, இப்பூவுலகில் நாம் வழிபடும் மூர்த்திகள் அனைத்தும் மேல் உலகங்களில் உள்ள மூர்த்திகளே ஆகும். அம்மூர்த்திகளின் வடிவங்களின் விவரத்தை விளக்குவதே சிற்பசாத்திரங்கள். அம்மூர்த்திகளின் பிரதிஷ்டை முறைகளை விளக்குவதுவே ஆகம சாத்திரங்கள். அம்மூர்த்திகள் அனைத்தும், மனிதன் தன்னுடைய கற்பனையினுல் உண்டாக்கிய உருவங்கள் அல்ல; இந்துமதப் புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவை மூலமும், இறந்தவர்கள் மூலமும் சான்றுகளைப் பெறுகிருேம்.

(1) பெரியபுராணத்தில் காரைக்கால் அம்மையார் ஊனுடம்பைக் களைந்து விட்டுப் பேயுடம்பாகிய சூக்கும சரீரத்தோடு சிவலோகம் சென்றதாகவும், அங்கு உமாமகேஸ்வரராகிய சிவபெருமான், ''வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காணும் உமையே'' என்று உமாதேவியாருக்கு அறிவித்ததாகவும் காண்கிருேம். மேலும், பேயுடம்போடு இருந்தபோது பாடியவைதான் அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் என்று அறிகின்ருேம்.

(2) சுந்தரமூர்த்தி நாயனுர் ஊனுடம்பைக் களைந்து விட்டு, உள்ளுடம்பாகிய சூக்கும சரீரத்தோடு விண்ணுலகத்திலிருந்து வந்த வெள்ளை யானையின் மேல் ஏறிக்கொண்டு சிவலோகம் சென்றதும், அங்கு உமையொரு பாகனுகிய சிவபெருமான் அவரை நோக்கி, ''ஊரனே வந்தனையா?'' என்று கேட்டதும், அங்கு அவர் பாடிய ''நொடித்தான் மலைத்'' திருப்பதிகத்தையும் அவர் இப்பூவுலகத்துக்கு வந்த வரலாற்றினையும் காண்கின்ருேம்.

(3) அடுத்து, மகாபாரதத்தை எடுத்துக் கொண்டால், இந்திரன் தருமபுத்திரரை

பரவாசு தேவர் எழுந்தருளியுள்ள நகரத்திற்கு அழைத்துப் போய், அங்கு வைகுண்டநாதரையும், கிருஷ்ண பகவான் அஷ்டலெட்சுமியுடன் விளங்குவதையும், இறந்துபோன கர்ணன், பீமன், திரௌபதி, இளம்பாண்டவர் ஆகியோரையும் காட்டினன் என்றும், மகாவிஷ்ணு தம் அருகில் அமரும்படி அனுக்கிரகம் செய்தருளினர் என்றும், அந்தக் காட்சியைக் கண்டு யாவரும் மகிழ்ந்து, புண்ணியத்தின் மகிமையை எண்ணிப் பூரித்தனர் என்றும் கூறியிருப்பதை காண்கிறோம்.

இவற்றிலிருந்து, சிவலோகத்தில் சிவபெருமானும், வைகுண்டத்தில் மகாவிஷ்ணுவும், புண்ணியம் செய்த அருளாளர்கள் காணுமாறும் அவர்களோடு உரையாடுமாறும் இருந்து அருள்பாலிக்கிறார்கள் என்பதும் தெளிவாகும். அல்லாமலும், பக்தி உடையவர்களும், புண்ணிய சீலர்களும் இப்பூலோகத்தில் இறந்தபின், மேலுலகத்தில் கனவில் தொழிற் படுகின்ற பாரமில்லாத அவயவங்களோடு கூடிய உள்ளுடம்போடும், அவரவர்களுக்குரிய முந்திய பெயரோடும் தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் தெளிவாகும்.

வழிபடு மூர்த்தியின் ஆற்றல்

அடுத்து, கல்லாலோ, செம்பாலோ, பிறவற்றாலோ செய்த உருவச் சிலைகள், பிரதிஷ்டை செய்வதற்கு முன்னர் சாதாரண சிலைகளாக இருக்க, பிரதிஷ்டை செய்த பின்னர் சக்தி பெற்றனவாக மாறுகின்றனவே அது எப்படி? சாதாரண மனிதராக இருந்த ஒருவர், சம்பிரதாய முறைப்படி, பலவகை மந்திர தீட்சைகள், ஆசாரிய அபிஷேகங்கள் முதலியவற்றால், பலபேர் வணங்கத் தக்க முறையில் மடாதிபதியாக ஆகிறார். அதுபோலவே, சாதாரண கற்களாலும் உலோகங்களாலும் செய்த உருவங்களை, வேதாகம முறைப்படி செய்கின்ற சில மந்திர அபிஷேகங்கள் விசேஷ சக்தியுள்ளனவாக மாற்றி விடுகின்றன. அதே போலத் தான், சட்டப்படி ஜனாதிபதிப் பதவியும், மந்திரிப் பதவியும், பிற அரசாங்கப் பதவிகளும் அமைகின்றன.

அடுத்து, நம்மையெல்லாம் இயக்குகின்ற இறைவன் ஒருவன்தான் என்றாலும், அவனது அதிகாரம் பெற்ற அதிதெய்வங்கள் பல இருக்கின்றன. இதற்கு உதாரணமாக, இந்திய அரசாங்கம் என்பது ஒன்றுதான். ஆனால், அதன் அதிகாரம்பெற்ற அதிகாரிகள் பலர் இருக்கின்றனர். ஓர் அதிகாரியிடம் மனுக் கொடுத்தால், அது அரசாங்கத்திற்குக் கொடுத்ததற்குச் சமம். அந்த அதிகாரி, அம்மனுவை ஏற்றுக் கொண்டு, அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வார் என்றால், அந்நடவடிக்கை அரசாங்கமே செய்வது என்றுதான் பொருள். அதுபோல, இறைவன் ஒருவனாக இருப்பினும், அவனது அதிகாரம் பெற்ற அதிதெய்வங்களாக நடராஜர், தட்சிணாமூர்த்தி, சந்திரசேகரர், அம்பிகை, விநாயகர், முருகர், திருமால் போன்றவர்கள் இருந்து, ஆட்சி செய்து வருகின்றார்கள்.

வழிபடும் முறை

எனவே, நாம் தெய்வ வழிபாடு செய்யும் போது, தெய்வபேதம், மூர்த்தி பேதம் குறித்து மாறுபட்டு மலையாது, நிலையாய அன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபடல் வேண்டும்.

> ''யாதொரு தெய்வங் கொண்டீர் அத்
> தெய்வமாகி யாங்கே
> மாதொரு பாகனார்தாம் வருவர்''

என்பது சிவஞான சித்தியார்.

அந்தவகையிலே, கருணையே வடிவான எம்பெருமான் நம் மீதுள்ள இரக்கத்தினால், இந்த உடம்பை வழங்கியுள்ளான். அவன் தந்த உடம்பினால் அவனை வழிபடுவது கடமையாகும். இன்றேல் கடமையை மறந்த மடமையாகும்.

வழிபாட்டுப் பயன்

காவிரியில் ஒருவன் நீராடுவது, காவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று; தன் உடம்பில் உள்ள வெப்பம் தணியும் பொருட்டு நீராடுகின்றான். அதுபோல, அருட்கடலாக இருக்கிற ஆண்டவனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகின்றது.

நாம் எல்லோரும் அப் பெருமானைக் காதலாகிக் கசிந்து வழிபட்டு, இகபர நலன்களை எளிதில் பெற்றுப் பிறவிப் பிணியை ஒழித்துப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வோமாக.

அடியார்கள்

அ. ச. ஞானசம்பந்தன்

அடியார்கள் என்ற தமிழ்ச் சொல் ஒரு குறிப்பிட்ட வேடம் அணிந்தவர்களை மட்டும் குறிக்காமல், பரந்துபட்ட பொருளுடையதாக வழங்குகிறது. சாக்கிய மதவேடத்துடன் இறுதிவரை இருந்த சாக்கிய நாயனுர் பெரிய புராணத்தில் பேசப் பெறும் அடியார்களுள் ஒருவராக ஆக்கப்பட்டார் என்ருல் நாம் மேலே கூறின கருத்து வலுப் பெறுகிறது. வேடத்துடன் இருந்தாலும் வேடம் இல்லாமல் இருந்தாலும் அடியார்களை இனங்கண்டு கொள்வதென்பது எளிதான காரியமன்று. இப்பெரு மக்கள் தம் புறக் கோலத்தைப் பற்றிக் கவலைப் படாமல் எதையும் அணிந்து கொண்டு எங்கும் சுற்றித் திரிவதால் நாம் ஏமாந்துவிடும் நிலை ஏற்பட்டு விடுகிறது. அடியார்களுக்குரிய வேடம் எதுவும் இல்லாமல் அடியார்களாக இருக்கின்றவர்களும் உண்டு. அந்த வேடத்தையே போட்டுக் கொண்டு திரிகின்ற வெற்று வேடதாரிகளும் உண்டு.

சிவஞானிகளாம் அடியார்கள் எவ்வாறு இருப்பார்கள்? உலகியலுக்கும், நம்முடைய வாழ்க்கை முறைக்கும் மாறுபட்ட வாழ்க்கை உடையவர்களாக இருப்பார்கள் அவர்கள். நம் வாழ்க்கை முறைக்கு மாறுபட்டவர்களைப் பித்தர்கள், பைத்தியம் என்று கூறிப் பழிக்கப் பட்டவர்களாகிய நாம் சிவஞானிகளையும் பித்தர்கள் என்றே, கூறிப் பழகி விட்டோம். இறைப்பித்துக் கொண்டு திரியும் அவர்களை உலகப்பித்துக் கொண்டலையும் நாம் பித்தர்கள் என்று கூறுவதில் வியப்பு ஒன்றும் இல்லை. இது பழங்காலந்தொட்டே வருகின்ற பழக்கமாக இருந்துள்ளது. மணிவாசகரைப்'பித்தர்' என்று மக்கள் கூறினதாக அவரே கூறுகிருர்.

''பித்தன் என்று எனை உலகவர் பேசுவதோர் காரணம்...'' (திருவா—அதிசய 4) இனி மற்ருெரு சிவஞானியாகிய திருமூலரையும் இந்த உலகம் அவ்வாறே கூறிற்ரும். ''முத்தினில் முத்தை முகிழ்கின ஞாயிற்றை எத்தனை வானேரும் ஏத்தும் இறைவனை அத்தனைக் காணுது அரற்றுகின்றேனை ஓர் பித்தன் இவன் என்று பேசுகின்ருரே'' (திருமந்—2984).

[முத்து, இளஞாயிறு போன்றவனை, தேவர்கள் வணங்கும் அப்பனைக் காணுமல் அரற்றுகின்ற என்னைப் பித்தன் என்று உலகம் கூறுகிறது].

அவ்வாருனுல் உண்மையான சிவஞானிகளையும் பித்தர்களையும் அடையாளங் கண்டு கொள்ளவே முடியாதா? என்று கேட்கப்படலாம். நேர்மையான மனத்துடன் முயன்ருல் எளிதில் கண்டு கொள்ள முடியும் என்பதே அந்தக் கேள்விக்கு விடையாகும். ஒரு மனிதனை அளவிடக் கண்ணைவிடச் சிறந்த உறுப்பு வேறு எதுவும் இருக்க முடியாது. பித்தர்களுடைய கண்கள் வெறிச் சென்ற (Blank look) பார்வையுடன் இருக்கும். இதன் எதிராக ஞானிகளினுடைய கண்கள் கடலை விட ஆழமானவை. அவர்களுடைய கண்களை நேருக்கு நேர் பார்க்கின்ற ஆற்றல் நம்போன்றவர்களிடம் இருப்பது கடினம். ஒரு வேளை நேருக்கு நேர் பார்க்க நேரிட்டாலும் சில வினுடிகட்குமேல் அவர்கள் பார்வையை நாம் சந்திக்க முடியாமல் நம் கண்களைப் பூமியை நோக்கித் தாழ்த்தி விடுவோம். எனவே இந்த எளிய வழியைக் கையாள்வதன் மூலம் ஞானிகளை ஓரளவு இனங் கண்டு கொள்ள முடியும்.

இப் பெரு மக்களை இனங்கண்டு கொள்ள முடிந்தால் மிகவும் நல்லது. ஒரு வேளை அது இல்லாவிடினும் நம் அறியாமை காரணமாக இவர்களைப் பழிக்கவோ, அலட்சியம் செய்யவோ நேரிட்டால் அதனுல் விளையும் தீங்கு மிகவும் பொல்லாதது. இவர்களை அறிந்து வழிபடாவிட்டாலும் பரவாயில்லை. அறியாமை காரணமாகவோ, அலட்சியம் காரணமாகவோ இவர்களைப் பழித்து விட்டாலும் இவர்கட்கு இடையூறு செய்து விட்டாலும் அதனுல் விளையும் தீமை நம்மை மட்டும்

அல்லாமல் நம் சந்ததியையும் பாதிக்கும். இது பற்றி நம்மை எச்சரிக்கை செய்ய வந்த சிவஞானியாகிய திருமூலர்,

''பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கிடத் தீமைகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டுஒன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே'' (532)

என்று கூறுகிறார்.

[பத்தினிகள், பக்தர்கள், சிவஞானிகள் என்பவர்கள் மனங் கலங்குமாறு தீமை புரிந்தவர்கள் ஒரு வருடம் முடிவதற்குள் அதன் கொடிய பயனை அனுபவிப்பர்]

''மந்திரம் ஓர்எழுத்து உரைத்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
... ...
... ... மாய்வர் மண்ணிலே (533)

நமக்குத் தீங்கிழைத்தவர்கட்குக் கூட நன்மையே புரியவேண்டும் என்று அறநூல் கட்டளை இடுகிறது. அவ்வாறு இருக்கையில் நமக்கு ஒரு தீங்கும் நினைக்காமல் நன்மையே புரிய முயலும் இந்த ஞானிகட்குத் தீங்கிழைத்தால் அதனால் விளையும் கேடு பற்றிக் கூறவும் வேண்டுமோ? இன்று சமுதாயத்தில் வாழும் நாம் பிறருக்குத் தீங்கு செய்வது பற்றிக் கவலைப் படாமல் வாழ்ந்து பழகிவிட்டோம். இது போட்டி நிறைந்த சமுதாயம் (Competitive Society). ஆதலால் இதுபற்றிக் கவலைப்பட்டால் நாம் வாழவோ முன்னேறவோ முடியாது என நம்பத் தொடங்கிவிட்டோம். இவ்வாறு செய்வதில் தவறு ஒன்றும் இல்லை என்றும் கூறத் தொடங்கி ஓரளவு மன அமைதியும் பெற்று விட்டோம். இந்த நோய், தனி மனிதர்களிடம் தொடங்கி, சமுதாயத்தில் பரவி, இன்று அரசியலிலும், அரசியல் கட்சிகளிலும் நீக்கமற நிறைந்து நிற்கிறது.

இதனால், சமுதாயத்தின் இடையில் வாழ முற்பட்ட அடியார்கட்கும், சிவஞானிகட்கும் நமது பொது விதிப்படி தீங்கிழைக்கவும், அது பற்றிக் கவலைப்படாமல் இருக்கவும் பழகி விட்டோம். அவர்களைச் சோம்பேறிகள் என்றும், சமுதாய ஒட்டுண்ணிகள் என்றும் வாய் கிழியப் பேசும் நிலை ஏற்பட்டது. இதனால் விளையும், விளையப் போகும் பயனையும் திருமூலர் குறிக்கின்றார்.

''ஈசன் அடியார் இதயம் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமது ஆகுமே நம்நந்தி ஆணையே'' (534)

திருவண்ணாமலையில் சித்தர்கள், சிவஞானிகள் எனப் பலர் இன்றும் இருந்து வருகின்றனர். ஒரு சிலர் பிரபலமடைந்துள்ள காரணத்தால் அவர்களை அல்லாத பிறர் அனைவரும் சாதாரணமானவர்கள் என்று கருதி விடக் கூடாது. இன்று நம் கண் 'முன்னர் திருவண்ணாமலையில் வாழ்ந்து வருகின்ற 'யோகி ராம் சுரத் குமார்' என்ற பெரியவர் மாபெரும் சிவஞானியாவார். இவர் போன்றவர்களுடைய உடை, நடை, பழக்க வழக்கங்கள் சாதாரண மக்களினுடைய நடை உடைகளிலிருந்து பெரிதும் மாறுபட்டிருக்கும். இதனால் இவர்களைச் சாதாரணமானவர்கள் என்று கருதி விட்டால் அதனால் ஏற்படும் நஷ்டம் நம்முடையதே தவிர அவர்களுடையதல்ல.

சித்தர்கள் என்ற பெயராலும் இவர்கள் அழைக்கப்படுவர். இவர்கள் நாம் வேறுபாடு பாராட்டுகின்ற இரட்டைகளில் வேறுபாடு பாராட்டாதவர்கள். தூய்மை—அழுக்கு; புகழ்—இகழ்; விருப்பு—வெறுப்பு என்பவற்றைப் பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. இன்னுங் கூறவேண்டுமானால் நல்லவர்—தீயவர் என்ற வேறுபாட்டையும் இவர்கள் அறிவதில்லை. கொலைகாரனும், பரம சாதுவும் இவர்களுடைய பார்வையில் ஒன்றாகவே இருப்பர். இதனால் ஒரு பெரிய நன்மையும் உண்டு. நம் போன்று இவர்கட்கும் இந்த வேறுபாடு தெரியத் தொடங்கினால் என்ன ஆகும்? வேறுபாடு தெரிந்தவுடன் நல்லவர்களை விரும்பவும் அல்லாதவர்களை வெறுக்கவும் தொடங்கி விடுவர். இதுதானே நாம் செய்யும் காரியம். எல்லாம், எல்லாரும் இறைவனுடைய படைப்புக்கள் என இவர்கள் கருதுதலின் வேறுபாடு தோன்றுவதில்லை. குற்றம் குணம் என்ற இரண்டையும் ஒன்றாகவே கருதும் இவர்களை 'ஸ்திதப் பிரக்ஞர்கள்' என்று கீதை கூறும். இந்த உண்மை தெரியாமையால் நாம் இவர்களைத் தவறாக எடைபோட்டு விடுகிறோம்.

இவர்களை ஒருவாறு அறிந்துகொண்டு இவர்களுடன் நெருங்கிப் பழகும் தவம் உடையவர்கள், ஒன்றை விரைவில் அறிந்து கொள்ள முடியும். குழந்தைகட்கும் இந்த ஞானிகட்கும் ஒற்றுமை பெரிதும் உண்டு. குழந்தைகளும்

அழுக்கு—தூய்மை; நன்மை-தீமை என்பவற்றின் வேறுபாட்டை அறிவதில்லை. குப்பைத்தொட்டியில் பரம திருப்தியுடன் விளையாடும் இயல்புடையது குழந்தை. இப் பெரியவர்களும் அவ்வாறே. ஆனால் குழந்தைக்கும் ஞானிகட்கும் இடையே உள்ள வேறுபாட்டையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அறியாமையின் காரணமாகக் குழந்தை இரண்டையும் ஒன்றாகக் கருதுகிறது. ஞானிகள் முற்றறிவின் காரணமாக இவை இரண்டையும் ஒன்றாகக் கருதுகின்றனர். குழந்தைக்கும் சிவஞானிக்கும் சமதிருஷ்டி உண்டு. குழந்தையின் சமதிருஷ்டி அறியாமையின் விளைவு; ஞானியின் சமதிருஷ்டி மெய்ஞ்ஞானத்தின் விளைவு.

இந்த ஞானிகளின் நடையுடை செயல்களை நம் உலகியல் அறிவு கொண்டு அளக்க முற்படுவது தவறு. கஜ மீட்டர் கோலும் அளவு கருவிதான்; என்றாலும் பாலை அதனால் அளக்க முடியாது. அதுபோல பிரித்தறியும் நமது அளவுகோல் ஞானிகளின் செயல்களை ஆராயப் பயன்படாது. இந்தப் பயனற்ற ஆராய்ச்சியில் இறங்காமல் காலம் உள்ள பொழுதே இவர்களை அண்டிப் பயன் பெறுவது சாலச் சிறந்ததாகும்.

நம் பொருட்டாகவே இந்த உடலுடன் வாழும் சிவஞானிகட்குத் தேவையான உணவு, உடை முதலியவற்றைத் தந்து அவர்களைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு நம்முடையதாகும். இதுபற்றிக் கூறவந்த திருமூலர்,

''திலம் அத்தனையே சிவஞானிக்கு ஈந்தால்
பலமுத்தி சித்தி பரலோகமும் தரும்'' (501)

என்று கூறுகிறார். அதைவிட ஒருபடி மேற்சென்று 'சிவஞானிகட்கு உணவு படைப்பது சிவபெருமானுக்கும் பிரமனுக்கும் திருமாலுக்கும் படைப்பது போலாகும். அவர்கட்கு அளிக்கப் பெற்ற பிரசாதத்தை உண்பதால் வீடுபேறே கிடைக்கும் என்ற பொருளில்

''வித்தகம் ஆகிய வேடத்தர் உண்ட ஊண்
அத்தன் அயன்மால் அருந்திய வண்ணமாம்
சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியாம் என்றும் நம் மூலன்
மொழிந்ததே'' (1866)

என்று கூறுகிறார்.

நாம் துன்பத்தை அனுபவிக்கும்போது 'இது பிராரத்துவ வினை; அனுபவித்தே தீரவேண்டும்' என்று கூறுகிறோம். ஓரளவிற்கு இது உண்மைதான் என்றாலும் ஒரு சிவஞானி விரும்பினால் நம்முடைய பிராரத்துவ வினை, சஞ்சித வினை (முன்னை வினை) ஆகாமிய வினை (பின்னை வினை) ஆகிய அனைத்தையும் அழித்துவிட முடியும் என்கிறார் மூலர்;

''தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவன் அருளாலே''
(2611)

என்ற பாடலில்.

இத்தகைய ஞானிகளைக் காணும் அதிர்ஷ்டம் ஒருவருக்குக் கிட்டினால் அவர்களை எவ்வாறு வழிபடவேண்டும். அவர்களால் நாம் அடையும் பயன் யாது? என்பவைபற்றியும் திருமந்திரம் பேசுகிறது. இப் பெருமக்களை அண்டி நம்மை அவர்களிடம் அடைக்கலமாகத் தந்து விட்டால் நம்மைக் காப்பது அவர்கள் பொறுப்பாக ஆகி விடுகிறது. எப்பொழுதும் இவர்கள் கூடவே நாம் இருக்க வேண்டிய தேவைகூட இல்லையாம். நேரிடையாக இவர்கள் இல்லாத நேரத்திலும் இவர்கள் உருவத்தை மனத்தில் நினைத்தாலே நம் துயர்தீரும் என்று கூறுகிறது திருமந்திரம்.

''கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயம்கெடு மாபோல்
குருவின் உருவம் குறித்த அப்போதே
திரிமலம் தீய்ந்து சிவன் அவன் ஆமே''
(2659)

ஞானிகளை, நம்போன்ற மனித வடிவுடன் இருப்பதால், மனிதர்கள் என்று கருதுவதா? மனிதருள் உயர்ந்த மகாத்மாக்கள் என்று கருதலாமா? இவ்வாறு கருதினால் நம்மையும் அறியாமல் இவர்களை நம்முடன் ஒப்புவமை செய்து பார்க்கத் தோன்றும். நம்மைப் போலவே உண்டு, உடுத்து, நடமாடும் இவர்கள் ஏன் நாம் அனுசரிக்கும் சட்ட திட்டங்கட்கு உட்படக் கூடாது என்றெல்லாம் நினைக்கத் தோன்றும். அத்தகைய ஆபத்து வந்துவிடக் கூடாது என்பதற்காகவே திருமூலர் இவர்களை எவ்வாறு நினைத்து வழிபட வேண்டும் என்று கூறுகிறார்.

''சிவனே சிவஞானி ஆதலால் சுத்த
சிவனே என அடி சேரவல் லார்க்கு...''
(1580)

என்று கூறிய மூலர் அடுத்து,

''அண்ணல் இருப்பிடம் யாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்
களுக்கு
அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன் இவன் ஆமே''
(2660)

என்று கூறுவதால் 'சிவன் இருக்குமிடத்தை நாம் தேடி அறிய முடியாது. எனவே சிவ ஞானியைக் கண்ட இடத்து இவன் அவன் என்று அறிக' என்கிறார்.

காடுகள் சென்று கனசடை வைத்துத் தவம் செய்ய இயலாத நம்போன்றவர்களை உய்விக்கும் பொருட்டே 'யோகி ராம் சுரத் குமார்' போன்ற சிவஞானிகள் நம்மிடையே வந்து அருள்பாலிக்கின்றனர். வேற்று நாட்டி லிருந்து வரும் பிற சமயத்தார்களும் இவர் கள் பெருமையை அறிந்து வழிபட்டுப் பயன் அடைகின்றனர். நம்மிடையே வாழும் இவர் களை அடைந்து நாம் பயன் பெறுவிட்டால் இப் பிறப்பின் பயனை அடையாமற் போவ துடன் உயர்ந்ததாகிய மானிடப் பிறப்பை வீணுக்கியவர்களாகவும் ஆவோம். இப்பிழை யைச் செய்யாதிருப்போமாக.

இங்கே குறிப்பிடப் பெற்ற யோகி ராம் சுரத் குமார் பற்றி, ஒரு கட்டுரையை ப. 131-ல் காண்க.

அம்மணியம்மாள் கோபுரம், மடம்

அண்ணுமலையார் கோயிலின் வடக்குப் பெருவாயிலில் நிற்கும் கோபுரம் அம்மணி யம்மாள் கோபுரம். அது 'அம்மணி' என் னும் பெண் துறவியால் கட்டப்பட்டது.

அவர், திருவண்ணுமலைக்கு நேர் மேற்கில் 30 கி.மீ. தொலைவில் (செங்கம் அருகே) உள்ள சென்ன சமுத்திரம் என்னும் சிற்றூரில் 18ம் நூற்றூண்டில் பிறந்தவர். திருமணத்தை வெறுத்து இளமையிலே துறவு பூண்டார். வீட்டைவிட்டு வெளியேறிப் பல இடங்களுக்கும் சென்று, மைசூர் மன்னரைச் சந்தித்து முத்து மாலை ஒன்றினைப் பரிசாகப் பெற்றூர். அதனை 'மஷார்' என்னும் ஊரில் பெரிய செல்வர் ஒருவரிடம் விற்று, அண்ணுமலையார் கோயிலில் தம் பெயரால் ஒரு கோபுரம் அமைத்தார்.

இவர் பெயரால் சென்ன சமுத்திரம் காட்டில் விலங்குகள் நீர் அருந்த ஒரு குளம் வெட்டப்பட்டுள்ளது. செங்கத்தில்—செய் யாற்றில் இவர் பெயரால் பெரிய பாறை ஒன்றும் உள்ளது.

அண்ணுமலையார் கோயிலில் அம்மணி யம்மாள் பெயரால் வழங்கும் கோபுரம், அரைகுறையாக இருந்தது என்றும், அதனை இவர் கட்டி முடித்தார் என்றும் சிலர் கூறுவர். இந்த அம்மாளிடம் ஓர் அதிசயமான சக்தி இருந்ததாம். இன்னூரிடம் இவ்வளவு பணம் இருக்கிறது என்று கணக்காகச் சொல்லிவிடு வார்களாம். அதில் ஒரு பங்கை இந்தக் கோபுரத்திற்காக கொடு என்று வாங்கிக் கோபுரத்தைக் கட்டினூர்களாம்.

அம்மணி அம்மாள், திருவண்ணுமலையில் தம் பெயரால் மடம் ஒன்றும் நிறுவியிருந்தார். ★

அரசியல் கொந்தளிப்புக்கள்

செங்கம் கணவாயைத் தாண்டியதும் உள்ள முதல் நகரமாக இருப்பதால், திருவண்ணுமலை இராணுவத் தளமாகவும் இருந்திருக்கிறது. 1767 முதல் 1782 வரை இவ்வூரில் ஆங்கி லேயருக்கும் ஐதர்அலிக்கும் போர் நடைபெற் றது. 1791 வரை பலதடவை இவ்வூர் முற்றுகையிடப்பட்டது,

மராத்தியர், மகமதியர், பரங்கியர் படை யெடுப்புக்களில் இந்நகரும் கோயிலும் இன் னல்களுக்குட்பட்டன. மக்கள் கொல்லப்பட் டனர். வீடுகள் தீக்கிரையாயின. சொத் துக்கள் சூரையாடப்பட்டன. மகளிர் கற் பழிக்கப்பட்டனர். பிரெஞ்சுக் கும்பெனியார், தியாகதுர்க்கம் கிள்ளேதார் கிருஷ்ணுராவ், ஐதர்அலி, திப்பு சுல்தான் ஆகியோர் வர லாறு திருவண்ணுமலையைப் பற்றிய வரை இரத்தம் தோய்ந்த எழுத்துக்களில்தான் எழுதத்தக்கது. அரசியல் கொந்தளிப்புக்களி லும் அயலவரின் எக்களிப்புக்களிலும் எவ் வளவோ சிக்குண்டும்கூட, ஊரும் கோயிலும் தம் சீரிளமை சிறிதும் குன்ருது, வழக்க ஒழுக் கங்கள் வழுவாது திகழ்ந்து வருவது குறிப்பிடத் தக்கது.

— ''வட ஆர்க்காடு மாவட்டம்''
என்னும் நூலில் **"சோமலெ"**

பண்பாட்டுத் தூதன்

அ. தட்சிணாமூர்த்தி

வரலாற்றுக்கு எட்டாத பல்லாயிரமாண்டுகட்கு முன்பே மனித நாகரிகத் தொட்டிலாக விளங்கியது தமிழ்நாடு. மேற்கு நாடுகளும், கிழக்கு நாடுகளும் தமிழ்நாட்டுப் பொருள்களைப் பேரளவில் வாங்கிச் சென்றன. தமிழ்நாட்டு வணிக மரபினர் 'யாதுமூரே யாவருங் கேளிர்' என்ற கொள்கையை நடைமுறைப் படுத்தினர். திரை கடலோடித் திரவியம் தேடினர். பிறநாடுகட்குப் பொருள்களை மட்டும் சுமந்து செல்லவில்லை; நம் செழிப்பு மிக்க நாகரிகத்தையும் சுமந்து சென்றனர். தாம் கால் ஊன்றிய மண்ணிலெல்லாம் நம் சமயத்தையும், கலையையும், பண்பாட்டையும் காலூன்றச் செய்தனர்; தாம் குடியேறிய நாட்டிலெல்லாம் நம் இனத்தின் நாகரிகத்தைக் குடியேற்றினர். அவ்வந் நாட்டுப் பண்பாட்டோடு நம் ஏற்றமிகு பண்பாடு இணைந்தது. புது உருவம் பெற்றது; புது வாழ்வு நல்கியது; வளஞ்சியத்தார், மணிக்கிராமத்தார், நானா தேசியத் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்னும் வணிகக் குழுக்கள் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் எல்லா உரிமைகளும் பெற்ற குடியரசுகளாக விளங்கின; கோயில் பணிகளில் ஈடுபட்டன; குடிநீர்க் குளங்களையும் பாசன ஏரிகளையும் அமைத்துப் பேணின. பர்மாவிலுள்ள பக்கோ (PEGU) என்ற ஊரில் நானாதேசி வணிகக் குழு ஒன்று திருமால் கோயில் கட்டியது. தமிழ்க் கல்வெட்டொன்று அவ்விடத்தில் உள்ளது. தகு வா பா என்னுமிடத்தில் நாங்கூர்த் தலைவர் ஒருவர் அமைத்த அவனி நாரணம் என்னும் ஏரியை மணிக்கிராமத்தார் கண்காணித்து வந்தனர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஐவர் இம்மரபினர் என்பதும், அறியத்தக்கது. பிற்காலத்தில் தோன்றி அமிழ்தினும் இனிய இறையருட்பாக்கள் கொண்ட நூல்களை இயற்றிய பட்டினத்தடிகளும் வணிக மரபினரே. சைவ வைணவ நெறிகளை மட்டுமின்றிச் சமண பௌத்த நெறிகளைப் பேணியோருள்ளும் குறிப்பிடத்தக்கோர் வருநிதி பிறர்க்கார்த்தும் வணிகக் குடியினரேயாவர். காப்பியங்களில் பெரும்பான்மையின வணிகர்களைக் கதை மாந்தராய்க் கொண்டவை யல்லவா? இக்கட்டுரையில் புகழ்பூத்த சோணாட்டின் வளம் நிறைந்த பட்டினமாம் பூம்புகாரில் தோன்றிய மாசாத்து வாணிகன் மகன் கோவலன் வாழ்வையும், அவன் கலைச்செல்வி மாதவியுடன் நடாத்திய இல்லறத்தின் பயனாகிய அறச்செல்வி மணிமேகலையின் வான்துறவு உரைக்கும் அணி திகழ் காப்பியமாம் மணிமேகலையில் இடம்பெறும் ஆதிரை

கணவன் சாதுவன் வரலாற்றையும் ஒப்பிட்டுக் காண முயல்வோமாக.

இன்றைய தமிழகத்தில் சமயத்துறையிலும், கல்வித்துறையிலும் பெருந்தொண்டாற்றி வரும் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் முன்னோர்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் கடல் வணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டியோராவர். அக்குடிப் பிறந்தவனே, கண்ணகி கேள்வன் கோவலன். கண்ணகியின் கற்பினைப் பாடும் சிலப்பதிகாரத்தில் ஊறித் திளைத்தவர் சாத்தனார். அவர் படைத்த மணிமேகலையின் ஒரு பகுதியாக வரும் 'ஆதிரை பிச்சையிட்ட காதை' மாற்றியமைக்கப்பட்ட சிலப்பதிகாரமாகவே விளங்குகிறது. கோவலன் போலவே சாதுவனும் புகார் நகரத்து வணிகன். இருவருமே கட்டிய மனைவியரை விடுத்து ஒட்டிய கணிகையரோடு உறவு கொண்டோராவர். கண்ணகியும் ஆதிரையும் கொண்டானையல்லால் துணையறியாக் குலமகளிராவர். இரு வணிகருமே கணிகையரிடமிருந்து கழன்று திரும்புகின்றனர். நகரை நீங்குகின்றனர்; இழந்த பெரும்பொருளை ஈட்ட விழைகின்றனர். இவை இருவர் வாழ்விலும் காணத்தகும் ஒற்றுமைக் கூறுகள். ஆனால் சாதுவன் வாழ்வில் சாத்தனார் காட்டும் குறிப்பிடத் தக்க வேறுபாடுதான் அவருடைய நோக்கத்தினைத் தெற்றென விளக்குகின்றது.

குன்றுக் கொள்கைக் கோவலன், மாதவியின் ஈடற்ற கலையின்பால் காதல் கொண்டு விடுதலறியா விருப்பினனாகி வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறக்கின்றான். சாதுவன் பெயர் தெரியாப் பரத்தையிடம் காம நுகர்ச்சியே காரணமாக உறவு கொள்கிறான் எனலாம். மாதவி, பரத்தையர் குலத்தவள் தான் என்றாலும் அவள் பொருட் பெண்டாக வாழ்ந்தாளல்லள். அவள் கோவலனோடு வாழ்ந்த வாழ்க்கை நடிப்பு வாழ்க்கையன்று. தூய இல்லறமே. ஆனால் சாதுவன் உறவு கொண்டவளோ பரத்தையர் குலத்தின் பண்பு மாறாத பிரதிநிதி. பொருளைக் காதலித்துப் பொய்யாக முயங்கினவள். வளமதுவுண்டு வறும்பூத்துறக்கும் வண்டாக விளங்கியவள்.

கோவலன், மாதவியைப் பிறழவுணர்ந்து தானே பிரிந்தான். யாழிசைமேல் வைத்து ஊழ்வினை வந்து உருத்தது என்பார் இளங்கோ வடிகள். காதலன் பிரிந்ததும் கடுந்துயருற்றாள்; வாடி மெலிந்தாள்; தேடிட முயன்றாள்; தெளிவினையூட்டினாள்; இறுதியில் கலைச்செல்வத்தினை மண்ணோடு மண்ணாக்கினாள்; தானும் துறந்து மகளையும் துறவியாக்கினாள். ஆனால் சாதுவன் கணிகையோ பிறர்நலம் காட்டிக் 'காணம் இலி'யெனக் கையுதிர் கொண்டு விலக்கினாள். மாதவியைப் பிரிந்த கோவலன் மனையாட்டியின் மலர்முகம்காணத் துடித்தான்.

" சலம்புணர் கொள்கைச் சலதி யோடாடிக்
குலந்தரு வான்-பொருள் குன்றம் தொலைத்த
இலம்பொடு நாணுத் தரும் " என்று

மனம் விட்டுப் பேசினான். வறுமையுற்ற நிலையில் புகாரில் வாழ அவனுடைய மானவுணர்வு இடந்தரவில்லை. ஆனால் சாதுவனோ பொருளற்ற நிலையில் தன் மனைவியின் முகம் காணக் கூசினான். இழந்த பொருளை ஈட்டினாலன்றி வீடு திரும்ப அவனுடைய மானம் இடம் தரவில்லை.

கோவலன் மனைவியோடும் மாதவத்தாட்டியின் துணையுடனும் காலிற் பிரிந்தான். சாதுவனோ மனைவியின்றி வாணிகர் தம்முடன் கலத்திற் பிரிந்தான். இனிய பயணத்தின் இறுதியில் கொடுமையைச் சந்தித்தவன் கோவலன்; கொடிய பயணத்தின் இறுதியில் இனிமையைச் சந்தித்தவன் சாதுவன். கோவலன் திட்டமிட்டபடியே செல்லுமிடம் சேர்ந்தவன்; நாகரிக மாந்தரின் சிறப்பு விருந்தினனானவன்; ஆனால் சாதுவனோ சேரநினைத்த இடம் சேர வழியின்றி, கப்பல் கவிழக் கடல் அலையால் மொத்துண்டு நாகரிகமற்ற நாகர் தம் இருப்பிடம் சேர்ந்தவன். மதுரை மாநகரில் அரண்மனைப் பொற்கொல்லனை அடையாளம் கண்டு தானே பேசினான் கோவலன். ஆனால் சாதுவனோ மயக்கமுற்ற நிலையில் நாகர்களால் காணப்படுகிறான். பொற்கொல்லன் வஞ்சக நெஞ்சினன்; நாகர்களோ கள்ளமில்லாப் பிள்ளை மனத்தினர். பொற்கொல்லன் கோவலனைத் தன் மன்னனிடம் அழைத்துச் செல்ல விரும்பவில்லை. நாகர்களோ சாதுவனைத் தம் குருமகனிடம் அழைத்துச் சென்றனர். பாண்டியன் அவையிலே பலகலையுணர்ந்த பண்டிதர் உண்டு; அவனிபோற்றும் அமைச்சருண்டு; அத்தாணி மண்டபமுண்டு; ஆயினும் கோவலனைக் கூவியழைத்துக் குற்றத்தை உசாவித் தண்டனை தரவில்லை. நாகர் குருமகன் கள்ளடு குழிசியும் கழிமுடை நாற்றமும் வெள்ளென்புணங்கலும் விரவிய இருக்கையில் எண்குதன் பிணவோடிருந்த காட்சிபோலத் தன் பெண்டுடன்

இருந்தான். ஆயினும் சாதுவனை வர வேற்றான்; விருந்தளிக்க முன் வந்தான்; உரை யாடினான்; உள்ளம் திருந்தினான். கோவலன் நாகரிகச் சமுதாயத்தின் நச்சுக்கு இரை யானான்; சாதுவனோ நக்க சாரணரின் நச்சு தலுக்குப் பாத்திரமானான். தாய்மொழியறிவு கோவலன் உயிரைக் காப்பாற்றவில்லை. பிற மொழியறிவு சாதுவனைக் காப்பாற்றி வாழ் வளித்தது.

கோவலன் வணிகம் செய்யப்போய்த் திருட னென்று பெயர் சூட்டப்பெற்று உயிரையிழந் தான்; சாதுவனோ வணிகனாகச் சென்று பண் பாட்டுத் தூதனாக உருவானான். கோவலன் குற்றம் சாட்டப்பட்டான்; சாதுவன் குறையை எடுத்துக்காட்டினான். நாகரிக உலகம் நகைக்கு ஆசைப்பட்டுக் கோவலனைக் கொன்றது. அந் நாகரிக உலகம் சாதுவன் முயன்று ஈட்ட விரும் பிய பெரும் பொருளை மூலதனமின்றியே அளித்து வாழ வைத்தது. என்னே நாகரிகம்! கோவலன் புகுந்த கோநகர் மதுரை அழிந்தது. சாதுவன் புகுந்த சாரணர் உலகம் போதி மாதவன் பொன்னுரை கேட்டுப் புதுவாழ்வு பெற்றுப் பொலிவுற்றது. கோவலன் நாகரிகப் போர்வையிருந்த விலங்குக்கு இரை யானான்; சாதுவனோ விலங்காக இருந்த சாரணர்க்கு மனித இயல்பூட்டி வாழ்வித்துத் தானும் வாழ்வு பெற்றான். பேசத் தெரிந்த கோவலன், பொற்கொல்லன் குற்றம் சாட்டிய போது வாய்மூடி மௌனியானான்; காணம் இலியெனக் கணிகை கையுதிர் கொண்டபோது சாதுவன் மௌனியானான்; ஆனால் நாகர் உலகில் நாவன்மை காட்டி நலம் பெற்றான். கோலவன் பேசியிருந்தால் நலம் விளைந்திருக் கும்; சாதுவன் பேசாதிருந்திருந்தால் கேடு விளைந்திருக்கும்.

கோவலன் கொலையுண்ட உண்மைச் செய் தியை மோர்விலைப் பெண்டிர் வழியே கண்ணகி யறிந்தாள். சாதுவன் இறந்தானென்ற அனு மானச் செய்தியை ஆடவராகிய வணிகர் வழியே ஆதிரை அறிந்தாள். கண்ணகி ஊராரைக் கூவி நீதி கேட்டாள்! ஆதிரையோ ஊராரைக் கூவித் தீக் கேட்டாள். கண்ணகி தன் கேள்வனின் உடலைத் தழுவத் துடித்தாள்; மாதரி அதற்கு வழியின்றித் தீயைத் தழுவத் துடித்தாள்; கண்ணகி தீக்கடவுளைக் கூவி மதுரையை அழிக்கக் கட்டளையிட்டாள். ஆதிரையோ தீக்கடவுளை அழைத்துத் தன்னை அழிக்குமாறு மன்றாடினாள். கண்ணகியின் கட்டளை நிறைவேறிற்று; ஆதிரையின் வேண்டு கோள் புறக்கணிக்கப்பட்டது. கண்ணகிக்குக் காய்கதிர்ச் செல்வன், அவள் கணவன் கள்வனல்லன் என்று ஆறுதல் கூறினான். ஆதிரைக்கு அசரீரி, அவள் கணவன் இறக்க வில்லையென்று கூறி ஆறுதல் நல்கிற்று; கண்ணகி இறுதியாகத் தான் கணவனைத் தேவ வடிவில் கூடிடவும், ஆதிரை தன் கேள்வனை மானிட வடிவிலே கூடிக் களித்தாள். மண்ணக மாதர்க்கு அணியான கண்ணகி விண்ணக மாதர்க்கு விருந்தானாள்; ஆனால் மாதரியோ பாரகமடங்கலும் பசிப்பிணியறுக்கும் மருந் தானாள்! கண்ணகி தீமையை அழிக்கப் பிறந் தவள்; ஆதிரை நன்மையை ஆக்கப் பிறந்தவள்.

இனி, சாதுவன் பாத்திரப் படைப்பின் வாயிலாகச் சாத்தனார் உணர்த்தும் உண்மை யினைச் சிறிதே காண்போம். ''நம்பிக்கு இளையளோர் நங்கையைக் கொடுத்து வெங் களும் ஊனும் வேண்டுவ கொடும்'' என்ற நாகர் குருமகனின் சொற்கள் சாதுவன் காதில் நாராசமாகப் பாய்ந்தன. அறத்தையே எள்ளி நகையாடும் பரத்தையின் கையால் உணவுண்டு பலகாலம் வாழ்ந்த சாதுவன் ''வெவ்வுரை கேட்டேன், வேண்டேன்'' என்று கூறுவதைக் கேட்டு நாம் வியப்புறுகின்றோம். கணிகை யால் விரட்டப்பட்டுக் கடலலையால் தூக்குண்டு அல்லலுற்றதால் விளைந்த ஞானம் போலும்! ''துன்பம் ஒரு நல்லாசான்'' என்பது உண்மை தான் என்று உணர்கின்றோம். ''மயக்கும் கள் ளும், மண்ணுயிர் கோறலும் கயக்கறு மாக்கள் கடிந்தனர்'' என்று தன் மறுப்புக்குக் காரணம் காட்டுகிறான். ஆனால் ''பெண்டிரும் உண்டி யும் இல்லெனில் மாந்தர்க்கு உண்டோ ஞாலத்து உறுபயன்?'' என்று வியப்புடன் கேட்கிறான் குருமகன். இவ்வுடல் வாழ்வைத் தவிர ஆன்மீக உலகம்என்ற ஒன்று உண்டென்று அவனுக்கு அதுவரை யாருமே அறிமுகம் செய்ததில்லையே. மனிதனுக்கும் விலங்குக்கும் இடைப்பட்ட நிலையிலிருக்கும் நாகர்க்கும் புத்தர் பெருமானின் பொன்னுரைகளைப் போதிக்கும் பொறுப்பினைத் தான் சாதுவனி டம் ஒப்படைத்துள்ளார் சாத்தனார்.

உடல்வேறு, உயிர்வேறு என்ற உண்மையும், உயிர் தான் செய்த வினைக்கு ஏற்ப மறு பிறப்பெடுக்கும் விந்தையையும் தக்க எடுத் துக் காட்டுகளோடு சொல்லவே நாகர் தலை வன் தெளிவடைகிறான். ஆனால் கள்ளையும் ஊனையும் உண்டு பழகிய அவன் ''கள்ளும் ஊனும் கைவிடின் இவ்வுடம்பு தள்ளாத

இறைவன் இறைவியர் - பெயர்கள்

திருவண்ணுமலை ஆண்டார், திருவண்ணுமலை மகாதேவர், திருவண்ணுமலை ஆழ்வார், திருவண்ணுமலை உடையார், அண்ணு நாட்டு உடையார் என்று சுவாமியையும், உண்ணுமுலை நாச்சியார், திருக்காமக் கோட்டமுடைய தம்பிராட்டியார், உலகுடைய பெருமாள் நம்பிராட்டியார் என்று அம்பாளையும் கல்வெட்டுகள் போற்றிப் புகழ் பாடுகின்றன. அம்மட்டோ! அபிநயபுசங்கராயர், பரிமள வசந்தராயர், புழுகணி இறைவர் என்று சுவாமியை இலக்கியங்கள் ஏத்துகின்றன.

லாற்றேன்'' என்று தன் இயலாமையை எடுத்துக் கூறி ''யாம் பின்பற்றத் தக்க வகையில் அறம் கூறுக'' என்று வேண்டுகின்ருன். திருந்துவதற்கு ஆசைப் பட்டால் ஈடேற வழியுண்டல்லவா? இதனையுணர்ந்த சாதுவன் ''இனிமேல் உன்னை வந்தடையும் மாந்தரைக் கொல்லாதே: அருள் காட்டு; தாமாக இறந்த விலங்கிறைச்சியை உண்ணலாம். நீயே கொன்று தின்பதனைத் தவிர்க்க'' என்று கூறுகின்ருன். குருமகன் மகிழ்கிருன். ''ஈங்கு எமக்காகும் நல்லறம் உறைத்தனை; ஆங்குமக்கு ஆகும் அரும்பொருள் கொள்க'' என்று கூறிப் பெரும் பொருளை அளிக்கின்ருன்.

புத்தர் பெருமான் உலகம் வாழப் பிறந்த புனிதர்: ஊனையும் கள்ளையும் உண்டு கடவுள் பெயரால் உயிர்களைக் கொல்லும் வேள்வியைக் கண்டித்தவர். மக்கட்குப் புரியாத மொழியில் சமயத் தத்துவங்களை எழுதி வைத்துக் கொண்டு ஏனையோர் காணவும் கூடாது என்று தடைவிதித்த எதிரி. மக்கள் மொழியிலே அறம் உரைக்க வேண்டுமென்று வற்புறுத்தியவர். நாகர் போன்ற திருந்தாத மக்களுக்கும் அவர் இடந்தேடிச் சென்று அறிவு வழங்கிடவேண்டுமென்று கூறிய மகான்; சமுதாயத்தின் தாழ்ந்த படிக்கட்டுக்களில் கிடக்கும் கடையர்கட்கும் கடைத்தேற வழி காட்ட எண்ணிய கண்ணியர். இந்தப் பேருண்மையினைத் தான் சாதுவன் வழியே உணர்த்த விரும்பினுர் சாத்தனுர். பாரெல்லாம் பரவிப் பண்பாடு வளர்க்கும் வணிகர் குலம் வாழ்க என வாழ்த்துவோம்!

பக்கோ என்னும் நகர், பர்மிய நாட்டில் இரங்கூனுக்கு வடக்கே உள்ள முக்கியமான இரயில் சந்திப்பு. இங்கிருந்து கிழக்கே மோல்மீனுக்கும் வடக்கே மாந்தளைக்கும் இரயில் பாதைகள் பிரிகின்றன.

தொண்டர்சீர் பரவுவார்

சைவநாயன்மார்கள் அறுபத்து மூவரில் ஒரு வர் கூற்றுவநாயனுர். இவர் பிற்காலச் சோழர்களுக்குப் பிரதிநிதியாயிருந்து, தஞ்சை மாவட்டத்தில் திருக்களந்தை என்ற ஊரில் சிற்றரசராகக் கடமையாற்றினுர். அந்தக் காலத்தில் சோழர்கள் பலம் குன்றி வந்ததால், ராஜப் பிரதிநிதிகளாயிருந்தவர்கள் அதிகார பலத்தை வளர்த்துக் கொண்டார்கள். கூற்று வரும் பல சிற்றரசர்களை வென்று பல நாடு களுக்கதிபதியானுர். ஆனுல், அதிகாரமும் மற் றும் படைபலமும் இருந்தபோதிலும் முடி மன்னராக முடியவில்லை. அந்தக் காலத்தில் அரசர்கள் முடி சூட்டிக் கொள்ள, அந்த வைபவத்தை நடத்தி வைப்பவர்கள் சிதம் பரத்திலுள்ள தில்லை வாழந்தணர்கள்தான். கூற்றுவரும் தமது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளத் தில்லைவாழந்தணர்களிடம் சென்று முடி சூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண் டார்.

தில்லைவாழந்தணர்கள் சில கட்டுப்பாடு களையும் மரபுகளையும் கைக்கொண்டவர்கள். கூற்றுவருடைய வேண்டுகோளுக்கு அவர்கள், ''நாம் சோழ மன்னர்களுக்கன்றி மற்றவர் களுக்கு முடி சூட்ட மாட்டோம்'' என்று சொல்லி மறுத்து விட்டனர். கூற்றுவரோ படைபலமும் அதிகாரமும் உள்ளவர். ஆகை யால் அவர் கோபம் கொண்டால் என்ன வாகுமோ என்று அஞ்சிய தில்லைவாழந்த ணர்கள், தம்மில் ஒரேயொரு குடும்பத்தை மாத்திரம் சிதம்பரத்தில் நிறுத்தி, ராஜ முடியைக் காத்துக் கொள்ளச் சொல்லி விட்டு மற்றவர்கள் யாவரும் சேர நாட்டுக்கு ஓடிவிட்டார்களாம். கூற்றுவர் என்ன செய்வ தென்று அறியாது கவலை கொண்டார். இறை வன் வழிபாட்டிலும் சிவத் தொண்டிலும் நீங் காத பற்றுக் கொண்டவர் கூற்றுவர். ஆகை யால், சிதம்பரத்து நடராஜ மூர்த்தியையே தியானித்துத் தமது குறையை நினைந்து வேண்டி வந்தார். ஒரு நாள் தில்லை நட ராஜரே தமது பக்தரின் வேண்டுகோளுக் கிரங்கி, தமது திருவடி யாகிய முடியைச் சூட்டி மன்னர் பதவி யளித்தார் என்பது பெரிய புராணத்திலுள்ள கதை.

இந்தக் கூற்றுவநாயனுர் வாழ்ந்த இடம் திருக்களந்தை என்ற க்ஷேத்திரம் என்று சொல் வார்கள். திருத்துறைப்பூண்டிக்குச் சமீபத் தில் களப்பால் என்ற பெயரில் வழங்குகிறது. கூற்றுவநாயனுர் ஒரு களப்பிர வம்சத்தவர் என்ற காரணத்தால், களப்பால் என்ற ஊர்ப் பெயர் ஏற்பட்டது என்று சில ஆராய்ச்சி

சோ. சிவபாதசுந்தரம்

யாளர் சொல்வார்கள். சிவனடியார் அறுபத்து மூவரையும் அவர்கள் வாழ்ந்த ஊர்களையும் தேடி, ''சேக்கிழார் அடிச்சுவட்டில்'' என்ற நூலுக்குத் தகவல் சேகரிக்க, சிலஆண்டுகளுக்கு முன்பு, நானும் ஒரு நண்பரும் சென்றபோது இந்தக் களப்பாலேயும் தேடிப்போனேம். களப்பாலில் ஒரு சிறு சிவன் கோவில் இருக்கிறது. கோயிலின் சந்நிதிக்குப் பக்கத்தில் வசிக்கும் குருக்கள் எங்களை இன்முகத்தோடு வரவேற்று உபசரித்தார். கூற்றுவநாயனுர் வசித்த இடம் இந்தக் களப்பால்தான் என்பதை நிரூபிக்க, பக்கங்களிலே கூற்றுவன் குளம், கூற்றுவன் திடல் என்ற கிராமங்கள் இருப்பதாகச் சொன்னுர் அவர். இங்குள்ள கோயிலின் பெயர் ஆதித்யேஸ்வரம். தமிழில் அழகிய நாதர் என்று சொல்கிருர். இங்கே ஒரு பெரிய நடராஜ விக்கிரகம் இருக்கிறது.

சுவாமிதரிசனம் செய்து கொண்டு கோயிற் குருக்களிடமும் விடைபெற்றுப் புறப்படும், போது அவர், ''இவ்வளவு தூரம் வந்தீர்கள். இங்கு ஒரு பெரியவர் இருக்கிருர். அவரையும் நீங்கள் தரிசித்துவிட்டுப் போவது நல்லது'' என்று சொன்னுர். சரி என்று சொன்னவுடன் குருக்களே எங்களை அழைத்துக் கொண்டு சென்ருர். சிறிது தூரத்தில் ஒரு பெரிய வீட்டில் தன்னந்தனியாக வசிக்கிருர் அந்தப் பெரியவர். எங்கள் வரவை அறிவித்தவுடன் அவர்உள்ளேயிருந்து வந்தார். உருவத்திலும் பண்பாட்டிலும் பெரியவராகவே காணப்பட்டார். எண்பத்தைந்து வயதிருக்கும். தபஸ்வாமி என்று பெயர். ரமணரிடம் தீக்ஷைபெற்றுத் துறவியாகவே வாழ்கிருர். காஷாயம் கிடையாது; ஒரு நாலு முழவேஷ்டி, துண்டு, அவ்வளவுதான். முகத்தில் ஓர் ஒளி. பேச்சில் அடக்கம். ''விருந்தாளிகளாக வந்திருக்கும் உங்களுக்கு நான் என்ன கொடுக்க?'' என்று உபசரித்தார். ''முதலிலே குருக்களே எல்லாம் உபசரித்து விட்டார், அது போதும்'' என்ருேம். ''அது அவர் பங்கு. நான் ஏதாவது செய்ய வேண்டாமா?'' என்று கேட்டார். ஒன்றும் அவசியமில்லை. தாங்கள் பரிவுடன் கேட்டதே போதும் என்று சொல்லி விட்டுச் சிறிது நேரம் உட்கார்ந்து பேசி விட்டுப் புறப்பட எழுந்தோம்.

அந்தப் பெரியவரைத் தரிசித்தது எனக்குப் பெருமிதமாயிருந்தது. உள்ளத்தில் ஒருவித மகிழ்ச்சி தந்தது. போய் வருகிருேம் என்று விடை பெற்ற போது, பெரியவர் பாதங்களைத் தொட்டு வணங்கக் குனிந்தேன். அந்தப் பெரியவர் சட்டென்று என் தோள்களைப் பிடித்து நிமிர்த்திவிட்டு, தாமே குனிந்து என் பாதங்களைத் தொட்டு எழுந்தார்! இதை என்னுல் பொறுக்க முடியவில்லை. உணர்விழந்தேன். அந்தப் பெரியவர் அருள்நிறைந்த பார்வையுடன் சொன்னுர்: ''தங்களைச் சிவதொண்டில் ஈடுபட்டு வந்திருக்கும் சிவனடியாராக நான் காண்கிறேன். சிவனடியாரை வணங்குவதுதான் மரபு!'' என் கண்களில் நீர் சுரந்தது. என்னுடன் வந்த நண்பரும், கூட நின்ற குருக்களும் பெருமிதத்தால் தம் வசமிழந்தனர். அந்த மகானுக்கு மானசீகமாக எனது வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு, நன்றியறிதலோடு விடைபெற்ருேம். ''உங்கள் முயற்சி வெற்றி தரும்'' என்று அந்த மகான் வாழ்த்தி யனுப்பினுர்.

திரும்பி வரும்போது குருக்கள் சொன்னுர்: ''இந்தப் பெரியவர் பல வருடங்களாக இங்கே இருக்கிருர். தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகப் புகழ்பெற்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். இங்கே அவருடைய தீக்ஷா நாமம் தபஸ்வாமி. அருள் நிறைந்த மகான்''. இந்த இருபதாம் நூற்ருண்டிலும் அறுபத்து மூவர்கள் வாழ்ந்து கொண்டுதானிருக்கிருர்கள். சிவனடியார் மரபு காக்கப்படுகிறது. ''தொண்டர் சீர் பரவு வார்'' பலர் நம்மிடையே இருக்கிருர்கள் என்ற நம்பிக்கை நிறைவோடு திரும்பினேன். ★



விபூதி

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால
[வாயான் றிருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவாலவாயான்
[றிருநீறே.

—திருஞானசம்பந்தர்

விபூதியென்பது மேலான ஐஸ்வர்யமாம். அதாவது சிவஸ்வரூபமான பேரானந்த நிலையாம். இது பசுவாகிய ஜீவர்களின் மலமான, அஞ்ஞான கர்ம நாசத்திற் சித்திப்ப தாம். கோமய பிண்டங்கள் ஜீவர்களாம். கோமயமென்பது ஜீவர்களின் மலமாம். இதை சிவஞான அக்னியில் இடுவது சோஹம்பாவனை யாகிய யோக நிஷ்டையாம். இந்நிஷ்டையால் ஜீவனிடத்துள்ள உபாதிகள் நீங்கிப் பரமசிவத் தோடுஇரண்டறக் கலத்தலாகிய பரமைஸ்வர்ய வடிவம் விபூதியாகிய நித்தியானந்த நிலை உண்டாகிறது. அன்றும் மாயாகாரிய பிரபஞ்ச வடிவ நாம ரூபங்களை அகண்டாகார விருத்தி வடிவத் தீயால் எரித்து மிஞ்சிய சுத்த சிவ வடிவ ஸ்வரூபமே விபூதியாம்.

சகல பிரபஞ்சங்களும் முடிவில் நீறும். சிவம் ஒன்று மட்டில் நீறுகாததாய் மிஞ்சுகின்றது. இங்ஙனம் மிஞ்சியதாயும், சுத்தமாயும், எல்லாவற்றின் முடிவான வீர்யமாயும்: ஸ்வயம் பிரகாசமாயும் சகல ஜகத்துக்கும், அபின்ன நிமித்தோபாதன விவர்த்த, காரணமாயுள்ள பரமசிவத்தை குறிப்பாயுணர்த்துவதே திருநீறுகும்.

திருநீறு நான்கு வகைப்படும்

(1) கல்பம், வியாதியில்லாத கன்றுடன் கூடிய பசுவின் சாணம் பூமியில் விழாமல் தாமரை இலையில் வாங்கி உண்டையாக்கி பஞ்ச பிர்ம்ம, மந்திரங்களால் சிவாக்னியில் எரித்து எடுப்பது கல்பம் எனவும்;

(2) அணுகல்பம், காடுகளில் கிடைக்கும் பசும் சாணங்களைக் கொண்டு சிவாக்னியில் தகித்து தயாரிப்பது அணுகல்பம் எனவும்;

(3) உபகல்பம், மாட்டுத் தொழுவங்களிலும், மாடுகள் இருக்குமிடங்களிலுமிருந்து எடுத்த சாணத்தைக் காட்டுத் தீயில் எரித்து அதையே மறுபடியும் சிவாக்னியில் எரித்து எடுப்பது உபகல்பம் எனவும்;

(4) அகல்பம், மந்திரமில்லாமல் எல்லோராலும் சேகரித்த சாணத்தைக் கொண்டு சுள்ளிகளால் எரிக்கப்பட்டு எடுப்பது அகல்பம் எனவும் நான்கு வகைப்படும்.

ஸ்லோகங்களின் சாரம்

(1) விபூதியில்லாத நெற்றியும், சிவாலயமில்லாத கிராமமும், சிவனை அர்ச்சிக்காத ஜன்மாவும் சிவனைக் கூறாத வித்தையும் பாழ்பாழே.

(2) மோதிர விரலால் அகாரத்தையும், மத்ய விரலால் உகாரத்தையும், ஆள்காட்டி விரலால் மகாரத்தையும், இந்தப்படி ரேகையும், அதன் அதன் தேவதையாக பிர்ம்மா, விஷ்ணு, ருத்ரன் இவர்களையும், இவர்களின் தொழிலாகிய உற்பத்தி, காத்தல், அழித்தல் என வெளிப்படுத்துவதே த்ரிபுண்ட்ரதாரணம். அதுமுறையே, 32, 16, 8 இடங்களில் தரிப்

சிவஸ்ரீ பட்டம்
கி.இராமலிங்க சிவாசாரியார்

பது உத்தம, மத்திம, அதம பக்ஷமாகும் என ஸ்காந்தம் கூறுகிறது.

(3) நெற்றி 1 கழுத்து 1 கைகள் 2 மார்பு 1 தொப்புள் 1 குறி 1 குதல் 1 ப்ருஷ்டங்கள் 2 பாதங்கள் 2 முழுங்கால்கள் 2 விலாப் பக்கங் கள் 2 ஆக 16 இடங்களில் தரிப்பதால் அந்த அந்தப்பாவங்கள் போகின்றன எனவும், இதுவே அனுஷ்டானத்திலும் இருந்து வருகிறது.

(4) விபூதியை தூளிதமாக அணிபவனே ருத்ரன், என்பதில் சந்தேகமில்லை. எனவும், அவனின் ஒவ்வொரு ரோம கால்களும் லிங்க மாக அந்த சரீரமே லிங்காகாரமாகின்றது என சிவதர்மம் கூறுகிறது.

(5) விபூதி அணிவதால் ஐஸ்வர்யமும், பரி சுத்தமாக்கியும், பாவங்களிலிருந்து விலக்கியும் சர்வோபத்ரவங்களை நசித்தும், சௌபாக் கியத்தை கொடுத்தும் சம்பத்துக்களை அளித் தும் பூத ப்ரேத பிசாச ராக்ஷஸ கண தோஷங் களின்றும் காப்பாற்றியும் மோக்ஷத்தை அளிப் பதும் விபூதியை எப்போதும் அணிவதால் உண் டாகிறது.

விபூதியை வைக்கும் பாத்திரத்தில் விபூதி யுடன் தாழம்பூ, சம்பகம், பாடலி, துளசி, மல்லிகை, கதிர்பச்சை இவைகளைக் கலந்து (இட்டு) பரிமள விபூதியாக அணிவதால் சகல சௌகர்யங்களும் உண்டாகும் என சிவ சம்ஹிதை கூறுகிறது.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பக்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே.

காண வினியது நீறு கவினை தருவதுநீறு
பேணி யணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்
[பது நீறு
மாணந்தகைவது நீறு மதியை தருவது நீறு
சேணம் தருவது நீறு திருவாலவாயான்
[திருநீறே.

இங்ஙனம் சுத்த சைதன்ய ஸ்வரூபமாய் எங்கும் இடைவிடா நிறைவுடைய சர்வதயா பரனை பரமசிவமே விபூதியில், அபேதமாய் பாவிக்கப்பட்டிருப்பதால் இதுவே, பஞ்ச பூதங் களும், தசேந்திரியங்களும் பஞ்ச விஷயங்களும் சர்வ ஜீவர்களுமாக இருக்கின்றது. பரமசிவ மாம் விபூதியைத் தவிர அணுவும் வேறுக வில்லையெனப் பாவித்து, அப்பரமசிவம் அகண்ட மாதலால் காற்கட்டை விரல் முதற் சிரசு வரை, சரீரத்தில் வியாபித்திருப்பதாகப் பாவித்து, உத்தூளஞ் செய்து, அகண்ட பரம சிவத்தில் முக்குணம், மும்மூர்த்தி, முச்சக்தி, மூன்றக்னி, முத்தொழில் முதல் திரிபுடி வடிவ மாய்த் தோன்றி விளங்குவதால் ஆதேயமென வும், முற்கூறிய பரமசிவமே ஆதாரம் எனவும், முடிவில் எல்லாம் பரமசிவமாம் அத்தகைய சிவ வடிவத் திரு விபூதியை உத்தூளனத்தின் பேரில் த்ரிபுண்ட்ரமாக அணியவேண்டும்.

கோயில் பெரிது; கோபுரம் பெரிது; வரலாறும் தத்துவமும் பெரியன; எத்தனையோ முறைகண்டு வணங்கி வழிபடும் பேற்றை அடைந்திருக்கிறேன். அழகும், கலையும், பொலிவும் எல்லாம் நம்மை அவன் திறம் அறியச் செய்வதற்கே அமைவன. பெரும் சிறப்பும் பேரழகும் மிக்க இவ்வாலயம் எல்லாரையும் ஈர்த்துப் பயன் பெற அருள்கின்றது. இதைக் காத்துப் புரப்பதே கலைக்கும், சமயத்திற்கும் தமிழர்க்கும் ஆற்றும் நற்பணியாகும். இப்பணியில் அக்கறை காட்டும் அனைவரையும் வாழ்த்தி வணங்குவேன் எப்போதும்.

கம்பன் அடிப்பொடி
சா. கணேசன்
14-8-1968

உருத்திராக்கம்

கே. எம். வேங்கடராமையா

சைவர்கட்குரிய சிவ சின்னங்கள் மூன்றனுள் ஒன்று உருத்திராக்கம்; மற்றவை திருநீறும் திருவைந்தெழுத்துமாம்.

பெயர்க்காரணம்: ஒருகால் முப்புரத்தவரான் அல்லலுற்ற மாலயன் முதலிய தேவர்கள் யாவரும், சிவபெருமானை நண்ணி முறையிட்டனர். 'அஞ்சேல் அஞ்சேல்' என்றருளிச் சிவபெருமான், கண் மூன்றினையும் அலர்த்தித்தான் அமர்ந்தருளினார். தேவர்யாண்டு ஆயிரம் கழிந்தது. நம்பனாருடைய கண்களினின்று நீர் உதித்தது. அந்நீரில் கண்டிமரம் தோன்றியது. சூரியனாகிய கண்ணினின்று கபிலை நிறமுடைய கண்டியும், மதிக்கண்ணில் வெண்ணிறமுடைய கண்டியும், நெருப்புக் கண்ணினின்று கரிய உருக் கண்டியும் தோன்றின. இங்ஙனம் ''உருத்திரன் கண்ணீரில் உதித்தலினால் உருத்திராக்கம்''என்று பெயர் உண்டாயிற்று.

வகைகள்: ஒரு முகம் முதல் பதின்மூன்று முகம் வரையில் உருத்திராக்கங்கள் உண்டு.

ஏகமுக உருத்திராக்கத்துக்கு இறைவன் பரமசிவன்; இதனைப் பூணின் பிரமவதையானாய பாவம் நீங்கும்.

இரண்டு முக முடையதற்கு இறை மணிகண்டன்; இதனைத் தரிக்கின் கொலைப்பாவம் போம்.

மூன்று மூகக் கண்டிக்கு அனல் மூன்று *தெய்வம்; இதனை அணியின் வினை தீரும் (*சுசி, பவமானன், பாவகன் என்பர்).

நான்கு முகக்கண்டிக்கு அதிதெய்வம் நான்முகன்; இதனைத் தாங்கின் நரர்வதைப் பாவம் தீரும்.

ஐம் முகக் கண்டிக்கு இறை காலாங்கி; இதனைத் தரிக்கின் உணவான் ஆய தீங்கு தீரும்.

ஆறுமுகக் கண்டிக்கு ஆறுமுகனே அதிபன்; இதனைப் பூணின் பிரமவதை போகும்.

ஏழுமுகக் கண்டிக்கு ஈசன் நாகேசன்; இதனைத் தரிக்கின் களவானாய குற்றம் நீங்கும்.

எட்டுமுகக் கண்டிக்கு ஈசன் விநாயகன்; இதனைப் பூணின் பொற்காசு திருடிய பாவம் போம்.

ஒன்பது முகக் கண்டிக்குத் தெய்வம் வயிரவன்; இதனைத் தரிக்கின் கொலைப்பாவங்கள் யாவும் போகும்.

பத்துமுகக் கண்டிக்குப் பதி அரி; இதனை அணியின் பேய் அஞ்சி நீங்கும்.

ஏகாதச முகக் கண்டிக்கு இறை ஏகாதச உருத்திரர்; இதனைப் பூண்டவர்க்கு விக்கினங்கள் நீங்கும்.

பன்னிருமுகக் கண்டிக்குத் தேவர் ஆதித்தர்; காதில் கோத்தணிவார்க்கு ஊறுகள் போம்; மனோபீஷ்டங்கள் நிறைவேறும்.

பதின் மூன்று முகக் கண்டிக்குத் தெய்வம் பரமசிவன்; இதனைச் சென்னியில் தரிக்கின் புத்தி முத்தி யுண்டு.

ருத்ராக்ஷ ஜாபாலோப நிஷத்தில் 14 முக ருத்ராக்ஷம் பற்றியும் சொல்லியுள்ளது; பதினான்கு முக ருத்ராக்ஷமானது ருத்ர நேத்திரத்தினின்று உண்டானது; இதைத் தரித்தால் எல்லா வியாதிகளும் போய் எப்பொழுதும்

ஆரோக்யம் உண்டாம்; அச் சுலோகம் வருமாறு:—

''சதுர் தசமுகம் சாக்ஷ ருத்ர நேத்ர ஸமுத்
பவம்!

ஸ்ரவ வியாதிஹரம் சைவ ஸர்வதாரோக்ய
மாப்னுயாத்||

மந்திரமும் எண்ணும் : ஈசான மந்திரத்தால் சிகையில் நாற்பதும், சிரசில் ஆறும் தரிக்க; தற்புருட மந்திரத்தால் செவியொன்றுக்கு ஆறுவீதம் தரிக்க; கண்டத்தில் அகோர மந்திரத்தால் 32 தரிக்க; உரத்தில் 49 அணிக; தோள்களில் 16-ம் மதரத்து 12ம் அணிக; பிரசாத மந்திரத்தால் முன்கைக்கு எட்டு அணிக; மார்பில் மாலையாக 108 மணிகளை அணிந்திடுக; இது செய்வார் கருவூட் புகார்.

உண்டி நியமம் : இங்ஙனம் கண்டி பூண், போர் உணவில் நியமம் உடையராதலும் இன்றியமையாதது; ஊன் மதுவை ஒழித்தலும் வேண்டும்.

அக்கமணி அளவு : பெரும்பாலும் இந்நாளில் பல்லோரும் மிகச் சிறிய அளவுள்ள மணிகளையே விரும்பிப் பூணுதல் காண்டும். எனினும் **"உருத்திராக்க விசிட்டம்''** என்னும் நூலில் எந்த அளவுடைய மணி சிறப்புடையது என்று கூறப் பெற்றுள்ளது. நெல்லிக்கனியளவுள்ள மணி உத்தமம்; இலந்தைக் கனியளவினது மத்திமம்; கடலையளவுடையது அதமம்; இதனைப் பின்வரும் வெண்பா (47) பகரும்:—

உத்தமமே ஆமலகத் தின்கனிக்கொப்
பானகண்டி;
மத்திமமா கும்மிலந்தை* வன்கனிக்கொப்
(பு);—இத்தலத்துள்
நீசஞ் சணவித் திணை
யென்ன வேறினைக;
பாசவிதம் பாற்ற நினைப் பார்.

*''பதரீபல மாத்ரம்து மத்யமம் ப்ரோச்
யதே புதை:!
அதமம் சணமாத்ரம் ஸ்யாத் ப்ரகரியைஷா
மயோச்யதே!!

என்பது ருத்ராக்ஷ ஜாபாலோப நிஷத்.

செபமாலைக்குரியமணி: இரண்டு முகமுடையதும் மூன்று முக முடையதும் செப மாலைக்கு உரியதன்று; பத்து முகமும் பதின்மூன்று முகமும் பழுதுடையது; மற்றவை உத்தமம். இதனைக் கூறுவது பின்வரும் (50 ஆம்) பாடல்:—

இரண்டுமுகக் கண்டிசெப மாலைக் கிசையாது
இரண்டுடன் ஒன்றும் இசையாது—இரண்டுட
னே
பத்துமுக மும்பதின் மூன்றும் பழுது; மற்ற
னைத்தும்
உத்தம மாமென் றுணர்.

செபத்துக்குரிய விரல் : அங்குஷ்டத்தினல் மோக்ஷமும், தர்ச்சனியால் சத்துருநாசமும், மத்திமையால் பொருட்பேறும், அனமிகையால் சாந்தியும், கனிஷ்டையால் இரக்ஷணையும் ஆம்.

செபிக்கும் ஒலி : செபிக்குங்கால் மானதம் மந்தம் ஒலி என மூன்று விதமுண்டு. மானதமாக உச்சரிப்பது உத்தமம்; மானதம் முத்திக்கு ஏது; மந்தம் புத்தி சித்திக்கும்; இழிதொழிலரே ஒலித்து உச்சரிப்பர்.

செபம் செயுங்கால் நியமம் : மடிதுயில் வாதம் விடுக; உடல் உறுப்புக்களைத் தொடற்க; சோம்பல் முரித்தலும் கடுஞ்சொல் கூறுதலும் தவிர்க; இடுப்பில் அணியும் ஆடையை தலையில் அணியற்க; இருட்டில் இருத்தலும் நீக்குக; ஒட்டகம் ஆடு நாய் எருமை பன்றி ஆதியன காணற்க; மந்திரமல்லாது பிறிதோர் சொல் கூறற்க.

1008 செபித்தல் உத்தமம் : அதிற்பாதி மத்திமம்; 108 செபித்தல் அதமம்.

வலக்கரத்தில் கொண்ட ஜபமாலையை வத்திரத்தால் மறைத்துக் கொள்க; தனது குருவும் அதனைக் காண்டல் கூடாது.

ஜெபிக்குங்கால், மாலை கைதவறிக் கீழே வீழின், ஜபமாலையைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, நன்னீரிலாட்டி, 108 முறை **காயத்திரியை** எண்ணுக; ஜபமாலை அறுந்து வீழின், குறைவற முன்போற்கோவையாக்கி, முறையே நீராட்டி, அகோரம் ஒருநூறு உச்சரிக்க.

ஜபம் செய்யும் இடம் : மலையுச்சியிலும், வனத்திலும், நதிக்கரையிலும், அமலன் கோயிலிலும், சைவர் ஒருங்கு எழுந்தருளியுள்ள நல்லிடத்திலும், அழற்சாலை கோசாலை தன்னகம் ஆகிய இடங்களிலும் ஜபிக்கலாம்.

தன்மணியில் ஒரு முறை ஜபம் செயின் ஒன்று ஒன்றே யாம்; சைவ நன் மக்களிடை ஒரு முறை செபித்தால் ஒன்று நூறுகும்; ஆற்றங் கரையில் எனில் ஒன்று ஆயிரமாம்; கடற் கரை யெனில் ஒன்று பதினுயிரமாம்; குன்றத் துச்சியிலும் தபோவனத்திலும் எனின் ஒன்று நூறுயிரமாம்; சிவாலயத்தில் ஜெபம் செயின் ஒன்று ஒரு கோடியாகும்; சிவசந்நிதியிலாயின் குணிப்பரிய கோடியாகும்.

ஆசனம் : மானின் உரி மேலிருந்து ஜபிக்கின் ஞான விருத்தியாகும்; வேங்கைத் தோல் மேலாயின் முத்தி வாய்க்கும்; கம்பள மெனில் துன்பம் நீங்கும்; கலிங்கத்தின் மேல் ஆயின் உடல் நோயினை வீட்டும்.

மரப் பலகையிலாயின் வறுமை யாக்கும்; வன்கல்லாயின் பிணியால் வருத்தும்; நிலத் தினுயின் துன்பம் தரும்.

வீராதனம் அல்லது பதுமாசனத் திருந்து ஜபித்தலே முறை.

பொது : சிவபக்தருக்குக் கண்டி தானம் செய்வது சிறப்புடையது; கண்டியணிந்தார் தம்மைக் கண்டவுடனே பணிவதும் சிவ புண்ணியம் ஆகும்.

இது காறும் கூறியவை சிதம்பரம் ஸ்ரீ மறை ஞான சம்பந்தர் பாடியருளிய **''உருத்திராக்க விசிட்டம்''** என்னும் வெண்பா நூலிற் கண்டன வாகும். இந்நூல் திருக்கயிலாய பரம்பரைத் **திருவாவடுதுறை ஆதீனத்தில்** 1954ம்ஆண்டு வெளியிட்ட ''ஸ்ரீ மறை ஞான சம்பந்தர் அருளிச் செய்த சைவச் சிறு நூல்கள்'' என்ற தொகுப்பில் காணலாம். விரிவான செய்திகளை உபதேச காண்டம், பிரமோத் தர காண்டம், சிவ ரகசிய காண்டம், கடம்பவன புராணம் ஆகிய நூல்களில் காணலாம்.

திருநாவுக்கரசர் பாடிய இலிங்க புராணத் திருக்குறுந்தொகையில் அடியார்கள் கண்டி பூணுதல் எதிர்மறை முகத்தான் கூறப் பெற்றுள்ளது:

''கண்டி பூண்டு கபாலங்கைக் கொண்டிலர்
விண்ட வான்சங்கம் விம்மவாய் வைத்திலர்''.

''விண்ணவர், ஒத்தவடத்து, கண்டியிற் பட்ட, வெண்டிரை'' என்ற தேவாரங்களை யும் ஓதுக: அறுபான் மும்மை நாயன் மார் களுள் ஒருவர் மூர்த்தி நாயனர். அவரைச் சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் ''மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்'' என்று துதிப்பர். இதன்கண் **''மும்மை''** என்பது திருநீறு, உருத்தி ராக்கம், ஜடை என்பனவாம். இம்மூன் றையே உண்மைப் பொருளென மதித்து அரசோச்சியவர் மூர்த்தி நாயனர்.

பல்லவ அரசருட் பெரும்பாலோர் சைவ சமயச் சார்பும் பற்றும் உடையவர் என் பதை அவர்தம் இயற்பெயரானும் சிறப்புப் பெயர்களானும் அறியவரும். திருநாவுக்கர சரால் சைவம் சார்ந்தவனுகிய மகேந்திர னது மகன் வாதாபி கொண்ட முதலாம் நரசிம்ம வர்மனின் பெயரனும், காஞ்சிக்கு அண்மையில் கூரம் என்ற ஊரில் வித்யாவி நீத பல்லவேசுவரக்கிருகம் என்ற சிவா லயத்தை எடுப்பித்தவனும், ஐயடிகள் காட வர் கோன் என்று ஆய்வாளர்களால் அறுதி யிட்டுப் போற்றப்படுபவனும், காஞ்சிபுரத் தில் கைலாச நாதர் கோயிலை எடுப்பித்த இராச சிம்மன் என்னும் பல்லவ அரசனின் தகப்பனும் ஆகிய **பரமேசுவர வர்மன்** மகாபலிபுரத்தில் **கணேசர் கோவில்** என்ற சிவாலயத்தை அமைத்தவனுவன். இக்கோயி லில் பதினெரு வடமொழிச் சுலோகங்கள் கல்லெழுத்தாக வுள்ளன. அவை அரசனுக் கும் சிவனுக்கும் பொருள் பொருந்தும் வண்ணம் சிலேடையாக உள்ளன. அதிற் கண்ட இரண்டாவது—ஆறுவது சுலோகங் களினின்று அவ்வரசன் உருத்திராக்க மணி களாலாய சிவலிங்கத்தைத் தலைமுடியாக அணிந்தவன் என்று அறியவருகிறது.

உருத்திராக்க விதானம் : கருவறையில் சிவலிங்கத் திருமேனிக்கு மேல் உச்சியில் மேற்கட்டி இருப்பதும் கண்கூடு; பெரும் பாலான தலங்களில் பட்டாடையால் அமைக்கப் பெற்றிருக்கும். திருவாரூர்ப் பூங் கோயிலில் ''முத்துவிதானம்'' அமைத் திருந்ததாகத் திருநாவுக்கரசர் கூறுவார். இங்குக் கண்ட முத்து என்பது உருத்திராக்க மணியாகலாம். ஆகவே கருவறையில் சிவ லிங்கத் திருமேனிக்கு மேல் உச்சியில்அமைய வேண்டுவது **''உருத்திராக்க விதானம்''** ஆகும் என்பது திண்ணம். இங்ஙனம்ஆதலை உணர்ந்தவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து இருபதாவது பட்டத்து அமர்ந்தரு ளியவர்களும், எண்ணிறந்த அறக்கட்டளை களை நியமித்தவர்களுமாகிய **ஸ்ரீ காசி வாசி**

அருணகிரிநாதர் நூல்களின் நயம்

அருணகிரிநாதர் பாடல்களைப் படிப்பது மக்கள் மனதை மதத்தின்பால் ஈடுபடச் செய்கிறது. ஆன்மீக உயர்வுக்கு வழிகோலுகிறது. அத்துடன் மட்டுமல்லாமல் ஆன்மீக ஒற்றுமை சகிப்புத்தன்மை பல்வேறு இனத்தவர்களிடையே நல்லெண்ணம் ஆகியவற்றை வளர்க்கிறது.

சன்மார்க்க சகவாழ்வு சமய ஒற்றுமை, ஞானம் ஆகியவற்றை பரப்புவதையே அவர் பணியாக கொண்டிருந்தார் என்பதை அவரது பாடல்களைப் படிப்பதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். அவரது நூல்கள் சமூக, சமய ஆன்மீகத் துறைகளின் பொக்கிஷமாகும்.

'கந்தர் அலங்காரம்' என்ற நூலில் அவர் சமிஸ்கிருதம், தமிழ் ஆகிய இருமொழிகளையும் உபயோகித்துள்ளார். இரண்டு மொழிகளின் இணக்கத்துக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

தமிழ்நட்டாடில் அவதரித்த பெரிய மகான்களில் ஒருவர் அருணகிரிநாதர். திருவண்ணுமலையில் அவதரித்த அவர், கைலாசமலை முதல் ஸ்ரீலங்காவில் உள்ள கதிர்காமம் வரை சுமார் 200 இடங்களுக்கு யாத்திரையாகச் சென்றுள்ளார். அவர் யாத்திரை சென்ற ஒவ்வொரு இடத்திலும் பாடல்களைப் பாடியுள்ளார்.

அவரது நூல்கள் இலக்கியச் சிறப்புடையவை. மேலும் தத்துவ விஷயங்கள் நிறைந்தவை. சிறந்த நடை, கருத்துச் செறிவு நிறைந்த இந்த நூல்களில் உள்ள பாடல்கள் மக்கள் அனைவர் உள்ளத்தையும் உருக்குவதாக உள்ளன.

திரு. ஜட்டி
துணைத் தலைவர், இந்தியக் குடியரசு

அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பல சிவத் தளிகளில் கருவறையில் உருத்திராக்க விதானத்தை அமைத்தருளினார்கள். அங்ஙனம் அமைத்தவற்றுள் ஒன்று திருவண்ணுமலையில் அருணசலேசுவரர் ஆகிய சிவலிங்கப் பெருமான் எழுந்தருளப் பெற்றுள்ள கருவறையிலும் காணலாம்.

இங்ஙனம் சிவபாத சேகரர்களும் திருநீறு பேணியோரும் ஆகிய மன்னர்-குறுநில மன்னர் சைவ நன் மக்கள் போற்றியனுசரித்த சைவ சீலங்களை இனியும் மக்கள் போற்றியுய்க!

''நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொண் டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்க னும நமச் சிவாயவே''— சம்பந்தர்

நமசிவாய நமசிவாய நமசிவாய நமசிவாய நமசிவாய நமசிவாய நமசிவாய

நமசிவாய

திருவைந்தெழுத்து

நமசிவாய

நமசிவாய நமசிவாய நமசிவாய நமசிவாய நமசிவாய நமசிவாய நமசிவாய

கு. சுந்தரமூர்த்தி

உயிர்கள் அனைத்தும் இன்பத்தையே விரும்புகின்றன. அவ்வின்பத்தை அருளாளர்கள் இரு வகைப் படுத்தியுள்ளனர். உலகியல் நுகர்வு கொண்டு ஒரு காலத்தில் அடைகின்ற இன்பம், பிறிதொரு காலத்தில் உவர்ப்பாக மாறி விடுகின்றது. எனவே இது அழியத் தக்கது என அறிய முடிகின்றது. இதனைச் சிற்றின்பம் என்பர். திருவருள் நுகர்வு கொண்டு அடைகின்ற இன்பம் எப்பொழுதும் இன்பமாய் விளங்குகின்றது. இது எக்காலத்தும் உவர்ப்பதில்லை. இதனைப் பேரின்பம் என்பர். ''இன்பம் இடையறுது ஈண்டும்'', "பேரா இயற்கை தரும்'', ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என வரும் திருவாக்குகள் எல்லாம் இவ்வின்பத்தையே குறிப்பனவாகும்.

இத்தகைய பேரின்பத்தைத் தருதற்குரிய ஒரே மருந்து திருவைந்தெழுத்தாகும். ''வாயிலே வைக்கும் அளவில் மருந்தாகித் தீய பிறவி நோய் தீர்க்குமே'' என நக்கீரர் குறிப்பர். இத்திருவைந்தெழுத்து இறைவனுடைய திருநாமம் ஆகும். ஒவ்வொரு திருக்கோயிலிலும் எழுந்தருளுவிக்கப் பெற்றிருக்கும் திருமேனிக்கு ஒவ்வொரு நாமம் உண்டு. அண்ணுமலையார் என்பர், செஞ்சடையப்பர் என்பர்; வைத்தியநாதன் என்பர். இப்பெயர்கள் அவ்வம் மூர்த்திகளுக்குரிய சிறப்புப் பெயர்களாகும். இவ்வனைத்து உருவங்களுக்கும் மூல காரணமாய் நிற்கும் மூர்த்தியைக் குறிக்கும் திருப்பெயர் திருவைந்தெழுத்தாகும்.

" திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில் ''
" எண்ணிலேன் உன் திருநாமத்து எழுத்தஞ்சும் ''

என வரும் திருவாக்குகள் இவ்வுண்மையை விளக்கும். இறைவனுடைய திருநாமமாக விளங்கும் இத்திருவைந்தெழுத்து அப்பெருமானுடைய திருவுருவாகவும் விளங்குகின்றது எனக்கூறும் ஞானநூல்.

'' ஆடும்படிக் கேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரம் — கூடும்
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார் ''

" சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகர மபயகரம் — பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனர்
தங்கு மகரமது தான்."

எனவரும் உண்மை விளக்கத் திருப் பாடல்கள் இறைவனுடைய திருமேனியில் திருவைந்தெழுத்து அமைந்திருக்குமாற்றை விளக்கும்.

திருவைந்தெழுத்து ஓதுவார்தம் பக்குவத்திற்கேற்ப ஐந்து வகையாகப் பிரித்துப் பேசப் பட்டுள்ளது. அவை யாவன:—

(1) ஸ்தூல பஞ்சாட்சரம்	நமசிவாய
(2) சூக்கும பஞ்சாட்சரம்	சிவாயநம
(3) காரண பஞ்சாட்சரம்	சிவாயசிவ
(4) மகா காரண பஞ்சாட்சரம்	சிவ
(5) மகா மனு	சி

இவ்வகையில் முன்னைய இரண்டுமே திருமுறைகளிலும், ஞானநூல்களிலும் மிகுதியாகப் பேசப் பெற்றுள்ளன. பின்னைய மூன்றும் மிகவும் பக்குவம் பெற்றவர்கள் குருவருள் வழிநின்று உணர்ந்து அனுபவிக்கத் தக்கனவாகும். முன்னையதான ஸ்தூல பஞ்சாட்சரம் இம்மை இன்பம் பெற வேண்டுவார் ஓதத்தக்கது என்றும் சூக்கும பஞ்சாட்சரம் வீடுபேறு வேண்டுவார் ஓதத்தக்கது என்றும் ஞானநூல்கள் வரையறை செய்கின்றன.

" மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாகி மீளா விடின் "
" சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்
பவமிதுநீ யோதும் படி "

எனவரும் திருவருட் பயன் காண்க. திருவைத்தெழுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு

பொருளைக் குறித்து நிற்பதாகும். சிகரம் சிவத்தையும், வகரம் அருளையும், யகரம் உயிரையும், நகரம் மறைப்பையும் (திரோத மலம்) மகரம் ஆணவமலத்தையும் குறிக்கும். எனவே இத்திருவைந் தெழுத்தில் உயிர் (ய) இடையில் நிற்கின்றது. ஒருமருங்கில் சிவமும், பிறிதொரு மருங்கில் மலமும் நிற்க இவ்வுயிர், தான் சார்ந்ததன் வயப்பட்டு நிற்கும்தன்மை அறியத் தக்கதாகும்.

" ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞான நடந் தானடுவே நாடு "

எனவரும் திருவருட்பயன் இவ்வுண்மையை அறிவுறுத்தி உயிர் சாரவேண்டிய பொருள் எது என்பதையும் குறிப்பாக அறிவுறுத்துகின்றது. குருவருள் வழிநின்று இவ்வுண்மையையுணர்ந்து ஓதுவார், தாம் ஓதியதின் பயனைச் சிவமாம் பெருந்தன்மையை யடைவர்.

" நாம் ஒழிந்து
சிவமான வா பாடித் தெள்ளேணம்
கொட்டாமோ "

என்னும் அருள் அனுபவமும் காண்க.

திருவைந் தெழுத்தை வாயால் ஒலித்தலினும் மனத்தால் உன்னுதலே தக்கதாகும்.

" சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் அடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள்ளார்கள்
சிவசிவ வாகுந் திருவருளாமே ''

என வரும் திருமந்திரம் இவ்வுண்மையை விளக்கும்.

திருமுறைகளும், சாத்திரங்களும் போற்றிக் கூறுவதெல்லாம் திருவைந்தெழுத்தின் பெருமையேயாகும். திருஞானசம்பந்தர் இரு பதிகங்களிலும், திருநாவுக்கரசரும் சுந்தரரும் ஒவ்வொரு பதிகங்களிலும் திருவைந்தெழுத்தின் பெருமையை அருளியுள்ளார்கள். மாணிக்கவாசகர் சிவபுராணத்துள் இத்திருவைந்தெழுத்தை முன் வைத்து வாழ்த்தி, இதுவே உயிர்க்கு ஊதியம் எனத் திருக்கோவையாரின் இறுதிப் பாடலில் உணர்த்தியிருப்பது இதயத்தில் எண்ணுதற்குரியதாகும். மணிவாசகர் இத்திருவைந் தெழுத்தை ஓதுதற்குத் தாம் செய்திருக்கும் தவத்தையும், இத்திருவைந்தெழுத்தை ஓதப்பெற்றதால் தாம் பெற்ற பயனையும் நெகிழ்ந்தும், குழைந்தும் கூறியருளிய திருவாக்குப் பன்முறையும் நினைந்து நினைந்து இன்புறத் தக்கதாகும்.

நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் னமுதமுமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனது உள்ளம்
புகுந்து அடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே.

இத்திருப்பாடலைப் படிக்கும் தொறும் ஒரு பேரின்பம் உள்ளத்து ஊறிக் கொண்டேயிருக்கும். கருவூர்த்தேவர் திருவைந்தெழுத்தின் சொற் பதத்தை உள் வைத்து உள்ளம் அள்ளூறும் தொண்டருக்கு எண்திசைக் கனகம், பற்பதக்குவை, பைம் பொன் மாளிகை, பவளவாயவர் இன்பம், கற்பகப் பொழில் ஆகிய அனைத்தும் கிடைக்கும் என்பர். பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்துள் 137 பாடல்களால் இதன் பெருமை விரித்துரைக்கப்பட்டுள்ளது. பதினோராம் திருமுறையுள் பட்டினத்தடிகள் ''நித்தம் நித்தம் தேறும் பொருள் திருவைந் தெழுத்தும், திருநீறும், கண்டிகையும்'' என்பர். பன்னிரண்டாம் திருமுறையுள் சேக்கிழார் திருவைந் தெழுத்தைக் கருத்தின் பயனைக் கொள்ள வேண்டும் என்றும், 'ஞான மெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொலாம்' என்றும், 'ஆதி மந்திரம் அஞ்செழுத்து' என்றும் அருளிச் சிறப்பிப்பார்.

" அஞ்செழுத்தே ஆகமமும்
அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுரா
ணம் அனைத்தும்-அஞ்செழுத்தே
மானந்த தாண்டவமும்
யாவைக்கும் அப்பாலா
மோனந்தா மாமுத்தி யும் "

எனச் சிறப்பிக்கும் சாத்திரம்.

இத்தகைய திருவைந்தெழுத்தை ஓதி உணர்ந்து இன்புறுதற்கு அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சுவோமாக! ★

முத்தி நெறி

கா. சி. தனக்கோடி

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்கின்றார் ஔவையார். 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல் விருகமாகிப் பின்னர் இம் மனிதப் பிறவியை எடுத்தேன்' என்கின்றார் மணிவாசகர். 'வீடு பேற்றிற்குரிய பிறவி மக்கட் பிறவி, அதனால் இப்பிறவி பெறுதற்கரியது' என்கின்றார் பரிமேலழகர் (திருக்குறள்—356 உரை).

பெறுதற் கரிய இம் மக்கட் பிறவியைப் பெற்றும், ஒரு பகல் வாழ்க்கைக்கு உலமரும் அலமரல் வாழ்க்கையை எய்தாமல், நம் அருமைத் தமிழ் நாட்டிற் பிறந்து, கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த குடியில்தோன்றி, இளமையில் கற்பன கற்றுக் கேட்பன கேட்டு அறிவு நிரம்பப் பெற்றுச் சான்றோராகத் திகழ்தல் எவ்வளவு அருமையுடையது! கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்த சான்றோராய்த் திகழ்ந்து அந்த அளவிலேயே வாழ்ந்து மறைந்து போதவினால் இந்த மக்கட் பிறவி யெடுத்ததன் பயன் நிறைவேறி விடுமோ? மற்றீண்டு வாரா நெறியில் தலைப்பட வேண்டாவோ? அதற்கு வழி என்ன?

பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னும் செம்பொருளைக் காண்பதற்குரிய உபதேச மொழிகளை அநுபவமுடைய தேசிகர் பால் கேட்டு ஞானம் கைவரப் பெற்று மெய்ப் பொருளை உணர வேண்டும்; உணர்ந்து எப் போதும் அம் மெய்ப்பொருளையே சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்திப்பவர் மற்றீண்டு வாரா நெறியில் தலைப்படுவர்.

பிறப்பு அநாதியாய் வருதலின் உயிர்கள் ஈட்டிய வினையும் அளவற்றனவாகும். அதனால் அருளாளனாகிய இறைவன் ஓர் உயிர் பிறக்கும் போது, அது முற்பிறவிகளால் அளவில்லாது ஈட்டிய வினைகளுள் இறந்த உடம்புகளான் அநுபவித்தன போக ஓரளவு வினைப்பயனை அப் பிறவியில் அநுபவித்தற்கு வகுத்துக் கொடுக் கின்றான். இவ்வினையை **நுகர்வினை** அல்லது **பிராரப்தம்** என்பார்கள். இவ்வுலகில் பிறந்த உயிர்கள் தமக்கு இயல்பாய் உள்ள அறியாமை காரணமாகவும், விருப்புவெறுப்புக்கள் காரண மாகவும் மேலும் மேலும் வினைகளை ஈட்டு கின்றன. இத்தகைய வினைகளுக்கு **எதிர்வினை** அல்லது ஆகாமியம் என்று பெயர். இந்த எதிர்வினையானது அடுத்து வரும் பிறவி களுக்குக் காரணமாகின்றது. ஏற்கெனவே சேமித்து வைத்த வினை இருக்கின்றதே அதற்குத் **தொல்வினை** அல்லது **சஞ்சிதம்** என்று ஆன்றோர் கூறுவர்.

மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இவ்வொரு பிறவியிலேயே தொல்வினையையும், நுகர்வினையையும், எதிர்வினையையும் போக்கி வினைமாசு தீர்த்து இறைவன் திருவடியை அடைதற்கு உரியராவர். இதற்கு வழி யாது?

பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப் பென்னும் செம்பொருள் காண்பதற்குரிய உப தேச மொழிகளை அநுபவமுடைய தேசிகர்பால் கேட்டு அவற்றைப் பயின்று வருவதன் மூலம் ஞானம் உண்டாகும் என்று மேலே கூறப்பட் டது. இந்த ஞானம்தான் பரம்பொருளை உணர்தற்கு ஏதுவாகின்றது. இத்தகைய ஞான முதிர்ச்சியால் தொல்வினையானது, விளக்கின் முன் இருள் போலக் கெட் டொழியும்.

அறியாமையும், அது பற்றி யான் என மதிக் கும் அகங்காரமும், அது பற்றி எனக்கிது வேண்டும் என்னும் அவாவும், அது பற்றி அப் பொருட் கண் செல்லும் ஆசையும், அது கிடைக்கப் பெறுமையால் ஏற்படும் கோபமும் எனப் பிறவிக்குக் காரணமான இக் குற்றங்கள் ஐந்தும் ஞானத்தின் எதிரில் காட்டுத் தீ முன் னர்ப் பஞ்சுத் துய் போல் அழிந்து விடுவதால், பிறவிக்குக் காரணமான இக் குற்றங்களைக் கெடுத்தார், குற்றங்களின் காரியமாகிய இரு வினைகளைச் செய்யாமையின் அவர்களுக்கு வரக் கடவ துன்பங்களும் இல்லையாம். அதாவது

எதிர்வினை (ஆகாமியம்) இல்லை. இதனால் பரம்பொருளை உணர்ந்த ஞானியர்க்கு உள வாவன எடுத்த உடம்பும் அது கொண்ட வினைப் பயன்களுமேயாம். இவற்றை நீக்கு வது எப்படி? நுகர்வினையை அநுபவித்துத்தான் கழிக்க வேண்டும். அவ்வாறு அநுபவித்துக் கழிக்குங்கால் பழைய பயிற்சி வயத்தான் அவா தலைதூக்குமன்றோ! அந்த அவாவை, 'மலர் மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்' என்னும் திருவள்ளுவரின் அமுத மொழிக் கிணங்கப் பரம்பொருளைப் பற்றிய இடையறாத தியானத்தின் மூலம் தம்பால் அணுக வொட்டாமல் நீக்க வேண்டும். அவ் வாறு நீக்குகின்றவர் இவ்வுடம்பொடு நின்றே வீட்டின்பத்தை எய்துபவராவர். தாமரை யிலைத் தண்ணீரின் சகத்துடன் கூடி வாழும் இவர் சீவன்முத்தராகின்றார்.

இன்பம் இடையறாது ஈண்டும் அவா
வென்னும் துன்பத்துள் துன்பம் கெடின்.

இவ்வாறு மக்கட் பிறவி எடுத்த ஒருவர் ஞான முதிர்ச்சியின் காரணமாக வினைமாசு தீர்த்து வீடுபேறு அடைய வேண்டும் என்னும் நெறிமுறை யுள்ளது.

''ஆண்டவனே! அடியேனைப் போன்ற பாமரர் எங்குச் சென்று ஞான தேசிகனை நாடுவர்? நாடினாலும் எவ்வாறு உபதேசம் பெறுவர்? உபதேசம் பெறக் கூடிய தகுதி அடியேங்கட்கு ஒரு சிறிதாகிலும் உண்டோ? ஒரு சிறிதும் இல்லையே! கடையவனேனுக்கும் இப்பிறவியில் உய்தி உண்டோ?'' என்றெல் லாம் எம்போன்றோர் நெஞ்சம் எண்ணி எண்ணி அலமருகின்றது. 'அவ்வாறு அலமரல் வேண்டா' என்று கூறித் தம் கழிபேரிரக்கம் காரணமாகத் தடுத்தாட் கொள்வது போல் ஞானியார் ஒருவர் அருள்வாக்கு நமக்குப் பெருந்துணை செய்கின்றது. அவர் கூறும் அருள்மொழி இதுதான்:

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்குமே——
செந்தில்நகர்ச்
சேவகா! என்று திருநீறு அணிவார்க்கு
மேவவா ராதே வினை.

இப் பாடலின் ஆசிரியர், மற்றீண்டு வாரா நெறியை அதாவது முத்திநெறியை எவ்வளவு எளிதாகக் கூறியிருக்கின்றார்! அவ்வளவு எளி தாக யாரும் கூறவில்லை என்றே கூறலாம். நாம் வேறொன்றும் செய்ய வேண்டுவதில்லை. நாம் நம் கடமைகளைச் செய்து கொண்டே அகத்தூய்மையுடன் முருகனுக்குரிய ஆயிரம் திருநாமங்களுள் கந்தா! கந்தா!! என்று தியா னித்துக் கொண்டே இருந்தால் போதும். வந்த வினையாகிய பிராரப்தமும் வருகின்ற வினையாகிய ஆகாமியமும் நிலைகுலைந்து அழிந்து விடும். செந்தில் நகர்ச் சேவகா என்று திருநீறு அணிந்தாலோ வினை மேவ வாராது. அதாவது தொல்வினையாகிய சஞ் சதம் தன் ஆற்றல்குன்றிச் செயலற்றுவிடும்.

நம் வினைகளைப் போக்கிக் கொள்ள இவர் கூறும் வழி எவ்வளவு எளிதாய் உள்ளது நோக் குங்கள். ஆதலால் நாமும் கந்தா! கந்தா!! என்று அவன் நாமம் நவின்றே அவன் தாள் அடைவோமாக.

The innermost eastern gopura at Tiruvannamalai, the so-called "Kili" gopura, seems to have been built around the middle of the eleventh century, but appears to be somewhat later on grounds of style. It is unlikely that any of the gopuras built during this period had more than five storeys.

—JAMES C. HARLE
(in P. 24 of TEMPLE GATEWAYS IN SOUTH INDIA)

திருவண்ணுமலை இலக்கியம்

அட்டவணை

193-ஆம் பக்கத் தொடர்ச்சி

திரு அருணைப்பதிற்றுப்பத்தந்தாதி: சோணுசல பாரதி:	85	விருத்தப் பாடல்கள்
திரு அருணை கல்யாண சுந்தரர் பதிகம்: சோணுசல பாரதி	10	விருத்தம்
திரு அருணை உச்சிவிநாயகர் பஞ்சரத்தினம்: சோணுசல பாரதி	5	விருத்தப் பாடல்கள்
திரு அருணை இருவர் இரட்டை மணிமாலை—அண்ணுமலை நாதர் உண்ணுமுலையம்மை ஆகிய இருவர் மீது வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் மாறி மாறி:	24	பாடல்
சோணுசல வெண்பா: இருவர் இரட்டைமணிமாலை—அண்ணுமலை நாதர் உண்ணுமுலையம்மை ஆகிய இருவர் மீது வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் மாறி மாறி:	101	வெண்பா
அண்ணுமலை நாமாவளி: சோணுசல பாரதி		
அண்ணுமலை யண்ணல்மாலை—சோணுசலபாரதி	31	பாடல்
அருணைத் தியான பஞ்சகம்—சோணுசலபாரதி	5	பாடல்
அருணைத் திருத் தொண்டர் ஆனந்தக்களிப்பு:	74	கண்ணிகள்
அருணைப் பிக்ஷாடனர் அற்புதமாலை சோணுசல பாரதி		
அருணுசலலேசர் பதிகம்—திரு எவ்வுளூர் இராமசாமிச் செட்டியார்	12	பாடல்
அருணுசலேசர் வருகைப் பதிகம்—தஞ்சை அஷ்டாவதானம் பால வைரக்கண் வேலாயுதப் புலவர்	13	பாடல்
அருணையமக அந்தாதி—திம்மப்ப அந்தணனுர்	33	பாடல்
திருவண்ணுமலை வழி நடைப்பதம்—கீர்த்தனம்—சோணுசல பாரதியின் தந்தை அருணகிரிநாத முதலியார்		
திரிபுர சுந்தரி அஷ்டகத்தில் 8ஆம் பாடல்—அருணை காமாட்சி தாசர்		

திருவண்ணுமலையில் வாழ்ந்த யாழ்பாணம் ஞானப்பிரகாச சுவாமிகள் தமிழிலும் சமஸ்கிருதத்திலுமாகப் பல நூல்கள் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய 192 சமஸ்கிருத சுலோகங்கள் SIVA YOGA RATNA DE JNANA PRAKASA என்ற பெயரில், தாரா மைக்கேல் என்பவரால் பதிப்பிக்கப்பெற்றுப் பிரெஞ்சு மொழியில் புதுச்சேரி பிரெஞ்சு இன்ஸ்டிட்டியூட் ஆப் இண்டாலஜியால் 1976-இல் வெளியிடப்பெற்றுள்ளது.

ஐந்து தலங்கள்

உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. மண், நீர், தீ, வளி, வான் என்பன ஐம்பூதங்கள். இவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும் கூறப்பெறும். உலகம் ஐம்பூதங்களாலானதென்பதைத் தொல்காப்பியர்,

நிலந்தீ நீர்வளி விசும்போடு ஐந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின் —1589

எனத் தொல்காப்பிய மரபியலிற் கூறியுள்ளார். உயிர்களது உடம்புகளும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனவையே. 'அண்டத்திலுள்ளது பிண்டத்தில்' என்பது பழமொழி.

ஐம்பூதங்களைப் பற்றித் தெளிவாகவும் நுட்பமாகவும் உணர்ந்த நமது பெரியோர்கள் ஒவ்வொரு பூதத்தின் பெயராலும் ஒரு தலத்தை ஏற்படுத்தினர். அவை பஞ்சபூதத்தலங்கள் எனப் படும். அவையாவன:

மண்	— பிருதிவித்தலம்	— காஞ்சிபுரம், திருவாரூர்
நீர்	— அப்புத்தலம்	— திருவானைக்கா
தீ	— தேயுத்தலம்	— திருவண்ணாமலை
வளி	— வாயுத்தலம்	— திருக்காளத்தி
வான்	— ஆகாயத்தலம்	— சிதம்பரம்

கடல்விடம் நுகர்ந்த காசினி லிங்கம்
காஞ்சிமா நகருறை லிங்கம்
காவிரி வடபால் வருதிரு ஆனைக்
காவினில் அப்புலிங் கமதாம்
வடதிசை அண்ணா மலையினில் லிங்கம்
வன்னியின் வடிவுகா ளத்தி
வாயுலிங் கமதாம் சிதம்பர லிங்கம்
மாசில் ஆகாயலிங் கமதாம்

— **தில்லைக்கலம்பகம்** 32

நிலத்தலம்: திருவாரூர்

டாக்டர் சொ. சிங்காரவேலன்

தொன்மை :

'பிறக்க முத்தி தரும் பெருந்தலம்' என்ற புகழ் பெற்ற திருத்தலம் திருவாரூர் ஆகும். ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்று சுந்தரர் பாடுகின்றார். சப்த விடங்கத் தலங்கள் ஏழனுள் திருவாரூர் முதலிடம் பெறுகின்றது. தியாகராசக் கடவுள் இங்குச் சிறப்புக் கடவுளாகத் திகழ்ந்து திருவருள் வழங்குகின்றார். புற்றிடங்கொண்ட புனிதன், திருமூலட்டானன், வன்மீக நாதன் என்ற பெயருடனே மூலவர் வழங்கப்படுகின்றார், ''அல்லியங்கோதை'' என்ற பெயருடன் அம்பிகை நல்லருள் வழங்குகின்றாள். காவிரியின் தென்கரைத் தலங்களுள் எண்பத்தேழாவது தலம் ஆகும் திருவாரூர். மிகப் பழமை வாய்ந்த திருத்தலம் இது; ''திருவினன் சேர்தற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்ட நானே'' என்ற திருநாவுக்கரசர் திருவாக்கு இப்பழமையைத் தெளிவாக்குகின்றது.

தல மாண்பு :

(1) திருவாரூர்ப் பூங்கோயில், (2) அறநெறி, (3) பரவையுண்மண்டளி என்ற மூன்று பாடல் பெற்ற சந்நிதிகள் இத்திருக் கோயில்களுள் உள்ளன. திருமூலட்டானம் என்றும், பூங்கோயில் என்றும் வழங்கப்படுவதே புற்றிடங்கொண்டான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்; முப்பத்து நான்கு திருப்பதிகங்களை ஏற்றுக் கொண்டுள்ளான் இப்பெருமான். நமிநந்தியடிகள் நாயனார் தண்ணீர் விளக்கெரித்த அற்புதம் இங்குத்தான் நிகழ்ந்தது. ''நம்பிநந்தி நீரால் திருவிளக்கிட்டமை நீணாடறியுமன்றே'' என்று இதனை அப்பரடிகளார் சிறப்பித்துள்ளார். மகனை முறை செய்து தேர்க்காலில் இட்ட மனுநீதிச் சோழன் வரலாறு இத்தலத்தேயே நடந்தது.

திருவாரூர்த் தலத்தின் தேர், திருவிழா, திருக்குளம் முதலியவற்றைத் தேவாரம் சிறப்பித்துள்ளது. திருத்தொண்டத் தொகை என்ற பதிகத்தை இத்திருக்கோயிலில் உள்ள தேவாசிரய மண்டபத்தில் இருந்தே சுந்தரர் ஓதியருளினார். திருமுது குன்றத்து மணிமுத்தாற்றில் இட்ட பெரும்பொன்னை இத்தலத்துள்ள குளத்தில் எடுத்துப் பரவையார்க்குச் சுந்தரர் உதவினார் என்பது வரலாறு. சுந்தரரை யன்றிச் செருத்துணை நாயனார், தண்டியடிகள் நாயனார், கழற்சிங்க நாயனார், விறன்மிண்ட நாயனார் முதலிய சிவநேசச் செல்வர்களும் இங்கேயே வாழ்ந்து தொண்டாற்றினர்.

திருவிழாத் திறம் :

''முத்து விதானம் மணிப்பொற் கவரி'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தில், அப்பரடிகளார் இங்குக் கொண்டாடப்பெற்ற திருவாதிரைத் திருவிழாச் சிறப்பை வாயாரப் பாடுகின்றார். பங்குனி உத்திரத் திருவிழாவும் இவ்வாறு பழங்கால முதற் கொண்டாடப் பெற்று வருவது ஆகும். திருமாலால் திருப்பாற்கடலில் வழிபடப் பெற்ற தியாகராசரை திருமால் வழியே இந்திரன் பெற்று அதன்பின் முசுகுந்தர் பெற்றிட மண்ணுல

கிற்குத் தியாகராசர் வழிபாடு வந்தது என்பது புராண வரலாறு. இவருடைய வழிபாடு மாலை நேரத்தில் சிறந்தது என்பர்; ''திருவந்திக் காப்பு'' எனப் பெறும் இச் சிறப்பு வழிபாடு. அனுபா நடனம், புஜங்க நடனம் என்ற கூத்து வகை தியாகராசர் திருக்கூத்து.

தீந்தமிழ்ப் பனுவல்கள் :

திருவாரூர் மும்மணிக்கோவை, திருவாரூர்ப் புராணம், திருவாரூர் உலா, தியாகராச லீலை, திருவாரூர் நான்மணி மாலை, தியாகராசப் பள்ளு, திருவாரூர்ப் பன்மணிமாலை, திருவாரூர் ஒருதுறைக்கோவை, திருவாரூர்க்கோவை, கமலாம்பிகை பிள்ளைத் தமிழ், திருவாரூர் மாலை முதலிய பல்வேறு பைந்தமிழ்ப் பாமாலைப் பனுவல்களை இத்திருக்கோயில், உலகிற்குக் கிடைத்திடப் புலவர்கட்கு அருள் உணர்ச்சியைத் தூண்டியிருக்கின்றது என்பது மிகையாகாது. காளமேகப் புலவர் முதலிய பிற்காலப் புலவர்களது தனிப்பாடல்களும் உள்ளன. இவையனைத்தும் இத்தலத்தின் தெய்விகச் சிறப்பை எடுத்துரைப்பனவே.

கல்வெட்டு வளம் :

இத்திருக்கோயில்களிற் காணப்பெறும் கல்வெட்டுக்கள் அறுபத்தைந்து. பிற்காலச் சோழ வேந்தர்கள் முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் ஆகியோர் காலக் கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன. பாண்டியர், நாயக்கர் காலக் கல்வெட்டுக்களும் உள்ளன. இக்கல்வெட்டுச் செய்திகள் வரலாற்றிற்குப் பெரிதும் துணைபுரிபவை. (See The South Indian Inscription Volume IV Page 119 Number 397; Annual Reports on South Indian Epigraphy; 1890—73, 74; 1901—269; 1904—533 to 579; 1918—533; 1919—669 to 681)

'அறநெறி' என்ற தளியை இக்கோயிலுள் இப்போதும் காணலாம். இதனைக் கற்றளியாகக் கட்டியவர் செம்பியன் மாதேவி என்ற சோழர்குல மூதாட்டியார் ஆவர். இவர், ''சிவஞான கண்டராதித்தர்'' என்று கல்வெட்டுக்களாற் போற்றப் பெறும் கண்டராதித்தச் சோழருடைய வாழ்க்கைத் துணைவியார் ஆவர். ஊர்ச் சபையார் இக்கோயிலில் உள்ள தேவாசிரய மண்டபத்தில் ஒன்றுகூடிக் கோயிற் கடமைகளைக் கவனித்து வந்ததைக் கூறுகிறது குலோத்துங்கச் சோழன் கல்வெட்டு ஒன்று.

சுந்தரரது தாயார் இசைஞானியார் என்ற திருப் பெயரை உடையவர்; அவர் கௌதம கோத்திரத்தைச் சேர்ந்த ஞான சிவாசாரியார் என்பாரின் புதல்வியார் ஆவார்; அவர் திருவாரூரைச் சேர்ந்தவர் என்பது ஒரு கல்வெட்டுச் செய்தியால் விளக்கப் பெறுவது. இது பெரிய புராணத்தில் காணக் கிடைக்காத விவரம் என்பதைக் கற்றோர் உணர்வர். இவ்வாறே விக்கிரம சோழனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மனுநீதிச் சோழன் செயலை விவரித்துள்ளது. மனுநீதிச் சோழனின் அமைச்சன் உபயகுலாமலன் என்ற பெயரையும், புதல்வன் பிரிய விருத்தன் என்ற பெயரையும் உடையவர்கள் என்பது இக்கல்வெட்டாற் தெளிவாகின்றன. இவை சேக்கிழார்க்கு எட்டாத செய்திகள்.

திருவடிப்போது நாறிய வீதி, இராசராசன் திருவீதி, குலோத்துங்கன் திருவீதி என்றெல்லாம் இத் திருக்கோயிலைச் சார்ந்த வீதிகள் பெயர் பெற்றிருந்தமை கல்வெட்டுக்களால் தெளிவாகின்றது. இவற்றுள் முதல் பெயர், சுந்தரர் வரலாற்றோடு தொடர்புடைய ஒன்று.

தேவாரக் குறிப்பு :

இத்தலத்திற்கமைந்த திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களில், ''பவனமாய்ச் சோடையாய்'' எனத் தொடங்கும் பதிகத்தில், நெஞ்சிற்கு அறிவுரை கூறுவது போன்று உலகினர்க்கு அறம் உரைக்கும் திறம் காணப்படுகின்றது.

'' தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
கொண்டு போவார்.'' [பார்க்கின்றார்

என்று உலக நிலையாமையை இனிது விளக்கும் பாலறுவாயர், ''ஆரூர் தொழுது உய்யலாம்; மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே'' என்று முடிப்பது உள்ளத்தை உருக்குவதாகும். இத் திருப்பதிகம் அன்றாடம் சைவப் பெருமக்கள் பாராயணம் செய்துவரும் பதிகங்களுள்

ஒன்றாக இடம் பெற்றுள்ளமையே இதன் பொருட் சிறப்பை உணர்த்துவதாகும்.

தியாகேசர் திருக்கூத்து :

திருவாரூர்த் தியாகேசர் திருக்கோயில் தமிழ்ப் பெருமக்கள் கண்டு களிக்க வேண்டிய ஒப்பற்ற தனிச் சிறப்பு உடையது. ஒருகாலத்தில் சோழர்களது தலைநகராக இருந்த வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்தது. மனுநீதிச் சோழன் வரலாறு இங்குத்தான் நடந்தது என்பதற்குச் சேக்கிழாரின் புராணமும் (திருநகரச் சிறப்பு) முற்குறித்த கல்வெட்டுச் சான்றும் உள்ளன. இவ்வரலாற்றினைப் பூம்புகார் நகரில் நடந்ததாகக் கருதுவோரும் இக்காலத்தில் உண்டு. அருள் மணம் கமழும் தேவாரப் பதிகங்களில் திருவாரூர் என்றும் இருக்கும்; பக்திப் பூங்காவாகத் திகழும். அங்கே தியாகராசப் பெருமான் ஆடும் திருக்கூத்து தமிழ் மக்கள் கண்டு பயன்பெற உதவும் ஆனந்தக் கூத்து.

திருவாரூர்க் கோயில் நம் நாட்டின் மிகப் பெரிய கோயில்களில் ஒன்று. இக்கோயிலில் சாயரட்சைக் கால பூசை பிரசித்தி பெற்றது. வேறெங்கும் இல்லாத பஞ்சமுக வாத்தியம் இங்கு இன்னும் வாசிக்கப்பெற்று வருகிறது. ''திருவாரூர்த் தேர் அழகு'' என்பது பழமொழி. கோயில், ஐந்து வேலி (30 ஏக்கர்); குளம் (கமலாலயம்) ஐந்து வேலிப் பரப்பு.

தேவாசிரய மண்டபம் என்பது ஆயிரக்கால் மண்டபம்.

NORTH OUTER GOPURA, SPIRE, Ca 1740 A.D.

Said to have been constructed by the bhakta Ammaniammal about 1810. Very like the west outer gopura but larger, with the principal pavilion of each storey flanked on either side by narrower pavilions the roofs of which are completely covered and hidden by their greatly enlarged kudus.

EASTERN GOPURA OF MIDDLE COURT, SPIRE. Obviously recent.

All niches completely hidden by masses of plaster figures except right at the top, a second row of these being introduced on each storey along the bases of the pavilion ornament roofs. All kudus very large and extremely ornate.

GOPURA OF INNERMOST COURT, SPIRE. Most recent of all.

This is even more extravagantly decorated than the last, the roofs of the pavilions ornaments being completely obscured by the enlargement of their row of figures and by their large and elaborate kudus.

— Bulletin of the Madras Government Museum edited by the Superintendent. THE GOPURAS OF TIRUVANNAMALAI by F.H. GRAVELY, D.Sc.. F.N.I. Reading, England. New Series—General Section Vol. III No. 5 Govt. of Madras 1959.

கச்சி ஏகம்பம்

(பஞ்சபூத தலங்களுள் பிருதுவி தலமாகத் திருவண்ணுமலையில், கச்சி ஏகம்பமே கொள்ளப்பெறுகிறது. கிருஷ்ண தேவராயர் காலத்தில் மூன்ரும் பிரகாரத்தில். இப்போது திருக்கோயில் அலுவலகம் உள்ள மண்டபத்தின் அருகே ஏகாம்பரேசுவரருக்கு உட்கோயில் கட்டப் பெற்றது.)

காஞ்சிபுரத்திலுள்ள இறைவர்களுள் முதன்மையானவர் கச்சியேகம்பரரே. அவருடைய கோயில்தான் காஞ்சிபுரத்திலேயே மிகப்பெரிய கோயில். அது பெரிய காஞ்சிபுரத்தில் இருக்கிறது. பரப்பு 30 ஏக்கர். ஏழாம் நூற்ருண்டுக்கு முற்பட்டது. கி.பி. 1509ல் கிருஷ்ணதேவ ராயரால் 9 நிலைகளுடைய தென் கோபுரம் கட்டப்பெற்றது. இதன் உயரம் 192 அடி. இக்கோபுரத்தின் மீதிருந்து, காஞ்சி நகரைக் காண்பது கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமையும். இந்த வாயிலில் பொருத்தப்பட்டிருக்கிற கதவு 7 ஆள் உயரம் இருக்கும். இவ்வளவு பெரிய கதவை எப்படித்தான் நிலை நிறுத்தினரோ!

ஏழாம் நூற்ருண்டுக்கும் பதினைரும் நூற்ருண்டுக்கும் இடையே இக்கோயில் விரிவாக்கப் பெற்றிருக்கிறது. வாயில்கள் நேருக்குநேராக இல்லை. கோபுரங்களும் ஒன்றுக்கொன்று நேர் எதிரில் அமையக் காணேம். கருவறை மட்டும் பழமையானது என்றும், பிற பகுதிகள் பல அரசர்களால் வெவ்வேறு காலங்களில் கட்டப்பெற்றன என்றும் தெரிகிறது. புத்தர் கோயில் ஒன்றை இடித்து அதன் சுவர் இக்கோயிலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் கருதப்படுகிறது. இரண்டாவது மைசூர்ப் போர் நடைபெற்றபோது ஆங்கிலேயர் இக்கோயிலைக் கோட்டையாகப் பயன்படுத்தினர்.

இறைவன் பெயர் ஏகாம்பரநாதர். இறைவி ஏலவார் குழலி. அம்மை, மணலை லிங்க வடிவில் அமைத்து வழிபட்டபோது கம்பையாறு பெருக்கெடுத்து வந்தது. அப்போது மணலாகிய லிங்கத்தின் உருவம் அழியாதிருக்க உமை அதைத் தழுவிக் கொண்டாள். அதனல் இறைவன் திருமேனியில் அம்மையின் மார்புத் தழும்பும் வளைத்தழும்பும் படிந்ததாகக் காஞ்சிப் புராணம் கூறுகிறது. இதுபற்றிய விவரங்களைக் காஞ்சிப் புராணத்தில் 'தழுவக் குழைந்த' படலத்தில் காண்க. திருமங்கையாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற பெருமாள் சந்நிதியும் இப்பெரிய சிவன் கோயிலில் இருக்கிறது. விஜய நகர அரசர்கள் கட்டிய ஆயிரக்கால் மண்டபத்தில் பல தூண்கள் அழிந்து இப்பொழுது 616 கால்கள் மட்டுமே உள்ளன. வெள்ளி, தங்க முலாம் பூசப்பட்ட வாகனங்களும், பச்சையப்ப முதலியார் கட்டிய கல்யாண மண்டபமும் அதில் அமைக்கப்பட்ட அவரது திருவுருவமும், மாவடி பிரகாரத்திலுள்ள திருமுறைக் கோயிலும், கரிகாலச் சோழனின் திருவுருவமும் இங்குக் காணத்தக்கன. மோஹஞ்ச தாரோவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது போன்ற ஆவுடையாரில்லா லிங்கம் இக்கோயிலில் உளது. நிலாத் திங்கள் துண்டத்தான் என்ற திருமால் திருவுருவமும் இக்கோயிலில் காணப்படுகிறது.

இக்கோயிலில் நடைபெறும் பெரிய திருவிழா பங்குனி உத்திர நாளில் நடைபெறும் திருக்கல்யாணம் ஆகும். அன்று இறைவர்க்கும் இறைவிக்கும் திருமணம் நிகழும் இடத்திலேயே ஏழை மக்களும், பிறர்க்குத் தெரியாத வாறு திடீரென்று திருமணம் முடிக்க விரும்பும் கருத்தொருமித்த காதலர்களும் தாலி கட்டிக் கொள்வர். இத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகின்றன.

ஏகம்பம் என்பது ஏகாம்பரத்தின் மரூஉ. இச்சொல் இக்கோயிலிலுள்ள மாமரத்தைக் குறிக்கும். நால்வகைச் சுவையுள்ள மாம்பழங்கள் ஒரே மரத்தில் காய்க்கின்றன. சுந்தரர் இழந்த கண்ணைப் பெற்றுத் தேவாரம் பாடிய தலம் இதுவே. சம்பந்தர், திருநாவுக்கரசர் பதிகங்களிலும், மாணிக்கவாசகர் திருவாசகத்திலும் இத்தலம் போற்றப்படுகிறது. கச்சி மயானம் என்னும் வைப்புத் தலம் இதுவே யாகும்.

நீர்த்தலம்: திருவானைக்கா

ச. தண்டபாணி தேசிகர்

மலர் திருவண்ணுமலைக் குடநீராட்டுமலர். அதில் மலர்கிறது திருவானைக்காவைப் பற்றிய செய்திமணம். ஆம்; திருவண்ணுமலைக்கும், திருவானைக்காவிற்கும் பலவகையில் நெருங்கிய தொடர்பு உண்டு.

உலகப்படைப்பிற்கு மூலகாரணம் ஐம்பெரும் பூதங்கள். ஐம்பெரும் பூதங்களாயும் அவற்றில் எழுந்தருளியிருக்கும் இறையாயும் விளங்குபவன் சிவபெருமான். திருவண்ணுமலை, தீத்தலம். அதாவது இறைவன் தீ வடிவாகத் தோன்றிச் செருக்குற்ருர்க்கு அண்ணுமலையாய் நின்ற தலம். திருவானைக்கா நீர்த்தலம். இறைவன் நீரில் நீராகத் தோன்றி உறையும் தலம். தீக்கும் நீருக்கும் உள்ள உறவுமுறையும் தாயும் சேயும் என்கின்றன வேதங்கள். ''அக்னியிலிருந்து ஆப:'' என்பது உபநிடதம். 'தீமுரணிய நீரும்' எனப் புறநானூறு தீக்கும் நீருக்கும் ஒன்றையொன்று அழிக்கும் மாருன தன்மையுண்டு என்கிறது. தீக்குரிய தன்மை ஒளி. நீருக்குரிய தன்மை சுவை. இவையிரண்டுமே தன் மாத்திரைகள்; இவற்றை யடியாகக் கொண்டு தீயும் நீரும் தனித்தனியே தோன்றுகின்றன. ஆனுலும் இறைவன் இவையனைத்திலும் கலந்து நிற்கின்ருன். ஆகையால் இவையிரண்டும் தொன்று தொட்டே இயைபுடையன என்னும் சைவநூல்கள். எங்ஙனமாயினும் இறைவன் ''இருநிலனுய்த் தீயாகி விசும்புமாகி...... எறியுங் காற்றுமாகி'' இருப்பதால் ஐந்துமே அங்கமும் அங்கியுமாகிய தொடர்புடையன. ஆதலாற்போலும் திருவண்ணுமலை மலரில் திருவானைக்காவை எழுதப் பணித்தார்கள்.

தலம்

ஓரிடத்திற்குப் பெருமை அங்குள்ள மக்களாலும், அருள் வழங்கும் ஆண்டவனுலும், ஆண்டவன் அருள்நிறைந்த தீர்த்தங்களாலுமே விளையும். இத்தலம் தொன்மையானது. காவிரி யாற்றின் வட கரையிலே தெங்கும் மாவும் பலாவும் பல வகைப்பூ மரங்களும் செறிந்த தெய்விகச் சூழலில் உள்ளது. இயற்கை எழில் இலங்க நிற்பது. இருபதாம் நூற்ருண்டுக் கவிஞர் ஒருவர்,

கற்ற பௌதிகம் சுற்றிவந் தறிவுக்
 கைகுளித் தேத்திடச் சிறந்து
மற்றுமிங் குள்ள மண்முதல் நான்கில்
 மடுத்துயிர் களித்திட வென்றே
உற்றதண் ணீரின் உருவினில் தனக்கென்
 ருென்றுமில் லாப்பர சிவமே
பற்றுடன் அமர்ந்த பவித்திர மதற்கிப்
 பாரினில் ஈடிணை யுளதோ

என்று இத்தலத்திற்கு ஈடானதும் இல்லை; இணையானதும் இல்லை என்று சாதிக்கிருர்.

பெருமானும் பெருமாட்டியும்

பெருமான் ''ஆனைக்காவில் ஆதி'', அம்மை உலக முழுதுடையாள்; பெருமான் நீரையே வடிவாகக் கொண்டு தண்ணியராய் எழுந்தருளியுள்ளார். அம்மை, இன்றும், ஏன் என்றும் மக்களுய்ய அருள் வழங்கும் அருட் கருவூலமாய் எழுந்தருளியிருக்கிருர். பெருமான், சந்திர தீர்த்தக் கரையில் உள்ள வெண்ணுவல் மரத்தின்கீழ் ஆன்மாக்களாகிய நம்மீது வைத்த தடையிலாக் கருணையால் தானே தோன்றியவர். அவரை வெள்ளானை வழி பட்டு வந்தது. வெண்ணுவற் சருகுகள் இறைவன் மேல் உதிர்வதைக் கண்ட சிலந்தியொன்று திருமுடியின் மீது வலை பின்னிச் சருகு வீழாத வண்ணம் காத்து வந்தது. ஆனை அதனை வாய் நூல் எச்சில் இறைவன் மீது படலாகாதே என்று அழித்து அன்ருடம்

பூசித்து வந்தது. சிலந்தி சினந்து ஒரு நாள் அதன் துதிக்கைத் தொளையிற் புகுந்து யானையைக் கொல்ல முயன்றது. யானை துதிக்கையைத் தரையில் அறைந்து அறைந்து இறந்தது. சிலந்தியும் இறந்தது. இறைவன் யானைக்கு இன்பவுலகு அளித்தார். சிலந்தியைச் சோழனுக்கினர். இந் நிகழ்ச்சிகளை, மறந்தும் மனிதரைப் பாடாத சமயப் பெருந்தகையார் அப்பர் சுவாமிகள்

சிலந்தியும் ஆனைக்காவில்
பந்தர் செய்து
உலந்தவன் இறந்தபோதே
கோச்செங் கணனுமாக
கலந்தநீர் காவிரிசூழ்
சோனாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார்
குறுக்கை வீரட்டனாரே

என்று சிறப்பித்திருக்கிறார்கள். ஞான சம்பந்தப் பெருமான் ''சிலந்தி சோழனாகச் செய்தான்'' என்றருளுகிறார்கள்; சுந்தரரோ

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி—
சித்திரப் பந்தர் சிக்கென இயற்ற
சுருண்ட செஞ்சடையாய் அதுதன்னைச்
சோழனுக்கிய தொடர்ச்சி கண்டடைந்தேன்

என்கிறார்கள்.

இத்தலம் வரலாற்றுலகத்திலே சங்ககால முதல் பிரபந்தகாலம் வரையில் மிகமிக விளக்கமும் ஏற்றமுந் தோற்றமும் பெற்றதாகத் தமிழ் நூல்களும் கல்லெழுத்துக்களும் காட்டுகின்றன. சோழன் கோச்செங்கணன் சோழ மரபில் தொன்மை வாய்ந்தவன். இவனே இக் கோயிலை முதன் முதல் செங்கற் கோயிலாக எழுப்பிச் சிவ புண்ணியங் கொண்டவன். முற்பிறப்பு வாசனையின் வண்ணம் கருவறைமுகப்பு வாயிலை யானை புகா வாயிலாகக் கட்டினன். பின்னர் 9ம் நூற்றாண்டில் ஆதித்த சோழன் கருங்கற் பணியாக்கிக் களித்தான். கி.பி. 13ம் நூற்றாண்டில் இரண்டாம் சுற்றுலையும் மூன்றாம் சுற்றுலையும் சோழ மன்னர்கள் எழுப்பியவையே. மூன்றாம் சுற்றுலையில் உள்ள கார்த்திகைக் கோபுரமும் கீழ்புறமுள்ள சங்கமேசர் கோபுரமும் குலோத்துங்கன் கட்டியவை. நான்காம் சுற்றுலை 13 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்தது. 4ம் சுற்றுலையிலுள்ள கீழைக் கோபுரம் சுந்தர பாண்டியனால் கட்டப் பெற்றது. அதனால் அது இன்றும் சுந்தரபாண்டியன் கோபுரம் என்றே வழங்கப் பெறுகிறது. இக் கோபுரத்தை நிறைவு செய்தவர் போசள மன்னர்.

இங்ஙனம் திருக்கோயிலைத் திருப்பணி செய்தவர்கள் ஆதித்ய தேவன் மகன் சரபேந்திரன் (கி.பி. 15ம் நூற்றாண்டின் முற்பகுதி) இராச இராசன், வீரசோமேசன், குருசதாசிவர், கோயிலய்யனும் அவன் மகனும், விசயரங்க சொக்கநாத நாயகர், நாட்டியச் சாலையில் நாட்டிய மாடிய ஆசிரியன் வேங்கடேசய்யன் மகன் வைத்தியப் பய்யன் முதலான பலராவர்.

பல்லவ-சோழ-பாண்டிய-போசள—நாயக்க மன்னர்கட்குப் பின்னே நாடு பலவகையிற் சீர்கெட்டிருந்தது. அப்போதெல்லாம் திருக்கோயிற் பணிகள் செம்மையாக நடைபெற வசதி வாய்ப்புக்கள் மிகமிகக் குறைவாயின. அந்தக் காலத்தில் அதாவது 19,20ம் நூற்றாண்டுகளில் நகரத் தன வணிக வள்ளல்கள் பலர் பாடல் பெற்ற சிவத்தலங்களைப் பணிசெய்து பாதுகாத்து வந்தனர். கோச்செங்கணன் எண்டோளீசற்கு எழில் மாடம் எழுபது செய்தான் என்பர் திருமங்கை மன்னன். நகரத்தார்களோ சற்றேறக்குறைய என் பயணத்திற் கண்டவரை பெரியகோயில்களாக எண்பதுக்கு மேற்கட்டி, நாள் வழிபாட்டிற்கும் சிறப்பு வழிபாட்டிற்கும் வகை செய்துள்ளனர்.

திருவிளக்குத் தொண்ணூறு ஆடு கொடுத்தவன் முப்பது பசுக்கள் கொடுத்தவன் இருபத்திரண்டு கழஞ்சு பொன் கொடுத்தவன் இவர்கள் புண்ணியம் கல் எழுத்துக்களிற் காணப் பெறுவது போல பல கோடி ரூபாய்கள் தந்த நகரத்தார் பணிகளையும் அந்தந்தக் கோயிலிற் கல்லிற் பொறித்து வைத்தால் அது காலங்கடந்த பிறகு வரலாற்றுக் குறிப்பாகப் பயன்படுமே. திருப்பணி செய்தவர்கள் தம் புகழ் வேண்டாத் தகையாளர்கள் ஆதலால், அவர்கள் எழுதி வைக்கவில்லையானாலும் இன்று வரலாறு எழுதும் ஆசிரியர்களாவது அனைத்தையும் தொகுத்து எழுதினால் அது ஒரு பதிவுப் பத்திரமாகச் சமய வளர்ச்சி-சமயப் பாதுகாப்பு வரலாற்றுக்குச் சான்றாக விளங்குமே என்று விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

திருவானைக் கோயிலை 19ம் நூற்றாண்டில் கானாடு காத்தான் திரு. சா. ராம. சித. சிதம்

பரஞ் செட்டியார் திருப்பணி தொடங்கினார்கள். 1908ல் முடித்தார்கள். அதுபோல இத் திருவண்ணாமலைத் திருக்கோயிலும் நகரத்தார் பேரன்பிற்கு உரியதாகித் திருப்பணிச் சிறப்புக்களைப் பெற்ற தலம் ஆகும். இங்குள்ள இடப வாகனம் ஒன்றே அவர்கள் பணிக்குச் சான்று சொல்லுமே. அவர்கள் கணக்கேடுகளிலும் கைக் குறிப்புக்களிலும் எழுதிக் களிக்கும் 'அண்ணாமலையார் துணை' என்னும் எழுத்தே அவர்கள் பேரன்பின் எல்லையைப் பேசுமே.

ஆதலால் நகரத்தார் சிவப்பணி என்ற தலைப்பிலே ஒரு தொகுப்புப் பணி நடைபெறுமாயின் அதனைக்கொண்டு சைவ நல்லுலகம் சரித்திரப் புகழ்பெற்று மிளிரும்.

TRADITIONAL LAMPS OF SOUTH INDIA

Few places can vie with South India in the wealth of imagery and symbolism woven round the lamp. It represents devotion, benediction and supplication, and is associated with all important events. The craftsmen of the South have lavished great skill and ingenuity in designing these beautiful objects d'art. The exquisite figure in brass is attired in finery, and decked in intriguing jewellery — star shaped diamond pieces in her hair, dazzling rings hang from her ears, an elaborate necklace graces her neck, striking armlets beautify her arms, a highly ornamental girdle binds her slender, waist, and tinkling 'cilambus' adorn her aklets.

On her shoulder perches a parrot and in her hands she holds a burning lamp. In the fickering glow, her graceful form shines faintly. This is Deepa-Laxmi or the Beauty-Lamp, used for perpetual illumination before the deities, in the shrines and temples of Tamil Nadu. This fine specimen bears testimony to the unusual workmanship of the artisans.

Our Civilisation has been built round the adoration of the sun, fire and lamp. Therefore Deepams or lamps form a very significant part of the ritual paraphernalia used in temples.

Primitive man dwelt in caves like the ones at Annamalai Hill in Tiruvannamalai and gathering fruits and roots of trees. He looked upon darkness as a demon, as he could hardly venture out after sunset. The sun, a source of light was to him a deity, and consequently worshipped.

Later, man discovered fire and worshipped it as he is doing at Tiruvannamalai. It kept him warm and protected him against the wild beasts and this also became an object of worship. Hindu scripture consist of hymns devoted to the Sun God and Agni the latter as Jwalai. During the Vedic period, the lit sacrificial altar was the nucleus of worship and the spark of Yagna-Vedi assumed the form of lamp or Deepam.

As a symbol of Surya and Agni, the lamp has always been considered sacred. Its very existence helps a man to shed the fear of darkness. To him light is knowledge, therefore, it was but natural for him to beautify the lamp in various ways.

In the beginning, stone ones were made, but gradually clay, terra cotta, and finally metal lamps were used. Various rites and rituals involved the utilisation of lamps and sacrificial vessels. The Shilpa Shastras include a chapter on the designing of lamps, and in all, sixteen varieties are enumerated. In the great epics. reference is made to elaborate ones in gold and silver, studded with precious stones.

Tamil Nadu is famous for an infinite variety of lamps in different shapes and sizes. ★

காற்றுத் தலம்—திருக்காளத்தி

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

கரும்புதேன் கட்டியுங் கதலியின் கனிகளும்
அரும்புநீர் முகலியின் கரையினி லணிமதி
ஒருங்குவார் சடையினன் காளத்தி
யொருவனை
விரும்புவா ரவர்கடாம் விண்ணுல
காள்வரே.—சம். 294:4

சென்னையிலிருந்து 80 மைல் தொலைவில், சென்னை—திருப்பதிச்சாலையில் இருக்கும் இத் தலம் ஆந்திரப் பிரதேச எல்லையுள் அமைந் துள்ளது.

காளஹஸ்தி என வடமொழியில் குறிக்கப் படும் இத்தலம், ஐம்பூதத்தலங்களுள் ஒன்றாக அமையும் சிறப்புடையது. பிற தலங்கள் நிலம், நீர், தீ, ஆகாயம் ஆகிய பூதங்கட்கு உரியனவாக, இக்காளத்தி காற்றுத்தலம் எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

திருக்காளத்தி, சைவர்களால் தென்கயி லாயம் எனப் போற்றப்படுகின்றது. நக்கீரர் பாடிய 'கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி' யும் கயிலையோடு ஒத்து வைத்துக் கருதப்படும் பெருமை காளத்தி பெற்றதையே காட்டு கின்றது.

இத்தலத்திற்கு மூத்த நாயனார் மூவரும் பாடிய தேவாரங்களும் உண்டு. பட்டினத்துப் பிள்ளையாரும் இதனைப் பாடியுள்ளார். திருக் காளத்தி உலா, காளத்திப் புராணம் என்பன வும் இத்தலச் சிறப்புக்கு வெளிப்படைச் சான்றுகளாகும்.

சீகாளத்தி என்ற இவ்விடத்தின் பெயர், சிலந்தியும் (சீ), பாம்பும் (காளம்) யானையும் (அத்தி) வழிபட்டுப் பேறுபெற்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது என்பர். சேக்கிழாரின் பெரியபுராணம், திருஞானசம் பந்தர் புராணத்தில் (1020), 'இந்தமலை காளனொ டத்தி தம்மி லிகளி வழிபாடு செய விறைவர் மேவு, மந்தமில் சீர்க் காளத்தி மலையாம்' எனக் குறிக்கின்றது. இன்றும் காளத்தித் திருக்கோயிலின் உட்சுற்றில் சிலந்தி, பாம்பு, யானை இவற்றின் திருவுருவைக் காணலாம். அவ்வாறே, இத்தலத்து இறைவ னின் சிவலிங்கத் திருமேனி இரண்டு நீண்ட யானைக் கொம்புகள் கூடியன போன்றுளது. அதன் உச்சியில் ஐந்தலைப் பாம்பின் படமும் அடியிற் சிலந்தி யுருவமும் இன்றும் காணப்படு கின்றன. தலத்தின் பெயரைப் போன்றே இறைவனும் 'சீகாளத்தி' யாய் விளங்குகின்றார்.

பொன்முகலியாற்றின் கீழ்க் கரையில் திருக் காளத்தி மலையடிவாரத்திலிருக்கும் இக் கோயில், ஐந்து கோபுரங்களுடன் அழகாகத் தோற்றமளிக்கின்றது. இறைவனின் அரு குள்ள திருவிளக்குச் சுடர் அசைவு, காற்றுத் தலம் எனப்படும் இதன் பூதநிலைக்கு ஏற்ப அமைந்துள்ளது.

இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் சிவ பெருமான்,

வானவர்க டானவர்கள் வாதைபட,
வந்ததொரு மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன்,
மேவுமலை தன்னை வினவில்
ஏனமின மானினொடு கிள்ளைதினை,
கொள்ளவெழி லார்கவணினால்
கானவர்த மாமகளிர் கனகமணி,
விலகுகா ளத்திமலையே.—சம். 327-1

காளத்தியப்பர் எனவும் குறிக்கப்படுகின்றார். குடுமித்தேவர் என்ற பெயர் வேறுபாடு கண்ணப்ப நாயனார் புராணத்தில் உள்ளது. கணநாதர் எனத் தேவாரம் குறிக்கின்றது: 'கண்டார் காதலிக்குங் கணநாத னெங் காளத் தியாய்' (சுந்தரர்—26-1). பொது நிலையில் காளத்திநாதர் என்ற பெயர் குறிக்கப்படுகின் றது. இறைவி ஞானப்பூங்கோதை என் பதைத், 'தேனார்ந் துக்க ஞானப்பூங்கோதை யாள் பாகத்தான் காண்' என்ற அப்பர் தேவார அடிகள் உணர்த்துகின்றன. காளத்தி உள்ளிருந்த ஒளியே (26—9) காளத்தியுள் அறிவே (26—4) என்பன இறைவன் பெரு நிலையைச் சுட்டுகின்றன.

கண்ணப்பரின் தொடர்பால் இக்காளத்தி கயிலாயத்தினும் சிறந்ததாக அரனடியரால் போற்றப்படுகின்றது. காளத்தியைப் பாடும் போது கண்ணப்பரைப் பிரித்து நினைக்க இயலா நிலையில் இணைந்த சிறப்பு இது. 'திருக்காளத் திக் கண்ணப்பர்' (650) எனவே பெரியபுராண மும் குறித்தது.

வாய் கலசமாக வழிபாடு செயும்
வேடன் மலராகு நயனம்
காய் கணையினு லிடந் தீசனடி
கூடு காளத்தி மலையே, —சம். 327—4

எனத் தேவாரம் சிறப்பிக்கின்றது.

இறைவன் சந்நிதியில் கண்ணப்பர் வெளிப் பட எழுந்தருளியுள்ளார்; அத்துடன், மலை யின்கண் நான்கு இடங்களில் கண்ணப்பர் சந்நிதி அமைந்துள்ளது எனும் செய்திகளும் தெரிய வருகின்றன. கண்ணப்ப நாயனர் புராணப்பாடல், இறைவனுணைப்படியே கண் ணப்பர் திருவுரு இறைவன் அருகு எழுந்தருளி யது எனும் உண்மையை விளக்குகின்றது.

பேறினி யிதன்மே லுண்டோ? பிரான் றிருக் கண்ணில்வந்த
ஊறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப வுதவுங் கையை
யேறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக் கொண் ''டென்வலத்தின்
மாறிலாய்! நிற்க'' வென்று மன்னுபே ரருள்பு ரிந்தார்.—பெரிய: 829.

இத்தலத் தருவாகக் கல்லாலும், நீராகப் பொன்முகலியும் அமைந்த செய்தி, பட்டினத் தார் பாடலிலிருந்தும் தெளிவாகின்றது.

'... ... ... பொன் முகலிக்
கரைக்கே கல்லாலி னிழற்கீ ழமர்ந்தருள்
காளத்தியே'—காளத்தி: 5

இயற்கை வளனும் அழகும் நிறைந்த இத் தலத்தை தேவார அடிகள் தெளிவாக வருணிக் கின்றன:

களியார் வண்டறையும் திருக்காளத்தி
சுந். 26—9
காராரும் பொழில் சூழ் காளத்தி—
சுந். 26—10
பல்பல இருங்கனி பருங்கி மிக வுண்டவை நெருங்கியினமாய்க்
கல்லதிர நின்று கருமந்தி விளையாடு
காளத்திமலை—சம். 327—3
கருநீல வண்டரற்றுங் காளத்தி—
அப். 221—12

என்பன அவற்றுள் சில. சம்பந்தர் தரும் வருணனைகள் கற்பனைத் திறனும் கவிநயனும் பொருந்தி அமைந்துள்ளன.

இத்தலத்தின் பொதுச் சிறப்பு, 'அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி (294—11), சங்கரர் விரும்புமலை (327-2) என்பதனல் புலப்படுகின்றது.

இறைவழிபாட்டு நிலையில் தலத்தின் சிறப் பும் அங்கங்குச் சுட்டப்படுகின்றது. அடியா ரும் தேவரும் வழிபடும் பெருமையுடையது காளத்தி:

நெறியே நின்றடியார் நினைக்கும்
திருக்காளத்தி—சுந். 26—4

முடியால் வானவர்கள் முயங்கும் திருக் காளத்தியாய்—சுந். 26—7

ஆறுநாள் வழிபட்டு உய்ந்த கண்ணப்பர் இறைவழிபாடு செய்த காளத்தியில் வழிபட உய்வு பெறுவோம் எனும் பெருநிலையும் உண்டு. சம்பந்தர் பதிகம் இதனைப் பெரிதும் பாராட்டு கிறது.

ஓங்குவண் காளத்தி யுள்ளமோ குணர்தர
வாங்கிடும் வினைகளை வாணவர்க்
கொருவனே—சம். 294—10

காளத்தி அடிகளை அடிதொழ
வீங்கு வெந் துயர்கெடும் வீடெளி
தாகுமே—294—3

காளத்தி ஒருவனை விரும்புவார்
அவர்கள்தாம் விண்ணுலக காள்வரே
—294—4

இச்சிறப்பு நிலையால்,

காளத்தி விண்ணவன் நிரைதரு கழலிணை
நித்தலும் நினைமினே—294—5
அண்ணலார் காளத்தி ஆங்கணைந்
துய்மினே—294—9

என வேண்டுகோள் விடுக்கின்ருர் சம்பந்தர்.

சம்பந்தரும், சுந்தரரும் இத்தலத்தில் வழி பட்டு, இங்கிருந்தபடியே கயிலாயத்தை எண் ணித் திருப்பதிகங்கள் பாடினர். அப்பர் சுவாமிகள், காளத்திநாதரைக் கண்டு இன்

புற்றுப் பின் கயிலாயம் போக நினைத்து, அதில் ஈடுபட்டார். 'கயிலாயத் துச்சியுள் ளான் காளத்தியான்' என்ற தொடர் அவர் காளத்திநாதரிடம் கொண்ட ஈடுபாட்டை விளக்கும்.

திருக்காளத்திக் கோயில் கி.பி. 12-ம் நூற்றுண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். நூற்றுக்கால் மண்டபம், காளிகோபுரம் முதலியன பதினுரும் நூற்றுண்டின் முற்பகுதியில் விஜய நகர மன்னர்களால் கட்டப்பட்டன என்ற செய்தி திருவண்ணுமலைக் கோயில் கல்வெட்டொன்ருல் தெரிய வருகின்றது.

இக்கோயிலை தேவகோட்டை மெ.அரு. குடும்பத்தினர் பல இலட்சங்கள் செலவிட்டுப் புதுப்பித்து 1912-ல் கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தனர். நகரத்தார் அன்பர் பலர் இங்கு நந்தவனம், பசுமடம், நகரவிடுதி, வேதபாட சாலை என்பன அமைத்துள்ளனர்.

கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலியின் கரையினில்
ஆங்கமர் காளத்தி யடிகளை யடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே.

—சம்பந்தர் 294—3


திருவண்ணுமலையில் உள்ள மண்டபங்கள் பல. தாண்டவ வாணன் செய்த திருப்பணிகளைப் புகழ்ந்து சைவ எல்லப்ப நாவலர் ஒரு பாடல் பாடியிருக்கிருர்.

அண்ணல்அரு ணுசலருக்கு ஆவணிமூ லத்திருநாள்
பண்ணிமணி மண்டபமும் பண்ணுவித்தான்—மண்ணினிசை
தீட்டினன் காவும் திருவீதி யுங்குளமும்
நாட்டினன் தாண்டவவா ணன்.

தில்லையைக் காணக் காசியில் இறக்கச்
சிறக்கும் ஆரூர் தனிற் பிறக்க
எல்லையில் பெருமை அருணையை நினைக்க
எய்தலாம் முத்தி என்றுரைத்தீர்.

லட்ச தீபம்

23—5—76 மாலை, காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணையின் வண்ணம் காஞ்சி ஸ்ரீ மடத்தின் சார்பில் அண்ணுமலையார் கோயிலில் லட்ச தீப விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு ஒரு லட்சம் பக்தர்கள் வந்திருந்தனர். விசேஷ அபிஷேகத்திற்குப் பிறகு, இறைவனுக்கும் இறைவிக்கும் சந்தனக் காப்பு சாத்தப்பட்டு, விசேஷ பூஜை நடந்தது.



தரிசிக்க முக்தி தரும்

தில்லைக் கோயில்

புலவர் ஆனந்த நடராஜ தீட்சிதர்

தில்லைக்கோயில் உலகத்திற்கே கோயில். கோயில் என்றாலே தில்லையைத்தான், சிதம்பரத்தைத் தான் குறிக்கும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றினாலும் விளங்கும் தில்லை பஞ்சபூதஸ்தலங்களில் ஆகாயத்தின் வடிவானதாகும். அவற்றுள் சிதம்பரம் இதய மாகலின், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்ற ஐந்தொழில் களும் நடராஜப் பெருமானின் ஆனந்த தாண்டவத்தில் அமைந்துள்ளன. இந்தத் தாண்டவம் உலகம் தோன்றிய கால முதற் கொண்டு நடைபெறுகின்றது. இறைவனது முழுமையான விளக்கம் அமைந்துள்ள இடம் இத்தலமே. மொழிக்கெல்லாம் அடியாகிய ஒலித் தோற்றம் தோன்றியதும், சிலம் பொலியாகிய பரதநாதம் தோன்றியதும் இத்தலத்திலே ஆகும். சைவத்திருமுறை யைப் பாதுகாத்து அளித்த உயர்வாலும், இசையுலகிற்கே பிறப்பிடமாக இருப்பதா லும், அருள் விளக்கத்து அடித்தலமாக இருப்ப தாலும் இன்றும், என்றும் திருமுறை ஓது பவர்கள் திருச்சிற்றம்பலம் என்று தொடங்கி முடிக்கும் போதும் இதையே கூறி முடிக் கின்றார்கள்.

கோயிலின் தொன்மை

தில்லைக் கோயில் உபநிஷத்துக்களில் குறிக் கப் பட்டுள்ளது. பதஞ்சலியோடு உடனு றைந்த திருமூலர் கி. மு. 6-ஆம் நூற்றாண்டினர் என்று கூறப்படுவதால் அவரால் குறிக்கப் பெற்ற திருவம்பலம், திருக்கூத்து, சிதம் பரம் முதலியன கி. மு. 6-ஆம் நூற்றாண்டின் முன்னரே விளக்கம் பெற்றிருக்கலாம். சோழ மன்னர்கள் தங்கள் குலதெய்வமாகத் தில் லைப் பெருமானை வழிபட்டு வந்தனர்.

தில்லையின் பெருமையைத் திருமந்திரம், சைவத்திருமுறை, அருணகிரிநாதர் திருப் புகழ், இராமலிங்க சுவாமியின் அருட்பாக் கள், வடமொழியில் பல நூல்கள் முதலி யன விரிவாகக் கூறுகின்றன. இங்கு இறை வனை உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்று வகையாலும் காண்கின்றோம். ஸ்ரீ நட ராஜர் உருவம், ஸ்ரீஸ்படிகலிங்கம் அருவுரு வம்; ஸ்ரீஇரகசியம் அருவம். ஸ்ரீநடராஜ ரைத் தரிசித்து, ஸ்ரீஸ்படிகலிங்கத்தை உள் ளத்தில் அமைத்துக் கொண்டு ஸ்ரீஇரகசி யத்தைத் தியானம் செய்ய வேண்டுமென்ற குறிப்பு இவற்றால் தோன்றும். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆக இம் மூவரும் ஒரே இடத்தில் கோயில் கொண்டுள்ள உயர்ந்த தலம் இதுவேயாம்.

ஆடலின் பெருமை

தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ நடராஜப் பெருமான் தாருகாவனத்து

ரிஷிகளது செருக்கை அடக்க ஒரு காலத்தில் ஆடினர். மீண்டும் இவ்வையத்தில் பதஞ்ச லிக்கும், வியாக்கிரபாதருக்கும் காட்ட ஆடிய ஆனந்த தாண்டவத்தைத் தில்லையில் ஸ்ரீநட ராஜர் இன்றும் ஆடிக் கொண்டிருக்கின்றூர்.

புலவர்கள் சொல்லோவியமாகக் கூறி யிருக்கும் இத்தாண்டவத்தைக் கலைவல்ல சிற்பிகள் அழகுமிளிரும் சிற்ப உருவமாகச் செய்து கொடுத்திருக்கின்றூர்கள். கூத்தப் பெருமானின் திருவருளே சிவகாம சுந்தரி யாகும். இவள் அருட்சக்தியாம்.

சித்சபை

தில்லையில் .ஐந்து சபைகள் உள்ளன. ஆனந்த தாண்டவம் நடைபெறும் சபையே சித்சபையாகும். கனகசபை, தேவசபை, நிருத்தசபை, இராஜசபை என்பன மற்ற நான்கு சபைகளாம். இக் கோயிலின் ஆதி அமைப்பு சிற்றம்பலமும், பேரம்பலமுமாகும். சித்சபை மரத்தால் கட்டப்பட்டு இன்றும் பல்லவர் கட்டிய குகைக் கோயிலுக்கும், கற் கோயிலுக்கும் முந்திய நிலையில் தோன்று கின்றது. இச்சபையைத் திருச்சிற்றம்பலம் என்பர். ஸ்ரீநடராஜப் பெருமானும், அவரு டைய இடப்பாகத்தில் சிவகாம சுந்தரி அம்மையும் இருக்கும் கருவறை இதுவே யாகும். இதை மாணிக்க வாசகர் ''எழில் பெறும் இமயத்தியல்புடை யம்பொற் பொலி தரு புலியூர்ப்பொது'' என்று கூறுகின்றூர். இது தங்க ஓடுகளால் வேயப்பெற்றிருக்கின் றது. இதன்மேல் தங்கக் கலசங்கள் ஒன்பது உள்ளன. அவை ஒன்பது சக்திகளாகும்.

மேலும் அதிலுள்ள கைம்மரங்கள் 64ம் கலைகளாம். ஓடுகள் 21600ம் மனிதன் ஒவ்வொரு நாளும் விடும் சுவாசங்களின் எண்ணிக்கையும், அதற்குப் பொருத்தப்பட்ட ஆணிகள் 72000மும் நம்முடைய சுவாச சஞ்சார ஆதாரமான நாடிகளின் கணக் கையும் கொண்டு நமது இருதயத்தில் இருக் கின்ற ஈசுவரனே இங்கும் இருக்கிறூர் என்பதை அறியவே நமது உடல்போல் அமைந்துள் ளது. இச் சபையில் உள்ள ஒவ்வொரு பொன் ஓட்டிலும் ''சிவாயநம'' என்ற பஞ்சாட்சரம் எழுதப் பட்டுள்ளதாகத் தில்லை யுலா கூறுகிறது. சித்சபையில் ஸ்ரீ நட ராஜப் பெருமானது வலப்பக்கத்தில் சிதம் பர இரகசியம் அதாவது ஆகாயலிங்கம் மந்திர உருவமாகத் திருவம்பலச் சக்கரத் துடன் அமைக்கப் பட்டுள்ளது. இதற்கு ஆண்டுக்கு ஒருமுறை புனுகுச் சட்டம் சாத்தப்படுகின்றது. தங்க வில்வமாலை திரு வம்பலச் சக்கரத்தின் முன்னே தொங்கவிடப் பட்டுள்ளது; இது திருவாட்சியுடன் அமைந் துள்ளது. ஸ்ரீ நடராஜரின் முன்னிலையில் ஸ்ரீ இரத்தினசபாபதியும், ஸ்ரீ ஸ்படிகலிங்கமும், இடது பக்கத்தில் ஸ்ரீ சுவர்ண கால பைர வரும், ஸ்ரீ நித்திய உத்சவரும் உள்ளனர்.

கனக சபை

கனகசபை சிற்றம்பலத்திற்கு எதிரேயுள்ள எதிரம்பலமாகும். இங்கு பெருமான் தின மும் ஆறுகால பூஜைகளும், ஆண்டில் நான்கு முறை திருமஞ்சனமும் கொண் டருளுகின்றூர்.

இங்குள்ள 18 தூண்களும் 18 புராணங் களைக் குறிப்பன. வெள்ளிப் பலகணிகள் 96. இவை தொண்ணூற்ருறு தத்துவங்களாக வும், ஸ்ரீ சித்சபையிலுள்ள ஐந்து தூண் களும் ஐம்பொறிகளாகவும், பிரம்ம பீடத்தி லுள்ள பத்துத் தூண்களில் கீழ் ஆறும் சாத்திரங்களாகவும், மேலிருக்கும் நான்கும் வேதங்களாகவும் உள்ளன.

தேவ சபை

தேவசபை என்பது பேரம்பலம் என்றும் கூறப்படும். இங்கு உத்சவமூர்த்திகள் எழுந் தருளியுள்ளனர். அநபாயனை இரண்டாம் குலோத்துங்கன் தன்குல முன்னேர் சிற்றம் பலத்தைப் பொன்வேய்ந்து திருப்பணி செய் ததால் இச் சபைக்குத் திருப்பணி செய் தான் என்று பெரியபுராணம் கூறுகின்றது. இங்குதான் பொது தீட்சிதர்கள் கூட்டங்கள் கூடிப் பேசி முடிவெடுப்பர். கூட்டம்கூடும் போது ஒரு விளக்கில் ஸ்ரீ நடராஜரை ஆவா கனம் செய்து அவ்விளக்கின் முன்னிலையில் தான் தொடங்குவர்.

நிருத்த சபை

இது நடராஜப் பெருமான் திருமுன்னர் கொடிமரத்தின் தென்பால் உள்ளது. மிகவும் சித்திர வேலைப்பாடு அமைந்த ஐம்பத்தாறு தூண்களால் தாங்கப் பெற்றது; மண்டபம் பரிகள் பூட்டிய தேர் அமைப்பு பெற்றது. இதில் ஊர்த்துவதாண்டவமூர்த்தியும், சரப மூர்த்தியும் எழுந்தருளியுள்ளார்கள்.

இராஜ சபை

இது ஆயிரங்கால் மண்டபமாகும். கோயி லின் வடகீழ்த்திசையில் உள்ளது. நட

ராஜப் பெருமான் ஆண்டில் மார்கழியிலும், ஆனியிலும் இங்கு எழுந்தருளித் திருமஞ்சனம் கொண்டருளுகின்ருர். ஆருத்திரா, ஆனித்திருமஞ்சன தரிசனங்கள் கொடுப்பதும் இம் மண்டபத்தில்தான். கீழ் வரிசைப் பத்திகள் முழுவதிலும் நர்த்தன உருவங்கள், இசையாளர் உருவங்கள் மிகவும் வனப்புடன் செதுக்கப் பட்டுள்ளன.

தில்லேயில் எல்லாம் ஐந்தாக இருக்கும். திருச்சுற்று, படி, சபை என்று எல்லாம் திருவைந்தெழுத்துக்கள் போல் ஐந்து என்று எண்ணில் அமையும்.

திருவிழா

இங்கே முதலாவது ஆனிமாதம் உத்திர நட்சத்திரத்திற்குப் பத்து நாள் முன் கொடியேறி முதல் நாள் முதல் எட்டாந் திருவிழா வரையில் உத்சவ மூர்த்திகள் திரு வீதியில் வந்து காட்சி கொடுப்பர். ஒன்பதாந் திருவிழா அன்று மூலவரான ஸ்ரீநடராஜர் ஸ்ரீ சிவகாமி இருவருமே வருவர். ஒன்பதாம் நாள் இரவு இராஜ சபையில் இருவரையும் எழுந்தருளச் செய்து காலேயில் சூரியன் தோன்றுவதற்கு முன்பு அபிஷேகம், பூஜை முதலியவை செய்தபின் பகல் 1 மணிக்கு அங்கிருந்து சித்சபைக்கு ஸ்ரீ நடராஜரும், ஸ்ரீ சிவகாமி அம்பாளும் ஆனந்த நடனம் செய்து கொண்டு வருவர்.

மார்கழித் திருவாதிரைக்குப் பத்து நாள் முன் கொடியேறி ஆனிமாதத் திருவிழாப் போல் நடைபெறும்.

நாட் பூசை

ஸ்ரீ நடராஜ மூர்த்திக்குத் தினமும் ஆறு கால பூசை நடைபெறுகின்றன. அதுவன்றிக் காலே 6 மணிக்கு கதவு திறக்கப்பட்டு ஸ்ரீ பள்ளியறையில் நைவேத்யம் செய்து தங்கப் பல்லக்கில் எழுந்தருளச் செய்யப் பெறும்.

ஸ்ரீ நடராஜரின் அபிஷேகங்கள்

நமக்கு ஒரு ஆண்டு; தேவர்களுக்கு ஒரு நாள். ஓர் ஆண்டிற்கு ஸ்ரீ நடராஜருக்கு ஆறு நாள் அபிஷேகம் நடைபெறுகின்றது. நடைபெறும் காலம் (1) சித்திரையில் திருவோணம் (2) ஆனியில் உத்திரம் (3) ஆவணியில் சதுர்த்தி (4) புரட்டாசியில் சதுர்த்தி (5) மார்கழியில் திருவாதிரை (6) மாசியில் சதுர்த்தி.

தில்லேவாழ் அந்தணர்கள்

தில்லேவாழ் அந்தணர்கள் பக்தியுடன் பூசை முதலியவை செய்தும், நகை முதலியவற்றைப் பாதுகாத்தும் வருகிருர்கள். கோயிலுக்கு வேண்டிய எல்லாச் செயல் முறைகளேயும், ஸ்ரீ நடராஜரையே தலேவராக வைத்து முறையாகச் செய்து வருகின்ருர்கள். ஞான சம்பந்தப் பெருமானுக்குச் சிவ கண நாதர்களாகக் காட்சி யளித்தனர் என்றும், ''மூவாயிரவருள் யாமும் ஒருவர்'' என்று சிவபெருமானே கூறிக்கொண்டார் என்றும், இவர்களின் பெருமையைச் சைவ புராணமும் சைவத் திருமுறைகளும் கூறும்.

வழிபடும் முறை

கோயிலுக்கு நான்கு கோபுரங்களும், நான்கு வாயில்களும் உண்டு. தெற்குக் கோபுரம் வழியாக உள் நுழைந்ததும் ஸ்ரீ முக்குறுணி விநாயகர் சந்நிதி உண்டு. உருவம் மிகப் பெரிது. மிகுந்த சக்தி வாய்ந்தவர்; பிறகு, கிழக்குப்பக்கத்திலுள்ள இராஜ சபையைக் கண்டுகளித்துத் தெற்கு நோக்கி வந்தால் ஸ்ரீ நடராஜர் கோயிலின் உட்செல்லக் கிழக்குப் பக்கத்தில் உள்ளவாயில் வழியாகப் புகுந்தால் இருபக்கமும் புருஷாமிருகம் இருக்கின்றன. தெற்குப் பக்கமாக இரண்டாம் திருச் சுற்று வழியாகச் சென்ருல் ஸ்ரீ காலஸம்காரமூர்த்தியைத் தரிசித்து, நிருத்த சபையைக் கண்டு வணங்கலாம். கொடிமரம், ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமான், ஸ்ரீ இலக்குமி அம்மன், ஸ்ரீ தண்டாயுத பாணி ஆகியோரைத் தரிசித்து இரண்டாம் திருச்சுற்றில் செல்லும் பொழுது ஸ்ரீ திருமுறை காட்டிய விநாயகர், ஸ்ரீநால்வர், ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி, ஸ்ரீ பல்லிகேஸ்வரர், ஸ்ரீவல்லபக் கணபதி இவர்களேச் தரிசித்துக் கொண்டு திருச் சுற்று நடுவிலே உள்ள வழியில் சென்ருல் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ பஞ்ச பூத ஸ்தலமூர்த்திகள், தில்லே மரம், ஸ்ரீ அறுபத்து மூன்று நாயன்மார்கள், ஸ்ரீ சண்டேசுரர் இவர்களேத் தரிசித்துக்கொண்டு கிழக்கே திரும்ப ஸ்ரீ அருணசலேசுவரர் சந்நிதி உள்ளது. திருவண்ணமலேயில் எழுந்தளியிருக்கும் இறைவனேயே ஒத்து விளங்கும் மூர்த்தியைத் தரிசித்து மகிழ்ந்து தில்லேக் கோயிலுக்கு மூலவரான, சுயம்புலிங்கமான ஸ்ரீ மூல நாதரையும், ஸ்ரீ உமைய பார்வதியையும் தரிசித்தபின் செல்லும் வழியில் கனகசபையின்

இருமருங்கும் வாயில்கள் உள. அவ் வாயில் வழியே உள் செல்ல ஸ்ரீ நடராஜமூர்த்தி, ஸ்ரீ சிவகாமி அம்பாள், ஸ்ரீ இரகசியம், ஸ்ரீசுவர்ண கால பைரவர், ஸ்ரீ நித்யோத்சவர், ஸ்ரீ ஸ்படிகலிங்கம், ஸ்ரீ இரத்தின சபாபதி ஆகியவர்களை உளம் ஒன்றத் தரிசனம் செய்யலாம். இங்குச் சென்றாலே புலன்கள் தாமாகவே இறைவனை நோக்கிச் சென்று விடும்.

''எல்லையில் தனிப் பெருங்கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்'' என்று சுந்தரர் அடைந்தது பற்றிச் சேக்கிழார் கூறுவது போல் எல்லோரும் அம் மகிழ்ச்சியை அடைந்து இஷ்ட சித்தி பெறலாம்.

சிற்பக்கலை : குதிரை பூட்டப்பெற்று, அருங் கலைத்திறன் அமைந்த சக்கரம் அமைக்கப் பெற்று மிகவும் சித்திர வேலைப் பாட மைந்த ஐம்பத்தாறு தூண்களால் தாங்கப் பெற்றுப் புதுப்புது உத்திகளைப் பயன்படுத்தி அமைந்த சிற்பத்திறனை நிருத்த சபையில் கண்டு மகிழலாம். இராஜ சபையின் கீழ் வரிசைப் பத்திகள் முழுவதிலும் நடனம் புரியும் மங்கையர்களை அமைத்திருக்கும் அழகு இசையாளர் உருவங்கள், சிவகாமி அம்மை கோயிலில் பெரிய திருச்சுற்று மண்டபத்தின் கீழ் வரிசையில் உள்ள நட னம் புரியும் பெண்கள், பல்வகை இசைக் கருவிகள், பரத நாட்டியத்தின் பல்வகைக் கோலங்கள் கண்டு, மகிழ்தற்குரியன. பரதசாத்திரத்தை விளக்கும் சிற்பங்கள் கிழக்குக் கோபுர வாயிலினும் உள்ளன. சிவகாமி அம்மன் கோயிலில் இரட்டைத் தூண்கள் அமைந்துள்ள இடத்தில் தொங் கும் கல்சங்கிலித் தொடர் மிகுந்த சிற்ப நுட்பத்தைக் காட்டும்.

ஓவியக்கலை : அறுபத்து மூன்று நாயன் மார்களுக்கு எதிரில் ஸ்ரீ சிவனுடைய 25 மூர்த் தங்களும், ஸ்ரீ சக்ரம், ஸ்ரீ தேவியின் அம்ச மும் ஓவியமாக வரைந்துள்ள பழைய ஓவியம் ஆகும். சிவகாமி அம்மன் கோயிலில் முன் மண்டபத்தில் உள்ள இரு பக்கத்திலும் மிகவும் பழமையான ஓவியத்தைக் காண லாம். இது மிகவும் நுட்பமிக்க ஓவிய மாகும்.

பாண்டிய நாயகத்தில் கந்தபுராணத்தையே தொடர்ச்சியாக ஓவியமாக வரைந்திருப்பது மிகவும் அழகுடையது. இராஜசபையிலும் நவ தாண்டவம் ஓவியக்கலைக்கே அழகு ஊட்டுவதாக அமைந்துள்ளது. பழமையும், புதுமையும் கொண்டுள்ள ஓவியக் கலை இங்கு உயர்ந்த நிலை பெற்றுள்ளது.

ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள்

முதற்குலோத்துங்கன், முதல் விக்கிரமன் இவர்களின் முயற்சியால் தில்லைக் கோவிந்த ராஜப் பெருமாள் சந்நிதி அமைந்தது. தில்லை வாழ் அந்தணர்கள் ஸ்ரீகோவிந்தராஜப் பெரு மானுக்குப் பூசை செய்து வந்தார்கள் என்று திருமங்கையாழ்வார் கூறுகின்றார். சிவ, வைணவ வேற்றுமையின்றி இன்றும் ஸ்ரீ கோவிந்தராஜருக்குப் பூசைகள் உரிய முறையில் நடந்து வருகின்றன.

சோழர் திருப்பணி

விஜயாலயன் மகனை ஆதித்தன் கி.பி, (870-907) திருமூலட்டானப் பெருமானடி களுக்கு நந்தா விளக்கு அளித்தான். ஆதித்த னும், பராந்தகனும் தில்லையம்பலத்திற்குப் பொன்வேய்ந்துள்ளனர். இவன் பின்வந்த முதல் இராஜராஜன் (கி. பி. 985-1013) தில்லைக்குப் பல திருப்பணி செய்தான். தில்லை யில் பொதிந்திருந்த தேவாரப் பாக்களை எடுத்து நம்பியைக் கொண்டு ஏழு திருமுறைகளாக வகுத்தான். தில்லை மூவாயிரவர் அவனுக்கு ''சிவபாத சேகரன்'' எனப்பட்டம் சூட்டி னர். சோழர்கள் தொடர்ச்சியாக, பரம் பரையாகத் தில்லைக்குத் திருப்பணி செய்து வந்துள்ளனர். கடைசியாக மூன்றாம் இரா ஜேந்திரன் (கி.பி. 1246-1279) திருப்பணி செய்தான்.

பாண்டியர் திருப்பணி

பாண்டியர்களில் தலைசிறந்த ஜடாவர் மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1251-1271) தன் வெற்றிகள் காரணமாகத் திருச்சிற்றம்பலவனை வணங்கிக் கோயிலில் துலாபார தானம் வழங்கினான்.

இவன் தில்லையில் மேற்கு இராஜ கோபுரத்தை அமைத்தான். இவனுக்குப்பின் வந்த பாண்டியர்கள் நந்தவனங்கள் அமைத் தும், விழாக்கள் நடத்த உதவியும் ஆடூரில் 116 வேலி நிலங்களை 108 அந்தணர்களின் பராமரிப்புக்காக விட்டதும், அவர்கள் வேலிக்கு நான்கு கல நெல்லாகத் தில்லை நடராஜப்

பெருமானுக்குக் கொடுக்கச் செய்தும், இம் முறையில் இந்தக் கோயிலுக்குப் பலவகையில் திருப்பணி புரிந்துள்ளனர்.

விஜயநகர அரசர் திருப்பணி

பதினைந்தாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் விஜயநகரவமிச அரசர்கள் ஆளத் தலைப்பட்டனர். அவர்களில் தலையாயவர் கிருஷ்ண தேவராயர். அவர் கி.பி. 1516ல் கோயிலின் வடக்கு இராஜ கோபுரத்தைக் கட்டினுர். மதுரை வீரப்ப நாயக்கன் கி.பி 1572-1595 திருக்கோயிலின் வெளிச் சுற்று, இரண்டாவது மதிலான வீரப்ப நாயக்கன் மதிலை எடுப்பித்தான்.

சேரர் திருப்பணி

சேரமான் பெருமாள் நாயனுர் வழிவந்த கொச்சி மன்னர் மகர்ராஜா ராமவர்மா என்பவர் தம் நாட்டில் ஐந்து கிராமங்களையும், சிதம்பரம் கோயிலுக்கு முன்னரே விடப்பட்ட நிலங்களையும் இறையிலியாக்கி நடராஜரின் நிவேதனத்திற்காக விட்டதும், சேரர் பலரும் பல திருப்பணிகள் செய்ததும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

18, 19ஆம் நூற்றுண்டுகளில் பிற நாட்டாராலும் பிற மதத்தாராலும் கோயிலுக்கு இடையூறு நேர்ந்தது. காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் (கி.பி 1754-1794) தமது பெரும் பொருளைக் கொண்டு இங்கு திருப்பணி செய்தார். அவருடைய தமக்கையார் சுப்பம்மாள் என்பவரும் அரிய பல பணிகள் செய்தார். இருவருடைய திருவுருவங்களும் கிழக்குக் கோபுர வாயிலில் உள.

நகரத்தார் திருப்பணி

தில்லைப்பெருமானுக்குச் செட்டி நாட்டு அரசர் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களும், அவர்களுக்கு முன்னர், அவர்களுடைய தமையனுர் சிதம்பரம் செட்டியார் அவர்களும், திவான் பகதூர் ராமசாமி செட்டியார் அவர்களும், அவர்களுடைய முன்னேர்களும் அரும்பணிகள் செய்துள்ளனர். இராஜகோபுரங்கள் பழுது பட்டவை யாவும் இவர்களால் திருத்தமுற்றன. கனகசபை பொன்முலாம் பூசப்பெற்றது. அகளங்கன் திருமாளிகையும், குலோத்துங்கன் திருமாளிகையும் அவற்றின் உள்ளடங்கிய திருவீதிகளும் புதுப்பிக்கப்பட்டன. முக்குறுணிப் பிள்ளையார் கோயில் சுற்று மண்டபத்துடன் அமைக்கப்பட்டது. சிவகங்கைக் குளத்தின் படிகள் அகலமும், திருத்தமும் பெற்றன. இரண்டாம் பிரகாரத்திலுள்ள அழகிய திருச்சுற்று மாளிகைகளும் ஆக்கப்பெற்றன. குடமுழுக்கு 1891ல் செய்யப்பட்டது. இப் பெருங் குடும்பத்தினர் தில்லைப்பெருமானுக்குப் பலப்பல திருப்பணிகள் செய்துள்ளனர். செய்து வருகின்றனர். இவற்றைத் தொடர்ந்து, இவர்கள் தில்லைப் பெருமானுக்கு நாள்தோறும் அன்னப்பாவாடையும், வெவ்வேறு திருப்பணிகளையும் செய்து கொண்டிருக்கின்றுர்கள். சிவகாமி அம்மன் கோயில் திருப்பணிக்காக மிகுந்த பொருள் கொடுத்து 1972ல் குடமுழுக்கு நடைபெற ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் உதவி செய்தார்கள். அவர்கள் செய்யும் திருப்பணிகள் மிகப்பலவாகும்.

ஸ்ரீ நடராஜரின் இரண்டாவது குடமுழுக்கு


ஆடூர் பெரு நிலக்கிழார் திரு. எம். இரத்தின சபாபதி பிள்ளையவர்களது பெருங் கொடையாலும், தருமபூஷணம் திரு. செ. இரத்தினசாமிச் செட்டியார் அவர்கள் போன்ற செல்வர்களின் பேருதவியாலும் சிற்றம்பலத்தில் திருப்பணிகள் நிறைவேறி மிகவும் போற்றும் வகையில் 7-7-1955ல் குடமுழுக்கு நடந்தது.

நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற திருப்பணிகள்

இப்பொழுது மதில் திருப்பணியும்,இராஜ கோபுரத் திருப்பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஸ்ரீ நடராஜர் நடமாடும் பந்தல் நிறைவுறும் நிலையில் விரைவாகத் திருப்பணி நடைபெறுகிறது. மேல் மண்டப தளவரிசையும் விரைவில் நிறைவுறும். கொடிமரத்தின் மேல் புதுமண்டபம் கட்டத் தொடங்கியுள்ளனர். இவையாவும் பல வள்ளல்களினுடைய முயற்சியாலும், கொடையாலும் நடைபெறுகின்றன. சைவ அன்பர்கள், கலை அன்பர்கள் யாவரும் இக் கோயில் திருப்பணிக்குத் தம்மால் இயன்றதைக் கொடுத்து ஒல்லும்வகையான் உதவி ஸ்ரீ நடராஜரின் இன்னருள் பெற்று நீடு இனிது வாழ வேண்டும்.




அண்ணாமலையார் கருவறை வாயிலும் ரிஷி கோபுரமும்
(1976 திருப்பணிக்குப் பிறகு)



ராஜ கோபுரமும் 16 கால் மண்டபமும்
(1976 திருப்பணிக்குப் பிறகு)



சிவகங்கை விநாயகர் கோயில்
(1976 திருப்பணிக்குப் பிறகு)



வரிப் புலிகள் காவல் செய்ய வீற்றிருந்த

ஸ்ரீ ஈசான்ய ஞானதேசிகர்

(*1750 1829*)

இறக்க முத்தி தரும் இறவாப் பெருநகரம்

டாக்டர் டி. பி. சித்தலிங்கம்

உயிரினங்களில் மனிதனே உயர்ந்தவன். சிந்திக்கும் ஆற்றல் அவனுக்குமட்டுமே உண்டு. அந்தச் சிந்தனை மிக ஆழமாக வேரோடி, தான் யார், தன் சுற்றுப்புறம் எத்தகையது என்பதையெல்லாம் கண்டு அறிய முயல்கிறது. உயிர் என ஒன்று உண்டு என்பதையும் அதற்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பையும் அது கண்டறிந்தது. உலகம் தோன்றிய முறை, அது தோற்றுவித்தவன், அவனுக்கும் உலகிற்கும், உயிருக்கும் இடையே உள்ள தொடர்பு முதலியவை பற்றிய சிந்தனைகளின் விளைவே மெய்ப்பொருளியல் ஆகும். பொய்யினின்றும் தோற்றத்தினின்றும் மெய்யைப் பிரித்துக் காண முயல்வது மெய்ப்பொருளியல் (Philosophy). அந்த மெய்யை அடைவதற்குரிய முறையை வழி வகைகளை எடுத்துக் கூறுவது சமயம் (Religion) ஆகும். அந்த மெய்ப்பொருளுக்கு ஒரு வடிவத்தையும் வழிபடு முறைகளையும் சமயநெறி (Theology) விளக்க முயல்கிறது.

இந்திய நாட்டின் சமயங்களெல்லாம் இந்த அடிப்படையையே கொண்டவை. உறுதிப் பொருளை அடைவதற்குரிய வழிகளையும் அதை அடைய வேண்டியதன் இன்றியமையாமையையும் அவை விளக்குகின்றன. உயிரின் இயல்பு இன்பமேயாம். இறைவன் இன்பமே வடிவானவன். உயிர் அடையும் துன்பம் இடையில் வந்தது; அது செயற்கையானது; அதிலிருந்து விடுபடுவதே முத்தி. முத்தி நெறியை அறிய வழிகாட்டுபவர் குரு ஆவார். அவர் இறைவனே ஆவார் என்று நம் சமயங்கள் கூறுகின்றன. ‘மூர்த்தி, தலம், தீர்த்தம் முறைமையால் தரிசித்தோர்க்கு நல் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே’ என்பது ஆன்றோர் வாக்கு. பேரின்பமாகிய வீட்டுப் பேற்றுக்கு வழி காட்டுபவர் குரு. அவர் கிடைக்க வழி வகுப்பவை மூர்த்தியும், தலமும், தீர்த்தமும் ஆகும். பெரியோர்களால் முறையாக அமைக்கப் பெற்று வழிபாடு செய்யப் பெற்றது மூர்த்தி ஆகும். இடத்தின் சிறப்பாலே பெருமை பெறுவது தலம். நீர் நிலை சிறப்புப் பெற்றிருந்தால் அது தீர்த்தம் எனப்படும். இந்த மூன்றும் தனித்தனியாகவோ ஒன்று சேர்ந்தோ முத்திக்கு வழி காட்டுகின்றன. எனவே, இம்மூன்றில் ஏதேனும் ஒன்று சிறப்பாக அமையும் இடத்தை முத்தித்தலம் என்று குறிப்பிடுகிறோம். நம் நாட்டில் முத்தி தரும் நகர்களாக ஏழு குறிக்கப் பட்டிருக்கின்றன. (வட) மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, அயோத்தி ஆகியவையே அவை ஆகும்.

இதுமட்டுமன்றி வேறு வகைச் சிறப்பும் பெற்றுள்ள நகரங்களும் உண்டு. அவை திருவாரூர், திருவண்ணமலை, சிதம்பரம், காசி என்பன. திருவாரூரில் பிறந்தாலே முத்தி கிட்டும். திருவண்ணமலையை நினைத்தாலே வீடு எய்தலாம். சிதம்பரத்தைக் காண முத்தி கிடைக்கும். காசியில் இறப்பது முத்திக்கு வழி.

காசி, பொதுவாக இந்துக்களுக்கும், குறிப்பாகச் சைவர்களுக்கும் மிக உயர்ந்த திருத்தலம் ஆகும். வாழ்நாளில் ஒருமுறையேனும் காசிக்குச் சென்று அதனைக் கண்ணுரக் காண வேண்டும் என்ற ஆசை ஏற்படாத சைவர்களே இல்லை எனலாம். காசிக்கு ஏன் இந்தப் பெருமை? மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகையிலும் அது சிறப்புப்பெற்று விளங்குகிறது.

காசியிலுள்ள இறைவன் விசுவநாதர், விசுவேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

பல்வேறு உலகங்களின் தொகுப்பு 'விஸ்வம்' என்று கூறப்படும். எல்லா உலகங்களுக்கும் அவற்றிலுள்ள உயிர்களுக்கும் உயிரில் பொருள்களுக்கும் இறைவனுய், அவற்றுள்ளே ஊடுருவி நின்று அவையேயாய் விளங்குபவன் விசுவேசன். 'எல்லா உலகமும் ஆனுய் நீயே' என்று பாடுகிருர் திருநாவுக்கரசர். விசுவநாதர் கோயில் காசியின் நடுவே சிறிய அளவிலே அமைந்துள்ளது. கருவறையில் வடகிழக்கு மூலையில் வெள்ளித் தொட்டிலில் நடுவிலே அமைந்துள்ள பாணலிங்கமே விசுவநாதர். நர்மதை நதியினிலே இயற்கையாகக் கிடைக்கும் இலிங்கமே பாண லிங்கமாகும். பொள்ளப் படாத (உளியால் செதுக்கப்படாத) திருமேனி விசுவநாதருடையது. இந்தப் ''பொள்ளாப் பிள்ளை''யை வாழ்வில் ஒருமுறையேனும் காணவும்,கண்ட பின் கரைந்து நிற்கவும் உருகுபவர் பல கோடி மக்களாவர். விநாயகர், திருமகள் போன்ற பலரால் வழிபடப் பட்டவர் விசுவநாதர்.

விசுவநாதர் கோயிலை அடுத்துள்ளது அன்னபூரணி கோயிலாகும். எல்லா உயிர்களும் வயிருர உண்டு மகிழ அருள்புரிவதையே நோக்கமாகக் கொண்டு தெய்வத் தாய் இங்கே வீற்றிருக்கிருள். பசிப்பிணியைத் தீர்க்கக் காத்திருக்கும் இந்தத் தாயே பசிப்பிணியாக இருக்கிருளாம். ''யாதேஷு சர்வ பூதேஷு க்ஷுதா ரூபேண ஸம்ஸ்திதா நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:'' திருமகள், கலைமகள் இருவரும் துணையாக இருக்க, இருந்த கோலத்திலே காட்சி தருபவள் காசி அன்னபூரணி.

காசி மாநகர் கங்கைக் கரையில் அதன் வடக்கே அமைந்துள்ளது. கங்கையின் இரண்டு உபநதிகளாகிய வருணை, அஸி, ஆகியவற்றுக்கு இடையே இந்நகரம் இடங் கொண்டுள்ளது. இதனுலேயே இதற்கு 'வாராணஸி' என்று பெயர். இது 'வாரணுசி' என்றும் விளங்கப்படும். இதனை 'வாரணவாசி' என்று தமிழ் இலக்கியம் குறிப்பிடுகிறது. ஆனந்தவனம், மஹாஸ்மசானம், அவிமுக்தம் முதலிய பல்வேறு பெயர்களும் இதற்கு உண்டு. இவ்வூரில் இறக்கும் தறுவாயில் உள்ள உயிர்களை இறைவன் தன் மடி மீது கிடத்தி வலது காதில் தாரக மந்திரத்தை (பிரணவத்தை) உச்சரிக்கிருனும். அப்போது அன்னபூரணி அன்னை தன் முந்தானையால் வீசி அந்த உயிரின் களைப்பைப் போக்குகிருளாம். இறைவனுலேயே உபதேசிக்கப்படவும் .அதனுல் உயிர்கள் முத்தி பெறவும் வழி தருவதால் காசி 'முத்தி க்ஷேத்திரம்' என அழைக்கப்படுகிறது. அதனுலேயே 'காசியில் இறக்க முத்தி', என்னும் தொடர் வழக்கிலிருந்து வருகிறது.

'பாயும் நதிகளிலே நான் கங்கையாக இருக்கிறேன்' என்று கண்ணன் கீதையிலே குறிப்பிட்டுள்ளதை அனைவரும் அறிவார்கள். ஆறுகளிலே புனிதத்தன்மை மிகுந்ததாகக் கருதப்படுவது கங்கை நதியாகும். இமயத்தில் தோன்றி எல்லையற்றுப் பரந்து ஓடி வரும் கங்கை பிரயாகையில் (அலகாபாதில்) யமுனை, சரசுவதி ஆகிய இரு தோழிகளுடன் கலந்து கொள்கிருள். சரசுவதி மக்களின் புறக்கண்களுக்குப் புலப்படாமல் (அந்தர் வாகினியாக) கங்கையில் கலக்கிருள்.

இவர்கள் மூவரும் காசியில் உறையும் இறைவனின் திருவடிகளைத் தழுவி தமது பாவங்களைப் போக்கிக் கொள்வதற்காக ஓடி வருகிருர்கள். மூன்று ஆறுகளும் கங்கை என்ற பெயரிலே பாய்கின்றன. காசியில் கங்கை வடக்கு நோக்கி (உத்திரவாகினியாக) ஓடிக் கிழக்கே திரும்புகிறது. வடக்கு நோக்கி ஓடும் ஆறு சிறப்புடையது. காசி நகர்ப் பெருமைக்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்.

'கஞ்சி காமாட்சி, மதுரை மீனுட்சி, காசி விசாலாட்சி' என்று தமிழ் நாட்டில் வழங்குவதை அனைவரும் அறிவர். ஆனுல், வடநாட்டில் 'காசி விசாலாட்சி' என்னும் வழக்கு இல்லை. ஆங்குள்ள இறைவியின் பெயர் அன்னபூரணி. தமிழ் வழக்கில் உள்ளவாறு அங்கே விசாலாட்சி இல்லாத குறையை நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்கள் தீர்த்து வைத்திருக்கிருர்கள். காசி மன்னரிடமிருந்து இடம் பெற்று நகரின் நடுவில் விசாலாட்சிக்கு ஒரு திருக்கோயிலை எழுப்பியிருக்கிருர்கள். தமிழ்நாட்டு முறையிலேயே அந்தக் கோயில் அமைந்திருக்கிறது. உத்சவ மூர்த்தியும் நவக்கிரகங்களும் கூட அங்கே இருக்கின்றன. நவராத்திரி விழா இந்தக் கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

நகரத்தார் செய்துள்ள மற்றொரு பெரும் பணி அங்குள்ள நகரத்தார் சத்திரமாகும்.

இது கட்டப்பட்டு ஏறக்குறைய 170 ஆண்டுகள் ஆகின்றன. நகரத்தாருடைய திருப்பணிகளிலேயே தலை சிறந்தது விசுவ நாதர் கோயில் பூஜை ஆகும். அந்தக் கோயிலில் நாள்தோறும் நான்கு பூஜைகள் உண்டு. அவற்றுள் மூன்று, அதாவது விடியற்காலை, உச்சிவேளை, இரவு (அர்த்த ஜாமம்) ஆகிய வேளைகளில் நடைபெறும் பூஜை நகரத்தார் நடத்தி வைப்பதாகும். பூஜையின்போது பூஜைப் பொருள்களை யெல்லாம் நகரச்சத்திரத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். நான்காவது, மாலை நேரத்தில் நடைபெறும் சப்தரிஷி பூஜை ஆகும். இது, கோயிலைச் சேர்ந்த பண்டாக்களே (குருக்கள்மார்) செய்வதாகும். மற்ற நேரங்களில் இறைவனைத் தொட்டுத் தழுவிக் கட்டிக் கும்பிடும் மக்கள் இந்த நான்கு பூஜை வேளைகளில் மட்டும் கருவறைக்கு வெளியே இருப்பார்கள். நகரத்தார் பூஜையின் போது நாதஸ்வரம் வாசிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நகரச் சத்திரத்தில் 'நகரேஸ்வரர் கோயில்' உள்ளது.

தமிழ்நாட்டின் மற்ெருரு சின்னமாக விளங்குகிறது குமாரசுவாமி மடம். மீனுட்சி அம்மை பிள்ளைத்தமிழ், கந்தர் கலி வெண்பா, நீதிநெறி விளக்கம் முதலிய வற்றை இயற்றிய குமரகுருபரசுவாமிகள் காசியில் வந்து தங்கி, சைவ சித்தாந்தப் பிரசாரம் செய்து வந்தார்கள். கம்ப ராமாயணத்தை எடுத்து விளக்கியதாகவும் கூறுவார்கள். அவர் பெயரால் வழங்கி யிருந்த மடமே, பெயர் திரிந்து 'குமார சுவாமி மடம்' என வழங்குகிறது. கேதார கட்டத்தில் திருக்கேதார நாதர் கோயிலை அந்த மடம் நிர்வகித்து வருகிறது. இம் மடத்தில் உச்சி வேளையில் ஏழை எளியவர்க்கு உணவளிக்கும் தொண்டு இன்றும் நடை பெற்று வருகிறது. இந்த அன்னதானம் நகரச் சத்திரத்திலும் உண்டு.

அண்மையில் தோன்றிய கோயில் 'காம கோடீசுவரர் கோயில்' ஆகும். கேதார நாதர் கோயில் அருகே அமைந்துள்ள இது காஞ்சி காமகோடிப் பெரியவரின் அருளாணையால் கட்டப்பட்டதாகும். தமிழ்நாட்டின் சிற்பத்திறமை எடுத்துக் காட்டும் வகையில் இது அமைந்துள்ளது.

இவை தவிர, துளசிதாசருக்கு அருள் புரிந்த அனுமார் கோயில் (சங்கடமோசன்), துளசிதாசர் பெயரில் அமைந்துள்ள கோவில் (துளசிமானச மந்திர்), காசியில் காவல் தெய்வமாகிய காலபைரவர் கோயில், பிந்து மாதவர் கோயில், முதலிய வேறு பல கோயில்களும் அங்கே இருக்கின்றன. புத்த பெருமான் முதன் முதலில் தர்மோப தேசம் செய்த 'சாரநாத்', காசிக்கு அருகிலேயே இருக்கிறது.

இவ்வாருக, விசுவநாதர் என்னும் மூர்த்தியாலும் முத்திச் க்ஷேத்திரம் என்னும் தலப் பெருமையாலும் உத்தரவாகினிகங்கை என்னும் தீர்த்தப் பெருமையாலும் காசி மாநகரம் உலகிலேயே தன்னிகரற்று விளங்குகிறது.

காசி விசாலாட்சி

விசாலாட்சி என்ற சக்தி, காசியில் விசுவநாதரோடு அபின்னமான சக்தி. விசாலாட்சிக்கும் விசுவநாதருக்கும் வேறுபாடு இல்லை. இது தமிழருடைய சைவ மதம், ஒரே பரம்பொருள் அப்பனுக விசுவநாதராகவும் அம்மையாக விசாலாட்சியாகவும் காட்சி தருகிறது. இந்தத் தத்துவ நுட்பம் சைவ சித்தாந்தம் அறிந்தவருக்கே நன்கு புரியும்.

அன்னபூரணி பராசக்தியான விசாலாட்சி கொண்ட கோலங்களில் ஒன்று (ஓர் அவசரம், நிலை, என்று சமய பரிபாஷையில் சொல்வோம்.) அன்னபூரணி என்பது விசாலாட்சியே. விசாலாட்சியே பல சக்திகளாயும் இருந்து அன்னபூரணியாயும் விளையாடுகிருள் என்று சிவஞான தேசிகர் அன்னபூரணிப் பதிகத்தில் பாடுகிருர்.

காஞ்சி காமாட்சி அம்மன் கோயில்

டாக்டர் வெ. தெ. மாணிக்கம்

காஞ்சி மாநகர் :

மாதவம் செய்த தென்திசை எனச் சேக்கிழார் போற்றிய தென்னாட்டில், பாலாறு வளஞ் சுரக்கப் பண்பாடு தலைசிறக்கும் தொண்டை நாட்டில், வேகவதியாற்றின் கரையில் அமைந்திருக்கும் பழம் பெருமை மிக்க பதி காஞ்சி புரம். காஞ்சி மரம் (ஆற்றுப் பூவரசு) மிக்கதால் இப்பகுதி காஞ்சிபுரம் எனப் பெற்றது. நில மகளுக்கு ஒட்டியாணம் (காஞ்சி=ஒட்டியாணம்) போன்று விளங்குவதால் இப்பெயர் வந்ததெனவும், (காஞ்சி=நிலையாமை) நிலையா உலகில் நிலைத்தது பரம் பொருள் ஒன்றே என அன்னை காமாட்சி உணர்த்தியதால் இப்பெயர் பெற்றதெனவும் கூறுவர். தொன்றுதொட்டு ஆட்சித் தலைநகராக விளங்கி வரும் சிறப்புடையது. கல்விக்கும், கலைக்கும், பட்டுக்கும் பெயர் பெற்றது இப்பண்டைய நகரம். ஆதி சங்கரர், அறவண அடிகள், மணிமேகலை, தின்னாகரர், தருமபாலர், சீன யுவான் சுவாங், கௌடில்யர், இராமனுசர், வேதாந்த தேசிகர், கணி கண்ணன், மகேந்திர பல்லவன், நந்திவர்மன், கச்சியப்ப சிவாச்சாரியார், சிவஞான சுவாமிகள், பரிமேலழகர், சியாமா சாத்திரி, நயினாப் பிள்ளை, எல்லப்ப பிள்ளை, பச்சையப்பர் ஆகியோர் புகழ்மிக்க இந்நகரின் புகழை வளர்த்த பெருமக்கள் பலருள் சிலராவர்.

எட்டுத்திக்கும் கோயில்களும், கோட்டங்களும் நிறைந்து பட்டொளி வீசும் இந்நகர் தெய்வ மணங்கமழும் திருநகராகத் திகழ்கிறது. வட நாட்டவரும், தென்னாட்டவரும் வணங்கி ஏத்தும் பெருமை மிக்கது இவ் வளநகரம். சைவர், வைணவர், சமணர், சாக்கியர் (புத்த மதத்தவர்) அனைவருக்கும் பொதுவான புண்ணிய பூமி.

நறுமலர்களில் தாமரையும், நன்னதிகளில் கங்கையும் போல் நகரங்களுள் தலையாயதாக மதிக்கப் பெறுவது கச்சியம் பதி. முத்திதரும் தலம் ஏழனுள் முதன்மையானது. நிலம், நீர் தீ, காற்று, வான் என்னும் முதற்பொருள் ஐந்தால் பெருமை பெறும் இடங்கள் (பஞ்ச பூதத்தலங்கள்) ஐந்து. அவை முறையே காஞ்சிபுரம், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, தில்லை. இவற்றுள் முன்னின் நிலங்குவது காஞ்சி. பல திருப்பதிகளைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டிருக்கும் சிறப்பு காஞ்சி நகருக்கு மட்டுமே உரியது. இங்கு 108 சிவாலயங்களும், 18 திருமால் தலங்களும் உள என்ப. அறுவகைப்பட்ட வைதிக சமயங்களை நிலை நிறுத்தி அத்வைத மதக் கொள்கைகளைப் பரப்பிய அண்ணல் ஆதிசங்கரர் நிறுவிய காமகோடி பீடம் அமைந்தது.

அம்பிகையின் பஞ்சபீடத்தலங்களுள் ஒன்றாகிய பிலாகாசத்தலமாக விளங்கும் இத்தலம் சக்தி பீடங்களில் தலை சிறந்தது. திருவாரூர் பிறக்க முத்தி, திருவண்ணாமலை நினைக்க முத்தி, திருக்காஞ்சி வசிக்க முத்தி, திருத்தில்லை வழிபட முத்தி, திருக்காசி இறக்க முத்தி என் பதற்கிணங்க, தன்னகத்தே வாழ்வோரனை வருக்கும் முத்தியருளும் மோட்சபுரி கச்சி மூதூர். யாவற்றுக்கும் மேலாக அரனைக் குறித்து அன்னை காமாட்சி மாதவம் செய்த மாண்புடையது இம்மாநகரம். காஞ்சியின் பெருமை விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்.

கோயில் மாநகர் என்ற சிறப்புக்குரிய இக் காஞ்சி நகரில் எத்திக்கும் வானளாவி நிற்கும் கோபுரங்கள் எண்ணற்றவை. காஞ்சி நகரின் கிழக்கெல்லையில் வரதராசப் பெருமாளும் மேற்கெல்லையில் ஏகாம்பரநாதரும் நடுவே காமாட்சியம்மையும் கோயில் கொண்டிருக்கும் விதம் மலைமகளின் மணக்கோலத்தை அகக்

கண்ணில் நிலை நிறுத்துவதாகும். சிவகாஞ்சியில் திருவேகம்பம், குமரகோட்டம், காமகோட்டம் என்ற முறையில் கோயில்கள் அமைந்திருப்பது சோதி வடிவான சுந்தரரின் சோமாசுக் கந்த வடிவத்தை நினைவுறுத்துகிறது.

காமாட்சியம்மன் கோயில் :

பெருமை மிக்க காஞ்சியில் உள்ள அருமை மிக்க கோயில்கள் பலவற்றின் மத்தியில் நடுநாயகமாகத் திகழ்வது காமாட்சியம்மன் ஆலயம். தொன்மையும் புகழும் உடைய இக்கோயிலில் காஞ்சியின் இதயமாக இருந்து இயக்கும் அன்னை காமாட்சி காமகோடி பீடத்தவர்க்குக் குலதெய்வம்; காஞ்சி மாநகரை ஆளும் தெய்வம். (1) கறைமிடற்றோன் கண்ணைப் பொத்திய கறையகலக் கயிலையிலிருந்து காஞ்சி வந்து, கம்பை நதிக்கரையில் கடுந்தவம் புரிந்தாள் அன்னை. வீறு கொண்டோடி வந்த வெள்ளத்தைக் கண்டு வெருவி ஓடாது, நில்லா உலகில் நிலைத்தது பரம்பொருள் ஒன்றே என உலகோர்க்குக் காட்ட, மணல் இலிங்கத்தை இறுகப்பற்றி உளம் உருகி மெய் மறந்து நின்று ஒன்றினாள். வெள்ளம் தணிந்தது. தழுவி மகிழ்ந்தாள் தலைவி. தழுவக் குழைந்தார் தலைவர். கா=நோன்பு நோற்றல். மாட்சி=பெருமை. நோன்பு நோற்ற பெருமைக்குரியவள்=தவம் செய்த தவமாம் தையல்=காமாட்சியானாள். (2) சிவனால் எரிக்கப்பட்ட மன்மதனை உயிர்ப்பித்துக் காத்தவள் தேவி. உலகில் (காம+ஆட்சி) காமனுடைய ஆட்சி மீண்டும் ஏற்படக் காரணமாக இருந்தவள் காமாட்சியானாள். (3) பிரமன், விட்டுணு, உருத்திரன் என்னும் மூவரையும் தன்னுடைய இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்திகளால் தோற்றுவித்து ஆக்கல், காத்தல், அழித்தல் எனும் உலக விளையாட்டைத் தடையின்றி நடத்தி வருபவள் பராசக்தி. க=நான்முகன். அ=திருமால். ம=சிவன். அட்சி=கண். ஆட்சி=ஆளுதல். மும்மூர்த்திகளையும் மூன்று கண்களாகக் கொண்ட முக்கண்ணி—மூவரையும் ஏவல் கொள்ளும் மூலசக்தி—காமாட்சி எனப்பட்டாள். (4) கமம்=நிறைதல். கமம்>காமம். காம+ஆட்சி=காமாட்சி. தடங்கண்ணியின் பெருங்கருணை என்னே! தன் திருநோக்கால் உயிர்களின் விருப்பங்களை நிறைவேற்றிவைப்பவள் காமாட்சியானாள். வழிபடுவோர் விரும்பியவற்றையெல்லாம் வாரி வழங்கும் அன்னை உறையுமிடம் ''காமபீடம்'' எனப்பட்டது.

நாற்றிசையிலும் நான்கு கோபுரங்களையும் உள்ளே இரண்டு திருச்சுற்றுக்களையும் உடைய இக்கோயிலில் அன்னை காமாட்சி அருளாட்சி புரிகிறாள். ஆலயத்தின் உட்சுற்றின் நடுவே அமைந்துள்ள அரங்கம் காயத்திரி மண்டபம் எனப்படும். இம்மண்டபத்தை ஆதாரமாகக் கொண்டு கருவறை (மூலத்தானம்) அமைந்துள்ளது. கருவறையில் 'ஓம்' எனும் பிரணவ வடிவில் அமைந்த பீடத்தின் மீது காமாட்சியம்மன் திருவுருவம் உள்ளது. சித்தாசன நிலையில், இராசராசேசுவரி வடிவில், அமர்ந்துள்ளாள் அன்னை. காலிற் சதங்கை; இடுப்பில் ஒட்டியாணம். கடகம் செறிந்த நான்கு கைகளில் அங்குசம், பாசம், மலர்க்கணை, கரும்பு வில். கழுத்தில் மங்கல அணி. வலது மூக்கில் மூக்குத்தி; இடது மூக்கில் வளையம்; மூக்கு நுனியில் புல்லாக்கு. காதுகளில் சூரிய சந்திரராம் தோடுகள். தலையில் பிறைமதி உருப்பொருந்திய மணிமுடி. நெற்றியில் குங்குமம். மின்னலென ஒளியுமிழும் மேன்மை மிகு கண்கள். புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாய். முழுமதியை மிஞ்சும் மோகன வடிவழகு. அருள் நோக்கால் அடியவர் தம் ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப வாழ்வுதரக் காத்திருக்கும் வாழ்வரசி அன்னை. செந்தார்ப் பைங்கிளி முன்கையேந்திச் செம்பட்டுடை உடலினில் இலங்க முத்தார மார்பும் முறுவலிக்கும் முகமுமாய் எத்திக்கும் பொலிவு பெற இருப்பவளே காமாட்சி. எதிரே நின்று காணுங்கால் அன்னை நம்முன்னே எழுந்தோடி வருவது போன்ற உணர்ச்சியுண்டாகும்.

அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும் அன்னை காமாட்சி இங்கு மூவகை உருவில் அமைந்து அருள் தருகிறாள். உலக உயிர்களுக்கு இன்றியமையாத இன்பம், செல்வம் முதலிய அனுபவப் பொருள்கள் அனைத்தையும் தருபவளாகச் சுவர்ண காமாட்சி விளங்குகிறாள். இப்போது இத்தேவியின் ஆதாரபீடம் மட்டுமே இங்குள்ளது. நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து நன்னெறியில் நிற்கும் உயிர்களின் மும்மலக்கட்டு அறுத்தற்குத் துணைபுரிபவளாகத் தபசு காமாட்சி உள்ளாள். பக்குவமடைந்த ஆன்மாவில் மெய்ஞ்ஞானச் சுடர் விளக்கேற்றுபவளாகக் காட்சி தருகிறாள் காமாட்சியம்மை.

முக்கண்ணியின் மூலத் திருவுருவுக்கு முன்னர் அமைந்துள்ளது ஸ்ரீசக்கரம். அட்டலட்சுமிகள் அமைந்த பீடத்தில் ஆதிசங்கரர்

இம் மந்திரச்சக்கரத்தை அமைத்தார் என்ப. இத்திருத்தகட்டில் மறைபொருளாக அன்னை விளங்குவதால் அருச்சனை, தீபாராதனை போன்ற யாவும் இதற்குத்தான் நடைபெறுகின்றன. இத்திருச் சக்கரத்தின் கீழே கட்புலனாகாப் பாதாள குகை (பிலா காசம்) உள்ளது. அருவ வடிவான இக்குகையே அன்னையின் நிரந்தர இருப்பிடம்; ஆதலால் இதனை மனத்தால் கருதி வழிபடவேண்டும்.

காமாட்சியம்மை சந்நிதியிற் பெற்ற குங்குமத்தை, கருவறைக்கு வெளியே இடப்புறத்தே அமைந்துள்ள அரூபலக்குமி திருமுன் இட்டு வழிபட்டு அணிவது மரபாக உள்ளது. காமாட்சியம்மையைச்சுற்றி எத்தனை தேவியர்! வாராகி, அரூபலக்குமி, அர்த்தநாரி, ரூபலக்குமி, அன்னபூரணி, மாதங்கி—இப்படித் தேவியர் வழிபடும் பெருந்தேவியாகத் திகழ்கிறாள் காமாட்சி. மேலும் இக்கோயிலில் சந்தான கணபதி, துருவாசர், கள்ளப் பெருமாள், தருமசாத்தா, ஆதிசங்கரர், துண்டீரமகாராசா, ஆதிசேடன், காசி விசுவநாதர், காலபைரவர், துர்க்கை முதலிய உருவத் திருமேனிகளும் உள. கள்ளப் பெருமாள் வீற்றிருக்கும் திருக்கள்வனூர் என்னும் இங்குள்ள சந்நிதி ஆழ்வார்களால் மங்களா சாசனம் பெற்ற தலங்களுள், காஞ்சியைச் சேர்ந்த பதினெண் திருப்பதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விழாக்காலத்தே உலாப்போந்து அருள்புரிய ஏற்பட்டுள்ள மூர்த்தம் உத்சவ காமாட்சியாகும். நின்ற திருக்கோல வடிவினதாகிய இவ்வம்பிகையின் இரு பக்கத்திலும் நாமகளும் திருமகளும் நின்று வழிபடுகின்றனர். விழ வறுத்திருக்காஞ்சியில் திகழும் இத்திருக்கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் திருவிழாத்தான். நவராத்திரி விழாவும் மாசிமகப் பெருவிழாவும் சிறப்பானவை. பஞ்சதீர்த்தத்தைத் தன்னகத்தே கொண்ட இக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்பும் ஒருங்கே பெற்ற பெருமைக்குரியது.

காமாட்சியம்மையின் சிறப்பு

காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி என மூவரையும் கருணையின் திருவுருவாகக் கருதி ஒருங்கிணைத்துப் பேசும் உலக வழக்கில் காமாட்சி முதலில் வைத்து எண்ணப்படுகிறாள். இம் மூவரும் ஆதிபராசக்தியின் மூன்று விதமான வடிவங்களே. இருக்குமிடத்தையும், கொடுக்கும் பலனையும் கருதி மூவிதமாக வருணிக்கப்படுகின்றனர். இம்மூவருள் காமாட்சியம்மை மட்டும் இருந்த திருக்கோலம் என்பது நினைவுக்குரியது. சிவனார் மனம் மகிழ இரு நாழி நெல் பெற்று முப்பத்திரண்டு அறம் வளர்த்து உலகெலாம் படியளக்கும் உயர் தெய்வம் உட்கார்ந்த நிலையிலிருப்பது இயல்பேயன்றோ! அளப்பருஞ்சிறப்புடைய இத்திருநகரில் அறப் பெருஞ் செல்வியின் வழியிலே வாழையடி வாழையென வந்து தோன்றி அட்சய பாத்திரத்தின் துணையால் அறம்வளர்த்த ஆரணங்கே மணிமேகலை.

காஞ்சிபுரத்தில் எந்தச் சிவன் கோயிலிலும் அம்பிகைக்கெனத் தனியாகக் கருவறையோ உருவத் திருமேனியோ இல்லை. காஞ்சி மாநகர் முழுமைக்கும் காமாட்சியம்மையே ஒப்பற்ற பெண் தெய்வமாக இலங்குகிறாள். மேலும் இந்நகரிலுள்ள கோயில்களின் பெரிய கோபுரங்கள் அனைத்தும் இவ்வன்னையின் ஆலயத்தை நோக்கியவாறே அமைந்துள்ளன. விழாக் காலங்களில் உலா வரும் சைவ வைணவ மூர்த்திகள் யாவும் இக்கோயிலைச் சுற்றியுள்ள பெருவீதிகள் வழியாகக் காமகோட்டத்தை வலம் வந்து செல்வது 'கடவுளரும் வழிபடும். காமாட்சி' என்பதை உறுதிப்படுத்துகிறது.

எல்லாம் வல்ல பொருள், எல்லாம் கடந்த பொருள், எங்கும் உள்ள பொருள், என்றும் அழியாப் பொருள், பேரருளான பெரும் பொருள்—அதுவே அன்னை காமாட்சி. நம் குறை மறந்து, குணங்கருதி, தேவையறிந்து தருவன தந்து இன்புறுத்தி அன்பு வழி நடத்துவது. நாமும் நம் குடியும் உறவும் ஊரும் நாடும் உலகும் செந்நெறி நிற்கத் தோன்றாத் துணையாக விளங்குவது.

காஞ்சி காமகோடி பீடத்தின் தலைவர்—நடமாடும் தெய்வம்—தவப் பெருந்திரு சங்கராசாரிய சுவாமிகள் அவர்களின் ஆளுகைக்குட்பட்ட இக்கோயிலில் பெருமைகளுக்கெல்லாம் தலையாய பெருமையாகவும், நன்மைகளுக்கெல்லாம் உயர்ந்த நன்மையாகவும், தெய்வங்களுக்கெல்லாம் மேலான தெய்வமாகவும் விளங்கும் காமாட்சியம்மனுக்குத் துறவு நெறி பற்றிய அத்தூயவரின் கைகளால் 5-4-1976ல் குடமுழுக்குச் சிறப்பாக நடைபெற்றது. விண்ணோரும் வழிபடும் வேத முதல்வியைப் பணிந்து அவளுடைய திருவருளுக்கு ஆளாகி உயர்வோமாக.

"எங்கெல்லாம் என்னெண்ணம் செல்கின்றதோ
அங்கெல்லாம் உன்னுருவம் நிற்கட்டுமே;
எங்கெல்லாம் என் சென்னி பணிகின்றதோ
அங்கெல்லாம் உன்பாதம் நிலைக்கட்டுமே"

—சங்கரர்.

மதுரை - மீனுட்சி அம்மன் ஆலயம்

— சு. த. காசிராஜன் —

''தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை'' என்று சிறு பாணுற்றுப் படை சிறப்பித்துப் பேசுகின்றது. வரலாற்றுச் சிறப்பும், தொன்மை மரபும் கொண்டிலங்கும் ஒரு பெரும் நகரம் மாட மதுரையாகும். இத்திருப்பதி மதுரைக்காஞ்சி, பரிபாடல், சிலப்பதிகாரம் போன்ற பழைய நூல்களாலும், சம்பந்தர், அப்பர், மணிவாசகர் போன்ற நாயன்மார்களாலும், சேக்கிழார், பரஞ்சோதியார், அருணகிரிநாதர், குமரகுருபரர் போன்ற சமயப் பெரும் புலவர்களாலும் போற்றிப்புகழ்ந்து பாடப் பெற்றிருக்கிறது. சொக்கர் கோயில் திருச்சுற்றுச் சுவர்களிலும், இன்னபிற இடங்களிலும் ஏறத்தாழ நாற்பத்து நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. அவை நல்ல தமிழில் அகவற்பாவாலும், உரைநடையாலும் அமைந்துள்ளன. சில திருமுருகப் பட்டையங்களாகவும் உள்ளன. இவையெல்லாம் மதுரையின் பழைமையையும், பெருமையையும் விளக்கி நிற்கின்றன.

நான்மாடக்கூடல், கூடல்மாநகர், கோயில்மாநகர், ஆலவாய் எனச் சங்க நூல்களாலும், இடைக்காலத்து எழுந்த சமய இலக்கியங்களாலும், கல்வெட்டுக்களாலும் மதுரை வழங்கப்பட்டுள்ளது. சங்கம் வைத்துத் தமிழைப் போற்றிய பெருமையும், சமயம் காத்த சிறப்பும் மதுரைக்கே உரிய தனிச் சிறப்பாகும். பரஞ்சோதி முனிவரால் இயற்றப் பெற்ற ''திருவிளையாடற் புராணம்'' மதுரையின்கண் இறைவன் புரிந்த திருவிளையாடலை விளக்குவதேயாகும். மதுரைக்கு நடுவிடமாகக் கோயில் அமைந்திருப்பதால் கோயில்நகரம் என்றும், விழா மலிந்து இருப்பதால் திருவிழா நகர் என்றும் கூறப்படுகின்றது. விழாக்கள் பலவற்றுள்ளும் மூன்று விழாக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். அவை சித்திரைத் திருவிழா, ஆவணித் திருவிழா, தெப்பத்திருவிழா என்பனவாகும்.

மாநகர் மதுரையின் மையத்தே அங்கயற்கண்ணியெனும் அருந்தமிழ்ப் பெருமையுடைய அன்னை மீனுட்சியுடன் கூடிய சுந்தரேசுவரர் திருக்கோயில் அணிசெய்கின்றது. இதுபோன்ற அமைப்பினை எங்கும் காண்பதரிதென்று கற்றோர் உரைக்கின்றனர். ''பரிபாடல்'' என்னும் சங்க நூல் மதுரைமாநகரம் ஒரு தாமரை மலர் போன்றதென்றும், அதன் மையத்தில் அமைந்துள்ள அத்திருக்கோயில் தாமரை மலரின் நடுவில் உள்ள மொட்டுப் போன்றதென்றும் பாராட்டுகிறது. பிரெஞ்சுத்தூதர் ஒருவர் குறிப்பேட்டில் இவ்வாறு வரைந்துள்ளார்:

> **"என் வாழ் நாளில் பல்லாண்டுகளாகக் கொண்டிருந்த பேரவா இன்று நிறைவேறியது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த இந்துமத நம்பிக்கை, எண்ணம், கலை, பண்பாடு இவற்றின் உயிர்த்துடிப்பையும், உள்ளத்தையும் மதுரைக் கோயிலிற் காண்கிறேன்."**

இத்தகு சிறப்புடைய கோயிலைக் காணுத கண்ணும், நினைக்காத நெஞ்சும் பயனிலவாகும்.

இக்கோயிலின் கோபுரங்களிலும் அமைப்பிலும் மனிதனின் கற்பனையின் சிகரம் எட்டிவிட்டது என்று இயம்பலாம். மீனுட்சி அம்மன் கோயிலின் மேற்புறத்தில், மங்கம்மாள் சிலையும், இராமையரின் உருவச்சிலையும் அமைந்த அரசி மங்கம்மாள் மண்டபம் அமைந்துள்ளது. கிளிக்கட்டு மண்டபத்தில் இருந்து உள்ளே நுழைந்தால், தம் இரு மனைவியருடன் திருமலைநாயக்கரின் உருவச்சிலை பெருமிதத்தோடு நிற்கிறது. கம்பத்தை அடுத்துள்ள சிறுமண்டபத்தைத் தாண்டி

சந்நிதிக்குள் நுழைந்தால் மேற்புறத்தில் காசி விசுவநாதர் கோயிலைப் பிரதிபலிக்கும் வகையில் வெண் கல்லாலான உருவம் ஒன்று சமைக்கப் பெற்றுள்ளது. இதனைக் காசியரசர் தமிழகம் வந்தபோது அன்பளிப்பாகத் தந்த தாகச் செய்திகள் உறுதிப் படுத்துகின்றன.

அல்லாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக்காப ரால் இக்கோயில் பெரிதும் அழிவுக்கு ஆளாகியது. இக்கோயிலிலுள்ள பதினன்கு கோபுரங்களும் மாலிக்காபூர் படையெடுப் பால் இடித்துத் தள்ளப்பட்டன. மீனுட்சி சொக்கர் ஆகிய இரு மூலத்தானங்கள் மட்டுமே எஞ்சி நின்றன. பின்னர் விசுவ நாத நாயக்கர் காலமுதல் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது. இதனைச் செப்பனிட்டுக் கட்ட 120 இலட்ச ரூபாயும், 120 ஆண்டுக்காலமும் தேவைப்பட்டன என் பதுபோன்ற வரலாறுகள் தெளிவூட்டுவதி னின்று இக்கோயிலின் பெருமையை உணர முடிகின்றது.

மணம் கமழும் இத்திருக்கோயிலைப் புதுப் பிப்பதில் 19-ஆம் நூற்றூண்டின் பிற்பகுதி யில் செய்யப்பட்ட திருப்பணி வியக்கத்தகு முறையில் அமைந்திருக்கின்றது. அமராவதி புதூர் வயினாகரம் குடும்பத்தார் பிறவி யிலே இறைப்பற்றும் தெய்வத் தமிழ்ப்பற்றும் நிறைந்தவர்கள். அத்தகையோர் இறைவனுக் குத் தொண்டு செய்வதே தம் பிறவியின் பெரும்பயன் என வாழ்ந்து வரும் நல்மரபி னர். மீனுட்சி அம்மையின் ஆலயத் திருப் பணிக்கு அக்குடும்பம் செய்த தொண்டு அளவிடற்கரியதாம். அக் குடும்பத்தினர்தான் மதிலையொட்டி நந்தவனம் அமைக்கும் பணி யையும், வடக்குக் கோபுரத் திருப்பணியை யும், திருக்கல்யாண மண்டபம் எழுப்பும் அரும்பணியையும் செவ்வனே செய்துமுடித்து வருங்கால மக்களின் நன்றியைத் தேடிக் கொண்டனர். சமீப காலங்களில் நடத்தப் பட்ட திருப்பணிகள் எல்லோருடைய மனத் திலும் நிறைவைத் தந்தன என்பது கூருமலே தெரியும். நாமே அனுபவித்தவை.

நின்ற திருக்கோலத்தில் காட்சி வழங்கும் ஒப்பற்ற அன்னை கயல்போன்ற அழகிய கண் களைப் பெற்றிருப்பதால் ''அங்கயற்கண்ணி'' என்றும் மீனக்கொடிக்கு உரியவள் ஆதலால் 'மீனுட்சி' என்றும்போற்றிவணங்கப்படுகிருள். மேலும் மீனுட்சிக்கு அங்கயற்கண்நாயகி, அபி டேகவல்லி, தடாதகைப்பிராட்டி, மாணிக்க வல்லி, தமிழறியும் பெருமாட்டி என்ற பெயர் களும் உண்டு. மீன், தன் கண்ணுல் முட்டை களைப் பார்த்துக் குஞ்சுகளைப் பொரிப்பதுபோல அன்னை மீனுட்சியும் தன் அருட்கடாட்சத்தால் உலகில் உள்ள உயிர்களின் துன்பங்களை அகற்று கிருள்.

இக்கோயில் பதினைந்து ஏக்கர் பரப்பளவு உடையது. இதன் வெளிச்சுவர்கள் 847-792 அடிகளைக் கொண்ட நீண்ட சதுர வடிவத்தைப் பெற்றிருக்கின்றன. கற்களால் கட்டப்பெற்ற மதிற்சுவர்கள் கிழக்குச் சித்திரை வீதியிலிருந்து மீனுட்சி கோயிலுக்குள் நுழையுமிடத்தில் உள்ள மண்டபத்தில் மீனுட்சி அம்மையின் பிறப்பு, வளர்ப்பு, திருமண நிகழ்ச்சிகள் பற்றிய சுதைச் சிற்பங்களும் எட்டுக்கல் தூண்களிலும் எட்டுச் சத்திகளின் கல் திருவுருவ ங்களும் அழகாக அமைந்துள்ளன.

சிறிதும், பெரிதுமான பன்னிரண்டு கோபுரங்கள் வானுயர்ந்து நிற்கின்றன. இவற்றுள்ளும் மிக உயரமான கோபுரங்கள் நான்காகும். அந்நான்கினுள்ளும் தெற்குக் கோபுரமே எல்லாவற்றிலும் உயரமான தாகும். அதன் உயரம் 152 (நூற்றியைம் பத்தி இரண்டு) அடியாகும். காலத்தால் கிழக்குக் கோபுரமே பழைமையானதாகும்.

இக்கோயிலின் தலவிருட்சம் கடம்பமரம். அதன் அடையாளமாகப் பட்டுப்போன ஒரு கடம்பமரத்தை வெள்ளித் தகட்டால் மூடிப் பாதுகாத்து வருகிறுர்கள்.

இக்கோயிலினுள் உள்ள பொற்றுமரைக் குளம் அளவில் சிறியதாயினும் அழகிற் சிறந்து விளங்குகிறது. இக்குளத்தின் வடபுறம் காணப்படும் சிறிய பாலத்தையே திருவள்ளு வருக்குரிய சங்கப்பலகை மிதந்த இடம் எனக் கூறுவர். அவ்விடத்தே தங்கத்தாமரை மிதக்கவிடப்பட்டிருக்கின்றது. குளத்தைச் சுற்றியுள்ள கீழ், வடபுறச் சுவர்களில் இறை வனின் அறுபத்தி நான்கு திருவிளையாடல்களைக் குறிக்கும் பழங்கால ஓவியங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. தென்புறச் சுவரில் வெண் சலவைச் கற்களில் 1330 அருங் குறள்களும் பொறிக்கப்பட்டுள்ளன. கொடிமண்டபத்தின் வடமேற்கு மூலையில் அருணகிரிநாதர் சந்நிதி உண்டு. அப்பக்கத்தே அருணகிரியாரின் தெய்வப் பாடல்கள் பலகைக் கற்களிலே பதிக்கப்பட்டுள்ளன. சொக்கர் கோயிலின் இரண்டாம் பிரகாரமாகிய அதன் வடமேற்கு

மூலையில் சங்கத்தார் கோயில் உண்டு. தமிழ் ஆய்ந்த நாற்பத்தொன்பது கடைச் சங்கப் புலவர்களின் திருவுருவங்கள் இக்கோயிலின் கண் உள்ளன. நடராசர் கோயிலுக்கு எதிரில் நால்வர் கோயிலும் பொருத்தமாக அமைந் துள்ளது. உட்பிரகாரத்தில் அறுபத்தி மூன்று நாயன்மார், ஆலமர் செல்வன் (தெட்சிணு மூர்த்தி) உத்சவமூர்த்தி உருவங்கள் உள்ளன. சொக்கர் உள்ள பிரகாரத்தில் முக்குறுணிப் பிள்ளையார் சிறப்போடு காட்சி தருகிருர்.

இக்கோயில் பிரகாரத்தின் வடபுறத்தில் சுந்த ரேசர் கோயில் உள்ளது. மீனுட்சி கோயிலை விடச் சொக்கர் கோயில் இரண்டு மடங்கு பெரியது என்பது யாவரும் அறிந்த செய்தி யாகும். சொக்கர் சந்நிதிமுன்னுள்ள கம் பத்தடி மண்டபம் ஒரு கலைக்கூடமாகவே காட்சி யளிக்கிறது. சிவபெருமான் திரிபுரம் எரித்தது, மலைமகளைச் சிவபெருமான் மணந்தது, கைலாசத்தில் வீற்றிருக்கும் காட்சி, நடராசர், திருமால், ஆலமர் செல்வன் ஆகிய காட்சி களெல்லாம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து பக்தி வெள்ளத்தில் திளைக்கச் செய்து விடு கின்றன. ஒவ்வொரு தூணிலும் கலைச் சிற் பங்கள் இறையன்பை வெளிப்படுத்துகின்றன. சொக்கர் சந்நிதியில் நுழையும்போது, நம் வலப் புறத்தில் வெள்ளியம்பலத்தில் அழகான நடராசர் உருவம் கண்டு களிக்கத்தக்கதாக உள்ளது. தென்னகத்திலேயே இந்நடராசர் உருவம் தனிச்சிறப்போடு விளங்குகிறது. ஏனெனில் கால்மாறி ஆடிய இடம் இதுவே யாகும். பாண்டிய மன்னனின் வேண்டு கோளின்படி, தம் இடக்காலுக்கு மாருக வலக் காலைத்தூக்கி இறைவன் ஆடிய இடம் இது.

ஆயிரக்கால் மண்டபம் ஒப்பற்ற சிற்பக் காட்சிக்கூடமாக விளங்குகின்றது. இதன் சிறப்பைப் அறிஞர் பெர்கூசன் வியந்து போற்றுகின்ருர்:

''ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள சிற்பங் கள் மற்ற மண்டபங்களில் உள்ள சிற்பங்களை யெல்லாம்விடச் சிறந்து விளங்குகின்றன. மேலும் அங்குள்ள தூண்களின் எண்ணிக்கை மட்டுமல்ல, அவற்றின் கலைநுட்பம் செறிந்த வேலைப்பாடும் காண்போரை வியப்படையச் செய்யும்வகையில் அமைந்துள்ளன.''

ஆயிரக்கால் மண்டபத்திற்குத் தெற்கே மீனுட்சி சொக்கரின் திருக்கல்யாண மண்டபம் இரு சந்நிதிகளுக்கும் இடையே காணப்படு கின்றது. இது விஜயரங்க சொக்கனுத நாயக் கரால் கட்டப்பட்டதாகும். இக்கோயிலின் தீர்த்தங்கள் பொற்ருமரை, எழுகடல், வையை என்ற மூன்றுமாகும். இவற்றுள் பொற்ருமரை அம்மை சந்நிதியிலும், எழுகடல் சொக்கர் சந்நிதித் தெருவிலும், வையை நகரின் கண்ணும் அமைந்துள்ளன.

பல்வளனும் பயனும் நிறைந்து விளங்கு கிறது மாமதுரை. இத்தொன் மதுரைக்கு அருள் அளிப்பது அன்னை மீனுட்சியும் சொக் கரும்தான். அழகுள்ள நகரங்கள் இப்புவியில் பலவுண்டு. ஆனுல் அருள் உள்ள நகரங்களைக் கைவிரல் விட்டு எண்ணி விடலாம். சரித்திரக் கண்ணேடு பார்த்தாலும், இலக் கியக் கண்ணேடு பார்த்தாலும், பக்திக் கண் ணேடு பார்த்தாலும் அந்நகரங்களில் சிறந்தது மதுரையே என்று கூறிவிடலாம். திருவிளை யாடல் புரிந்து அருள்பாலித்த சொக்கரும் அன்னை மீனுட்சியும் மாட்சிமையோடு ஆட்சி புரியும் மீனுட்சி பட்டணம் மேலும் ஓங்கு புகழ் பெற்று மங்கா நிறைவுடன் மலரும். கரிக்குருவிக்கும் பன்றிக் குட்டிகளுக்கும் அருள் பாலித்த அப்பனும், அம்மையும் மன்பதை வளர மக்கட்கும் அருள் சுரக்கக் காத்துக் கொண்டே இருக்கிருர்கள்.

EVERY MINUTE OF OUR LIFE IS A GIFT OF GOD,
TO BE USED FOR THE SERVICE OF MAN.
—MAHATMA GANDHI

தீவின் நடுவில் திகழ்ந்திடும் திருக்கோயில்

டாக்டர் தமிழண்ணல்

தமிழகத்தில் ஒவ்வொரு சிற்றூரிலும் ஒரு திருக்கோயிலாவது இருக்கும். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது, தமிழ் வாக்கு. இங்குள்ள மக்கள் அனைவரும் 'கோயிலைச் சார்ந்த குடிமக்களாகவே' வாழ்கின்றனர். தமிழ் மக்களுடைய பண்பாட்டு, நாகரிக மரபுப்படி நோக்கினால் இறைவன் ஒருவனே கோ (அரசன்); அவன் உறையுமிடமே அரண்மனை (கோ+இல்). அவன் செங்கோல் ஆட்சியே உலகைக் கட்டுப்படுத்துகிறது. மக்கள் அனைவரும் அவனுடைய நிலையான குடிமக்களாவர். ''நாமார்க்கும் குடி அல்லோம்'' என்றும் ''சங்கரன் நற்சங்க வெண்குழை ஓர் காதில், கோமாற்கே மீளா ஆளாய்க் குடியாகி, அடிமை செய்வோம்'' என்றும் அப்பரடிகள் கூறுந்திறம் இங்கு ஒப்பிடற்பாலது.

இவ் வகையில் இறைவன் பெயரால் ஒரு தீவும், ஒரு திருக்கோயிலும், அக் கோயிலைச் சார்ந்த குடிமக்களுமாக இலங்குவது, உலகிலேயே '**இராமேசுவரம்**' தீவு ஒன்றேயாகும். சிறந்த பாடல்பெற்ற தலமான இதனைத் தமிழ் மக்கள் மட்டுமன்றி, இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளையும் பேசும் அனைத்து மக்களும் போற்றிப் பரவுகின்றனர். தேசிய ஒருமைப்பாட்டை மரபுவழி வளர்த்து வரும் இத்திருத்தலத்தின் புகழ், இந்திய நாட்டின் மூலைமுடுக்குகளிலும் பரவியுளது. சைவ வைணவ ஒற்றுமையைப் பறைசாற்றுவதிலும் இத் தலமே முன்னிற்கிறது. சிறந்த சிவ வழிபாட்டுத் தலமாகவும் இராம நாமத்தையே தாரக மந்திரமாகக் கொண்ட தலமாகவும் இது விளங்குவது குறிப்பிடத்தக்கது.

தீர்த்தத் திருத்தலம்

சுற்றிலும் சூழ்ந்த கடலையே தீர்த்தமாகக் கொண்ட, இத் தீவின்கண் பல தீர்த்தங்கள் கோயிலுள்ளும் விளங்குகின்றன. இங்கு அக்கினி தீர்த்தம் முதல் சர்வதீர்த்தம் வரை 64 தீர்த்தங்கள் உள்ளன என்பர். இங்கு மிக முக்கியமாகக் கருதப்படுவது சேது தீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்பன. இராமன் ஆணைப்படி அனுமனால் மூட்டப்பட்ட தீ குளிர்ந்து சீதாதேவியின் கற்புக் கனலைத் தாங்கமாட்டாது அக்கினி தேவன் எழுந்து வந்து வணங்கிய இடத்தில் உள்ளது தான் அக்கினி தீர்த்தம் எனப்படுகிறது. தனுஷ்கோடி எனப்படும் கோடிக்கரைத் தீர்த்தமும் மிக்க புனிதமுடையதாகும். இங்குள்ள தீர்த்தங்களில் ஆடினால் பல்வேறு நலன்கள் விளையும் என்று மக்கள் நம்புகின்றனர். மேலும் வினைப்பிறவி சாராது வீடு பேறு நல்கும் சிறப்பும் இவற்றிற்குண்டு என்பர்.

சேதுபதிகளும் திருக்கோயிலும்

சேதுபதி என்ற பெயரே, இம்மறக்குல மன்னர்கள், இராமர் காலத்திலிருந்து சேது பந்தனத்திற்கும் அதன் காவலுக்கும் செய்து வந்த உதவியை நினைப்பூட்டும். இன்றும் இத் திருக்கோயிலின் அன்றாட பூசைகளிற்கூட, இம் மன்னர்கள் பெயரும் கூறப்பட்டுப் போற்றப்படுகின்றன. திருவிழாக்களிலும் இம் மன்னர்களின் தொடர்பை நாம் அறியக்கூடிய சான்றுகள் பலவுள. பொதுவாகக் கோயிலின் அடிமை போலத் 'தீவட்டி' பிடிப்பது முதல், அதன் ஒவ்வோர் அணுவிலும் வளர்ச்சியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட இம் மன்னர்கள் பெருமை நவிலும் தரத்ததன்று.

பாஸ்கர சேதுபதி அவர்கள் விவேகானந்தரைப் போற்றிய பாங்கை வைத்து, இம் மன்னர்களின் இந்து சமயப் புத்துணர்வையும் தொலைநோக்கையும் நாம் மதிப்பிடலாம்.

சேதுமன்னர்களின் தமிழ்த் தொண்டும் சமயப்பணியும் ஈடற்றவை. மதுரையில் நான்காம் சங்கம் எனப்படும் தமிழ்ச் சங் கத்தைக் கண்ட பெருமை பாண்டித்துரைத் தேவர் அவர்களைச் சாரும். சேதுமன்னர்கள் தமிழ்ப் புலவர்களையும் வள்ளல்களையும் போற்றி வந்துள்ளனர். இன்று புகழ்பெற்று விளங்கும் இராமநாத சேதுபதி அவர்கள், தம் குடிப்பெருமைக்கேற்ப, எல்லா வகையிலும் சிறந்த பணி புரிந்து, பெரும்புகழ்பெற்று வாழ் கின்றார்கள். அதனால் யாவரும் போற்றும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

''தீந்தமிழ்ப் பற்றும் நல்ல
தெய்விகப் பற்றும் கொண்டு
மாந்தரில் சிறந்துயர்ந்த
மன்னர் **இராம நாதர்**
ஈந்துல கிதனைக் காத்த
சேதுமன் வழியில் வந்தார்
வேந்திவர் திறமை யாலே
வியன்புகழ் எய்தி வாழ்க!!

என்று புலவர்கள் இராமநாத சேதுபதி அவர் களைப் பாராட்டுகின்றனர்.

நகரத்தார் தொடர்பு

இத் திருக்கோயிலின் வளர்ச்சியிலும் வழி பாட்டிலும் நகரத்தார்களின் பங்கு பெரிது. இங்கு பல திருப்பணிகளை நிறைவேற்றிய பெருமை நகரத்தார்களுக்கு உண்டு. முக்கிய மாக தேவகோட்டை ஜமீந்தார் குடும்பம் எனப்படும் ஏ. எல். ஏ. ஆர். குடும்பத்திற்கும் இத்திருக்கோயிலுக்கும் உள்ள தொடர்பு வர லாற்று வழித்தொடர்பாகும். இத் திருக்கோயி லார் 1975-ல் வெளியிட்ட இராமேசுவரம் மகாகும்பாபிஷேக சிறப்பு மலரில் இது பற்றிய விவரங்களைக் காணலாம். ஒரு கட்டுரையில் ''20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தக் கோயிலின் இருண்ட காலமாகிய, முன்னைய ஐம்பது ஆண்டு வரலாற்றில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. தேவகோட்டை ஏ. எல். ஏ. ஆர். குடும்பத்தாரும் ஏனைய நகரத்தார்களும் இக்கோயில் திருப்பணியில் பெரும் பங்கு கொண்டனர்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இராமேச்சுவரத்தின் பெருமை


இந்திய நாடு முழுவதும் புகழ் பரப்பியுள் ளது முதற் பெருமை. காசி இராமேசுவரம் என இணைத்துப் பேசப்பட்டு, வடநாட்டை யும் தென்னாட்டையும் இணைக்கும் பாலமாக விளங்குவது அடுத்த பெருமை. சைவ, வைணவ ஒருமைப்பாட்டுச் சின்னமாக விளங்கு வது, தமிழ்ச் சமயப் பொறையுணர்வின் முடி மணியாகத் திகழும் மூன்றாவது பெருமை.

சமயப் பெரியார்கள் பலரும் போற்றிப் பாடிய பெருமையும் பணிந்து பரவிய சிறப்பும் உடையது இத்திருத்தலம். குறைவற்ற நிறை வான தீர்த்தங்களால் சூழப்பட்டது இப் புனிதத் தீவு. பல்வேறு கலைகளைப் போற்றும் வகையில் இத் திருக்கோயில் தொன்றுதொட்டு வளர்ந்து வருவது, இதன் பிறிதொரு சிறப்பு. காவிய இதிகாசத் தொடர்புடையதும் இதுவே. சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டான திருச்சுற் றினைப் பெற்றிருப்பது மட்டுமல்லாமல், பல் வேறு வாகனங்களாலும் முழுவதும் கருங்கல் லாலான கோபுரத்தாலும் தன்னிகரற்றுத் திகழ்வது இத் திருக்கோயில்.

இவ்வாறு இத் திருக்கோயிலின் பெருமை களை அடுக்கிக் கொண்டே போகலாம். நாட் டுப்புறப்பாடல்களிலும் மக்கள் வாய்மொழிக் கதைகளிலும் இராமேச்சுவரத்திற்குச் சிறப் பிடமுண்டு. பழமொழிகளிற்கூட இராமேசு வரம் பளிச்சிடுகிறது.

''பாசமும் கழிக்ககில்லா அரக்கரைப்
படுத்துத் தக்க
வாசமிக்க அலர்கள் கொண்டு
மதியினால் மால்செய் கோயில்
நேசம் மிக்கு அன்பினாலே
நினைமின்நீர் நின்று நாளும்,
தேசம் மிக்கான் இருந்த
திருஇராமேச் சுரமே''

என்று நாமும் திருநாவுக்கரசருடன் சேர்ந்து பாடிப் பரவுவோமாக!



ஈழ நாட்டுத் தமிழர்களும் தமிழ் நாட்டுக் கோயில்களும்

அருள். தியாகராசா

(முன்னாள் நிகழ்ச்சி அதிகாரி, இலங்கை வானொலி : செயற்குழு உறுப்பினர், திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி சபை, இலங்கை.)

**''மூர்த்தி தலந் தீர்த்தம் முறையால் தொடங்கி
னர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்
பராபரமே''**

உலக முதல்வராகிய சிவனிடத்தில் ஈழநாட்டிலுள்ள தமிழ்மக்கள் அயராத பேரன்புடையவர்கள். அமிழ்தினுமினிய தமிழ் மொழியைத் தமது கண்மணியைப் போலப் பேணிக்காத்து நேசிக்கும் பண்புடையவர்கள். தேவாரப் பாடல்பெற்ற சிவஸ்தலங்கள் 274. அவற்றில் திருக்கேதீச்சரம், திருக்கோணமலை என்னும் இரண்டு சைவத் திருப்பதிகளே ஈழ நாட்டில் உள்ளன. ஏனைய 272 சிவஸ்தலங்கள் தென்னாட்டிலும், வடநாட்டிலுமிருக்கின்றன. தென்னாட்டிலுள்ள சைவப் பெருமக்கள் சிவபெருமானைச் சிறப்பாக வழிபடுபவர்கள். அதனாலன்றோ நம் மாணிக்கவாசக சுவாமிகள் 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்று அருளியிருப்பது மீண்டும் மீண்டும் நினைந்தின்புறுதற்குரிய தொன்றும். பண்டைக்காலம் முதல் ஈழநாட்டிலுள்ள தமிழ்மக்கள், 'கோயில்' என்று எல்லோராலும் அழைக்கப்படும் சிதம்பரம், இராமேஸ்வரம், மதுரை, திருவாரூர், திருக்குற்றாலம், திருவண்ணாமலை, சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், ஆவுடையார் கோயில் என்ற திருப்பெருந்துறை, காஞ்சிபுரம், திருவுத்தர கோசமங்கை, திருவானைக்கா முதலிய சிவாலயங்களுக்குச் சென்று அங்கே கோயில் கொண்ட அம்மையப்பரை என்புள்ளுருக உள்ளுருகி வழிபடும் நியமத்தைக் கைக்கொண்டுள்ளனர். இக்கலியுகத்தில் அறுமுகச் சிவனாய், கருணை திருவுருவாய், எவ்வுயிர்க்கும் தஞ்சமென நிற்குந் தனிப் பொருளாய் விளங்கும், முருகப் பெருமான் கோயில் கொண்டருளும் திருப்பதிகளாகிய, திருச்செந்தூர், பழனி, திருப்போரூர், குன்றக்குடி, திருத்தணி, சுவாமிமலை முதலிய சுப்பிரமணிய ஸ்தலங்களுக்குச் சென்று அப்பெருமானை உவகையுடன் பலர் ஏத்துவர். காத்தற் கடவுளாகிய திருமால் சாந்நித்தியராய் விளங்கும், திருவரங்கத்தில் அறிதுயில் கொள்ளும் ஸ்ரீரங்கநாதனையும், தமிழ்நாட்டின் எல்லையாய் விளங்கிய திருவேங்கடமலையுச்சியில் நின்ற திருக்கோலத்திலுள்ள ஸ்ரீ நிவாசனையும், மதுரைமாநகரில் சயன திருக்கோலம், இருந்த திருக்கோலம், நின்ற திருக்கோலம் ஆகிய மூன்று திருக்கோலங்களையும் கொண்டுள்ள கள்ளழகரையும் தம்மைக் காத்தருளுமாறு வழிபடுவர்.

கோயில் என்றழைக்கப்படும் சிதம்பரத்தின் பெருமையை ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் அளவிட்டுக் கூறமுடியாது. இத்தலத்தை 'எப்புவனங்களும் நிறைந்த திருப்பதி' என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். இத்தலத்தின் பெருமையைக்கூறவந்த குமரகுருபர சுவாமிகள்

**''தீர்த்த மென்பது சிவகங்கையே
ஏத்தருந்தல மெழிற் புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தன துருவே''**

என்று சிதம்பரச் செய்யுட் கோவையில் போற்றியிருக்கின்றார். ஈழநாட்டிலும், தமிழ்நாட்டிலும் சைவப் பேரொளியையும், தமிழ்மொழி

யின் சிறப்பையும் பரப்புவதற்கே அவதரித்த ஆறுமுக நாவலர் பெருமான் சிதம்பரத்திலே அக்காலத்தில் ஓர் சைவப் பிரகாச வித்தியா சாலேயைத் தாபித்துத் தமிழ் மணமும், சிவ மணமுங் கமழச் செய்தார். சைவத்தின் நிலேக்களமாய் விளங்கும் பன்னிரு திருமுறை களுக்கு உரிய மதிப்பையும், இடத்தையும் கொடுக்கத் தயங்கிய தில்லேயில் வாழ்ந்த சுமார்த்தர்களே வன்மையாகக் கண்டித்தார். பெரியபுராணத்தை அச்சுவாகனமேற்றி உலா வரச் செய்தார். தமது நாவன்மையாலும், ஒழுக்கத்தாலும், சீலத்தாலும், கல்வியினுலும் சைவசமய உண்மைகளேப் பலரும் உணரச் செய்து, மதம்மாறியவர்களே மீண்டும் சைவ சமயத்தைத் தழுவும்படி செய்தார். நாவலர் பெருமானின் முன்னேர்களில் ஒருவராகிய ஞானப் பிரகாசர் சிதம்பரத்தில் ஞானப் பிர காச தீர்த்தம் என்ற ஓர் குளத்தை உண் டாக்கினர். நாவலர் பெருமானேப் பின்பற்றி சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர், வண்ணேச் சுவாமிநாத பண்டிதர், சிவஞான பாடியம் முழுவதையும் அச்சுவாகன மேற்று வித்த ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பி ரான் சுவாமிகள் ஆகியோர் பல காலம் சிதம் பரத்தில் வாழ்ந்து அரும்பணி புரிந்தனர்.

ஸ்ரீமந் நடராச மூர்த்தியிடம் எல்லேயில் லாத பேரன்பு பூண்ட 'யாழ் நூல்' வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் 'நடராச வடிவம்' என்ற நூலே இயற்றியிருக்கிருர்கள். சுவாமிகள் விரிவுரையாற்றும் போதெல்லாம் மீனுட்சியம்மை பிள்ளேத் தமிழிலுள்ள துதிப் பாடலேப் பாடுவது வழக்கம்.

ஈழநாட்டில் கலேமகளின் கடாட்சமும், திருமகளின் திருவருளும் சிவபக்தியும் ஒருங்கே பொருந்திய குடும்பத்தில் உதித்தவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள். அவருடைய முன்னேர்கள், மோட்டார் வண்டி, ரெயில்வண்டி இல்லாத பிரயாண வசதி குறைந்த அந்த நாட்களில், தமிழ்நாட் டிலுள்ள பல சிவஸ்தலங்களுக்குச் சென்று, சற்புத்திரரை வேண்டி அருந்தவ மாற்றி ஞர்கள். இராமபிரான் தனது பிரமகத்தி தோஷத்தை நீக்கும் பொருட்டுத் தாபித்த, இராமேஸ்வரத்திலுள்ள இராமநாதேசுரரை நெஞ்சமுருகி வழிபட்டார்கள். அதன் பய ஞக உதித்த புதல்வனுக்கு இராமநாதன் என்று பெயரிட்டழைத்தார்கள். ஓர் அர சனுக்குரிய இலக்கணங்களெல்லாம் அவரிடத் தில் தாமே வந்து பொருந்தின. கல்வித் துறையில், சமயத்துறையில், அரசியலில், நிர்வாகத்தில், நாவன்மையில், சிவ பூசை செய்வதில், வள்ளற்றன்மையில் சேர்.பொன் இராமநாதன் தமக்கு ஒப்பாருமிக்காருமின்றி விளங்கினுர். சேர். இராமநாதன் தில்லேயம் பதியில் ஐந்தொழிலின்பக் கூத்தியற்றும் ஸ்ரீ நடராசப் பெருமானிடம் பெரும் பற்றுடையவர். 1905ஆம் ஆண்டில், சிதம் பரத்தில் நடந்த சென்னேச் சைவ சித்தாந்த சமாஜத்தின் முதலாண்டு விழாவிற்கு சேர். இராமநாதன் அவர்கள் தலேமை தாங்கினுர் கள். சேர் இராமநாதன் ஓர் பன்மொழிப் புலவர். ''அவர் தமிழிலில் பேசும் போது ஆங்கிலம் தெரியாதவர்கள் பேசுவது போலத் தூயதமிழில் பேசுவார்'' என்று டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள் ஓரிடத்தில் எழுதியிருக்கிருர்கள். சேர். இராமநாதன் தன் சொந்தச் செலவில் நிறுவிய சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில், நடராசர் கோயி லேக் கட்டி, அங்கே பயிலும் சைவப் பெண் பிள்ளேகளெல்லாம், நடராசப் பெருமானே நாடோறும் வணங்க வேண்டுமென்று விதித் திருக்கிருர். திராவிட சிற்ப முறைப்படி ஓர் பெரிய சிவாலயத்தைக் கொழும்பு மா நகரில் கருங்கல்லினுல் அவர் கட்டியிருக் கிருர். அதனே ஸ்ரீ பொன்னம்பல வாணேசர் கோயில் என்று அழைப்பர்.

கொழும்பு மாநகரில் ஸ்ரீ அருணுசலே சுரர் கோயிலேத் தாபித்த சேர். பொன்னம் பலம் அருணுசலம் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் தம்பியாவர். இவர் உண்ணு முலேயம்மை பங்கராகிய அண்ணுமலேயப்ப ரின் திருவருளால் உதித்தவரே. இவர் தமது அருமைத் தமையனுரைப்போலப் பலதுறை களில் தமது புகழை நிறுவியிருக்கிருர். இவ் விருவரையும் தென்னுட்டிலுதித்த சேர். ஏ. இராமசாமி முதலியாருக்கும் சேர். ஏ. லக்ஷ்மணசாமி முதலியாருக்கும் ஒப்பிடலாம். சேர். பொன். அருணுசலம் தமது முன்னே ரைப் போலப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளே வரைந்திருக்கிருர். அவைகள் நூல்வடிவம் பெற்றுள்ளன. சேர். அருணுசலம் ஓர் பெரிய சக்தி உபாசகர். மதுரை மீனுட்சி யம்மையையே எப்போதும் தியானிக்கும் பழக்க முடையவர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தென்னுட்டில் தலயாத்திரை செய்த பின்னர் துவாதசாந்தத் தலமாகிய மதுரையில் வந்து தங்கினுர். அங்கே அவர் ''பங்கயற்கண்ணரிய

பரம்பரனுருவே தமக்குரிய வடிவமாகி''யுள்ள அங்கயற் கண்ணம்மையை வணங்கிய பின்னர் அவர் ஆவி பிரிந்தது. முருகனுக்குரிய துவாத சாந்தத் தலம் என்றழைக்கப்படும் ஈழநாட்டி லுள்ள கதிர்காமத்திலும் சேர். பொன். அருணுசலம் பக்தியுடையவராய் வாழ்ந்தார்.

சேர். முத்துக்குமாரசாமியின் புதவல்வரும் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் மைத்துனருமாகிய கலாயோகி டாக்டர் ஆனந்தகுராமசாமி கலையுலகில் சர்வதேசப் புகழ்பெற்றவர். அவர் இந்தியாவிலுள்ள புராதனகலைகளை ஆராயவேண்டுமென்ற நோக் கத்துடன் முதலில் தென்னிந்தியாவிலுள்ள முக்கிய தலங்களுக்குச் சென்று, சிற்பம் முதலிய கலைகளின் கருவூலங்களாய் அமைந்த ஆலயங்களைத் தரிசித்தார். தமிழிலக்கியங் களைப் பற்றியும் சைவ சாத்திரங்களைப் பற்றியும் ஓரளவு அறிந்து கொண்டார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய ''சிவநடனம்'' (Dance of Siva) என்ற நூல் மிக்க பிரசித்தி வாய்ந்ததாகும். அது அவருடைய கலை ஆராய்ச்சியின் சிகரமாக அமைந்துள்ளது என்று கூறலாம். இந்நூலில் நடராஜ தத்துவம் அழகாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் அவர் பெற்றிருந்த இந்து சமய ஞானமும், இந்தியக் கலை ஞானமும் ஒன்ருகச் சேர்ந்து மிளிர்கின்றன. ஆனந்தக் குமாரசாமி இலங்கைக் கலையுலகில் என் றும் அழியாத புகழை ஈட்டிக் கொடுத் துள்ளார். அவருடைய நூற்ருண்டு ஜயந் தியை அடுத்த ஆண்டில் (1977ல்) இலங்கை யில் பெருமளவில் கொண்டாட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

ஈழ நாட்டிலுள்ளவர்கள், சிதம்பர க்ஷேத் திரத்தைத் தமது கண்ணின் மணிபோல் போற்றும் பண்புடையவர்கள். சிதம்பரத்தில் மானுமுதலிமடம், சிவபுரிமடம், புண்ணிய நாச்சிமடம் முதலிய மடங்களை யாத்திரிகர் களின் பொருட்டுக் கட்டி வைத்திருக்கிருர் கள். அம்மடங்கள் இப்பொழுது நன்ருகப் பரிபாலிக்கப் படுவதில்லை. யாழ்ப்பாணத்தி லுள்ள பல சைவப் பெருமக்கள், நிலங்களை யும், கட்டிடங்களையும், சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராசப் பெருமானுக்குத் தரும சாதனம் செய்திருக்கிருர்கள். பல் லாண்டுகளாக, இவற்றிலிருந்து பெற்ற வரும் படியைக் கொண்டு அறக் கட்டளைகள் நடை பெற்றுவந்தன. இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக அந்த அறக் கட்டளைகள் முட்டின்றி நடைபெற முடியாத நிலையை எய்தியுள்ளன. ஈழ நாட்டிலுள்ள பலர், தங்கள் பிள்ளைகளுக்கு, அம்பல வாணன், நடராசா, சிதம்பரம், கனகசபை, பொன்னம்பலம், சபாநாயகம், சிவசிதம்பரம், சிவகாமி முதலிய பெயர்களை வைத்திருக் கிருர்கள்.

ஈழ நாட்டில், செல்வவளம், பொருள் வளம் வாய்க்கப் பெற்றவர்கள் சேது இராமேஸ்வரம் முதல் காசிவரை யாத்திரை செய்வார்கள். மிகக் குறைந்த நிலையிலுள்ள வர்கள் சேதுவில் தீர்த்த மாடி பர்வத வர்த்தினி யம்மையையும் (மலைவளர் காதலி) இராமநாதேசுவரரையும் சென்று வணங்கு வார்கள். அத்துடன் 'அங்கயற்கண்ணி பங் கில் வீற்றிருக்கும் செக்கர் வார்சடைச் சொக்கநாதரையும் தரிசிப்பதில் ஆத்ம திருப்தியடைவார்கள். இராமேஸ்வர ஆல யத்திற்கு நிலபுலன்களும், கடைகளும் ஈழ நாட்டிலுள்ளவர்களால் சிறப்பாக யாழ்ப் பாணத்துச் சைவப் பெருமக்களால் தரும சாதனஞ் செய்யப்பட்டுள்ளன. தமது உற்ருர் உறவினர்களின் அந்தியேட்டிக் கிரியைகளைப் பலர் இராமேஸ்வரத்தில் செய் வார்கள். சிலர் அக்கிரியைகளைக் காசிக்குச் சென்று செய்வதுண்டு. பன்னிரண்டு ஜோதிர் மகாலிங்கங்கள் பாரத நாட்டில் இருக்கின் றன. தமிழ்நாட்டிலுள்ள ஜோதிர்லிங்கத் தலம் இராமேஸ்வரம் ஒன்றே தான் என்பது இங்கு நினைவு கூரற்பாலதாகும்.

திருமறைக்காடு என்ற வேதாரண்யம் ஈழநாட்டுச் சைவமக்களால் போற்றப்படும் ஓர் தலமாகும். பல்லாண்டுகளாக யாழ்ப் பாணத்திற்கும் வேதாரண்யத்திற்கும் நெருங் கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. அக்காலத்தில் யாழ்பாணத்திலுள்ள ஊர் காவற்றுறையிலிருந்து தோணி மார்க்க மாகக் கோடிக்கரைக்குச் சென்று, அங்கி ருந்து போய் 'மறைக் காட்டு மணுளனை' வணங்கும் வழக்கம் இருந்தது ''இத்தலத்தில் மணலெல்லாம் லிங்கமாகவும், நீர் எல்லாம் தீர்த்தமாகவும் கருதப்படுகின்றன. இங் குள்ள கடல் வேத தீர்த்தம் என்றே கூறப் படுகிறது. அதனுல் இத்தலத்தையே (ஆதி சேது) என்பர்''. வேதாரண்யத்திலிருந்து பல சைவக் குருக்கள்மார் இந்நாட்டுக்கு வந்து சைவக்கிரியைகளைச் செய்து வரு

கின்றூர்கள். யாழ்ப்பாணத்திலுள்ள பலர் வேதாரண்யத்தில் திருமணம் செய்திருக் கிறுர்கள். ஈழநாட்டிலுள்ள பிள்ளைகளுக்கு வேதாரண்யம், வேதாரணிய சேயோன் என்ற பெயர்களுமுண்டு.

மறைக்காட்டு மணுளனை நினைக்கும்போது 'நம செந்தின்மேய வள்ளி மணுளனின்' ஞாபகமும் உடனெழுகின்றது. ஈழநாட்டி லுள்ள தமிழ் மக்கள், தமிழ்க்கடவுளும், கலியுக வரதருமாகிய செந்தில் முருகனிடம் எல்லையில்லாத பாசம், பக்தியுடையவர்கள். செந்தில் என்ற திருச்செந்தூரின் பெருமை, சிலப்பதிகாரத்திலும் சங்க நூல்களாகிய அகநானூறு, புறநானூறு ஆகியவற்றிலும் கூறப் பட்டிருக்கிறது. குமரகுருபர அடிகள், அருணகிரிநாதர், நக்கீரர், பகழிக் கூத்தர் முதலியோர் செந்தில் முருகனின் திருவருளை நிரம்பப் பெற்றவர்கள். கந்தசட்டி காலங் களில் ஈழநாட்டிலுள்ள பல சைவ அன்பர் கள், திருச்செந்தூருக்குச் சென்று முருகப் பெருமானை நீள நினைந்து உபவாசமிருப்ப தைத் தமது வாழ்வின் பயனுகக் கொண் டனர். அவுஸ்திரேலியாக் கண்டத்தில் தொழில் பொருளீட்டல் காரணமாகச் சென்ற ஈழ நாட்டு ஆங்கில வைத்திய கலாநிதி ஒருவர், கந்த சட்டி காலங்களில் அவுஸ்திரேலியாவி லிருந்து திருச்செந்தூருக்கு வந்து, செல வையும் சிரமத்தையும் பொருட்படுத்தாது உபவாசமிருப்பர். இது அவருடைய முறுகிய முருக பக்தியைக் காட்டுகின்றது.

பஞ்சபூதத் தலங்களில் பிருதுவித் தல மென்று கருதப்படும் திருவாரூருக்கு இந் நாட்டுத் தமிழ் மக்கள் யாத்திரை செய் வார்கள். பங்குனி மாசத்தில் நடக்கும் பிர மோற்சவத்தையும், தியாகராசப் பெருமான் திருத்தேர் மீது உலா வருதலையும் கண்டு களிப்பார்.

திருவண்ணுமலையிலுள்ள திருக்கார்த் திகை விளக்கீடு என்ருல் இந் நாட்டுத் தமிழ் மக்களுக்கு உள்ளத்தில் குதூகலமும் மகிழ்ச்சியும் ஒருங்கே பொங்கும். ''அண்ணு மலை தொழுவர்வினை வழுவா வண்ணம் அறுமே'' என்ற ஞானசம்பந்தப் பெருமான் திருவாக்கில் அபாரமான நம்பிக்கையுடைய வர்கள். கார்த்திகைத் திருநாளில் சிவலிங்க சொரூபமாய் விளங்கும் திருவண்ணுமலையை யும் அண்ணுமலையப்பரையும் ஆராத காத லுடன் வணங்கும் கோட்பாட்டை யுடை யவர்கள். இவர்களுட் சிலர் நல்ல அழகுள்ள தோற்றமுள்ள காளை (எருது) மாடுகளையும் ஈழநாட்டுக்கு வாங்கிச் செல்வார்கள். இப் பொழுது மாடுகளை வாங்கிச் செல்லும் வழக்கம் அருகி வந்துவிட்டது.

மாணிக்கவாசக சுவாமிகள் கல்லினுற் கட்டி வைத்த திருப்பெருந்துறையென்ற ஆவுடையார் கோயில், சிதம்பர க்ஷேத்திரத் திற்குச் சமானமானதென்றே சிவபக்தி நிரம் பக் கைவரப் பெற்ற ஈழநாட்டுத் தமிழ் மக்கள் கருதுகின்ருர்கள். மற்றைச் சிவா லயங்களில் கருவறையில் சிவலிங்கம் இருக் கும். இங்கே ஆவுடையார் என்னும் பீடம் இருக்கின்றது. மாணிக்கவாசகருக்குத் தான் இங்கே முதன்மை உண்டு. ஈழநாட்டிலுள்ள தமிழ் மக்களுக்குத் 'திருவாசகத்தில் ஈடு பாடு அதிகம். 'நினைத்தொறும் காண் டொறும் பேசுந்தொறும் எப்பொழுதும் தேனுயின்னமுதமுமாய் தித்திக்கும், திரு வாசகம் முழுவதையுமோ, பகுதையோ, மனந்தூயராயிலிருந்து ஓதுபவர்களுமுண்டு. திருக்கேதிச்சுர ஆலயம்தான் திருபெருந் துறை என்று கருதுவது தவறு.

திருக்கேதீஸ்வரம், தமிழ் நாட்டிலுள்ள சிறந்த சிவாலயங்களைப் போல விளங்க வேண்டுமென்பதே ஈழநாட்டுத் தமிழ் மக்க ளின் ஆசையாகும். ஈழநாட்டு மக்கள் தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களின் வானளாவிய கோபுரங்களை என்றுமே மறக்க மாட்டார் கள். எமது நாயன்மார்களெல்லாம் தூல லிங்கமாகிய கோபுரத்தை வழிபட்ட பின் னரே உள்ளே சென்று சிவபரம் பொருளைப் போற்றி வணங்கினுர்கள்.

''அண்ணுமலையெம் அண்ணுபோற்றி,
கண்ணுரமுதக் கடலே போற்றி''
"அண்ணுமலையரையும் ஆரூர்த்தியாகரையும்
கண்ணுன காளத்தி நாதரையும்—ஒண்ணுன
சிற்றம்பலவரையும் தென்னுனைக்காவிறையும்
நித்தம் பல கால் நினை"

நெடியோன் குன்றத்து நீலமுகில்

டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

'நீலத் திரைக்கடல் ஓரத்திலே
நித்தம் தவம்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு'[1]

என்று பாடினர் தேசிய கவி பாரதியார். இந்த 'மாலவன் குன்றமே' திருவேங்கடம் என்பது. சிலப்பதிகாரம் குறிப்பிடும் 'நெடியோன் குன்றமும்' இதுவேயாகும். ஆயின் தொல் காப்பியப் பாயிரத்திலும், சங்க இலக்கியங் களிலும் குறிப்பிடப்பெற்றுள்ள 'வடவேங் கடம்' என்னும் மலைத்தொடர் இதனின்றும் முற்றிலும் வேறுபட்டது என்பதை ஆழ்ந்து கற்றோர் நன்கு அறிவர்.[2] இன்றுள்ள திருப்பதி மலை மிகவும் புகழ் அடைந்தது சமயச் சார்பு பற்றியதேயாகும் என்பதை நாம் அறிவோம். இடைக்காலத்தில் இது தல யாத்திரிகர்களின் முக்கிய இடமாக அமைந்த தற்குக் காரணம் சமயச் சார்பு பற்றியதே யாகும்.

திருப்பதி புகழோங்கிய காலம்

இன்று பெரும்பான்மையோர் திருப்பதி மலையைத் 'திருப்பதி' என்றே வழங்குகின்ற னர். விவரம் அறிந்தோர் அதனைத் 'திருமலை' என்று கூறுகின்றனர்.[3] இம்மலை 'ஏழுமலை' என்றே வழிவழியாக வழங்கப் பெறுகின்றது. இன்று பேருந்து வழியாகச் செல்வோர்இந்த ஏழுமலைகளையும் வரிசையாகக் காணலாம். இப்பொழுது பேருந்துகள் மலையிலிருந்து இறங்கும் வழியில் இம் மலைகளின் பெயர்ப் பலகைகளைக் காணலாம். ஒன்றிரண்டுஆண்டு கட்கு முன்னர் இதுவே ஏறும் வழியாகவும் அமைந்திருந்தது. இந்த வழியில் கீழிருந்து மேலே செல்லுங்கால் முதலில் காண்பது **எருத்துமலை** (விருஷபாத்திரி).[4] அடுத்து முறையே நீலமலை (நீலாத்திரி), மைவரை (அஞ்சனாத்திரி), பாம்புமலை (சேஷாத்திரி), கருடமலை (கருடாத்திரி), நாராயணமலை (நாராயணாத்திரி), வேங்கடமலை (வேங்க டாத்திரி) என்ற மலைகளைக் காணலாம்.

ஆழ்வார் பெருமக்களால் (6-8 நூற்றாண் டுகள்) மங்களாசாசனம் செய்யப்பெற்ற நூற்றெட்டுத் திருப்பதிகளுள் இதுவும் ஒன்று. 'வடநாட்டுத் திருப்பதிகள்' என்ற பகுதியில் அடங்கும் பன்னிரண்டில் இது முதலாவதாக இடம் பெறுவது. கோயில் (திருவரங்கம்), திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சி) என்று வைணவப் பெருமக்களால் போற்றப்பெறும் மூன்று திவ்விய தேசங்களுள் இது நடு நாயகமாகத் திகழ்கின்றது. இத்தகைய பெருமை வாய்ந்த திருவேங்கடத்தைப்பற்றி 213 பாசுரங்கள் நாலாயிரத்தில் காணப் பெறுகின்றன. இவற்றைப் பாடியவர்கள் பத்து ஆழ்வார் பெருமக்கள் ; பாடிய விவரம்:

1.	பொய்கையாழ்வார்	10 பாசுரங்கள்
2.	பூதத்தாழ்வார்	9 பாசுரங்கள்
3.	பேயாழ்வார்	19 பாசுரங்கள்
4.	திருமழிசையாழ்வார்	15 பாசுரங்கள்
5.	திருப்பாணாழ்வார்	2 பாசுரங்கள்
6.	குலசேகராழ்வார்	11 பாசுரங்கள்
7.	பெரியாழ்வார்	7 பாசுரங்கள்
8.	ஆண்டாள்	16 பாசுரங்கள்
9.	திருமங்கையாழ்வார்	62 பாசுரங்கள்
10.	நம்மாழ்வார்	62 பாசுரங்கள்
	மொத்தம்	213

இப்பாசுரங்களைத் திருவேங்கடக் கலம்பக ஆசிரியர் ' முத்தமிழ்க்கவி வீரராகவ முதலி

---

[1] பாரதியார் கவிதைகள்—செந்தமிழ் நாடு—5.

[2] இவ்வாசிரியரின் 'திருவேங்கடமும் தமிழ் இலக்கிய மும்' (பாரி நிலைய வெளியீடு) என்ற நூலில் காண்க.

[3] மலையைத் 'திருமலை' என்றும், மலையின் கீழுள்ள நக ரைத் 'திருப்பதி' என்றும் வழங்குவதே சரியாகும்.

[4] அத்திரி–மலை (வடசொல்).

யார்[5] ''பதின்மர் செந்தமிழ்'[6] என்று போற்றிப் புகழ்வர்.

திருவேங்கடத்தின் புகழ்

ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் பெற்ற திருவேங்கடம் பதினொன்றும் நூற்றுண்டில்தான் பெரும்புகழ் அடையத் தொடங்கியது. இராமாநுசர் திருவேங்கடமுடையான் திருக்கோயிலின்பால் காட்டிய அக்கறையும் அவருடைய சொந்தப் பெருமையும் சிறப்புமாகச் சேர்ந்து திருக்கோயிலின்புகழை மிகவும் உயர்த்தி விட்டது. இராமாநுசர் திருமலைக்கு மூன்று தடவை வந்ததாக அவர் வரலாற்றுல் அறியக் கிடக்கின்றது. இன்று திருமலையில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் யாவும் இராமாநுசர் வகுத்தவையே என்று 'திருமலையொழுகு' என்ற நூலால் அறிகின்றோம். இராமாநுசர் திருவேங்கடமுடையானுக்குக் கைங்கரியம் செய்யும் அர்ச்சகர்கட்குக் குடியிருப்பு வசதிகள், பிற வசதிகள் இவற்றைச் செய்தார். தன் தாய் மாமனுகிய திருமலை நம்பியையே இவற்றையெல்லாம் கண்காணிக்கும் மேலாளராகவும் நியமனம் செய்தார். இராமாநுசருடைய சமூகச் சீர்திருத்தமும் அவருடைய தத்துவ ஞானமும் பாமர மக்கள் மனத்தையும் கவர்ந்தன. அவருடைய வடமொழி அறிவு அவருக்குப் பல வகையில் கைகொடுத்து உதவியது. அவருடைய கீதைப் பேருரையும் பிரம்ம சூத்திரப் பேருரையும் அவரை வடநாட்டினர்க்கும் அறிமுகம் செய்து வைத்தன. இதனுல் இராமாநுசரின் புகழ், நாட்டின் நாலா புறங்களிலும் பரவியது. இதனுல் அவர் மிக நெருங்கிய உறவுடன் கைங்கரியம் செய்து வந்த திருவேங்கட முடையானின் பெருமையும் சிறப்பும் எங்கும் பரவி, திருவேங்கடத்திற்கும் ஒரு முக்கியத்துவம் ஏற்படலாயிற்று. இவற்றைத் தவிர, சைவ-வைணவ வாக்குவாதம் பற்றிய வரலாறும் திருமலையின் புகழ் எங்கும் பரவக் காரணமாக இருந்தது. இந்த வரலாற்றைச் சுமார் 700 ஆண்டுகட்கு முன்பிருந்த பின்பழகிய பெருமாள் சீயர் அருளிய ஆறுயிரப் படிக் குரு பரம்பரையிலும் இராமாநுசாசாரியாரின் திவ்விய சரிதையிலும் காணலாம்.

திருவேங்கடத்தின் சிறப்பு

வைணவ தத்துவம் சித்து, அசித்து, ஈசுவரன் என்று மூவகைப்பட்டிருக்கும். இதனைத் 'தத்துவத்திரயம்' என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள். சித்தும் அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்திருக்கும். இந்த உறவினைச் 'சரீர-சரீரி பாவனை' என்று போற்றியுரைப்பர் அப் பெருமக்கள். அசித்தும் எம்பெருமானுடைய படைப்பாகி அவனுடைய திருமேனியாகத் திகழ்வதால் அதுவும் வழிபாட்டிற்குரியது.

> 'சென்று சேர்திரு வேங்கட மாமலை
> ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே'[7]

என்ற நம்மாழ்வாரின் பாசுரம் இக் கருத்திற்கு அரண் செய்வதாக அமைகின்றது. அசித்தின் பெயரைச் சொன்ன உடனேயே எம்பெருமான் மனமகிழ்ந்து நமக்குத் திருவருள் பாலிக்கும் பெருமை பேசப் பெறுகின்றது.

> 'திருமா லிருஞ்சோலை
> மலைஎன்றேன்; என்னத்
> திருமால் வந்துஎன்
> நெஞ்சுநிறையப் புகுந்தான்'[8]

என்ற திருவாய்மொழி இதற்குச் சான்ருக நிற்கின்றது.

இயற்கை எழில் நிறைந்த திருவேங்கடத்தை ஆழ்வார் பெருமக்கள் தம்முடைய பாசுரங்களில் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இவை யாவும் கல் நெஞ்சத்தையும் கரையச் செய்யும் இன்பப் பாசுரங்கள்; கவி நயமும் இசையேற்றமும் பொருட் செறிவும் பொருந்திப் பொலிபவை. இறைவனிடம் அன்பு கொண்டு ஈடுபட்டு நெஞ்சம் நெக்குருகிப் பாடுபவன் சாதாரண மனிதனுக இருப்பினும் அவன் பாட்டு எவர் உள்ளத்தையும் எளிதில் கவரும். ஆனுல் பரம்பொருளின் பேரருளை நிறைவாகப் பெற வேண்டுமென்று பேரவாக் கொண்டு மனம் உருகி நெஞ்சம் கசிந்து பாடும் பக்தர்கள் இசைக் கவிஞர்களாக இருப்பின், அவர்களின் தோத்திரப் பாக்கள் எவ்வளவு உயர்சிறப்பை உடையனவாயிருக்கும்!

---

5 இவர் அந்தகக் கவி வீரராகவ முதலியாரின் மகன் வயிற்றுப் பேரர். செங்கற்பட்டுக்கு அருகில் உள்ள பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர்.

6 திருவேங்கடக் கலம்பகம்—24.

7 திருவாய், 3, 3: 8

8 திருவாய், 10, 8: 1

திருவேங்கடமலை திருவரங்கத்தைக் காட்டிலும் முதலாழ்வாரின் உள்ளத்தைக் கவர்ந்தது. பொய்கையாழ்வார்,

> 'வினைச்சுடரை நந்துவிக்கும்
> வேங்கடமே வானோர்
> மனச்சுடரைத் தூண்டும்
> மலை'[9]

[நந்துவிக்கும்-உருத்தெரியாமல் நசிப்பிக்கும்]

என்று கூறித் தன் உள்ளத்தை அதில் ஈடுபடுத்துவர். மனமாகிய சுடரை இதயம் என்னும் விளக்கைத்—தூண்டி ஒளிரச் செய்யும் மலை என்று சொல்லும்பொழுதே இவரது உள்ளத்தில் சுடர் விட்டெரியும் பக்தி விளக்கு நமக்கு ஓரளவு புலனாகின்றது. மண்ணவர்க்கு மட்டுமன்று விண்ணவர்க்கும் மனச் சுடரைத் தூண்டுகின்றது இம்மலை என்கின்றார் ஆழ்வார். பக்தி என்ற ஒரு நெருப்பை மூட்டி மற்றொரு நெருப்பை அணைக்கின்றது திருவேங்கடம் என்று சமத்காரமாகக் கூறும் கவிதையில் பக்திச் சுடர் கவின் பெறுகிறது. பேயாழ்வாரோ பரமபதத்தோடும் பாற்கடலோடும் இம்மலையைச் சேர்த்துப் பேசுகின்றார்.

> 'பண்டுஎல்லாம் வேங்கடம்
> பாற்கடல் வைகுந்தம்
> கொண்டுஅங்கு உறைவார்க்குக்
> கோயில்போல்'[10]

என்பது அவரது திருவாக்கு.

சேரர்கோன் குலசேகரப் பெருமானுக்குத் திருவேங்கட மலையின் மீது ஏற்பட்ட கழி பெருங் காதல் அற்புதமானது. ஓர் இனிய திருமொழியில் அந்த ஆழ்வாரின் எண்ணக் கோவைகளைக் கண்டு களிக்கலாம்.[11] திருவேங்கடத்தில் பிறத்தலும் அங்கு ஏதாவது ஒரு பொருளாக இருத்தலும் போதும் என்று கூறுகின்றார் இந்த ஆழ்வார். திருவேங்கட மலையில் வாழும் பேறு கிடைக்கப் பெற்றால் அறிவற்ற விலங்குப் பிறவியும் தனக்குப் போதும் என்கின்றார். கோனேரியில் வாழும் குருகு, திருவேங்கடச் சுனைமீன், வேங்கடக்கோன் உமிழும் பொன்வட்டில், செண்பகமரம் புதர், பொற்குவடு, மலையில் பாயும் கானாறு, காட்டுநெறி, கருவறைப் படி என்ற நிலை தனக்கு அமையின் போதும் என்று ஒன்றொன்றாகப் பிரித்துக் கூறுகின்றார். இறுதியாக 'எம்பெருமான் திருமலையில் ஏதேனும் ஆவேனே' என்று சொல்லித் தன் ஆசைக்குத் தலைக்கட்டி விடுகின்றார். இந்தத் திருமொழியை அடியொற்றியே முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்,

> 'மாடாக நிழற்றுசெழு
> மானகத் தவச்சிறிய
> பூடாகக் குழைத்தநறும்
> புதலாக வழிப்படுவார்
> ஓடாகப் பெறுவமெனில்
> உயிர்காணற் கதிபெறலாம்
> வீடாகத் திருநெடுமால்
> வீற்றிருக்கும் வேங்கடத்தே'[12]

[மாடு—விலங்கு; நிழற்றும்—நிழல் தரும்; தவச்சிறிய—மிகச்சிறிய; பூடு—புல் பூண்டு; புதல்—புதர்]

[மாடு-விலங்கு; நிழற்றும்-நிழல் தரும்; தவச்சிறிய-மிகச் சிறிய; பூடு-புல்பூண்டு; புதல்-புதர்]

என்ற பாடலை அருமையாக அமைத்து ஆழ்வாரிடமும் அவர் மூலம் திருமலையின் மீதும் தமக்குரிய ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றார்.

திருமலையின் இயற்கைக் காட்சிகள்

எங்கெல்லாம் அழகு உள்ளதோ அங்கெங்கெல்லாம் இறைவனும் இருப்பதாகக் கொள்வது தமிழரது கொள்கை. இக்கொள்கையே 'முருகன்' என்ற தமிழ்க் கடவுளின் தத்துவம் என்பதைத் திரு.வி.க. போன்ற இறையன்பு கொண்ட அறிஞர்கள் விளக்கிப் போந்துள்ளனர். இக் கொள்கையை ஒட்டியே பக்தர்களும் இயற்கையில் தோய்ந்து இறைவனை அநுபவிக்கின்றனர். காட்டிலும், நாட்டிலும் மண்ணிலும், விண்ணிலும், எல்லா இடங்களிலும் காணும் இயற்கையழகுகளில் எம்பெருமானின் அழகுக் கூறுகளில் மனத்தைப் பறிகொடுக்கின்றனர். இத்தகைய மனநிலையைக் கொண்ட ஆழ்வார்களும் இயற்கை அழகினைத் தம் உள்ளத்து அழகுடன் குழைத்து தம் மனம் விரும்பும் கடவுள் வடிவத்தின் தெய்வீக அழகாகக் காண்கின்றனர். இத்தகைய இயற்கை அழகு வாய்ந்த தலங்கள்தாம் 'திவ்விய தலங்கள்' என்றும் 'திருப்பதிகள்' என்றும் மதித்து அங்குள்ள திருக்கோயில்களில் வழிபடுவது முக்

---

[9] முதல் திருவந்தாதி—26
[10] மூன்றாம் திருவந்தாதி—61
[11] பெருமாள் திருமொழி—4
[12] திருவேங்கடக் கலம்பகம்—72

கியம் என்று கருதினர் பக்தர்கள். இத்தகைய தலங்களில் திருப்பதி என வழங்கப்படும் திரு வேங்கடமலை ஆழ்வார்கள் காலத்தில் சிறந்த தலமாக இருந்திருக்க வேண்டும்.

ஏழுமலையான் சிறப்பு

திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வரும் திருமலையின் இயற்கை எழிலிலும் மலையின் உயர்ச்சியிலும் ஈடுபட்டாலும் அங்குத் திருக்கோயில் கொண்டுள்ள இறைவன்பால் தம் மனத்தைப் பறிகொடுக்கின்றனர். பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் எம்பெருமானின் பெருமையைப் பலவாறு பேசி இனியவராகின்றார். எம்பெருமான் பல்வேறு அவதாரங்கள் எடுத்து மக்களுக்காகச் செய்த பல்வேறு நற்செயல்களை எடுத்துக்காட்டி அகமகிழ்கின்றார். திருவேங்கடமுடையான் குருந்தம் ஒசித்த கோபாலனாக வந்தவர்; கொக்கின் வடிவமாக வந்த பகாசுரனை வாய் பிளந்து வானுலகத்திற்கு அனுப்பிய வித்தகர்;[13] கல் நெஞ்சத்தை உடைய பூதனையிடம் பாலமுதம் பருகியதுடன் அவள் உயிரையே குடித்த அற்புதச் செயலையுடையவர்; கிருதயுகத்தில் கருமை நிறத்தையும், துவாபரயுகத்தில் நீலமணி நிறத்தையும் கொண்டிருப்பவர்.[14] கண்ணனாக இருக்கும் பொழுது மருதிடைத் தவழ்ந்து நளகூபர மணிக்ரீவர்களின் சாபத்தை நீக்கிய பெருமையுடையவர். குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்து ஆநிரைகளின் துன்பத்தைப் போக்கியவர்.[15] பார்த்தனுக்குச் சாரதியாக நின்று தேரோட்டியவர்; ஆயர்பாடியில் கோபியருடன் குரவைக் கூத்து ஆடிய கோவலர்.[16] மாணியாய்ச் சென்று மண்ணிரந்து கொண்டவர். இராமனாக நின்று மராமரங்கள் ஏழினையும் ஓரம்பினால் எய்த அற்புதச் செயலையுடையவர்.[17] பாலனாய் ஏழுலகுண்டு ஆலிலையில் துயின்றவர்; திண்திறல் அரியாகி ஒண்திறல் அவுணன் உயிர்குடித்த திறலுடையவர்.[18] பஞ்ச பூதங்களின் வடிவாக நின்று பேராயிரம் கொண்ட பெம்மான்.[19]

இன்னும் எம்பெருமான் இராவணனின் திண் ஆகம் பிளக்க அம்பு கோத்தது, இலங்கை அரக்கர்களை மடியச் செய்தது, நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு ஆலிளந் தளிர் மேல் துயில் கொண்டது, உரிமேல் நறுநெய்யை அமுது செய்தது, குறளுருவாய் நின்று ஈரடிகளால் நிலமனைத்தையும் கவர்ந்தது, அரியாய்த் தோன்றி அவுணன் உடல் பிளந்தது முதலிய செயல்களில் ஆழங்கால்பட்ட வண்ணம்[20] பல வேண்டுகோள்களை விடுக்கின்றார். 'அடியேனுக்கு அருளாயே' என்றும், 'அடியேனுக்கு அருள்புரியாயே' என்றும், 'குறிக்கோள் எனைநீயே' என்றும் பிரார்த்திக்கின்றார். அடுத்து, திருவேங்கடமுடையான் அவருடைய திருவுள்ளத்தில் வந்து புகுந்த பெருஞ்செயலைப் பேசி அநுபவிக்கின்றார்.[21] திருவேங்கடம் மேய என் ஆனை என் நெஞ்சில் உள்ளானே என்றும், 'திருவேங்கட மாமலைமேய கோனே! என்மனம் குடிகொண்டு இருந்தாயே' என்றும் பேசி இனியராகின்றமையையும் காண்கின்றோம்.

எம்பெருமான் திறத்தை எடுத்துரைத்த ஆழ்வார் தன் குற்றங்களை யெல்லாம் விரித்துக் கூறித் தன்னை ஆட்கொள்ளுமாறு வேண்டிச் சரண் புகுகின்றார். "எம்பெருமானே, உறவினரல்லாதாரை உறவினர்கள் என்று நம்பிக் கெட்டொழிந்தேன்.[22] அநுபவிக்கத் தகாதவற்றை அநுபவித்த[23] எண்ணற்ற பாவங்களைச் செய்தேன், பல உயிர்களைக் கொன்று பல வகைப் பாவங்களைப் பண்ணினேன்.[24] எண்ணற்ற யோனிகளில் பிறந்து இளைத்தேன்; ஒரு விதமான நற்செயல்களையும் புரிந்தேன் இலேன்.[25] பஞ்ச பூதங்களாலான யாக்கையில் புகுந்து புலம்பித் தளர்ந்தொழிந்தேன்.[26] அறியாப் பருவத்தே பல அவச் செயல்களைச் செய்து விட்டேன். இளமைப் பருவத்தில் பெண்டிர்க்காகவே அலைந்து சதிர்கேடனானேன்.[27] இங்ஙனம் பாவமே செய்து பாவியான அடியேன் உன்னை விட்டுத் தரிக்கமாட்டாத அன்பு பிறந்து உன்னையே அடைக்கலமாகப் பற்றிக் கொண்டேன். முன்னைத் தீவினைகளை எண்ணி என்னைக் கைவிடாது ஆட்கொள்ள வேண்டும் என்று கூறி[28] அவனைச் சரணமடைகின்றார் ஆழ்வார்.

ஆழ்வார்களுள் தலைவராகக் கருதப் பெறும் நம்மாழ்வாரின் அருளிச் செயல்களில் திருவேங்கடத்தைப் பற்றி வரும் செய்திகள் மிக அற்புதமானவை. விசிட்டாத்வைத தத்துவத்தின்

---

[13] பெரிய திருமொழி 1:8:1
[14] பெரிய திருமொழி 1:8:2
[15] பெரி. திரு. 1.8:3
[16] பெ. திரு. 1.8:4
[17] பெரி. திரு. 1.8:5
[18] பெரி. திரு. 1.8:6
[19] பெரி. திரு. 1.8:7
[20] பெரி. திரு. 1.10:1 to 5
[21] பெரி. திரு. 1.10:6,7
[22] பெரி. திரு. 1.9:1
[23] பெரி. திரு. 1.9:2
[24] பெரி. திரு. 1.9:3
[25] பெரி. திரு. 1.9:4,5
[26] பெரி. திரு. 1.9:6
[27] பெரி. திரு. 1.9:7
[28] பெரி. திரு. 1.9:9

உயிர் நாடியாகவுள்ள சரணுகதியின் அருமையை உலகுக்கு உணர்த்தும் பெருமையை இங்குக் காணலாம். திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் இந்த ஆழ்வாருக்குத் 'தாள் பரப்பி மண்தாவிய ஈசனு'கவும்,[29] 'என் கண், பாசம் வைத்த பரஞ்சுட'ராகவும்,[30] 'வேதியர் முழுவேதத்து அமுத'மாகவும்,[31] காட்சி அளித்து அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்ருன். அத்தகைய எம்பெருமானின் திருவடியில்,

'அகல கில்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா
நிகரில் புகழாய் உலகம்மூன்று
உடையாய் என்னை, ஆள்வோனே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல்ஒன்(று) இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'[32]

[இறை—கணநேரம்; நிகர்—ஒப்பு; புகல் ஒன்று—வேறு வழி]

என்று சரண்புகுகின்ருர். இந்தப் பாசுரம் வைணவர்கட்கு 'சரம சுலோகம்'[33] போல் இனிப்பது; அதுபோல் ஆன்மாவை ஈடேற்றும் புணைபோல் இருப்பது. இதுதான் எம்பெருமானைக் 'கால்கை' பிடித்து (காக்கை பிடித்து?) உய்யும் வழியாக இருப்பது. வைணவ தத்துவ மொழியில் கூறினுல் 'சரணுகதியாக' இருப்பது. இப்பாசுரத்திற்கும் இப்பாசுரம் அடங்கிய பதிகத்திற்கும் ஈட்டாசிரியர் கூறும் சொற்பொருள்கள் சிந்தைக்கும் செவிக்கும் இனிப்பவையாகும். இத் திருவாய் மொழியின் ஒன்பதாம் பாசுரத்தின் இறுதியடி 'அந்தோ அடியேன் உன்பாதம் அகலகில்லேன் இறையுமே'[34] என்பது. ஆழ்வார் பாசுரங்கட்கு உரை சொல்லும்போதே வைணவ தத்துவம் அனைத்தையும் குழைத்துத் தந்து விடுவார்கள்—அன்னை பிள்ளைக்கு முலைப்பாலுடன் மருந்தைக் குழைத்துத் தருவதைப் போல அன்னை உடலுக்கு மருந்து ஊட்டுகிருள்; ஆசாரியர்கள் உயிருக்கு மருந்து ஊட்டுகின்றனர். அவ்வளவுதான். இப்பாசுரம் சரணுகதியைக் குறிப்பதால் இத்திருவாய்மொழி முழுவதும் சரணுகதி சாரமாயிருக்கும் என்று வைணவ ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றுவார்கள். அதற்கேற்ப இந்த ஆறும் பத்து முழுவதிலும் 'உலகளந்த திருவடி' அடிக்கடி கூறப் பெறுவதையும் காணலாம். 'நெடியோன்' என்ற பெயர் திரிவிக்கிரமனைக் குறிப்பது; மூன்று ஆச்சரியமான செயல்களைச் செய்தவன் திரிவிக்கிரமன். இத் திருப்பாசுரத்தை துவய மந்திரத்தின் பதங்களோடு ஒப்பிட்டுப் பொருள் கூறுவர் ஈட்டாசிரியர்.

கால வெள்ளத்தில் திருமலையின் பெயரும் திருவேங்கடமுடையானின் பெயரும் மக்கள் மனத்தில் நிலையான இடத்தைப் பெற்று விட்டன.

கண்ணனடி யினைஎமக்குக் காட்டும் வெற்பு
கடுவினையர் இருவரையும் கடியும் வெற்பு;
திண்ணமிது விடுஎன்னத் திகழும் வெற்பு;
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு;
'புண்ணியத்தின் புகல்இது'எனப் புகழும் வெற்பு;
பொன்னுலகின் போகமெலாம் புணர்க்கும் வெற்பு;
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற்பு எனவழங்கும் வேத வெற்பே'[35]

[கடியும்—ஒழிக்கும்; திண்ணம்—உறுதி; செறிந்த—நிறைந்த; புகல்—இருப்பிடம்; பொன் உலகு—பரமபதம்; புணர்க்கும்—அடைவிக்கும்]

என்ற வேதாந்த தேசிகரின் பாடல் மலையின் பெயரை மக்கள் மனத்தில் ஆழப்பதித்து விட்டது.

ஆழ்வார் பெருமக்களாலும் இராமானுசராலும் அவர்பின் வந்த ஆசாரியப் பெருமக்களாலும் திருவேங்கடம்—நெடியோன் குன்றம்—பெரும்புகழ் பெற்றதைக் கண்டோம். இதனுல் கற்றவர்கள், கல்லாதவர்கள், பக்தர்கள், சுற்றுலாச் செல்வோர் முதலிய எண்ணற்ற மக்கள் நாடோறும் திருமலைக்கு வருவதும் போவதுமாக உள்ளனர். திருவேங்கடமுடயான் மீது—நெடியோன் குன்றத்து நீல முகிலின் மீது—எண்ணற்ற கதைகள், செவி வழிச் செய்திகள் எழுகின்றன. இவை தல புராணத்திலும் இடம் பெறுகின்றன. சில தனிப் பாடல்களும் திருவேங்கட மலைபற்றிப் புனையப் பெறுகின்றன. அவை மேலும் மேலும் மக்களிடையே பக்திச் சுடர் கிளர்ந்தெழுவதற்குக் காரணமாக

[29] *திருவாய் 3.3:11*
[30] *திருவாய் 3.3:4*
[31] *திருவாய் 3.3:5*
[32] *திருவாய் 6.10:10*
[33] *கீதை 18:66*
[34] *திருவாய் 6.10:9*
[35] *தேசிகப் பிரபந்தம் 82*

அமைகின்றன. சில பாடல்கள் அழியா வாழ்வும் பெறுகின்றன.

கூன்கொண்டு சென்றவன் கூன்நிமிர்ந்தோட,
　　குருடன் கொம்பில்
தேன்என்று காட்ட, முடவன்
　　அத்தேனை எடுக்க அயல்
தான்நின்ற ஊமை எனக்கென்று
　　கேட்ட தருவன்ரசம்
வான்நின்ற சோலை வடமலை
　　மேல்நின்ற மாதவனே ![36]

என்பது அங்ஙனம் அழியா வாழ்வு பெற்ற ஓர் அழகிய பாடல். மக்கள் மனத்தில் மலைமேலிருக்கும் மாதவன் நிலையான இடம் பெற்றிருப்பது போலவே பக்திச் சுவை கிளர்ந்தெழச் செய்யும் இப்பாடலும் நிலையான இடம்பெற்றுவிட்டது. இன்று மக்கள் மனமாகிய தேசப் படத்தில் மலையின் பெயரும் மலையன் பெயரும்—நெடியோன் குன்றமும் குன்றத்துக் கோயில் கொண்டுள்ள முகில் வண்ணனும்—அழியா வாழ்வு பெற்றுத் திகழ்கின்றன—திருப்பதி உலக யாத்திரிகர்களின் பேரிடமாகத் திகழ்கின்றது.

இத்தனைச் சிறப்புகளுக்கும் காரணம் என்ன? திருவேங்கடமுடையான் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையே யாகும். இந்த நம்பிக்கையைத் திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்,

தானே சரணமுமாய்த்
　　தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்கும்
　　தன்மையோன் — தேனேய்
திருவேங் கடந்தொழுதேம்
　　தீய விபூதிக்குள்
மருவேம்; கடந்தனெம்
　　வாழ்வு[37]

[சரணம்—உபாயம்; பலம்—பயன்; தேன் ஏய்—தேன் நிறைந்த; தீய விபூதி—லீலா விபூதி; மருவேம்—பொருந்தமாட்டேம்; கடந்தனெம்—கடந்து விட்டோம்].

என்று அழகாகக் கூறுவர். திருவேங்கடமுடையானை அடைவதற்கு அவனே உபாயமாக இருக்கின்றான்; அவனை அடைந்தவர்களுக்குப் பயனை அளிப்பவனாகவும் திகழ்கின்றான்; அவனை அடையவொட்டாமல் குறுக்கே வருகின்ற விரோதிகளையும் போக்குகிறவனாகவும் அமைந்து விடுகின்றான். இவன் வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கும் கலியுகவரதனாக இருப்பதால்தான் நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் திரண்டு வந்து 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கு'கின்றனர். இன்று நடைபெறும் நெடியோன் குன்ற நிகழ்ச்சிகள் யாவும் அங்குத் திருக்கோயில் கொண்டுள்ள நீலமுகிலின் அருளாட்சியினாலேயே என்பதற்கு என்ன தடை?

[36] பழம்பாடல்
[37] நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி 96

RAMANA MAHARISHI belongs to the line of seers, beginning with the Upanishadic masters and including Buddha and Sankara, who taught by precept and example jnana marga or the path of knowledge. After Sankara (788-820 A.D.) the Maharishi is the most outstanding representative of this path.

Sri Ramana is as typical a flower of Tamil culture with its rigorous intellectual precision, as Sri Ramakrishna is of Bengali culture with its emotional warmth, and Gandhiji of Gujarati culture with its brisk, down-to-earth practicality.

Madurai, where young Venkataraman realized the Self, was the legendary seat of the ancient Tamil academies, the field of the sports of Siva as Minakshisundara, the Saktipitha where the Mother Goddess sits enthroned, the place where song and ritual celebrate the communion of devotees with the Divine and where in the temple the images of the sixty-three are there for any child to see. Here, in the shadow of this temple, the boy Ramana felt at home as in his mother's lap; but, hearing the call from Arunachala, he rushed as it were to the arms of his father.

—K. SWAMINATHAN in Ramana Maharishi (National Book Trust, India)

தமிழ் இலக்கியத்தில் வைணவம்

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

முன்னுரை

'சைவர்கள் யாரைச் சிவன் என்று வழிபடுகிறார்களோ அச் சிவனும், வேதாந்திகள் யாரைப் பிரமன் என்று வணங்குகிறார்களோ அப்பிரமனும், பௌத்தர்கள் யாரைப் புத்தர் என்று போற்றுகிறார்களோ அப் புத்தரும், வாதத் திறன் வாய்ந்த நையாயிகர் எவரைக் காரண கர்த்தா என்று கருதுகின்றனரோ அக்காரண கர்த்தரும், சமண சமயக் கோட்பாடுகளை நன்கறிந்த சமண சமயத்தார் யாரை அருகன் என்று கூறுகின்றனரோ அந்த அருகனும், மிமாம்சகர் எவரைக் கருமகர்த்தா என்று குறிப்பிடுகின்றனரோ அந்தக் கருமகருத்தாவும் ஆன அந்த ஹரியே! மூவுலகத் தலைவரே! நாங்கள் வேண்டும் வரங்களைத் தந்தருள்வீராக'!

கர்நாடகக் கல்வெட்டு,
தொகுதி 1, பகுதி 5, பக்கம் 99

தமிழிலக்கியத்தில் வைணவத்தின் தொன்மை

இந்திய நாட்டின் தொன்மைமிக்க சமயங்களுள் வைணவமும் ஒன்று. வடமொழி வேதங்களில் விஷ்ணுவே முழு முதற் கடவுளாகக் கருதப் பெறுகிறார். கடல் மீதில் பள்ளி கொண்டிருப்பவராதலின் வடமொழியில் விஷ்ணுவை **நாராயணன்** என்றும், பச்சைமாமேனியனுதலால் **ஹரி** என்றும், தென்மொழியாம் தமிழில் **திருமால்** என்றும் **மாயோன்** என்றும் குறிப்பிடப் படுதலைக் காண்கிறோம்.

வடமொழியும் தமிழ்மொழியும் இந்தியாவில் வழங்கிவரும் தொன்மை மிக்க மொழிகள். இந்த இரு மொழிகளிலும் திருமாலைப் பற்றிய இலக்கியங்கள் மிகப் பல உண்டு. ஆதலின் வைணவ சித்தாந்தத்தை உபய வேதாந்தம் என்பர். இவ்விருமொழிகளில் உள்ள தொன்மை மிக்க நூல்கள் எல்லாம் வைணவத்தை இந்தியாவின் தொன்மைச் சமயம் என்றே போற்றுகின்றன. வேதங்களும் உபநிடதங்களும் வடமொழியில் உள்ள மிகத் தொன்மையான நூல்கள். அவற்றைப் போலவே மிக்க தொன்மை வாய்ந்த இலக்கணமாகிய தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் தமிழ் மொழியில் மிக்க தொன்னூல்களாகக் கருதப் படுபவை என்பதில் ஐயமில்லை.

தொல்காப்பியத்தில்

தொல்காப்பியம் குறைந்தது மூவாயிரம் ஆண்டு—ஏன் அதைவிடத் தொன்மை மிக்கது என்று தமிழாராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்நூலின் ஆசிரியர் பெயரால் அமைந்ததே அத் தொல்காப்பிய இலக்கண நூல். அவர் அகத்திய முனிவர் தம் பன்னிரு மாணவர்களுள் ஒருவர். அவ்வகத்திய முனிவர், வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்து நெல்லை மாவட்டத்திலிருக்கும் பொதிய மலையில் தங்கி, தண்டமிழ்மொழியையும் தமிழ் மக்களுடைய பழக்க வழக்கங்களையும் கற்றறிந்தவர். தமிழ் மொழியின் இயல்பையும் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் நன்கறிந்து **அகத்தியம்** என்று தம் பெயரால் ஓர் அரிய இலக்கணத்தை இயற்றியவர். அவர்தம் மாணுக்கரான தொல்காப்பியரும் மேலும் ஓர் இலக்கணம் தமிழ் மொழிக்குத் தேவை என்பதை உணர்ந்து, **தொல்காப்பிய இலக்கணத்தை** இயற்றியருளினர். அவ்விலக்கணம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என முப்பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. அகத்தியமோ, கால வெள்ளத்தில் மறைந்து விட்டது.

பண்டைத் தமிழர், தாங்கள் வாழ்ந்த நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனப் பாகுபாடு செய்திருந்தனர். முல்லை

என்பது, காடும் காடு சார்ந்த நிலமுமாகும். குறிஞ்சி என்பது, மலையும் மலையைச் சார்ந்த பகுதியுமாகும். மருதம் என்பது வயலும் வயலைச் சார்ந்த நிலமுமாகும். கடலும் கடலைச் சார்ந்த நிலமும் நெய்தலாகும். தொல்காப்பியர், இப்பகுதிகளைத் தமது தொல் காப்பியப் பொருளதிகாரத்தில் உள்ள அகத் திணை இயலில் குறிப்பிட்டிருப்பதைக் காண லாம்.

இப்பாகுபாட்டில் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு தெய்வம் குறிப்பிடப்படுகிறது. முதற்பகுதியான முல்லைக்குரிய கடவுள் **மாயோன்** என்னும் **திருமால்**. இவரே வட மொழியில் **விஷ்ணு** எனப்படுபவர். குறிஞ்சிக் குரிய கடவுள் **சேயோன்** என்னும் **முருகன்**. இம்முருகன் வடமொழியில் **கார்த்திகேயன்** என்று குறிப்பிடப்படுகிறார். மருதத்துக்குரிய வன், தேவர்களுக்குத் தலைவனான **இந்திரன்**. நெய்தலுக்குரிய கடவுள் **வருணன்**. **வருணம்** என்னும் சொல்லுக்கு நீர் என்பது பொருள். இஃது ஆகுபெயராகக் கடலைக் குறிக்கும். இக் கருத்தை,

'' மாயோன்மேய காடுறை உலகமும்
சேயோன்மேய மைவரை உலகமும்
வேந்தன்மேய தீம்புனல் உலகமும்
வருணன்மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச்
சொல்லிய முறையாற்சொல்லவும் படுமே''

என்னும் தொல்காப்பிய அகத்திணை நூற் பாவால் நன்கறியலாகும்.

வடமொழி வேதங்களிலும் உபநிடதங்களி லும் திருமால் வேத முதல்வனாகக் கூறப்படுத லால், இத்தொல்காப்பிய நூற்பாவிலும் திரு மாலாகிய மாயோன் முதலில் கூறப்பட்டிருப் பது குறிப்பிடற்குரியது. எட்டுத் தொகை யில் ஒன்றான **நற்றிணையில்** உள்ள கடவுள் வாழ்த்துப்பாடலும்,

' வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரியோன் '

என்று குறிப்பிடுவதும் மேற்கூறிய கருத்தை வலியுறுத்துகிறது. திகிரியோன் என்னும் சொல்லுக்குச் சக்கராயுதத்தை ஏந்திய திரு மால் என்பது பொருளாகும்.

மேலும் தொல்காப்பியப் புறத்திணையில் உள்ள 63ஆம் நூற்பாவில் ஒல்காப் புகழ்மிக்க தொல்காப்பியர், பூவை நிலையைப் பற்றிக் கூறுகையில்

' மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ் பூவை நிலையும் '

என்று விளக்குகிறார். அரசனைத் திருமா லோடு உவமித்துக் கூறுதலைப் **பூவைநிலை** என் பர். இங்குப் பூவை என்பது நீலநிறமுள்ள காயாம்பூ வண்ணனாகிய திருமாலைக் குறிக்கும். திருமால் உலகத்தையும் உலகத்து உயிர்களை யும் காத்து வருதல் போலவே, அரசனும் தன் குடிமக்களையும் உலகத்தையும் காத்து வருத லால், அரசனுக்கும், திருமாலை உவமையாகக் கூறுகிறது **பூவைநிலை** என்பதறிக.

இன்னும் தொல்காப்பிய இறுதி இயலாகிய மரபியலிலும் வைணவத்தின் தொன்மைக்குச் சான்று காணலாம். இவ்வியல் பண்டைத் தமிழர் பழக்க வழக்கங்களைக் கூறுகிறது. ஆதலால், அந்தணர்க்குரிய பொருள்களைக் கூறு கையில் தொல்காப்பியர்,

' நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய '

என்னும் நூற்பாவை அமைத்திருக்கிறார். இது முனிவர்கள் அணியும் பூணூலையும் கையில் கொண்டு செல்லும் கமண்டலம், முக்கோல், மணை ஆகியவற்றையும் குறிப்பிடுகிறது. முக் கோல் என்னும் சொல் திரிதண்டத்தைக் குறிக் கும். வடமொழியில் முக்கோலையும் கரகத்தை யும், மணையையும் எடுத்துச் செல்லும் துறவி கள் 'திரிதண்ட சந்நியாசிகள்' எனப்படுவார் கள். அந்தணர் என்னும் சொல் இங்கு வைணவத் துறவிகளை மட்டுமே குறிக்கும். இத்துறவிகள் செல்லும் இடமெங்கும் இவற்றை எடுத்துச் செல்வது வழக்கம். இத்துறவிகளைக் கலித் தொகையும் **முக்கோற்பகவர்** என்று கூறுகிறது. நம்மாழ்வாரது **திருவாய் மொழி**யும்,

' மேவித் தொழுமடி யாரும் பகவரும்
மிக்கது உலகே ' (5:3:9)

என்கிறது. இந்த எடுத்துக் காட்டுகளிலிருந்து வைணவம் தமிழ்நாட்டின் மிகத் தொன்மை யான தொல்காப்பியத்துக்கும் முற்பட்டதான சமயம் என்பது தெளிவாகும்.

சங்க இலக்கியத்தில்

சங்க இலக்கியமும் தொன்மை மிக்கது என் பதைத் தமிழுலகம் நன்கறியும். பண்டைக் காலத்தில் மதுரையில் சங்கம் இருந்தது. இதனைக் கடைச் சங்கம் என்று இலக்கியங்கள்

கூறும். சங்கம் என்னும் சொல்லுக்குப் புலவர் கூட்டம் என்பது பொருள். இச்சங்க காலத்தில் வெளிவந்த நூல்களைச் சங்க இலக்கியம் என்பர். இவ்விலக்கியம் **மேற்கணக்கு** என்றும் **கீழ்க்கணக்கு** என்றும் பிரிக்கப்பட்டது. **எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும்** மேற்கணக்கு நூல்கள். இவை பெரும்பாலும் ஆசிரியப் பாக்களால் ஆனவை. நூறு அடிகளுக்கு மேற்பட்ட அடிகளால் ஆன பத்து நூல்களின் தொகையே பத்துப் பாட்டாகும். குறைந்த ஆசிரியப்பாக்களால் ஆன எட்டு நூல்களே எட்டுத்தொகை எனப்படும். பெரும் பாணாற்றுப்படையும் முல்லைப் பாட்டும் பத்துப் பாட்டைச் சேர்ந்தவை. புறநானூறு எட்டுத் தொகையுள் ஒன்றாகும். எட்டுத்தொகையைச் சேர்ந்த பரிபாடலில் எட்டு திருமாலுக்கும், முப்பத்தொன்று முருகக்கடவுளுக்கும் ஒன்று காடுகிழாளுக்கும், இருபத்தாறு வையை ஆற்றிற்கும், நான்கு மதுரைக்கும் உரியனவாக எழுபது பாடலையுடையது என்று ஒரு பழைய வெண்பாவால் அறிகிறோம். காலவெள்ளத்தில் மறைந்தவைபோக, இன்று எஞ்சியுள்ளவை இருபத்திரண்டு பாடல்களே. அவை வருமாறு:

திருமாலுக்குரியவை—6 (1,2,3,4,13,15)
முருகக்கடவுளுக்குரியவை—8
வையைக்குரியவை—8
மொத்தம்—22

திருமாலுக்குரியவை ஆறும் கடவுள் வாழ்த்தாய் உள்ளன. பரிபாடல் என்பது ஒரு வகை இசைப்பாட்டு. இது ஒரு வெண்பாவாகி வருதலன்றிப் பல உறுப்புகளோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப் பெறுவது. இப்பாட்டை இயற்றுபவர் ஒருவர் என்றும், அதற்கு இசை அமைப்பவர் மற்றொருவர் என்றும் பரிபாடல் நூலிலிருந்து அறிகிறோம். இது தெய்வமும் காமமும் பொருளாக வருவது.

வெண்பாவால் அறம், பொருள், இன்பம் பற்றித் தனித்தனியாகவோ மூன்றையும் ஒருங்கு சேர்த்தோ பாடப்பட்டவை கீழ்க் கணக்கு நூல்கள் எனப்படும். திருக்குறள் உள்ளிட்ட நூல்கள் பதினெட்டும் கீழ்க் கணக்கைச் சேர்ந்தவை. இப்பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் பிற்காலச் சான்றோர்களால் இயற்றப்பட்டவை.

இனிச் சங்க நூல்களில் திருமால் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண்போம். புறநானூற்றில் உள்ள 56ஆம் பாடல்,

'மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுறு புட்கொடி விறல்வெய் யோனும்'

என்று திருமாலைக் குறிப்பிடுகிறது. பத்துப் பாட்டுள் ஒன்றான முல்லைப் பாட்டும்,

**'நனந்தலை யுலகமும் வளை இ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி'**

—(முல்லைப்பாட்டு 1-4)

பெரும்பெயல் பொழிந்த சிறுபுன்மாலை என்று மேகத்துக்கு உவமையாகத் திருமாலைக் காட்டியிருப்பதைக் காண்கிறோம். 'கடல் நீரைப் பருகிய மேகம் திருமால் போன்று கருநிறம் பெற்று உலகத்தை வளைந்து நீரொழுக நிமிர்ந்து பெரும் பெயல் பொழிந்த கார்ப்பருவத்து மாலை' என்பது இவ்வடிகளுக் குரிய பொருளாகும்.

பத்துப்பாட்டின் மற்றொரு பாவான பெரும்பாணாற்றுப் படையும் இரண்டிடங்களில் திருமாலைக் குறிப்பிடுகிறது.

**' நீடுகுலைக்
காந்தளம் சிலம்பிற் களிறுபடிந் தாங்கும்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னுல்கண் '**

என்பது ஒன்று. இவ்வடிகள், 'நீண்ட பூங் கொத்துகளைக் கொண்ட காந்தள் பூவையுடைய அழகிய பக்கமலையிலே யானை கிடந்தாற்போலப் பாம்பணையாகிய படுக்கையிலே துயில் கொண்டோனுள்ள அவ்விடத்து' என்று பொருள்படும். ஒரு பாணன் மற்றொரு பாணனுக்கு வழிகாட்டியனுப்புவது போலப் பாடப் படுவது ஆற்றுப்படை. அந்நிலையில் பெரும் பாணன் ஒருவன் வழியில் கண்ட பாணனைப் பார்த்து 'நீ காஞ்சிக்குச் செல்லும் போது திருவெஃகாவில் பாம்பணையிற் பள்ளி அமர்ந்தோனாகிய '**திருமாலைக் கண்டு வழிபட்டுச் செல்க!**' என்று கூறுமிடத்து இச்செய்தி வருகிறது. திருமாலை பாம்பணையிற் பள்ளி கொள்ளுதல் காந்தளஞ் சாரலில் களிறுபடிதலை ஒக்கும் என்பது கருத்து. மற்றோரிடத்தில் கச்சிநகரைக் கூறுமிடத்து,

**'நீனிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முகத் தொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி'**

(பெரும்பாண் 402-403)

என்று அந்நகருக்கு இவ்வுவமை கூறுவதைக்

காண்கிறோம். கச்சி நகரம் நான்முகனைப் பயந்த தாமரைப் பொகுட்டைப் போல விளங்குகிறதாம்.

பரிபாடல் நூலிலுள்ள ஆறுபாடல்களும் திருமாலை மிகவும் சிறப்பாகப் போற்றிப் புகழ் கின்றன. அவற்றில் காணப்படும் சில கருத்து களை மட்டும் இங்குக் காண்போம்.

முதற் பாடல் :

''திருமாலே! நீ காமனுக்கும் பிரமனுக் கும் தந்தை. அறமும் அன்பும் நீ, திங்க ளும் நீ, கதிரவனும் நீ, ஐந்து திருமுடிகளை யுடைய ஈசனும் நீ, மேகமும் வானமும் நிலமும் இமயமலையும் நீ, இங்ஙனம் பல பொரு ளாயிருத்தலினால், 'இன்னாரையொத்தாய் இத் தகையை' என்று நினக்கு உவமைகூறத் தகு வோரை யாம் காணோம். நீ எல்லா உயிர்க் கும் முதல்வனாய் உள்ளாய். நின்புகழோடு விளங்கி நீ நின்னையே ஒத்திருக்கின்றாய். இங் ஙனம் புகழ்ந்து, எம் சுற்றத்தோடு நின் திரு வடிக்கண் பொருந்தி என்றும் விளங்குக என்று, நின் திருவடியைத் தொழுது பரவு கின்றோம். அருள் புரிக!

—ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.

இரண்டாம் பாடல் :

'வராகத் திருவுருவெடுத்து நீ நிலத்தினை எடுத்தாய். ஆழிமுதல்வ! நின்னைத் தொழு வோம். நீ பலதேவனுக்குப் பிறப்பு முறை யால் இளையை; ஆனால், அவனுக்குச் சிறப்பு முறையால் முதியையாகின்றாய். நீ உயிர் தோறும் மறைந்து நிற்கின்றாய். நின் திருமார் பில் உள்ள அணிகள் இந்திர வில்லை ஒக்கும். நின் மார்பில் திருமகள் வீற்றிருக்கிறாள். நினது திருமேனியின் ஒளி நீல மணியையும், நின் கண்கள் இணைத்தாமரையையும், நின்வாய்மை தப்பாது வருகின்ற நாளையும், நின் பொறுமை நிலத்தையும், நின் அருள் நீர் நிறைந்த மேகத் தையும் ஒக்கும் என்று வேதம் கூறும். கருடக் கொடியை யுடையோய்! வேள்வியாசானது உரை நின் உருவம்: வேள்விக்குரிய பசுவைக் கொள்ளல் யூப உருவாகிய நினக்கு உணவு. வேள்வித் தீயை முறையாக மூட்டிச் சுடரினது பெருக்கத்தை உண்டாக்கிக் கோடல் அந்தணர் காண்கின்ற நின்வெளிப்பாடு. கடவுள் இல்லை யென்பாரும் அதுகண்டு, உண்டு என்பர். அத் தகைய அரிய மரபினோய்! எம்முடைய அறிவு கொடும்பாடு அறியாமல் எமக்கு மெய் யுணர்வே உண்டாக வேண்டும் என்று நின் னடியை முடியுற வணங்கிப் பலமுறை வாழ்த்திச் சுற்றத்தோடு பரவுகின்றோம். அருள்புரிக.'

—கீரந்தையார்

மூன்றாம் பாடல் :

'மாயோய்! பணிந்தாரது பிறவிப்பணியைப் போக்கும் சேவடியையும் நீலமணி போன்ற திருமேனியையும் உடையோய்! நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐம்பூதங்களும், ஐந்து கோள்களும், யமனும் அவன் ஏவலனாகிய கூற் றுவனும், மூவேழுலகமும் அவற்றிலுள்ள உயிர் களும் ஆகியவை எல்லாம் நின்னிடத்தில் தோன்றிப் பரந்தவை என்று வேதம் கூறும். அதனால், யாமும் கூறினோம். நீ கீழ் ஏழு உலகமும் அளந்தாய்; **கேசி** என்னும் அசுரனை அழித்தாய். வேத முதல்வனே! தேவர்களுக்கு முதல்வன் நீ. நீ இத்தன்மையினை என்று சாம வேதம் கூறுவதால், இவற்றை அறிந் தோம். நீ பிறவாப் பிறப்பில்லை; நின்னைப் பிறப்பித்தோரும் இல்லை. நினது சக்கரமே உலகிற்கு நிழலாவது. அருள் புரிவாயாக!

—கடுவன் இளவெயினனார்

நான்காம் பாடல் :

'திருமாலே! அன்பர்கள் நின்னைத் தொழு தேத்தி நின்புகழை விரித்துக் கூறுகின்றார்கள். அப்புகழ்கள் எல்லாம் நினக்கு இயல்பானவை. **பிரகலாதனை**க் காக்க நீ தூணிலிருந்து வெளி வந்து **இரணியனை** அழித்தாய். கருடக்கொடி யுடையாய்! நீ அன்பர் மனத்தில் கொண்டன வன்றி, நினக்கென வேறு திருவுருவம் உடை யையல்லை. எங்கும் நீயே நிறைந்திருக் கின்றாய். அன்பர்களுக்கு அகப்பட்டவன் நீயே. அவ்வன்பர்களுக்கு ஏவலனும் நீயே. அவரவர் செய்வனவற்றிற்குப் பாதுகாப்பாய் இருப்பவனும் நீயே. அருள்புரிவாயாக!

—கடுவன் இளவெயினனார்

பதின்மூன்றாம் பாடல் :

திருமாலே! பெரிய கரியமேகம் ஒன்று இரு பக்கமும் சூரிய சந்திரர்களை அணிந்திருப்பது போலச் சக்கரத்தையும் சங்கையும் ஏந்திய திருக்கரங்களுடன் நின் திருமார்பையும் தொழுவோர்க்கு நினது வைகுண்டம் உரிய தாகின்றது. சுவை முதலாகிய புலன்களும்

நீ, அவற்றை நுகரும் பொறிகளும் நீ, வான மும் நீ, காற்றும் நீ, தீயும் நீ, நீரும் நீ, நிலமும் நீ. மூவேழுலகத்து உயிர்களும் நின் னிடம் உள்ளன. பாற்கடல் நடுவே ஆதி சேடன்மேல் அறிதுயில் கொள்வோனும், பகை வரை அழிக்கும் கலப்பைப் படையை யுடை யோனும், வராக வடிவம் எடுத்தோனுமாகிய மூன்று திருவுருவங்களாய்ப் பிரிந்த ஒருவன் நீ. கருடனைக்கொடியாய்க் கொண்டோய்! மேகம், காயாம்பூ, கடல், இருள், நீலமணி என்னும் ஐந்தையும் ஒக்கும் திருமேனியை உடையை, நின்னைத் துதிக்கும் அன்பர்களின் இருவினை களையும் அறுப்பாய். **முற்பிறப்புக்களில் யாம் செய்த தவப்பயனால் நின் திருவடியைக் கையால் தொழுது பலமுறை இறைஞ்சி வாழ்த்தும் பேறு பெற்றோம். யாம் மேலும் விரும்புவது இவ்வாறு செய்தலே ; அருள் புரிவாயாக !**

—நல்லெழிநியார்

பதினைந்தாம் பாடல் :

மலைகளுள் சிறந்தது திருமாலிருஞ் சோலை மலை. அரிதிற் பெறுந்துறக்கத்தை எளிதிற் பெறச் செய்வதனால், அத் திருமாலிருஞ் சோலை மலையை ஏத்தக் கடவோம். திருமால் **பலதேவரோடு** அமர்ந்திருக்கும் நிலைமையை மாந்தர்களே! தியானம் செய்மின்: அம்மலை யின் சிறப்பைக் கேண்மின்கள். மந்தி பாயவும், முல்லை மலர் கற்பு நிகழ்ச்சியைக் காட்டவும், மயில்கள் அகவவும், குருக்கத்தியின் இலை உதிரவும், அதன்கண் இருந்து குயில் கூவவும், அச்சோலை மலைக்குகைக்குள் முழக்குகின்ற எதி ரொலி ஒழியாது. நும் மனைவியரோடும் தாய் தந்தையரோடும் குழந்தைகளோடும் கூடி, அம் மலையைத் தெய்வமாக மதித்துத் திசை நோக்கித் தொழுது செல்மின்கள். உயிர்களின் பிறவித் துன்பத்தைக் களைவோனாகிய திருமால் அம்மலையில் எழுந்தருளியிருக்கின்றான். திரு மாலே! நீ பசுந்துழாய் மாலையையுடையை, நீல மலையைப் போன்றிருக்கிறாய்; மிக்க ஒளி யினையுடையை; ஒற்றைக் குழையையுடையை; கருடக் கொடியையுடையை; வளைந்த கலப் பையையுடையை; தண்டு, சங்கு, சக்கரம், வில், அம்பு, பாராவளை, வாள் என்பவற்றினை ஏந்தியுள்ளாய். இங்ஙனம் வேதம் அவன் பெருமை ஈதென்று உரைத்தலால் யாமும் அவற்றுள் அறிந்தவற்றைக் கூட்டி உரைத்துத் திருமால், பலதேவர் என்னும் இருவரையும் தொழுது, **அவ்விருங்குன்றத்தின் அடியில் வாழ் தல் எமக்கு உண்டாகுக** என்று வேண்டு வோமாக!

—இளம்பெருவழுதியார்

முடிவுரை :

திருக்குறளிலும் திருமால், **மடியின்மை** என் னும் அதிகாரத்தில் உள்ள பத்தாவது குறட் பாவில் திருவள்ளுவரால்,

‘மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு’

என்று குறிப்பிடப்படுகிறார். ‘அடியில் உல கத்தை அளந்த திருமால் தாவிய பரப்பு எல் லாவற்றையும் சோம்பல் இல்லாத மன்னவன் ஒருசேர அடைவான்’ என்பது இக்குறட்பா விற்குரிய பொருள். ‘அடியளந்தான்’ என் னும் தொடர் திருமாலைக் குறிக்கிறது என்று சொல்லத் தேவையில்லை. இப்படி வைணவம் தொன்மைக் காலந்தொட்டு இன்றுவரை அமிழ்தினும் இனிய தமிழிலக்கியத்தில் பல வகையில் நலமுற ஊடுருவப் பீடு பெற்றிருக் கிறது என்பதறிக.

பிற்காலத்தில் தோன்றிய ஆழ்வார்களும் ஆண்டாளும் பாலேய் தமிழில் இசை நலங் கனியத் திருமாலைப் பாடிய பாடல்களும், திவ் விய கவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் உள் ளிட்ட கவிஞர்கள், இயற்றிய நூல்களும், கம்பர் இயற்றிய இராமாயணமும், வில்லிபுத் தூரார் இயற்றிய பாரதமும், ரேவுவைச்சூடு வார் இயற்றிய பாகவத புராணமும் திருமால் பெருமையைப் பரக்கப் பேசும் நூல்க ளேயாம்.

முருகனின் படைவீடுகள்

ம. அ. முருகேசன்

''சேயோன் மேய மைவரை உலகம்'' என்று மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சியை விதந்து ஓதினர் ஓல்காப் புலமை தொல்காப்பியனர். 'சேயோன் மேய' என்ற தொடருக்குச் ''செங்கேழ் முருகன் காத லித்த'' என்ற உரை வகுக்கிருர் உச்சிமேற் புலவர் கொள் நச்சினர்க்கினியர். குறிஞ்சிப் பூ முதல் எத்துணையோ சிறப்புக்களைப் பெற்றிருந்தாலும், குறிஞ்சியின் தனிச்சிறப்பு, முருகன் காதலித்துத் தங்கியதே என்பது இப்புலவர்கள் கருத்துப்போலும்; இப்படி குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன், தமிழ்த் தெய்வம் என்றும் போற்றப் படுகிருன். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நிலத்தை நான்காகவும், அவற்றிற்கு முறையே மாயோன், முருகன், இந்திரன், வருணன் ஆகியவர்களைத் தலைவர்களாகவும் வகுத்த தமிழ் மரபே, முருகன் தமிழ்த் தெய்வம் என்றும் வழங்குகிறது. ''தமிழால் வைதாரையும் வாழ்விப்பவன் முருகன்'' என்று பின்னுளில் வந்த புலவரொருவரும் பாடுகிருர். இறைப் பொருளைக் குறிக்கும் 'முருகு' என்ற சொல்'அன்' எனும் ஆண் பால் விகுதி பெற்று '**முருகன்**' என்ருயிற் றென்பர் சொல்லாராய்ச்சியாளர். எங்கு முள்ள பரம்பொருளே, அன்பர்கள் விழையும் வண்ணம் முருகன் என்னும் திருக் கோலந் தாங்கித் தமிழ்க் கடவுளாகி வந்தது என்று கொள்ளுவாரும் உளர். சிவபெருமான், உமாதேவி இவர்களின் இளைய புதல்வன் முருகன்; அவன் தேவசேனுதிபதி என்று பேசும் புராணங்களும் இலக்கியங் களும் இருக்கின்றன. அருந்ததி யொழிய கார்த்திகைப் பெண்டிர் அறுவர் சிவபெருமானின் கருவினை விழுங்கி, சரவணப்பொய்கையில் பதுமப் பாயலில் முருகனைக் கருவுயிர்த்தனர் என்று பரிபாடல் கூறுகிறது.

தமிழகத்திலே முருகன் திருக்கோயில் கொண்டு வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள் பாலிக்கும் தலங்கள் ஆறு. அவை ஆறும் அவனுடைய ஆறு படை வீடுகள் என்பது நம்மிடையே நிலவி வரும் ஒரு கருத்து. அந்த ஆறும், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி (பழநி), திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோருடல், பழமுதிர் சோலை என்பவையாகும். இந்தத் தலங் கள் ஒவ்வொன்றிலும் முருகப் பெருமான் ஒரு திருவிளையாடலைச் செய்தான் என்று நம் புராணங்கள் பேசுகின்றன. திருச்செந்தூரில் சூரனை வதைத்தான் என்பதும், திருப்பரங் குன்றில் தெய்வயானையை மணந்தான் என் பதும், திருவாவினன்குடியில் தந்தையுடன் மாறுபட்டு ஆண்டியாய் நின்ருன் என்பதும், திருவேரகத்தில் தந்தைக்கு மந்திரம் சொன் னன் என்பதும், குன்றுதோருடலில், திருத்தணியில் வள்ளியை மணந்து நின்ருன் என்பதும் புராணக் கதைகள். பழமுதிர் சோலை எது என்பது பற்றியும், அங்கு நடந்த நிகழ்ச்சி பற்றியும் மாறுபட்ட கருத் துகள் நிலவுகின்றன. மதுரையை அடுத்த அழகர்மலையே பழமுதிர் சோலை என்று ஒரு சாராரும், அல்ல, மேற்கே மலை நாட்டிலுள் ளது என்று ஒரு சாராரும், அல்ல அல்ல, எல்லாக் குன்றுகளிலும் உறைவது போல, எல்லாச் சோலைகளிலும் முருகன் உறைவதே பழமுதிர்சோலை என்பாரும் உளர். ''சீர் கெழு செந்திலும், செங்கோடும், வெண் குன்றமும், ஏரகமும் நீங்கா இறைவன்'' என்று முருகனை இளங்கோவடிகள் பாடுகிருர். எனவே, முருகனின் ஆறுபடைவீடு களைப் பற்றியும் புராணங்களும் பழந்தமிழ் இலக்கியங்களும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. ''படைவீடு'' என்ற சொல்லின் நேரடிப் பொருள் ''பாசறை'' அல்லது ''படைக்கலச் சாலை'' என்பதே. முருகனின் ஆறுபடை வீடு என்ருல் முருகப் பெருமான் பாசறை அமைத்துத் தங்கிய ஆறு இடங்கள் என்றுதான் கொள்ள வேண்டும். ஆனல், முருகன் ஆறு இடங்களில்

பாசறை அமைத்துத் தங்கியதாகப் புராணங்கள் கூடக் கூறவில்லை. திருச்செந்தூரிலே பூதகணங்களுடன் தங்கிப் பாசறை அமைத்து அங்கிருந்து சூரபதுமனுடன் போர் புரிந்து சூரரை அழித்தார் என்று புராணங்கள் பேசுகின்றன. எனவே, திருச்செந்தூரை முருகப் பெருமானின் பாசறையாகப் படை வீடாகக் கொள்ள இடமிருக்கிறது. மற்ற ஐந்து இடங்களையும் முருகனின் படை வீடாகக் கொள்ள இடமில்லையே! அப்படியிருந்தும், அந்த இடங்களையும் முருகனின் படைவீடாக வணங்கி வருவதற்குக் காரணம் ஏதாவது இருக்க வேண்டும். அது என்னவாக இருக்கலாம்?

திருமுருகனின் பெருமையைப் பேசும் தமிழ் நூல்களிலே மிகப் பழமையானதும் சிறந்ததும், ''புலவராற்றுப்படை'' என வழங்கும் திருமுருகாற்றுப் படையே! இன்று நமக்குக் கிடைக்கும் தமிழ் இலக்கியங்களில் மிகப் பழமையானவை சங்க இலக்கியங்களே. அவைகளில் முதலாவது திருமுருகாற்றுப் படை. அது முருகன் பெருமையைப் பேசுகிறது. அதை ஆக்கியவர் மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர். இவர் திருமுருகாற்றுப்படை பாடியதற்கு ஒரு வரலாறு சொல்லப்படுகிறது. மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே, ஆலவாய் அண்ணலுடன் சொற்போரிட்டுத் தோற்றபோது, அண்ணல் நக்கீரனுக்கு வெப்ப நோய் கொடுத்து, கயிலை சென்று கண்டால் அது தீருமென்று அருளியதால், நக்கீரர் கயிலைக்குப் புறப்பட, வழியில் ஒரு பூதத்திடம் சிறைப்பட்டு, 'திருமுருகாற்றுப்படை' பாட, முருகன் வந்து அவரைச் சிறை மீட்டார் என்பதே அந்த வரலாறு. இப்படித் தோன்றிய திருமுருகாற்றுப் படையில், முருகனின் அடையாளமும், அவன் வீற்றிருக்கும் இடங்களும், அதனதன் தன்மைகளும் அவனுடைய பேரருளும் பேசப்படுகின்றன. அவனது அடையாளமாகக் கோழிக் கொடியும், கடப்ப மாலையும், செங்காந்தள் மலரும் சொல்லப்படுகின்றன. அவன் வீற்றிருக்கும் இடங்களாகத் திருப்பரங் குன்றமும், திருச்சீரலைவாயும் (திருச்செந்தூர்), திருவாவினன்குடியும், திருவேரகமும், குன்றுதோறாடலும், பழமுதிர் சோலையும் இன்ன பிற இடங்களும் பாடப்படுகின்றன. முருகனது ஆறு இருப்பிடங்களே ஆறுபடை வீடுகள் என வழங்கப்படுகின்றன போலும்! நக்கீரருக்குப் பல நூற்றுண்டுகளுக்குப் பின் முருகன் புகழைப் பாட வந்த அருணகிரி நாதரும், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி (பழநி) திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல் (திருத்தணிகை), பழமுதிர்சோலை என்ற தலங்களில் முருகப்பெருமான் தங்கி அன்பருக்கு அருள் புரிவதாகப் பாடியிருக்கிறுர். இத்தலங்களில் முருகன் வீற்றிருக்கும் பெருமையை நக்கீரர் எவ்வாறு பாடியிருக்கிறுர் என்று பார்ப்போம்.

திருப்பரங்குன்றம்: எதிர்த்துப் போரிடுவோரே இல்லாத வாயில்களும், திருமகள் வீற்றிருந்தாற்போலே செல்வங் கொழிக்கும் அங்காடி வீதிகளும், மாடமாளிகைகளும் நிறைந்த மதுரையின் மேற்புறத்தே வயல்களிலே பூத்த தாமரையில் இரவு கண் துயின்று, வைகறைப் போதிலே தேன் மணக்கும் நெய்தற் பூவை ஊதி, ஞாயிறு தோன்றிய பின்னர், சுனை மலர்களில் சென்று, வண்டுக் கூட்டம் ஆர்ப்பரிக்கும் திருப்பரங்குன்றிலே நெஞ்சமர்ந்து தங்குதலும் உரியவன்'', என்பது நக்கீரர் வாக்கு. இதற்கு முன், முருகப் பெருமான் சூரரை வதைத்த மறக்கருணையையும், அவர் கடலிலே தோன்றிய மாமரத்தைத் தடிந்ததையும் பேசுகிறுர். நக்கீரர் வாக்குப்படி, திருப்பரங்குன்றம் முருகன் விரும்பி அமர்ந்திருக்கும் முதல் இடமாகும். அது இயற்கையான நீர்வளத்தையுடையது. மதுரை நகரின் மேற்கே உள்ளது. இவை தவிர, இந்தத் தலத்தைப் பற்றி நக்கீரர் வேறு எதுவும் கூறவில்லை. ஆனுல், புராணவழக்குப்படி, திருச்செந்தூரிலே முருகன் பாடிவீடமைத்து, சூரரை வதைத்த பின்னர் அவர் தேவ சேனுதிபதியாகி, திருப்பரங்குன்றத்திலே தெய்வயானையை மணம் புரிந்து கொள்ளுகிறுர். இதை, ''மறுவில் கற்பின் வாணுதல் கணவன்'' என்ற ஒரு தொடராலே நக்கீரர் சுட்டிக்காட்டுகிறுர் போலும்; 'துழாய் மாலையையும், கருடக் கொடியையுமுடைய திருமாலும், சிவபெருமானும், பிரமதேவனும், பன்னிரண்டு ஆதித்யர்களும் மருத்துவர் (அஸ்வினி) இருவரும் வசுக்களும் ஏகாத சருத்திரர்களும், எட்டுத் திக்குப் பாலகர்களும் மற்ற தேவர்களும், அசுரர்களும், தெய்வ முனிவர்களும் முருகனைத் தரிசிக்கும் பொருட்டு இம் மண்ணுலகிற்கு வந்து உறைவதற்குரிய இடமாயிற்றுத் 'திருப்பரங்குன்றம்' என்று பரிபாடல்

(5) பேசுகிறது. செவ்வேளைக் குறித்து மற்ற பரிபாடல்களும் (8, 17) திருப்பரங்குன்றில் முருகன் அமர்ந்து உறைகிறான் என்று சொல்லுகின்றன.

திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்): இங்கு முருகப் பெருமான் ஆறு திருமுகங்களுடனும், பன்னிரண்டு திருக்கரங்களுடனும் காட்சி கொடுப்பதாக நக்கீரர் விவரிக்கிறார். திரு முகங்களின் அருள் நோக்குகளைப் பலபட விளக்குகிறார். ஒரு திருமுகம் உலகை மறைத்துள்ள பேரிருளை விலக்க பல சுடர்களைப் பொழிகிறது. இதனை உயிர்களின் ஆணவ மலத்தை ஒழிக்கும் கதிர் என்றும் கூறுவர். இதன் பொருள்—இறைப்பொருள் உயிர்களின் மாயை அறுத்து மலத்தை நீக்கி வீடு பேற்றை அளிக்கும் என்பதாம். இந்த இறைச் செயலை முருகனது முதல் திருமுகம் செய்கிறது. இரண்டாவது திருமுகம் தன்னை வழிபடுகிற அன்பர்கள் நயக்கும் பொருளை அளிக்கிறது. வெவ்வேறு சமயத்தவர் வெவ்வேறு மூர்த்தங்களை வழி பட்டாலும், அந்தந்த சமயத்தவருக்கு அந்தந்த மூர்த்தங்களிலே விளங்கி முருகன் அருள் பொழிகிறான். மூன்றாவது திருமுகம் மெய்நூல் கூறிய முறைமையில் பிறழாமல் மந்திரத்தை ஓதி செய்யப்படும் வேள்விகளைக் காத்து நிற்கிறது. இது வேத விதிப்படி செய்யும் வேள்வி காக்கும் திருமுகம் என்கிறார் நச்சினார்க்கினியர். நான்காவது திருமுகம் நூல்களால் காட்டமுடியாத உட்பொருளை ஆராய்ந்து உணர்த்துகிறது. உயிர்களின் அறிவு குறைவு பட்டதே. குறைவில்லாத அறிவு இறைவனுடையதே. அந்த அறிவினால் வேத நூல்களின் உட்பொருளைக் காட்டி நிறைமதித் திங்கள் போல விளங்குகிறது நான்காவது திருமுகம். ஐந்தாவது திரு முகம் அசுரர் முதலியோரை அழித்து மறக்குல வேள்வி செய்கிறது. ஆறாவது திருமுகம் வள்ளியுடன் மகிழ்ந்து நிற்கிறது. உயிர்களுக்குப் போக நுகர்ச்சியை உண்டாக்கும் பொருட்டு வள்ளியுடன் மகிழ்ந்து நிற்கிறது. இப்படி முருகனுடைய ஆறு திருமுகங்களும் ஆறு அருட் செயல்களைச் செய்கின்றன. இது வேதத்தில் சொல்லப் பட்ட கருத்து என்று வேதம் அறிந்தோர் கூறுகின்றனர். இதையே பின்னிட்டு வந்த அருணகிரியாரும் ''ஏறு மயிலேறி விளையாடு முகம் ஒன்றே'' என்று திருப்புகழிலே சொல்லுகிறார். இனி முருகனது திருக்கரங்களைப் பார்ப்போம்.

முருகப் பெருமானது முதலிணைத் திருக்கரங்களில் ஒன்று துறவிகளுக்குப் பாதுகாவலாக ஏந்தியது. அதற்கிணையான மற்றொரு கரம் இடையிலே வைக்கப்பட்டிருக்கிறது. இதை ''எக்காலமும் ஆகாயத்தே இயங்குதல் முறைமையினையுடைய தெய்வ இருடிகளுக்குப் பாதுகாவலாக எடுத்தது'' என்பர் நச்சினார்க்கினியர். இரண்டாவது இணைத் திருக்கரங்களில் ஒன்று தொடையில் மேல் கிடக்க, மற்றொன்று தான் ஏறி வருகின்ற யானையைச் செலுத்தும் அங்குசத்தை ஏந்தி நிற்கிறது. மூன்றாவது இணைக்கரங்கள் பெரிய வேல்படையை வலமாகச் சுழற்றிக் கொண்டிருக்கிறது. இது அந்தணர் வேள்வியைக் காக்கும் பொருட்டு எடுத்ததாம். நான்காவது இணைத்திருக்கரங்களில் ஒன்று தத்துவப் பொருளை உணர்த்தும் வகையால் திருமார்புடன் நிற்க, அதற்கு இணையான மற்றொன்று மார்பில் கிடக்கும் மாலையுடன் சேர்ந்து கிடக்கிறது. ஐந்தாவது இணைத் திருக்கரங்களில் ஒன்று களவேள்விக்கு முத்திரை கொடுக்கிறது; இன்னொன்று இனிய ஓசையை உடைய மணியை ஒலிக்கப் பண்ணுகிறது. ஆறாவது இணைத் திருக்கரங்களில் ஒன்று மழையைப் பெய்விக்கிறது. இன்னொன்று தெய்வமகளிர்க்கு மணமாலை சூட்டுகிறது. இப்படி, ஆறு திருமுகங்களுடன் பன்னிரண்டு திருக்கரங்களுடனும் முருகன் யானையின் மேலெழுந்தருளி, வான் வழியாக, தேவ துந்துபி முழங்க கொம்புகள் ஒலிக்கவும், சங்குகளும் முரசங்களும் முழங்க, மயில் அகவ, திருச்சீரலைவாய் என்ற திருச்செந்தூரில், படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் செய்து கொண்டு நிலை பெற்று இருக்கிறான் என்கிறார் நக்கீரர். முருகன், திருச்செந்தூரிலே உறைகிறான் என்பதை ''முருகன் தீம்புனலலைவாய்'' என்ற முன்னோர் மொழியும், ''வெண்டலைப் புணரியலைக்குஞ் செந்தில் நெடுவேணிலை இய காமர்வியன் துறை'' என்ற புறநானூற்று அடிகளும், ''திருமணி விளக்கினலைவாய் செருமிகு சேஎய்'' என்ற அகநானூற்று வரிகளும், ''நம் செந்தில் மேய வள்ளி மணாளருக்குத் தாதை காண்'' என்ற அப்பர் தேவாரமும் சொல்லுகின்றன. முருகனுக்கு ஆட்டுக்கடா வாகனம் என்பதன்றி யானையும் வாகனம் என்பது இதனால் விளங்குகிறது. இதைப் பிணி முகமூர்ந்த வெல் போரிறைவன்'' என்ற பரிபாடல் வரிகளும் ''பிணிமுகவூர்தியொண் செய்யோனும்'' என்ற

புறநானூற்று வரியும், தெரிவிக்கின்றன. இப்படி, முத்தொழில்களையும் முருகன்நடத்தி வருகிறுன் என்பதைக் காட்டும் வகையில், இன்றும், திருச்செந்தூரில் வெள்ளை சாத்தியும், பச்சை சாத்தியும், சிவப்பு சாத்தியும் முருகனுக்குப் பெருவிழா எடுக்கின்றனர்.

திருவாவினன்குடி: குறை இரந்து நிற்கும் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் அருள் புரிந்து தெய்வானையுடன் சில நாள் திருவாவினன்குடியிலே முருகன் நிலை பெற்றிருக்கிறுன். மரவுரி அல்லது காவியுடை அணிந்த முனிவர்கள் முன் செல்ல திருத்துழாய் மாலையும் கருடக் கொடியும் உடைய திருமாலும், உமையொரு பாகனும், இந்திரனும், முப்பத்து முக்கோடி முனிவர்களும் பதினெண் கணங்களும், கந்தர்வர்களும், கந்தர்வ மகளிரும் யாழ் இசைக்க உடன் வந்து திருவாவினன்குடியில் முருகனைக் காணுகின்றனர் என்கிறுர் நக்கீரர். நான்முகன் படைத்தல் தொழிலை இழக்க, அதன் காரணமாகத் தங்கள் தொழில்களை இழந்த மற்ற இரு தேவர்களும் முருகனிடம் வந்து குறை இரந்து அருள் பெருகின்றனர் என்பது நக்கீரர் கருத்து. இத்தலமே 'சித்தன் வாழ்வு' என்று சொல்லப்படுகின்ற 'பழநி' என்பர்.

திருவேரகம்: ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற அறுவகைத் தொழில்களையும் வழுவாமல் செய்யும் அந்தணர்கள், 48 ஆண்டு பிரமச்சரியம் காத்துப் பொழுதறிந்து ஆறெழுத்து மந்திரமாகிய மறையை ஓதி, மலர் தூவி வணங்கி வழிபட ஏரகத்தில் முருகன் வீற்றிருக்கிறுன் என்கிறது திருமுருகாற்றுப்படை. 48 ஆண்டுகள் இருபிறப்பாளர் பிரம்மச்சரியம் காக்கின்றனர் என்ற கருத்து புதுமையாகத் தோன்றலாம். எழுத்து வடிவம் பெருத வேதங்களை, முறையாகக் கற்க 48 ஆண்டுகள் ஆகின்றன என்பது வேத நூலோர் கருத்து. ''ஏத்தி நுவல முருகன் ஏரகத்து உறைதலும் உறியன்'' என்பார் நக்கீரர். இந்தத் தலம் ''மலை நாட்டகத்தொருபதி'' என்கிறுர் நச்சினுர்க்கினியர். சிலப்பதிகார அரும்பத உரையாசிரியரும் இது சுவாமிமலை அல்லாத வேறு திருப்பதி என்கிறுர். அவர் வெண்குன்றமென்பதை சுவாமிமலை என்கிறுர். ஆனுல், பின்னிட்டு வந்த அருணகிரிநாதர், சோழ நாட்டின் காவிரிக் கரையிலுள்ள சுவாமிமலையே ஏரகம் என்கிறுர். ''யாவுமலை கொண்டு கைத்த காவிரி புறங்கு சுற்று ஏரகம் அமர்ந்த பச்சை மயில் வீரா'' என்பது அவர் திருப்புகழ்.

குன்றுதோருடல்: குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன் என்ற கருத்தில் ''குன்று தோருடும் மாண்பு உடையவன்'' என்கிறுர் நக்கீரர். குறமகளிர் ஆடும் குரவைக் கூத்துக்கு முதற் கை கொடுத்து, அவ் வேட்டுவ மகளிருடன் மலைகள் தோறும் விரும்பி விளையாடுதலும், ஊர்கள் தோறும் மக்கள் கொண்டாடும் திருவிழாக்களிலும், தன்பால் அன்புடைய அடியார்கள் உளமுருகி பூசை செய்யுமிடத்தும், வேலன் என்பான் வேல் ஏந்தி வெறி ஆட்டம் ஆடுமிடத்தும், காடுகளிலும், இளமரச் சோலைகளிலும், தெருக்கள் கூடும் சந்திகளிலும், புதுப்பூ மலரும் கடம்ப மரங்களிலும், மன்றங்களிலும், ஆற்றிடைத் துறையிலும், குளங்களிலும், வேறு பல எழில் மிக்க இடங்களிலும், ஊர் அம்பலங்களிலும், தெய்வம் உறையும் தூண்கள் நடப்பெற்று இருக்கும் இடத்திலும், அன்பர்கள் விரும்பியபடி வழிபடும் இடங்களிலும், முருகன் பொருந்தி இருக்கிறுன்; இது குன்றுதோருடல் என்கிறுர் நக்கீரர்.

பழமுதிர்சோலை: இழுமென்ற ஓசையுடன் கொட்டி, அகிலைச் சுமந்தும், சந்தன மரத்தைச் சாய்த்தும், விண்முட்டிய மலையின் மிசை உள்ள தேனிருல்களை கெடுத்தும், பலாவின் சுளைகளை அள்ளிக் கொண்டும், சுரபுன்னையின் மலர்கள் உதிர ஓடி வரும் அருவியும், கருங்குரங்குகளும் பிடியானைகளும் நிறைந்த பழமுதிர் சோலைக்கும் உரியவன் முருகப் பெருமான்; அவன் தன்னை அடைந்தவர்க்கு விழுமிய பெறலரும் பரிசிலாகிய வீடுபேற்றைத் தருவான், என்று முடிகிறது திருமுருகாற்றுப்படை. குறிஞ்சித் தெய்வமான முருகன் அருவி பாய்கின்ற வளமுடைய மலைகளுக்கு உரியவன் என்ற காரணத்தால் அம்மலையின் ஓர் அங்கமான சோலைகளுக்கும் உரியவன் என்றுதான் நக்கீரர் கருதுவதாகத் தெரிகிறது. ஆசிரியர் நச்சினுர்க்கினியரும் பழமுதிர் சோலை என்பதை மலையின் அங்கமாகவே கருதியிருப்பதாகத் தெரிகிறது.

''பந்தினை இளையவர் பயில் இடம் — மயில் ஊர்
கந்தனை அனையவர் கலை தெரி கழகம்''

என்ற கம்பர் வாக்கும் இங்கு நினைக்கத் தக்கது. ஆயினும், பழமுதிர்சோலை என்பதும் ஒரு திருப்பதியே என்றும், அது மதுரைக்கு அருகேயுள்ள திருமாலிருஞ் சோலையே என்றும் கருதுவாரும் உளர்.

காஞ்சிப் பெரியவர்கள்

டாக்டர் வே. ராகவன்

எங்கே ராமாயண ப்ரவசனங்கள் நடக்கின்றனவோ சொல்லுபவர் ஸ்மார்த்தரோ வைஷ்ணவரோ—எங்கே கோயில் கும்பாபிஷேகங்கள் நடக்கின்றனவோ—அது சிவன் கோயில் ஆனாலும் சரி விஷ்ணு கோயில் ஆனாலும் சரி—அங்கே எல்லாம் 'பெரியவாள் சொன்னார்கள்', 'பெரியவாள் அனுக்ரஹித்தார்கள்' என்ற பேச்சு இல்லாமலிருக்காது. இப்படித் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் ஆந்திராவிலும் மற்றும் வடக்கே பல நகரங்களிலும் க்ஷேத்திரங்களிலும் தீர்த்தங்களிலும் மதத்துறையிலும் தர்மகாரியங்களிலும் பெரியவர்களின் வாக்கின் மூலமும் தூண்டுதல் மூலமும் அனுக்ரஹத்தின் மூலமும் ஏராளமான நல்ல காரியங்களை நாம் காண்கிறோம். மதம், தர்மம், ஆன்மீகம் இத்துறைகளில் புத்துயிர் ஒன்று சென்ற ஐம்பது ஆண்டுகளில் தென்னாட்டில் தோன்றியிருக்கிறதென்றால், அது 'காஞ்சிப் பெரியவாள்' 'காஞ்சி முனிவர்' 'நடமாடும் தெய்வம்' என்றெல்லாம் போற்றப்படும் ஆசார்யசுவாமிகளின் பிரசாரத்தாலும் ப்ரஸாதத்தாலும் ஏற்பட்டதே என்றால், அது மிகையாகாது.

ஆதிசங்கரர் தம் பாஷ்யங்களில் கண்டித்து ஒழித்துத்தள்ளிய நாஸ்திக மதங்களான பௌத்தமும் ஜைனமும் தலைதூக்கிநின்ற இடம் காஞ்சி; அந்த நகரில் வைதிகமதத்தை புனருத்தாரணம் செய்து காமகோடி காமாட்சியின் சந்நிதானத்தில் மடத்தை ஸ்தாபித்தார். காஞ்சியிலுள்ள ஒவ்வொரு கோயிலிலும் ஆதிசங்கரரின் பிம்பம் கல்லில் செதுக்கியிருக்கிறது. காஞ்சியில் அக்காலத்தில் கோயில்களிலும் தெருக்களிலும் தண்ட கமண்டலங்களுடன் அந்த திவ்ய தேஜோமயமான மூர்த்தி நடந்து போய்க் கொண்டிருந்ததையும், அவருடைய அருட்பார்வை, அமுத மொழி இவற்றையெல்லாம் நினைத்து மனத்தில் தோற்றத்தை வரவழைத்துக் கொண்டால் மயிர்சிலிக்கும் உணர்ச்சி எழுகிறது. அத் தோற்றத்தையும் உணர்ச்சியையும், அன்பும் அருளும் பொழியும் கண்களையும் நேரில் காணும் பேறு மக்களுக்கு ஏற்படவேண்டுமானால், இன்று அப்படியே அவ்வூரில் ஸஞ்சரித்து வரும் பெரியவர்களைத் தர்சனம் செய்ய வேண்டும்.

காஞ்சி காமகோடி பீடத்தின் 68-வது ஆசார்யராய் தம் 13-வது வயதில் ஆச்ரமத்தை ஏற்ற ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்தர் ஸரஸ்வதிகள் 20-5-1894 (ஜய, விசாகம், 8ந்தேதி) அனுஷ நக்ஷத்ரத்தில், பானுவாரத்தில் விழுப்புரத்தில் அவதரித்தார். அவர் பிறந்த வீடு இப்போது வேதாத்யனத்திற்கும் தர்மகாரியங்களுக்கும் உபயோகமாகும் பெரிய மடமாய்க் கட்டப்பட்டிருக்கிறது. பூர்வாச்சரமப் பெயர் ஸ்ரீ ஸ்வாமிநாதன்.

தர்ம பீடாதிபதி, சங்கராசார்யர், என்ற ஸ்தானங்களுக்கு என்னென்ன யோக்யதைகளும், அறிவுகளும், ஆற்றல்களும் வேண்டுமோ, அவைகள் அவரை—காளிதாஸன் பார்வதியைப் பற்றி வர்ணித்தது போல்—தானாகவே வந்தடைந்தன. புன்னகையாலும் குளிர்ந்த பார்வையாலும் அவரவரை வசப்படுத்துவதோடு அனேகமாய் அவரவரை அவரவர் தாய்மொழியிலேயே பேசியும் வசப்படுத்துவார்; கோயில்களுக்குப் போனால் சிவாசார்யர்களுடனும் பட்டாசார்யர்களுடன் ஆகம நுட்பங்களைக் கேட்பதோடு, ஆராய்ச்சியாளருடன் கல்வெட்டுகளில் காணும் விஷயங்களைக் குடைந்து கேட்பார். வேத சாஸ்த்ர ஸதஸ்களை நடத்துவது போல் பொது ப்ரச்னைகளை அதற்கான முக்கியமானவர்களைக் கொண்டு நிர்வகிப்பார். ஹிந்துமதக் கடலில் வழக்கமாய் கருத்துகளைக் களைவது

போல் பிறநாட்டு மதங்களின் விசேஷங்களி லும் தம் தேர்ச்சியைக் காட்டுவார். ஒரு சமயம் வட இந்தியாவிலிருந்து ஒரு இளம் ஸம்ஸ்க்ருத ஆசிரியரைப் பெரியவர்களிடம் அழைத்து வந்து 'இவரும், இவர் தகப்பனு ரும் ஆசார்ய புருஷர் ஸ்தானத்தை அவர் சமூகத்தில் தாங்கி வருகிறுர்கள்' என்றேன். மேலும் ''வல்லப ஸம்ப்ரதாயம் போலிருக் கிறது'' என்றேன். ''இல்லேயே அவனேயே கேள், நிம் பார்க்க ஸம்ப்ரதாயமாகத்தானி ருக்க வேண்டும்'' என்றுர்கள் பெரியவர்கள், அவனேக் கேட்டதற்கு 'ஆமாம்' என்றுன், இதற்கு முன் மாம்பலம் முகாமில் ஒரு வெள் ளேக்காரரை அழைத்துப் போனேன்; 'இவர் ரொமேனியாவிலிருந்து வந்திருக்கிறுர்' என் றேன். ''Greek Orthodox Church தானு என்று கேள்'' என்றுர்கள்; ''ஆம்'' என்றுர் அவர். எழுதிக்கொண்டே போகலாம்.

ஒரு நெருக்கடிக்கோ, ஒரு இயக்கத்துக்கோ ஒரு வழியை அவர்கள் திட்ட மிட்டால், அதை நடத்துவதில் ஒரு தர்மத்தையும், நல் லொழுக்கத்தையும் இணேப்பார்கள். அமர பாரதி ஸம்ஸ்க்ருத பரீக்ஷைகளுக்குப் பாட புத்தகங்களே எழுதினுல் அதில் தர்ம போதனேக் கான பாடங்களே வைக்கும்படி செய்வார். உணவுநெருக்கடியில் அவர் துவக்கிவைத்த 'பிடியரிசித் திட்டம்'' ஒன்றை உதாரணமாய் சொன்னுலே போதும்.

வேதத்தைப் பாதுகாத்து அத்யயன பரம் பரையை நீடிக்கும்படி செய்வதற்கு வேத நிதி, வேத தர்ம பரிபாலனசபை, வேத சம்மேளனம், முறைப்படி அத்யயனம் பூர்த்தி செய்தவர்களுக்குப் பெரும் தொகை ஸம் பாவனே, வேதபாடசாலேகள், கோயில் வழி பாட்டிற்கு அடிப்படையான ஆகமங்கள், சில்பம், இதிஹாஸ புராணப் ப்ரவசனம் ஸம்ப்ரதாயக்கலேகள் இவற்றிற்கான ஆகம— சில்ப பாரத — கலா — ஸதஸ்; பக்திக்கான திருப்பாவை—திருவெம்பாவை மகா நாடுகள்; பத்தி வேதாந்த சிறு நூல்களின் மொழி பெயர்ப்பு வெளியீடுகளுக்கான காமகோடி கோச ஸ்தாபனம்; நஸரத் பேட்டையில் ஸம்ஸ்க்ருத வித்யா ஸமிதி; ஒய்வு நேரங் களில் சிறுவர்கள் ஸம்ஸ்க்ருதத்தையும் அற நூல்களேயும் கற்றுத் தேர்வதற்கான அமர பாரதீ பரீக்ஷாஸமிதி; ராமேச்வரம், குரு க்ஷேத்ரம், ப்ரயாகையில் ஸங்கமம் இப்படிப் பட்ட அகில இந்திய க்ஷேத்ர தீர்த்தங்களில் ஆதிசங்கரர் ஆலயங்கள், சங்கர ஷன்மத மகாநாடு; மடாதிபதிகளே ஒன்று சேர்க்கும் தர்மபீடஸமுதாயம்; இன்னும் இவைபோன்ற பல இயக்கங்களேயும் ஸ்தாபனங்களேயும் நாம் நினேத்துப் பார்க்கலாம்.

ஆசார்யர்களுக்கு சதாபிஷேகமாகி அவர் கள் அன்றுட பீடாதிபதி காரியங்களிலிருந்து ஒய்வெடுத்துக்கொண்டு, காஞ்சிக்கு அப்பால், கலவை என்ற கிராமத்தில் அவருக்கு முன்னி ருந்த ஆசார்யர்களுடைய ஸமாதிக்கருகில் தனிமையில், அனேகமாய் மௌனமாயும், காஷ்டமௌனமாயும் இருந்து வருகிறுர்கள். கலவையிலும் அவரைத் தர்சனம் செய்து ஆறுதல் பெற, பக்தர்கள் வந்து கொண்டு தானிருக்கிறுர்கள்.

தாம் துவக்கிய நற்பணிகள் எல்லாம் வெற்றிகரமாக மேலும் நீடித்து நடக்கவேண்டு மென்ற பெரியவர்களின் நோக்கமே அவதரித் தாற்போல் மடாதிபதியாய் தற்போது மடத் துக் காரியங்களேயும் நடத்தி வருகிறுர் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதிகள் என்று தம் பெயரி லுலேயே தர்மத்தின் வெற்றியை விளக்கும் புதுப் பெரியவர்கள். இவரை பெரிய பெரிய வர்களே தேர்ந்தெடுத்தார். இவர் பூர்வாச்ர மத்தில் 'சுப்ரம்மண்ய' என்ற பெயர் பூண்டு, வேதாத்யயனம், ஆசார அனுஷ்டானங்கள் முதலியன நிரம்பியவராய் இருந்ததைப்பார்த்து இவரை 19-வது வயதில் 1954, மார்ச், 19-22 தேதிகளில் பெரியவர்களே ஆச்ரமத்தைத் தந்து, ஜயேந்திர ஸரஸ்வதி என்ற பெயருடன் தனக்குப்பின் பீடாதிபதிகளாக வரும் ஸ்தானத்தில் நியமித்தார்கள். பெரிய பெரியவர்களுடன் கூட இருந்து, அவர் செயல் களேயும் சொற்களேயும், நியம நிஷ்டைகளேயும் பூஜைகளேயும் கவனித்து வருவதே தனிப்பட்ட சிறப்புவாய்ந்த சிக்ஷையும் அப்யாஸமும் ஆகும். ஒரு விளக்கிலிருந்து மற்றெரு விளக்கு ஏற்றப் பட்டால் முதல் விளக்கு தன் தேஜஸ் குன்றுமல் தன் ஒளியை அது மற்றெரு விளக்குக்குத் தரும். இந்த நியாயத்தின்படி தேஜஸ்ஸு ஏறி வந்த புதுப் பெரியவர்கள் முழு பீடாதிபத்யத்தை ஏற்றதும் பாரதம் முழுதும் கால்நடையாய் யாத் திரைகள் செய்து, ஆங்காங்கு பண்டிதர்களே யும், தர்மப்ரசாரகர்களேயும் சந்தித்து ஸதஸ் ஸுகளேயும் மகாநாடுகளேயும், கும்பாபிஷேகம் முதலிய பல நற்பணிகளேயும் நடத்தி, வெற்றி யுடன் திரும்பி வந்தார். பெரிய பெரியவர்கள் துவங்கியகாரியங்கள் அவர் திட்டமிட்ட பாதை

யில் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. சில காரியங்களில் சிறப்பாய் தன் ஆர்வத்தைக் காண்பித்து வருகிறார், புதுப் பெரியவர்கள். இந்து சமயமன்றம், இளைஞர்களின் தொடர்பு, பொதுஜனத் தொடர்பு, பொதுவாய் இந்துமத ப்ரசாரம், வெளிநாட்டிலுள்ள இந்துக்கள் தம் மதத்தை வழுவவிடாமல் கடைப்பிடித்து வருவதற்கான முயற்சிகள், இப்படிப்பட்ட காரியங்கள் புதுப் பெரியவர்களின் ஆட்சியில் விரிவடைந்து வருகின்றன. 1976 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அவர்களுடைய சென்னை விஜயத்தின் போது திரண்டு வந்து வணங்கிய கூட்டத்தைப் பார்த்தவர்களுக்கு, பராசக்தியின் ஸந்நிதியில் ஆதி சங்கரர் ஸ்தாபித்த இந்தப் பீடத்தின் சக்தியும் வீர்யமும் அருளும் குன்றாமலும் மேன்மேலும் தர்மம் தழைக்கும் பொருட்டு வளர்ந்து கொண்டே வருகிறது என்ற அனுபவம் ஏற்பட்டிருக்கும். ●

GOPURAS

The innermost gopura, known locally as the *kili* or parrot gopura, was built about 1063 A. D. by Vira Rajendra whose usual royal *biruda* was Maharaja Tribhuvana Chakravartigal, the title under which this gopura is ascribed to him by local tradition. Next the gopuras of the middle court, with the exception of the spire of the western one, were built by the Hoysala king Ballala III (known locally as "Vallala Maharaja") after whom the eastern and largest of the three gopuras was named—or perhaps by one of his generals whose inscriptions record as having made gifts to the temple about 1340 A.D. The earliest inscription on the Vallala gopura is dated 1377 A. D. Tradition ascribes the western gopura of this court—known locally as the *melgopura* or gopura—to the same builder or some one a little later, which seems to be confirmed by the fact, that it bears an inscription of 1388 and by the style of its base. But the spire is obviously much later, being in the style of Krishnadevaraya whose inscriptions of about 1516 A. D. in the 1,000-pillared mandapa record his additions and renovations. It was presumably built by him when he undertook the gopuras of the outer court, the bases of all four of which are ascribed to him. The base of the western one is in his style and I see no reason to doubt that he constructed it, but the others seems to me to be too ornate for his taste and may not improbably, I think, prove to be somewhat later. The order in which these bases seem to have been built is west, south, east, north. Of their spires the eastern, as would be expected, seems to be the oldest but seems slightly more recent than the spire of the western gopura of the middle court, which is in agreement with the tradition that it was completed by Sevappa Nayak of Tanjore whose inscription there is dated 1690 A.D.

—Gopuras of Tiruvannamalai.

இலங்கையில் திராவிடக் கட்டிடக் கலை

கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா, Ph.D.
வரலாற்றுத் துறை, இலங்கைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணக் கிளை

இலங்கையிலே 7-ஆம் நூற்றுண்டின் பின்னராக பல்லவக் கலை மரபைச் சேர்ந்த சில கட்டிடங்கள் எழுப்பப்பட்டன. 7-ஆம் நூற்றுண்டிற்கு, முன்பாக இந்நாட்டில் முழுமையாகக் கருங்கற்களைப் பயன்படுத்திக் கட்டிடம் எதுவும் அமைக்கப்பட்டதற்குச் சான்றில்லை. தமிழ் நாட்டில் ஏற்பட்ட அபிவிருத்தியின் விளைவாக 7-ஆம் நூற்றுண்டின் பின்னர் பெரும்பாலும் கற்களையே பயன்படுத்திக் கட்டிடங்கள் அமைக்கும் மரபு ஆரம்பித்தது. முதன்முறையாக இம்மரபைச் சேர்ந்த கட்டிடமொன்று தென் மாகாணத்திலே தெவிநுவர என்னுமிடத்தில் 8-ஆம் நூற்றுண்டளவிலே கட்டப்பட்டு அதன் அழிபாடுகள் தற்காலம் வரை நிலைத்திருப்பதைக் காணலாம். உண்மையில் இக்கட்டிடத்தின் பெரும்பாகம் அழியாது பேணப்பட்டுள்ளது என்று கூறலாம். இக் கட்டிடம்தான் பிரசித்திபெற்ற உற்பல வண்ணன் (உபுல்வண்) கோயில். தென்னிந்தியச் செல்வாக்குப் பரவியதன் விளைவாக இக்கோயில் கட்டப்பட்டது என்பதைக் கலாநிதி S. பரணவிதான் ஏற்றுக் கொண்டாலும், இதன் அமைப்பு முழுமையாகத் திராவிடக் கட்டிடக் கலை மரபைச் சேர்ந்தது என்பதை ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்ருர். ஆனுல் இக்கட்டிடம் திராவிடக் கலைமரபைச் சேர்ந்தது என்பதில் அதிக ஐயமில்லை என்று கூறலாம். பல்லவர் காலத்துக் கட்டிடங்களுக்கும் இதற்குமிடையில் சில முக்கிய வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படை ஒற்றுமைகள் சில இருக்கத்தான் செய்கின்றன.

இக்கட்டிடத்தைப் பல்லவர் பாணியில் அமைந்த கட்டிடம் அல்லவென்றும் அது 13-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த பாண்டியப் பாணியிலே அமைந்த கட்டிடம் என்றும் வேருெருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். கட்டிடத்திலே காணப்படுகின்ற கூடு எனப் படுகின்ற அணியும் அதன் கபோதங்களும் கதவு நிலையிலே காணப்படுகின்ற நாகபந்தம் எனப்படும் அணியும் பாண்டியர் கட்டிடங்களிலே காணப்படும் அணிகளை ஒத்தவை என்பது D. பறெற் என்பவருடைய கருத்து.

இக்கட்டிடத்தில் இப்படியான பிற்பட்ட காலப் பண்புகள் காணப்பட்டாலும் அதனுடைய அமைப்பு முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகத் தோன்றுகின்றது. இதனுல் பல்லவர் காலத்திலே முதன்முறையாகத் தனிக் கற்களால் அமைக்கப்பட்ட இக் கட்டிடத்திற்குப் பிற்பட்ட காலத்திலே திருத்த வேலைகள் செய்த சிற்பிகள் பாண்டியப் பண்புகளைச் சேர்த்திருக்க முடியும். இக் கட்டிடம் முழுமையாக 13-ஆம் நூற்றுண்டிலே கட்டப்பெற்றது என்று கொள்வதற்குச் சான்று போதாதென்றே கூறவேண்டும்.

ஐயத்திற்கிடமின்றித் திராவிடக் கட்டிடக் கலையின் பல்லவப் பாணியிலே இலங்கையிற் கட்டப்பட்ட மிகப்பழைய கட்டிடம் நாலந்தவிலுள்ள கெடிகே எனப்படும் கோயிலாகும். இது ஏறக்குறைய 8-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது. இதன் மண்டபமும் கற்பகிரகமும் பிற பாகங்களும் சம காலத்துப் பல்லவர் கட்டிடங்களின் பாகங்களை நெருங்கிய முறையிலே ஒத்திருக்கின்றன. இக்கோயில் இந்து வழிபாட்டு அம்சங்களும் பௌத்த வழிபாட்டு அம்சங்களும், கலந்து காணப்பட்ட மகாயான தாந்திரிகக் கோயிலாகும். இதனை அமைப்பதற்குத் தமிழ் நாட்டுச் சிற்பிகள் உதவியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. பல்லவக் கட்டிடப்பாணி இலங்கையில் நன்கு பரவியிருந்த தென்பதற்குச் சான்றில்லை யாகையால் சிங்களச் சிற்பிகள் அந்தப் பாணியை நன்கு அறிந்திருந்து இக்கோயிலை அமைத்திருக்கலாம் என்று கொள்ள முடியாதுள்ளது.

9-ஆம், 10-ஆம் நூற்றுண்டுகளிலே அநுராதபுரத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளிலே சைவக் கோயில்கள் சில கட்டப்பட்டிருந்தன. அவற்றுள் சிலவற்றின் அழிபாடுகள் இன்றும்

காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் அதிக சிக்கலற்ற எளிய முறையிலே அமைக்கப் பட்ட கட்டிடங்களின் அழிபாடுகள். இக் கோயில்கள் ஒவ்வொன்றிலும் அந்தராளம், கற்பக்கிரகம், அர்த்தமண்டபம் ஆகிய முக்கிய மான மூன்று பாகங்கள் மட்டுமே செங்கற் களால் கட்டப்பட்டவையாக இடம் பெற்றன. அவற்றின் அமைப்பு முறை திட்டவட்டமாகப் பல்லவர் காலத்துத் திராவிடக்கலை மரபைச் சேர்ந்தது. இவற்றைவிடக் கருங்கற்களால் அமைக்கப்பட்ட சைவக் கோயில்களுடைய அழிபாடுகள் இக்காலப் பகுதியைச் சேர்ந்தவை யாக ஓர் இடத்திலும் கிடைக்கவில்லை.

பிற்பட்ட அநுராதபுரக் காலத்திலே, அதாவது 7-ஆம் நூற்றுண்டிற்கும் இடைப் பட்ட காலத்திலே, தமிழர் வாழ்ந்த இடங் களில், சிறப்பாகத் துறைமுகப்பட்டினங்களிலே, கட்டப்பட்ட சைவக் கோயில்கள், பல்லவர் காலத்துத் திராவிடக் கட்டிட முறையினில் அமைக்கப்பட்டு இருக்கவேண்டுமென ஊகிக்க முடியும். இக்காலப் பகுதியிலே திருக்கேதீஸ் வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற இடங் களில் சைவக் கோயில்கள் இருந்தன என்பதற்கு வேறு சான்றுகள் கிடைத்துள்ளன. ஆனல் அவற்றின் அழிபாடுகள் தற்காலத்திலே கிடைக் கப் பெருமையினல் எத்தகைய கட்டிடப் பாணியிலே அவை அமைக்கப்பெற்றிருந்தன என்று கூற முடியாதுள்ளது. பொதுவாகத் தமிழ் நாட்டிற்கு வெளியேயும் சைவக் கோயில் களை அமைத்துக்கொண்ட தமிழர்கள் அக் கோயில்களைத் தமிழ்நாட்டுக் கட்டிடப் பாணி யில் அமைத்தனர் என்றே அறிய முடிகின்றது. அநுராதபுரத்தில் கிடைத்துள்ள சைவக் கோயில்களின் அழிபாடுகளும் திராவிட முறை யிலே அமைந்திருப்பதனுல் சம காலத்தில் அமைக்கப்பட்டிருந்த திருக்கேதீஸ்வரர் கோயி லும் திருக்கோணேஸ்வரர் கோயிலும் அவ் வாறே கட்டப்பட்டு இருக்கவேண்டுமென்று கொள்வது பிழையாகாது.

பொலன்னறுவைக் கோயில்கள்

இதுவரை நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி யின் விளைவாகப் பொலன்னறுவையிலே பத்துச் சிவன் கோயில்களும் ஐந்து விஷ்ணு கோயில் களும் ஒரு காளி கோயிலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றுள் எவை சோழர் காலத் தில், அதாவது சோழர் இங்கு ஆட்சி புரிந்த போது கட்டப்பட்டவை என்று கண்டு கொள்வது ஓரளவுக்குப் பிரச்சினையாய் உள் ளது. இந்நிலைக்குப் பல காரணங்கள் உள. கோயில்களின் காலத்தை நிர்ணயிப்பதற்குப் பொதுவாக மூன்று காரணிகள் உதவுகின்றன; ஒன்று, கோயிலின் அமைப்பு முறையும் கட்டிடப் பாணியும்; இரண்டாவது, கோயி லிலே காணப்படும் படிமங்கள் போன்றவற்றின் பாணி; இறுதியாக கோயிலிலே செதுக்கப் பட்டுக் காணப்படும் கல்வெட்டுக்களின் சான்று. இவை பழைய கோயில் ஒன்று பூரணமாக அல்லது பெருமளவிற்குப் பேணப் பட்டிருந்தால் அதன் கட்டிடப் பாணியைக் கண்டு, அதன் அடிப்படையிலே அதன் காலத் தையும் நிர்ணயிக்க முடியும். பொலன் னறுவையிலுள்ள இந்துக் கோயில்களுள் ஒருசில பூரணமாகப் பேணப்பட்டிருக்கின்றன. வேறு சிலவற்றின் பாகங்கள் குறிப்பிடத்தக்க அள விலே எஞ்சியிருக்கின்றன. ஏனையவை பெரு மளவிற்கு அழிந்து அவற்றின் அடித்தளமும் ஒருசில அறுகற்களுமே எஞ்சியுள்ளன. இந்த நிலையில் அங்குள்ள கோயில்களுள் சிலவற்றின் காலத்தைக் கட்டிப்பாணியின் உதவிகொண்டு நிர்ணயிக்க முடியும். ஆனல் ஏனையவற்றின் காலத்தை வேறு அடிப்படையிலேதான் நிர்ண யிக்கவேண்டும். சில கோயில்களின் அழிபாடு களிடையே படிமங்களோ கல்வெட்டுக்களோ கிடைக்கப்பெறுவதால், அவற்றின் காலத்தை யும் பெருமளவிற்கு நிர்ணயிக்க முடிகின்றது. ஆனல் படிமங்கள், கல்வெட்டுக்கள் போன் றவை கோயில் கட்டப்பட்ட காலத்திற்குப் பின்னர் அங்கு சேர்க்கப்பட்டிருக்க முடியு மாகையால் எப்பொழுதும் அவற்றின் உதவி கொண்டு திட்டவட்டமான முறையிலே கோயிலின் காலத்தை நிர்ணயிக்க முடியாது.

இத்தகைய பிரச்சினைகளின் விளைவாகப் பொலன்னறுவையில் உள்ள சோழர்காலக் கோயில்கள் அனைத்தும் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. மூன்று கோயில்கள் நிச்சயமாகச் சோழர் காலத்துக் கோயில்கள். அவற்றிற்கு இலங்கைத் தொல்பொருளிய லாளர் இரண்டாவது சிவ தேவாலயம், ஐந் தாவது சிவ தேவாலயம், ஆருவது சிவ தேவா லயம் என்ற பெயர்களைக் கொடுத்துள்ளனர். இவற்றுள் இரண்டாவது சிவ தேவாலயம் பூரணமாகப் பேணப்பட்டிருக்கும் கோயி லாகும். அதுமட்டுமல்ல, பொலன்னறுவை யில் உள்ள இந்துக் கோயில்களுள் சிறந்த தாகவும், இலங்கையிலுள்ள சோழர்காலக் கட்டிடங்களுள் உன்னதமானதாகவும் விளங்கு கின்றது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் அன்றாட நிகழ்ச்சிகள்

1. சிவன் கோயில்

அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேச்சுரம்

காலை	5-00 மணி	பள்ளியறை தீபாராதனை
	5-30 மணி	ஸ்படிகலிங்கப் பூசை
	5-45 மணி	திருவனந்தல்
	7-00 மணி	விளாப்பூசை
	10-00 மணி	காலசந்தி
பகல்	12-00 மணி	உச்சிக்காலம்
மாலை	6-00 மணி	மாலைப் பூசை
	9-00 மணி	இரவுப் பூசை
	9-30 மணி	பள்ளியறைப் பூசை

(வியாழக்கிழமைகளில் உச்சிக் காலத்தில் தட்சிணாமூர்த்திக்கு அபிடேகமும், வெள்ளிக்கிழமைகளில் அருள்தரும் மலைவளர் காதலியாகிய அம்மனுக்கு நிகழும் சுக்கிர வார விழாவும் காணத்தக்கவை).

2. பெருமாள் கோயில்

அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், திருவரங்கம்

சாதாரண நாட்களில் சேவா காலங்கள்:

விசுவரூபம்	...	காலை 6-15 மணி முதல் 7-15 மணி
பூசைக்காலம் (பொங்கல்)	...	காலை 7-15 மணி முதல் 8-30 மணி
சேவாகாலம்	...	காலை 8-30 மணி முதல் 11-30 மணி
பூசைக்காலம் பெரிய வசரம்		
உச்சிக்காலம்	...	பகல் 11-30 மணி முதல் 12-15 மணி
சேவாகாலம்	...	பகல் 12-15 மணி முதல் 1-15 மணி
ஓய்வுநேரம்	...	பகல் 1-15 மணி முதல் 2-15 மணி

சேவாகாலம்	...	பகல் 2-15 மணி முதல் 6-00 மணி
பூசாகாலம் சீரான்னம்	...	மாலை 6-00 மணி முதல் 6-45 மணி
சேவாகாலம்	...	இரவு 6-45 மணி முதல் 9-00 மணி
பூசாகாலம் அர்த்தயாமம் அரவணை	...	இரவு 9-00 மணி முதல் 10-00 மணி

3. முருகன் கோயில்

அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி (மலைக்கோயில்)

காலை	5-00 மணி	விசுவரூப தரிசனம்
காலை	7-15 மணி	விளாப்பூசை
காலை	8-00 மணி	காலைப் பூசை
காலை	9-00 மணி	சிறுகாலைப் பூசை
பகல்	12-00 மணி	உச்சிக் காலம்
மாலை	5-30 மணி	மாலைப் பூசை
இரவு	8-00 மணி	இராக்காலப் பூசை பள்ளியறை

4. மாரியம்மன் கோயில்

அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, சென்னை–77

காலை	4-30 மணிக்கு நடை திறக்கப்பட்டு கோ பூசையுடன் ஆரம்பம்
காலை	8-00 மணிக்கு காலை பூசை
காலை	11-50 மணிக்கு உச்சிக் காலப் பூசை
மாலை	3-00 மணிக்கு 1008 திருநாம குங்கும அர்ச்சனை பூசை
மாலை	6-00 மணிக்கு மாலை பூசை
இரவு	10-00 அர்த்த சாமப் பூசை, நடை சாத்துதல்

குறிப்பு: ஞாயிறுதோறும் காலை மூன்று மணிக்கு 'கோ பூசை' ஆரம்பிக்கப் பெற்று இரவு 12-00 மணி வரையில் திருக்கோயில் திறந்து வைக்கப்பெறுகிறது.

அபிடேகக் காலங்கள்:

வாரநாட்களில்: காலை 8 மணி, பகல் 12 மணி, மாலை 6 மணி.

ஞாயிறு மற்றும் விசேட நாட்கள்: அதிகாலை 3-30 மணி, பகல் 12-00 மணி, மாலை 6-00 மணி.

தமிழ்நாட்டுக் கோயில்களில் குறிப்பிடத்தக்க திருவிழாக்கள்

சித்திரை

இலட்சதீபம் (புத்தாண்டு நாள்)	...	பழனி
சித்திரைத் திருவிழா	...	மதுரை
இந்திர விழா	...	காவிரிப்பூம்பட்டினம்
சித்திரா பௌர்ணமி	...	எட்டுக்குடி (தஞ்சை மாவட்டம்)
திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் விழா	...	சீர்காழி
சப்தஸ்தானத் திருவிழா	...	திருவையாறு
அப்பர் குரு பூசை	...	திருவாமூர், திருப்புகலூர்
நடைபாவித் திருவிழா (அஸ்தம்)	...	காஞ்சிபுரம் தேவராசப் பெருமாள் கோயில்
உடையார் உத்சவம்	...	ஸ்ரீபெரும்பூதூர்
தெப்பத் திருவிழா	...	சுசீந்திரம்
தேர்த் திருவிழா	...	திருவாரூர்

வைகாசி

விசாகம்	...	திருச்செந்தூர் திருப்பரங்குன்றம் காஞ்சி குமரக்கோட்டம்
வசந்த உத்சவம்	...	திருவரங்கம், மதுரை
இராமலிங்கப் பிரதிட்டை	...	இராமேச்சுரம்
கருட உத்சவம்	...	காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயில்

ஆனி

ஆனித்திருமஞ்சனம் (ஜேஷ்ட அபிடேகம்)	...	திருவரங்கம்
நரசிம்மசாமி உத்சவம்	...	திருவல்லிக்கேணி
ஊஞ்சல் திருவிழா	...	மதுரை
தெப்பத் திருவிழா	...	மன்னார்குடி
படி உத்சவம்	...	அழகர்கோயில்

ஆடி

ஆடிக் கார்த்திகை	...	திருத்தணிகை
ஆடிப் பூரம் (திருக்கல்யாணம்)	...	இராமேச்சுரம், நாகப்பட்டினம்
பதினெட்டாம் பெருக்கு	...	பவானி
ஆடித் தபசு	...	சங்கரன் கோயில்
ஆடி சுவாதி	...	திருக்கச்சூர்
ஆடி அமாவாசை	...	கன்னியாகுமரி, இராமேச்சுரம், கோடிக்கரை (வேதாரண்யம்), காவிரிப்பூம்பட்டினம்
ஆடிச் செவ்வாய்	...	முக்கியமான அம்மன் கோயில்கள் அனைத்திலும்

ஆவணி

பிள்ளையார் சதுர்த்தி	...	பிள்ளையார்பட்டி, திருவலஞ்சுழி
ஆவணி மூலம் (பிட்டுத் திருவிழா)	...	மதுரை
அருணகிரிநாதர் திருவிழா	...	திருவண்ணாமலை, காங்கேயநல்லூர்

புரட்டாசி

நவராத்திரி	...	மதுரை, தஞ்சாவூர், மயிலாப்பூர், காஞ்சி காமாட்சி அம்மன் கோயில் தருமபுரம் (மடம்) கும்பகோணம் இராமநாதபுரம் அரண்மனை, சிவகங்கை அரண்மனை

ஐப்பசி

காவேரி விழா (ஐப்பசி முதல் நாள்)	...	திருப்பராய்த்துறை
கந்த சஷ்டி	...	திருச்செந்தூர், சிக்கல், சென்னை கந்தசாமி கோயில் வடபழனி (சென்னை) மற்றும் முருகன் கோயில்கள் அனைத்திலும்
சதயம் (இராசராசச் சோழன் பிறந்த நாள்)	...	தஞ்சாவூர்
காவேரியில் திருவிழா (கடைசி நாள்)	...	மாயூரம்

கார்த்திகை

திருக்கார்த்திகை	...	திருவண்ணாமலை
கைசிக ஏகாதசி	...	திருவரங்கம்

மார்கழி

திருப்பாவை—திருவெம்பாவை (மாதம் முழுவதும்)	...	ஸ்ரீவில்லிப்புத்தூர், சிதம்பரம், மதுரை, திருவுத்தரகோச மங்கை, திருவண்ணாமலை, திருப்பெருந்துறை (ஆவுடையார் கோவில்)

திருவாதிரை (ஆருத்ரா தரிசனம்)	...	சிதம்பரம், பேரூர், திருவாலங்காடு, திருவுத்தரகோசமங்கை
வைகுண்ட ஏகாதசி	...	திருவரங்கம், காஞ்சிபுரம், திருவல்லிக்கேணி
பகல் பத்து	...	ஆழ்வார் திருநகரி
இராப்பத்து	...	திருவரங்கம்
திருப்புகழ் (திருப்படித்திருவிழா) ஜனவரி முதல் நாள்	...	திருத்தணிகை

தை

தைப்பூசம்	...	வடலூர், பழனி, திருவிடைமருதூர்
பூபதி திருநாள்	...	திருவரங்கம்
தை அமாவாசை	...	இராமேச்சுரம் (தனுஷ்கோடி), காவிரிப்பூம்பட்டினம், கோடிக்கரை (தஞ்சைமாவட்டம்)

மாசி

மகா சிவராத்திரி	...	இராமேச்சுரம்
மாசி மகம்	...	கும்பகோணம், காஞ்சி காமாட்சி அம்மன் கோயில்

பங்குனி

63வர் திருவிழா	...	மயிலாப்பூர்
உத்தரம்	...	சுவாமிமலை, பழனி, திருத்தணிகை, சமயபுரம், மணவாளநல்லூர், காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோயில், திருவரங்கம், திருவாலங்காடு ஆலங்காட்டு அப்பர் கோயிலில் இவ்விழாவுடன் காரைக்கால் அம்மையார் கனி பெறும் விழாவும் நடத்தப் பெறுகிறது.
தெப்பத் திருவிழா	...	திருவாரூர்

$2\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு ஒருமுறை

சனிப்பெயர்ச்சி	...	திருநள்ளாறு (காரைக்கால் அருகே)

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை

மகாமகம்	...	கும்பகோணம்

அடுத்த மகாமகம் 1980 பிப்ரவரியில் நிகழும்

எட்டுக் கிரகங்களின் சேர்க்கையால் 30/40 ஆண்டுகளுக்கு ஒரு முறை

மகோதயம், அர்த்தோதயம்	...	வேதாரண்யம் (திருமறைக்காடு)

❋

உ
சிவமயம்

கும்பாபிடேகக் கவித்திரட்டு

இது, கண்டனூர் **நா. பெ. நா. மு. முத்துராமையா**

அவர்களாலியற்றப்பெற்று

கொத்தமங்கலம்

சி. அ. சு. செல்லப்ப செட்டியாரவர்கள்

விருப்பத்தின்படி

மதுரை விவேகபாநு அச்சு இயந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

1913

ஈஸ்வர ஸ்ரீ மதுரை

ஏர்கொண்ட கொல்லமாண் டாயிரத் தைம்பத் திரண்டி
னுக் கேற்ற தான, ஈசுவர வருஷமுறு தைதேதி
யிருபதோ டாறினிற் புந்திவார, மியல்பா யமைந்தநன் னாளிலே
பாண்டிநா டெனுமதுரை நகரமுற்ற, வெழிலான திருவால
வாய்க்கோயின் மீனாட்சி சுந்தரர் திருப்பணியினிற்,—
பார்கொண்ட கருப்பக்கி ரகமீதி லுறுகின்ற பண்புளவி மான
மதனைப், பரிவுடன் குட்டையை யாவுமே தன வணிகர்
பாலித்த பொருளைவாங்கிப், பாங்காக வேசொன்ன
மதனுலி யற்றியும் பார்ப்பவர்கள் மனதுவக்கப், பத்தியிற்
றிகழ்நந்தி மண்டபந் தனையுமணி யொட்டிமண் டபமதாக்கச்,—
சீர்கொண்ட வயிநாக வணிகர்மற் றுளதான சீரண
மெலாமகற்றித், திடமான கல்லா லமைத்துமே கல்யாண
மாலதுஞ் செய்துபின்னர்ச், செகமெலாம் புகழ்ராச
கோபுர மனைத்துஞ் சிறக்கவே புதியதாக்கித் திகழ்வெள்ளி
தங்கமத னுல்வாக னங்களைச் சீர்செய்து நகையனைத்துந்,—
தார்கொண்ட மூர்த்திகட் கியல்பா யமைந்திடப் பழையதைப்
புதியதாக்கத், தனவணிகர் யாவரும் கூடியே கும்பாபி டேக
முஞ்செய்துமன்றே, தகமையாய்ப் பஞ்ச மூர்த்திகள்பவனி
வந்திடச் சகலவை பவமுமோங்கத், தரத்துட னடாத்தியும்
மானந்த முற்றதைச் சாற்றுதற் கெளியதாமோ.

சர்வசித்து ஸ்ரீ திருநெல்வேலி

அழகான வாயிரத்தறுபத் திரண்டாவ தாண்டினிற்சருவசித் தென்
றுனவற் சரமிதுன மாதநற் றேதிதா னையைந்து நான்கு
மான வமரபட் சஞ்சோம வாரமுத் ரட்டாதி யானதொரு
சஷ்டிதிதியு; மமைவான கன்னிகா லக்கினஞ் சாத்துவிக மான
தொரு சுபதினத்திற் றழைவான பாண்டியிற் றும்பிர பரணிசூழ்
சாலிவா டீபுரமெனச் சாற்றுநெல் வேலியாம் க்ஷேத்திரந்தன்னிலே
சச்சிதானந்த வடிவாய்த் தற்புர சுயம்புவாஞ் சாலிவாடீஸ்வரர்
தகமைபெறு மூலநாதர்; தன்னிகரில் காந்திமதி யம்மையொடு
மனவரக தானநா தர்க்கு நல்ல வளமான பிரபுக்கள் பெரியோர்க
ளடியார்கள் மானேசர் தர்மகர்த்தர் வளம்பெறு கமிட்டியா
ரனைவருமாராய்ந்து வயமான கோயின்மிக்க மானபதினையாயி—
ரம்பொனுமெடுத்துமேல் வந்தபொரு ளியாவும் வாங்கி
வண்மையாஞ் சாத்திர விதிப்படிக் கேயஷ்ட பந்தனம்
மதனினோடு; முளதான செடிபந்த னத்தொடுங் கும்பாபி ஷேகமும்
முரிமையாக வுலகங்க ளுய்யும் படிக்கே நடத்தின வுண்மையாம்
வைபவத்தை யுயிர்களெல் லாமுவந் தன்புடன் வணங்கியே
யுள்ளங்களித்து நின்ற வுயர்வானவதிசயமனைத்தையும் மயனு—
லுரைக்கவும் தெளியதாமோ.

கர ஸ்ரீ சிதம்பரம்

ஆயிரத்தோ டெண்ணூற்றுத் தொண்ணூற்றொ ராம்வருட
மேயகர வற்சரத்தின் மேடமா தந்தேதி
தூயநான் கினிற்புந்தி வாரமுநற் சுபமிதுன
நேயதிரு வாதிரைநாள் நேமமுள வணிகரெலாம்.

தில்லைதனின் நடராச தேவர்முதற் றேவர்கட்கு
மெல்லையுள கும்பாபி டேகமுமங் கினிமையதாய்
வல்லமையாந் தீக்ஷிதர்கள் வைதீக மாகவுமே
நல்லதின் நடத்தினதை நான்கூற வெளிதாமோ.

உள்ளங் களிக்கும் பொன்னிநாட் டுயர்வாய் விளங்கும் புலியூரில்
வள்ள லாகு நடராசன் விமான மதற்கு வணிகரெலாங்
கொள்ளுஞ் சொன்ன வோடிருபத் தோரா யிரத்தி னறுநூறு
கள்ளமின்றிச் செய்ததைக்கண் கோடிகாணக் காணுமதோ.

சிற்சபையின் றூபியபி டேகமதைத் தெரிசிக்கச் சீவரெல்லா
மற்புதமண் டபங்களெல்லா மேறியுமவ் வசமேயா யகங்குளிர்ந்தே
நிற்புறுமெய் வாக்கு மொத்துக் கண்டுகளித் ததை யாவர் நிகழ்த்தக்கூடும்
விற்பனனென் றுரையாதி சேடனுமா யிரநாவால் விளம்பொணுதே.
சத்திரந்தா னமைத்ததொறு தவப்பேற்றுற் சாவன்ன வகையார்தாமு
முத்திநலஞ் சிதம்பரமென் றுணர்ந்தாங்கு தம்மினத்தார் முழுதுங்கூடி
யத்தமது வேண்டுமட்டுஞ் செலவுகள்செய் தானந்த நடராசர்க்குப்
பத்தியாற் கும்பாபி டேகஞ்செய் திட்டதையார் பகர்வர் மாதோ.

மாயிருஞா லம்படைத்த பிரமனுர் வணிகர்தமை வகுத்ததற்குத்,
தூயபலன் கைமேலே தோன்றிடச்செய் தாரெதனுற் சொல்வா யென்னிற்,
கோயிலெனுந் தலத்திறைக்குக் கும்பாபி டேகமதைக் குறிப்பாய்ச்செய்தே,
யாயிரக்கால் மண்டபத்திற் றெரிசனமும் பெறச்செய்த வடைவி ஞலே.

கர ஞூ ஆவுடையார்கோவில்

முதன்மையுள கரவருடம் வைகாசி முதற்றேதி
புதன்கிழமை யானசுப தினமதனிற் புவியினிலே
சதமான பதமடையத் தக்கபெருந் துறைமேவும்
இதமான வாத்மாநா தக்கடவுட் கின்பமுடன்.

திருவாத வூரடிகள் செய்ததிருப் பணியதற்குப்
பரிவான வழகுமிகப் பணிசெய்து பான்மையுடன்
குருவான கடவுளுக்குக் கும்பாபி டேகமதுந்
திருவான வணிகர்கள்செய் சிறப்பையுமென் செப்புவதே.

நந்தன ஞூ திருப்பரங்குன்றம்

ஏர்மேவு கொல்லமாண் டாயிரத் தறுபதோ டெட்டுநந் தனவருடமு,
மின்பமதி மகரமுந் தேதிபத் தொன்பதும் மெழில் பெருகுமதிவாரமுஞ்,
— சீர்மேவு புனர்பூச மீனலக் கினமுஞ் சிறந்திடுஞ் சுபதினத்திற்,
றிகழுங் கமிட்டியா ரெனும்ராம நாதன்செய்
சீரணுேத்தாரணமுடன்,—பார்மேவு மானேச ராமசா மிப்பெயர்கொள்
பண்பான வணிகச் செல்வன், பார்ப்பதற் கினிதாம் பரங்குன்ற
நாதனெம் பரமனு வுடையம்பிகை,—தேர்மேவு சுப்ரமணி யக்கடவுள்
முதலான தேவர்கட் கின்பமாகத், தெளிவுடன் கும்பாபி டேகஞ்செய்
மகிமையைச் செப்பவல் லவர்கள்யாரே.

விளம்பி ஞூ பிள்ளையார்பட்டி

திருவான கலியுகம தையா யிரத்தாண்டு சேர்ந்தநல் விளம்பி
வருடந், திகழ்மகர மாதநற் றேதிபத் ததனிலே தெளிஞாயி
றேகாதசி, திதியான ரோகணி சேர்கும்ப லக்கினஞ் சிறந்தமெய்ச்
சுபதினத்திற், றென்னவன் றேசமரு தங்கூ ரிராசநா ராயண
புரத்தினுடனே,—அருவாங் கணேசமா நகரமென் றிடுபிள்ளை யார்
பட்டி யாந்தலத்தி, லருச்சுன வனேசரோ டசோககுசு மாம்பிகை
யருடகற்ப கப்பிள்ளையா, ராதியாம் பரிவார தேவர்க டமக்குரித்
தானதிரு வேட்டவணிக, ரண்டர்பர வும்படி திருப்பணி யமைத்துநல்
லஷ்டபந் தனமு மன்பாய்ப்,—பெருமை சேர் கும்பாபி டேகமுறை
செய்துயர் பிஞ்ஞகன் றனையுமன்னை, பெட்புலவு கணபதி பந்தநற்
சண்டேச பெம்மானெ டைவர்களையும், பேணுதற் கரிதான
ரதரிஷப வாகனப் பரியுடன் கேடகமயில், பிரியமா யாரோ
கணித்துவரு மாபவனி பேணுநால் வேதவோசை,—தருவதாஞ்
சங்கீத வோசைதே வாரங்கள் சாற்றுமெய் யடியரோசை,
தற்பரன் றிருநாம வோசைபச னைக்காரர் தம்புருவி னேசைதிவ்ய,
தங்கவாத் தியவோசை நடனநிகழ் தருமோசை தாவுசெல்
வாணவோசை, தங்கமாய்ப் பொன்மாரி பொழிகின்ற வோசையுஞ்
சாற்றுதற் கெளிதாகுமோ.

விளம்பி ஞூ சூரைக்குடி

சீர்கொண்ட பாண்டிநன் ஞட்டிலுயர் புகழுடைத் தென்னவன்
பூசைசெய்த, திவ்ய மங்களசூரை நகர்தனி லுவந்தெழுந் தேசிக
நாத மூர்த்தி, திகழ்வுறு மனேன்மணி யாவுடை நாயகி
சேய்கந்த னைங்கரன்முதற், றேவர்க டமக்குமெய்த் தொண்டு

செய் வழியடித் திறமைபூண் வணிகரெல்லாம்,—பார்கொண்ட
சேடனுஞ் சிரசாயிரத்தினுற் பண் பென்று கம்பமிடவும்,
பாவல ரெலாம்புகழ் திருப்பணி யியற்றி யிப்பார்மீது கலியுகாதி,
பகர்கின்ற வருடமோ ரையா யிரத்தினிற் பரவுநல் விளம்பிவருடம்,
பரிவான மிதுனமா தந்தேதி பதினுன்கிற் படர்ஞாயி றுத்திரத்தி,
லேர்கொண்ட சிம்மலக் கினமுதய நாழிகை யெட்டுட னரையினுக்கு,
ளிசையமேற் பதினொன்று காலினுக் குள்ளா யிலங்குமிச்
சுபதினத்தி, லிதமான வஷ்டபந் தனமோடு கும்பாபி டேகமங்
கினிதியற்றி, யெனதத்த னம்மைகுகன் சண்டேசன் வேழமுக
னென்னுமிந் நால்வராய,—தார்கொண்ட மூர்த்தியொ
டெழுந்தரு ளலங்கார சகலவை பவமும்யாவுஞ், சற்சனர்க
ளானதோர் பெரியோர்க ளடியார்கள் தகைமைசார் தனிகர்மற்ற,
சகலரும் வந்துமெய்ப் பத்தியொடு தரிசனஞ் செய்துநற்
றனதனெத்த, சம்பத்தி னெடும் வாழ்க வாழ்கவச் சூரைநகர்
சந்ததமும் மாரிபெய்தே.

வேறு

பொன்மலிதண் சூரைநக ரீசற் கன்பாய்ப் புகழ் கும்பா
பிடேகஞ் செய் விப்பதற்கே, நன்மதிநல் லறந்திகழு
மற்றக்கோவி னகரத் தாரனைவரும் வந் தன்பார்க் கூடித்
தன்மணமார்ந் தின்பமுட னதனைச் சார்ந்த சகல
விசாரணை செய்த வதிசயத்தைத் தென்மணிசேர்
சேடனு யிரநா வாலுஞ் செப்புதற்குக் கூடுமோ செகத்தின் மீதே.

மண்ட லாவபி டேக மகிமையைக்
கண்டு போற்றிக் களித்து வணங்குவார்
பண்டு செய்த பழவினை யாவையும்
விண்டு மேலவராக விளங்குவார்.

விகாரி ஸூ திருத்தண்டலை

ஏருறும் விகாரிசம் வற்சரந் தைமதியி லிருபத்துமூன்று தேதி,
யெழில் பாநு பஞ்சமி திதியும்ரே வதியினி லிசைமீன லக்கினத்திற்,
—பாருறும் பாண்டியிற் றேவையம் பதியினிற் பத்திசெய்
வணிகருக்குட், பரிவான சத்திரத்தருணு சலப்பெயர்கொள்
பாக்யவா னன்பு கூர்ந்து,—சீருறுஞ் சோழவள நாட்டிலரி
வாட்டாயர் செந்நெலின்னரிசியோடு, செங்கீரை
மாவடுக் கொண்டு திரு வமுது செய் விக்குந்திருத்தண்டலை,—
நேருறும் க்ஷேத்திர நீணெறி நாதற்கு நிகழுஞா னும்பிகைக்கு,
நேர்மையா யஷ்டபந் தனகும்ப வபிடேக நிலைபெற நிகழ்த்தினனே.

விகாரி ஸூ திருப்பூவணம்

அன்புறும் விகாரிசம் வற்சரந் தைமதிய மானவிரு பத்து
மூன்றி, லாதித்த வாரமொடு ரேவதியு மாமீன மாகின்ற சுபதின
த்திற்,—றென்பாண்டி நாட்டினுயர் தேவையம் பதியினிற் றீரனு
மண்ணுமலைச், செல்வனு ருடன் வணிக ருத்தம சிரேஷ்டர்கள்
திருப்பூ வணந்தன்னிலே,—பொன்னிமிர்ந் தழகிய மின்னன்னை
யாருடன் பூவண நாதருக்கும், புதிதான பணியமைத் தன்புடன்
கும்பாபி டேகமும் புனிதமாக,—நன்குறச் செய்தன்று பஞ்சமூர்த்
தங்களும் நயப்புடன் பவனிவருக, நடத்துவை பவமதைச்
சேடனுலுங்கூட நவிலுதற் கெளியதாமோ.

விகாரி ஹூ காளேயார்கோவில்

திருவான கலியுகம தையா யிரத்தொன்று சேர்ந்திடும் விகாரி வருடந், தேர்மகர மதிதேதி யிருபத்து மூன்றினிற் றிகழ்ஞாயி றமர பக்கந், தெளிவான பஞ்சமி திதியும்ரே வதியினிற் செயமீன லக்கினத்தே, தென்னவன் றேசத்தி னன்னகர மானதொரு தேவநகரதனில் வாழுந்,—தருவான ராமசா மிப்பிரபு மகவான தாஷ்டிக னருணசலத், தனதநெடு தம்பிமார் மூவருங் காளேயார் கோவிலெனு மாதலத்திற், றற்பரம ரானநம் காளீச மூர்த்தியொடு தன்மையுள சொன்னவல்லித், தாயினுக் கும்மயன் விஸ்வகன் மன்செயாத் தகமையுள பணிகள்செய்தே,—யருமையுள வஷ்டபந்தனமோடு கும்பாபி டேகமுஞ் செய்துமன்பி லளவிடக் கூடாத மறையோர்க ளடியார்க ளரசர்கள் வணிகர் சூத்ரர், அறிவான வுத்யோக முறையிற் சிறந்தவர்க் கணியணி சாகைகண்டு, மன்னமுஞ் சொன்னமு நன்னயம தாகவே யள்ளியள் ளிக்கொடுத்தும்,— பெருமையுள பிரபுக்கள் விசாரணை செய்திடப் பிஞ்ஞகன் றனையுமிரவு, பெரிதான ரதரிஷப வாகனத் திற்பவனி வந்திடப் பெற்ற பெருமை பேசவோ சேடனும் பின்னிடுவ னிப்பணி பிரியமாச் செய்வர் தம்மைப், பெருக்கமாய் வாழ்வரென முன்னநான் சொன்ன கவிபேணியே பார்க்கமாதோ.

விகாரி ஹூ காஞ்சீபுரம்

சீர்மேவு மாயிரத் தெழுபதோ டைந்தாண்டு திவ்விய விகாரி வருடந், திகழ் மகர மாதமிரு பத்துமூன் ருந்தேதி திவாகரர்க் குரியவாரம், சேரமர பக்கமும் பஞ்சமியும் ரேவதி சிறந்தநட் சேத்திரமுநற், சிவநாம யோகமும் பத்ரவா கரணமுஞ் சேர்மீன லக்கினத்திற்,—பார்மேவு பாண்டிவள நாட்டினிற் றேவையம் பதியில் வாழ் வணிகர் தம்முட், பண்புமிகு லெச்சுமண தர்மகர்த் தாமுதற் பாக்கியவான் சிலர்கள் சேர்ந்து, பங்கயன் மாறேவர் முனிவரெல்லாந்தவம் பண்ணியுயர் பரிசுபெற்ற, பாங்கான தொண்டை வள நாட்டிலுயர் காஞ்சியிற் பரவுகம் பாநதியினி, லேர்மேவும் வேதங் களுருவு கொண் டுளமா விருக்ஷத்தி னடியதனிலே, யின்புரு வுடன்றவஞ் செய்கின்ற காமாக்ஷி யிதயமகிழ் வுறவெழுந்த, ஏகாம் பரர்க்குமா வடிகந்த ராலய மெழிலிசேர் மண்டபமது, மியல்பாய் முடித்தட்ட பந்தனங் கும்பாபி டேகமுஞ் செய்திரவினில்,—வார்மேவு மாதுமை யுடன்கச்சி நாதரை மகமேரு போலும் ரிஷப, வாகனத் திற்பவனி வரவும்வே தங்கள் கடல் வாய்விட்ட தெனமுழங்க, வாத்தியங் கணகணென வாணங்கள் சிலுசிலென வழிவழி யடியர்பாட, மண்டலம் விண்டலங் கண்டக மகிழ்ந்து நனி வாழ்த்திடச் செய்தனர்களே.

சார்வரி ஹூ திருவாடானே

வயமான வாயிரத் தெழுபதோ டைந் தாண்டில் வளமிகுந் தோங்குநற்சார், வரிவருடம் வைகாசி மாதமெட் டாந்தேதி வருமமர பட்சபாநு, வாரமுஞ் சஷ்டிதிரு வோணநா ளுஞ்சிம்ம லக்கினமதானதிவ்ய, மங்கள முகூர்த்தமதி லுயர்பாண்டி நாட்டினில் வளமான தேவைநகரிற்,—செயமிகுஞ் சத்திரத்

தருணு சலச்செட்டி யார்செப்பும் வாக்கியத்தைச், சிரசினில் வகித்தவர்க் கருமைமக வாஞ்சோம சுந்தரச் செல்வனார்தாந், திகழுதிரு வாடானை யானதோர் க்ஷேத்திரத் தினிலெழு சினேகவல் லித், தேவியா ரொடுமாதி ரத்தினே சுரரான தேவருக் கருமையாக,—நயமாந்திருப்பணி புதிதா யமைத்துமிக நாடெலாம் புகழ்வதாக, நன்மையா யஷ்டபந் தனமோடு கும்பாபி டேகமும் நடத்தியன்று, நாட்டிலுய ருடையான்செய் ரிஷபவாகனமதி னமதத்த னம்மையுடனே, நற்பவனி வருகவும் வேதவோ சையுமெழ ராசனுஞ் சேதுபதியாற்,—சுயமான தேவார வோசையு முழங்கிடத் தூயசங் கீதமுழக்கத், துன்னும் வைபவமுடன் வந்தவர் தமக்கெலாந் துண்டான சாகைகண்டு, சொல்கின்ற போசன பதார்த்தங்கள் கப்பலிற் றெருகுதியாக் கொடுகுவித்துச், சுதந்திரம தாய்க் கொள்க லாமென வுரைத்த தைச் சேடனுஞ் சொல்ல வெளிதோ.

பிலவ ஸு திருநாட்டியத்தான்குடி

சீர்மேவு பிலவவரு டந்தைமா தந்தேதி யெட்டினிற் பாண்டி நாட்டிற், றிகழ்கின்ற தேவநகர் வாழ்கின்ற தேனப்ப சீமான் றவத்துதித்த,—தார் மேவு தன வணிக ருகுமண் ணுமலைசகோதரன் முத்தையாநற், றம்பிலக் குமணனுயர் சோழநாட் டிற்றிரு நாட்டியத் தான்குடியினி,—லேர்மேவு ரத்னபுரி யீசனெடு மங்கள நாயகிக் கேற்றதான, இன்பமுள கர்ப்பக்கி ரகமுதல் மண்டப மேற்றதிரு மதில்கோபுரங்,—கார்மே விடக்கட்டி யன்புடன் கும்பாபி டேகமுங் கண்டவதனைக் காண்பதற் காயிரங் கண்ணமைத் தானிலை கமலநான் முகனுமாதோ.

சோபகிருது ஸு திருப்புனவாசல்

இன்றமை கலியுகம தையா யிரத்தைந்து சோபகிரு தானவருட, மியைகின்ற வைகாசி தேதியொரு பத்தொடெட் டெனுமாதி வாரமதனி, லின்பமுள சுக்லபட் சங்கொண்ட பஞ்சமி திதியுடன் பூசநாளு, மியல்பான ரிஷபலக் கினமான சுபதினத் தெழிலான பாண்டி நாட்டில்,—நன்றுன தேவநகர் வாழ்சிதம் பரவணிக நற்புருட னெத்தனத்தை, நன்மக வெனுஞ்சுப்ர மணியனுந் தீரனும் நகரவட்டகை வணிகரும், நமன் வாதை யணுகாத தீர்த்த தலமூர்த்தியோ டுயர்வும் பொருந்திமேலு, நமதுகுல குருவுக் கதிட்டான தேயமாய் நாடிடுந் தலமதாகி,—மன்றும் விருத்தபுரி யாந்திருப் புனவாயின் மங்களம தானபெரிய, வடிவா யெழுந்தருள் பழம்பதி நாதர்க்கு மகிழ் பெரிய நாயகிக்கு, மன்னுகண பதிசுப்ர மணியர்முத லானபரி வாரதே வதைகளுக்கு, மாட்சிமைய தாந்திருப் ணிவிமா னத்துடன் மண்டபம் முதலானவை,—யென்றும் விளங்கவே சீரணுேத் தாரண மின்புறச் செய்து பின்ன, ரெழிலான வட்டபந் தனமோடு கும்பாபி டேகமு மியற்றியேயன், றிரவினிற் பஞ்சமூர்த் திகளும்வீ தியிலேயெ ழுந்தருளி வருகவுயிர்க, ளின்புறப் பார்த்ததி சயித்துமே யானந்த மெய்யினர்க ளறிகமாதோ.

குரோதி ஹூ திருத்தங்கூர்

செயமிகு குரோதிசம் வற்சரஞ் சித்திரை **மாத**மது தேதிபத்திற், றிகழ்சுக்ர வாரமுறு பூர்வபட் சத்திலே திதியான சத்தமிதனி,—னயமதாம் புனர்பூச நட்சத் திரத்திடப லக்கின மாந்தினத்தி, ஞட்டிலுள வணிகர் சேர்ந் தூனுவொ டானுவு நன்மையாம் பொருள் கொடுத்து,—வயல்வளஞ் சூழ்திருத் தங்கூரிலுறை நாக நாதனும் வள்ளலுக்கு, மாதா வெனுஞ் சொன்ன வல்லிமுத லனைவர்க்கு மாபணி யியற்றி யன்பாய்ச்,—சுயமான வட்டபந் தனமோடு கும்பாபி டேகமுஞ் சுகமதாகத், தூய்தா நடந்ததும் நற்கடவுள் பவனியுஞ் சொல்லுதற் கெளிய வாமோ.

குரோதி ஹூ காளையார்கோவில்

சீர்பெறு குரோதிசம் வற்சரம் வைகாசி தேதிபதி ஞலதனிலே, தேவநகர் வாழ்ராம சாமிநற் செட்டியார் செய்தவத் தாலுதித்த,—பாருறுஞ் சீரகத் தாரரு ணுசல பாக்யவான் றம்பிகளுடன், பரமான காளையார் கோவிலில் யானைமடு பார்ப்பதற் கழகு செய்யக்,—காருறும் படிமைய மண்டப விமானங் கணக்குடன் ருனமைத்துக், காண்பதற் கின்பஞ்செய் தெப்பமது கண்டுநம் கடவுள்சோ மேசர்வரவே,—யேருறும் படிதீப மேற்றியெங் கணுமுலக ரின்புறச் செய்துதினமு, மிப்படி நடக்கக் கிராமஞ் சமர்ப்புவித் திருமை நலமெய்தினரே.

விசுவாவசு ஹூ திருவண்ணுமலை

அன்னம் போட்ட தவப்பயனல் ஆனுக் கானு வகையிலுளோர்
அன்னம் பன்றி யுருவாகி அயனு மாலும் அறியவொணு
அன்ன கடவுள் அமரருணு சலத்திற் பணியோ டபிடேகம்
அன்ன வணிகரெலாஞ் சேர்த்துச் செய்தானந்தித் தகமகிழ்ந்தார்.

ஆக்கமுள கலியுகம தையாயிரத்தேழ தானவிசு வாவசுவினில், அமர்கின்ற வைகாசி தேதிமுப் பதுதன்னி லணிமருவு சோமவாரம், ஆகின்ற சிவபிரானுக்குரிய நன்னுளில் அஸ்தநக்ஷத்திரத்தோ, டானதோர் சிம்மலக்கினமான சுபதினத்தாநல்ல வேளைதன்னில்,—ஊக்கமுள பாண்டிநன் ஞட்டிலுயர் வணிகர்க ளொருங்குசேர்ந் துவகை கொண்டே, யூர்த்துவம தாயயன் மாலதோ முகமதா யொருகோடி வருஷவளவும், உரத்துடன் றேடியுங் காணுணு தோங்கியொளி ருற்றவண் ணுமலை தனில், உலகோர்க ளுய்யும் படிக்கடி வாரத்தி லுருவான வடிவமாகிப்,—பாக்கவோ ரருணுசல லேசுரராகவே பண்புடன் விளங்கி நிற்கும், பதி பணி தன்னையும் பழையதிரு மதிலையும் பகருமுத் தாரணமுடன், பத்தியுள மண்டபம் பரையுணு முலையம்மை பணியதும் புதிதாகவே, பரிவுட னளவிலாத் திரவியத் தொகை கொண்டு பாங்காகவே நடத்தித்,—தீர்க்கமுறும் அஷ்டபந்தனமுடன் கும்பாபிஷேகமுஞ் செய்தும் அந்தத், தினமதிற் கயிலைமலை போல் வெள்ளி ரிஷபந் திகழ்ந்திடக் கடவுள் தானுஞ், சிறப்புடன் ஆரோக ணித்துவர அம்மையொடு சேய்களுங் கூட வரவே, செய்ததோர் சிங்கார மதனையச் சேடனுற் செப்பவும் எளிதாகுமோ.

பிலவங்க ஹு சுவாமிமலே

சீர்மேவு மாயிரத் துத்தொளா யிரத்தேழ் சிறந்த
பில வங்கவருடஞ், சித்திரை மாதத்தில் வருதேதி பதினுறு
திகழ்வதா மாதிவாரஞ், செறிகின்ற பௌர்ணமி திதியினிற்
சோதிநாட் டிகழ்மிதுன லக்கினத்திற், றென்பாண்டி நாட்டினிற்
கானுடு காத்தான் சிறந்தநகர் வணிகருக்குட்,—பேர்மேவு
வெள்ளேயப் பேந்திர பூபதி பெற்றிடுந லருணுசலம், பீடுறுசு
வாமிமலே யானபடை வீட்டினிற் பிரணவ மந்திரத்தைப்,
பெம்மான் றனக்கு மருள் செய்கின்ற வல்லவப் பெருமையுள
சாமிநாதன், பிள்ளேயா ராமுழு முதற்கடவு ளெனவறிஞர்
பேசிடுங் கணபதிக்கும்,—பார்மேவு மீனுட்சி சுந்தரேஸ்
பரரோடு பரிவார தேவதைக்கும், பகர்வதற்கரிதான வாலயத்
தொடுமதில் பத்தியுள மண்டபங்கள், பாங்கா முடித்தட்ட
பந்தனங் கும்பாபி டேகமுஞ் செய்துபண்பாய்ப்,
பணியான சுவணகலசஞ்செய்து சாத்தியே பார்ப்பதற்
கினிமையாக,—ஏர்மேவு வெள்ளிரத மோடுமயில் வாகன
மினமாகவே முடித்தங், கெழிலான வுற்சவ மூர்த்தியொடு
சண்முகக்கடவுளு மெழுந்தருளவே, யிரவுபக லோயாம
லன்னமொடு சொன்னமு மியற்கையுட னீந்துமன்பா,
யியல்பாய் முடித்ததோர் மகிமையைச் சேடனுமியம்புதற்
கெளியதாமோ.

பிலவங்க ஹு நேமம்

சீலமிகு மாயிரத்துத் தொளா யிரத்தேழ் சிறந்தபில
வங்கவருடஞ், சேர்கின்ற வைகாசி தேதி பத்தாம்பூர்வ பட்சமுள
வேகாதசி, திதியினிற் குருவார மத்த நட்சத்திரஞ் சேர் மிதுன
லக்கினத்திற், றென்பாண்டி நாட்டிலுயர் தேனுறு செல்கின்ற
தெளிவான நேம நகரில்,—நீலமிகு பார்வைகொள் ளாவுடை
நாயகி நிகழ்சௌந் தரநாயகி, நீங்காச் செயங்கொண்ட
சோழீச ருக்கன்பு நீடித்த வணிகரெல்லா, நிலேமையுள கர்ப்பக்கி
ரகமுதன் மண்டப நேரான கோபுரமதில், நித்யமங்களமாய்
விளங்கவே புதிதாய் நிகழ்ந்திட வேமுடித்துக்,—கோலமிகு
மஷ்டபந்தனமொடு கும்பாபி டேகமுங் கொண்டருளவே,
கோதிலா மறையோர்கள் மந்திர தந்திரங் குறைவிலா தேநடத்தக்,
கோமளம தாகவே நால்வகைச் சாதியார் கொண்டிடச் சுவை
யாறுடன் குவிகுவிய லாய்ச்சமையல் செய்தங்கு வந்திடக்
குணமுட னுபசரித்துச்,—சாலமிகும் வீதியிற் பஞ்சமூர்த்திகள் சார்
தனித்தனி வாகனமதிற், றகமையாய் வருகவுஞ் சங்கீத
வோசையொடு தகுவாண வோசையாதி, சாகரத் தோசையை
யடக்கியே வீறிடச் சகமெலாம் புகழோங்கிடச், சந்தோஷ
மாகவு நடத்தின தோர்பெருமை சாற்றுதற் கெளிதாகுமோ.

பிலவங்க ஹு திருவானைக்கா

அருண்மேவு சாலிவா கனசகாப் தந்தன்னிலாயிரத்
தொண்ணூற்றுமுப், பதுபில வங்க வரு டத்திலே தைத்திங்க
ளானவிரு பத்துநான்கி, லழகுபெறு குருவார முஞ் சுக்ல பட்சமு
மமைந்தபஞ் சமி திதியுட, னடுத்ததோ ருத்திரட் டாதிநட்சத்திரமு
மமைமீன லக்கினத்திற்,—கருணைசேர் தென்பாண்டி நாட்டினிற்
கானாடு காத்தானில் வணிகருக்குட், கனிவுமிகு ராமநா
தையாவின் மகனான கல்விச் சிதம்பரையா, கனமான தன வணிகர்
பொருளுதவி கொண்டு பூங் கழனிசூழ் சோழநாட்டிற், காவிரிக்
கரையிலுறு திருவானைக் காவெனக் காசினி தொழுந்தலத்தி,—
லுருவினிற் சிறிதாஞ் சிலந்தியொடு யானையு முவந்துபூ சித்ததான,
வொப்புயர் விலாதசீ ரப்புவடி வாகியே யொளிர்கின்ற சம்புகேச,
ருடனெழுந் தருள்கின்ற வகிலாண்ட நாயகிக் குரிமையுறு
மாலயஞ்செய், துயர்வான மண்டபங் கோபுரத் திருமதில்க
ளுவமையில் லாதுசெய்தே,—திருமேவு மட்டபந்தனமுடன்
கும்பாபி டேகமுஞ் செய்யவீசர், தேவியுடன் மகிழ்வெய்தி
ரிஷபவா கனமீது திருவுலாப் பவனிமேவச், செகமெலாம் புகழருட்
சங்கராசாரியர் சீடருட னெய்தியேத்தச், சீடர்க டமக்குப
சாரஞ்செய் ததையாதி சேடனுஞ் செப்பொணாதே.

பிலவங்க ஹு திருப்பாதிரிப்புலியூர்

இன்பமுறு மாயிரத் தெண்பத்து மூன்றாண் டிலங்குபில
வங்கவருட, மெழிலான மகர மாதந்தேதி யிருபத்து நான்கினில்
வியாழமேவு, மிசைபூர்வ பட்சபஞ் சமியுத்தி ரட்டாதி யேர்மீன
லக்கினத்தி, லேற்றமுள தென்பாண்டி நாட்டினில் வளம்பெறு
மிராமச்சந் திரபுரத்தின்,—மன்பரவு வணிகரிற் றகரவரி
நான்கினொடு மருவுமுத லுயர்விலாச, வகைமூன்று தனிஞச்சி
யப்பனொடு முருகப்ப மணி சிதம் பரவணிகனு, மகத்துவஞ் சேர்
திருப் பாதிரிப் புலியூரின் மதிபுனை பாடலேசு, வரனோடு மினிமையுறு
பிரசன்ன நாயகி மகிழ்ந்தினி திருப்பவேண்டி,—யன்புடன்
கர்ப்பக்கிரகமுதன் மண்டப மளப்பரிய திருமதினமுத,
லாலயமெ லொஞ்செய்து கும்பாபிடேகமு மன்புறச் செய்துமேலா,
மழகான ரிஷபவாகனமீது சிவனுட னம்பிகை யெழுந்தருளவே,
யன்னமுஞ் சொன்னமு மவரவர்க் கேற்றபடி யாராய்ந்து
தந்து மகிழ்வாய்த்,—தென்பெற நடாத்திமிக வானந்த
முற்றுமிகு தெளிவுடன் வாழுகின்றார், செகமெலாம் புகழ்
மண்ட லாபிடேகத்தைச் சிரத்தையுட னே நடாத்திச்,
சிவபிரான் பணிவிடை யனைத்தையு முடித்துளந் தெளிவுடன்
றிருவருளுறச், சீர் முத்துராமநற் கவிஞனுற்றீட்டிய
சீட்டுக் கவித் தொடையிதே.

கீலக ஹூ கோவிலூர்

பூமிதன்னி லுயர்வான பாண்டி நாட்டிற் புனிதமுள
நாமம் பெற்ற கோவிலூர் நண்ணுங் கொற்ற வாளீசர்க்
கேம மான திருநெல்லை யம்மை யார்க்கு மினிதாகச்
சேம மான திருப்பணி முன் செய்தான் வீர பாண்டியனும்

ஆகம சாலைக ளொருசா ரந்தணர் சாலைக ளொருசார்
யாக சாலைக ளொருசார் ஞானிகள் சாலைக ளொருசார்
பாக சாலைக ளொருசார் பண்டித சாலைக ளொருசார்
தாக மதுத விர்த்தாளுந் தண்ணீர்ப் பந்தல்க ளொருசார்.

கல்வியினிற் சிறந்தோர்க்குங் காவியத்தாலுயர்ந்தோர்க்குங்
கவி சொல் வோர்க்குஞ், சொல்வேத வாக்கியர்க்குந் தொண்டு
செய்வோர் தங்களுக்குஞ் சுகம தாக, நல்குரவென் பதுகனவு
நாடாது பொருளதனை நயந்து நல்கிச் செல்வமுள வணிகர்கட்கு
விபூதிப்பை யதுங் கொடுத்துச் சிறக்க வாழ்ந்தார்.

சாதாரண ஹூ திருப்பராய்த்துறை

ஆண்டதனி லுயர்வான சாதாரண வருட மானி
பதின் மூன்று தேதி, யாதித்த வாரங்கொள் பூர்வபட் சத்திலே
யமைசதுர்த்தி திருவோணங்,—காண்டகுமோர் சிம்மலக்கின
மாந்தினங் காணுடு காத்தானிலே, கனமான தனவணிக
வீரப்ப வேளுதவு கருணைநா கப்பசீல,—னீண்டசோ ணுடுற்ற
காவேரி நிகழ்சீர்ப் பராய்த்துறை யாந்தலத்தி, னின்மலக்கேமவரு
ணேமவரு ணேஸ்வரி யுடன்றுரு காவனேசர்,—பூண்டதிரு
வாங்கருப் பக்கிரக முதலான புதிதாய மைத்துமன்பாய்ப்,
பொலிவுடன் கும்பாபிடேகமு நடத்தின புதுமையைப்
புகலவெளிதோ.

விரோதிகிருது ஹூ திருக்களர்

சீர்கொள் விரோதிகிரு தாண்டினிற் சித்திரைத் தேதி
யிருபத்திரண்டிற், றிகழ்குரு வாரமொடு பூர்வபட் சஞ்சட்டி
சேர்ந்த புனர் பூசதினமுஞ், சித்தயோ கமுமான மிதுனலக்
கினமதிற் றென்னவன் றேசத்திலே, செகமெலாம் புகழ்கோயி
லூர்முத்து ராமலிங்கையன் மர பிற்றெளிந்த,—பேர்கொண்ட
வீரப்ப ஞானதே சிகரிடம் பிரியமுள ராசப்பனேர், பெருமையுள
முதலியார் சோழ நன் ஞட்டிலே பெரிதாந் திருக்கள ரெனும்,
பேர்பெற்ற தலமொன்று கிலமாகி விட்டதாற் பேணிட
வேண்டுமென்னப், பிரியமாய்க் கேட்டுமே சீரணேத் தாரணம்
பெலமா நடத்தவுன்னித்,— தார்கொண்ட வணிகரின்
பொருள் கொண்டு நற்பாரி சாதவ னேஸ்வரர்க்குந்
தண்ணருள்செ யமுதவல் லீஸ்வரித் தாயோடு சான்ற பரி
வாரர்கட்குந், தகவான கர்ப்பக்கி ரகமொடு மண்டபஞ்
சதி ருற்ற திருமதில்களுந், தக்க பசு நிலைபாட சாலை நந்தனவனந்
தகுகுள மடமுமாலும்,—ஏர்கொண்ட ரதமுதல்வாகன திகண்மிக்க
வெழிலான வாபரணமும், இதமா முடித்தட்ட பந்தன
கும்பாபிடேகமு நடாத்தியிரவி, லேற்றமுள வெள்ளிவிடை
மீதினிற் கடவுளு மின்பமாய்ப் பவனி வரவே, யியல்பான
வன்ன பானுதியொடு சொன்னமு மீந்ததாச் சரியமாதோ.

விரோதிகிருது ஹூ விருத்தாசலம்

திருமேவு விரோதிகிரு தாண்டினிற் சித்திரைத் தேதியிரு
பத்திரண்டிற், றிகழ்குரு வாரமொடு புனர்பூச நாளினிற்சேர்
மிதுன லக்கினத்தே,—தருமேவு பாண்டிநன் ஞட்டினிற்
றனவணிகர் தலமாம் விருத்தாசலந், தங்கிய விருத்தகிரி
நாதரொடு பாலாம்பிகை பணி தகுதியாக,—அருள்மேவு
சீரஞ்ஞோத்தாரணஞ் செய்தட்ட பந்தனத் தோடுகும்பா,
வபிடேகமுங்கொள நடத்தியன் றிரவிலே யடியார்கள்
போற்றவையன்,—றிருமேவு மம்மையொடு மிடபவா கனமதிற்
சீருடன் பவனிவரவே, செய்துப சரித்ததைச்சேடனு
நாவினுற் செப்புதற் கரிதாகுமே.

விரோதிகிருது ஹூ திருக்கோவலூர்

ஆனதொரு கலியுகம தையா யிரத்திஞே டொன்பதின்
மூன்றதாக, அமருநல் விரோதிகிரு தாண்டினிற் றைதேதி
யாறிரண்டுறு வியாழம், அதின்மேவு சுக்லபட்சஞ் சஷ்டி
ரேவதி யமர் மீன லக்கினத்தில், ஆக்கமுள பாண்டி நன்னுட்டிலுறு
தேவநக ரமர்கின்ற மேனுவகை,—மானமுள பிரபுவாம் வைரவன்
செட்டிகண் மணியென்னும் வள்ளல் நாட்டின், மகத்தான
பெண்ணைநதி சூழ்திருக் கோவலூரென்னுமா க்ஷேத்திரத்தில்,
மகிமைவீ ராட்டகே சுரருடன் பிரஹன்னநாயகி யம்மை
பணியை, வானமுதல் நீக்கியே புதிதான கற்களால் மயனும்
வியப்பதாகத்,—தானமாங் கர்ப்பக்கி ரகமுதல் மண்டபஞ்
சகலமு மியற்றியன்பாந், தகைமையா யட்டபந் தனமுதற்
கும்பாபி டேகமுஞ் செய்துதக்க, தந்திமுக ஞெடுசுப்ர
மணியவேள் தண்டிகே சுரருடன் சாமியம்மை, தாமவடிவாம்
ரிஷப வாகனந் தன்னிலே தரமுடன் பவனிவருகக்,—கானமுள
வேதபாராயணம் மொருபாற் கணகணென வேயொலிக்கக்,
கனமான சங்கீத வாத்தியம் மொருபாற் கடலோசை
போலொலிக்கக், காதலுடன் வந்தவர்க் கன்னமுஞ் சொன்னமுங்
கவினுட னீந்ததான, காட்சியைக் காண்பதற்
கநேகமா யிரம்விழிகள் கண்டிலன் பிரமன்மாதோ.

பரிதாவி ஹூ திருக்காளத்தி

பார்மேவு மாங்கிலாண் டோரா யிரத்துத் தொளாயிரத்
தாறிரண்டிற், பரிதாவி வருடமதி லான சித்திரை தேதி
யொன்பதிற் பானுவாரம், பகரமர பட்சத்தி லுறுசதுர்த்
தியுமிருக சீரிட நட்சத்திரம், பற்றியுள சுபதினந் தன்னிலே
யுயர்வான பாண்டிநன் ஞட்டிலுற்ற,—ஏர்மேவு தேவநகர்
வாழ்கின்ற வணிகரி லீதலுள மேனுவகை, யியைந்துள
விரமனு தச்செட்டி யருணுசலப்பிரபு வானவிவர்க, ளின்பஞ்செய்
கண்ணப்ப னுக்கருள் காளத்தி யீசரா மிறைவர்

பணியோ, டேற்றமுள தாஞானப் பூங்கோதை யம்மையர்
பணியும் பிரித்தகற்றிக்,—கார்மேவு கர்ப்பக்கி ரகமுத லர்த்தமண்டப
மகா மண்டபங்கள், கதிர்மேவு சோபான மண்டபந் திருமதில்
கண்டிடக் கல்லிழைத்துக், கணக்கிலாப் பொருளது கொடுத்துமே
புதியதாக் கட்டியு மன்புபூண்டு, கனமான அட்டபந் தனமொடு
கும்பாபி டேகமுஞ் செய்துகனிவாய்த்,—தார்மேவு
தந்திமுகனெடு கந்த வேளுடன் சண்டேசர் தாமும் வரவுந்,
தகைமையா யம்மையோ டப்பனும் விடைமேற் றனித்தனி
பவனிவரவுஞ், சற்பிராமணர்களடி யார்களுக் கன்னமுஞ்
சொன்னமுந் தரமதாகத், தாங்களே செய்துப
சரித்ததைச் சேடனுஞ் சாற்றுதற் கெளியதாமோ.

பரிதாவி ஹூ திருவாப்பனூர்

சீர்பெருக்குந் திருவாப்ப னூர்த்திருவாப் புடைநாதச்
செல்வருக்கும், ஆர்பெருக்குஞ் சுகந்தகுந்த ளாம்பிகைக்கும்
பணிவணிக ரமைக்கச் செய்து, பார்தரிக்கும் பரிதாவி
யாண்டதில்வை காசிபதின் மூன்ருந்தேதி,
யேராபெருக்கு ஞாயிறினிற் கும்பாபி டேகமது மிகியற்றி னரே.


உண்ணாமுலை அம்மன் கோயில்

முன் மண்டபம்

1. விஜயராகவ விநாயகர்
2-3. துவார பாலகியர்
4. விநாயகர் - லிங்கோத்பவர் முதலியன
5. நந்தி
6. கொடிமரம்
7. பலிபீடம்
8. உண்டியல்
9. நவக்கிரகம்

அஷ்ட லட்சுமி மண்டபம்


10-17. அஷ்ட லட்சுமிகள் உள்ள தூண்கள்
18. விநாயகர்
19. சுப்பிரமணியர்
20. விநாயகர்
21-22. துவாரபாலகியர்
23. சுப்பிரமணியர்
24. அந்தராலம்
25. மூலவர்
26-30. பஞ்ச சக்திகள்
31. சண்டிகேசுவரி
32. பராசக்தி அம்மன்
33. உத்சவ விக்ரகங்கள்
34. சோமசேகரர்



முன்னாள் அறங்காவலர்கள்



திரு. தி. வி. கிருஷ்ணசுவாமி முதலியார்



திரு. P. பழனிப்பிள்ளை



திரு. A. அண்ணாமலை நாயனார்




திரு. T. S. முத்துக்குமாரசாமி முதலியார்



திரு. V. சதாநந்தம்



திரு. மு. ஷண்முக முதலியார்



திரு. R. அருணகிரி முதலியார்



திரு. கன்னியப்ப நாயக்கர்



திரு. M. B. ரெங்கசாமி ரெட்டியார்



திரு. உத்தண்டி பிள்ளை



வேட்டவலம் ஜமீன்தார்
திரு. ஏ. வி. கே. வி. சக்கரைய்யா பண்டாரியார்



திரு. P. பழனி முதலியார்



திரு. I. S. பத்ராசலம் பிள்ளை



வேட்டவலம் ஜமீன்தார்
திரு. ஏ. வி. கே. வி. திருஞானசம்பந்த பண்டாரியார்




திரு. B. வெங்கடாசலபதி செட்டியார்



திரு. எம். சுவாமி ராஜ், *பி.ஏ., பி.எல்.*
அறங்காவலர் 1963—1968



திரு. V. V. S. கதிர்வேலு பிள்ளை



திரு. P. S. சந்தானம்

நமசிவாய வாழ்க !

ஓம்

ஆலயந் தொழ அழைக்கிறது !

சௌந்தரா கைலாசம்

“படைப்பது காப்பது துடைப்பதெ லாமந்தப்
பரம்பொரு ளாலே நடக்கிறது ! இங்கு
நடப்பது நடக்கும் ; நடந்தே தீரும்
நம்கையில் என்ன இருக்கிறது ; இந்த
நினைப்புடன் என்றும் நீயிரு ; ஆமாம்
நிம்மதி அதில்தான் கிடைக்கிறது—இரு
வினைப்பகை அறும் ; இறைமலர்ப்பதம் தொழு” என
விரும்பி ஒருகுரல் அழைக்கிறது ! எனை
ஆலயந்தொழ அழைக்கிறது—பெரும்
ஆனந்தம்பெற உரைக்கின்றது !

ஓம்

நாதன் தாள் வாழ்க !

ஓம்



ஞானனந்த தபோவனம்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா


ஞானு னந்த தபோவன மென்றே
நாவால் கூறினும் இனிக்குதம்மா.
கானுய்க் கிடந்த இடத்திலே இன்று
கருணையின் பேரொளி ஜொலிக்குதம்மா.

அஞ்சுமா மரங்கள் அணியாய் விளங்க
அவற்றின் நடுவிலோர் கோயிலம்மா.
பஞ்சவ டியென்னும் திருத்தல மாகிப்
பக்தரின் உள்ளம் கவருதம்மா.

ஆனை முகத்தவன், ஆறு முகத்தவன்,
அம்பிகை, ஈசன், கண்ணனுடன்
ஞானு னந்தரைத் தரிசனம் செய்தவர்
நற்றவம் செய்தவர் ஆவரம்மா.

அருளொளி வீசி, அன்பொடு பேசி
ஆறுதல் அளித்த தெய்வமம்மா.
திருவடி தோய்ந்த தலமென இதனைத்
தினமும் மக்கள் தொழுவரம்மா.


தினம்தினம் இங்கே திரண்டுமே வருவோர்
தீவினை யாவும் தீருதம்மா.
மனச்சுமை யோடு வருபவர் மாறி
மகிழ்ச்சியைச் சுமந்தே மீள்வரம்மா.



சமணர்களின் சிங்கபுரிநாதர் கோயில்



ஜைன மடம்



மேற்கண்ட கோயிலில் ஓர் அழகிய சிற்பம்

1. மேல் சித்தாமூர்

க. ப. அறவாணன்

தமிழகத்தில் சமண சமயம் சார்ந்த சில ஆயிரவர் இன்றும் பரவலாகத் தம் நெறி பிறழாது வாழுகின்றனர். தென்னர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, கோவை, தஞ்சை மாவட்டங்களில் அவர்கள் சிற்சில ஊர்களில் உள்ளனர். அவர்களுக்கெல்லாம் உரிய பெரிய ஜைன மடமொன்று மேல் சித்தாமூரில் உள்ளது.

தென் ஆர்க்காடு மாவட்டம், செஞ்சி வட்டம் மேல் சித்தாமூர், திண்டிவனத்திற்கு மேற்கே 11 கல் தொலைவில் உள்ளது. இவ்வூரில் ஒரு ஜைனக் கோயில் அழகாகக் கட்டப்பட்டுள்ளது. சிங்கபுரிநாதர் கோயில் என்பது அதன் பெயர். இக்கோயில், மிகப் பழையது. பிற்காலச் சோழர் காலமாகிய கி.பி. 9ஆம் நூற்றுண்டில் இருந்தே பெயர் பெற்று விளங்குவது. அக்காலச் சோழ மன்னர்கள் கோயிலுக்கு வேண்டிய பள்ளி நிவந்தங்களைத் தடை இன்றி வழங்கினர்.

சிங்கபுரிநாதர் கோயிலுக்குப் பள்ளி ஆழியார் கோயில் என்றும் ஒரு பெயர் சோழர் காலத்தில் வழங்கியது. அக்கோயிலில் எழுந்தருளி இருந்த பார்சுவ நாதருக்குத் திருபுவன சக்கரவர்த்தியாகிய; குலோத்துங்க சோழன், தன் பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டில் சித்தாமூர் முழுதையும் நிவந்தமாக வழங்கினன் என்று கல்வெட்டு கூறுகிறது. (தென்னிந்திய கோயில் சாசனம்: பாகம் 1 சாசன எண் 28).

விக்கிரமசோழன் காலத்தில், இக்கோயிலைச் சூழ்ந்துள்ள ஒவ்வொரு சிற்றூரும் மூன்று மா நன்செய் நிலம் கோயிலுக்கு நிவந்தமாக அளித்தது. மேல் சித்தாமூரைச் சுற்றியுள்ள நிவந்தம் அளித்த ஊர்களைப் பட்டியல் இட்டுக் காட்டுகிறது அக்காலக் கல்வெட்டொன்று. (தெ.இ.கோ. Vol. I, 26) சுவையான அப்பகுதி வருமாறு:

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜ கேசரி ஸ்ரீ விக்கிரமச் சோழ தேவற்கு யாண்டு 18ஆவது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து சாலிபுர கோட்டத்து சிங்கபுரி நாடு சித்தாமூர் சிங்கபுரிநாத ஸ்வாமிக்கு நாம் தர்மமாகக் கட்டளையிட்டோம். 22 அடி கோலால் குழி 100 கொண்டது ஒரு மாவாக இன்னுட்டு வெண்கத்தூரும் கொள்ளாறும் நெமலியும் விரணுமூரும் ஔமங்கலமும் விழுக்கம் அருகாவூர் அகலூரும் நெற்குணம் கொண்டூரும் விடாரும் நமுண்டியும் கள்ள புலியூரும் கெங்கபுரமும் அண்ணமங்கலம் யில்லி விடு மெழியனூரும் நெடியும் பெருநல்லூரும் சோமாகி பாடி யிவ்வூர்களில்......ஊரால் நிலம் மூன்று மா நஞ்சை நிலம் சித்தேவற்கு சறுவ மானியமாகக் கட்டளை இட்டோம்.

சோழர் காலத்தன்றிப் பிற்கால நாயக்கர் ஆட்சியிலும், இவ்வூர்க் கோயிலுக்குரிய நிவந்தங்கள் தடை இன்றி வழங்கப்பட்டன. அக்கோயிலில் பணிபுரியும் நாதசுரம் ஊதுவோன், நட்டுவன் முதலான ஐவருக்கு நிலமான்யம் வழங்கப்பட்டது. அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலங்களுக்கு இலவசமாக நீர் பாய்ச்சிக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. இவையனைத்தும் வழங்கப்பட்டதுடன், அவை கோயில் சுவர்களில் கல்வெட்டுகளாக வெட்டப்பட்டன. அந்தத் தலைமுறை மட்டும் இன்றி, தொடர்ந்து வரும் தலைமுறைகளும் நிவந்த முறைகளைப் பறித்தல் ஆகாது என்ற கருத்திலேயே கல்களில் செய்திகள் வெட்டப்பட்டன.

‘இந்தத் தர்மத்துக்கு அஹிதம் பண்ணின பேர்கள் மாதாபிதாவையும் குருவையும் கொன்ற தோஷத்திலே போகக் கடவர்,’ என்று சாசனத்தின் இறுதியிலே பொறிக்கப்படும். இவ்வாறு பொறிக்கப்படுவது நிவந்தத்தின் நிலை பேற்றிற்குப் பேருதவி ஆக இருந்தது.

பல நூறு ஆண்டுகளாகப் பெயர் பெற்ற இக் கோயிலை ஒட்டி, ஜைன மடம் ஒன்று இன்றும் இயங்கி வருகிறது. நன்கு கற்றறிந்த துறவி, மடத்தின் அதிபராக இருந்து நல்லாட்சி செய்து வருகிறார்.

2. செஞ்சி

திண்டிவனம்—திருவண்ணாமலைச் சாலையில் உள்ள செஞ்சி, வரலாற்றுச் சிறப்புமிக்க மலைக்கோட்டையை உடையது.

விஜயநகர மன்னர் கிருஷ்ண தேவராயரின் தந்தை, இங்குள்ள மலையில் ‘ஹம்பி’யிலுள்ளது போன்ற ஒரு கோட்டையைக் கட்டினார் என்பர்.

பல அரசர்கள் கையில் மாறி இக்கோட்டை போர்களில் அழிவுபட்டது. இங்கு ஆட்சி புரிந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் தேசிங்கு ராஜன்,

இங்குள்ள மலைகளுள் முக்கியமானது ராஜகிரி. ராஜகிரிக்குச் செல்லும்வழியில் இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் அலுவலகக் கட்டிடமும் 1718—இல் கட்டப்பெற்ற ஒரு மசூதியும் பட்டாபிராமன் கோயிலும் உள்ளன. இக்கோயில் எட்டு நிலையுள்ள ராஜகோபுரத்தையும் பல மண்டபங்களையும் உடையது.

ராஜகிரிக் கோட்டைக்குள் நாம் முதலில் காண்பது கல்யாண மஹால். இது மராத்தியக் கட்டடக்கலை முறைப்படி உருவானது; தஞ்சாவூரிலுள்ள மண்டபத்தைப் போன்றது. மரத்தைப் பயன்படுத்தாது அமைந்தது. இதன் உயரம் 100 அடி. இதில் ஏழு அடுக்குகளும் உச்சியில் கோபுரமும் உள்ளன. ஏறவும் இறங்கவும் தனித்தனியே படிக்கட்டுகள் உள்ளன. ஒவ்வோர் அடுக்கிலும் சதுர அறை ஒன்றும் தண்ணீரை மேலே ஏற்றவும் கீழே செலுத்தவும் பயன்படுத்தப்பெற்ற சாளரங்களும் அரச குடும்பத்து ஆரணங்குகள் வாழ்ந்த பகுதிகளும் உள்ளன. தரை மட்டத்தில் நீராழி மண்டபம் இருக்கிறது.

